தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS

வெளியீடு—14—7—1972]
Issued—14—7—1972]

TAMIL NADU LEGISLATURE LIBRARY
28 JUL 1972
MADRAS

தமிழ்நாடு சட்டப் பேரவை நடவடிக்கைகள்
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

பணித்துறை வெளியீடு
OFFICIAL REPORT

திங்கட்கிழமை 1972 மார்ச் 27
Monday 27th March 1972

தொகுதி XXI—எண் 1
Volume XXI—No. 1

©
தமிழ் நாடு அரசு
1972

GOVERNMENT OF TAMIL NADU
1972

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9

Legislative Assembly Department
Fort St. George, Madras-9

விலை 50 காசுகள்]
PRICE 50 Paise]

Index to Tamil Nadu Legislative Assembly Debates.

FOURTH SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

27th, 28th, 29th and 30th March 1972.

Volume XXI (Nos. 1 to 4).

TABLE OF CONTENTS.

Monday, 27th March 1972.

	PAGES
Personnel of the Government of Tamil Nadu ..	i-vi
Principal Officers of the Tamil Nadu Legislative Assembly	vii
List of Members of the Tamil Nadu Legislative Assembly with their constituencies	ix-xvi
1. Questions and Answers	1–44
2. Presentation of Report—	
Action taken on the recommendations of the Committee on Community Development Projects.	44
3. Final Supplementary Statement of Expenditure for the year 1971–72—presentation ..	44–48
4. Government Motion—	
Change in the Order of Business of the House.	48
5. Voting on Demands for Grants for the year 1972–73—*cont.*	
(*a*) Demand No. 18 Animal Husbandry (*b*) Demand No. 21 Cinchona .. (*c*) Demand No. 35 Forest Department	48–94

PAGES

Monday, 27th March 1972—cont.

5. Voting on Demands for Grants for the year 1972-73—*cont.*

(*d*) Demand No. 44 Capital Outlay on Forests. 94-150

(*e*) Demand No. 17 Fisheries 150-197

(*f*) Demand No. 8-A--Milk Supply Schemes
(*g*) Demand No. 9-A-Administration of Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 198-258

6. Papers laid on the Table 259

Tuesday, 28th March 1972.

1. Questions and Answers 367-404

2. Privilege Matter 404--421

3. Calling Attention—

(*a*) Press Statement by FCI countering Tamil Nadu Food Minister's statement .. 421-423

(*b*) Delay in construction of over-bridge near Basin Bridge and consequent hardship .. 423-425

4. Presentation of Report—

Interim Report of the Privileges Committee in the case against the daily 'Nathigam' .. 425

5. Government Bills—

(i) The Tamil Nadu Cultivating Tenants Arrears of Rent (Relief) Bill, 1972 425-426

(ii) The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment, Bill, 1972 .. 426

(iii) The Tamil Nadu Pawnbrokers (Amendment) Bill, 1972 426-427

(iv) The Tamil Nadu Panchayats (Amendment) Bill, 1972 427

(v) The Tamil Nadu Non-trading Companies Bill, 1972 427

(vi) The Tamil Nadu Appropriation Bill, 1972. 534

PAGES

Tuesday, 28th March 1972—cont.

6. Voting on Demands for Grants for the year 1972-73—*cont.*
(i) Demand No. 2 Motor Vehicles Act--Administration
(ii) Demand No. 30 Road Transport Schemes
(iii) Demand No. 43 Capital Outlay on Road Transport Schemes 428–534

7. Announcement—
The Tamil Nadu Appropriation Bill, 1972. 534–555

8. Papers laid on the Table 535

Wednesday, 29th March 1972.

1. Questions and Answers 585–609

2. Point of clarification—
Request for announcement of answer to a question 610

3. Adjournment Motion—
Strike by students of Veterinary College and closure of the college 610–618

4. Calling attention—
Weeds rendering soil unfit for cultivation in Coimbatore 618–621

5. Announcement—
(i) Election to the Committee on Subordinate Legislation 621
(ii) Election to the Committee on Government Assurances 622
(iii) The Tamil Nadu Appropriation (No. 2) Bill, 1972 622

6. Presentation of Report—
Report of the Committee on Estimate on Veterinary Education and Research ... 622

PAGES

Wednesday, 29th March 1972—*cont.*

7. Government Bills—

(*a*) The Tamil Nadu Revenue Recovery (Amendment) Bill, 1972 622–623

(*b*) The Tamil Nadu Appropriation (No. 2) Bill, 1972 622

8. General discussion on the Final Supplementary Statement of Expenditure for the year 1971–72 623–672

9. voting on Demands for Grants for further expenditure in 1971–72—*cont.*

Demand No. 1 Land Revenue Department
Demand No. 3 General Sales Tax and other Taxes and Duties—Administration ..
Demand No. 5 Registration Department ..
Demand No. 6 State Legislature } 673

Demand No. 7 Elections
Demand No. 8 Head of State, Ministers and Headquarters staff
Demand No. 8-A Milk Supply Schemes ..
Demand No. 9 District Administration and Miscellaneous
Demand No. 9-A Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 } 674

Demand No. 10 Administration of Justice ..
Demand No. 11 Jails
Demand No. 12 Police
Demand No. 13 Education } 675

Demand No. 14 Medical
Demand No. 15 Public Health
Demand No. 16 Agriculture
Demand No. 17 Fisheries
Demand No. 18 Animal Husbandry ..
Demand No. 19 Co-operation } 676

Wednesday, *29th March* 1972—cont.

9. Voting on Demands for Grants for further Expenditure in 1972-72—*cont.*

Demand No. 20 Industries Demand No. 21 Cinchona Demand No. 22 Khadi Demand No. 24 Labour including Factories .. Demand No. 25 Welfare of the Scheduled Tribes and Castes, etc.	677
Demand No. 26 Irrigation Demand No. 27 Public Works—Works .. Demand No. 28 Public Works—Establishment and Tools and Plant Demand No. 29 Public Works Grants-in-aid..	678
Demand No. 3[illegible] Road Transport Scheme ..	678
Demand No 32 Pensions Demand No. 33 Miscellaneous Demand No. 34 Stationery and Printing .. Demand No. 35 Forest Department .. Demand No. 36 Other Miscellaneous Compensations and Assignments	679
Demand No. 39 Capital Outlay on Agriculture Demand No. 40 Capital Outlay on Industrial Development Demand No. 41 Capital Outlay on Irrigation. Demand No. 42 Capital Outlay on Public Works	680
Demand No. 43 Capital Outlay on Road Transport Schemes Demand No. 44 Capital Outlay on Forests .. Demand No. 45 Commuted Value of Pensions Demand No. 46 Capital Outlay on Schemes of Government Trading	681
Demand No. 47 Loans and Advances by the State Government	682

10. Papers laid on the Table 683--684

Thursday, 30*th March* 1972.

PAGES

1. Questions and Answers 699–736

2. Point of Information—
Change of name of Swatantra and Praja Socialist Parties 737–738

3. Announcement(s)—
(i) Nomination to the Business Advisory Committee 738–739
(ii) Nomination to the Rules Committee .. 740

4. Privilege Matter—
Interim Report of the Committee of Privileges on the case raised against the Tamil Daily "Nathigam" 740

5. Government Motion—
Change in the order of Business of the House. 740

6. Government Bills—
(i) The Tamil Nadu Water Supply and Drainage Board (Amendment) Bill, 1972 741
(ii) The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Bill, 1972 741
(iii) The Tamil Nadu Appropriation (No. 2) Bill, 1972 (L.A. Bill No. 13 of 1972) .. 741
(iv) The Tamil Nadu Appropriation Bill, 1972 (L.A. Bill No. 11 of 1972) 741–815

7. Papers laid on the Table 816

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

TAMIL NADU LEGISLATURE LIBRARY
28 JUL 1972
MADRAS

தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

தமிழ்நாடு ஆளுநர்:

மேதகு திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா.

அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி (முதலமைச்சர்) : கீழ்க் கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுத் துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த்துறை அதிகாரிகள், காவல் துறை, தேர்தல்கள், மதுவிலக்கு, செய்தி, விளம்பரம், திரைப்படச் சட்டம், பயண அனுமதிச் சீட்டுகள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, சரக்குகளின் விலைகள்—வழங்கல் குறித்த சட்டம், தமிழ்நாடு கழிவுநீர்-குடிநீர் வாரியம், குடிசைமாற்று வாரியம்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (கல்வி-உள் ளாட்சித்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சிமொழி, நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சட்டமன்றம்.

3. மாண்புமிகு திரு. க. அன்பழகன் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுச் சுகாதாரம், மருத்துவம், கால்நடை வளர்ப்பு.

4. மாண்புமிகு திரு. என். வி. நடராசன் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழிலாளர், எழுது-பொருள்—அச்சுத்துறை, அரசு அச்சகம், சீரணி, எடைகள்-அளவைகள் குறித்த சட்டம், புள்ளி விவரம், பத்திரப் பதிவு.

5. மாண்புமிகு (திருமதி) சத்தியவாணிமுத்து (அரிசன நலத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—அரிசன நலம், மகளிர்-சிறுவர் நலம், மீன ளம், இரவலர்கள் விடுதி, அனாதை இல்லங்கள், சீர்த்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள்.

6. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (உணவு-வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—உணவு, வணிக வரிகள் வருவாய், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், வருவாய்த்துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள். மாவட்ட துணை ஆட்சித் தலைவர்கள்.

7. மாண்புமிகு திரு. செ. மாதவன் (தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழில்கள், ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, சுரங்கங்கள், கனிப்பொருள்கள், இரும்பு- உருக்குக் கட்டுப்பாடு, வேலை வாய்ப்பும்-பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள்.

8. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (பொதுப் பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—பொதுப்பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டங்கள் உட்பட சிறுபாசனம், நெடுஞ்சாலைகள், முகம்மதியர் அறக் கட்டளைகள்.

9. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் (கூட்டுறவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—கூட்டுறவு, துறைமுகங்கள், வேளாண்மை மறுநிதி உதவி, மண் வளப் பாதுகாப்புத் திட்டங்கள் நீர்கலாக வேளாண்மை இயக்கத் தின் வேளாண்மைப் பொறியியற் பிரிவு, கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம்.

10. மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—வேளாண்மை, உணவு உற்பத்தி

11. மாண்புமிகு திரு. க. இராசாராம் (பின்தங்கிய வகுப்பினர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பின்தங்கிய வகுப்பினர் நலன், சுற்றுலா, வீட்டு வசதி, இட வசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் (மின்சாரத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—மின்சாரம், கடன் கொடுத்தல் (கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல்) குறித்த சட்டம், சீட்டுகள் குறித்த சட்டம், காடுகள், சின்கோனு.

13. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவாத்து, மோட்டார் வண்டிகள் வரி.

14. மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் (அறநிலையத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—அறக்கட்டளைகள், பால் வழங்கு துறை, முன்னாள் இராணுவ வீரர்கள், பூதான்—கிராமதான இயக்கங்கள்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS
TAMIL NADU LEGISLATURE LIBRARY
1 - OCT 1973
MADRAS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

Governor of Tamil Nadu.

Thiru KODARDAS KALIDAS SHAH

Members of the Council of Ministers.

1. The Hon. Dr. M. KARUNANIDHI (*Chief Minister*)—in charge of Public, Finance, Planning, General Administration, Matters relating to I.C.S. and I.A.S. Officers, District Revenue Officers, Police, Elections, Prohibition, Information and Publicity, Cinematograph Act, Passports, Newsprints Control, Prices and Supplies of Goods Act, Tamil Nadu Drainage and Water Board and Slum Clearance Board.

2. The Hon. Dr. V. R. NEDUNCHEZHIYAN (*Minister for Education and Local Administration*)—in charge of Education including Technical Education, Official Language, Municipal Administration, Community Development, Panchayats and Panchayat Unions and Legislature.

3. The Hon. Thiru K. ANBAZHAGAN (*Minister for Public Health*)— in charge of Public Health, Medicine and Animal Husbandry.

4. The Hon. Thiru N. V. NATARAJAN (*Minister for Labour*)—in charge of Labour, Stationery and Printing, Government Press, Prosperity Brigade, Legislation on Weights and Measures, Statistics and Registration.

5. The Hon. Thirumathi SATYAVANIMUTHU (*Minister for Harijan Welfare*)—in charge of Harijan Welfare, Women's and Children's Welfare, Fisheries, Beggars' Home, Orphanages, Approved Schools and Vigilance Services, Indians Overseas, Refugees and Evacuees.

6. The Hon. Thiru P. U. SHANMUGAM (*Minister for Food and Revenue*)— in charge of Food, Commercial Taxes, Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.

7. The Hon. Thiru S. MADHAVAN (*Minister for Industries*)—in charge of Industries, Textiles, Yarn, Handloom) Mines and Minerals, Iron and Steel Control, Employment and Training, Companies, Law, Courts and Prisons.

8. The Hon. Thiru S. J. SADIQ PASHA (*Minister for Public Works*)—in charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Highways and Waqfs.

9. The Hon. Thiru Si. Pa. ADITANAR (*Minister for Co-operation*)—in charge of Co-operation, Ports, Agricultural Refinance, Agricultural Engineering Wing of the Directorate of Agriculture except Soil Conservation Schemes, Khadi and Village Industries and Rural Industries Project.

10. The Hon. Thiru MANNAI P. NARAYANASWAMY (*Minister for Agriculture*)—in charge of Agriculture and Food Production.

11. The Hon. Thiru K. RAJARAM (*Minister for Backward Classes*)— in charge of Backward Classes, Tourism, Housing and Accommodation Control.

12. The Hon. Thiru O. P. RAMAN (*Minister for Electricity*)—in charge of Electricity, Legislation on Money Lending, Rural Indebtedness, Legislation on Chits, Forests and Cinchona.

13. The Hon. Thiru S. RAMACHANDRAN (*Minister for Transport*)—in charge of Transport, Nationalised Transport and Motor Vehicles Tax.

14. The Hon. Thiru M. KANNAPPAN (*Minister for Religious Endowments*)—in charge of Religious Endowments, Milk, Ex-Servicemen, Bhoodan and Gramdan.

தமிழ்நாடு சட்டப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

பேரவைத் தலைவர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன், பி.ஏ.

பேரவைத் துணைத் தலைவர்.

மாண்புமிகு திரு. பெ. சீனிவாசன், எம்.ஏ., பி.எல்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

திரு. செ. கந்தப்பன்.
திரு. எஸ். முருகையன்.
திரு. பெ. மலைச்சாமி.
திரு. என். டென்னிஸ்.
திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி.
திரு. எம். சுரேந்திரன்.

சட்டப் பேரவைச் செயலாளர்:

திரு. கா. து. நடராசன், எம்.ஏ., பி.எல்.

இணைச் செயலாளர்.

திரு. மா. சண்முகசுப்ரமணியம், பி.ஏ., பி.எல்.

உதவிச் செயலாளர்கள்:

திரு. த. இராதாகிருஷ்ணன், (எஸ்டேட் அதிகாரி).
திரு. கோ. இராகவன்.
திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.
திரு. ஆர். மாணிக்கம், பி.எஸ்ஸி., பி.எல்.

விவாதப் பதிப்பாளர்.

திரு. கே. சுந்தரராசன்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகரவரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும்.	தொகுதி.
(1)	(2)
1 அண்ணாமலை, திரு. சி. வி. எம். ..	காஞ்சிபுரம்.
2 அபுசாலி, திரு. எம். எ.	புவனகிரி.
3 அப்துல் ஜப்பார், திரு. வா. மை. ..	அரவக்குறிச்சி.
4 அரங்கண்ணல், திரு. இராம.	எழும்பூர்.
5 அழகமுத்து, திரு. து. ப. (அரசாங்க தலைமைக் கொறடா).	உப்பிலியப்புரம்.
6 அழகர்சாமி, திரு. சோ.	கோவில்பட்டி.
7 அழகுத்தேவர், திரு. எஸ்.	சாத்தூர்.
8 அனந்தநாயகி, திருமதி த. ந. ..	மயிலாப்பூர்.
9 அன்பழகன், மாண்புமிகு திரு. க. .. (அமைச்சர்).	புரசைவாக்கம்.
10 அன்புச்செழியன், திரு. நீ.	பெரியகுளம்.
11 ஆண்டி என்ற குருசாமி, திரு. கு. ..	ஸ்ரீவில்லிபுத்தூர் (செ.வ.)
12 ஆதித்தனார், மாண்புமிகு திரு. சி. பா. (அமைச்சர்).	ஸ்ரீவைகுண்டம்.
13 ஆலடி அருணா, திரு. வி.	ஆலங்குளம்.
14 ஆல்டா எம். ஃபௌலர் திருமதி ..	நியமன உறுப்பினர்.
15 ஆறுமுகம், திரு. அ.	எடப்பாடி.
16 ஆறுமுகம், திரு. எஸ்.	வீரபாண்டி.
17 ஆறுமுகம், திரு. சி.	மதுராந்தகம்.
18 இரத்தினசபாபதி, திரு. மு.	விளாத்திகுளம்.
19 இராசகோபால், திரு. க. மு.	உத்திரமேரூர்.
20 இராசகோபால், திரு. வீ.	வந்தவாசி (செ.வ.)
21 இராசமாணிக்கம், திரு. அ.	நாகப்பட்டினம்.
22 இராசமாணிக்கம், திரு. கு.	ஆடுதுறை.
23 இராசரத்தினம், திரு. டி.	ஸ்ரீபெரும்புதூர்.
24 இராசாராம், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்).	சேலம்-II.
25 இராசு, திரு. ஜே. எஸ்.	பெரம்பலூர் (செ.வ.)
26 இராதாகிருட்டிணன், திரு. எம். ..	தண்டராம்பட்டு.
27 இராமச்சந்திரன், திரு. எம். ஜி. ..	பரங்கிமலை.

தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும்.	தொகுதி.
(1)	(2)
28 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்).	பண்ருட்டி.
29 இராமநாதன், திரு. சி.	அறந்தாங்கி.
30 இராமலிங்கம், திரு. இரா.	தூத்துக்குடி.
31 இராமலிங்கம், திரு. செ.	கடலாடி (செ.வ.)
32 இராமன், மாண்புமிகு திரு. ஓ. பி. (அமைச்சர்).	மேலூர் தெற்கு (செ.வ.)
33 இராமன், திரு. மூ.	கண்டமங்கலம் (செ.வ.)
34 இராஜாங்கம், திரு. என்.	குறிஞ்சிப்பாடி (செ.வ.)
35 இராஜாப்பிள்ளை, திரு. வீ. கே. ..	கன்னியாகுமரி.
36 இளங்கோவன், திரு. கோ.	திருவையாறு.
37 இளஞ்செழியன், திரு. வீ. சா.	விராலிமலை.
38 எட்டியப்பன், திரு. பூ.	பெரணமல்லூர்.
39 எட்மண்ட், திரு. க. உரொ.	திருச்செந்தூர்.
40 கணபதி, திரு. என்.	பாபநாசம்.
41 கணபதி, திரு. டி.	நாங்குனேரி.
42 கணேசன், திரு. எல்.	ஒரத்தநாடு.
43 கணேசன், திரு. சி.	குற்றாலம்.
44 கண்ணப்பன், மாண்புமிகு திரு. மு. (அமைச்சர்).	கிணத்துக்கடவு.
45 கண்ணன், திரு. எம். ஆர்.	பேஸின்பிரிட்ஜ்.
46 கதிரவன், திரு. கா. மு.	தென்காசி.
47 கந்தசாமி, திரு. கே.	உசிலம்பட்டி.
48 கந்தசாமி, திரு. கே. பி.	சாத்தான்குளம்.
49 கந்தசாமி, திரு. எம்.	குளித்தலை.
50 கந்தப்பன், திரு. செ.	திருச்செங்கோடு.
51 கரிவேங்கடம், திரு. மா. வெ.	பாலக்கோடு.
52 கருணாநிதி, மாண்புமிகு டாக்டர் மு. (முதல் அமைச்சர்).	சைதாப்பேட்டை.
53 கருணாநிதி, திரு. தாழை. மு.	திருவாரூர் (செ.வ.)
54 கருணைநாதன், திரு. சோ.	கூனூர்.
55 கருப்பையா, திரு. ஆ.	கங்கைகொண்டான் (செ.வ.).
56 காசிராமன், திரு. நா.	கும்பகோணம்

தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும்.	தொகுதி.
(1)	(2)
57 காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி, திரு ..	முதுகளத்தூர்.
58 காமாட்சி, திரு. கு.	திருவரம்பூர்.
59 கார்த்தீசன், திரு. வீ.	இராதாபுரம்.
60 காவேரிமணியம், திரு. சொ.	திருப்பரங்குன்றம்.
61 காளிமுத்து, திரு. கா.	சிவகாசி.
62 கிட்டப்பா, திரு. என்.	மாயூரம்.
63 கிருட்டிணன், திரு. நா.	பேரணம்பட்டு (செ. வ.)
64 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி.	நெல்லிக்குப்பம்.
65 கிருஷ்ணமூர்த்தி, திரு. வ.	திருச்சிராப்பள்ளி-1.
66 கிருஷ்ணன், திரு. கே. ஆர்.	ஊத்தங்கரை.
67 குப்பல் ராமகிருஷ்ணன், திரு. கே. எஸ்.	மதுரை (கிழக்கு).
68 குமாரசாமி, திரு. அ. சே.	திருக்கோயிலூர்.
69 குமாரசாமி, திரு. கே. என்.	பல்லடம்.
70 குருசாமி, திரு. நா. வெ.	ஆண்டிப்பட்டி.
71 கேசவலு, திரு. தே.	கள்ளக்குறிச்சி.
72 கோதண்டராமய்யா, திரு. கே. எஸ். ..	உதனப்பள்ளி.
73 கோபால், திரு. எம்.	குன்னத்தூர் (செ. வ.)
74 கோபால், திரு. கே. பி.	கம்பம்.
75 கோபால், திரு. பி.	கோயம்புத்தூர் மேற்கு.
76 கோவிந்தசாமி, திரு வி. செ.	காவேரிப்பட்டினம்.
77 கோவிந்தராசன், திரு. ஆர்.	கடலூர்.
78 கோவிந்தராசன் துரை, திரு.	கந்தர்வகோட்டை.
79 கோவிந்தன், புலவர் கா.	செய்யாறு.
80 கோவை செழியன், திரு.	காங்கேயம்.
81 சகாதேவன், திரு. எஸ்.	செஞ்சி.
82 சங்குமுத்து தேவர், திரு. ச.	அம்பாசமுத்திரம்.
83 சதாசிவம், திரு. சே.	ஆண்டிமடம்.
84 சண்முகசுந்தரம், திரு. அ. ப.	பொள்ளாச்சி.
85 சண்முகம், மாண்புமிகு திரு. ப. உ. (அமைச்சர்).	திருவண்ணாமலை
86 சண்முகம் திரு. பெரி.	திருவாடானை.
87 சண்முகம், திரு. மு.	விழுப்புரம்.
88 சத்தியமூர்த்தி, திரு. மு.	புதுக்கோட்டை.

தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும்.	தொகுதி.
(1)	(2)
89 சத்தியவாணிமுத்து, மாண்புமிகு திருமதி (அமைச்சர்).	பெரம்பூர் (செ.வ.)
90 சத்தியேந்திரன், திரு. எம். எஸ். கே. ..	இராமநாதபுரம்.
91 சம்பத், திரு. டி. வி.	செம்பனூர்கோயில்.
92 சாதிக்பாட்சா, மாண்புமிகு திரு. எஸ். ஜே. (அமைச்சர்).	உடுமலைப்பேட்டை.
93 சாரதி, திரு. மா. பா.	வேலூர்.
94 சிதம்பரம், திரு. சித.	காரைக்குடி.
95 சிவப்பிரகாசம், திரு. தி. சி. ஆ. ..	சேரன்மகாதேவி.
96 சிவபெருமாள், திரு. கோ.	அரியலூர்.
97 சிறைமீட்டான், திரு. தொ. க.	பரமக்குடி (செ. வ.)
98 சீனிவாசன், திரு. பெ. (பேரவைத் துணைத் தலைவர்).	விருதுநகர்.
99 சீனிவாசன், திரு. தொ. ப.	போளூர்.
100 சின்னசாமி, திரு. அ.	செயங்கொண்டம் (செ வ.)
101 சின்னசாமி, திரு. ஆர்.	தர்மபுரி.
102 சின்னசாமி, திரு. மு.	மொடக்குறிச்சி.
103 சின்னசாமி, டாக்டர் வ.	எற்காடு (ஆ.வா.).
104 சின்னராசு, டாக்டர் ச. அ.	ஹரூர் (செ.வ.)
105 சின்ன வெள்ளையன், திரு. சி.	சேந்தமங்கலம் (ஆ.வா.)
106 சுந்தரம், திரு. ஒ. என்	திண்டுக்கல்.
107 சுப்ரமணியம், திரு. எஸ். கே.	சத்யமங்கலம்
108 சுப்பிரமணியம், திரு. வ.	சிங்கநல்லூர்.
109 சுப்பிரமணியம், திரு. கே. எம்.	தியாகராயநகர்.
110 சுப்பிரமணியன், திரு. மா.	ஈரோடு.
111 சுப்பிரமணியன், திரு. வீ.	உளுந்தூர்பேட்டை.
112 சுப்பு, திரு. க.	ராஜபாளையம்.
113 சுப்பையா, திரு. ஆ. கு.	கோட்டூர் (செ.வ.).
114 சுப்பையா, திரு. கே. வி.	ஆலங்குடி.
115 சுப்பையா, திரு. ச.	சங்கரன்கோயில் (செ.வ.)
116 சுப்பையா, திரு. ஏ. ஆர்.	கடயநல்லூர்.
117 சுருளிவேல், திரு. மு.	போதிநாயக்கனூர்.
118 சுரேந்திரன், திரு. எம்.	மேட்டூர்.
119 சுவாமிதாஸ், திரு. எ.	பத்மநாபபுரம்.

தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும்.	தொகுதி.
(1)	(2)
120 செபமாலை, திரு. கோ.	மங்களூர் (செ.வ.).
121 ஜெயராமன், திரு. கி.	சேலம்-1.
122 செல்லதுரை, திரு. வீ.	ஓமலூர் (செ.வ.).
123 செல்லையா, திரு. குழ.	பேராவூரணி.
124 செல்வராஜ், திரு. எம்.	விருத்தாசலம்.
125 சேதுராமன், திரு. சி.	சிவகங்கை.
126 சோணையா, திரு. த.	மானாமதுரை.
127 சோமசுந்தரம், திரு. ந.	வலங்கைமான் (செ.வ.).
128 சௌடி சுந்தரபாரதி, திரு. எஸ்.	அருப்புக்கோட்டை.
129 சௌந்திரபாண்டியன், திரு. பெ.	கிருஷ்ணராயபுரம் (செ.வ.).
130 டென்னில், திரு. என்.	கிள்ளியூர்.
131 தங்கமணி, திரு. கே. டி. கே.	மதுரை மேற்கு.
132 தர்மலிங்கம், திரு. அ. பெ.	திருச்சிராப்பள்ளி-2.
133 தருமலிங்கம், திரு. ந.	ரிஷிவந்தியம் (செ.வ.).
134 தவமணித் தேவர், திரு. வி.	சேடப்பட்டி.
135 திம்மராயக் கவுண்டர், திரு. டி. சி.	நாட்ரம்பள்ளி.
136 தியாகராசன், திரு. அ.	திருமயம்.
137 தியாகராசன், திரு. இ. எஸ்.	திருத்தணி.
138 திருப்பதி, திரு. கு.	மதுரை (சென்ட்ரல்).
139 துரைசாமி, திரு. எ. க.	குடியாத்தம்.
140 துரைசாமி, திரு. சு.	திருப்பூர்.
141 துரைமுருகன், திரு.	காட்பாடி.
142 துரைராஜ், திரு. சு. ம.	திருவள்ளூர் (செ.வ.).
143 தூயமணி, திரு. மே. சி.	மேட்டுப்பாளையம்.
144 தேவராசன், திரு. எம்.	உதகமண்டலம்.
145 தேவேந்திரன், திரு. அ.	நன்னிலம் (செ.வ.).
146 தோப்பூர் திருவேங்கடம், திரு.	கணியம்பாடி.
147 நடராசன், திரு. ஈ. எம்.	அந்தியூர்.
148 நடராசன், திரு. எஸ்.	தஞ்சாவூர்.
149 நரசிம்மன், திரு. வ. சி.	ஆரணி.
150 நல்லசாமி, திரு. எஸ்.	கரூர்.

தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும்.		தொகுதி.
(1)		(2)
151	நாகராஜன், திரு. க.	வடமதுரை.
152	நாகலிங்கம் திரு. பா.	பொன்னேரி (செ.வ.).
153	நாச்சிமுத்து, திரு. நா.	ஒட்டஞ்சத்திரம்.
154	நாச்சியப்பன், திரு. ஏ. எம். டி.	ஆத்தூர்.
155	நாச்சியப்பன், திரு. ந.	சங்கராபுரம்.
156	நாராயணசாமி, திரு. மா. வே.	திருவொற்றியூர்.
157	நெடுஞ்செழியன், மாண்புமிகு டாக்டர் இரா. (அமைச்சர்)	திருவல்லிக்கேணி.
158	நைனாமலை, திரு. இரா.	ராசிபுரம்.
159	பத்மநாபன், திரு. பொ.	திருநெல்வேலி.
160	பத்மாவதி, திருமதி ஏ. கோ.	முகையூர்.
161	பரந்தாமன், திரு. ஆ.	கடம்பத்தூர்.
162	பரமசிவம், திரு. எம்.	தாரமங்கலம்
163	பலராமன், திரு. என். எஸ்.	அரக்கோணம்.
164	பழனிசாமி, திரு. நா.	பொங்கலூர்.
165	பழனிசாமி, திரு. என். கே.	பெருந்துறை.
166	பழனிசாமி, திரு. மு.	வெள்ளக்கோயில்.
167	பழனிச்சாமி, புலவர் சி.	பழனி (செ.வ.).
168	பழனியப்பன், டாக்டர் ச. மு.	கோபிசெட்டிப்பாளையம்.
169	பழனியம்மாள், திருமதி வி. ப.	தாராபுரம்.
170	பழனிவேலன், திரு. க.	வரகூர்.
171	பழனிவேலன், திரு. மு.	நாமக்கல்.
172	பழனிவேலு, திரு. பி.	ஆத்தூர்.
173	பழனிவேல் ராஜன், திரு	தேனி.
174	பன்னீர்செல்வம், திரு. எம்.	ஆம்பூர் (செ.வ.).
175	பாண்டுரங்கம், திரு. சி.	செங்கம் (செ.வ.).
176	பாலகிருட்டிணன், திரு. கு.	மன்னார்குடி.
177	பாலசுந்தரம், திரு. வை.	அச்சரபாக்கம் (செ.வ.).
178	பாலையா, திரு. ஏ.	கொளச்சல்.
179	பெரியசாமி, திரு. கு.	கொடவாசல்.
180	பெரியசாமி, திரு. தி. ஒ.	அவிநாசி.
181	பெருமாள், திரு. செ.	காட்டுமன்னார்கோயில்.
182	பெருமாள், திரு. ஏ. ஆர்.	காரியப்பட்டி.

தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1)	தொகுதி. (2)
183 பொம்மன், திரு. கு. அ.	கூடலூர் (செ.வ.).
184 பொன்சொக்கலிங்கம், திரு. பி.	சிதம்பரம்.
185 பொன்னப்ப நாடார், திரு. ஆர். ..	விளவங்கோடு.
186 பொன்னுமலை, திரு. தி.	பனைமரத்துப்பட்டி.
187 பொன்னுரங்கம், திரு. எ. எம். ..	சோளிங்கபுரம்.
188 மணலி கந்தசாமி, திரு. சி.	திருத்துறைப்பூண்டி.
189 மணியன், திரு. பி. எஸ்.	சோழவந்தான்.
190 மதியழகன், மாண்புமிகு திரு. கே. எ. (பேரவைத் தலைவர்).	ஆயிரம் விளக்கு.
191 மருதாசலம், திரு. என்	பேரூர் (செ.வ.).
192 மலைக்கண்ணன், திரு. வீ.	இளையாங்குடி.
193 மலைச்சாமி, திரு. பெ.	மேலூர் வடக்கு.
194 மன்னியப்பன், திரு. சி.	கிருஷ்ணகிரி.
195 மாணிக்கம், திரு. என்.	பென்னகரம்.
196 மாணிக்கவாசகம், திரு. இரா.	தொண்டாமுத்தூர்.
197 மாதவன், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்).	திருப்பத்தூர்.
198 மாரிமுத்து, திரு. எ. ஆர்.	பட்டுக்கோட்டை.
199 மாரிமுத்து, திரு. மூ.	தலைவாசல் (செ.வ.).
200 மீனாட்சிசுந்தரம், திரு. மா.	வேதாரண்யம்.
201 முகமது காதர் முகைதீன், திரு. எஸ். ..	மேலப்பாளையம்.
202 முத்தமிழ்ச் செல்வன், திரு. வெ. ந. ..	லால்குடி.
203 முத்து, திரு. வ.	சங்கரி (செ.வ.).
204 முத்துசாமி, திரு. ப.	வேடசந்தூர்.
205 முத்துச்செல்வன், திரு. பு. செ. ..	முசிறி.
206 முத்துவேல், திரு. ந.	வானூர் (செ.வ.).
207 முத்தையா, திரு. கே. சே.	கடலூர்.
208 முத்தையா, திரு. எம்.	ஒட்டப்பிடாரம் (செ.வ.).
209 முருகையன், திரு. எஸ்.	கலசப்பாக்கம்.
210 முனியாண்டி, திரு. ஆ.	நிலக்கோட்டை (செ.வ).
211 முனு ஆதி, திரு. மு.	திருப்போரூர்.
212 முனுசாமி, திரு. ரா. ரா.	மேல்மலையனூர்.
213 மொய்தீன், திரு. திருப்பூர் எ. எம். ..	துறைமுகம் (சென்னை நகரம்).

தொடர் எண் உறுப்பினர்கள் பெயரும். (1)	தொகுதி. (2)
214 மோசஸ், திரு. ம.	நாகர்கோயில்.
215 ரங்கனாதன், திரு. கே.	கோயம்புத்தூர் (கிழக்கு).
216 ராமசாமி, திரு. இ.	வால்பாறை.
217 ராமசாமி, திரு. ஜி.	திருப்பத்தூர்.
218 ராமராசன், திரு. வ. க.	பவானிசாகர் (செ.வ.).
219 ராஜா, திரு. ஏ. எம்.	பவானி.
220 ராஜாராம், திரு. ஜி.	திண்டிவனம்.
221 ரெத்தினசாமித் தேவர், திரு. மு. சி. ஆ.	திருமங்கலம்.
222 லத்தீப், திரு. எம். ஏ.	வாணியம்பாடி.
223 வகாப், திரு. கே. ஏ.	ராணிப்பேட்டை.
224 வடிவேலு, திரு. சீ. க.	தொட்டியம்.
225 வடிவேல், திரு. எஸ்.	சீர்காழி (செ.வ.).
226 விசுவநாதன், திரு. செ. கோ.	செங்கல்பட்டு.
227 வீராசாமி, திரு. நா.	ஆற்காடு.
228 வெங்கடசாமி, திரு. பி.	ஹோசூர்.
229 வெள்ளத்துரை, திரு. அ.	வாசுதேவநல்லூர்.
230 வேதாசலம், திரு. மு.	வண்ணாரப்பேட்டை. (சென்னை மாநகரம்).
231 வேலப்பன், திரு. சி. வே.	கபிலமலை.
232 வேழவேந்தன், திரு. கா.	கும்மிடிபூண்டி.
233 ஜேம்ஸ், திரு. ஜே.	திருவட்டார்.
234 ஜோதி வெங்கடாசலம், திருமதி	ஸ்ரீரங்கம் (செ.வ.).
235 ஹாண்டே, டாக்டர் எச். வி.	பார்க் டவுன் (சென்னை மாநகரம்).

TRUTH ALONE TRIUMPHS

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

தொடர் எண்ணும், பெயரும்.	
1 மாண்புமிகு திரு. என். வி. நடராசன்	அமைச்சர்.
2 மாண்புமிகு திரு. மனை ப. நாராயணசாமி	அமைச்சர்.
3 திரு. எஸ். கோவிந்த் சாமிநாதன்	தலைமை வழக்கறிஞர்.

தமிழ் நாடு சட்டப் பேரவை.

திங்கட்கிழமை, 1972 மார்ச் 27.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

Landslide at Naduvattam.

* 3-*S.N.Q.*—THIRU K. T. K. THANGAMANI: Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether 8 workers were killrd in the Landslide at Naduvattam, Nilgiris District on 10th March 1972 while doing construction work under Tamil Nadu Electricity Board;

(*b*) if so, details thereof; and

(*c*) the compensation, if any, paid to them?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (அ) ஆம்.

(இ) 10—3—1972 அன்று நடுவட்டம் மின் திட்டத்தின் நீர் கொண்டு செல்லும் கால்வாயில் காண்ட்ராக்டரால் நியமிக்கப்பட்ட ஐம்பது பணியாட்கள் பணி செய்து கொண்டிருக்கும்போது சுமார் 5 மணி அளவில் மண் சரிவினால் பத்து ஆட்கள் மண்ணில் புதையுண்டு விட்டார்கள். மீட்பு வேலை உடனடியாகச் செய்யப்பட்டு பத்து பேர்கள் மீட்கப்பட்டதில் எட்டு பேர்கள் இறந்து விட்டனர். இருவர் உடனடியாக மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு நலம் பெற்றனர்.

(உ) விபத்தில் இறந்த எட்டு பேர்களுடைய குடும்பத்திற்கு குடும்பம் ஒன்றுக்கு ரூ. 500 தற்காலிகமாக நிவாரணம் மின்சார வாரியத்தால் வழங்கப்பட்டிருக்கிறது. சட்டப்படி இக்குடும்பத்தாருக்கு எவ்வளவு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமோ அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

[1972 மார்ச் 27

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த உதகை—மைசூர் ரோட்டில் இருக்கக்கூடிய நடுவட்டத்தில் தமிழ்நாடு மின்சார போர்டினுல் இந்த டைவர்ஷனுக்காகப் போடப்பட்ட இந்த ரோட்டில் ஏற்பட்ட விபத்தில் சிலர் இறந்து விட்டதாகச் சொல்லப்படுகிறது. அதே நேரத்தில் அரசுதான் ஒவ்வொரு குடும்பத்திற்கும் இடைக்கால நிவாரணமாக ஐநூறு ரூபாய் கொடுக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஐம்பது தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்திய அந்த கண்டிராக்டரிடமிருந்து மேற்கொண்டு சட்டப்படி கிடைக்க வேண்டிய நஷ்டயீட்டுத் தொகையைப் பெற்று, அந்தக் குடும்பத்தாருக்கு வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அந்தக் கண்டிராக்டருடைய வேலை செய்த பணம் ஒரு லட்ச ரூபாய் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, சட்டப்படி கண்டிராக்டரிடமிருந்து உயிரிழந்தோர்களுடைய குடும்பத்தாருக்கு எந்த அளவுக்குத் தொகை பெற்றுத் தர முடியுமோ அந்த அளவுக்கு பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : அந்தத் தொழிலாளர்கள் ஒரு ஸ்தாபனத்தின் கீழ் இல்லாத தொழிலாளர்கள். அவர்கள் இறந்துவிட்டால் ஒரு மாதத்திற்குள்ளாக காம்பென்ஸேஷன் கமிஷனரிடம் மனுச் செய்ய வேண்டிய நிலையெல்லாம் இருக்கிறது. ஆகவே, இம்மாதிரியான ஏற்பாடுகளை எலெக்ட்ரிசிடி போர்டாரே கவனித்து, அவர்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய நஷ்ட ஈட்டுத் தொகை கிடைக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : உடனடியாக ஐநூறு ரூபாய் நிவாரணம் அளித்திருக்கிறோம். மேற்கொண்டும் வாரியத்தின் மூலமாகக்கூட ஏதாவது செய்ய முடியுமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம். சட்டப்படி கண்டிராக்டரிடமிருந்து ஏதாவது உடனடியாக வாங்கிக் கொடுக்க முடியுமானுல், உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல், நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இப்பொழுது அந்த விபத்திற்குப் பின்னுல் வேலை தொடர்ந்து நடைபெறுகிறதா ? வேலை நிறுத்தப் பட்டிருக்கிறது என்று பத்திரிகையில் வந்ததே. அப்படியானுல், சரியான பாதுகாப்புடன் வேலை நடைபெற கண்காணிக்கப்படுமா ?

1972 மார்ச் 27]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அதற்குரிய எச்சரிக்கை செய்ய பட்டு வேலை துவங்குகிறார்கள். மண்ணிலே ஒரு "லேயர்" தனியாக இருந்ததால், அது எதிர்பாராத காரணத்தால், "ஸ்லைட்" ஆகி விட்டது. இனிமேல் எச்சரிக்கையோடு வேலைகளெல்லாம் மேற் கொள்ளப்பட வேண்டும் என்பதற்கு அதிகாரிகள் மூலமாக நட வடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : இந்த இறந்துபோன தொழிலாளி குடும்பங் களுக்குக் கொடுக்க வேண்டிய முழு காம்பன்ஸேஷன் கொடுக்கப்படு வதற்கு என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்? அதற்கு இந்த அரசாங்கம் இதுவரை என்ன நடவடிக்கையை மேற்கொண்டிருக் கிறது?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இதுபோன்ற விபத்துக்கள் நடந்துவிட்டால் உடனடியாக நிவாரணம் ஐநூறு ரூபாய் கொடுத் திருக்கிறோம், வாரியத்தின் சார்பாக. சட்டப்படி என்ன என்ன கொடுக்க முடியுமோ அதெல்லாம் கொடுக்கப்படுவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும். ஒரு இலட்ச ரூபாய் அந்தக் கண்டிராகட ருக்குக் கொடுக்கப்பட வேண்டிய பணம் கொடுக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. சட்டரீதியாக எவ்வளவு கொடுக்க வேண்டுமோ அந்தப் பணத்தில் எள்ளளவும் குறையாது வழங்கப் படும்.

Representation from Voters Forum.

* 715 *Q*.—Dr. H. V. HANDE: Will the Hon the Chief Minister be pleased to state—

(*a*) whether the Chief Electoral Officer of this State has received any representation from the Voters Forum, Madras, about the electoral revised lists of Graduates' and Teachers' Constituencies of Madras and other places around the 3rd week of October 1971; and

(*b*) if so, the details thereof and the action taken thereon?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) சென்னை; வாக்காளர் மன்றம் 22—10—1971-ஆம நாளிட்ட தனது முறையீட்டில், பட்டதாரிகள் மற்றும் ஆசிரியர்கள் தொகுதிகளில் வாக்காளர்களைச் சேர்த்தல் பற்றியும், வாக்காளர்களைப்

பதிவு செய்வதற்கு வாக்காளர் பதிவு அதிகாரிகளால் செய்யப் பட்ட ஏற்பாடுகள் குறித்தும் விவரங்களை அறிய விரும்பியது. அப் பொருள் குறித்த பத்திரிகைச் செய்தி அறிக்கை ஒன்றின் நகலும், வாக்காளர் மன்றத்திற்கான பதிலும் அனுப்பப்பட்டது. வாக்காளர் மன்றம் அறிய விரும்பிய தகவல்கள் அப்பத்திரிகைச் செய்தி அறிக்கையில் அடங்கியுள்ளன. பட்டதாரிகள் மற்றும் ஆசிரியர்கள் தொகுதிகளைப் பொறுத்த வரையில், வாக்காளர் பட்டியல்களைத் திருத்தியமைத்தது பற்றிய விவரங்களோடு, வாக்காளர் மன்றத்திற்கு இந்தியத் தேர்தல் ஆணைக்குழுவும் பதில் அனுப்பியுள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி: பட்டதாரி வாக்காளர் பட்டியல் இப்பொழுது திருத்தியமைக்கப்பட்டது முழுமையாகத் திருத்தப்பட்டு வெளியிடப்பட்டிருக்கிறதா? அதன்பேரில் ஏதாவது புகார் வந்துள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: முழுமையாகத் திருத்தி யமைக்கப்பட்டிருக்கிறது. பலமுறை அறிவிக்கப்பட்டு இந்தப் பட்டியல் இறுதியாக 29—2—1972-இல் வெளியிடப்பட்டிருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: ஆசிரியர் தொகுதிகளுக்கு வாக்களிப்பதற்கு ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களுக்கு உரிமை வழங்கப்பட்டிருக்கிறதா? இல்லையென்றால், ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களுக்கும் வாக்குரிமை அளிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்பொழுது ஆசிரியர் தொகுதியில் பி. டி. ஆசிரியர்கள் அனைவரும், செகண்டரி கிரேடு பள்ளி களில் ஆசிரியர்களாகப் பணியாற்றுபவர்களும் வாக்காளர் பட்டியலில் சேரத் தகுதி உள்ளவர்களாக இருக்கிறார்கள். ஆனால், ப்ரைமரி ஸ்கூலில் வேலை செய்கிறவர்களுக்கு வாக்குரிமை கிடையாது. அதற்கு நாம் முயற்சிகள் எடுத்துக்கொண்டு மத்திய அரசுக்கும் தேர்தல் கமிஷனுக்கும் எழுதியும்கூட அதில் சேர்ப்பதற்கு அவர்கள் விருப்பம் தெரிவிக்கவில்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, at present there are two sets of electoral rolls, one for panchayat elections and another for General Elections. Though both of them are defective, yet the Panchayat rolls appear to be somewhat better. So, may I know from the Hon. Chief Minister whether he will recommend to the Election Commission to have one set of correct rolls for both the elections?

1972 மார்ச் 27]

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி: அதுபற்றி எலெக்ஷன் கமிஷனர்தான் முடிவு செய்ய வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அபிப்பிராயங்கள் வேண்டுமாஞல் அவர்களுக்குத் தெரிவிக்கப்படலாம்.

திரு. என். மருதாசலம்: வாக்காளர் பட்டியலில் சேராமல் விட்டுப் போன பட்டதாரிகளின் விண்ணப்பம் அரசுக்கு ஏதாகிலும் வந்துள்ளதா? அப்படி வந்திருந்தால் சேர்க்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி: அப்படி எதைச் சேர்ப்பதாக இருந்தாலும், வேட்பு மனு தாக்கல் செய்யப்படுவதற்கு 23—3—1972 தான் கடைசி நாளாகும். அதற்குள்தான் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். தேர்தல் நாள் குறிக்கப்பட்டுவிட்ட காரணத்தால் இனி சேர்க்க இயலாது.

* 716 *Q.*—Dr. H.V. HANDE: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Secretary to Finance Department has received any letter from the Voters Forum, Madras around the 2nd week of October 1971 about the pensioners trouble in getting payment of pensions; and

(*b*) if so, the details thereof and the action taken thereon?

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி: (அ) ஆம்.

(இ) ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு 1971 ஆகஸ்டு திங்களில் இரண்டு புதன்கிழமைகளில் மட்டும் தொகை வழங்கப்பட்டது என்றும், மூன்ருவது புதன்கிழமை கருவூலக் கணக்கு முடிவு செய்யும் நாளானதால் ஓய்வூதியத் தொகை எதுவும் அன்று கொடுக்கப்படவில்லை என்றும் சென்னை, வாக்காளர் மன்றம் 1971 அக்டோபரில் முறையிட்டது. கருவூலக் கணக்கு முடிவு செய்யும் நாளாயிருந்தாலும் இராவிடினும் ஒரு மாதத்தில் ஓய்வூதியம் கொடுக்கப்படுவதற்கென ஒதுக்கப்பட்ட எல்லா நாட்களிலும் ஓய்வூதியம் கொடுப்பதற்கான ஆணைகளைப் பிறப்பிக்குமாறு அம்மன்றம் அரசை வேண்டிக் கொண்டது. தற்போதுள்ள ஆணைகளின்படி மாதத்தின் எல்லா புதன்கிழமைகளிலும் ஓய்வூதியம் கொடுக்கப்படுகிறது. வாக்காளர் மன்றத்தின் கருத்துரையை அரசு ஒப்புக்கொண்டுள்ளது. ஏதாவதொரு புதன்கிழமை துணைக் கருவூலக் கணக்கு முடிவு செய்யும்

நாளாக ஏற்படின், அதற்கு அடுத்த அலுவல் நாளில் ஓய்வூதியத் தொகையினைக் கொடுக்குமாறு எல்லாத் துணைக் கருவூலங்களுக்கும் அவசியமான கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், அக்டோபர் 1971-க்குப் பிறகு ஓய்வு பெற்றவர்களுக்கெல்லாம் இந்த ஓய்வூதியத்தோடு அவர்களுக்கு வைத்திய வசதிகளும் கொடுக்கப்படும் என்ற பரிந்துரை இருக்கிறதே. அப்படி அரசு உத்தரவு போட்டபிறகும்கூட அவர்களுடைய பாஸ் புக் இன்னும் கிடைக்காமல், வசதிகள் கிடைக்காமல் இருக்கிறது என்று தெரிவிக்கிறார்களே, அதன் விவரம் என்னவென்று அறியலாமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இது ஓய்வூதியம் வழங்கப் படுகின்ற காலத்தைப் பொறுத்தது. ஏற்கனவே புதன்கிழமை என்று வைத்திருக்கிறது. அந்தப் புதன்கிழமை ஒருசில இடங்களில் விடுமுறையானதால் கொடுக்கப்படவில்லை என்று முறையிடப்பட்டது. அந்த முறையீட்டைக் கருத்திற்கொண்டு அப்படிக் கொடுக்கப்பட முடியாத சூழ்நிலை ஏற்பட்டால் மறுநாளும் கொடுக்கலாம் என்று அரசின் சார்பிலே அனைவருக்கும் உத்தரவிடப்பட்டிருக்கிறது. மருத்துவ வசதி போன்றவை இந்தக் கேள்வியில் இடம் பெறவில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, ஓய்வூதியத்தை டிரஷரியில் வந்து வாங்குவதில் பல சிரமங்கள் இருக்கின்றன. அதை போஸ்டல் மார்க்கமாக, மணியார்டர் மூலம் அனுப்புவதற்கு அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்பொழுது அத்தகைய உத்தேசம் இல்லை.

திரு. கோ. இளங்கோவன் : தலைவரவர்களே, தனியார் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர் அல்லாதவர்களுக்கு ஓய்வு ஊதியம் வழங்கப்படுகிறதா ? இல்லையெனில் வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இது ஓய்வூதியம் பெறுபவர்கள் அதை வாங்க தேதிகளை வசதியாக நிர்ணயிப்பது பற்றி.

1972 மார்ச் 27]

பாலர் அரங்கங்கள்.

*** 717 வினா : திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையில் உள்ள குழந்தைகள் படக்காட்சி தியேட்டர் போல் மாவட்டத் தலை நகரங்களிலும் அமைக்க செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு. டாக்டர் மு. கருணாநிதி : ஆம்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, எநம்தந்த இடங்களில் எந்தெந்த மாவட்டத் தலைநகரங்களில் இம்மாதிரியான பாலர் அரங்கங்கள் உருப்பெற அரசு ஆலோசித்து முடிவு செய்திருக்கிறது என்பதையும், சென்னையில் உள்ள கலைவாணர் அரங்கத்தை விரிவு படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் இருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, எந்தெந்த இடங்களில் இதை நிறுவுவது என்பதை முடிவு செய்திருந்தால் பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்லியிருக்கமாட்டேன். இனி மேல்தான் மாவட்டங்கள் முடிவு செய்யப்பட வேண்டும். சென்னை யில் உள்ள கலைவாணர் அரங்கம் பழுது பார்க்கப்பட்டு நல்ல புதிய வகையிலே இன்னும் அதிகம் பேர் அமர்ந்து பார்க்கும் விதத்தில் நல்ல வசதிகளோடு செப்பனிடப்பட வேலைகள் துவங்கப் பட்டிருக்கின்றன.

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, உதகையில் அறிஞர் அண்ணா அரங்கம் சகல வசதிகளுடனும் இருப்பதால் இதைக் குழந்தைகள் படக்காட்சி தியேட்டராக அமைக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : உதகையிலுள்ள அண்ணா அரங்கத்தில் இப்பொழுது வேறுபல நிகழ்ச்சிகள், இசை நிகழ்ச்சிகள், கலைநிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. அவை போக எஞ்சிய நேரம் போதுமானதாக இருக்கும் என்று கணக்கிடப்பட்டால் அதுபற்றி ஆய்வு செய்யலாம்.

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவரவர்களே, இப்போது எல்லா நகரங்களிலும் சினிமாக்கொட்டகைகள் இருக்கின்றன. ஆனால் நாடகக் கொட்டகைகள் கிடையாது. திருச்சியைத் தவிர, மற்ற இடங்களிலெல்லாம் அத்தகைய கொட்டகைகளை அமைத்தால் சிறப்புக் கூட்டங்கள் போடவும், நாடகம் போடவும் வசதியாக இருக்கும். இதற்காக அரசு ஒவ்வொரு மாவட்டத்தின் தலைநகரத்திலும் நாடகக் கொட்டகைகள் அமைக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நாடக அரங்குகள் அமைக்கப்பட வேண்டியதுதான். மாண்புமிகு உறுப்பினரவர்களைப் போன்ற கொஞ்சம் வசதி படைத்தவர்கள் அப்படிப்பட்ட காரியங்களைச் செய்வார்களேயானால் அரசு தன்னாலியன்ற உதவிகளையெல்லாம் செய்ய இப்போதைக்குத் தயாராக இருக்கிறது.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, சென்னையிலிருக்கும் பல அரங்குகளிலும் அவரவர்களுடைய புகைப்படங்கள் வைக்கப் பட்டிருக்கின்றன. ஆகவே, கலைவாணர் அரங்கத்திலும் கலை வாணரின் புகைப்படம் வைக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்பொழுது கலைவாணர் அரங்கு பழுது பார்க்கப்பட்டு வருகிறது. அதனுடைய பணி அனைத்தும் முடிந்த பிறகு அதைப்பார்த்துவிட்டு அந்தக் குறையிருந்தால் உறுப்பினர் கேள்வி எழுப்பலாம்.

திரு. நா. வெ. குருசாமி : தலைவரவர்களே, மதுரை மாவட்டம் வைகை அணைப்பகுதியில் இம்மாதிரி குழந்தைகள் படக்காட்சி ஆரம்பிக்க அரசு உத்தேசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : வைகை அணைப் பகுதிக்கு வரும் குழந்தைகளுக்கு அங்கே ஏராளமான சிறப்புக் காட்சிகள் இருக்கின்றன, இப்பொழுது படக்காட்சி தேவையில்லை.

திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, திருச்சியிலேயிருக்கும் தேவர் மன்றத்தில் தினசரி ரிக்கார்ட் டான்ஸ் நடைபெற்று ஆபாச நடனங்கள் நடைபெறுகின்றன. ஆகவே, அதை மாற்றி பாலர் அரங்காக மாற்றுவதற்கு நகராட்சிக்கு உத்தரவு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

1972 மார்ச் 27]

மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கண்ட நடனங்கள் எவ்வகையிலே ஆபாசமாக இருந்தன என்று விவரமாக எழுதி அனுப்பினுல் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, அரசினுடைய பரிசீலனை முடிவடைவதற்குள் ஒவ்வொரு மாவட்டத் தலைநகரத்திலும் தனிப் பட்டவர்கள் நடத்தும் சினிமாக் கொட்டகைகளில் குழந்தைகளுக்கு என்று அத்தகைய சினிமாக் காட்சிகளை உருவாக்கித்தர அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி : அதற்கு அந்தப் பட அரங்கு களின் சொந்தக்காரர்கள் சம்மதம் தர வேண்டும். அதுமாத்திர மல்லாமல் குழந்தைகளுக்கு உரிய படங்களை நாம் தேர்வு செய்து குறிப்பிட்ட சிலவிடங்களில்தான் காட்ட முடியுமே அல்லாமல் தமிழ் நாட்டில் எல்லாத் திரையரங்குகளிலும் காட்டுவது என்பது இன்றைய நிலைமையில் அவ்வளவு வசதியுள்ளதாக இல்லை.

திரு. தி. பொன்னுமலை : தலைவரவர்களே, குழந்தைகளுக்குக் காட்டும் படக் காட்சிகளிலே விஞ்ஞானத்தைப் பொறுத்தும், விவசாயத்தைப் பொறுத்தும் ஒரு பகுதி காட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி : மாண்புமிகு உறுப்பினரவர் கள் குழந்தைகளுக்குக் காட்டப்படும் படத்தை ஒருமுறை கூச்சமில் லாமல் பார்த்துவிட்டு, அதற்குப் பிறகு, தனக்குக் குழந்தை இல்லையே என்ற அந்தக் கூச்சமில்லாமல் பார்த்துவிட்டு, அதில் மேலும் என்னென்ன சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமென்று கூறுவார் களேயானுல் அவைகளெல்லாம் மேற்கொள்ளப்படும்.

ராஷ்டிரபதியின் விருதுகள்

* 718 வின—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 17—12—1971 அன்று தமிழக கவர்னர், தமிழக போலீஸ் அதிகாரிகளுக்கு ராஷ்டிரபதியின் விருதுகளை வழங்கினரா?

(இ) யார் யாருக்கு விருதுகள் வழங்கப்பட்டன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி: (அ) ஆம்.

[1972 மார்ச் 27

(இ) கீழ்க்கண்ட அதிகாரிகளும் மற்றவர்களும் விருதுகள் பெற்றார்கள் :—

தகைசால் பணிபுரிந்தமைக்காக காவல் படையினருக்கும், தீயணைக்கும் படையினருக்கும் குடியரசுத் தலைவரின் பதக்கங்கள்

(1) திரு. ஜி. எஸ். தாயுமானவர்.

(2) திரு. எம். ஏ. எஸ். மொஹஜீர்.

(3) திரு. கே. ஆர். ஷெனாய், I.P.S.

(4) திரு. வி. கே. பெல்.

பாராட்டத்தக்க பணிபுரிந்தமைக்காக காவல்படை பதக்கம்.

(1) திரு. சி. ஐ. பி. தனராஜ்.

(2) திரு. பி. எஸ். சந்திரன்.

(3) திரு. வி. ராஜகோபாலன்.

(4) திரு. வி. ராமச்சந்திரன்.

(5) திரு. எம். வாமனபிரபு.

(6) திரு. எம். எஸ். சங்கர நாராயணன்.

(7) திரு. எல். ஜகந்நாதன்.

(8) திரு. எஸ். இராமமூர்த்தி.

(9) திரு. கே. நரசிம்மலு.

(10) திரு. ஏ. பி. சாந்தி கணபதி.

(11) திரு. டி. ராமநாதன்.

(12) திரு. எஸ். முனுசாமி.

(13) திரு. கே. ஸ்ரீ குமார மேனன், I.P.S.

(14) திரு. பி. கே. தாமி.

(15) திரு. ஜி. ராமலிங்கம்.

(16) திரு. என். தேவராசன்.

(17) திரு. பி. குழந்தைவேலு.

(18) திரு. ஏ. வாசுதேவன்.

(19) திரு. சி. பி. ராமமூர்த்தி.

(20) திரு. வி. கே. நாயர்.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

1972 மார்ச் 27]

(21) திரு. எஸ். சேதுராமசாமி.

(22) திரு. பி. நஞ்சகௌடர்.

(23) திரு. எ. முனுசாமி.

(24) திரு. கே. பி. நாயர்.

வீரச்செயல் புரிந்தவர்களுக்கான காவல் பதக்கம்.

(1) திரு. எம். எம். கணேசன்.

(2) திருமதி கண்ணம்மாள் (காலம் சென்ற கே. பொன்னு சாமியினுடைய மரணத்திற்குப்பின் கொடுக்கப் படுகிறது.)

(3) திரு. டி. பி. பக்தன்.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, வீரச்செயல் புரிந்தவர் களுக்கு இப்படிப்பட்ட பதக்கங்கள் கொடுக்கும் பட்டியலைப் படித் தார்கள். சென்னையில் நடக்கும் நவீனத் திருட்டுக்களில் துப்புத் துலக்குபவர்களுக்கு, குறிப்பாக சென்னை மாநகராட்சியில் களவு போனதைக் கண்டுபிடித்த அப்படிப்பட்ட அதிகாரிகளுக்கும் இப்படிப் பட்ட பரிசுகள் வழங்கப்பட வேண்டுமென்று அரசாங்கம் வற்புறுத்தி யிருக்கிறதா? அல்லது அவர்கள் இந்தப் பரிசுகளைப் பெற்றிருக் கிறார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கூடுமானவரையில் பாராட் டுக்குரிய பலரையும் நாம் பரிந்துரை செய்து மத்திய அரசுக்கு அனுப்புகின்றோம். அவைகளில் சிலவற்றைத்தான் அவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள், பலவற்றை அவர்களுடைய விருப்பத்திற்கேற்றவாறு அவர்கள் அந்தப் பட்டியலில் சேர்க்கிறார்கள். நாமும் நம்முடைய தமிழக அரசைப் பொறுத்த வரையில் மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்டதைப்போன்று இதுபோன்ற வீரச் செயல்கள் மட்டு மல்லாமல், பெரும் கொள்ளைகள் இவைகளிலே திறமையாகப் பணி யாற்றிய போலீஸ் அதிகாரிகளுக்குப் பதக்கங்களும், பாராட்டுக்களும் தந்துகொண்டிருக்கிறோம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இந்தப் பதக்கங்கள் கிடைப் பதிலே தீ அணைப்பு படையினரில் யார் யாருக்குக் கிடைத்தது? குறிப்பாக வைகையாற்றிலே வெள்ளம் வந்தபொழுது பலருடைய உயிரைக் காப்பாற்றிய யாருக்காவது பரிசு வழங்கியிருக்கிறதா?

[1972 மார்ச் 27

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இது 17—12—1971 அன்று வழங்கப்பட்ட பட்டியல். இதிலே வைகையாற்றிலே வீரச்செயல் புரிந்தவர்களின் பட்டியல் இடம் பெறவில்லை என்று கருதுகிறேன்.

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவரவர்களே, காவலர்களில் வீரச்செயல் செய்தவர்களுக்குப் பாராட்டுகளும், விருதுகளும் தருகின்றோம். அது பாராட்டுதற்குரிய ஒன்றுதான். அதில் பல நேரங்களில் அவர்கள் உயிரையே தியாகம் செய்யவேண்டியிருப்பதால் அரசாங்கமே அத்தகையவர்களுக்குக் கட்டாய இன்ஷ்யூரன்ஸ் செய்து அந்தப் பணத்தை அரசாங்கம் போட்டு அவர்களுக்கு உதவி செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நல்ல யோசனை.

திரு. எம். முத்தையா : தலைவரவர்களே, இந்த விருது பெற்றவர்களில் நமது மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர், பிற மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான் படித்த பட்டியல் நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்ததுதான்.

* 719 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1970-ம் ஆண்டில் தமிழகத்தில் தீரச் செயல்களுக்காக ராஷ்டிரபதியின் விருது வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இரண்டு.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : அவர்கள் யார் யார்? எந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்கிற விபரம் அறியலாமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இதைக் கூடக் கேட்காமல் போய்விடுமோ என்று பயந்தேன். அவர்களுடைய பெயர்கள் விளம்பரமாவது நல்லது. அதிலே ஒருவருடைய பெயர் திரு. ஆர். சேதுராமன். தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் உள்ள உள்ளூர் உயர்நிலைப் பள்ளி ஒன்றில் படிக்கும் 14 வயது மாணவன் திரு. கோவிந்தராஜ் என்னும் திலீப்குமார் 2—9—1967-ம் நாள் காவிரி ஆற்றில் மூழ்கிவிட்ட நிலைமையில் இருந்தபோது மேற்படி நகரில் அரசினர் கல்லூரியில் அப்போது மூன்றாவது ஆண்டு

1972 மார்ச் 27]

பி.எஸ்.ஸி. வகுப்பில் படித்து வந்த கல்லூரி மாணவர் திரு. ஆர். சேதுராமன் ஆற்றில் குதித்து தமது உயிருக்கு நேரக்கூடிய ஆபத்தை யும் பொருட்படுத்தாது அவரைக் காப்பாற்றினர். இவரது தீரச் செயலுக்காக அவருக்கு உயிர் பாதுகாப்புப் பதக்கம் அளிக்கப் பட்டது.

இன்னெரு நிகழ்ச்சியில் உயிர் பாதுகாப்புப் பதக்கம் பெற்றவர்கள் திருவாளர்கள் ஏ. ஜெயசீலன், தமிழ்மணி ஆகியோராவர். தஞ்சாவூர் மாவட்டம் மன்னர்குடியிலுள்ள தேசிய உயர்நிலைப் பள்ளியைச் சார்ந்த திரு. ஜெயசீலன், தமிழ்மணி ஆகிய இருவரும் அவ்வூரில் உள்ள பாமணியாற்றில் மூழ்கிக் கொண்டிருந்த விஜயலட்சுமி என்ற 40 வயது பெண்ணைத் தமது உயிருக்கு நேரக்கூடிய ஆபத்தையும் பொருட் படுத்தாது தீரத்துடன் ஆற்றில் குதித்துக் காப்பாற்றினர். இவர்களைப் பாராட்டி ஒவ்வொருவருக்கும் உயிர் பாதுகாப்புப் பதக்கம் அளிக்கப்பட்டது.

திரு. ஆ. பரந்தாமன் : தமிழகத்திலே வீரச் செயல் புரிந்தவர்களில் ஒருசிலரைத் தேர்ந்தெடுத்து மத்திய அரசுக்கு அனுப்பப்படுகின்ற எல்லோரையுமே ஏற்றுக் கொண் டுபாராட்டு விருது அளிக்கப்படக் கூடிய வகையில் முறையை வகுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பரிந்துரை செய்யப்படுபவர் கள் அனைவரையும் அவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. 40 பெயர்களைப் பரிந்துரை செய்தால் 20 பெயர்களை ஏற்றுக் கொள்ளுகிறார்கள். சென்ற வருஷம் 20, 22 பேர் அனுப்பப்பட்டு 10 பேரை ஏற்று கொண்டார்கள். அனைவரையும் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கோருகிற அதிகாரம் நமக்கு இல்லை. நாம் அனுப்புவதற்குப் பெயரே பரிந்துரைதான்.

திரு. கோவை செழியன் : சில ஆண்டுகளுக்கு முன்னால் டில்லியில் பெருந்தலைவர் காமராஜ் அவர்களைத் தாக்குவதற்கு ஒரு கூட்டம் போனபோது தமிழகத்தைத் தேர்ந்த ஒரு வீரன் அவர் உயிரைக் காப்பாற்றுவதற்காகப் பெருமுயற்சி எடுத்துக் கொண்டார். அவர் தமிழகத்தைச் சேர்ந்தவர் என்ற முறையில் அவருக்கு விருது வழங்க ராஷ்டிரபதிக்குச் சிபாரிசு செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவருடைய பெயர் கோதண்டபாணி. அதைச் சொன்னதே அவருக்கு வழங்கிய விருது தான்.

திரு. எம். தேவராசன் : இந்த விருது பெற்றவர்கள் இறந்த பிறகு போஸ்துமஸ் அவார்டு கொடுக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : முதலிலேயே சொன்னேன். போலீசுக்கு வழங்கப்பட்ட விருதுகள் பற்றிச் சொல்லும்போதே சொன்னேன். இறந்துவிட்டால் மனைவியிடத்தில் அந்தப் பதக்கம், விருதுகள் வழங்கப்படுகின்றன.

திரு. நா. வீராசாமி : இப்படிப்பட்ட பரிசுகள் தண்ணீரில் மூழ்க இருந்தவர்களைக் காப்பாற்றினார்கள் என்பதற்காக வழங்கப் பட்டதாகச் சொன்னார்கள். சென்னை நகரில் அடிக்கடி தீ விபத்து ஏற்படுகிறது. அப்படிப்பட்ட நேரத்தில் உள்ளே தீரத்துடன் நுழைந்து குழந்தைகளை எல்லாம் வெளியே கொண்டுவந்து காப்பாற்றுகிறார்கள். வீடு எரிவது தெரியாமல் தூங்கிக் கொண்டிருக் கின்றவர்களையும் இப்படி உள்ளே நுழைந்து காப்பாற்றுகின்ற தீரர் களுக்கு இப்படிப்பட்ட பரிசு வழங்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவர்களுடைய பெயர்கள் அறிவிக்கப்பட்டு நிரூபிக்கப்படுமானால் அவர்களையும் கணக்கில் எடுத்துக் கொள்ளலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : வைகை ஆற்றில் வெள்ளம் வந்த போது 26 வயது வாலிபர் காத்தான் என்பவர் பல உயிர்களைக் காப்பாற்றியதற்காக இதுவரை இந்த மாதிரியான பதக்கம் எதுவும் கொடுக்கப்படவில்லை. நடப்பு ஆண்டிலாவது கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பெரியாருடைய மிகச்சிறந்த தொண்டன் என்று சொல்லப்படுகின்ற அந்தக் காத்தானுக்கு வருகிற ஆண்டு அப்படிப்பட்ட பதக்கம் வழங்கப்பட வேண்டுமென்று அரசு சிபாரிசு செய்யும்.

தொழில் நிறுவனங்களில் தொழிலாளர்களின் பங்கு.

* 720 வினா: திரு. சு. துரைசாமி
திரு. ஏ. சுவாமிதாஸ்
திரு. தோப்பூர் திருவேங்கடம் : } மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தொழிற்சாலைகள் நிர்வாகத்தில் தொழிலாளர்களுக்கு பங்கு தரும் திட்டம் தமிழ்நாட்டில் எந்த அளவு நடை முறைக்கு வந்துள்ளது?

1972 மார்ச் 27]

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தமிழ்நாட்டில் தனியார் துறையில் 16 தொழில் நிறுவனங்களில் கூட்டு நிர்வாகக் குழுக்கள் செயல்படுகின்றன. 12 கூட்டுறவு நூற்பு ஆலைகளிலும் 5 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளிலும் கூட்டு ஆலோசனைக் குழுக்கள் செயல்படுகின்றன.

முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்ட உரையின்போது உறுதியளித்ததற்கு இணங்க கூட்டுறவுத் துறை, அரசுத் துறையைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தில் பங்கு மூலதனத்தில் இடம் அளிக்கும் கொள்கை பற்றி ஆராய ஒரு குழு நியமிக்கப்பட இருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: ஏற்கனவே நமது நிதியமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது முக்கியமான தொழில் நிறுவனங்களில் எல்லாம் தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தில் பங்கு தரப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படியானால் எவ்வளவு காலத்திற்குள்ளாக, எந்தெந்தத் தொழிற்சாலைகளில் இது அமல் நடத்தப்படும்?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: இந்த குழு அமைந்த பிறகு அந்த விவரங்கள் அறிவிக்கப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: உடனடியாக சர்க்கார் நடத்தக் கூடிய தொழில் நிறுவனங்களில், குறிப்பாக சர்க்கார் டிரான்ஸ் போர்ட், மின்சார போர்டு போன்ற இடங்களிலாவது அதற்கான ஏற்பாட்டைச் செய்வதில் குழுவின் பரிந்துரை வரும் வரை காத்திராமல் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: குழுவினுடைய அறிக்கையை எந்த அளவுக்கு விரைவில் தரவேண்டுமோ அந்த அளவுக்கு விரைவில் ஆவன செய்யப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: அமைச்சர் அவர்கள் கூறிய அந்தக் குழு எப்போது நியமிக்கப்படும் என்பதைக் கூறுவார்களா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தேதியிட்டுக் கூறிட முடியாது. விரைவில் அமைக்கப்படும்.

திரு. நா. வீராசாமி: குழு ஒன்று நியமிக்கப் போவதாகச் சொன்னார்கள். யார் யாரை உறுப்பினர்களாகப் போடுவதாக இருக்கிறார்கள்? சட்ட மன்ற உறுப்பினர்களில் அந்தத் துறையில் விவரம் தெரிந்தவர்களை அந்தக் குழுவிலே உறுப்பினர்களாகப் போட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : கனம் உறுப்பினர் அவர்கள் யோசனை நினைவில் கொள்ளப்பட்டு உரிய நேரத்தில் ஆவன செய்யப் படும்.

திரு. கு. காமாட்சி : தொழிற்சாலை நிர்வாகத்தில் தொழிலாளர் களுக்குப் பங்கு தரப்பட வேண்டுமென்பது நியாயம். அதே போல் தொழிற்சங்கங்களில் தொழிலாளர்களே தலைவர்களாக இருக்க வேண்டுமென்ற நிலை பற்றி அரசிடம் பரிசீலனை இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : ஏற்கனவே இந்தக் கருத்தை முதல்வர் அவர்கள் வலியுறுத்தியிருக்கிறார்கள். ஒரு சில தொழிற் சாலைகளில் அப்படி தொழிலாளர்களே தொழிற்சங்கத் தலைவர்களாக இருந்து நடத்தி வருகிறார்கள்.

Mechanical driers in Thanjavur District.

* 721 *Q.*—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether it is a fact that the Food Corporation of India proposes to dismantle the driers in Thanjavur district; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) மேலும் சிறந்த முறையில் பயன்படுத்தப்படுவதற்காக, உலர்த்தி இயந்திரங்கள் Mechanical driers ஏழினை வேறிடங்களுக்கு மாற்ற இந்திய உணவுக் கழகம் கருதியுள்ளது. இவற்றில் 3 மாடர்ன் ரைஸ் மில்ஸ் உள்ள சிதம்பரம், தஞ்சாவூர், செம்பனார்கோவில் ஆகியவிடங்களிலும் காரைக்காலி லுள்ள சியாத்தமங்கையில் ஒன்றும் அமைக்கப்படவிருக்கின்றன. பிற 3 இயந்திரங்கள் அமைக்கப்படுவதற்கான இடங்கள் பற்றி இன்னும் முடிவெடுக்கப்படவில்லை.

(இ) இருக்கின்ற இயந்திரங்களை இயன்றவரை சிறந்த முறையில் பயன்படுத்தப்படுவதற்காக இந்திய உணவுக் கழகம் இந்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாலும், ஆலையின் திறனை மேம்படுத்து வதற்காக இப்பிரிவுகளில் சில, மாநிலத்திற்குள்ளேயே அமைக்கப்பட விருப்பதாலும் அரசின் நடவடிக்கைகளுக்கான அவசியமில்லை.

1972 மார்ச் 27]

திரு. கே. டி. கே. தங்கமணி : தஞ்சையில் இருக்கக்கூடிய இந்த மிகப் பெரிய உலர வைக்கும் ராட்சச இயந்திரங்கள் பயன்படுத்தப் படாமல் இருக்கின்றன என்று சொல்லுகிறார்கள். ஃபுட் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா அதைப் பயன்படுத்தாவிட்டால் அதை நாம் பயன்படுத்தும் வகையில் பெற்றுக்கொள்ள அவர்களை அணுக முடியுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இந்த இயந்திரங்கள் ஈரம் உலத்துவதற்காக அமைக்கப்பட்டவை. குறுவை அறுவடையின் போதுதான் பயன்பட முடியும். இந்த ஆண்டு குறுவை அறுவடையின்போது மழையே பெய்யவில்லை. முந்தைய ஆண்டும் இது முழு அளவுக்குப் பயன்படுத்தப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. இதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. ஏ. ஆர். சுப்பையா : அந்த ட்ரையரில் ஏகப்பட்ட நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இது எப்படி ஆரம்பிக்கப் பட்டது ? பைலட் ஸ்கீமாக ஆரம்பிக்கப்பட்டதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இந்த இயந்திரம் ஈரத்தை உலர வைக்கும் இயந்திரம். இது முழு அளவுக்குப் பயன்படுத்தப்பட வில்லை என்று வேறு சில இடங்களுக்கு மாற்றுகிறார்கள். இதைச் செய்வது ஃபுட் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா. நஷ்டத்தைப் பற்றி நமக்கு ஒன்றும் கணக்குக் கிடையாது.

திரு. என். கிட்டப்பா : இந்த ஈரம் உலர்த்தி இயந்திரங்களில் அதிகமான நெல்லை ஒரே நேரத்தில் கொட்டினால்தான் உலர வைக்க முடியும் என்ற நிலை இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்தக் கொள் அளவிற்குச் கொஞ்சம் குறைவாக இருக்குமானால் அதிகமாக நடுத்தர விவசாயிகள் பயன் அடைய வசதியாக இருக்குமென்று நம்பப்படு வதால் அது குறித்து மாற்று யோசனையை அரசாங்கம் தொடர்புடைய கழகத்தினிடம் அறிவிக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஈரம் உலர்த்தும் இயந்திரங் களில் எவ்வளவு கொட்டினால் ஈரத்தை உலர்த்த முடியும் என்று இருக்கிறதோ அந்த அளவிற்குக் கொட்டாமல் குறைவாகக் கொட்டினால்தான் அல்லது குறைவாக உபயோகப்படுத்தினால் பெரும் நஷ்டம் ஏற்படும். ஆகவே, அதை ஒன்றும் செய்வதற்கில்லை. ஆனால் உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும் முறையில் மினி ட்ரையேர்ஸ் போடு வதைப் பற்றி வேண்டுமானால் அதைப்பற்றி விசாரித்துப் பார்க்கலாம்.

[1972 மார்ச் 27

திரு. பெ. சௌந்தர பாண்டியன் : எஞ்சியுள்ள இந்த மூன்று ஈரம் உலர்த்தும் இயந்திரங்களில் ஒன்றை திருச்சி மாவட்டத்தில் துவக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இது ஃபுட் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா மாற்றுகிற விஷயம். நமக்கும் அவர்களுக்கும் சம்பந்தம் இல்லை. உறுப்பினர் அவர்கள் எங்கே வைக்க வேண்டுமென்று யோசனை சொல்வார்களானால் அதைப்பற்றிப் பரிசீலித்து பரிந்துரை செய்யலாம்.

திரு. வி. கே. இராஜாப்பிள்ளை : இந்த ஈரம் உலர்த்தும் இயந்திரத்தில் போடும் நெல் முதலில் அதிக வெப்பம் அடைந்து சோறு போல் ஆகிவிடுகிறது. பின் அவித்து அரைக்கும்போது பொடிந்து விடுகிறது. ஆகவே அதனால் நஷ்டம் ஏற்படுகிறது என்று சொல்லப்படுகிறது. ஆகவே இதற்கு ஏதாவது பரிகாரம் காண்பதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : உறுப்பினர் அவர்கள் சொல்கிற கருத்து சரியான கருத்து அல்ல.

Retail price of rice in Madras.

* 722. *Q.*—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether it is a fact that retail price of rice in Madras City and districts has gone up since November 1971;

(*b*) if so, the steps taken to bring down the price ; and

(*c*) the result of such action, if any taken?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) 1971 நவம்பரில் அரிசியின் சில்லறை விலை உயர்ந்தது. ஆனால், 1972 ஜனவரியில் முக்கிய அறுவடை தொடங்கியதிலிருந்து பெரும்பாலான விற்பனை இடங்களில் விலைச் சரிவு ஏற்பட்டுள்ளது.

(ஆ) & (இ) அவசியம் ஏற்படும் பொழுதெல்லாம் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம், அரசு இருப்பிலிருந்து கட்டுப்படியாகக் கூடிய விலையில் அரிசியை விற்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. சென்னையிலும், கோவையிலும் ஈடு

1972 மார்ச் 27]

செய் விலையில் அரிசி வழங்கப்பட்டதைத் தவிர, அங்கு குறைந்த வருவாய்த் தொகுதியினருக்கு 1971 நவம்பர்—டிசம்பரில் கட்டுபடியாகக்கூடிய விலையிலும் அரிசி வழங்கப்பட்டது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சென்ற ஆண்டு நவம்பரில், அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொண்டதுபோல், அரிசியின் விலை படிக்கு மூன்று ரூபாய் வரை உயர்ந்திருந்தது. இப்போதுகூட அது குறைந்ததாகத் தெரியவில்லை. சென்னை, கோவை, போன்றவிடங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குக் கொடுத்துள்ள உத்தரவின்படி, படி அரிசி ரூ. 1.25—க்கு கிடைப்பதற்கான ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இப்போது நாம் கொடுக்கிற அரிசி, அரசுக்கு லாபம் நஷ்டம் இல்லாத அளவிற்கு கொள் முதலும் அதற்குண்டான செலவையும் சேர்த்து அரிசியின் கிரயத்திற்கு லாபம் இல்லாமல் விற்கிறார்கள். ஆனல் உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது போல் அரிசி ரூ. 1.25-க்கு கொடுப்பது என்றல் மறுபடியும் சப்சிடி ஸ்கீம் ஆரம்பிப்பது போலாகும். தற்போது அந்த யோசனை அரசுக்கு இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : இன்று அரிசி நியாயவிலைக் கடைகள் மூலம் விற்கப்படுவது என்று தனியார்களுக்குக் கொடுக்கப்படுகிறது. ஆகவே எல்லா நியாயவிலை அரிசியையும் கன்ஸ்யூமர் கோவாப்பரேட்டீவ் சொஸைட்டீஸ் மூலம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா? இல்லையென்றல் எந்தளவிற்கு கூட்டுறவுக்குக் கொடுக்கப்படும், எந்தளவிற்கு தனியாருக்குக் கொடுக்கப்படும், ஏதாவது விகிதாசாரம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இவர்கள் எல்லாம் மனு போட வேண்டும் என்று தேதி நிர்ணயித்தோம். ஆனல் கூட்டுறவு சங்கங்கள் பெரும்பாலும் காலம் கடத்திப் போட்டிருக்கிறர்கள். பலர் காலம் கடந்து போட்டிருக்கிறர்கள். இருந்தாலும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தொடர்ந்து கொடுக்கும்படிச் சொன்னேம். ஏற்கனவே நான் இந்த மன்றத்தில் கூறியிருப்பதைபோல் டி.யு.சி.எஸ். போன்ற கூட்டுறவுச் சங்கங்கள் அரசு எடுத்துக் கொண்ட நல்ல முயற்சிக்கு ஆதரவு தராமல் ஒத்துழைக்காத காரணத்தினல் அவை பற்றி மறுபரிசீலனை செய்துகொண்டிருக்கிறேம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[1972 மார்ச் 27

திரு. என். கே. பழனிசாமி: இப்படி கொள்முதல் செய்வதில் 25 சதவிகிதம் கண்ட்ரோலில் கொடுக்கவேண்டுமென்று வியாபாரிகளுக்கு உத்தரவு இருப்பதன் காரணமாக கண்ட்ரோல் விலையில் 25 சதவிகிதம் கொடுத்துவிட்டு பாக்கி உள்ள அரிசியை தங்கள் இஷ்டம்போல் விற்பதினுல்தான் இப்படி விலை அதிகமாகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: விலையைக் குறைப்பதற்காகத் தான் இது பயன்படுமே தவிர விலையை உயர்த்துவதற்கு பயன் படாது. இப்போது லெவி முறை கொண்டுவருவதன் மூலம் விவசாயிகளுக்கு குறைந்த விலை கிடைக்கிறது என்று அவர்கள் பல முறையீடுகள் செய்கிறுர்கள். விலை உயருவதற்கு இது காரணம் என்று அரசாங்கம் ஒத்துக்கொள்ளமுடியாது.

திரு. கு. காமாட்சி: அரிசி விலை உயர்ந்துவிட்டது, உயர்ந்து விட்டது என்று சொல்கிறுர்கள். ஆனுல் திருச்சி பக்கத்தில் திருவரம்பூரில் அரிசி படி ரூ. 1.45-க்குத்தான் விற்கப்படுகிறது. அங்கு மட்டும் ஏன் இப்படி விற்கப்படுகிறது? மற்றயிடங்களில் ஏன் விலை உயருகிறது என்பதை ஆராய ஒரு குழு அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவதெல்லாம் எல்லாவிடங்களிலும் அவர்கள் குறிப்பிடுகிற அந்த ரக அரிசி அந்த விலைக்குத்தான் விற்கப் படுகிறது. ஆனுல் சிலர் எங்களுக்கு நெல்லூர் அரிசிதான் வேண்டும், கிச்சடி சம்பா வேண்டும் என்று சொல்கிறுர்கள். அதன் விலை இரண்டேமுக்கால், மூன்று ரூபாய் என்றிருக்கிறது. மத்தியதர மக்கள் உபயோகிக்கும் அரிசியின் விலை தமிழ்நாட்டில் குறைவாகத் தான் இருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: இப்பொழுது நம் மாநிலத்தில் எந்தெந்த மாவட்டங்களில் படி அரிசித் திட்டம் அமலில் இருக்கிறது? இல்லை என்ருல் மீண்டும் படி அரிசித் திட்டத்தை அமல் நடத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ரூபாய்க்கு ஒரு படி அரிசித் திட்டம் தமிழ் நாட்டில் எங்குமே அமலில் இல்லை.

1972 மார்ச் 27]

திரு. என். கிட்டப்பா: குறிப்பாக நகராட்சிப் பகுதிகளில் அரிசியின் விலை சில நேரங்களில் திடீர் திடீரென்று உயர்ந்து விடுகிறது. எனவே அத்தகைய நகராட்சிப் பகுதிகளில் நிரந்தர மாக நியாயவிலைக் கடைகளை உருவாக்குவதற்கு அரசு ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: எங்கெங்கு விலை உயரு கிறதோ அங்கெல்லாம் கடைகள் திறக்கிற அதிகாரத்தை மாவட்ட ஆட்சிமன்றத் தலைவர்களுக்கு அளித்திருக்கிறோம். அவர்கள் விலை உயர்வு இருக்கிறது என்று அறிந்தால் உடனடியாக மாவட்ட ஆட்சிமன்றத் தலைவர் கடைகளைத் திறந்துவிட்டு அரசாங்கத்திற்குத் தெரிவிக்கலாம்.

திருமதி த. ந. அனந்தநாயகி: நகரங்களில் பலவிடங்களில் நல்ல சாமார்த்தியமாக நடக்கக்கூடிய கன்ஸ்யூமர்ஸ் கோவாப்பரேட்டிவ் சொஸைட்டிகள் இருந்தும்கூட அவைகளுக்கு எல்லாம் அரிசி வழங்காமல், வீடுகளிலிருந்து அருகாமையில் இருக்கக்கூடிய அவற்றிற்குக் கொடுக்காமல், ஒன்றரை மைல்களுக்கு அப்பால் உள்ள தனி நபர்களுக்கு நியாயவிலைக் கடைகள் கொடுக்கப்படுகின்றன. டி.யு.ஸி.எஸ். வேண்டுமானல் ஏதாவது தவறு செய்திருக்கலாம். அதை கனம் அமைச்சர் அவர்களும், கனம் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும் சேர்ந்து அதை எப்படிச் சரிசெய்வது என்பதைப்பற்றி யோசிக்கலாம். ஆனல் நல்லமுறையில் நடக்கக் கூடிய கன்ஸ்யூமர் கோவாப்பரேட்டீவ் சொஸைட்டிகளுக்கு உடனடியாக நியாயவிலை அரிசியைக் கொடுப்பதற்கு இந்த அரசாங்கம் முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற கன்ஸ்யூமர் கோவாப்பரேட்டிவ் சொஸைட்டி எது என்று எனக்குத் தெரியவில்லை. அவர்கள் காலத்தோடு மனுப் போட்டிருக்கிறார்களா என்பது எனக்குத் தெரியாது. விவரங்களை உறுப்பினர் அவர்கள் எழுதியனுப்புவார்களானல் நிச்சயம், அதுபற்றி பரிசிலிக்கப்படும்.

திரு. நா. வீராசாமி: நவம்பர் 1971-ல் அரிசியின் விலை சிறிது கூடியது என்று சொன்னர்கள். அப்படி அரிசி விலை கூடியதன் காரணமாக சென்னையில் பதுக்கல் செய்த அரிசி வியாபாரிகளை

—உடனடியாக தீவிர நடவடிக்கைகள் எடுத்துக் கண்டு பிடித்து—தண்டித்ததின் காரணமாக விலை குறைந்தது என்று சொல்லப் படுவது உண்மையா? அப்படியானால் அதன் விவரங்கள் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பதுக்கல் எங்கெங்கு இருக் கிறது என்று போலீஸார் சோதனையிட்டு, கணக்கு கொடுக்காத இடங்களில் எல்லாம், அவர்கள்மீது நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டு வருகிறோம். விலை ஏறுவதும் இறங்குவதும் வியாபாரிகள் பதுக்கியதால் மட்டுமல்ல. டிஸம்பர் ஆரம்பித்தவுடன் அறுவடை வந்துவிட்டதால் விலைச் சரிவு ஆரம்பித்தது.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, are the Government aware that a co-operative society called 'Teynampet Co-operative Society' has applied for rice-ration permit-they have had this business before and there is no bad remark against them—but they have been refused permit?

THE HON. THIRU P. U. SHANMUGHAM: I do not know whether they have applied in time or not. If the hon. Member writes to me I will consider it.

THIRU B. VENKATASWAMY: Sir, is it not a fact that due to restrictions in the movement of foodgrains from district to district, the price of rice is going up?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாவட்டத்திற்கு மாவட்டம் அரிசி நடமாட்டம் கட்டுப்படுத்தப்படவில்லை. தமிழ் நாட்டில் குறிப்பிட்ட நான்கு மாவட்டங்களில், எல்லையோரப்பகுதிகளில் மட்டும் அரிசி நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தியிருக்கிறோம். பாக்கியுள்ள மாவட்டங்களில் தாராளமாகச் செல்லலாம். குறிப் பிட்ட நான்கு மாவட்டங்கள் சுற்றோரங்களில், எல்லையோரப் பகுதி களில் இருந்து அரிசி எடுத்துச் செல்லவேண்டுமானால் பெர்மிட் தேவை.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, in Hosur taluk a mrasure of raw rice, i.e., ordinary rice—new rice costs Rs. 2.50 or 2.60. So, may I know from the Hon. Minister whether he will take steps to reduce its price?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தர்மபுரி மாவட்டத்தில் உள்ள விலைபற்றி என்னிடம் புள்ளிவிவரம் இல்லை. உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பார்களேயானால் அவசியப்பட்டால் அங்கும் கடைகள் திறப்பதில் ஆட்சேபணை இல்லை.

1972 மார்ச் 27]

திரு. கு. அ. பொம்மன்: பார்டர் ஏரியாவில் கட்டுப்பாடு வைத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் கூடலூர் பகுதியில் இன்னும் அரிசி கடத்தப்படுகிறது. இதுபற்றி புகார்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அதன்மீது அரசாங்கத்தினால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இதுவரையில் இருந்ததற்கும் இப்போது புதிதாகப் புகுத்தியுள்ள முறைக்கும் இடையே நிறைய மாறுபாடு இருக்கிறது. எல்லையோரப் பகுதிகளில் கடைகள் திறக்க இதுவரை அரசாங்கம் அனுமதி அளித்து வந்தனர். கூடலூரையும் சேர்த்து எல்லாப் பகுதிகளிலும் கடைகள் திறக்க அனுமதி அளித்து எவ்வளவு கடைகள் நடத்துவது என்பதற்கு மாவட்ட ஆட்சிமன்றத் தலைவர் அனுமதி வழங்கி வந்தார்கள். இந்த ஆண்டு கணக்குப் பார்த்ததில் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மட்டும் எல்லையோரங்களில் உள்ள கடைகளுக்கு ஏராளமான அரிசி கொடுக்கப்பட்டு விட்டதாக அரசாங்க சார்பில் கலெக்டர் கொடுத்துள்ள கணக்கை வைத்துப் பார்த்ததிலிருந்து தெரிய வந்தது.

இதை வைத்து பெல்ட் ஏரியாவை 15 என்பதை 5 மைல் என்று குறைத்து அதிலுள்ள மக்கள் அனைவருக்கும் இப்போதுள்ள குடும்பக் கார்டைப் பயன்படுத்தி அந்தக் கார்ட் மூலம் அரிசி வழங்குவது. அதற்குரிய கடைகள் திறப்பது, குறிப்பிட்ட கடைகளுக்கு குறிப்பிட்ட அளவிற்கு மேல் அரிசி கொடுப்பது இல்லை என்பது, ஏற்கெனவே நிலம் வைத்திருப்பவர்கள் உபயோகத்திற்கு வைத்திருக்கும் அரிசியைத் தவிர மிச்சமுள்ள அரிசியை அரசாங்கம் கொள்முதல் செய்வது போன்ற நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம். நிச்சயமாக அந்த நடவடிக்கைகள் மூலம், தமிழ்நாட்டின் எல்லையிலிருந்து கடத்தப் படுகிற அளவைக் கட்டுப்படுத்த முடியும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். இதனால் தமிழ்நாட்டில் இந்த ஆண்டு நிச்சயம் விலை ஏறாது என்று நான் உறுதியளிக்க முடியும்.

THIRU K.S. KOTHANDARAMIAH : Sir, may I know from the Hon. Minister whether the belt area in Hosur taluk will be reduced as aid in other areas ?

THE HON. THIRU P. U. SHANMUGHAM : We have already reduced the area throughout Tamil Nadu from 15 miles to five miles.

Urban Land Tax

* 723 *Q.*--DR. H.V. HANDE : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state :

(a) Whether the Chief Secretary has received any letter from the Voters Forum, Madras (letter dated 29th September, 1971 about certain defects in the Urban Land Tax; and

(*b*) if so, the details thereof and the action taken thereon?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) பிரிவினை யாகாத ஒவ்வொரு இந்து குடும்பத்தினரும் வைத்துள்ள நகர நிலங் களுக்கு உயர் அளவுக்கு விலக்கு அளிக்கப்பட வேண்டும் என்று வாக்காளர் மன்றம் கருத்துத் தெரிவித்துள்ளது. தற்போது ஒரு மனையும் அதற்குக் கீழும் உள்ள நிலத்திற்கு விலக்கு அளிக்கப் பட்டுள்ளது. விலக்கு அளிக்கப்பட்டுள்ள அளவுக்கு மேல் உள்ள நிலங்களுக்கு மட்டுமே நிலவரி விதிக்கப்பட வேண்டும், அவர்கள் வைத்துள்ள மொத்த நகர நிலங்களுக்கு நிலவரி விதிக்கக் கூடாது. அரசு அந்தக் கருத்துரைகளைப் பரிசிலனை செய்து, அவற்றை ஏற்றுக் கொள்ளவில்லை.

THIRU K. M. SUBRAMANIAM : In this Voters' Forum, how many are members? Is it registered?

MR. SPEAKER : This question is not about Voters' Forum. It is about Urban Land Tax.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Will the Government examine the desirability of extending the exemption to at least $1\frac{1}{2}$ grounds? Will the Government reconsider its decision?

THE HON. THIRU P. U. SHANMUGAM : Frequently the hon. Member is repeating the same thing. Government does not think so.

THIRUMATHI T.N. ANANDANAYAKI : Is the Government turning a deaf year?

THE HON. THIRU P. U. SHANMUGHAM : We are hearing the hon. Member. But we have decided not to accede to it.

THIRU K. M. SUBRAMANIAM : Now the price of one ground in Mount Road is Rs. 1 lakh whereas the cost of one ground in Saidapet is Rs. 5,000. Is it not an invidious distinction to exempt

1972 மார்ச் 27]

Rs. 1 lakh in Mount Road and Rs. 5,000 in Saidapet. Will the Government think of rationalisation of the urban land tax on the basis of value of property rather than on area of property in urban areas?

THE HON. THIRU P. U. SHANMUGHAM : Sir, we have taken into account the area and not value.

THIRU K. M. SUBRAMANIAM : I tried to understand the details of the Act. But what I am asking the Hon. Minister is whereas invidious distinction is made of exempting Rs. 1 lakh (cost of one ground in Mount Road) and Rs. 5,000 (cost of one ground in Saidapet) will the Government think of charging urban land tax on the basis of market value rather than area?

THE HON. THIRU P. U. SHANMUGAM : It is a good suggestion for consideration.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : The hon. Member Thiru K.M. Subramaniam was saying about non- residential area like Mount Road fetching a large amount. So, will the Government think of exempting $1\frac{1}{2}$ grounds for residential areas? The Government can leave out non-residential areas. At least for residential areas will they think of exempting the urban land tax.

THE HON. THIRU P. U. SHANMUGAM : * * *

MR. SPEAKER : It is an insinuation. I expunge the words of the Hon Minister.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : * * *

It is only for Lower Middle Class I am asking.

MR. SPEAKER : I have already expunged the words of the Hon. Minister.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, மனிதன் வாழ்வதற்கு மவுண்ட்ரோடாக இருந்தாலும், சைதாப்பேட்டையாக இருந்தாலும் ஒரு குறிப்பிட்ட அளவு நிலம் தேவை என்று மக்கள் கருதுகிறார்களே, அது உண்மையா?

* * * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, மவுண்ட் ரோடாக இருந்தாலும், அல்லது சைதாப்பேட்டையாக இருந்தாலும் ஒரு குறிப்பிட்ட அளவு பூமிக்கு நாம் விதி விலக்கு அளித்திருக்கிறோம். ஏற்கெனவே இருந்த சட்டத்தில் விதிவிலக்கு இல்லை. புதிதாக கொண்டுவரப்பட்டிருக்கிற சட்டத்தில் தான் விதி விலக்கு அளித்து, ஏழை எளிய மக்களுக்கு இந்த அர்பன் லேண்ட் டாக்ஸ்-லிருந்து விதிவிலக்கு அளிக்கவேண்டுமென்ற நல்ல கருத்தின் அடிப்படையில் தான் இந்த புதிய முறையை புகுத்தியிருக்கிறோமே தவிர வேறு அல்ல.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவரவர்களே, இந்த அர்பன் லேண்ட் டாக்ஸ் பற்றி பல முறை இங்கே பேசி $1\frac{1}{2}$ கிரௌண்ட் என்று ஸ்திரப்படுத்தி விட்டார்கள். காரணம், கனம் முதலமைச்சர் அவர்களுடைய வீடு $1\frac{1}{2}$ கிரௌண்ட் இருப்பதால் பார்ஷியாலிடி வந்துவிடும் என்று கருதினார்களோ என்னவோ தெரியவில்லை. நல்லார் ஒருவரால் எல்லோருக்கும் மழை பெய்யும் என்று சொல்வதைப்போல், $1\frac{1}{2}$ கிரௌண்டு கொண்ட வீடு கனம் முதல் அமைச்சருடையதாயிருந்தாலும் இந்த $1\frac{1}{2}$ கிரௌண்டுக்கு விதி விலக்கு கொடுத்தால் நன்றாக இருக்கும். அதை அரசாங்கம் செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, தற்போது அப்படி யோசனை இல்லை.

பெரிய பள்ளிப்பாளையம் கிராமத்திலுள்ள பொதுப்பணித்துறை நிலங்கள்

*724 வினா—திரு. சி. க. வடிவேலு: மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிரி வட்டம், பெரிய பள்ளிப்பாளையம் கிராமத்தில் பொதுப்பணித்துறைக்கு சொந்தமான சர்வே எண். 183, 184, 185 என்ற இடங்களில் தனி நபர்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளதை காலி செய்யும்படி அரசாங்கம் உத்திரவு அனுப்பியுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

1972 மார்ச் 27]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிரி வட்டம், பெரியபள்ளிப்பாளையம் கிராமத்தில் 183, 184, 185 ஆகிய சர்வே எண்களைக்கொண்ட நிலங்கள் பட்டா நிலங்கள். ஆகையால் இந்நிலங்களிலிருந்து யாரையும் காலி செய்வதுபற்றி அரசு எவ்வித உத்திரவும் அனுப்பவில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

New post of Chief Engineer

* 725 *Q.*—DR. H.V. HANDE: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether it is a fact that the Government have created a new post of a Chief Engineer to be exclusively in charge of works relating to national highways in the State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) தமிழ்நாட்டில் தேசிய நெடுஞ்சாலை வேலைகளையும், இதர மத்திய அரசு பொறுப்பிலுள்ள சாலைத் திட்டங்களையும் கவனிக்கும் பொறுப்பிற்காக தலைமைப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலைகள்) என்ற பெயரில் ஒரு தலைமைப் பொறியாளர் பதவியையும், அவருக்கான பணியாளர்களையும் ஏற்படுத்த பொதுப்பணித்துறை 16—9—1971 நாளிட்ட அரசு ஆணை எண் 1933-ல் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இன்றைக்கு மத்திய அரசுக்கு சொந்தமாக இருக்கும் நெடுஞ்சாலையில் குடிநீருக்காக பைப் போடுவதற்கு சில சிரமங்கள் ஏற்படுகிறதே, அது சம்பந்தமாக இந்தப் பொறியாளர் அவர்கள் பொறுப்பு எடுத்து அம்மாதிரியான சிக்கல்களை தீர்ப்பதற்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இந்தத் தலைமைப் பொறியாளருக்கு அனுமதி கொடுக்கும் அதிகாரம் கிடையாது. இந்தத் தலைமைப் பொறியாளர் மத்திய அரசுக்கு எழுதித்தான் தேசீய நெடுஞ்சாலைகளின் குறுக்கே வெட்டுவதற்கு, பைப் அமைக்கும் பணிகளைச் செய்ய அனுமதி பெறுவார்கள்.

திரு. ஏ. ஆர். சுப்பையா: இந்த சீப் இன்ஜினீர், நேஷனல் ஹைவேஸ் அலுவலகத்தின் நிர்வாகச் செலவை மத்திய சர்க்கார்

கொடுக்கிறார்களா, அல்லது நம்முடைய அரசாங்கத்தின் பொறுப்பில் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மத்திய சர்க்கார் ஏற்றுக்கொள்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : தேசீய நெடுஞ்சாலையின் குறுக்கே பைப் போடுவதற்குக் கூட மத்திய அரசாங்கத்திலிருந்து அனுமதி வாங்கவேண்டியிருப்பதால் தாமதம் ஏற்படுகிறது. ஆகையால், இதைப் பற்றி குறிப்பாக கனம் அமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் செல்லும்போது, சம்பந்தப்பட்ட அமைச்சர்களுடன் கலந்து பேசி உரிமை பெற்று வருவார்களா? இதெல்லாம் சாதாரண நிர்வாகச் சிக்கல்கள் தான். இதையெல்லாம் தீர்த்துக் கொள்வதற்கு அதிகக் கஷ்டம் இருக்காது. ஆகவே, அவர்களே இதிலே கவனம் செலுத்தி இப்படிப்பட்ட காலதாமதம் இல்லாமல் செய்வதற்கு ஒரு வழிவகை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சாதாரண நிர்வாகச் சிக்கலுக்கே இவ்வளவு காலதாமதம் ஆகிறது. பலமுறை எழுதி இருக்கிறோம். மீண்டும் மத்திய அரசுக்கு எழுதி வற்புறுத்துகிறோம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, மத்திய அரசாங்கத்தின் நிதியைப் பெற்றுத்தான் இந்தத் தலைமைப் பொறியாளர் நியமிக்கப்பட்டிருக்கிற காரணத்தால், இதற்கு ஏதாவது ஒரு "கோட்" வகுப்பதற்கு மத்திய அரசாங்கத்தோடு பேசி ஏற்பாடு செய்து கொள்ள அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தேசீய நெடுஞ்சாலைப் பணிகளை கவனிப்பதற்காகத்தான் இவர் நியமிக்கப் பட்டிருக்கிறார். மத்திய அரசாங்கத்திடமிருந்து அதிகாரங்களைப் பெறுவதற்கு அல்ல.

சின்னக்கரைக்கு அருகே குட்டை அமைப்பு

*726 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர்–பல்லடம் ரோட்டில் சின்னக்கரைக்கு அருகில் ஒரு குட்டை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

1972 மார்ச் 27]

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) பல்லடம் தாலூகா, திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் கரைப்புதூர் கிராமம் நில அளவை எண். 214-ல் சின்னக்கரை என்ற ஓடையின் குறுக்கே திருப்பூர்-பல்லடம் ரோடுக்கு மேல்புரத்தில் ஒரு குட்டை அமைக்கும் திட்டம் பாசன தலைமைப் பொறியாளரின் பரிசீலனையில் உள்ளது.

சிவன்மலைக் கவுண்டன் பாளையத்துக்குப் பாசனக்குளம்

*727 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், முத்தனம்பாளையம் கிராமம் சிவன்மலைக் கவுண்டன் பாளையத்தில் ஒரு குளம் (Irrigation Tank) அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

பல்லடம் பகுதியில் உள்ள வறட்சிப் பகுதிகள்

*728 வினா—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் பகுதி வறட்சி பகுதியாக இருப்பதால் அப்பகுதியில் உள்ள குட்டைகளுக்கு P.A.P. வாய்க்காலிலிருந்து தண்ணீர் கொண்டுவந்து நிரப்பும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்ப ாட்சா : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

ஆலத்துறையாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம்

* 729 வினா—திரு. வீ. கே. இராஜாப்பிள்ளை : மாண்புமிகு பொது பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில், தோவாளை தாலூகா கடுக்கரை பக்கமிருந்து துவங்கும் ஆலத்துறையாற்றில் ஒரு அணை கட்டி புதிய கால்வாய்கள் மூலம் அந்த தண்ணீரை வறட்சி பகுதிகளுக்கு கொடுப்பதற்கு திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டத்தில் ஆலத்துறையாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் கட்டுவதுபற்றி ஒரு திட்டம் ஆய்வில் இருக்கிறது.

திரு. வீ.கே. இராஜாப்பிள்ளை : ஆலத்துறையாற்றின் குறுக்கே அணை கட்டி, நீர்த்தேக்கம் கட்டி, அந்த நீரை கன்னியாகுமரி வறட்சிப் பகுதிக்குக் கொடுப்பதோடுகூட, அதிகமாக இருக்கிற நீரை திருநெல்வேலி மாவட்டத்திற்குக் கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் சொல்லிய கருத்தின் அடிப்படையில் தான் இந்தத் திட்டம் பரிசிலிக்கப்பட்டு, ஆலத்துறையாற்றுத் திட்டத்தைப் பற்றி திருச்சியில் இருக்கிற ஆய்வுப் பொறியாளர் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : இந்தத் திட்டத்திற்காக எஸ்டிமேட் தயார் செய்யப்பட்டதா? இதற்குச் செலவாகும் தொகை எவ்வளவு? இதனல் பயன்படும் ஆயக்கட்டு எவ்வளவு என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : எஸ்டிமேட் தொகை எவ்வளவு என்பது என்னிடமில்லை. 1,652 ஏக்கர் நிலங்களுக்கு பாசன உறுதி அளிப்பதற்கு இந்தத் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது.

1972 மார்ச் 27]

சின்கோனு தோட்டத் தொழிலாளர்களுக்கு பூரிப்பூதியம்

*730 வினு—திரு. இ. ராமசாமி: மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

அரசு சின்கோனு தோட்டத் தொழிலாளர்களுக்கு தோட்டத் தொழிலில் ஈடுபட்டுள்ள மற்ற தொழிலாளர்களுக்கு கிடைப்பது போல் வருடாந்திர போனஸ் அளிக்க அரசிடம் திட்டம் ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. ஒ. பி. இராமன்: இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி: தொழிலாளர்களுக்கெல்லாம் 8–1/3 சதவிகிதம் போனஸ் கொடுக்கவேண்டும் என்று மத்திய அரசோடு போராடுகின்ற மாநில அரசு அரசுத்துறையின்கீழ் வேலை செய்யும் சின்கோனு தொழிலாளர்களுக்கு அளிப்பதற்கு மறுப்பதற்கு காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ஒ. பி. இராமன்: போனஸ் அளிப்பது அல்லது மறுப்பது என்ற பிரச்னே இல்லை. அரசுத்துறை தொழிலாளர் களுக்கும் போனஸ் வழங்குவதற்கு மொத்தமாக சட்டம் வந்தால், எல்லோருக்கும் சேர்த்துக் கொடுக்கப்படும்.

திரு. கு. அ. பொம்மன்: நீல மலையிலிருந்து சிறிய தோட்டத் தொழிலாளர்கள் சங்கத்திலிருந்து அரசுக்கு ஏதேனும் மனு கொடுக்கப்பட்டிருக்கிறதா? அப்படியானுல், அதன் மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. ஒ. பி. இராமன்: மனுக்கள் வந்திருக்கின்றன. சட்டத்தின் கீழ் அரசுத்துறை நிறுவனங்களிலுள்ள தொழிலாளர் களுக்கு போனஸ் கொடுக்கவேண்டிய முறை இல்லாத காரணத் தினுல் நடவடிக்கை இல்லையே தவிர, மொத்தமாக அகில இந்திய ரீதியில் ஒப்புக்கொள்ளப்பட்டு, சட்டம் வந்தால், நாமும் விரும்பி ஏற்றுக்கொள்ளலாம்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தற்பொழுது இருக்கிற சட்டம் அரசுத் துறையில் இருக்கிற தொழிலாளர்களுக்கு போனஸ் கொடுப்பதற்குத் தடையாக இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள். இப்பொழுது இருக்கிற சட்டத்தின் அடிப்படையில் டிரான்ஸ் போர்ட் இலாகாவில் உள்ள தொழிலாளர்களுக்கு போனஸ் கொடுக்கப்படுகிறதே? அதே முறையை செயல்படுத்தி சின்கோனு

ரப்பர் பிளாண்டேஷன் தொழிலாளர்களுக்கு மட்டும் கொடுக்கப் படாதது ஏன்? அது சம்பந்தமாக சட்டம் தடையாக இருந்தால், சட்டத்தைத் திருத்தியாவது இந்தத் தொழிலாளர்களுக்கு போனஸ் கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : டிரான்ஸ்போர்ட் இலாகாவில் எக்ஸ் கிரேஷியா பேமெண்டாக ஊக்க போனஸ் தான் அளிக்கப் பட்டு வருகிறது. 1,000 தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கும் நிலையில் தேவைக்குத் தகுந்தாற்போல் இதை விஸ்தரித்துக்கொண்டு போகிறோம். அதனால் தொழிலாளர்களுக்கு அதிகமான வேலை வாய்ப்பு கிடைக்கிறது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : மதிப்பீட்டுக்குழு அறிக்கையில் கூட சின்கோனா தொழிலாளர்களுக்கு போனஸ் கொடுக்கவேண்டும் என்று ஒரு பரிந்துரை காணப்படுகிறது. அதன் மீது அரசு எடுத்துக்கொள்ள இருக்கும் நடவடிக்கை என்ன? மேலும், ரூ. $2\frac{1}{2}$ கோடிக்கு அதிகமாக லாபம் சம்பாதிக்கும் இந்தத் துறையில் இந்தப் பூரிப்பு ஊதியத்தைக் கொடுக்கக் கூடாதா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இரண்டரைக் கோடி ரூபாய்க்கு மேலாக லாபம் வந்ததாக தகவல் இல்லை. எஸ்டிமேட் கமிட்டி பரிந்துரை செய்திருக்கிறார்கள். 1967-க்குப் பின்னாலே தொழிலாளர்களுக்கு நான்கு முறை ஊதிய உயர்வு கொடுக்கப் பட்டிருக்கிறது.

Nurseries

* 731 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether the Government propose to develop nurseries for the extraction of perfumes in the State; and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் (அ) செடிப் பண்ணைகளுக்கும் வாசனைப் பொருள்களுக்கும் நேரடித் தொடர்பு எதுவுமில்லை. ஏனெனில், வாசனைப் பொருட்கள் செடிப் பண்ணைகளிலிருந்து பெறப் படுவதில்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

1972 மார்ச் 27]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: எங்களுக்கே காதில் விழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரக்கப் படியுங்கள். A bit louder.

(மாண்புமிகு திரு. ஓ.பி. இராமன் அவர்கள் விடையை மீண்டும் உரக்கப் படித்தார்.)

திரு. என். கே. பழனிசாமி: வாசனை திரவியங்களுடன், ஐஸ்க்ரீம், மிட்டாய் போன்ற இவைகளுக்குத் தேவையான எசென்ஸ் அங்கே செய்யப்படுகிறதா? அப்படியானால் ஏராளமாக ரிசர்வ் பாரெஸ்டு இடம் இருக்கிறதே, அதிலே அதிகப்படியாக வேளாண்மை செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவர் அவர்களே, இப்பொழுது பல்வேறு வாசனைச் செடிகள் ஜிரேனியம், வெட்டிவேர், போன்றவைகளெல்லாம் பயிரிடப்படுகின்றன. அங்கங்கே எங்கே எவ்வளவு செடிகள் தேவைப்படுகிறதோ, அதற்குத் தகுந்தாற்போல் வளர்க்கப்பட்டு, அந்த அந்த இடத்திலேயே நடைபெற்று வருகிறது. இந்தியாவிலேயே கொடுக்கவேண்டிய தேவை அதிகமாக இருக்கிறது. ஆகவே, வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்ற சூழ்நிலை இப்பொழுது இல்லை.

திரு. கா. வேழவேந்தன்: சின்கோனா தோட்டத் துறையுடன் இணைக்கப்பட்டுள்ள இந்த வாசனைத் தைலங்கள் தயாரிக்கின்ற செடிகள் மிக சிறப்பான முறையில் நீலகிரி தட்ப வெட்ப நிலைக்கு வளர்கின்றன. இவைகளை விரிவுபடுத்தி அயல்நாட்டுச் செலாவணியை மிகுதிறம் ஈட்டுவதற்காக ஒரு சிறப்புத் திட்டம், அதிகமாக விரிவுபடுத்துவதற்குத் திட்டம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவர் அவர்களே, இப்பொழுது உள்நாட்டுக்கு அதிகமாக தேவை இருக்கிற காரணத்தினால், அந்தத் தேவையை பூர்த்தி செய்கின்ற அளவுக்கு இந்தத் திட்டத்தை விரிவுபடுத்தவேண்டும். உள்நாட்டுத் தேவையை பூர்த்தி செய்த பின்னால், வெளிநாட்டுக்கு அனுப்புவது பற்றி யோசிக்கலாம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: பல வாசனைத் திரவியங்கள் ஏற்படுவது புஷ்பங்களின் மூலம். இந்தத் திரவியங்கள் ஏற்படுவதற்கும் செடிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்று கனம் அமைச்சர்

அவர்கள் கூறினார்கள். இது எப்படி என்று இதைச் சற்று விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவர் அவர்களே, நான் சொன்னது செடிப் பண்ணைகளுக்கும் வாசனைப் பொருள்களுக்கும் நேரடித் தொடர்பு எதுவுமில்லை என்பதுதான். நர்சரி வைப்பது பற்றி கேள்வி. அதற்குத் தகுந்த பதில் தான் நான் சொன்னேன். செடிப்பண்ணை தனியாக வைக்கவேண்டுமென்பதில்லை. எந்த இடத்தில் பிளாண்டு தேவைப்படுகிறதோ அந்த இடத்திற்கு அருகாமையிலேயே தனியாக நடப்பட்டு, அங்கேயே பயன்படுத்தப் பட்டு வருகிறது. ஒரு பண்ணையை வைத்து அந்த இடத்திலிருந்து எடுத்து பல்வேறு இடங்களுக்கு அதை ரயில் மூலமாகவோ அல்லது வேறு விதமாகவோ எடுத்துச்செல்வதற்கு அவசியமில்லை. ஆகவே, நீலகிரிக்குப் பக்கத்தில் அதற்காக ஒரு பண்ணை வைக்கத் தேவை யில்லை. ஆனை மலைக்குப் பக்கத்தில் பண்ணை வைக்க அவசியமில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி: சிங்கோனாத் தோட்டத்திற்குப் பக்கத்தில் வாசனைத் தைலம் இறக்குகிறார்கள் என்பது வெகு கொஞ்சம் பேர்களுக்குத்தான் தெரியும் தமிழ் நாட்டில். அமைச்சருக்கே செடிகளிலிருந்து வருகிறதா என்பது சந்தேகம். வாசனைச் செடிகளிலிருந்து இது போன்று தைலங்கள் இறக்கப் படுகின்றன, இவற்றை மக்கள் உபயோகப்படுத்தினால் நன்றாக இருக்கும் என்ற செய்தியை தொகுத்து—அன்னிய நாடுகளிலிருந்து வருகிற வாசனைப் பொருள்கள் தான் நல்ல மணமாக இருக்கும் என்ற ஒரு தவறான கருத்து மக்களிடையே இருந்து வருகிறது. அதைப் போக்குவதற்கு நல்ல முறையில் விளம்பரப்படுத்தி, மேலும் இப்படிப் பட்ட வாசனைப்பொருள்கள் உள் நாட்டில் அதிகமாக விற்பனை ஆவதற்கு வழிவகைகள் செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: விளம்பரம் இல்லாமல் வாசனைப் பொருள்களைப்பற்றி இப்பொழுது மக்கள் நன்றாகத் தெரிந்துகொண்டிருக்கிறார்கள்.

(Thiru K. M. SUBRAMANIAM rose.)

Mr. SPEAKER: Mr. Subramaniam, you are also interested in perfumes?

1972 மார்ச் 27]

THIRU K. M. SUBRAMANIAM : Definitely; the older the man becomes, the greater is his interest in perfumes (Laughter) Sir, (Interruption by Thirumathi Anandanayaki) she is no authority for that

Sir, is this Government aware that almost all the foreign scents are manufactured out of chemicals and not out of flower, as we do here—that is only very rare and very special and very difficult to get in the market. May I know from the Hon. Minister whether chemical perfumes are imported for manufacture of perfumeries in this country?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : ரசாயன முறையில் தயாரிக்கப் படுகின்ற வாசனைப் பொருள்களுக்கும், செடிகளிலிருந்து தயாரிக்கப் படுகின்ற வாசனைப் பொருள்களுக்கும் பல வேறுபாடுகள் உள்ளன. அவரவர் இஷ்டத்தைப் பொறுத்து பயன்படுத்திக்கொள்ளலாம், வாங்கிக்கொள்ளலாம்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, in the Denkinikotta forests there is a great possibility for introducing oil extraction. Private people are extracting oil there from a scented grass. I have myself seen it. May I know from the Hon. Minister, whether he will order to start investigation to see if perfumes could be extracted there?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, அதைப் பற்றி முழு விவரம் என்னிடமில்லை.

THIRU M.A. LATHEEF : Sir, will the Hon. Minister be pleased to specify the places which have been selected for the growing of the shrubs like geranium. Also, will he specify the criteria upon which a particular place is selected for this purpose?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, இந்தச் செடிகள் குறைந்தது 3,000 அடி உயரத்திற்கு மேலே உள்ள இடங் களில்தான் வளரும். அதனால் நீலகிரி போன்ற இடங்களில் இந்தச் செடிகள் வளர்க்கப்படுகின்றன.

திரு. என். கே. பழனிசாமி : தலைவரவர்களே, இந்த வாசனைப் பொருட்கள் கிடைக்கக்கூடிய செடிகளுடன் மருந்துச் செடிகளும் வளர்க்கப்படுகின்றனவா? அப்படியாயின் என்ன என்ன மருந்துச் செடிகள் வளர்க்கப்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, ஜிரேனியம், யூக்காலிப்ட்டஸ், எலுமிச்சை போன்ற செடிகள் வளர்க்கப் படுகின்றன.

சிறு தொழில்களுக்கு மின் கட்டணச் சலுகை

* 732 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) சிறு தொழில்களுக்கு உபயோகப்படுத்தப்படும் மின்சா ரத்திற்குக் கட்டணம் செலுத்துவதில் சலுகை ஏதேனும் காட்டப் படுகிறதா?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) & (இ) தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மின்சாரக் கட்டண விதித்துறைகளின் கீழ் 5 குதிரைத் திறனுக்கு மேற்படாத மின் அழுத்த அளவு கொண்ட உண்மையான சிறு குடிசைத் தொழில்களுக்கு, யூனிட் ஒன்றுக்கு 12 காசு என்னும் குறைவழுத்த வேளாண்மை மின் கட்டணம் பொருந்தும். சிறப்புச் சூழ்நிலைகளில் தலைமைப் பொறியாளர் (மின்சாரம்) குதிரைத் திறன் பேரளவைத் தளர்த்தலாம்.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, 5 குதிரைத் திறனுள்ள சிறு தொழில்களுக்கு 12 பைசா சலுகை அளிக்கப்படுவதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். இதன் மூலம் ஆண்டுக்கு அரசாங் கத்திற்கு எவ்வளவு நஷ்டம் ஏற்படுகிறது என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, இப்போது முழு விபரம் இல்லை. சில சிறப்புச் சூழ்நிலைகளின் காரணமாக குதிரைத் திறன் அளவைத் தளர்த்துவதற்கும் தலைமைப்பொறியாள ருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

கோவை-திருச்சி அரசு பேருந்துகள்

*714 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) கோவை-திருச்சி அரசு பேருந்துகள் திருப்பூர் வழியாக செல்லவேண்டும் என்று அத்தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர்

1972 மார்ச் 27]

கேட்டதின் பேரில் 1970-ம் ஆண்டில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் ஏதேனும் உத்திரவு பிறப்பித் துள்ளாரா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) & (இ) உறுப்பி னரின் வேண்டுகோள் அரசால் பரிசீலனை செய்யப்பட்டது. கோயம் புத்தூரிலிருந்து திருச்சிராப்பள்ளி செல்லும் வழித்தடத்தில் பேருந்துகளைத் திருப்பூர் வழியாக விடுவது அவசியமில்லை என்று முடிவு செய்யப்பட்டது. ஏனெனில், இவ்வாறு திருப்பி விடுவதால் நேரடியாகச் செல்லும் பயணிகளின் பயணக்கட்டணம் உயர்ந்து விடும். மேலும் திருச்சிராப்பள்ளியிலிருந்து உதகமண்டலம் செல்லும் அரசுப் போக்குவரத்து வழித்தடத்தின் மூலம் திருச்சிராப் பள்ளியுடன் திருப்பூர் இணைக்கப்பட்டுள்ளது; அன்றியும், கோயம்புத்தூர்—சென்னை, தூத்துக்குடி—கோயம்புத்தூர் வழித் தடங்கள் மூலம் கோயம்புத்தூருடன் திருப்பூர் இணைக்கப் பட்டுள்ளது. இக்காரணங்களைக் கருத்திற்கொண்டு மேற்சொன்ன வாறு முடிவு எடுக்கப்பட்டது. ஆயினும் திருப்பூரிலிருந்து திருச்சிக்கு தனி விரைவு பேருந்து விடப்படுகிறது.

திரு. சு. துரைசாமி: தலைவரவர்களே, இப்போது இருக்கின்ற முறையில் கோவையிலிருந்து திருப்பூருக்கு வரவேண்டுமானால் இரண்டு மைல் தூரம் அதிகமாக இருக்கிறது. ஆகவே இதை மீண்டும் அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, திருப் பூரிலிருந்து திருச்சிக்கு விரைவு பேருந்து விடப்படுகிறது. கோவை யிலிருந்து திருப்பூர் வழியாகத் திருச்சிக்கு விரைவுப் பேருந்து விடுவோமானால் திருப்பூரில் டிக்கட் கிடைப்பது கடினம்.

அரசு பேருந்துகள்

*733 வினா—திரு. எம். ஏ. லத்தீப்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

வாணியம்பாடிக்கும் போளூருக்குமிடையே ஆலங்காயம் வழி யாக அரசு பேருந்து வண்டிகளை விடுவதற்கான செயற்குறிப்பு ஏதேனுமுள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இல்லை.

*734 வினா—திரு. கு. அ. பொம்மன் : மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், உதகை-கூடலூர் மார்க்கமாக சீஃபோர்த் எல்லமலைக்கு ஓடிக்கொண்டிருந்த அரசுத்துறை பேருந்து நிறுத்தப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) கூடலூரிலிருந்து "சீஃபோர்த்" (Sea Forth) வழியாக எல்லமலைக்குச் செல்லும் சாலை மிக மோசமாகவுள்ளது. மேலும், அங்கு போக்குவரத்து வசதியைப் பயன்படுத்தும் பயணிகள் எண்ணிக்கையும் மிகமிகக் குறைவாகும்.

Traffic Survey in Madras.

* 735. *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Transport be pleased to state whether any traffic survey in Madras City had been undertaken on or about the 9th August 1971 by the Highways and Police Departments jointly?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஆம்.

THIRU N. DENNIS : Sir, may I know the places having larger transport problems in the Madras City?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அண்ணா சாலையிலும், பூந்தமல்லி நெடுஞ்சாலையிலும் இருக்கக்கூடிய போக்கு வரத்து மிகவும் நெரிசலுடையதாக இருக்கின்றன. உதாரணமாக, போக்குவரத்து அதிகமாக உள்ள பூந்தமல்லி நெடுஞ்சாலையில் கிட்டத்தட்ட காலை 6,380 வண்டிகளும், மாலையில் 7,434 வண்டி களும் போகின்றன. அதைப்போன்று மவுண்டு ரோடில் காலையில் 6,255 வண்டிகளும், மாலையில் 6,750 வண்டிகளும் போகின்றன. ஆகவே, மிக விரைவாகப் போகக்கூடிய வண்டிகள் கூட 20, 22 கிலோ மீட்டர் வேகத்தில்தான் செல்லமுடிகின்றன. எனவே, போக்கு வரத்து நெரிசலைக் குறைப்பதற்காக சாலைகளில் பிளை ஓவர் அமைக் கவும், சாலைகளை அகலப்படுத்துவதற்கும் ஒரு சர்வே நடத்தப் பட்டது.

1972 மார்ச் 27]

Licences to Associations of Cycle Rickshaws.

* 736. Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether the Associations of Cycle Rickshaws have been issued licences to operate their vehicles in Madras City in 1971; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) & (இ) பேரவை முன்விவர அறிக்கையொன்று * வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். டென்னிஸ்: தலைவரவர்களே, இப்போது இருக்கின்ற ஏற்பாட்டின்படி, சைக்கிள் ரிக்‌ஷா தொழிலாளர்களைப் பயன்படுத்தி, தனிப்பட்டவர்கள் ஆதாயம் அடைந்து வருகிறார்கள். ஆகவே, ரிக்‌ஷாத் தொழிலாளர்களே முழுப் பயனையும் அடையும் வகையில் அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, சைக்கிள் ரிக்‌ஷாத் தொழிலாளர்களுக்குத்தான் முன் உரிமை தரப் படுகிறது. தொழிலாளர்களை பயன்படுத்தி, முதலாளிகள் பயனடை கிறார்கள் என்றால் தொழிலாளர்கள்தான் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், ஆண்டுதோறும் சைக்கிள் ரிக்‌ஷா குறிப்பிட்ட விகிதாசாரத்தில் அளிக்கப்படவேண்டுமென்ற விதி இருக்கிறதா? அப்படி விதி இருக்கிறது என்பது ரிக்‌ஷாத் தொழிலாளர்களுக்குத் தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச். இராமச்சந்திரன்: தலைவரவர்களே, சென்னை போன்ற பெரிய நகரங்களில் சைக்கிள் ரிக்‌ஷா போன்ற வாகனங்கள் அதிகமாக இருக்கக்கூடாது என்று அரசின் கொள்கை இருந்தாலும், சிற்சில நெரிசலானப் பகுதிகளில் சைக்கிள் ரிக்‌ஷா மூலம் விரைவாகச் செல்ல முடியும் என்பதை உத்தேசித்து, இன்றைக்கு 250 சைக்கிள் ரிக்‌ஷாக்கள் வழங்குவதென்றும், அதற்கு மேலும் கோரிக்கைகள் வந்தால் அதை 500 ஆக உயர்த்தலாம் என்றும் முதலமைச்சர் அவர்கள் கருத்துத் தெரிவித்ததன்பேரில், 250 சைக்கிள் ரிக்‌ஷாக் களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

* 248–250-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[1972 மார்ச் 27

(திரு. கே. டி. கே. தங்கமணி எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளைய டிரான்ஸ்போர்ட் மானியத்தின் மீது நீங்கள் இதுபற்றி விரிவாகப் பேசலாம்.

ஜம்புலிபுத்தூர், கதலிநரசிங்கபெருமாள் கோவில்

*737 வினா—திரு. நா. வெ. குருசாமி: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், ஜம்புலிபுத்தூர், கதலிநரசிங்கபெருமாள் கோவில் பழைய கட்டடத்தை புதிப்பிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: ஆம்.

திரு. நா. வே. குருசாமி: தலைவரவர்களே, இந்த கோயில் ஒரு பழைய கோயில். அதைப் புதுப்பிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். எப்போது வேலை ஆரம்பிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, இந்தக் கோயில் திருப்பணிகளுக்காக 22—7—1970-ல் ரூ. 40,000 ஒதுக்கப் பட்டது. அறநிலையத் துறை 10,000 ரூபாய் உதவித்தொகை அளிக்க முன்வந்தது. ஆனால் திருப்பணிக் குழு சரியாக இயங்காததால், மீண்டும் புதிதாக ஒரு குழு அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. சொ. காவேரி மணியம்: தலைவரவர்களே, இந்த ஜம்புலி புத்தூரில் இருக்கக் கூடிய கோயில் நம்முடைய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கிறதா? அதன் ஆண்டு வருமானம் என்ன? அதற்கு தனி டிரட்டிகள் போடப்பட்டிருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, இந்தக் கோயில் அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டுக்கு உள்பட்டதுதான். மற்ற விபரங்கள் இப்போது என்னிடம் இல்லை.

1972 மார்ச் 27]

Road side temple at Chinna Kancheepuram.

* 738 Q.—Thiru S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether it is a fact that a road side temple at Chinna Kancheepuram has been demolished about the 16th September 1971 and

(b) if so, the details thereof?

2 மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) நடைபாதை விநாயகர் கோயில் ஒன்று சின்ன காஞ்சிபுரத்தில் 13—9—1971 அன்று இடிக்கப்பட்டது.

(இ) சின்ன காஞ்சிபுரம் நடைபாதையில் இருந்த சிறிய விநாயகர் கோயில் ஒன்று, காஞ்சிபுரம் நகராட்சி அலுவலர்களால் போலீஸ் பாதுகாப்புடன் இடிக்கப்பட்டது. மேற்படி கோயில் நகராட்சிக்குட்பட்ட அரசு புறம்போக்கு நிலத்தில் கட்டப்பட்ட தாலும், போக்குவரத்திற்கும் இடைஞ்சலாக இருந்ததால் அது இடிக்கப்பட்டது.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், இந்த கோயில் முதல் நாள் கும்பாபிஷேகம் நடந்திருக்கிறது; மறுநாள் இடிக்கப்பட்டிருக்கிறது. அதைக் கட்டுவதற்கு முன்பு ஏன் நகரசபை நடவடிக்கை எடுக்க வில்லை? கும்பாபிஷேகம் நடந்தவுடன் இடிக்கவேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, சட்ட விரோதமாக அந்தக் கோயில் கட்டப்பட்டிருக்கிறது. அதனுல் நகராட்சி மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறுர்கள்.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, நடைபாதை கோயில் காஞ்சியில் மட்டுமல்ல; தமிழகம் எங்கும் இருக்கிறது. அவைகளைக் கட்டுவதற்கு முதலிலே அனுமதிப் பெறப்படுவதும் இல்லை. இரவில் அரை மணி நேரத்திற்குள் கோயிலைக் கட்டி விடுகிறுர்கள். அப்படிப் பட்டக் கோயில்கள் எங்கே இருந்தாலும் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, எந்த எந்த இடத்திலே இப்படிப்பட்ட ஆக்கிரமிப்புகள் நடைபெற்றிருந்தாலும், அவைகளை அகற்றுவதற்குத் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்

படும். ஆனால் பொதுவாகவே, பொது இடங்களில், நடைபாதைகளில் கோயில்கள் கட்டப்பட்டு, பொதுமக்களுக்கு இடையூறு விளைவிப்பதால், புதுக் கோயில்கள் கட்டுவதற்கு முன் அறநிலையத் துறையின் அனுமதியைப் பெறவேண்டுமென்று அரசாங்கம் ஒரு சட்டத்தைக் கொண்டுவர எண்ணியுள்ளது.

திரு. அ. தேவேந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, திடீரென்று பிள்ளையார்கள் தோன்றுகின்றனவே, அவற்றை யாராவது கொண்டுவந்து வைக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : கொண்டுவந்து வைப்பதன் காரணமாகத்தான் இத்தகைய சம்பவங்கள் நடந்துகொண்டிருக்கின்றன.

திரு. கோவை செழியன் : சாலை ஓரங்களில் மட்டுமல்ல—நடு வீதிகளிலேயே கூட இதுபோன்று பல கோயில்கள் இருக்கின்றன. எல்லா மதத்தவர்களுமே கட்டிவைத்துவிடுகிறார்கள். ஆகவே, மத வேற்றுமை இல்லாமல் இத்தகைய இடைஞ்சல்களை அகற்ற அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மதவாதிகள் அத்தனைபேரும் சேர்ந்து எடுக்க வேண்டிய முடிவாகும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : May I know from the Hon. Minister for Religious Endowments whether demolition of temples is in accordance with secular state of administration or contrary to it ?

(No reply.)

திரு. வை. பாலசுந்தரம் : சாலை ஓரங்களில் கோயில் கட்டுகிறவர்கள் உண்மையான பக்தர்கள் இல்லை. வருமானத்தை உத்தேசித்தே கட்டுகிறார்கள் என்பது உண்மையா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : சாலை ஓரத்தில் கட்டப்படுகிற கோயில்கள் மூலம் வருமானம் வருகிற காரணத்தினால்தான் இத்தகைய இடையூறுகளைச் செய்கிறார்கள்.

THIRU K. M. SUBRAMANIAM : Is the Government aware that so far as the City of Madras is concerned, no new temple can he constructed on road side and such of those temples which had

already been constructed cannot be destroyed also? Such decision has been taken in order to prevent further troubles to the public. Consequenly, may I also know how can anybody find out, is there not a machinery with the Hindu Religious Endowments Department to find out whether it is constable thidir Pillayar, human-being thidir Pillayar or machine thidir Pillayar ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, பிள்ளையார்கள் எப்படித் தோன்றுகிறார்கள் என்பது நமக்குத் தெரியாது. ஏற்கனவே நடைபாதைகளில் கட்டப்பட்டு போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருந்தால் அவற்றை அகற்ற துறை அதிகாரிகள்தான் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். நான் புதிதாக தோன்றுகிற கோயில்களைப் பற்றித்தான் பதில் சொல்லியிருக்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : நடைபாதைக் கோயில்களை அகற்ற வேண்டும் என்று விரும்புகிற சர்க்கார், போக்குவரத்துக்கு இடைஞ்சலாக அங்கங்கே வைக்கப்பட்டிருக்கிற சிலைகளையும் அகற்ற முன் வருவார்களா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : போக்குவரத்துக்கு இடைஞ்சலாக எந்தச் சிலையும் நிறுவப்படவில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : எந்தச் சிலை என்று குறிப்பிட்டுச் சொன்னால் அதை அகற்றுவதுபற்றியும் ஆலோசிக்கலாம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : குறிப்பிட்டு எந்தச் சிலை என்று சொல்ல முடியும். பல சிலைகளை கனம் அமைச்சர் அவர்களும் பார்த்திருப்பார்கள். எங்கெல்லாம் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக சிலைகள் வைக்கப்பட்டிக்கின்றனவோ அவற்றை எல்லாம் அகற்ற முன்வருவார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : எந்தச் சிலை என்று சொன்னால்தான் அதைப்பற்றிக் கவனிக்க முடியும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : பிள்ளையாரில் இருந்து சிலைக்கு வந்துவிட்டது. மதுரையில் 7-வது தேசியசாலையில் ஒரு பிள்ளையார் கோயில் அமைக்கப்பட்டு, அதை அமைச்சரே திறந்து வைத்த காரணத்தினால் அந்தச் சாலை போட முடியாது இருந்தது. இப்படி தொடர்ந்து போக்குவரத்துக்கு இடைஞ்சலாகத் திடீரென்று கட்டப் படுகிற கோயில்களைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இப்படி இடையூறை அகற்ற வேண்டும் என்கிறவர்களே அகற்றிவிட்டால் வெளியில் அதை எங்களுக்கு விரோதமான அரசியலுக்குப் பயன்படுத்துகிறார்கள். இப்படிப்பட்ட தடைகள் எல்லாம் அங்கங்கே உள்ள துறையின் மூலமாகத்தான் அகற்ற பரிசீலனை செய்யவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) அறிக்கை அளித்தல்.

சமுதாய வளர்ச்சித் திட்டங்கள்பற்றிய மதிப்பீட்டு குழுவின் பரிந்துரைகள் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் மீது மதிப்பீட்டு குழுவின் அறிக்கை.

THIRU K. VEZHAVENDAN : Hon. Speaker, Sir, I rise to present the report of the Committee on Estimates on the action taken on the recommendations of the Committee contained in the Report on Community Development Projects.

(3) 1971–72-ஆம் ஆண்டுக்கான இறுதித் துணை நிதி அறிக்கை அளித்தல்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவைத் தலைவர் அவர்களே, 1971–72-ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இம் மன்றத்தின் கண் வைக்க முன் வந்துள்ளேன். மானியக் கோரிக்கைகளை விளக்கும் விரிவான அறிக்கை இம் மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளது. மானியக் கோரிக்கைகளின் மொத்தத் தொகை ரூ. 116.34 கோடியாகும். இதில் ரூ. 29.88 கோடி மட்டுமே அனுமதித்த இனங்களின் கீழ்வரும்; எஞ்சிய ரூ. 86.46 கோடி சாட்டிய இனங்களைச் சார்ந்தனவாகும்.

தற்போது கோரப்படும் நிதி ஒதுக்கத்தில் கணிசமான பகுதி, மத்திய அரசுக்கும் ரிசர்வ் வங்கிக்கும் கடனைத் திருப்பிச் செலுத்து வதற்குரியதாகும். இதற்கென 80.67 கோடி ரூபாய் அளவிற்கு இத் துணை மதிப்பீடுகளில் வகை செய்யப்பட்டுள்ளது. இப்பெருந்

1972 மார்ச் 27] [டாக்டர் மு. கருணாநிதி]

தொகை ஏன் தேவைப்படுகிறதென்று விளக்குவது எனது கடமை யாகும். 1971-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30-ஆம் நாளன்று நமக்கு இந்திய ரிசர்வ் வங்கியிடம் ரூ. 43.70 கோடியளவில் இருந்த அதிகப் பற்றை ஈடு செய்ய மத்திய அரசு நமக்குத் தந்த வழிவகை முன் பணத்தை நடப்பாண்டிலேயே திருப்பிச் செலுத்தியுள்ளோம். இதற்கு இம்மானியக் கோரிக்கையில் வகை செய்யப்பட்டுள்ளது.

மத்திய அரசுக்கு நாம் 1970–71-ல் செலுத்த வேண்டியிருந்த கடன் தவணைகளில் ஒரு பகுதியைச் சில ஆண்டுகளுக்கு ஒத்திப்போட வேண்டுமென்று நாம் கோரியிருந்தோம். இக்கோரிக்கையை மத்திய அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. ஆகவே ரூ. 19.18 கோடி அளவிற்கு நடப்பு ஆண்டில் வகை செய்ததற்கு அதிகப்படியாக, மத்திய அரசுக்கு நாம் கொடுக்கவேண்டியதையும் இம் மானியக் கோரிக்கைகளில் சேர்த்துள்ளோம்.

கடன்களைத் தீர்க்கும் வகையில் மேலும் ரூ. 17.79 கோடி அளவிற்கு, ரிசர்வ் வங்கிக்குக் கொடுக்க வேண்டியதற்காக நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இதற்கான விரிவான விளக்கம், இக்கோரிக்கைகளுடன் வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் கொடுக்கப் பட்டுள்ளது. இந் நிதி ஒதுக்கம், இவ்வாண்டின் திருத்த மதிப்பீடு களை ஒட்டியே அமைந்துள்ளது.

நடப்பு ஆண்டில் திட்டச் செலவின் அளவு உயர்ந்ததையும், ஊதியக் குழுவின் பரிந்துரைகள் முழுமையாக நிறைவேறியதையும் இத்துணை மானியக் கோரிக்கையில் காண்கிறோம். கல்விக்காக ரூ. 448 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளதில், ஆசிரியர்களுக்கு ஊதியம் தாமதமின்றித் தருவதற்காக ஊராட்சி ஒன்றியங்களுக்கு அரசு கொடுக்க முன்வந்துள்ள மானியம் அடங்கும். ஏப்ரல் திங்கள் முதல் நாளன்று ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள் தங்கள் ஊதியங் களைப் பெறுவதற்கென, மார்ச் திங்களிலேயே தரப்படும் முன் பணமான ரூ. 273 இலட்சம் இதில் குறிப்பிடத்தக்கது.

"மருத்துவம்" என்ற தலைப்பின்கீழ், சுமார் 91 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் வேண்டப்படுகிறது. இந்த ஆண்டு அரசினர் மருத்துவமனைகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள பல பதவிகளுக்காகவும் கூடுதல் படுக்கைகளுக்காகவும், உணவு, மருந்துகள் ஏனைய செலவு களுக்காகவும் இத்தொகை தேவைப்படுகிறது.

[டாக்டர் மு. கருணாநிதி] [1972 மார்ச் 27

"வேளாண்மை" என்ற தலைப்பிற்காக ரூ. 107 இலட்சம் அதிகத் தொகை கோரப்படுகிறது. தீவிர பருத்தி சாகுபடித் திட்டத்திற்கு ரூ. 46 இலட்சம், புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு ஏற்கெனவே நடைபெறும் செலவுகளுக்கு மேலாக மானியம் ரூ. 30 இலட்சம், மிகுபயன் விளைச்சல் திட்டத்தைப் பரப்புவதற்கு விதைகளைப் பெருக்குவதற்காக ரூ. 26 இலட்சம் ஆகியவை இத்தலைப்பின்கீழ் வரும் முக்கியமான கூடுதல் செலவுகளாகும்.

"பாசனம்" என்ற தலைப்பின்கீழ் ரூ. 211 இலட்சம் அளவிற்குக் கூடுதல் நிதி ஒதுக்கம் கோரப்பட்டுள்ளது. காவிரி கழிமுகப் பகுதியில் செய்யப்பட்டுவரும் சீரமைப்புத் திட்டத்திற்காக ரூ. 54 இலட்சம், ஊராட்சி ஒன்றியங்களுக்கு சிறுபாசன ஆதாரங்களைப் பேணி வருவதற்கு மானியங்கள் ரூ. 16 இலட்சம், மற்ற பாசன அமைப்புகளில் பழுதுபார்க்கும் வேலைகளுக்காக ரூ. 115 இலட்சம் ஆகியவை பாசனத்துறையில் குறிப்பிடத்தக்க கூடுதல் செலவினங்களாகும். இந்த மானியத்தின்கீழ் இவ்வாண்டிற்கான மொத்தச் செலவு, 1971–72-ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளை ஒத்துள்ளது.

"பொதுப் பணிகள்—பணியாளர், கருவிகள், இயந்திரச் சாதனங்கள்" என்ற தலைப்பின்கீழ் சுமார் 130 இலட்சம் ரூபாய் கூடுதல் நிதி ஒதுக்கம் கோரப்படுகிறது. நிலநீர் ஆய்வு அலுவலகங்களிலும் மற்றைய பொதுப் பணித்துறை அலுவலகங்களிலும் ஏற்படுத்தப்பட்டுள்ள புதிய பதவிகளுக்காகவும், புதிதாக வாங்கப்பட்ட பல கருவிகளுக்காகவுமே இந்தச் செலவு செய்யப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கு மின்வசதி அளிப்பதால் நேர்ந்த நட்டத்தின் காரணமாக, மின்வாரியத்தின் கணக்குகளில் பெருமளவு துண்டு விழுந்து வருகிறது. உலக வங்கியிடமிருந்து கடன் எழுப்பிய போது, நட்டமில்லாமல் தன் கணக்குகளை வைத்துக்கொள்வது மட்டுமல்லாமல், மூலதனச் செலவின் மீது 11.5 சத வீதமேனும் வருவாய் கிட்டுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என நமது மின்வாரியம் உறுதியளித்துள்ளது. 1970–71-ல் இந்த வருவாய் கிட்ட, வாரியத்துக்கு ரூ. 9.5 கோடி மானியமாக அரசு கொடுக்க வேண்டியிருக்கிறது. இதனால், மாநிலத்தின் வழிவகை நிதிநிலையில் (Ways and Means Position) மாற்றமேதும் ஏற்படாது.

1972 மார்ச் 27] [டாக்டர் மு. கருணாநிதி]

ஏனென்றால், வாரியம் மாநில அரசுக்குத் தரவேண்டிய வட்டி நிலுவைகள் இம் மானியத் தொகைமூலம் ஈடு செய்யப்படும். இந்த அவைமுன் வைக்கப்பட்டுள்ள கோரிக்கையில் இதற்காக வகை செய்யப்பட்டுள்ளது. மேலும் இம் மானியத்தின்கீழ் குறிப்பிட வேண்டிய மற்றொரு செலவினம், பங்களா தேச அகதிகள் நலத்திற்காக நம் மாநில அரசு, மத்திய அரசுக்குத் தரவேண்டிய தொகையான ரூ. 44.15 இலட்சம் ஆகும். மத்திய அரசுக்கு பங்களா தேச அகதிகளால் ஏற்பட்ட கூடுதல் செலவை ஓரளவு ஈடு செய்யவும், மாநிலத்தின் வளர்ச்சிப் பணிகளுக்காகும் செலவை ஏற்கவும், 1972-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 1-ஆம் நாளிலிருந்து சில புதிய வரிகளை அரசு விதித்து இருப்பதை இந்த மன்றம் அறியும். இதில் ஒரு பகுதியான 44.15 இலட்சம் ரூபாயை நாம் மத்திய அரசுக்குக் கொடுத்து உதவியிருக்கிறோம். இவ்விரண்டு தொகைகளைச் சேர்த்து, இந்த மானியத்தில் ஏற்பட்டுள்ள மிச்சத் தொகையையும் கணக்கில் எடுத்துக்கொண்டு கூடுதல் நிதி ஒதுக்கமாக ரூ. 9.33 கோடி தற்போது கோரப்படுகிறது.

கடாறு நதி திட்டத்திற்காக கூடுதலாக ரூ. 43 இலட்சம், காவிரி கழிமுகப் பகுதியில் வடிகால் வேலைகளுக்காக ரூ. 23 இலட்சம், சிறு பாசனத் திட்டங்களுக்காக ரூ. 82 இலட்சம் ஆகிய செலவினங்களுக்காக "பாசனத்திற்காகும் மூலதனச் செலவு" என்ற தலைப்பின் கீழ் கூடுதலாக ரூ. 148 இலட்சம் கோரப்படுகிறது.

"போக்குவரத்து மீதான மூலதனச் செலவு" என்ற தலைப்பின் கீழ், ரூ. 32 இலட்சம் கூடுதல் நிதி ஒதுக்கம் வேண்டப்படுகிறது. 50 பேருந்துகளுக்கு மேல் வைத்துள்ள போக்குவரத்து நிறுவனங்களை நாட்டுடைமை ஆக்கியதால் அந்த நிறுவனங்களுக்கு அரசு இழப்பீடு அளிக்கவேண்டியுள்ளது. இந்த இழப்பீட்டுத் தொகை எவ்வளவு என்பது இன்னும் முடிவாகவில்லை. ஆயினும், இடைக்கால இழப்பீடாக "சதர்ன் ரோட்வேஸ்", "ஆனைமலை பஸ் டிரான்ஸ்போர்ட்", "எஸ்.ஆர்.வி.எஸ்.", "ராமன் அண்டு ராமன்" என்ற நான்கு நிறுவனங்களுக்கு ரூ. 57.25 இலட்சம் ரூபாய் அரசு அளித்துள்ளது. இம்மானியத்தில் ஏற்கனவே உள்ள மிச்சத்தைக் கணக்கில் எடுத்துக்கொண்டு கூடுதல் நிதி ஒதுக்கமாக ரூ. 32 இலட்சமே கோரப்படுகிறது.

"அரசு வாணிபத் திட்டங்களின் மீதான மூலதனச் செலவு" என்ற தலைப்பின்கீழ் கூடுதலாக ரூ. 218 இலட்சம் நிதி ஒதுக்கம் கோரப்படுகிறது. சர்க்கரை, உணவுதானியங்கள் போன்ற

இன்றியமையாத பொருட்கள் மக்களுக்கு நியாயமான விலையில் கிடைப்பதற்கு அரசு அப்பொருள்களை வாங்குவதற்காகச் செய்யும் கூடுதல் செலவு இக்கோரிக்கையில் அடங்கியுள்ளது.

இந்த துணை மதிப்பீடுகளில் கண்டுள்ள ஏனைய செலவினங்கள் பற்றி, விரிவான அறிக்கையில் கொடுத்த குறிப்புகளுக்கு மேல் சிறப்பான விளக்கம் எதுவும் தேவையில்லை என்று கூறி, இத் துணை மதிப்பீடுகளை இம் மாமன்றம் ஏற்று இசைவு அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். வணக்கம்.

(4) அரசினர் தீர்மானம்

பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"தமிழ் நாடு சட்டப் பேரவை நடைமுறை விதி 21 (3)-ன் கீழ், இன்றைய நிகழ்ச்சி நிரலில் 4-வது வரிசை எண் உள்ள மானிய கோரிக்கைகளில் மானிய கோரிக்கை எண். 18-ல் "கால்நடை வளர்ப்பு" என்ற தலைப்பின்கீழ் உள்ள மானிய கோரிக்கையை முதலாவதாக எடுத்துக் கொள்ள வேண்டும்" என்ற தீர்மானத்தை நான் முன் மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

(5) 1972–73-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) நிதிக் கோரிக்கை எண் 18—கால்நடை வளர்ப்பு

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல்

"நிதிக் கோரிக்கை எண் 18—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,40,59,700-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்"

என்ற கோரிக்கையை நான் முன்மொழிகிறேன்.

THIRU B. VENKATASWAMY: Sir, I move the following cut motion to discuss about the need to increase the number of Poultry Farms in Tamil Nadu:—

'That the allotment of Rs. 4,40,59,700 under Demand No. 18-Animal Husbandry be reduced by Rs. 100.

1972 மார்ச் 27]

THIRU K.S. KOTHANDARAMIAH : Sir, I move the following cut motion to discuss about the need to start one more Jersey (cows) farm in Hosur taluk—

'That the allotment of Rs. 4,40,59,700 under Demand No. 18-Animal Husbandry be reduced by Rs. 100/-

THIRU J. JAMES : Sir, I move the following cut motion, to discuss the need to provide hyline chicks to public through Government poultry farms—

'That the allotment of Rs. 4,40,59,700 under Demand No. 18–Animal Husbandry be reduced by Rs. 100/-

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, கால் நடை மருத்துவமனைகளில் போதுமான மருந்து சப்ளை செய்யாதது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 18—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,40,59,700-ல் ரூ. 100-ஐ குறைக்க வேண்டும் என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்."

MR. SPEAKER : The cut motion of Thiru Sowdi S. Sundara Bharathi is not moved, as he is not in his seat.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையை ஒட்டி நான் இந்த அவைக்கு வழங்கியுள்ள இந்த அறிக்கையையும், * அதன் மேல் அங்கத்தினர்களின் கருத்துக் களையும் இந்த அவையின் நடைமுறைப் பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று 7 மானிய கோரிக்கை களுக்கு மேல் இருக்கின்றன. நான்கு அமைச்சர்கள் பங்கு கொள்ள வேண்டியிருக்கிறது. இப்போதே மணி $10\frac{1}{2}$ ஆகிறது. ஒவ்வொரு கோரிக்கைக்கும் $1\frac{1}{2}$ மணி நேரம் என்கிற அளவிலே, இந்த கால்நடை வளர்ப்புக்கு $1\frac{1}{2}$ மணி நேரம், அதைத் தொடர்ந்து காட்டிலாகாவுக்கு $1\frac{1}{2}$ மணி நேரம் என்று வைத்து காலை நிகழ்ச்சியை முடித்து, அதன்

* 262-304-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப் பட்டுள்ளது.

பிறகு மாலை 4 மணி தொடங்கி மற்ற மானிய கோரிக்கைகளை எடுத்துக்கொள்ளலாம் என்று கூறி, இந்த $1\frac{1}{2}$ மணி நேரத்திற்குள்ளாக முடிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர்களும், மாண்புமிகு உறுப்பினர்களும் ஒத்துழைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஓ. என். சுந்தரம்: சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கால்நடை வளர்ப்பு மானியக் கோரிக்கையின்மீதான என்னுடைய ஒரு சில கருத்துக்களை இந்த அவையில் எடுத்துச் சொல்ல இருக்கிறேன்.

பொதுவாக, கிராமப் புறங்களில் நல்ல பொருளாதார வளர்ச்சி ஏற்படவேண்டுமென்று சொன்னால் கால்நடைகள் நீண்ட ஆயுளும் ஆரோக்கியமும் கொண்டு இருக்கவேண்டும்; அவைகளுக்கு நல்ல பாதுகாப்பும் இருக்க வேண்டுமென்பதை நான் வலியுறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன். குறிப்பாக, கால்நடைகளைப் பொறுத்த வரையில் அதன் வளர்ச்சியில் நல்ல அபிவிருத்தி ஏற்பட்டிருந்தும் கூட, அவைகளுக்கு அடிக்கடி தொற்று நோய்கள் வருகின்றன. கால்நடைகளுக்கு, குறிப்பாக கலப்பட ஜாதி கால்நடைகளுக்கு தொற்று நோய் அதிகமாக வருகிறது. "கோமாரி" என்ற ஒரு வகை தொற்று நோய் இந்த கால்நடைகளுக்கிடையே அதிகமாக பரவி வருகிறது. இதனால் கிராமங்களிலுள்ள பெரும்பாலான விவசாயிகள் அதிகமாக பாதிக்கப்படுகிறார்கள். அப்படிப்பட்ட பயங்கரமான நிலையிலிருந்து அவர்களைக் காப்பாற்ற "கால்நடை பாதுகாப்பு இன்சூரன்ஸ் திட்டம்" என்ற முறையில் ஒரு திட்டத்தை அரசாங்கம் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கால்நடைகளை நல்ல முறையில் பாதுகாக்க ஒவ்வொரு கிராமத்திலும் கால்நடை மருத்துவ மனை ஏற்படுத்த வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன். கால்நடைகளுக்கு ஏற்படும் இந்தத் தொற்று நோய்களை விரிவாக ஆராய்ந்து தடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொன்னால் இந்த நோய்களை உடனுக்குடன் தடுப்பதற்காக அங்காங்கே ஒவ்வொரு ப்ளாக்கிலும் ஒரு "முதல் உதவி சிகிச்சை நிலையம்" ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. செ. கந்தப்பன் தலைமை]

அதோடு மட்டுமல்ல, கால்நடைகளுக்கு ஏற்படக்கூடிய தொத்து நோய்களைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொன்னால்,

1972 மார்ச் 27] [திரு. ஓ. என். சுந்தரம்]

ஆங்காங்கு கிளினிகல் லேபரட்டரீஸ்களை ஏற்படுத்தி, அந்த நோய் களைத் தடுக்க வேண்டுமென்பதில் அதிகமான அக்கறை காட்ட வேண்டும். கால்நடைகளைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு பிளாக்கிலும் "அனிமல் ஹஸ்பண்டரி" பிரிவு ஏற்படுத்தப்பட்டிருக் கிறது. எல்லா வட்டங்களிலும் கால்நடைகளுக்கான ஹெல்த் சென்டர்களை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கறவை மாடுகளுக்கு வாய் கோமாரி என்ற நோய் எளிதில் பற்றிக்கொள்கிறது. இந்தியாவில் இந்த நோய் கண்டதனுல் ஏறத்தாழ 30 கோடி ரூபாய்க்கும் அதிகமாக நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இதற்காக இந்திய சர்க்கார் எல்லா மாநில அரசுகளுக்கும் உதவி செய்து இந்த நோயைக் கட்டுப்படுத்து வதிலும், அறவே நீக்குவதிலும் சிறப்பான உதவிகள் செய்து வருகின்றனர். மத்திய அரசின் உதவிபெற்று ஆந்திர மாநிலத்தில் இந்த நோயை கட்டுப்படுத்தியிருக்கிறுர்கள். நமது அரசும் மத்திய அரசிடம் இதற்கான உதவியைப் பெற்று, இந்த நோயை நிரந்தர மாகத் தீர்க்க வேண்டிய வழிவகைகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கால்நடைகள் ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு வரும்போது எல்லையில் செக்போஸ்ட்டுகளை ஏற்படுத்தி, கால்நடைகளைப் பரிசோதனை செய்து, நோய் இருந்தால் தகுந்த சிகிச்சை செய்த பின்னரே மாநிலத்தின் உள்பகுதிக்கு வர அனுமதிக்க வேண்டும். அப்படிச் செய்தால் வெளிமாநிலத்திலிருந்து கால்நடை வியாதிகள் இந்த மாநிலத்திலுள்ள கால்நடைகளுக்குப் பரவாமல் தடுக்க முடியும். அரசாங்கம் இதற்கும் தக்க ஏற்பாடு களைச் செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, கால்நடைகளையும், கறவை மாடுகளையும் கவனிப் பதற்காக, "மொபைல் ஸ்குாவட்" ஏற்படுத்தி, மொபைல் வேன் களின் மூலம், எந்தெந்தப் பகுதிகளில் கால்நடைகளுக்கு நோய் ஏற்படுகிறதோ, அந்தப் பகுதிக்கு விரைந்து சென்று சிகிச்சை செய் தால் நோய் குணப்படுத்த முடியும். அதோடு மேலும், அடுத்த பகுதிகளுக்கும் நோய் பரவாமல் தடுக்க முடியும். இப்படிச் செய்வத ஞல் விவசாயிகளுக்கும், கால்நடைகளுக்கும் தக்க பாதுகாப்பாக இருக்கும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கால்நடைப் பணிகளில் ஈடுபட்டிருக்கிற அடி மட்டத்தில் இருக்கிற ஊழியர்களுக்குப் போதுமான ஊதியம் வழங்கப்பட வேண்டும். ஊராட்சி ஒன்றியங்களிலே பணியாற்றக்கூடிய விரிவாக்க அலுவலர்களுக்கு பயணப்படி கொடுப்பது போல, கால்நடை விரிவாக்க அலுவலர்களுக்கும் பயணப்படி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கால்நடைகளுக்கு மேய்ச்சல் நிலங்கள் எவ்வளவு ஒதுக்கமுடியுமோ அந்த அளவுக்கு ஒதுக்கித் தர வேண்டும். நல்ல மேய்ச்சல் இருந்தால்தான் கால்நடைகள் சுபிட்சமாக இருக்க முடியும். மேய்ச்சல் நிலங்களில் இப்போது கட்சிக்காரர்கள் பட்டா போட்டுக் கொள்வதைத் தடுக்க வேண்டும். அதற்கான சட்டங்களை அரசு கொண்டுவந்து அப்படி ஆக்கிரமிப்பு செய்கிறவர்களைத் தடுக்க வேண்டும். கால்நடைகளைச் சரியான முறையில் கண்காணிப்பதனால் கிராம பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும் என்பதைக் கூறிக்கொண்டு, வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி தெரிவித்து, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கே. இராஜாப்பிள்ளை : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் பேரவை முன் வைக்கப்பட்டிருக்கும் கால்நடை வளர்ச்சி மானியக் கோரிக்கையின்மீது ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

கால்நடை இலாகாவும், மக்கள் நல இலாகாவும் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக இருக்கிறது. மக்கள் நலத்திற்காக மருத்துவ இலாகா எவ்வளவு சேவை புரிகிறதோ அவ்வாறே கால்நடை இலாகாவும் கால்நடை வளர்ச்சிக்காகவும், கால்நடைகளின் நலனிலும் அதிகமான அக்கறை காட்டி சேவை புரிந்து வருகிறது. கால்நடை வளர்ச்சி பற்றி மானியக் கோரிக்கையிலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்திருக்கிற அறிக்கையிலே மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. நான் ஒரேஒரு உதாரணத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

சென்ற இரண்டு தினங்களுக்கு முன் பத்திரிகைகளிலே ஒரு செய்தி வந்திருந்தது. அமெரிக்காவிலே முட்டையின் விலை குறைந்தவிட்டது என்பதற்காக கோழிகளையெல்லாம் கொல்ல வேண்டுமென்று செனேட் சபையிலே தீர்மானம் வந்தது. அந்தத் தீர்மானம்

1972 மார்ச் 27] [திரு. வி. கே. இராஜாப்பிள்ளை]

தோற்கடிக்கப்பட்டது என்றாலும், அங்கு எவ்வளவு தாராளமாக முட்டைகள் கிடைக்கின்றன என்பதை அந்தச் செய்தியால் அறிய முடிகிறது. நாம் எவ்வளவு முயற்சி செய்தாலும் அந்த நிலைமை நம் நாட்டில் வருவதற்கு எவ்வளவு காலமாகும் என்பது நம்மால் சொல்ல இயலாது. நம் நாட்டில் இன்றைய நிலைமை இருப்பதற்கு இந்த அரசாங்கத்தை மட்டும் சொல்லிப் பயனில்லை. இதற்கு முன்பிருந்த அரசாங்கம் சரிவர இந்த இலாகாவைக் கவனிக்காமல் முரண்பட்ட வகையில் காரியத்தைச் செய்ததால்தான் இந்த நிலைமை ஏற்பட்டது.

இந்த அறிக்கையில் கொடுக்கப்பட்டிருக்கிற நல்ல நல்ல திட்டங்களையெல்லாம் நல்ல முறையில் செய்தால், வருங்காலம் மிக்க மகிழ்ச்சியளிக்கக் கூடியதாக இருக்கும். இந்தத் திட்டங்கள் எல்லாம் நன்றாகச் செயல்பட வேண்டுமென்றால், ஊழியர்களுக்கு நல்ல ஊக்கம் அளிக்க வேண்டும். பொதுமருத்துவம் படிக்கின்றவர்களும், கால்நடை மருத்து-வம் படிக்கின்றவர்களும் எம்.பி.பி.எஸ். 6 வருடம் படிக்கிறார்கள். பொது மருத்துவம் படிக்கின்றவர்கள் மனித இனத்தோடு பழகி, மனிதர்களுக்கு வருகின்ற நோய்க்கான சிகிச்சை செய்து வருகிறார்கள். கால்நடை மருத்துவப் படிப்பு படித்தவர்கள் வாயில்லா ஜீவன்களுக்கு வருகின்ற நோய்களைக் கண்டறிந்து, அதற்குத் தகுந்த முறையில் சிகிச்சை செய்து கால்நடைகளைக் காப்பாற்றுகிறார்கள். இன்னும் சொல்லப்போனால் மனிதர்களாவது தங்களுக்கு வருகின்ற நோய், இன்னது என்றும், தங்களுடைய நிலைமை இன்னது என்றும் வாய்விட்டுச் சொல்ல முடியும். ஆனால் கால்நடைகள் தன்னுடைய நோய்பற்றியும், தன்னுடைய குறைகளைப் பற்றியும் சொல்ல இயலாது. அத்தகைய ஜீவன்களுடன் பழகி, அதற்கான நோய்களைக் கண்டறிந்து தகுந்த முறையில் வைத்தியம் செய்ய வேண்டியது கால்நடை வைத்தியர்களின் பணியாக இருக்கிறது. கால்நடை மருத்துவர்களுக்கும், கால்நடை மருத்துவ உதவியாளர்களுக்கும் நல்ல முறையில் ஆக்கமும், ஊக்கமும் கொடுத்தால்தான் அவர்கள் உற்சாகமாகப் பணியாற்றி, கால்நடைகளை நல்ல முறையில் அபிவிருத்தி செய்யமுடியும். இந்த அறிக்கையில் கால்நடை வளர்ச்சிக்காக 4 கோடியே 40 லட்சம் ரூபாய் கோரப்பட்டிருக்கிறது. சுமார் 4 கோடி கால்நடைகள் இருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கணக்கைப் பார்க்கும்போது ஒரு கால்நடைக்கு ஒரு ரூபாய் அல்லது ஒன்றேகால் ரூபாய்தான் செலவழிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, கால்நடைகளைப் பேணிப்

[திரு. வி. கே. இராஜாப்பிள்ளை] [1972 மார்ச் 27

பாதுகாக்கவும், அதனுடைய வளர்ச்சிக்காகவும் இன்னும் கூடுதலான தொகை ஒதுக்கப்படவேண்டும்.

அடுத்தபடியாக, கால்நடைத் துறைக்கு குறைந்த தொகையும், பால்பண்ணை வளர்ச்சிக்கான துறைக்கு அதிக நிதியும் ஒதுக்கப் பட்டிருக்கிறது. இரண்டு துறைகளும் ஒரே நிர்வாகத்தின்கீழ் இருப்பதால் இத்தகைய நிலைமை ஏற்படுகிறது. பால் வினியோகம் செய்யும் துறைக்கு அதிகமான நிதியும், பால் பெறப்படுகின்ற கால் நடை வளர்ச்சித் துறைக்குக் குறைவான தொகையும் ஒதுக்கியிருப் பது சரியல்ல. இரண்டு துறைகளும் தனித்தனியாக இயங்க வேண்டும். நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் இரண்டு துறை களும் தொடர்பு இல்லாமல் இருந்தால் நல்லது. பால்பண்ணை இலாகாவுக்குத்தான் அதிகமான அதிகாரம் கொடுக்கப்பட்டிருக் கிறது. கால்நடை இலாகாவுக்கு அதிக அதிகாரம் இல்லை. ஆகவே, கால்நடை இலாகாவுக்கு அதிக மானியம் கொடுத்து, நிர்வாக அதிகாரமும் கொடுத்தால்தான் நல்ல இனப்பெருக்கத்தையும் நல்ல வசதிகளையும் அந்த இலாகா செய்து கொடுக்கமுடியும்.

கால்நடை வளர்ச்சி இலாகாவுக்கு இந்த மானியம் போதாது. அதிகமான மானியம் தரவேண்டும். கால்நடை மருத்துவ உதவி யாளர்களுக்கு சங்கம் ஒன்று இருக்கிறது. அவர்கள் பல கோரிக்கை களை அமைச்சர் அவர்களிடம் கொடுத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கைகளையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் நல்ல முறையில் பரிசீலித்து நடவடிக்கை எடுத்தால் நல்ல முறையில் பணியாற்ற முடியும். ஐந்தாண்டுக்குள்ளேயே நம்முடைய தேவையை நிறை வேற்ற முடியும், என்று சொல்லிக்கொண்டு, வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. கே. ஆர். கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, கால்நடை வளர்ச்சி 'மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

கழக ஆட்சி வந்தபின்தான் இத்தகைய நல்ல முன்னேற்றம் ஏற்பட்டு வருவதைப் பாராட்டுகிறேன். இருப்பினும் இன்னும் பல வசதிகள் செய்யப்பட்டாகவேண்டும். வட்டாரங்களில் இருக்கும் கால்நடை கிளை நிலையங்களில் பணியாற்றுபவர்களுக்கு தேவையான மருந்தும் சரியான வசதிகளும் இல்லையென்று சொல்லப்

1972 மார்ச் 27] [கே. ஆர். கிருஷ்ணன்]

படுகிறது. நல்ல முறையில் வசதிகளைச் செய்ய வேண்டும். முதலுதவி செய்வதற்கான மருந்துகளைக் கொடுக்க வேண்டும். மேலும் அந்தப் பணியாளர்களுடைய வேலைகளை அவர்கள் சரியாகச் செய்கிறார்களா என்று பார்க்கும் அதிகாரத்தை ஆணையாளர்களிடமிருந்து மாற்றி, அந்த இலாகாவினரிடமே கொடுக்க வேண்டும். அப்போதுதான் அவர்கள் ஒரு எஜமானரின்கீழ் வேலை செய்யவும், அவர்களையும் அவர்களுடைய வேலைகளையும் ஒழுங்குபடுத்த வசதியாக இருக்கும்.

அடுத்தபடியாக, சிறிது காலத்திற்கு முன்பு உயர்ந்த ரக காளைகளிடமிருந்து எடுக்கப்படும் விந்து மருந்தகங்களில் முறையாக வழங்கப்பட்டு வந்தது. அதை பசுக்களுக்குச் செலுத்தி சினை பெறவும், நல்ல கன்றுகளை ஈனவும் வகை செய்யப்பட்டு வந்தது: இப்பொழுது அந்தமாதிரி நிலைமை இல்லை. தர்மபுரி போன்ற நகரங்களுக்குச் சென்றுதான் அந்த விந்துவை வாங்கிவர வேண்டியிருக்கிறது. அப்படி காலங்கடந்து அந்த விந்துவை உபயோகிப்பதால் பசுக்கள் சினைப்படுகின்ற வாய்ப்பு கெடுகிறது. ஆகவே, அம்மாதிரியான விந்துவை தினமும் மருந்தகங்களுக்கும் கால்நடை நிலையங்களுக்கும் அனுப்ப வழிவகை செய்யவேண்டும்.

அடுத்தபடியாக நேச்சுரல் சர்வீஸ் செய்வதற்கு சிந்து ரக காளைகளை வைத்திருக்கிறார்கள். ஒசூரிலிருந்து வாங்கி வைத்திருக்கிறார்கள். ஆனால் அவை பெண் இனத்தையே திரும்பிக்கூட பார்க்க மறுக்கின்றன. ஒருவேளை துறவறம் பூண்டுவிட்டனவோ என்று கருதுகிறேன். பெண் இனத்தையே அவை திரும்பிக்கூட பார்க்காததால் சர்வீஸ் செய்வதற்கு முடியவில்லை. எனவே அவற்றிற்கு சர்வீஸ் செய்வதற்கு பழக்கவழக்கங்கள் ஏற்படக்கூடிய முறையில் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எருமைகளையும் மாடுகளையும் கிராமங்களிலிருந்து ஆஸ்பத்திரிக்குக்கொண்டு வருவது கஷ்டமாக இருக்கிறது. சாதாரண மாடுகளாக இருக்கின்றவைகூட ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகிற சமயத்தில் முரண்டுபிடித்து அதனால் சங்கடங்கள் ஏற்படுகின்றன. ஒவ்வொரு மருந்தகத்திலும் இரண்டு டாக்டர்கள் நியமித்திருக்கிறார்கள். அவர்களுக்கு சைக்கிள் மோட்டார் வாங்கிக் கொடுத்தால் அவர்கள் அதன்மூலம் மாடுகள் இருக்கின்ற இடங்களுக்கே வந்து பார்த்து செயற்கைமுறை மூலம் கருத்தரிக்க வேண்டிய ஏற்பாடுகள்

[திரு. கே. ஆர். கிருஷ்ணன்] [1972 மார்ச் 27

கஷ்டமில்லாமல் செய்வதற்கு வசதியாக இருக்கும். இதன்மூலம் அங்கேயுள்ள மக்களுக்கு ஏற்படுகின்ற கஷ்டங்களை நிவர்த்தி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆடுகளுடைய இனத்தை வளர்ப்பதற்காக மேச்சேரியிலிருந்து கடாக்களை வாங்கித் தருகிறார்கள். சந்தைக்கு அதிகாரிகள் சென்று விட்டால் அங்கிருக்கின்ற தரகர்களும் வியாபாரிகளும் அவர்களை ஏமாற்றத் தலைப்படுகிறார்கள். அதன் காரணமாக உதவாத ஆட்டுக் கடாக்களையும் நோஞ்சான் ஆட்டுக் கடாக்களையும் அனுப்பிவிடுகிறார்கள். அவைகள் வலிவுள்ளவையாகவும் திடகாத்திரமாகவும் இருந்தால்தான் இனவிருத்தி ஏற்படும். எனவே ஆட்டுக் கடாக்களை நல்ல முறையிலே நல்லவையாக பார்த்து வாங்குவதற்கு முயற்சிகள் எடுக்கப்படவேண்டும்.

ஆடுகளின் வளர்ச்சிக்குத் தடையாக இருப்பது மேய்ச்சல் நிலங்கள் இல்லாததுதான். மாடுகளையாவது வாய்க்கால்கள் ஓரங்கள் ஆற்றோரங்களிலும் மேய்த்துவிடலாம். ஆனால் ஆடுகளுக்கு அப்படி முடியாது. மேய்ச்சல் நிலம் இருந்தால்தான், விவசாயிகளுக்கு அருமையான உரமும், பொருளாதார வசதிகளும் கிடைப்பதற்கு முடியும். எனவே மேய்ச்சல் நிலத்தைச் சாகுபடிக்குக் கொண்டுவருவதைத் தடுக்கவேண்டும்.

அடுத்ததாக நோய்த்தடுப்பு. பரவலாக ஆடுகளுக்கு அம்மை தொடர்ந்து வருகிறது. அது வந்துவிட்டால் அந்தப் பட்டியே காலியாகிவிடும், அல்லது பாதியாவது போய்விடும். புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை மாதங்களிலே ஆடுகளுக்கு மூக்குப் புண் வந்துவிடுகிறது. அதற்குக் காரணம் என்ன என்பதை டாக்டர்கள்கூடச் சரியாகச் சொல்லவில்லை. அது எதனால் வருகிறது என்று அறிந்து சரிசெய்வதற்கு அவற்றைத் தடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

நாங்கள் எவ்வளவு பால் உற்பத்திசெய்தாலும் விநியோகம் செய்ய வழிவகைகள் இல்லை. எங்களுடைய பகுதிகளிலே உற்பத்தி செய்யப்படுகிற பாலை நகரப் பகுதிகளுக்கு வழங்க அரசாங்கம் ஏற்பாடுசெய்து நல்ல விலையாகும் இடங்களுக்குக் கொண்டுசெல்ல வசதிகளைச் செய்துதர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

1972 மார்ச் 27]

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவர் அவர்களே, மாண்புமிகு சுகாதார அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற கால்நடை சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கையை ஆதரித்து தங்களுடைய கொள்கைகளை அறிவித்திருக்கிறார்கள்.

கால்நடை இலாகா ஒரு முக்கியமான இலாகா ஆகும். விவசாயி களுக்கு உற்ற துணைவர்களாக அவை இருப்பது மட்டுமல்லாமல் விவசாயிகளுடைய ஜீவநாடியாக கால்நடைகள் இருந்துவருகின்றன என்பதை யாரும் மறுக்கமுடியாது. இந்த மாதிரி ஒரு இலாகாவிற்கு குறைவான நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். இன்றையதினம் கால்நடைகள் என்று சொல்கிற நேரத்திலே அவை பாரம் இழுப்பதற்கும் விவசாயிகள் உழுவதற்கும் உபயோகப் படுத்திக் கொண்டு வருகிறார்கள். ஒம்பளச்சேரி என்ற பண்ணை தஞ்சையிலே இருக்கிறது. அந்தப் பண்ணையிலே நாளுக்கு நாள் அபிவிருத்தி குறைந்துவருகிறது. அந்த மாடுகள் சேற்றிலே உழுவதற்கு மிக உதவிகரமான மாடுகள் ஆகும். அந்த மாடுகளை அதிகமாக அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும்.

தனியார்கள் பண்ணைகள் ஆரம்பிப்பதற்கு ஒரு பக்கம் இருந் தாலும் அரசாங்கமே அதிகமான அளவிலே கால்நடைப் பண்ணை களை ஆரம்பிக்க வேண்டும். கோழிப் பண்ணைகளையும் ஆரம்பிக்க வேண்டும். கோழிகளுக்கு வியாதிகள் அடிக்கடி வந்து அவை இறந்துபோவதும் அந்தப் பண்ணைகளில் கொட்டகைகளும் கட்டடங்களும் காலியாகக் கிடப்பதும்தான் நடக்கின்றன. மனிதர்களுக்கு உணவிற்கு அத்தியாவசியமான முட்டைகள் தேவைப் படுவதால் கோழிப் பண்ணைகளை அதிகமாக ஆரம்பிக்க வேண்டும். கோழி முட்டைகள் மக்களுக்கு நிறையக் கிடைக்கிற வகையிலே ஏற்பாடுகளைச் செய்வதன்மூலம் புஷ்டியான ஆகாரம் கிடைப்பதற் கான வழிவகைகளை அரசாங்கம் செய்ய வேண்டும்.

பன்றிக் கறி உணவு சாப்பிடுவது இப்பொழுது ஆரம்பிக்கப் பட்டிருக்கிறது ஆனால் எல்லா மாவட்டங்களிலும் ஆரம்பிக்கப்பட வேண்டும். பன்றிக் கறி சாப்பிடுவது தவறு என்று மக்களுக்குப் படுகிறது. எனவே அந்த அச்சத்தைப் போக்குவதற்கு அரசாங்கம் தீவிரமாகப் பிரச்சாரம் செய்யவேண்டும்.

கால்நடை வைத்தியத்தைப் பொறுத்தவரையிலும் இன்னும் பூர்த்தி செய்யப்படவில்லை என்பதுதான் எங்களுடைய அபிப்பிராயம். வியாதிகள் வந்தால் உடனடியாகக் கட்டுப்படுத்தக் கூடிய வகையில் மருத்துவர்கள் குறைவாக 883 பேர்கள்தான் இருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்—மருத்துவர்கள் வசதியில்லை, மிகமிகக் குறைவான தொகைதான். எனவே கால்நடை மருத்துவர்களை அதிகமாகப் பயிற்சிக்கு எடுத்துக் கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால் தான் கிராம மக்களுக்கு விவசாயிகளுக்கு கால்நடைகள் மூலம் கிடைக்கின்ற உதவிகள் நல்ல முறையிலே இருக்க முடியும்.

கூட்டுமன்றங்களிலே ஒரு கால்நடை மருத்துவ மனையும், 4 அல்லது 3 உதவியாளர்களுக்கு வைத்திருக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அதுபோதுமானது அல்ல. எனவே போதுமான உதவியாளர்களை நியமிப்பது மட்டுமல்லாமல் வைத்தியத்திற்கு வேண்டிய போதுமான ஏற்பாடுகளையும் செய்தாகவேண்டிய அவசியம் இருக்கிறது. இந்த இலாகாவிலே பணியாற்றிக் கொண்டிருக்கிற ஊழியர்கள் உற்சாகம் இல்லாமல் இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களை எல்லாம் உற்சாகப்படுத்தவேண்டுமானால் கீழ் நிலையங்களில் வேலை செய்யக் கூடியவர்களுடைய குறைகளை அரசாங்கம் கவனிக்க வேண்டும், அவர்கள் தங்களுடைய குறைகளையெல்லாம் அடிக்கடி அரசாங்கத்திற்குச் சமர்ப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் அலட்சியப்படுத்துவது முறையல்ல.

அந்த கால்நடைத்துறை இயக்குநர், செயலாளர் இவர்கள் எல்லாம் அந்தத் துறையிலே பணியாற்றும் உதவியாளர்கள், பணியாளர்கள் இவர்களுக்கு நிலையான பயணப்படி கொடுக்க வேண்டுமென்று சிபாரிசு செய்திருக்கிறார்கள். அதை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை என்று சொல்லுகிறார்கள். இதனால் அவர்கள் மத்தியிலே குறை இருக்கிறது. எனவே அவர்களுக்கு அதைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

மேலும், அவர்களுக்கு விடுமுறை என்பதை இல்லாமல் இருக்கிறது. விடுமுறைக் காலங்களிலே அவர்கள் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். அந்த நாட்களுக்கும் அவர்களுக்கு ஊதியம் கொடுக்கின்ற ஏற்பாட்டினைச் செய்ய வேண்டும்.

வாய்பேசாத அந்த ஜீவன்களோடு அவர்கள் பழகி வியாதிகளைக் கண்டறிந்து அவற்றிற்கு நல்ல முறையிலே சிகிச்சை அளித்துவரக்

1972 மார்ச் 27] [திரு. கே. ஆர். கிருஷ்ணன்]

கூடிய இந்தத் துறையைச் சேர்ந்தவர்கள் கூறக்கூடிய அந்தவிதமான குறைகளையெல்லாம் நிவர்த்தி செய்ய அரசாங்கம் ஏற்பாடுகளைச் செய்வதன்மூலமாக அந்தத் துறை வளர்ச்சியடையும். கால்நடைகளும் ஆரோக்கியமாக வளர்ச்சியடைந்தால்தான் விவசாயிகளுக்கு அவை உறுதுணையாக இருக்க முடியும்.

கேந்திர கிராமத் திட்டம் நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது. அதை மீண்டும் அமலுக்குக் கொண்டுவந்தாக வேண்டும். கால்நடை அபிவிருத்தித் திட்டங்களும் நிறுத்திவைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றையும் அமலுக்குக் கொண்டு வரவேண்டும். கால்நடைகளின் வியாதிகளைப் போக்குவதற்கான முறையிலே அதிகமான அளவில் மருத்துவர்களைப் பயிற்சிக்கு எடுத்துக் கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

இன்றையதினம் கிராமப்புறங்களில் போதுமான வைத்திய வசதியில்லாமல் இருக்கிறது. திடீர் திடீரென்று மாடுகள் இறந்துவிடுகின்றன. அதன்மூலம் பெரும் நஷ்டத்திற்கு ஆளாகிவிடுகிறார்கள். எனவே கால்நடை இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தை நம்முடைய அரசு கொண்டுவந்தாக வேண்டும். அப்படி கால்நடை இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தைக் கொண்டுவருவதன்மூலம் விவசாயிகளுக்கு ஏற்படும் நஷ்டத்தை ஈடுகட்ட வகை ஏற்படும். அதற்கும் அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

* THIRU B. VENKATASWAMY : Mr. Chairman, Sir, I thank you for giving me an opportunity to speak a few words on Animal Husbandry.

In the statement given by the Hon. Minister he has clearly stated that in Tamil Nadu we are having only quantitative animals and not qualitative animals. Even last year when he addressed this House, he clearly admitted that the entire stock of our animals are useless and we must have a revolutionary change in Animal Husbandry. However I do not find any new scheme introduced to change the entire stock into a new stock. Of course, there is the financial aspect of the matter.

Sir, the entire economic prosperity of the villages depends upon animal husbandry which gives milk and wool. Apart from them, the cattle manure is most essential especially in view of the fact

that the price of chemical fertilisers is increasing day-by-day. If we want to increase agricultural production, we must see that good kind of animals are introduced. So, I want to stress in support of my cut motion, that we must have very good breed of animals.

Recently when the Hon. Minister came to Hosur, he jocularly remarked that they are small animals like dogs and that they would not be useful for any purpose. So he is aware of it but I do not find any revolutionary change in his statement. Therefore, I request the Hon. Minister to take some steps to import some animals. It does not matter if we have to spend more in the beginning as we can build up good stock for the future.

When the Estimates Committee visited some farms, some of the doctors told us that some of the imported animals were given as gift but they were not so good and still they had to say that they were good animals. If we purchase them directly, we can buy very good animals. So, I request the Hon. Minister to contact the Central Government and find out whether it is possible to release some foreign exchange for the purchase of these animals so that the economic prosperity of the ryots would be improved. The Central Government also want the same thing—the economic prosperity in the rural areas. I request him to fight with the Centre and get imported animals to improve our stock.

Sir, after reorganisation, the number of artificial inseminations and the birth-rate of animals has come down. Also the figures given in Chart V and in the Annexure do not tally. In Annexure VI it is stated that during 1970-71 the number of artificial Inseminnations done is 17,55,879 but in tht Chart a difftrent figure 5,67,960 is given. Both of them do not tally. I request the Hon. Minister to clarify it when he replies to the debate. Compared to last year, the number of artificial inseminations has come down and I do not know the reason for it. Livestock Assistants and some doctors had told me that the special compensatory allowance given to them has been stopped by the Government after reorganisation. I think as there is no incentive for them, the number of artificial inseminations has come down. So, I request the Hon. Minister to reconsider the matter and give the incentive to them so that they can help in producing very good animals which would definitely increase our economic prosperity. We are giving so many

1972 மார்ச் 27] [Thiru B. Venkataswamy]

incentives to so many people to improve our national prosperity and so some incentives should be given to the Livestock Assistants also. As the Chairman of a Panchayat Union I have observed the work of the Livestock Assistants. I really feel very sorry that the efficiency of work has come down. Sir, now the Livestock Assistant is under the control of the Commissioner who says one thing and the department says another thing. As he is under the dual control, he is not able to do his work efficiently. I support that it is better that he is transferred to the control of the Department. Then only they can have better control over the Livestock Assistants.

Regarding sub-centres in villages, incentives must be given for artificial inseminations. Secondly, semen is not supplied properly and that is a very great drawback in the sub-centre. In this connection, I also suggest that the veterinary doctors in the dispensary should be supplied motor cycles so that they can distribute semen to all the centres. Instead of having messengers, you can ask the doctors to go to the sub-centres and distribute semen. If they do so, there would be better control. I request the Government to consider this matter very sympathetically and do the needful.

As regards the Calf Subsidy Scheme, when the Estimates Committee visited the various parts of the State, they were told that the scheme was a good one and that it should be introduced. Of course, the Government may lose Rs. 10 per calf, but we can get very good calves and we can keep their entire history and derive maximum benefit out of them.

Then I come to sheep-breeding. We are having very good breeds in our State. In the Nilgiris district we have wooly breeds, in Hosur mutton-type breeds and in Chinnasalem other breeds. I suggest that co-operative societies should be formed to supply sheep to small ryots. I understand that A.R.C. has also recommended such societies. In the Dharmapuri district there are good facilities for rearing sheep and I request that co-operative sheep breeding societies may be formed in the entire Dharmapuri district so that the economic prosperity of the people can be improved.

[Thiru B. Venkataswamy] [1972 மார்ச் 21

Regarding semen, I request this Government to open semen banks in each and every district headquarters where at least frozen semen should be supplied. I understand that there is no de-freezing plant in Tamil Nadu which is in the forefront in regard to Animal Husbandry. I understand that a plant is being erected in the Veterinary College and I hope that it would be completed soon. Regarding Livestock Assistants, they are the poor lot of people. I request that they may be put on a scale of Rs. 210–275.

(Mr. Chairman sounded the gong)

People with one year experience in livestock are getting Rs. 225–275 under a different category. So these Livestock Assistants may also be given some incentive so that they may work well.

Regarding fodder development I want to stress that fodder development should be taken on a mass scale. We are deficit in production of eggs and our egg production is only 35 crores whereas at the rate of half an egg per adult per day we need 700 crores of eggs. Even our Estimates Committees had recommended that in all district headquarters there must be poultry farm so that the health of the people might improve after taking eggs regularly. I listened to the Hon. Minister in the radio forum saying that one used to ask the other who is ill 'you are ill and so you are taking fruit'. That tendency to take fruit only during illness should go. You must have fruit every day to improve health. To have good quality feed, we must have Feed Mixing Centres in district headquarters.

Regarding highlines, I want to say one thing. In Mysore State they are giving loans to co-operative societies so that each village might have a good farm. Here, we have only few farms getting assistance from nationalised banks with great difficulty. Extend credit to co-operative sector.

MR. CHAIRMAN (THIRU S. KANDAPPAN): The Hon. Member has taken 13 minutes.

THIRU B. VENKATASWAMY: I request Government to give more incentive and more facilities to poultry farmers so that more people take up poultry rearing. Thank you.

1972 மார்ச் 27]

டாக்டர் இரா. நைனுமலே: தலைவர் அவர்களே, கால்நடை வளர்ச்சி மானியத்தை ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் இருக்கின்ற கால் நடைகள் நம்முடைய தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற அளவுக்கு இல்லாதிருப்பது வருந்தத்தக்க ஒன்ருகும். நமது அரசு பொறுப் பேற்ற பிறகு இந்த நிலைமையை மாற்றியமைப்பதற்காக பல்வேறு திட்டங்களைத் தீட்டி, வெளிநாடுகளிலிருந்து சிறந்த ஜெர்சி காளை களையும், கிடாரிகளையும் இறக்குமதி செய்து அவைகளை நம்முடைய நாட்டுப் பசுக்களிடையே கிராஸ் செய்து ஒரு கலப்பு இனத்தை விருத்தி செய்வதற்குச் சென்ற ஆண்டே முயற்சி எடுத்துக் கொண் டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

கால்நடை வளர்ச்சியில் ஒரு திட்டத்தை ஆரம்பித்தால் அந்தத் திட்டத்தினுடைய பலன் கிடைப்பதற்கு கிட்டத்தட்ட ஐந்து ஆண்டுகள் ஆகிவிடுகின்றன. இந்த அளவிலே அந்தத் திட்டம் விரை வாகச் செயல்பட்டாலன்றி அதனுடைய பலன் நமக்கு வெகு நாட்கள் கழித்துத்தான் கிடைக்கும். நம்முடைய நாட்டில் இருக்கும் பசுக்கள் ஆண்டு ஒன்றுக்கு 400 அல்லது 500 லிட்டர் பாலுக்கு மேல் கொடுப் பதில்லை. ஜெர்சி இனப் பசுக்கள், உயர்தரமான ஜெர்சி இனப் பசுக்கள் கிட்டத்தட்ட ஆண்டு ஒன்றுக்கு 6,000 லிட்டர் பாலைத் தருகிறது.

அதோடு மட்டுமல்லாமல் நம்முடைய நாட்டுப் பசுக்கள் ஒரு ஆண்டில் ஐந்து மாதம் அல்லது ஆறு மாதத்திற்குமேல் பால் கொடுப்பதில்லை. வெற்று மாடாக ஒரு ஆண்டுக்கு மேல் இருக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆனல் ஜெர்சி இனப் பசுக்கள் ஆண்டு ஒன்றுக்கு இரண்டு மாதந்தான் பால் இல்லாமல் இருக்கின்றன மற்றப்படி ஆண்டு ஒன்றுக்கு ஒரு கன்றுவீதம் போட்டு பத்து மாதத் திற்குப் பால் கொடுக்கிறது. ஆகவே, அத்தகைய பசுக்களையும், காளைகளையும் நம்முடைய நாட்டில் கொண்டு வந்து நம்முடைய பசுக்களோடு கலப்பு செய்து இன விருத்தி செய்தால் கிட்டத்தட்ட சராசரி பலன் அளவுக்கு ஆண்டு ஒன்றுக்கு இரண்டாயிரம் அல்லது மூவாயிரம் லிட்டர் பால் கிடைக்குமளவுக்கு உயர்த்தப்படலாம். இது ஒரு இடைக்கால நிவாரணமே தவிர, நம்முடைய குறிக்கோள் ஆகாது. அயல்நாட்டில் கறக்கக்கூடிய பசுக்களின் அளவுக்கு

நம்முடைய நாட்டுப் பசுக்களும் கறக்க வேண்டுமென்ற அந்தக் குறிக்கோளை எய்த அங்கிருந்து இறக்குமதி செய்கின்ற காளைகளையும், கிடாரிகளையும் நியூக்ளியஸ் பண்ணையாக வைத்து இன விருத்தி செய்து, காளைகளின் செமனை எடுத்து நம்முடைய பசுக்களுக்கு இன விருத்தி செய்ய வழி செய்து, இதை ஒரு நியூக்ளியஸ் ஆக வைத்துக் கொண்டு பத்து அல்லது பதினைந்து ஆண்டு காலத்திற்குள்ளாக நம்முடைய நாட்டின் பசுக்களின் தரத்தை நல்ல விதமாக உயர்த்த முடியும் என்று நம்புகிறேன். அந்தத் திட்டத்தை விரைவுபடுத்தும்படி மத்திய அரசாங்கத்தோடு போராடி நிதிவசதி பெற்று சீக்கிரம் திட்டத்தை நிறைவேற்றும்படி அமைச்சர் அவர்களைத் தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய நாட்டில் புரதத் தேவையைப் பூர்த்தி செய்வதாக இருப்பது முட்டை. கோழி இனங்களை அதிகமாக வளர்ப்பதன் மூலம் முட்டைகளைப் பெறமுடியும். நம்முடைய நாட்டில் $4\frac{1}{2}$ கோடி மக்கள் இருக்கிறார்கள். அதிலே இரண்டு கோடி மக்களாவது முட்டை உண்பவர்களாக இருப்பார்கள். அவர்களுக்குத் தினம் ஒரு முட்டை வீதம் கணக்கிட்டால் கூட இரண்டு கோடி முட்டைகள் ஒரு நாளைக்குத் தேவைப்படும். நம்முடைய நாட்டில் உற்பத்தியாகக்கூடிய முட்டைகள் மிக மிகக் குறைவாக இருக்கின்றன. இந்த நிலையில் கோழி ஆராய்ச்சியில் நல்ல பல ஆராய்ச்சிகளைச் செய்து நல்ல ரகங்களை முட்டையிடும் ரகங்களை அதிகப்படுத்த கோழி ஆராய்ச்சிப் பண்ணையில் உற்பத்தி செய்து கொடுக்க வேண்டும். இறைச்சியைப் பொறுத்தவரை ஒயிட் லெக் என்ற இனம் அதிகமான இறைச்சி கொண்டதாக இருக்கிறது என்று கூறுகிறார்கள். நல்ல முட்டையிடும் இனத்தை இரண்டு கோடி அளவுக்காவது அபிவிருத்தி செய்தால்தான் குறைந்தபட்சம் ஒரு நாளைக்கு இரண்டு கோடி முட்டைகளாவது கிடைக்க முடியும்.

கோழி அபிவிருத்தியில் ஒரு சிக்கலான பிரச்னை நமக்கு இருக்கிறது. குறைந்த விலையில் கோழித் தீவனம் நமக்குக் கிடைப்பதில்லை. கிடைக்கக்கூடிய கோழித் தீவனம் பெரிய அளவில் பண்ணைகளில் வைத்து நடத்த கட்டுப்படியாகாத நிலையில் இருக்கிறது. ஆகவேதான், இப்போது குச்சி வள்ளிக்கிழங்கு திப்பியை, ஆடுமாடுகளுக்குக் கொடுக்கப்படும் திப்பியைக் கோழித் தீவனமாகப் பயன்படுத்தலாம். அது ஓரளவு சிக்கனமாக இருக்கும்.

1972 மார்ச் 27] [டாக்டர் இரா. நைனுமலை]

இன்னென்று ஃபிஷ் மீல் என்று சொல்லப்படுகின்ற மனிதர்கள் உண்ணுவதற்கு லாயக்கற்ற பலவித மீன்களைப் பிடித்து உலர வைத்து பொடி செய்து கோழிக்குக் கொடுக்கலாம். ஆகவே, பிஷ் மீல் தயாரிக்க இரண்டொரு பாக்டரிகளை கடற்கரை ரீஜினில் துவக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

ஆட்டை எடுத்துக்கொண்டாலும் நம்முடைய நாட்டில் ஆடுகளும் மிக மிகக் குறைவு. இறைச்சி உண்பவர்கள் எண்ணிக்கை வளர்ந்து வருகிறது. இறைச்சி உண்பவர்கள் மரக்கறி உண்பவர்களைவிட இரண்டு மூன்று மடங்கு அதிகமாக ஒரு வேளை சாப்பாட்டுக்குச் செலவழிக்கும் நிலைமை இருக்கிறது. இறைச்சி உணவு பரிமாறுகின்ற உணவு விடுதிக்குச் சென்று விட்டால் நல்லவிதமாகச் சாப்பிட்டு வர வேண்டுமென்ருல் மூன்று, நான்கு ரூபாய் ஆகும் நிலைமை இருக்கிறது. ஆகவே, இறைச்சி குறைந்த விலையில் கிடைக்க ஆடுகளை ஏராளமாக விருத்தி செய்யவேண்டும். ஆடு வளர்ச்சியிலும் நம்முடைய நாட்டு ஆடுகளை விட ஆஸ்திரேலியா இன ஆடுகள் அதிகமான இறைச்சியைக் குறைந்த காலத்தில் கொடுக்கிறது.

ஆகவே அந்த இன ஆடுகளை நாம் ஆஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்து நாட்டு ஆடுகளுடன் க்ராஸ் செய்து அந்த இன விருத்தியை அபிவிருத்தி அடையச் செய்யவேண்டும்.

அடுத்தபடியாக, கால்நடைக் கல்லூரிகளில் பட்டப்படிப்பு மட்டும் இல்லாமல் டிப்ளோமா கோர்ஸ்-ம் ஆரம்பித்து அவர்களுக்கு கோழி வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, பன்றி வளர்ப்பு போன்ற தனித்தனி சப்ஜக்ட்களில் இரண்டு ஆண்டுக்காலம் பயிற்சி கொடுத்து டிப்ளமா கொடுக்கக்கூடிய விதத்தில் டிப்ளமா கோர்ஸ் ஏற்படுத்தி விவசாயிகளின் பிள்ளைகளை அதில் சேர்த்து சொல்லிக்கொடுத்தால் அவர்களாகவே இந்தத் தொழிலைத் தொடங்கி நாட்டுக்கு சேவை செய்தவர்களாவார்கள். அதோடு கால்நடைகளை விருத்தி செய்வதற்கும், அபிவிருத்தி அடையச் செய்வதற்கும் அவர்கள் வழி வகுப்பார்கள் என்று கூறி எனக்கு இந்த வாய்ப்பை கொடுத்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. ஏ. ஆர். சுப்பையா : தலைவர் அவர்களே, இந்த கால்நடை வளர்ப்பு மானியத்தின்மீது என்னுடைய சில கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்று சாதாரணமாக ஏழை விவசாயிகள் மேன்மையடைய இந்தக் கால்நடை வளர்ப்பு மிகவும் தேவை அது உப தொழிலாகச் செயல்படக்கூடிய நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. மிக்ஸ்ட் பார்மிங் என்ற அடிப்படையில் கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு, செம்மறி ஆடு வளர்ப்பு, பன்றி வளர்ப்பு போன்ற திட்டங்கள் எல்லாம் சாதாரண உப தொழில்களாக மட்டுமல்லாமல் ஏழை விவசாய மக்களை மேம்படுத்தக்கூடிய உப தொழில்களாகவும் இருந்து வருகின்றன.

இந்த கால்நடை வளர்ப்பில், 1970-ல் நிர்வாக அமைப்பின்கீழ் ஒரு சீர்திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது. மையக் கிராமத் திட்டத்தையும், கால்நடை வளர்ச்சி மும்முரத் திட்டத்தையும் தனித்தனியாக இயங்கி வந்ததை ஒட்டுமொத்தமாகச் செயல்படும்படிச் செய்திருக்கிறார்கள். அதனால் கால்நடை வளர்ச்சி ஓரளவிற்கு தடைபட்டிருக்கிறது. கால்நடை வளர்ச்சி மும்முரத் திட்டம், ஐ.சி.டி.பி. திட்டம் மிகவும் நன்றாக நடந்து அதன் மூலம் கால்நடை வளர்ச்சி அதிகமாக நடந்து கொண்டிருந்தது. இலாகா ஸ்பெஷலிஸ்ட்கள் தனியாக இருக்கக்கூடிய நிலையில் வளர்ந்துவரும்போது, நிர்வாக சீர் அமைப்பின்கீழ் இப்படி இணைக்கப்பட்டிருப்பதால் 70-க்குப் பிற்பாடு கால்நடை வளர்ச்சி ஓரளவிற்கு ஸ்தம்பித்து விட்டது. இன்று வளர்ச்சித் திட்டம் எதிர்பார்த்த அளவிற்கு இல்லை.

கீ வில்லேஜ் சென்டர்களில் செமன் வருவதில்லை என்று சொன்னார்கள். அதை நோக்கும்போது கால்நடை வளர்ச்சி ஒருபக்கம் தடைப்படுத்தப்பட்டிருக்கிறது. இப்போது ஒரு நல்ல காலம் பிறந்திருக்கிறது என்று நினைக்கிறேன்.

பால் பண்ணை வளர்ச்சிக் கழகம். தமிழ்நாடு டயரி டெவலப்மென்ட் கார்ப்பரேஷன் என்று ஒன்று உருவாக இருக்கிறது. அதற்கு பத்து கோடி ரூபாய் கொடுக்கிறார்கள். அது வரவேற்கத்தக்கதொரு திட்டமாகும். கால்நடை வளர்ச்சியில் அது முக்கியமானதொரு திட்டமாகும். கால்நடை வளர்ச்சியில்லாமல் பால் உற்பத்தி செய்ய முடியாது. பால் நிறைய கிடைத்தால்தான் விநியோகம் செய்யமுடியும். கமர்ஷியல் ஆர்கனைசேஷனை வைத்தால், பால் நிறைய இருந்தால்தான் பால் விநியோகம் செய்யமுடியும். ஆகவே, அதை கால்நடை வளர்ச்சி மும்முரத் திட்டத்தின்கீழ் அதைச் செயல்படுத்துவதற்கு வழிவகை செய்யவேண்டும்.

1972 மார்ச் 27] [திரு. ஏ. ஆர். சுப்பையா]

பால் வளர்ச்சிக் கழகத்தை முதல் அமைச்சர் அவர்கள் எடுத்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. இதை கால்நடை இலாகாவோடு இணைத்து திட்டங்களைச் செயல்படுத்த வழிவகை செய்யவேண்டும். இந்த பத்து கோடி ரூபாய் திட்டத்தை நல்லமுறையில் கவனித்துச் செயல்படுத்த வேண்டும். பால் உற்பத்தி பெருகினால்தான் விநியோகமும் நடக்கும்.

கால்நடை வளர்ச்சி மும்முரத் திட்டம் ஒரு சில எல்லைகளுக்கு மட்டும் விரிவுபடுத்தப்படுவதை விட கால்நடை இலாகாவையும் இந்தக் கார்ப்பரேஷனையும் இணைத்துச் செயல்படுவது நல்லது.

கர்னூல் என்ற இடத்திற்குச் சென்று பார்த்தேன். வெட்டரினரி டிப்பார்ட்மெண்ட் பொறுப்பில் Dairy வைத்து பால் பண்ணையிலிருந்து பால் விநியோகம் செய்துவருகிறார்கள். இன்று கால்நடை வளர்ப்பு அதிகாரிகள் பஞ்சாயத்து யூனியன்கீழ் இருந்து செயல்பட்டு வருகிறார்கள். அவர்கள் இன்று அடிமைவாழ்வு வாழ்ந்து வருகிறார்கள். விவசாய இலாகா அதிகாரிகளானாலும் சரி அல்லது கால்நடை இலாகா அதிகாரிகளானாலும் சரி இன்று பஞ்சாயத்து ஒன்றியங்களில் நன்கு செயல்படும் நிலையில் இல்லை. அவர்களை அங்கிருந்து பிரித்து கால்நடை இலாகா பொறுப்பில் வளரச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, கால்நடை வளர்ப்பு மானியத்தின்மீது நான் என் கருத்துக்களைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

உலகத்திலேயே ஜனத்தொகையில் இந்திய நாடு இரண்டாவதாக இருக்கிறது என்று பெருமைப்பட்டுக்கொள்கிற நேரத்தில் அதிகமான கால்நடைகளைக் கொண்ட நாடு இந்திய நாடு என்று பெருமைப் பட்டுக் கொள்கிற நேரத்தில் அந்தக் கால்நடைகள் எல்லாம் தரமானதாகவும், வேலை செய்வதற்கு அல்லது நல்ல பயன் அளிக்கத் தகுந்தனவாக அவை இருக்கின்றனவா என்று பார்க்கும்போது நிச்சயமாக அப்படி இல்லையென்று நம் கால்நடைத் துறையினரே ஏற்றுக்கொள்கிற அளவிற்கு நம் கால்நடைகள் மிகவும் நலிவுற்றிருக்கின்றன. அந்த நலிவைப் போக்கி வலிவுள்ள கால்நடைகளாக மாற்றுவதற்கு வேண்டிய ஆராய்ச்சித் திட்டத்தை ஏற்படுத்தி வருகிறது நம் தமிழக அரசு. இருந்தாலும் இந்தத் துறையில் நாம்

[திரு. கே. எ. வகாப்] [1972 மார்ச் 27

ஒரு புரட்சியை ஏற்படுத்த வேண்டும். அப்படி ஒரு புரட்சிகரமான மாறுதலைச் செய்தால்தான் கால்நடைகளை நல்ல வளமுள்ளதாக ஆக்க முடியும்.

நம் நாடு வேளாண்மை நாடு. ஒரு வேளாண்மை நாட்டிற்கு மிகத் தேவையானது கால்நடை வளம். வேளாண்மையும் கால்நடையும் இரண்டு குழந்தைகளாக இருக்கின்றன. அவை இரண்டும் ஒன்றாக இணைத்தால்தான் அவை நல்ல முறையில் இருந்தால்தான் நாடு நல்லதொரு முன்னேற்றத்தை அடைய முடியும்.

அதேபோல் காட்டுவளத்திற்கும் கால்நடைக்கும் மிகுந்த சம்பந்தம் இருக்கிறது. காட்டு வளம் அழிந்துகொண்டிருக்கும் நிலையில் புல் வளமும் பசுமை வளமும் குறைந்து வரும்போது கால்நடைகளை செயற்கையாக உருவாக்குவதில் அதிக அக்கறை செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். மேல் நாடுகளில் அப்படித்தான் செய்து கொண்டுவருகிறார்கள். அந்த அளவில்தான் ஹாலந்த், டென்மார்க் போன்றயிடங்களில் கால்நடை அபிவிருத்தி செய்து வருகிறார்கள். அதேபோல் ஜப்பான் நாடும் வேளாண்மைத் துறையில் முன்னேறியிருப்பதுபோல் கால்நடை வளர்ப்புத் துறையிலும் முன்னேற்றம் அடைந்திருக்கிறது.

நான் நேரிலேயே ஒரு பண்ணைக்குச் சென்று பார்த்தேன். அங்குள்ள கால்நடைகளைப் பார்க்கும்போது அவை கால்நடைகளா அல்லது குட்டி யானைகளா என்று தெரியாத அளவிற்கு அவ்வளவு வளமாக இருக்கின்றன. அவற்றிற்கு உணவோடு மதுவையும் கலந்து தருகிறார்கள். அப்படியெல்லாம் நம் நாட்டிலும் தரவேண்டுமென்று நான் சொல்லவில்லை. அங்கே அப்படிச் செய்கிறார்கள். பீர் என்ற மது வகையை உணவோடு சேர்த்துத் தருகிறார்கள் கால்நடைகளுக்கு. அப்போதுதான் அதன் மாமிசம் சாப்பிட ருசியாக இருக்குமென்று அவர்கள் சொல்கிறார்கள். அது செல்வச் செழிப்புள்ள நாடு. அங்கு நடக்கிறது. அந்தளவிற்கு நம்மால் செய்யமுடியாவிட்டாலும் கூட கால்நடைகளுக்கு நல்ல சத்துள்ள உணவு அளிக்கப்படவேண்டும்.

கால்நடைகளுக்கு ஏற்படும் நோய் பற்றி பலரும் சொன்னார்கள். அந்தக் கொடுமையான நோய்களைத் தடுப்பதற்கு நம் அரசு நல்ல முயற்சிகள் எடுத்துவருகிறது. குறிப்பாக என் தொகுதியில் இராணிப்

1972 மார்ச் 27] [திரு. கே. எ. வகாப்]

பேட்டையில் இப்போது ஒரு கால்நடை நோய் தடுப்பு ஆராய்ச்சி நிலையம் இந்தியா எங்கும் புகழத்தக்க அளவில் செயல்பட்டு வருகிறது. ஏறத்தாழ 15 இலட்சம் ரூபாய் செலவில் அதை விரிவாக்குவதற்கு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கால்கோள் நாட்டியிருக்கிறார்கள். அந்தப் பணி நடைபெற்று வருகிறது. அங்கு இன்னும் பல ஆராய்ச்சிகள் நடத்தப்பட வேண்டும். இப்போது சுமார் 23 நோய்கள் பற்றி ஆராய்ச்சி இருப்பதாக சொல்லப்படுகிறது. இன்னும் அதிகப்படியான நோய்களைப் பற்றி ஆராய்ச்சி செய்யவேண்டும். முக்கியமாக கோமாரி நோயைப் பற்றி ஆராய தமிழகத்தில் ஒரு நிலையம் அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதையும் இராணிப்பேட்டையில் அமைத்து ஒன்றோடொன்று இணைந்த அமைப்பாக அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடைகளுக்கு வரும் நோய்களைப் பற்றி கிராமங்களில் இருக்கும் மக்கள் இன்னும் தெரிந்துகொள்ள முடியாத நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு அந் நோய்களைப் பற்றி தெரிந்துகொள்வதற்கான முறையில் பயிற்சி அளிக்க வேண்டும். அதற்கு இடங்கள் இல்லையென்றால், இப்போது கோழிப்பண்ணைகள் நஷ்டத்தில் நடந்து கொண்டிருக்கின்றன, அந்தக் கட்டடங்கள் காலியாக இருக்கின்றன. அப்படிப்பட்ட இடங்களில் இந்த பயிற்சி நிலையங்களை அமைத்து அங்கே இருக்கும் மக்களை அழைத்து வந்து, கால்நடைகளுக்கு வரும் நோய்களைப் பற்றி குறிப்பிட்டு, அவற்றை எப்படி தடுப்பது என்பதைப் பள்ளி விளக்கம் சொன்னால், அதைப் புரிந்துகொண்டு, கால்நடை வளர்ப்பில் நல்ல கவனம் செலுத்த அந்த மக்களுக்கு ஏதுவாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

இன்றையதினம் கிராமப்புறங்களில் மாடுகளுக்கு வரும் நோயைக் குணப்படுத்த நாட்டுவைத்திய முறையைத்தான் கையாண்டு வருகிறார்கள். அதிலே கூட சில நல்ல முறைகள் இருக்கின்றன. இப்போதுவரும் விஞ்ஞான முறையில் இருக்கும் மருத்துவ வசதியைவிட, சில நேரங்களில் நாட்டு வைத்தியங்கள் கால்நடைக்கு பயனுள்ளதாக இருக்கிறது. மாடுகளுக்கு வரும் நோய்களைக் குணப்படுத்த சித்த வைத்திய முறையில் இன்னும் சற்று விரிவாக வைத்து தர அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கால்நடை மருத்துவ வசதியை நிறைய அளவில் செய்திருக்கிறார்கள்.

[திரு. கே. எ. வகாப்] [1972 மார்ச் 27

அதிகமான அளவில் கால்நடையின் முக்கியத்துவத்தை உணர்ந்து, கால்நடை மருத்துவக் கல்லூரியில் நிறையபேருக்கு இடமளித்து சேர்க்கப்பட்டது வரவேற்கத்தக்கதாகும்.

கால்நடைத்துறையில் லைவ்ஸ்டாக் அசிஸ்டெண்ட்ஸ் (உதவியாளர்கள்) பல கோரிக்கைகளை வைத்து இருக்கிறார்கள். அவையெல்லாம் அரசின் பரிசீலனையில் இருக்கின்றன. அதை அரசு பரிவுடன் கவனித்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடை மருத்துவ கல்லூரியில் நல்ல முறையிலே மாணவர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள், என்று சொல்லுகிற நேரத்தில் ஒரு சிறிய குறைபாட்டையும் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மாணவர்களுக்கு இன்டர்வியூ கார்டு அனுப்பப்படுகிறது. கடைசி லிஸ்டில் ஒருவருக்கு இன்டர்வியூ கார்டு அனுப்பப்பட்டது. அந்த இன்டர்வியூ கார்டு மிகவும் தாமதமாகக் கிடைத்தது. அன்று காலை புறப்பட்டு மாலை 5-30 மணிக்கு வந்தார். 5 மணிக்கு வரவேண்டியவர் 5-30 மணிக்கு வந்து விட்டார். அவர் அப்படி காலதாமதமாக வந்த காரணத்தால் அவருக்கு சீட் கிடைக்காமல் போயிருக்கிறது. ஆகவே மாண்புமிகு அமைச்சரவர்களும் இந்த துறையினரும் இந்த மாதிரி சமயங்களில் கொஞ்சம் பரிவு காட்ட வேண்டும்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இன்டர்வியூக்கு வந்திருந்தாலும் இடம் கிடைப்பது உறுதியில்லை.

திரு. கே. எ. வகாப் : இன்டர்வியூ வந்தால் இடம் கிடைக்கும் என்று தான் நம்பிக்கொண்டிருக்கிறோம். அவர் அந்த நேரத்திற்குள் வந்திருந்தால் நிச்சயம் கிடைத்திருக்கும். இந்த மாதிரியான பரிதாபகரமான சூழ்நிலையில் இருப்பவர்களுக்கு சற்று மனிதாபிமான உணர்வுடன் இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வாலாஜாப்பேட்டை, வந்தவாசி போன்ற இடங்களில் உள்ள கால்நடை மருத்துவ மனைகள் செயல்பட்டு வருகின்றன. அங்கே காளைகளை வைத்துப் பராமரிப்பதற்கு வேண்டிய வசதிகள் இருக்கின்றன. அந்த இரண்டு நிலையங்களையும் அபிவிருத்தி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1972 மார்ச் 27] [திரு. கே. எ. வகாப்]

கோழிப்பண்ணைகள் குறைந்து வருகின்றன. ஆனால் கோழியின் தேவை, முட்டையின் தேவை அதிகமாகி வருகின்றன. இன்றைய தினம் உயர்ந்தவர்கள் என்று சொல்லுகிறவர்கள் கூட கோழி முட்டை சாப்பிடுகிறார்கள். கோழி முட்டை சைவ உணவில் சேர்ந்து விட்டதால், அது கிடைக்காமல் விலை அதிகமாகி இருக்கிறது. கிராக்கியும் அதிகமாக இருக்கிறது. ஆகவே, அதனுடைய வளர்ப்பில் அதிகக் கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

காட்டுப்பாக்கத்தில் இருக்கும் ஆட்டுப்பண்ணை மிகவும் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. சில நேரங்களில் கஷ்டம் வந்தாலும், ஆராய்ச்சி செய்து அதை விரிவு படுத்துவதற்கு அரசாங்கம் வேண்டிய வழிவகைகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆட்டு இறைச்சி உற்பத்தியை நாம் அதிகரிக்கவேண்டும். நம்முடைய நாட்டில் வளரும் ஆட்டின் இறைச்சி நல்ல ருசியாக இருப்பதாக வெளிநாட்டில் இருப்பவர்கள் சொல்கிறார்கள். ஆகவே, அதிகமான அளவில் ஆடுகளை வளர்த்து நமக்குத் தேவை போக மீதம் இருந்தால் வெளிநாடுகளுக்கு பேக் செய்து அனுப்பலாம். அந்த முறையில் வேண்டிய முயற்சிகளை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக, இந்தத் துறையின் பணி நல்ல முறையில் இருக்கிறது. அதை மக்களுக்கு புரிந்து கொள்ளவேண்டும். அரசும் மக்களுக்கு புரிந்துகொள்ள வழிவகை செய்யவேண்டும் என்று சொல்லிக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி : தலைவரவர்களே, இந்த மானியத்தின் மீது விவாதத்தில் கலந்து கொண்டு சில கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பினைக் கொடுத்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

முதன்முதலாக, இந்த அமைச்சர் அவர்கள் இந்தத் துறையை ஏற்றுக்கொண்ட பிறகு, அதிலே நல்ல கவனம் செலுத்தி பாராட்டத் தக்க வகையில் அவர்கள் செயல்படுகிறார்கள் என்பதை நான் நன்றாக அறிந்து இருக்கிறேன். அதை வைத்துக்கொண்டு தான் ஒரு சில கருத்துக்களை இந்த நேரத்தில் சொல்வதால் பயன் இருக்கும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

[திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி] [1972 மார்ச் 27

இந்தத் துறையிலே ஒரு நிர்வாக மாறுதல் 70 ஆரம்பத்தில், 69 கடைசியில் செய்யப்பட்டது. இந்த மாறுதல் செய்யப்படுவதற்கான அவசியம் என்னவென்றால், நல்ல அருமையான திட்டங்கள் இருக்கின்றன, அதை நல்ல முறையில் அமுல்படுத்துவதற்கும், செயல் படுத்துவதற்கும் வேண்டிய திறன்படைத்த அதிகாரிகள் இருந்தும் கூட, அந்தத் திட்டங்களின் பயன்கள் எல்லாம் மக்களுக்குப் போய் கிடைக்கவில்லை என்ற ஒரு குறை இருந்தது. அதன் காரணமாகத் தான் அந்த நிர்வாக முறையிலே இருக்கக்கூடிய குறைபாடுகளை நீக்க வேண்டுமென்று, அந்தக் குறைகள் களையப்பட வேண்டுமென்று அந்த நிர்வாகச் சீர்திருத்தத்தை அந்த நேரத்தில் கொண்டு வந்தார்கள். ஆனால் அந்த நிர்வாகச் சீர்திருத்தத்தைக் கொண்டு வந்ததற்குப் பிறகும், அந்தக் குறைகள் முழுவதும் களையப்பட்டு விட்டனவா, நாம் எந்தப் பயனை எதிர்பார்த்து அந்த நிர்வாகச் சீர்திருத்தத்தைச் செய்தோமோ அந்தப் பயன் கிடைத்து விட்டதா என்று பார்க்கும் போது, நிச்சயமாக இல்லை என்று தான் சொல்ல வேண்டும். நம் முடைய எண்ணம் நோக்கம், நல்லதாக இருக்கிறது. நல்ல நிர்வாக அமைப்பைப் புகுத்துவதன் மூலம் நம்முடைய திட்டங்களின் பலன் மக்களுக்குப் போய்ச் சேர வேண்டுமென்று பார்க்கிறோம். நாம் நிர் வாகத்தைச் சீர்திருத்தியமைத்துங்கூட இன்னும் அவர்களுக்கு அந்தப் பயன் போய்ச் சேரவில்லை என்பதையும் நாம் நன்றாக உணர்ந்து இருக்கிறோம். எனவே, நாம் பழையபடி நிர்வாக சீர்திருத்தம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. அந்த நிர்வாகச் சீர் திருத்தம் எப்படி இருக்க வேண்டுமென்பதை ஆராய நிர்வாகச் சீர் திருத்தக் குழு ஒன்றை இந்த டிபார்ட்மெண்டுக்கு நியமிக்க வேண்டும். இதனால் நம்முடைய திட்டங்கள் செயல்படுத்துவதற்கு தாமதம் ஆனாலும் பரவாயில்லை. இப்போது இருக்கும் நிர்வாக முறை மூலம் மக்களுக்குத் தேவையான பலன்கள் கிடைக்காமல் பாழாய்ப் போகின்றன என்ற நிலைமை இருப்பதால், அமைச்சர் அவர்கள் உடனடியாக நிர்வாகச் சீர்திருத்தக் குழு ஒன்றை அமைத்து, அந்த நிர்வாகச் சீர்திருத்தக் குழு எந்த முறையில் இந்த நிர்வாகத்தை திருத்தியமைத்தால், சீர்திருத்தியமைத்தால் இந்தத் திட்டங்களின் பலன் மக்களுக்குப் போய்ச் சேரும் என்று கண் டறிந்து கூறும் வகையில் அந்தக் குழுவின் பணிகள் இருக்க வேண்டு மென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

1972 மார்ச் 27] [திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி]

இப்போது கூடப் பார்க்கிறோம். பால் உற்பத்தியாகும் வரையில் ஒரு அமைச்சர், ஒரு துறை இருக்கிறது. பால் உற்பத்தி தொடங்கிய பிறகு, இன்னொரு அமைச்சர், இன்னொரு துறை இருக்கிறது. இப்படி 2 துறை, 2 அமைச்சர்கள் அவசியமா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதன் மூலம் நாம் எதைப் பெற வேண்டுமென்று நினைக்கிறோமோ, அது கிடைக்கிறதா என்று பார்க்க வேண்டும். இதைப்போல் எத்தனையோ சொல்லலாம். முன்பெல்லாம் வேடிக்கைக்காகச் சொல்வார்கள், கோழிக்கு ஒரு ஆபீசர், முட்டைக்கு ஒரு ஆபீசர், என்று ரொம்ப வேடிக்கையாகச் சொல்வார்கள். இன்று அதைப்போல் பால் உற்பத்திக்கு ஒரு அமைச்சர், ஒரு துறை, பால் உற்பத்திக்குப் பிறகு இன்னொரு அமைச்சர், இன்னொரு துறை வேண்டுமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், இந்த நிர்வாக அமைப்பைச் சீர் திருத்தி யமைக்கவேண்டுமென்பதற்காகத் தான் சொல்கிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய வெங்கடசாமி அவர்கள் சொன்னார்கள் சப்-சென்டர்கள், அனிமல் ஹஸ்பன்டரி டிபார்ட்மெண்ட், பஞ்சாயத்து யூனியன் கண்டிரோலில் இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அது அவசியமா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த நிர்வாக அமைப்பில் பெருத்த சிக்கல்கள் இருக்கின்றன. இதை உணர்ந்து இந்த நிர்வாக அமைப்பை மாற்ற வேண்டும். நாம் பெரியதொரு மாறுதலைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மாநிலத்தை எடுத்துக் கொண்டால் கால்நடை வளர்ப்பில், நான் ஆரம்பத்தில் சொன்ன மாதிரி, நமக்கு வேண்டிய திறன் படைத்த அதிகாரிகள் இருக்கிறார்கள். நிறையக் கால்நடைகள் இருக்கின்றன. இருந்தாலும் இந்தக் கால்நடை வளர்ப்புத் துறையில் நாம் மற்ற மாநிலங்களை விட பின்தங்கி இருக்கிறோம் என்று சொல்ல முடியும். நிச்சயமாக மற்ற மாநிலங்களை விட நாம் அபிவிருத்தி செய்து விட்டோம் என்று சொல்ல முடியாது. இதற்கு முக்கிய காரணம் நிர்வாகத்தில் இருக்கும் குறைபாடுகள் தான். ஆகவே, இந்த நிர்வாகத்தில் இருக்கும் குறைபாடுகளை நீக்குவதற்கு என்னென்ன வழிவகைகள் செய்ய வேண்டுமோ, அவற்றை அமைச்சர் அவர்களும், அரசும் கவனத்தில் கொண்டு, அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி] [1972 மார்ச் 27

இரண்டாவதாக, என்னுடைய மாவட்டத்தைப் பற்றி ஒரு வார்த்தை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இராமநாதபுரம் மாவட்டத்தில் ஏராளமான கால்நடைகள் இருக்கின்றன. அதிலும் குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆடுகள் நிறைய இருக்கின்றன. மற்ற இடங்களில் இருக்கும் ஆட்டின் இறைச்சியை விட, இந்த மாவட்டத்தில் இருக்கும் ஆட்டிறைச்சி மிகவும் ருசியாக இருக்கிறது என்று சொல்வார்கள். அந்த முறையில் அங்கு சாதாரணமாக ஏராளமான கால்நடைகள் இருக்கக்கூடிய அந்த இடத்தில் இனிமேல் கால்நடைகளை மிகவும் அதிகமாக வளர்ப்பதற்கு கால்நடைப் பண்ணைகளை அந்தப் பகுதியில் நாம் அவசியம் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு வேண்டிய நல்ல சூழ்நிலைகள் அங்கே இருக்கின்றன. அவைகளெல்லாம் இது வரையில் நல்ல முறையில் பயன்படுத்தப்படவில்லை.

இன்னொன்றும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கேரளாவிலிருந்து ஏராளமாக முட்டைகள் வந்து கொண்டிருக்கின்றன. நாமும் முட்டைகள் உற்பத்தி செய்வதற்கு எத்தனையோ ஸ்தாபனங்களை வைத்திருக்கிறோம். அப்படியிருந்தும்கூட கேரளாவிலிருந்து வரக்கூடிய முட்டைகள் மிகக் குறைந்த விலையில் விற்பதால், அந்த முட்டைகளுக்குத்தான் மார்கெட் இருக்கிறது, நம்முடைய முட்டைகளுக்கு மார்க்கெட் இல்லை. கேரளா முட்டைகளை என்ன விலைக்குக் கொடுக்கிறார்களோ, அதைவிடக் குறைவான விலைக்கு நாம் கொடுக்க முடியாதது ஏன்? அதற்கான காரணங்கள் என்ன என்பதை நாம் கண்டறிய வேண்டும். சில இடங்களில் கிராமங்களில் முட்டைகள் உற்பத்தி செய்யப்பட்டாலும் கூட, உற்பத்தியான முட்டைகளை விற்பனை செய்வதற்கு வேண்டிய வசதிகள் இல்லை. 10, 15 மைல் கால்நடையாக நடந்து வந்து தான் அவர்கள் பக்கத்திலுள்ள பெரிய ஊர்களுக்குக் கொண்டு வந்து சேர்த்து விற்கிறார்கள். எங்கெங்கே முட்டைகள் தமிழகத்தில் கிடைக்கின்றனவோ, அவற்றை யெல்லாம் ஒன்றாகச் சேகரித்துத் திரட்டி, தேவையான இடங்களில் விற்பனைக்குக் கொண்டுபோய்க் கொடுக்கும் அளவுக்கு ஒரு பெரிய பரந்த ஏற்பாட்டைச் செய்தால், நலமாக இருக்கும். கிராமங்களில் முட்டைகளை உற்பத்தி செய்வதற்கு வேண்டிய முயற்சிகளைத் தீவிரமாக எடுத்துக் கொண்டால், கிராம மக்களுக்கு குடும்பத்தை நடத்திச் செல்ல ஒரு தொழில் நடத்துவதற்கு ஏற்ற வாய்ப்பாக இருக்கும் என்று நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

1972 மார்ச் 27] [திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி]

அடுத்தபடியாக, கால்நடை உதவியாளர்களைப் பற்றி ஒரே ஒரு வார்த்தை மட்டும் சொல்லிக் கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ள விரும்புகிறேன். இப்பொழுது 1,968 சப்-சென் டர்ஸ் இருக்கின்றன என்று நினைக்கிறேன். ஒரு வேளை அது சரியான குறிப்போ என்னவோ சரியாகத் தெரியவில்லை. அதிலே பாதி சப்-சென்டர்களில்தான் அவர்களை வேலைக்குச் சரியாக உபயோகப்படுத்தி வருகிறார்கள் என்று நான் அறிகிறேன். மிச்சம் பாதி சப்-சென்டரில் அவர்களை சரிவர வேலைக்கு பயன்படுத்துவதில்லை என்றும் தெரிகிறது. இதற்கு முன்பு ஐ.சி.டி.பி. என்ற ஒரு ஸ்கீம் இருந்தது. அந்த ஸ்கீம் இப்பொழுது இல்லை. அதற்குப் பதிலாக "ஆபரேஷன் ஃப்லட்" என்ற ஒரு புது ஸ்கீம் வைத்திருக்கிறார்கள். அதற்காக மத்திய அரசாங்கத்திடமிருந்து ரூ. 8.88 கோடி மான்யம் வழங்கப் படுகிறது என்று நான் நினைக்கிறேன். ஒரு வேளை ஐ.சி.டி.பி. ஸ்கீமுக்குப் புதுப் பெயர் வைத்து "ஆபரேஷன் ஃப்லட்" என்ற பெயரில் இந்தத் திட்டம் செயல்படுகிறதோ என்று நான் நினைக் கிறேன். இப்படி ஒரு துறையிலிருந்து இன்னொரு துறைக்கு மாற்றப் படுகிறது. அப்பொழுது அதற்கு வேண்டிய புதிய அலுவலர்களை யெல்லாம் நியமிக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அது வேண்டுமா என்பது பற்றிச் சிந்திக்க வேண்டும். அந்தத் துறையிலேயே பணியாற்றுகின்றவர்களை வைத்துக் கொண்டு இந்த வேலையை அவர்களிடத்திலிருந்தே வாங்க முடியாதா என்பதை ஆரார்ய வேண்டும். அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய ஊதியம் போதாது என்ற குறை இருந்து கொண்டு வருகிறது. அந்தக் குறையையும் நிவர்த்தி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, நம்முடைய கால் நடை வளர்ச்சி சம்பந்தமாக இந்த மான்யத்தின்கீழ் ஏறக்குறைய ரூ. $4\frac{1}{2}$ கோடி தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது மிகவும் குறைந்த தொகை என்பதை நான் முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால் நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த மட்டில், வேளாண்மைக்காக வேளாண்மை செழிப்புக்காக கால்நடைச் செல்வம் வளர்ச்சி பெறுவது மிகவும் அவசியமாகும். அந்த முறை யில் பார்க்கும் பொழுது நம்முடைய மாநிலத்தில் கால்நடைச் செல்வம் வளர்ச்சி எதிர்பார்க்கின்ற அளவுக்குத் திருப்திகரமாக இல்லை என்பதை ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது. கால்நடை

வளர்ச்சிக்குப் பலவிதமான திட்டங்களைத் தீட்டப்பட்டிருந்தாலும் கூட, சிறந்த முறையில் கிராமப் பகுதியிலுள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் அதன் பங்கை சீராக பெறக்கூடிய முறையில் பொருளாதார வசதி போதாத நிலைமையில் இருக்கிறது. சாதாரணமாக ஒரு நல்ல மாடு வாங்க வேண்டுமென்றால் ரூ. 1,000-க்கு குறையாமல் தேவைப் படுகிறது. அந்த முறையில் திட்டத்தைத் தீட்டி கால்நடைகளைப் பெற்று வளர்த்தால்தான், கால்நடைகள் வளர்ச்சி அடைய முடியும். அது சம்பந்தமாக அதிகமான நிதியை இதற்காகக் கடனாகவும் ஒதுக்கி, மானியத் தொகையை ஓரளவுக்கு அளித்து, கிராமத்திலுள்ள சாதாரண விவசாயிகள் அவர்கள் வீட்டில் கால்நடைகளை வைத்து வளர்ப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அவர்களுக்கு வேறு விதமான தொழில் இல்லை என்றால், இரண்டு பால் மாடுகளை வைத்துக் கொண்டால் அவர்களுடைய குடும்பத்தை வைத்து வாழ்க்கை நடத்துவதற்குப் போதுமான வருமானம் கிடைக்கும்.

அமைச்சர் அவர்கள் இந்த அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்கள். சாதாரணமாக ஒரு மனிதனுக்கு நாள் ஒன்றுக்கு அரை முட்டை தேவைப்படுகிறது என்று வைத்துக் கொண்டால் 700 கோடி முட்டைகள் தேவைப்படுகின்றன நம் மாநிலத்திற்கு. வெளியிலிருந்து வருகிற முட்டைகளையும் சேர்த்துப் பார்த்தால் 35 கோடி முட்டைகள் தான் நாம் உபயோகப்படுத்திக் கொண்டிருக்கிறோம். அந்த முறையில் பார்க்க வேண்டுமானால் இன்னும் நாம் முட்டைகளை அதிகமான அளவுக்கு உற்பத்தி செய்ய வேண்டும். அமைச்சர் சொல்கிறபடி 700 கோடி முட்டைகள் தேவைப்படுகிறது என்றால், ஒவ்வொரு கிராமத்திலும் 4, 5 கோழிப்பண்ணைகளாவது ஏற்படுத்துவதற்கு வழி வகைகள் செய்யவேண்டும். பல இடங்களில் இப்பொழுது கோழிப் பண்ணைகள் நன்றாகத் தான் நடந்து கொண்டிருக்கின்றன. குடும்பத்திற்குத் தேவையான வருமானம் அளிக்கக்கூடிய முறையில், அதே சமயத்தில் நாட்டிற்குத் தேவையான முட்டைகளை உற்பத்தி செய்யக் கூடிய விதத்தில் அந்தப் பண்ணைகள் அமைந்திருக்கின்றன. மேலும் பரவலான முறையில் அம்மாதிரிப் பண்ணைகளை கிராமந்தோறும் அமைத்து, அரசாங்கம் கடனாகவும், மானியமாகவும் நிதி உதவி செய்தால் கிராம மக்கள் தங்களுடைய குடும்பத்தை நடத்திச் செல்ல வருமானமும் கிடைக்கும், நாட்டுக்கு வேண்டிய முட்டைகளும் உற்பத்தி செய்யப்படும். இப்பொழுது கூட நம்முடைய மாநிலத்தில் கப்பலூர் போன்ற இடங்களில் கோழிப் பண்ணைகள் இருக்கின்றன.

அங்கெல்லாம் குஞ்சு பொறிப்பதற்கு இயந்திரத்தின் மூலம் ஏற்பாடு செய்து கொண்டு வந்திருக்கிறார்கள். கிராமங்களில் இன்னும் அதிகப் படியான கோழிப் பண்ணைகள் ஆரம்பிப்பதற்கு விவசாயிகளுக்கு மான்ய அடிப்படையில், கடன் அடிப்படையில் நிதி உதவி செய் வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களுடைய குடும்பத்திற்கு வேண்டிய வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளவும், நாட்டுக்கு வேண்டிய முட்டைகளை உற்பத்தி செய்து கொடுக்கவும் அது ஏதுவாக இருக்கும்.

இந்தக் கால்நடையைப்பற்றிய அறிக்கையில் கூட கூறப்பட்டிருக் கிறது. சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், இரண்டு, மூன்று மாவட்டங்களில் கால்நடை வளர்ச்சிக்கு நான்கில் ஒரு பங்கு மான்யத் தொகை கொடுத்து, கடனாகவும் தொகை கொடுத்து உதவி செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எங்கள் மாவட்டத்தில் பார்க்கும்பொழுது, இதற்காக ஒதுக்கப்பட்ட பணம் கூட இன்னும் அதிகமாகச் செலவழிக்கப்படவில்லை. மான்யம் ஒதுக்கப்பட்டிருந்தா லும் கூட கூட்டுறவுச் சங்கங்கள், நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கி கள் மூலமாக இதற்கு வேண்டிய கடன் வசதி ஏற்பாடு செய்யப் பட்டதாகச் சொல்லியிருந்தும், கடன் கிடைக்கவில்லை. சிறு விவ சாயிகளுக்குக் கால்நடைகள் வாங்குவதற்குக் கடன் வழங்குவதற்கு அந்த நிறுவனங்கள் தயங்குகின்றன. அரசாங்கம் இதில் விசேஷ கவனம் செலுத்தி, அவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். அரசாங்கம் இதற்காக மான்யம் ஒதுக்கியும், அவர்கள் அந்த வசதியைப் பயன்படுத்த முடியாத நிலை இருந்து கொண்டிருக் கிறது. அவர்களுக்குக் கடன் கிடைப்பதில்லை. எங்களுடைய வட் டாரத்தில் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சீக்கிரம் அவர்கள் அதற்கான உதவி பெற்று, பயனடைவதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடை வைத்தியத்தில் செயற்கை முறையில் கருத்தரிக்க ஏற்பாடுகள் சரியான முறையில் நடைபெறாததால், அதன் எண்ணிக்கை குறைந்து கொண்டு வருகிறது. அதற்குக் காரணம் பகுதி நேர ஊழியர்கள் என்று சொல்லி பஞ்சாயத்து யூனியனில் அம்மாதிரி ஆட்களை ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதனால் காலா காலத்தில் செமென் வந்து சேருவது கிடையாது. ஆகவே காலாகாலத்தில் சப்-சென்டர்களுக்கு செமன் போய்ச் சேரக்கூடிய நிலைமையில், வான் வசதியோ அல்லது மோட்டார் சைகிள் வசதியோ ஏற்படுத்திக் கொடுத்தால், காலாகாலத்தில் சப்-சென்டர்களுக்கு

செமன் போய்ச் சேருவதற்கு ஏதுவாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கால்நடை வைத்தியத்துறை பற்றிய அறிக்கையில் ஒரு கால்நடை மருந்தகத்திற்கு ரூ. 2,000 வரை செலவழிக்கலாம். ஒரு சப்-செண்டருக்கு ரூ. 500 செலவழிக்கலாம் என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால், அந்த ரூ. 2,000-த்தையும் சரியான முறையில் பயன்படுத்த முடிய வில்லை. சப்-செண்ட்டர்களுக்கு 500 செலவழிக்கலாம் என்று இருந் தாலும், அதற்கு வேண்டிய மருந்துகள் அனுப்புவதில்லை. கிராமத்தி லுள்ள விவசாயிகளுக்கு மருந்தக்கத்தில் மருந்துகள் இல்லை என்றால், அவர்கள் வெளியில் போய் வாங்கிக் கொண்டு வந்து கால்நடை களுக்கு வைத்திய உதவி செய்துகொள்ள முடியவில்லை. மேலும் மருந்தகங்களுக்குக் கால்நடைகள் நடக்க முடியாத நிலைமையில் இருந்தால், அவைகளை அங்கே கொண்டு செல்ல முடியவில்லை. அவைகளை மருந்தகங்களுக்குக் கொண்டு போய் வைத்தியம் செய்வதற்கு முக்கியமான மருந்தகங்களிலாவது ஆம்புலன்ஸ் வேன் வசதி செய்துதர ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆங்காங்கு விவசாயிகள் கால்நடைப் பண்ணைகள் அமைத் திருப்பதுபோல், ஒரு விவசாயி 10, 20 ஆடுகளை வைத்துக் கொண்டு பண்ணை நடத்தினால், அவர்களுடைய குடும்பத்திற்கு வருமானம் வரு வதற்கு ஏதுவாக இருக்கும். முன்னால் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் ஆடுகள் வளர்ப்பதற்கு கால்நடை இலாகாவின் சார்பில் கடன் கொடுக்கப்பட்டு வந்தது. இப்பொழுது அந்த முறை நிறுத்தப்பட்டு விட்டது. விவசாயிகளுக்கு அது ஒரு உபதொழிலாக அமைந் திருந்தது. ஆகவே, அரசு இதில் விசேஷ கவனம் செலுத்தி, கொஞ்சம் நிதியை அதிகமாக ஒதுக்கி, ஆடுகளை வளர்ப்பதற்கு கூட்டுப் பண்ணைகளை ஆங்காங்கு அமைத்துக் கொடுத்தால் நலமாக இருக்கும். ஆகவே, அதற்கு வேண்டிய நிதியை ஒதுக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கு முன்னால் பேசிய அங்கத்தினர் கூறியதுபோல், பால் உற்பத்திக்காக இருக்கக்கூடிய இலாகாவும், கால்நடை இலாகாவும் ஒன்று சேர்க்கப்பட்டு, ஒரே அமைச்சரின் கீழ் இணைந்து செயல்பட வேண்டும். இரண்டும் தனித்தனியாக இல்லாமல் ஒன்றாக இணைந் திருந்தால் நலமாக இருக்கும். இரண்டும் தனியாக இயங்க

வேண்டிய அவசியமில்லை. கால்நடை வளர்ப்பும், பால் உற்பத்தியும் ஒன்ருகச் சேர்ந்து இயங்கினுல்தான் அனுகூலமாக இருக்கும். இதில் அரசு விசேஷ கவனம் செலுத்தி, விவசாயிகள் கால்நடை செல்வத்தை வளர்ப்பதற்கும், நாட்டிற்கு வேண்டிய உணவு உற்பத்திக்கு ஊக்கம் அளிப்பதற்கும், அதிக நிதி ஒதுக்கி, அதற்கு வேண்டிய வசதிகளைச் செய்துதர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மாண்புமிகு தலைவரவர்களே, இந்தப் பேரவையின் முன்னர் கால்நடை வளர்ப்புத் திட்டத்திற்காகவும், கால்நடை மருத்துவப் பணிகளுக்காகவும் அரசால் கொண்டுவரப்பட்ட இந்த மானியத்தின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் 10 பேர் பல்வேறு விதங்களில் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லி, இந்தத் துறை மேலும் வளர வேண்டும், இதனுடைய பணி பரவலாக்கப்பட்டு அதன் பலன் எல்லோருக்கும் கிடைக்கச் செய்ய வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்திக் கூறியதற்காக, அவர்களுக்கெல்லாம் நான் நன்றி தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தத் துறையின் பணிகளை மாண்புமிகு அங்கத்தினர்கள் அனைவரின் கவனத்திற்கும் மிக நல்ல முறையில் கொண்டுவர வேண்டுமென்று விரும்பி இந்த ஆண்டு இதற்காக வெளியிடப் பட்டுள்ள இந்த அறிக்கையின் இறுதிப் பக்கங்களில் அச்சடிக்கப் பட்டிருக்கிற விளக்கப் படங்கள் கடந்த 5 ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், வளர்ச்சிகள் ஆகியவற்றை விளக்குவதோடு கால்நடை மருந்தகம் நடத்துகிற பணி; கால்நடை பெருக்கத்துக்காகவும், வளர்ச்சிற்காகவும், மாற்றத்திற்காகவும் நடைபெறுகிற பணி; கால் நடை நோய் தடுப்பதற்கான மருந்து உற்பத்தி, மருந்துகளைக் கால் நடை மருந்தகங்கட்கு வழங்குகின்ற விவரங்கள்; அதேபோல ஓசூர், ஒரத்தநாடு, புதுக்கோட்டை, அபிஷேகப்பட்டி, சாத்தூர், சின்ன சேலம், செட்டிநாடு, உதகமண்டலம் போன்ற இடங்களில் கால் நடை வளர்ப்புப் பண்ணைகளை வைத்து கால்நடைகளைப் பராமரித்து வருகிற பணிகள் அனைத்தும் நல்ல முறையில் விவரங்களோடு இந்த அறிக்கையில் தரப்பட்டிருக்கின்றன. ஏதோ ஒரு வகையில் கிராமத்தில் வாழ்கிற மக்கள் தங்களின் குறைகளைச் சொல்கிறபோது, மாண்புமிகு உறுப்பினர்கள் இதைப்போன்று குறைப்படுகிருர்கள் என்ற காரணத்தால்தான் இந்தத் துறை ஆற்றி வருகிற பணிகள் நமக்குத் தெரிய வேண்டும் என்பதைவிட, மேலும் இந்தத்

துறையை விரிவுபடுத்த வேண்டும் என்ற நம்பிக்கையோடு இவை தரப்பட்டிருக்கின்றன.

கடந்த 4, 5 ஆண்டுகளாக இந்தத் துறையில் நடைபெற்றப் பணிகளை அரசு ஆராய்ந்து பார்த்து, இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்னாலேயே ஒரு ஆய்வுக் குழு அமைத்து சீர்திருத்தம் என்ற அடிப்படையில் 1970-ம் ஆண்டு தொடக்கத்திலிருந்தே இந்தத் துறையில் பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டு வருகின்றன. இந்தத் துறையில் சில தளர்ச்சிகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை விட ஐ.சி.டி.பி. திட்டத்தின் பலன் பரவலாகுமாறு "கீ வில்லேஜ் சென்டர்" முதலிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு அவைகளெல்லாம் கிராம மக்களிடத்தில் வரவேற்புப் பெற்று, கிராம மட்டத்தில் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டு வருகிறது.

மருத்துவ மனையை விரிவுபடுத்துவது என்ற முறையில் 1971–72-ம் ஆண்டிலே 20 இடங்களில் தொடங்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றி வருகிறது. இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்கள் தெரிவித்தார்கள், ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு மருத்துவ மனை துவங்கப்பட வேண்டுமென்று. ஒவ்வொரு கிராமத்திற்கும் இந்த கால்நடை மருத்துவ மனை வைப்பதற்கு ஆகும் செலவைக் கணக்கிட்டால், எல்லாக் கிராமங்களிலும் கால்நடை வளர்க்கக் கூடா தென்றுகூடச் சொல்லிவிடலாம். ஏனென்று சொன்னால் அந்தச் செலவு அதிகமாகி, இத் துறையின் பயனே குறைந்து போய்விடும். ஆகவே, 10, 20 கிராமங்களுக்கு ஒரு கால் நடை கிளை நிலையம் என்றும், ஒவ்வொரு ஒன்றியத்திற்கு ஒரு மருத்துவ மனை என்றும் ஒவ்வொரு நகரத்திற்கு ஒரு மருத்துவ மனை என்றும் வைத்துக் கொள்ளும் முறையே நல்லது. 25 ஆயிரம் கால் நடைகளுக்கு ஒரு மருத்துவ மனை என்னும் குறிக்கோள் அந்தக் கால்நடைகளைப் பாதுகாப்பதற்கு வசதியாக இருக்கும். இது ஓரளவிற்குச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த 4-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏறத்தாழ 8 கோடி ரூபாய்க்கான வளர்ச்சித் திட்டங்கள் ஏற்கனவே மத்திய அரசால் ஒத்துக் கொள்ளப்படும் இந்தத் திட்டம் கடைசியில் சுருங்கி 4 கோடி (400 லட்சம்) ரூபாய் அளவிற்கு வந்து, இந்த 4-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் கால்நடை வளர்ப்பில் புதிய திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டுமென்ற அடிப்படையில் தமிழ்நாட்டுக்கு

1972 மார்ச் 27] [திரு. க. அன்பழகன்]

இந்தத் தொகை ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. எனவே, இந்த 4 கோடியில் கடந்த 2 ஆண்டுகளில் செலவழிக்கப்பட்ட அளவை விட இந்த ஆண்டு அதிகமாகச் செலவுசெய்து பல புதிய பணிகள் செய்யப்படவிருக்கின்றன.

நம்முடைய அங்கத்தினர் திரு. வேங்கடசாமி அவர்கள் இதன் உள்ளே தரப்பட்டிருக்கிற விளக்கத்துடன் தரப்பட்டிருக்கிற பட விளக்கம் மாறுபட்டு இருப்பதையும் சொன்னார்கள். அது மாறுபாடு அல்ல. அது ஒரு குறிப்பிட்ட பிழைத் திருத்தத்தால் ஏற்பட்ட சிறு தவறு. அதாவது இங்கே கால்நடைகள் தரம் உயர்வதற்காக செயற்கை முறையில் கருவூட்டப்பட்ட கால்நடை எண்ணிக்கை 5-ம் சார்ட்டில் பட விளக்கத்தில் தரப்பட்டிருப்பது, 5,67,968 என்ற எண்ணிக்கையாகும். ஆனல் டோடல் இன்செமினேஷன் என்ற முறையில் 1970–71-ம் ஆண்டுக்குத் தரப்பட்டிருக்கிற எண்ணிக்கை 17,55,879 ஆகும். அதற்குக் காரணம் இந்தச் சார்ட்டு 5-ல் கொடுக்கப்பட்ட விளக்கம் முழுவதும் எருமைகளைப் பற்றியதே ஆகும். ஆனல் 17,55,879 என்று தரப்பட்டிருக்கிற எண்ணிக்கை பசுக்களையும் சேர்த்துத் தரப்பட்டதாகும். அது பற்றித் தெளிவாக "எருமை மட்டும்" என்று தரப்படாததற்காக நான் வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த வகையில் 11,87,911 செயற்கை முறை கருத்தரிப்பு 1970–71-ல் நடைபெற்றிருக்கிறது. 1971–72-ல் இந்த எண்ணிக்கைக்குக் குறையாத வகையில் செயற்படுத்த ஊக்கமும், ஆக்கமும் அளிக்கப்பட்டு வருகிறது. இப்படி யெல்லாம் செய்கிற செயற்கை முறை கருத்தரித்தல் மூலம் ஐந்திலொரு பங்கு பயன் தராமல் போகாது. ஏனென்று சொன்னல் அந்த முறையின் மூலம் எல்லாமே தரமுள்ள கருப்பெற்று விடுகிறதென்று சொல்லிவிட முடியாது. அப்படி இருக்கிறபோது ஐந்துக்கு ஒன்று குறையாது செயற்கைக் கருவூட்டல் வெற்றி பெறுகிறது. சில வேளைகளில் செயற்கை முறை கரு உருவாகாமல் போனல் மறுபடியும் இந்தக் கருவூட்டல் மூலம் கருத்தரிக்கச் செய்ய வேண்டியிருக்கிறது. ஆனல் பொதுமக்கள் இந்த செயற்கை முறை கருவூட்டல் மூலம் அவர்களுடைய கால்நடைகளை விருத்தி செய்ய வேண்டுமேயென்று வேறு முறைகளில் கருவூட்ட நினைத்தால் அது வேண்டாமென்று சொல்வேன். மேலும் உதவித் தொகைக்காக (Subsidy) நல்ல கன்று பெற முன்வருவார்கள் என்று சொன்னல் அந்தக் கன்றுகளை வளர்க்க உதவித் தொகை அளிக்கிறபோது அதற்கு ஒரு அளவே

இல்லாமல் போகிறது. இந்த அரசு அதையும் செய்து கொண்டு உயர் இன விருத்தியும் செய்ய முடியாது. எனவே நாடு முழுவதும் பரவலாக இப்படிச் செய்ய வேண்டுமென்ற நோக்கம் இருக்கிற காரணத்தால் எல்லா மாவட்டங்களிலும் ஒவ்வொரு பஞ்சாயத்து ஒன்றியத்திலும் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அதேபோல நம் நாட்டுக் கால்நடைகளைச் செயற்கை முறை கருவூட்டல் மூலமே இங்கேயே இனவிருத்தி செய்வது இன்றியமையாததாகும். ஏனென்று சொன்னால் "கால்நடையின் பயன் பெருக பழைய இனம் பட்டுப் போக வேண்டும், புதிய இனம் பூக்க வேண்டும்". செயற்கைக் கரு முறையில் நம்முடைய கால்நடைகளின் தரம் மேலும் குறைவதற்கான நிலை, வருகிற காலங்களில் இல்லை என்ற நிலை ஏற்பட வேண்டும். முதலில் நல்ல தரமான வெளி நாட்டுக் காளைகளைக் கொண்டு வந்து நாட்டு மாடுகட்குக் கருத்தரிப்புச் செய்வதன் மூலம் முதலில் 40, 45 சத விகிதம் அளவுக்கு என்ற நிலையில் தரத்தை உயர்த்தலாம். பிறகு அந்தக் கன்று வளர்ந்து மறுபடியும் இந்த முறையைக் கையாள்வதன் மூலம் 60, 65 பங்கு அளவுக்குத் தரம் உயரும். அடுத்த தலைமுறைக் கன்று 75, 80 பங்கு அளவுக்குத் தரம் உயரும். இப்படிப் புதிய இனச் சேர்க்கையின் மூலம் தரத்தை மேலும் மேலும் உயரச் செய்வது வரவேற்கத் தக்கது மட்டுமின்றி, மிகவும் அடிப்படையான பணியாகும்.

ஆனால் மேல்நாட்டு இனக் காளைகளை வாங்க வேண்டுமானால் தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் தொடர்ந்து மத்திய அரசின் அனுமதியைக் கேட்க வேண்டியிருக்கிறது. மத்திய அரசு, அன்னியச் செலாவணியின் நெருக்கடி நிலைமைக் காரணமாக நமக்குத் தேவையாகும் அளவு அனுமதி தர மறுக்கிறது. ஆகவே அகில இந்திய அடிப்படையில் இறக்குமதி செய்யப்படுவதில் பத்தில் ஒரு பங்கு, இருபதில் ஒரு பங்குதான் தமிழகத்திற்கு ஒதுக்கப்படுகிறது. அதன் விவரங்கள் கூட இந்த அறிக்கையில் தரப்பட்டிருக்கின்றன. ஆகவே, நாம் முயற்சித்தாலும் கூட, அந்த முயற்சியில் முழு வெற்றி பெற முடியாது. அதனால் ஏற்கெனவே ஒரு தனியார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட இரண்டு ஜெர்சி காளைகளை 5,000 ரூபாய் வீதம் கொடுத்துத் தமிழக அரசு சுமார் பத்து நாட்களுக்கு முன்னர் வாங்கியுள்ளது. அதேமாதிரி இங்கே இறக்குமதியாகி, 10, 20 நாட்கள் வைத்துப் பரிசோதனை முடிந்து வேறு மாநிலங்களுக்கு அனுப்பி

1972 மார்ச் 27] [திரு. க. அன்பழகன்]

வைக்க இருப்பதில் நமக்கு ஒரு காளேயும், 9 பசுக்களும் கிடைக்கும் என்று தெரிகிறது. இப்படி ஒரு சிறு பங்கினைத்தான் நாம் பெற முடிகிறது.

அடுத்து, பால் பெருக்குத் திட்டத்திற்கு அகில இந்திய அடிப் படையில் மத்திய அரசினல் ரூ. 40 கோடி செலவிடத் திட்டமிடப் பட்டிருக்கிறது. தமிழ் நாட்டிற்கும் பால் பெருக்கத்திற்காக அதி லிருந்து ரூ. 10 கோடி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதன் அடிப்படையில், தமிழ்நாட்டில் கால்நடைத் தர வளர்ச்சியை நல்ல முறையில் விரிவுபடுத்தலாம் என்று நம்புகிறேன்.

அடுத்து, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சுப்பையா அவர் களும், மற்றும் பல சட்டமன்ற உறுப்பினர்களும் கால்நடை வளர்ச்சி வேகம் பெறுவதைப் பொறுத்துத்தான் பால் பெருக்குத் திட்டம் வெற்றிபெற முடியும் என்று தெளிவாக எடுத்துச் சொன்னூர் கள். பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கு அதிகமாகப் பால் தரக் கூடிய கால்நடைகளைப் பெருக்க வேண்டும். அதற்காகப் பல மேல்நாட்டுக் காளைகளையும், பசுக்களையும் கொண்டுவர வேண்டு மென்று திட்டமிட்டிருக்கிறோம். அவைகளைக் கொண்டுவந்து ஒசூர் பண்ணையில் வைத்து வளர்த்து மற்றப் பகுதிகட்கும் வழங்கச் செய்து பாலினைப் பெருக்க வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது. அதன் பொருட்டு, ஒசூர் பண்ணையை விரிவுபடுத்தி, தீவனத்திற்காக மேம் பாடடைந்த பசும்புல் உற்பத்தியைப் பெருக்கவும் நீர் வசதியைப் பெருக்கவும் ஏறத்தாழ 40 லட்சம் ரூபாய் செலவிடத் திட்டமிடப் பட்டிருக்கிறது. ஆகவே, ஒன்றோடொன்று தொடர்பு பெற்று, ஒரு பெரிய முன்னேற்றத்தை—வளர்ச்சியை மிக விரைவில் நாம் பெற முடியும் என்று நம்புகிறேன்.

அதேபோன்று ஆடு வளர்ச்சியின் முக்கியத்துவத்தைப் பற்றியும் இங்கே பல உறுப்பினர்களும் சொன்னூர்கள். ஆடுகளை வளர்ப் பதற்கு நமது நாட்டில் நல்ல வாய்ப்புகள் உள்ளன. மேலும் வாய்ப்புகளை அதிகரித்து, நல்ல இன ஆடுகளை—சேலம் மாவட்டத்தில் மேச்சேரி, சின்ன சேலத்தில் மைசூர் மாநிலத்திலிருந்து வரவழைக் கப்பட்ட மண்டியா இனம், இன்னும் இராமநாதபுரம் மாவட்டத் தைச் சார்ந்த கீழக்கரிசல் இனம்—வளர்ப்பதற்கான நடவடிக்கைகள்

[திரு. க. அன்பழகன்] [1972 மார்ச் 27

மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவைகள் தவிர கலப்பு கால் நடைப் பண்ணைகளிலும், அதாவது மற்ற ஆடு, மாடு வளர்க்கப்படு கின்ற பண்ணைகளிலும் இந்த சிறப்பின ஆடுகளை வளர்க்கும் திட்டம் உள்ளது. இப்படிப்பட்ட ஆடுகளை நாம் பாலுக்காக வளர்க்க வில்லை. இறைச்சி, கம்பளி போன்றவற்றிற்காகவே இந்த ஆடுகளை வளர்த்து வருகிறோம். மேலும் ஆடுகள் வளர்ப்புத் திட்டத்தைப் பற்றிச் சிறந்த முறையில் ஆராய்ச்சி நடத்துவதற்காக சந்திநல்லா என்ற இடத்தில் ஒரு ஆராய்ச்சி நிறுவனத்தை அமைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இந்தத் துறையில் இன்றைக்கு நம்முடைய அங்கத்தினர்கள் அதிக நேரம் பேசுவதற்கு வாய்ப்பு இல்லாத காரணத்தால், அதிகமாகப் பேச முடியாமல் போய்விட்டது. அடுத்த முறை நிறைய வாய்ப்புக் கிடைக்கும் என்று நம்புகிறேன். இந்தக் கால்நடை வளர்ச்சிக்காக "லைவ் ஸ்டாக் போர்டு—கால்நடை வளர்ச்சி ஆலோசனைக்குழு" ஒன்று நியமிக்கப்பட்டிருக்கிறது. அதிலே சட்டமன்ற உறுப்பினர் களும் இந்தத் துறையின் பல்வேறு பிரிவுகளின் உள்ள தலைவர்களும் இடம் பெற்றிருக்கிறார்கள். அந்த ஆலோசனைக் குழு இந்த ஆண்டு இரண்டு முறை கூடியிருக்கிறது. ஒரு முறை புதுக்கோட்டையிலும், ஒரு முறை ஒரத்தநாட்டிலும் கூடி, 3–4 மணி நேரம் விவாதித்து, பல அரிய ஆலோசனைகளை வழங்கியிருக்கிறது. இது இந்தத் துறையிலே பயன்தரும் ஒரு காரியமாகும். மேலும் இந்தக் குழுவிலுள்ளவர்கள் எந்த நேரத்திலும், எந்தப் பண்ணைக்கும் முன் அறிவிப்புடன் சென்று பார்வையிட அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது.

முன்னறிவிப்புடன் செல்ல வேண்டுமென்று ஏன் சொல்கிறேன் என்றால் குழுவிலே உள்ள சட்ட மன்ற உறுப்பினர்களும், மற்றவர் களும் அங்கே செல்கின்றபோது பண்ணை அதிகாரிகள் ஏதாவது ஒரு காரணத்தோடு வேறு இடங்களுக்குச் சென்றிருந்தால், அவர் களுக்குச் சங்கடமான நிலைமை ஏற்படக்கூடும். ஆகவே, முன்னறிவிப் புடன் சென்றால் பண்ணையிலுள்ளவர்கள் தயாராக இருப்பார்கள்.

அண்மையில் நமது எஸ்டிமேட் கமிட்டியைச் சேர்ந்த அங்கத் தினர்கள் வாணியம்பாடியிலுள்ள கால்நடை மருத்துவமனைக்குச் செல்வதாகத் தேதியும் அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி அந்த மருத்துவ மனையைச் சேர்ந்தவர்கள் அவர்களின் வருகைக்காக அன்று வேலை நேரம் வரை காத்திருந்தார்கள். ஆனால் எஸ்டிமேட்

1972 மார்ச் 27] [திரு. க. அன்பழகன்]

கமிட்டியினர் அன்று போகவில்லை. அடுத்த நாளும் மருத்துவ மனையைச் சேர்ந்தவர்கள் எஸ்டிமேட் கமிட்டியினர் வருவார்கள் என்று $1\frac{1}{2}$ மணி வரை காத்திருந்துவிட்டு, இனி வரமாட்டார்கள் என்று நினைத்துப் போய்விட்டார்கள். அதற்குப் பின்னர் எஸ்டிமேட் கமிட்டியினர் போய்ப் பார்த்துவிட்டு வருத்தத்துடன் திரும்பி வந்திருக்கின்றனர். அவர்களின் வருத்தத்தைப் பார்க்கின்றபோது இரண்டு நாட்களாகக் காத்திருந்தவர்களின் வருத்தத்தையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அப்படிப்பட்ட குறைபாடுகளைத் தவிர்ப்பதற்காகவே, முன்னறிவிப்புடன் சென்றால் நல்லது என்பதற் காகத்தான் முன்னறிவிப்போடு, எந்த நேரத்திலும், எந்தப் பண்ணைக் கும் சென்று பார்வையிடலாம் என்று தெரிவித்திருக்கிறோம்.

திரு. கா. வேழவேந்தன்: தலைவரவர்களே, அமைச்சரவர் களுக்குத் தவறான தகவலைத் தந்திருக்கிறார்கள். மதிப்பீட்டுக் குழு வட ஆர்க்காடு மாவட்டத்தில் இருந்தபோது, வாணியம்பாடி கால் நடை மருத்துவ மனைக்குச் செல்லும் நிகழ்ச்சி கொடுக்கப்பட்டது. கொடுக்கப்பட்ட தேதியில் மதிப்பீட்டுக் குழு அங்கே சென்றிருந்தது. அங்கே எங்களுக்குத் தரப்பட்ட தகவல், அதிகாரிகள் பூட்டிவிட்டு, சாப்பாட்டுக்குப் போய்விட்டார்கள் என்று சொன்னார்கள். அப்போது சுமார் $1\frac{1}{2}$ மணி இருக்கும். குறிப்பிடப்பட்ட தேதியில் தான் சென்றோமே தவிர, அடுத்த நாளில் அல்ல. நான் மதிப்பீட்டுக் குழுவின் தலைவன் என்ற முறையில் இதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இந்தத் துறையின் மூலம் எங்களுக்குக் கொடுக்கப்பட்ட தகவல், “மதிப் பீட்டுக் குழுவினர் வருவார்கள் என்று வெகுநேரம் காத்திருந்தார் கள்; நேரம் அதிகமாகிவிட்டதால், காலம் கடந்துவிட்டதால் இனி வரமாட்டார்கள் என்று போய்விட்டார்கள்” என்பதுதான். அந்த நிலை ஏற்பட்டதற்கு வருத்தம் தெரிவிப்பதற்காகவே நான் அதைப் பற்றி இங்கே குறிப்பிட்டேன். உறுப்பினர்கள் சூழ்நிலைகளைப் புரிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே, எந்தக் கால்நடைப் பண்ணையையும் சட்டமன்ற உறுப்பினர்கள் முன் கூட்டித் தெரிவித்துவிட்டு, பார்வையிடுவதாக இருந்தால் சிறப்பாக இருக்கும்; சிறந்த ஆலோசனைகளை வழங்கவும் வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு, இங்கே எல்லாப் பிரச்சனைகளுக்கும் பதில் சொல்லக் காலம் போதாது. அதனால் பிரச்சனைகளைக் கவனிக்கவில்லை என்று யாரும் கருத வேண்டாம்: எல்லாப் பிரச்சனைகளையும் கூர்ந்து கவனித்து, அரசாங்கம் தக்க நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் துறை இடைக்காலத்தில் கொஞ்சம் சோர்வு அடைந்திருந்தாலும், இப்போது அந்தச் சோர்வு நீக்கப்பட்டிருக்கிறது. இப்போது இந்தத் துறையின் பணி அதிக மாகி வருகிறது. எனவே இந்தத் துறையிலிருக்கும் இயக்குநர் ஒருவர் போதாது என்று கருதி, இன்றைக்கு ஜாயின்ட் டைரக்டர் (இணை இயக்குநர்) ஒருவரை நியமித்து, அவர் மூலம் வளர்ச்சித் திட்டங்களைச் செம்மைப் படுத்தவும், உடனடியாகக் காரியங்களைச் செய்வதற்கும் வழி செய்யப்பட்டிருக்கிறது.

அதோடு, இந்தத் துறையின் டிப்டி டைரக்டர்கள் எந்தப் பகுதி யிலே பொறுப்பேற்றிருக்கிறார்களோ அந்தப் பகுதியிலுள்ள எல்லாக் கிராமங்களிலும் இருக்கக்கூடியவர்கள், கோழிப் பண்ணை, பன்றிப் பண்ணை வைப்பதற்கும் அல்லது உயர் இன மாடுகளை வாங்கி வளர்ப் பதற்கும் ஊக்கம் ஏற்படுகின்ற வகையில் அதிக ஆர்வத்தோடு பணி யாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

அப்படி இந்தத் திட்டத்தை விரிவுபடுத்துகின்றபோது—இன்றைய தினம் திருச்சியைச் சுற்றிய பகுதியில் கோழி முட்டை உற்பத்தி பெருக் கப்பட்டு, அதனை விற்பனை செய்வதற்கான அமைப்பும் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. அங்கங்கே அதிகமான அளவுக்கு உற்பத்தி செய் வதற்கான ஏற்பாட்டைச் செய்கிறபோது உற்பத்தியாகிற முட்டை களைச் சேகரித்து ஒரு பொதுவான ஏற்பாடு மூலம் விற்பனை செய் வதற்கு—மார்க்கெட்டிங் பெசிலிடியை ஏற்படுத்துவதற்கும் ஏற்பாடு கள் செய்யப்பட்டு வருகின்றன. சென்னை நகரத்தைச் சுற்றி தினமும் 50 ஆயிரம் முட்டைகள் கிடைக்கக்கூடிய அளவுக்குக் கோழிப் பண்ணைகளை வளர்ப்பதற்கும், முட்டைகளை விற்பனை செய்வதற்கு மான வசதியைச் செய்து தரவும் திட்டம் இருக்கிறது.

ஈரோடு, கோயம்பத்தூர் பகுதியில் கோழி கூட்டுறவுச் சங்கங் கள் அமைக்கப்பட்டு முட்டைகள் உற்பத்தியாகத் தொடங்கியிருக் கின்றன. முட்டைகள் சேகரிக்கப்பட்டு தகுந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கவும் வழிவகை செய்ய வேண்டுமென்ற முயற்சி இருக் கிறது. மதுரை, விருதுநகர், கப்பலூர் பகுதியில் அந்தத் திட்டம்

1972 மார்ச் 27] [திரு. க. அன்பழகன்]

இருக்கிறது. ஆறு மாதங்களாக, ஏன் ஓராண்டுக் காலமாக இந்தத் திட்டம் நல்ல முறையில் மக்கள் ஆதரவோடு செயல்படத் தொடங்கியிருக்கிறது.

தென்னுற்காடு மாவட்டத்தில் ஸ்மால் பார்மர்ஸ் ஸ்கீம் என்பதாக சிறு விவசாயிகள் வளர்ச்சித் திட்டம் செயல்படுகிறது. இத் திட்டத்தின்படி தரமான மாடு வாங்குவதற்கு ரூ. 2,000 தரப்படுகிறது. 500 ரூபாய் உதவித் தொகையாகவும், 1,500 ரூபாய் கடனுகவும் பல்வேறு கிராமப் பகுதிகளில் உதவப்படுகிறது. இப்படி உயர்ந்த ரக மாடுகள் வளர்ப்புத் திட்டமும், ஆயிரக்கணக்கான கோழிகள் வளர்ப்புத் திட்டமும் செயல்படுத்தப்படுகிறது.

நான் தெரிவிக்க விரும்புவது எல்லாம் கோழி வளர்ப்பில் ஆர்வம் மக்களிடத்தில் பிறந்திருக்கிறது. நம்முடைய நாட்டிற்கு நல்ல சத்துணவு கிடைக்க இன்றையதினம் 700 கோடி முட்டை தேவைப்படுகிறது என்ருல் 35 கோடி தான் கிடைக்கிறது. நமக்குத் தேவையான முட்டையை ஆங்காங்கே உற்பத்தி செய்து கொள்வதற்கும், உற்பத்தியாவனவற்றை மார்க்கெட்டிங் பண்ணுவதற்கும் நல்ல முறையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

பல மெம்பர்கள் தெரிவித்தார்கள். உயர்ந்த ரகக் கோழியில் இன்றையதினம் ஹை லேன், ப்யூர் லேன் என்று இரண்டு வகைகள் இருக்கின்றன. ஹை லேன் கோழிகள் கொடுக்கப்பட வேண்டுமென்று பல உறுப்பினர்கள் கூடச் சொன்னுர்கள். ஹை லேன் ப்ரீடுக்கும், ப்யூர் லேன் ப்ரீடுக்கும் என்ன வேறுபாடு என்பதை இன்று காலேயில் கூட விசாரித்தேன். ஹை லேன் வகை என்பது—கொடுக்கிறபோது அப்படி இருக்கும்; ஆனுல் இன விருத்தியாகிறபோது மிகக் குறைந்த தரமானதாகக் கூட ஆகிவிடும் என்ருர்கள். மக்களிலே உயர்ந்த சாதி—தாழ்ந்த சாதி என்கிறபோது உயர்ந்த சாதியே தாழ்ந்த சாதிபோல மாறிவிடுவதைப்போலத்தான் இந்த ஹை லேன் இனமும் நிலேத்து என்றைக்கும் உயர்ந்த சாதியாக இருக்க முடியாது. ப்யூர் லேன் இனம் என்பது ஏறத்தாழ இன விருத்தியிலும் தன் தரம் காப்பாற்றக் கூடியதாகவே இருப்பதனுல் பெரும்பாலும் இந்த ப்யூர் லேன் இனமே அரசுப் பண்ணேயில் கொடுக்கப்படுவதாகச் சொன்னுர்கள். இவை நல்ல முறையில் ஓசூர் பண்ணே, கப்பலூர் பண்ணே, காட்டுப்பாக்கத்தில் உள்ள கோழிப் பண்ணே—ஆகியவற்றில் நல்ல முறையில் வளர்க்கப்பட்டு, அபிவிருத்தி செய்யப்படுகின்றன. மாவட்டந்தோறும் சிறுசிறு கோழிப் பண்ணேகளே

எக்ஸ்டென்ஷன் சென்டர் என்ற முறையில் நடத்தித் திட்டத்தை விரிவுபடுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பன்றி வளர்ச்சியைப் பற்றி திரு. வடிவேல் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அத் துறையில் ஒரு அங்கத்தினராவது அக்கறை காட்டியதற்கு நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நாட்டின் உணவுப் பஞ்சத்தை எதிர்காலத்தில் தீர்க்கப் போவது பன்றியே தவிர வேறு இனம் அல்ல. உணவுப் பஞ்சம், புரதச் சத்துப் பஞ்சம் ஆகியவற்றை நீக்குவதற்குப் பெரும் அளவில் உதவி செய்யக்கூடியது பன்றி இறைச்சிதான். பன்றிகள் பெரும் அளவில் இனப் பெருக்கம் செய்பவை. அவை உண்பது ப்யூர் வெஜிடேரியன் உணவுகள்தான்—காய்கறி—மரத்தூள்—கோதுமை மாவு—கடலை மாவு போன்ற உணவுகளே தான் கொடுக்கப்படு கின்றன. கருவாட்டு வாசனைக்காக பிஷ்மீல் என்பதாக கருவாட்டுத் தூள் சேர்க்கப்படுகிறது. பன்றி வளர்ப்பு ஒரு லாபகரமான தொழில்—தஞ்சை, புதுக்கோட்டை, திண்டுக்கல் போன்று இன்னும் பத்துப் பன்னிரண்டு இடங்களில் போர்க் க்ளப்புகள் ஏற்படுத்தப் பட்டு பன்றி உணவு பழக்கத்தில் வந்து கொண்டிருக்கிறது. அதை மேலும் விரிவு அடையச் செய்ய, தக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

நம்முடைய கால்நடை மருத்துவக் கல்லூரியும் அகில இந்தியா விலேயே மிகச் சிறந்த கல்லூரியாக இயங்கி வருகிறது. அதன் ஆராய்ச்சிப் பகுதிகளும் விரிவு அடைந்து வருகின்றன. அங்கே செய்யப்படுகிற ஆராய்ச்சியின் பயன்கள் மக்களுக்குக் கிடைக்கவும், நல்ல தரமான பன்றி, கால்நடை, கோழி இறைச்சி மக்களுக்குக் கிடைக்கவும் அங்கே ஒரு நிலையம் புதியதாகக் கட்டி திறக்கப் பட்டிருக்கிறது.

இராணிப்பேட்டை மருந்து உற்பத்தி நிலையத்திலும், புதிய மருந்துகள் கண்டுபிடிப்பதோடு, சிறந்த முறையில் நாட்டின் தேவையையும் நிறைவேற்றுகிறது. வெளி மாநிலங்களில் இருந்து வருகிற கால்நடைகளினால் இங்கே எந்தவித தொத்து நோயும் வந்துவிடக் கூடாது என்பதற்காகச் சுங்கச் சாவடிகள் அமைக்கப் பட்டு வெளி மாநிலத்துக் கால்நடைகள் வரும்போது அங்கே சில

1972 மார்ச் 27] [திரு. க. அன்பழகன்]

நாட்கள் வைக்கப்பட்டு, நோய்த் தடுப்பு ஊசி போட்டுப் பரிசோதனைகள் செய்யப்பட்ட பிறகே நம் மாநிலத்திற்குள் அனுமதிக்கப்படுகின்றன. அந்தத் திட்டம் இன்னும் 2 இடங்களுக்கு விரிவு படுத்தப்பட்டிருக்கிறது.

இப்படி ஒவ்வொரு துறையிலும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, குறிப்பாகக் கால்நடைத்துறையில் பணியாற்றுகிற வைத்தியர்களுக்கு மக்கள் நலத்துறையில் பணியாற்றுகிற வைத்தியர்களுக்கு அளிக்கும் சம்பளம் கொடுக்கப்பட வேண்டும் என்பது வற்புறுத்தப்பட்டது. பொதுவாக எல்லோருக்கும் ஒரே சம்பளம் என்கிற கொள்கையை நான் ஏற்றுக் கொள்கிறேன். எல்லோருக்கும் ஒரே சம்பளம் என்கிற கொள்கை இடம்பெறாத காலத்தில்—அவர்களுடைய படிப்பின் காலம், அதன் நுட்பத் தன்மை ஆகியவை கொண்டே சம்பளம் நிர்ணயிக்கப்படுகிறது. மக்கள் துறையில் பணியாற்றுகிறவர்கள் கால்நடைத்துறை மருத்துவப் படிப்புக்கு உள்ள காலத்தைவிட அதிகமாகப் படிக்கிறார்கள். படிக்கிற ஆண்டு வேற்றுமை இருப்பதுபோல—முறைகளும், அவற்றின் நுட்பத் தன்மையும் மாறுபட்டே இருக்கின்றன. இரண்டு பேர்களுக்கும் ஒருவிதமான பயிற்சிதான் என்பதும் கூட இல்லை. இடம் பெறும் தேர்வுக்கு அவர்களுக்கு எவ்வளவு மினிமம் மார்க் வேண்டுமோ அது இவர்களுக்குத் தேவையில்லை, இந்த வேற்றுமைகளின் காரணமாகச் சம்பளத்தில் இருக்கிற வேறுபாட்டையும் அடியோடு களைவது என்பது முடியாத காரியம். அதற்குப் பதிலாக அசிஸ்டென்ட் சர்ஜன் என்பதாக நல்ல தகுதி பெற்றவர்களுக்கு நூற்றுக்கு 20 பேர்களுக்குச் சிறப்புத் தகுதியின் அடிப்படையில் உயர்ந்த சம்பளம் வழங்கப்பட ஒரு திட்டம் இருக்கிறது. பதவியில் உள்ளவர்கள் குறிப்பிடத்தக்க அளவு மேல்நிலைக்கு வருவதற்கு வேறு சில வாய்ப்புகளும் அளிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

இறுதியாக அடிப்படையான பணியைச் செய்கிற கால்நடை உதவியாளர்கள்—கிராமங்களில் மக்களோடு தொடர்பு கொண்டு பணியாற்றக் கூடியவர்கள்—அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என்பதற்கும் முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. இன்றைக்குக் கால்நடை உதவியாளர்களாக 1,900 பேர்கள்

இருக்கிறார்கள் என்றால் அவர்களில் ஒரு 600 பேர்களை உடனடியாக நிரந்தரமாக்குவதற்கும், மற்றவர்களையும் படிப்படியாக நிரந்தர மாக்குவதற்கும் முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கால்நடை உதவியாளர்களை லைவ் ஸ்டாக் இன்ஸ்பெக்டர்களாகப் ப்ரமோஷன் செய்ய வேண்டும் என்று கோரி இருக்கிறார்கள். அசிஸ்டென்ட் க்ரேடு 2-ல் இருந்து க்ரேடு 1-க்குப் பலர் பதவி உயர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள். லைவ்ஸ்டாக் இன்ஸ்பெக்டராகப் ப்ரமோஷன் செய்ய வேண்டுமென்றால் ஓராண்டுக் காலம் அல்லது பத்துத்திங்கள் அளவாவது அவர் களுக்குத் தனிப் பயிற்சி அளித்தாக வேண்டும். அது ஆலோசிக்கப் பட்டு, முடிந்த அளவுக்குச் செயல்படுத்தப்படும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

அதேபோல கால்நடை துறையிலே பணியாற்றுபவர்களுக்கு ரிஃபெரஷர் கோர்ஸ் மறுபயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு, போது மான அளவுக்கு நவீன கருத்துக்கள் அவர்களுடைய உள்ளத்தில் இடம் பெறுவதற்கு வழி செய்ய வேண்டும்.

மேலும் அவர்களுக்கு நிலையான பயணப்படி தேவை யென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு ஒன்றியத்திலும் இவர்கள் ஐந்தாறு பேர்கள் இருக்கிறார்கள். ஒருவர் என்று சொன்னால் அரசாங்கத்தின் மூலமாகச் செலவழிக்கப்பட வேண்டிய தொகை குறைந்தது 30 ரூபாயாவது தரலாம். இதுகுறித்து நாங்கள் நிதித் துறையைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு ஒன்றியத் திலும் ஒரு பகுதியில் அவர்கள் வேலையிருந்தாலும், வேலையில்லா விட்டாலும் சுற்றி வரவேண்டுமே என்று நாங்கள் சொல்கிறோம். ஆகவே, கால்நடைத் துறையில் உள்ள இவர்கள் சுற்றுப் பயணப்படி பெறுவதற்கான முழு முயற்சி எடுத்துக் கொள்ளப்படும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் ஏற்றுக் கொள்வார்கள் என்று எதிர்பார்க் கிறேன்.

கால்நடைத் துறை என்பது தேய்ந்துபோன துறை, உள்ளபடியே இந்தத் துறையில் பணியாற்றுபவர்களின் குறைகளைப் போக்குவதில் இந்த அரசு தாமதம் காட்டுவதில்லை. போதுமான வசதிகளும்

வாய்ப்பும் கிடைக்காத காரணத்தினுல் தாமதம் ஏற்படுகிறது. அவர்கள் இந்தத் துறையின் அடிமட்டத்தில் பணியாற்றுபவர்கள் என்கிற காரணத்தால், அவர்களுடைய குறைகளை நிச்சயமாக பரிசீலிக்க அரசு முயற்சிக்கும்.

கால்நடைத் துறை தேய்ந்திருப்பதைப் போல கால்நடையே தேய்ந்துதான் போய் இருந்தது. தற்போது இத்துறை நன்கு வளர்ச்சி கண்டிருக்கிறது. அகில இந்தியாவிலும் இந்த வளர்ச்சி ஏற்பட்டுவருகிறது. இந்த வளர்ச்சியை இந்தத் துறையினர் மட்டும் நிறைவேற்றிவிட முடியாது. ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் பேரவை அங்கத்தினர்களும் தங்கள் தங்கள் வட்டாரத்தில் கிராமங் களுக்கும், இந்தத் துறைக்கும் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்த வழி செய்ய வேண்டும். நான் எங்கே சென்றுலும் கால்நடை பற்றி மக்களிடத்தில் பேசுவதை மகிழ்ச்சியான கடமையாக மேற்கொண் டிருக்கிறேன். அங்கத்தினர்கள் அதிக அக்கறை எடுத்துக்கொண்டு, அவைகளைப்பற்றி எடுத்துச் சொன்னுல் கிராமங்களிலுள்ள பஞ்சம், பற்றுக்குறை எல்லாம் ஒழிந்துவிடும். விவசாயம் மட்டும் இதற்கு வழிசெய்துவிட முடியாது. கால்நடையும் இவை தீர்வதற்கு அதுவும் ஒரு சாதனமாக அமையும். அதற்கு எல்லா அங்கத்தினர் களுடைய ஒத்துழைப்பை விரும்பி வேண்டிக் கேட்டுக் கொண்டு, நீங்கள் கொடுத்திருக்கும் வெட்டுத் தீர்மானங்களை யெல்லாம் வெறும் வெட்டுத் தீர்மானங்களாகக் கருதாமல், கருத்துள்ள தீர் மானமாகக் கருதி தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைக் கூறி, அவற்றை வலியுறுத்த வேண்டாமென்று கேட்டுக்கொள் கிறேன். விளக்கங்கள் போதுமான அளவுக்குச் சொல்ல முடியாத தற்கு மன்னித்தருள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, இரண்டே இரண்டு விஷயங்கள் பற்றி விளக்கம் தேவை. வால்பாறைக்கருகில் கருமலையில் கால்நடைப் பண்ணை அமைக்க வேண்டுமென்று பேச்சு வார்த்தை நடந்தது. கடைசியில் கொடைக்கானலுக்குப் போய் விட்டதாகச் சொன்னுர்கள். வால்பாறை திட்டம் எந்த அளவிற்கு இருக்கிறது?

அடுத்தது, டாக்டர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய அந்தஸ்து கால்நடை மருத்துவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்பதை கொள்கையளவில் ஏற்றுக்கொண்டாலும், அவர்களுடைய ஊதியமும் பணியாற்றும் தகுதியும் சமமாக்கப்பட வேண்டும். அது பற்றி விளக்கம் தேவை.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அந்தஸ்து என்பது சம்பளத்தையொட்டி மட்டும் வந்துவிடுவதில்லை. இந்தத் துறை வளர வளர நல்ல பலனைக் கண்டு அவர்களுடைய நிலையை உயர்த்துவதற்கும் நீண்டநாள் சர்விஸ் தகுதியை அறிந்து உயர்த்துவதற்கும் அரசு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது.

அடுத்தது வால்பாறை பற்றிச் சொன்னார்கள். அந்த இடம் 8 ஆயிரம் அடி உயரத்தில் இருக்கிறது. அங்கு கால்நடைகளுக்குத் தேவையான தண்ணீர் வசதி இல்லை. மழை அதிகமாக இருந்த போதிலும், தண்ணீர் வசதி இல்லை. மேலும் கால்நடைகளுக்குத் தேவையான புல் தீவனம் பெறுவதற்குக் கடினமாக இருக்கிறது. மேலும் சாலை போடுவதற்காக சுமார் 6 இலட்சம் ரூபாய் செலவாகும். ஆகவே, இப்படிப்பட்ட நிலையில் பயனுள்ள திட்டத்தைச் செயல்படுத்த முடியும் என்று கூற முடியாத நிலையில் வேறு இடங்களில் வைப்பதில்தான் கவனம் செலுத்தப்படுகிறது.

டாக்டர் எச். வி. ஹாண்டே : தலைவர் அவர்களே, கால்நடைத் துறையில் பணியாற்றுபவர்களும், பொது மருத்துவத்தில் பணியாற்றுபவர்களும் எத்தனை ஆண்டு பயிற்சி பெற்றார்கள் என்பதை எடுத்துக் கொள்ள வேண்டும். 6 ஆண்டுகள் பயிற்சி நடைபெறுகிறது. கால்நடைத் துறையில் பணியாற்றுபவர்களுக்கு நான்-பிராக்டீஸ் அலவன்ஸும் இல்லை, அவர்கள் பிராக்டீஸ் பண்ணவும் முடியாது. சென்ற ஆண்டு பேசியபோது அமைச்சர் அவர்கள் இதை பே கமிஷனுக்கு விட்டு, ஒன் மேன் கமிஷனுக்கு விட்டு பரிசீலிக்க இருப்பதாக வாக்குறுதி அளித்தார்கள். ஒன் மேன் கமிஷன் இவர்களுடைய குறைகளை ஆராய்ந்து தக்க முடிவு எடுத்தால் நல்லதாக இருக்கும்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்த அரசாங்கம் கால்நடை துறையில் பயிலுகின்ற காலத்தை வைத்து அதற்கான முயற்சியை அடிப்படையாகக் கொண்டு ஊதியத்தை தீர்மானிப்பதை மேற்கொள்கிறது. தமிழ்நாடு இரண்டாவது ஊதியக் குழு கால்நடை உதவியாளர்களில் 20 விழுக்காடு நபர்களை ரூ. 525 முதல் ரூ. 750 என்கிற சம்பள விகித அளவிற்கு உயர்த்த

பரிந்துரை செய்திருக்கிறது. மருத்துவர்களில் 32 பதவிகளை கிளினிசியன் பதவிக்கு உயர்த்திருக்கிறது. மாவட்ட கால்நடைப் பண்ணைகளில் ஆராய்ச்சிக் கூடங்களும், கோழி வளர்ப்புப் பண்ணைகளும், ஏற்படுத்தப்பட்டு, நகராட்சிகளிலும் 130 புதிய தேர்வுநிலை பதவிகளை ஏற்படுத்தவும் சிபாரிசு செய்துள்ளது. அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அதற்கான வாய்ப்பு, தகுதியுடையவர்களுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்யப்படும்.

திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பன்றிப் பண்ணைக்கு அரசு கொடுக்கிற ஊக்கத்தையும் ஆக்கத்தையும் பற்றி எடுத்துச் சொன்னார்கள். பன்றிகளை மார்கெட் பண்ணுவதற்குச் சங்கடம் இருக்கிறது. இந்தச் சங்கடத்தைச் தீர்க்க இந்தத் துறைமூலம் ஏதாவது ஏற்பாட்டைச் செய்து கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்தக் கால்நடை துறையினர் நகரத்து மக்கள் உணவுப் பழக்கத்தில் பன்றி இறைச்சி உட்கொள்வதன் அவசியத்தை நன்கு விளக்கி எடுத்துச் சொல்லி வருகின்றனர். தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இதற்கென நடவடிக்கை எடுத்து ஒரு குழு அமைத்திருக்கிறார்கள். புதுக்கோட்டையிலுள்ள போர்க் கிளப்பில் இதில் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ராஜய்யா, சட்டமன்ற உறுப்பினர்கள், காடுவெட்டி தியாகராஜன், முன்னாள் அமைச்சர் திரு. கே. வி. சுப்பையா போன்றோர் இருந்து வருகிறார்கள். திரு. இராஜா அவர்களும் அந்தப் பொறுப்பை அவரது வட்டாரத்தில் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, இந்த ஸ்மால் ஃபார்மர்ஸ் ஸ்கீம் திட்டத்தின்கீழ் தென் ஆர்க்காடு, திருச்சி போன்ற மாவட்டங்களில் பல வட்டங்களில் கடன் வசதி கிடைக்கவில்லை. கூட்டுறவு வங்கிகள் கடன் தரவில்லை. என்னுடைய மாவட்டத்தில் கூட அந்தக் கடன் கிடைக்கவில்லை. சென்ற ஆண்டு ஒதுக்கிய பணம் மானியமாகப் பெற முடியாமல் இருக்கிறது. அரசாங்கமே ஒரு தொகையை ஒதுக்கித் தர ஏற்பாடு செய்யவேண்டும். நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் மூலமாக கட்டாயம் கடன் உதவி செய்துதர ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இது நேரடியாக கால்நடை துறையின் மேற்பார்வையில் இயங்குவதில்லை. மாவட்ட ஆட்சித் தலைவரின் கீழ் ஸ்மால் ஃபார்மர்ஸ் ஸ்கீம் சில அலுவலர்களைக் கொண்டு நடந்து வருகிறது. கடன் கொடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிக் கடன் தொகை கிடைக்காமல் இருந்தால் அது குறித்துப் பரிசிலனை செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்பொழுது வாக்கெடுப்பு.

திரு. கே. எஸ். கோதண்டராமய்யா அவர்கள் தன்னுடைய இருக்கையில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்பட்டது.

திரு. ஜே. ஜேம்ஸ், திரு. சோ. அழகர்சாமி, திரு. பி. வெங்கடசாமி ஆகியவர்களின் வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :

பேரவையின் முன்னுள்ள கேள்வி :

"நிதிக் கோரிக்கை எண் 18—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின்கீழ் ரூ. 4,40,59,700-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

(ஆ) நிதிக் கோரிக்கை எண் 21—சின்கோனு

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 21—சின்கோனு என்ற தலைப்பின்கீழ் ரூ. 65,74,200-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

1972 மார்ச் 27]

Dr. H. V. HANDE : Sir, to discuss policy, I move the cut motion standing in my name, viz. :—

"That the allotment of Rs. 65,74,200 under Demand No. 21 Cinchona be reduced by Rs. 100."

Mr. SPEAKER : The hon. Member Thirumathi T. N. Anandanayaki is not in her seat. So, her cut motion is deemed not to have been moved.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, சின்கோனு தோட்டங்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி ஏற்படுத்திக் கொடுக்கக் கோரி விவாதிக்க—

"நிதிக்கோரிக்கை எண் 21—சின்கோனு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 65,74,200-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(இ) நிதிக்கோரிக்கை எண் 35—காட்டுவளத்துறை

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 35—காட்டுவளத்துறை என்ற தலைப் பின்கீழ் ரூ. 2,32,83,400-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் படவேண்டும்".

Dr. H. V. HANDE : To discuss policy, I move the cut motion standing in my name, viz :—

"That the allotment of Rs. 2,32,83,400 under Demand No. 35—Forest Department be reduced by Rs. 100".

Mr. SPEAKER : Thirumathi T. N. Anandanayaki who had given notice of her cut motion is not in her seat. So her cut motion is deemed not to have been moved.

[1972 மார்ச் 27

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, நீலகிரியில் பிர்லாவுக்குச் சொந்தமான ஓவாலி தோட்டத்தையொட்டியுள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை விவசாயிகட்கு பகிர்ந்து கொடுப்பதை பற்றி விவாதிக்க—

I move the following cut motion:—

"That the allotment of Rs. 2,32,83,400 under Demand No. 35—Forest Department be reduced by Rs. 100".

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, வனத்துறையில் பணி புரியும் வனப்பாதுகாப்பாளர், பாரஸ்டர், ரேஞ்சர் ஆகியவர்களின் நிலையை உயர்த்துவது பற்றி விவாதிக்க—

I move the following cut motion :—

"That the allotment of Rs. 2,32,83,400 under Demand No. 35—Forest Department be reduced by Rs. 100."

(ஈ) நிதிக்கோரிக்கை எண் 44—காட்டுவள மூலதனச் செலவு

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 44—காட்டுவள மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,62,14,500-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்".

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, நீலகிரி, ஆனைமலை, கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் பயிரிடுவதை அதிகரித்து இலங்கை அகதிகட்கு வேலை கொடுப்பதைப்பற்றி விவாதிக்க—

"I move the following cut motion, viz :—

"That the allotment of Rs. 1,62,14,500 under Demand No. 44—Capital Outlay on Forests be reduced by Rs. 100".

THIRU J. JAMES : To discuss about the necessity to appoint experienced officers in the Government Rubber Plantation in Kanyakumari District, I move the following cut motion :—

"That the allotment of Rs. 1,62,14,500 under Demand No. 44—Capital Outlay on Forests be reduced by Rs. 100".

1972 மார்ச் 27]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைகளைப்பற்றிய கொள்கைக் குறிப்புகள்* இந்த மன்றத்திலே வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றின்மீது அங்கத்தினர்கள் நல்ல ஆலோசனைகளைக் குறிப்பிட்டால், நான் கடைசியிலே பதில் கூறுகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏறக்குறைய 10 உறுப்பினர்கள் பங்குகொள்ள இருக்கிறார்கள். ஒவ்வொரு உறுப்பினரும் 5 நிமிடங்களிலிருந்து 7 நிமிடங்களுக்குள் முடித்துக்கொண்டால் விவாதம் குறித்த நேரத்திற்குள் முடிவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று கூறி மாண்புமிகு உறுப்பினர்கள் அப்படியே செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

* திரு. கே. பி. கோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத்துறை, சின்கோனா துறை மானியக் கோரிக்கைகளின்மீது ஒரு சில கருத்துக்களைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நாட்டின் பரப்பளவிலே 33 சதவிகிதம் காடுகள் இருக்க வேண்டும். தமிழ்நாட்டிலே 13 சதவிகிதம் தான் இருக்கிறது. அதிலும் 3 சதவிகிதம் காடுகள் ஒதுக்கக் காடுகளாக இருக்கின்றன. இந்தத் துறையிலே இருக்கின்ற பணிகள் காடுகளைப் பாதுகாப்பது என்பது ஒன்று. இரண்டாவது புதிய காடுகளை வளர்ப்பது ஆகும். இருக்கும் காடுகளைப் பாதுகாக்கின்ற பொறுப்பிலே இருக்கும் பாரஸ்ட்டர், கார்டு, ரேஞ்சர் ஆகியவர்கள் எல்லாம் உற்சாகமாகவும் நேர்மையாகவும் பணியாற்றவேண்டுமானால், அவர்களுடைய ஊதியத்தை உயர்த்தவேண்டும். வனத்துறையிலே இருக்கின்ற ஊழியர்கள் மிகவும் ஆபத்தான நிலைமையிலே செயல்படுகிறார்கள். கொடிய வன விலங்குகள் இருக்கின்ற வனத்திலே இருக்கவேண்டிய நிலை இருப்பதாலும், மழையாலும், காற்றாலும் எதிர்பாராதவிதமாக மரங்கள் சாய்வதாலே உயிருக்கேகூட ஆபத்து வரக்கூடிய நிலை இருப்பதாலும், சந்தன மரங்கள், தேக்கு மரங்கள் இவற்றையெல்லாம் திருட்டுத்தனமாகக் கடத்திச் செல்லும் சமூக விரோதிகளைத் தடுக்க முனையும்பொழுது உயிருக்கேகூட ஆபத்து ஏற்படக் கூடிய நிலைமையிலும் அவர்கள் பணியாற்றுகிறார்கள்.

305–335-ம் பக்கங்களில் மூன்றும், நான்காம் இணைப்புக்களாக அச்சிடப்பட்டிருக்கின்றன.

128–12—13

காவல்துறையிலே போலீஸ் கான்ஸ்டபிளுக்குக் கொடுக்கப்படு வதைப் போன்று இந்தத் துறையிலே இருக்கின்ற பாரஸ்ட் கார்டு களுக்கும் 140 ரூபாய் ஆக இருப்பதை 210 ஆகவும், பாரஸ்டர் களுக்கு 210 ரூபாயாக இருப்பதை 275 ஆகவும், ரேஞ்சர்களுக்கு 350 ரூபாயாக இருப்பதை 425 ரூபாயாகவும் உயர்த்தி அமைத்தால் தான் அவர்கள் உற்சாகமாகவும் நேர்மையாகவும் செயல்பட்டு முழு அளவுக்கு ஒத்துழைப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

அரசினுடைய விற்பனை நிலையங்கள் மூலமாக தேக்கு போன்ற மரங்கள் விற்பனை செய்யப்படுகின்றன. ஆனால் விறகுக்குப் பயன் படும் மரங்கள் நேரடியாக காண்டிராக்ட்டர்களுக்குக் கொடுக்கப் பட்டு அவர்கள் அங்கு வந்து எடுத்துச் செல்கின்ற நிலைமைதான் இருக்கிறது. அப்படியில்லாமல் விறகு மரங்களையும் அரசு நேரடி யாக விற்பனை நிலையத்தின்மூலமாக விற்க ஏற்பாடு செய்தால் தவறுகள் ஏற்படாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மலைப்பயிர்கள் காபி, ஏலம் போன்ற பயிர்கள் பயிரிடுவதற்கு மதுரை, திருநெல்வேலி போன்ற மாவட்டங்களிலே மண்வளம் பொதிந்து இருக்கிற பகுதிகள் இருக்கின்றன. நீண்ட கால ஒப்பந் தத்தின்படி நிலங்கள் அவற்றிற்காக ஒப்படைக்கப்படும் பொழுது அந்தக் காடுகளைப் பாதுகாக்கும் பொறுப்பும் அவர்களுக்கு இருக் கிறது என்ற முறையிலே ஏற்பாடு செய்தால், காடுகளும் நல்லமுறை யிலே பாதுகாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புதிய காடுகள் வளர்க்கின்ற திட்டத்தின்கீழ் பல திட்டங்களை அரசாங்கம் கொண்டுவர முனைந்திருக்கிறது. இருந்தாலும் எல்லாத் திட்டங்களையும் அரசாங்கமே ஏற்று நடத்துவது கஷ்டம்தான். மதுரை மாவட்டத்திலே குமரிக்காடு என்ற திட்டம் இருக்கிறது. இங்கே தனியார்கள் மரக்கன்றுகளை வைத்து வளர்க்கிறார்கள். அவர்கள் வைத்துப் பேணிக் காப்பதினால் இங்கேயுள்ள நிலங்களை— அதற்குப் பிரதிபலனாக கருதி—பயிர் செய்துகொள்கிறார்கள். அவர் களுக்கு அந்த முறையிலே அந்த நிலங்கள் வழங்கப்படுகின்றன. ஆனால் சமூக விரோதிகள் சிலர் அந்த மரக்கன்றுகளை எடுத்து விடுகிறார்கள், அதன் காரணத்தால் மரக்கன்றுகளை வளர்த்தால் தானே நிலத்தைப் பயன்படுத்த முடியும், அது இல்லாத காரணத்தி னாலே நிலத்தைக் கொடுக்கின்ற திட்டத்தை இந்த அரசாங்கம்

1972 மார்ச் 27] [திரு. கே. பி. கோபால்]

கைவிட்டுவிடும் என்ற எண்ணம் இருப்பதாகத் தெரிகிறது. ஏதோ ஒருசிலர் செய்கின்ற தவறுகளினாலே அவர்களுக்குக் கிடைக்கின்ற நிலம் கிடைக்காமல் போய்விடக்கூடாது. தவறுகள் செய்கின்றவர்களைக் கண்டுபிடிக்க அடிக்கடி சோதனைகள் செய்து அவற்றைத் திருத்திக்கொண்டு அவர்களுக்கு நிலம் கொடுப்பதன்மூலம் காடுகளை அபிவிருத்தி அடையச் செய்யலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி மதுரை மாவட்டத்திலே 10 ஆயிரம் ஏக்கர்கள் அந்த குமாரிக் காடு திட்டத்தில் கொண்டுவர முடியும். வன வளமும் அதிகரிக்கும். நிலம் இல்லாத விவசாயிகளுக்கும் நிலம் கிடைக்க வாய்ப்பு ஏற்படும்.

சந்தர்ப்பம் காரணமாகவும் சூழ்நிலையின் காரணமாகவும் நிலமில்லாத ஏழைகளுக்குக் கொடுக்கவும் மத்திய அரசு விதைப்பண்ணைக்காகவும் காட்டுப் பகுதிகளிலிருந்து சில பகுதிகளை எடுத்துக் கொள்ளப் போவதாகக் கூறப்படுகிறது. புல்வெளிகளிலே நல்ல பலன்தரும் மரங்கள் வைக்கலாம். சோஷலிஸ்டு கட்சித் தலைவர் திரு. ஏ. ஆர். மாரிமுத்து அவர்கள்கூட பலன்தரும் மரங்கள் வைத்தால் நல்லது என்ற கருத்தை இந்த மன்றத்திலே தெரிவித்தார்கள். வனத்துறையின் மூலமாக நல்ல பலன் தரும் மரங்களை வைத்து வளர்ப்பதற்கு ஏற்பாடு செய்தால் பலனும் அதிகரிக்கும், அதே நேரத்திலே காட்டின் பரப்பு அளவும் அதிகரிக்கும்.

வனத்துறையிலே வருமானம் 1938–39-ம் ஆண்டிலே 46 இலட்சமாக இருந்தது 1966–67-ம் ஆண்டிலே 319 இலட்சமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆனல் 1972–73-ம் ஆண்டிலே 357 லட்சம் அளவுக்குத்தான் உயர்ந்திருக்கிறது. இன்னும் அரசாங்கம் இதிலே அதிகமாகக் கவனம் செலுத்தினல் அதிக வருமானத்தைப் பெறமுடியும். இந்தத் துறையிலே நான் ஏற்கனவே கூறியதுமாதிரி காபி, ஏலம், தேயிலை போன்ற பயிர்களை ஆயிரக்கணக்கான ஏக்கர்களைப் பயிர் செய்யலாம். இதனல் அரசாங்கத்திற்கு வருமானம் கிடைப்பதுடன் அந்நியச் செலவாணியும் கிடைக்கிறது. சந்தனத்தால் இந்த வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கு கிடைக்கிறது. மதுரை, திருநெல்வேலி போன்ற மாவட்டங்களிலே இந்தச் சந்தன மரங்களை நிறைய விருத்தி செய்ய வேண்டும். இந்தச் சந்தனத்தைத் தவருன முறையில் யார் கடத்திலுைம் விருப்பு வெறுப்பு இன்றி கண்டிப்பாக நடவடிக்கைகளை இந்தத் துறை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. கே. பி. கோபால்] [1972 மார்ச் 27

மூங்கில் ஏற்கனவே மதுரை மாவட்டத்தில் சுமார் 30 வருஷங்களுக்கு முன்பு இயற்கையாகவே வளர்ந்து வந்தது. இப்பொழுது அது அழிந்துவிட்டது. இன்றுள்ள நிலைமையில் தென் மாவட்டங்களில் கோயம்புத்தூரிலுள்ள சத்தியமங்கலத்திற்குச் சென்றுதான் மூங்கில் வாங்க வேண்டியதாக இருக்கிறது. சாதாரண சிறு விவசாயிகூட கிராமத்திலிருப்பவர்கள் எந்த விழாவாக இருந்தாலும் சிறு பந்தல் போடவேண்டுமென்றும் கூட 100 ரூபாய் வாடகை என்று கொடுக்க வேண்டிய அளவிற்கு அதிகரித்திருக்கிறது. எனவே மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களில் மூங்கிலுக்கு ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சன் காகிதத் தொழிற்சாலை, சேஷசாயி காகிதத் தொழிற்சாலை போன்றவைகளுக்குக் குறைந்த விலையில் விற்கப்படுகிறது என்று தெரிகிறது. ஏன் அரசாங்கத்தின் சார்பில் சன் காகிதத் தொழிற்சாலை போன்றவைகளுக்குக் குறைந்த விலையில் கொடுக்க வேண்டுமென்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஒருவேளை ஏலம், டெண்டர் மூலம் கொடுத்தால் போட்டி இருக்காது என்று தெரிந்தால் அரசாங்கமே காகிதத் தொழிற்சாலையை ஏற்படுத்துவதன் மூலம் இந்த வருவாயைக் கூட்ட முடியும். ஏற்கனவே வனத்துறையில் வருமானம் அதிகரித்திருக்கிறது, செலவினம் குறைந்திருக்கிறது. ஆகவே ஆரம்பத்தில் நான் கூறியபடி கீழ் மட்டத்தில் பணியாற்றக் கூடியவர்களுக்கு அதிக ஊதியம் கொடுப்பதில் சிரமம் இருக்காது என்று நம்புகிறேன்.

தமிழ்நாட்டில் அரக்கு உற்பத்தியில் மதுரைத் தெற்குக் கோட்டத்தில் வண்ணாத்திப்பாறையில் ஈடுபடுபவர்கள் பெரும்பாலும் பழங்குடி மக்களாகும். இன்றைக்கு அவர்கள் கூடலூர் வருவதற்கு நேரடித் தொடர்பில்லாமல் பெரியாற்றைக் கடந்து வர வேண்டும். எனவே, பெரியாற்றில் பாலம் கட்டுவது பழங்குடி மக்களுக்கு நன்மை தருவதாகயிருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் தமிழ்நாட்டில் ஒரே பண்ணை இருப்பதால் அந்தப் பகுதியில் அரக்கு உற்பத்திக்கு அதிக ஊக்கம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தேயிலைத் தோட்ட வளர்ப்பின்கீழ் 1967–68-ல் 1,500 ஹெக்டேர் பரப்பளவில் வளர்ப்பதற்குத் திட்டம் வகுக்கப்பட்டது. ஆனால் தேயிலை வளர்ப்புத் திட்டம் மந்த நிலையிலேயே செயல்படுகிறது. ஏன்

1972 மார்ச் 27] [திரு. கே. பி. கோபால்]

இவ்வாறு குறைந்து இது 153 ஹெக்டேர் நிலத்தில் மட்டும் பயிரிடப் பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன் என்று கூறிக்கொண்டு, எனக்கு இந்த வாய்ப்பினை அளித்தமைக்கு என்னுடைய நன்றியைக் கூறிக்கொண்டு அமர்கிறேன்.

திரு. அ. ப. சண்முகசுந்தரம் : தலைவரவர்களே, மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கின்ற மானியத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

கோவை மாவட்டத்திலே ஆனைமலைப் பகுதியில் டாப்ஸ்லிப் என்ற இடத்தில் வன விலங்கு சரணாலயம் அமைக்கப்பெறும் என்று அமைச்சரவர்கள் குறிப்பிலே சொல்லி இருக்கின்றார்கள். அங்கே ஆனைமலையிலே வனவிலங்கு சரணாலயம் ஏற்படுத்திக் கொடுக்கின்ற அந்தத் திட்டத்திற்காக நான் நம்முடைய அமைச்சரவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுவதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன். அங்கே எல்லாவிதமான வன விலங்குகளையும் நாம் பார்க்க முடிகின்றது. அப்படிப் பார்க்க வருபவர்களுக்கு வசதியாக, சுற்றுலா பயணிகள் அங்கே வந்து தங்குவதற்கு வசதியாக நல்ல விடுதிகள் வேண்டும். அவற்றைக் கட்டுவதற்கு நம்முடைய அரசு முயற்சியெடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதற்காகக் குறைந்தபட்ச பணம்தான் இன்றைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது.

நாம் நீலகிரி மாவட்டத்தில் இருக்கும் முதுமலை சரணாலயத்தைப் போன்று ஆனைமலை சரணாலயத்தையும் பெரிதாக விரிவுபடுத்த வேண்டும். அப்பொழுதுதான் சுற்றுலாப் பயணிகள் அங்கே வந்து அவைகளைப் பார்ப்பதற்கு வசதியாக இருக்கும். அங்கே பரம்பிக்குளம், வெளிகுளம் போன்ற அணைக்கட்டுகள் இருக்கின்றன. அவைகளையும் பார்ப்பதற்கும், டாப்ஸ்லிப் பகுதியில் தங்கி சரணாலயத்தைப் பார்ப்பதற்கும் வசதியாக முதுமலையிலே எவ்வளவு அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கிறதோ, அதைப்போன்று இந்தப் பகுதியிலும் அபிவிருத்தி செய்துதர வேண்டுமென்று நான் நம்முடைய அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆனைமலைப் பகுதியிலே சின்கோனா பற்றி நான் இங்கே பேச விரும்புகிறேன். சின்கோனா இன்றைக்கு மிகவும் இலாபகரமாக நடைபெற்றுவரும் தொழில். அந்த சின்கோனா மரங்கள்

அங்கே மிக நல்லமுறையிலே வளர்க்கப்பட்டு அதற்கென்று ஒரு நல்ல தொழிற்சாலை இன்றைக்குச் செயல்பட்டு வருகிறது. சுமார் 2,700 தொழிலாளர்கள் இன்றைக்கு வேலை செய்து வருகிறார்கள். அதிலே 100 பேர் இலங்கையிலிருந்து தமிழ்நாட்டிற்கு வந்த அகதிகளாகும். இன்றைக்கு அயல்நாட்டிற்கு அந்த சின்கோனாவிலிருந்து கிடைக்கும் பொருள்களை நாம் ஏற்றுமதி செய்கிறோம். அப்படி ஏற்றுமதி செய்வதால் நமக்கு அந்நியச் செலாவணி கிடைக்கிறது. ஆகவே, இந்தத் தொழிலை நாம் இன்றைக்கு விரிவுபடுத்தும்பொழுது அதிக மான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பினை நாம் கொடுப்பதோடு, அதிக அந்நியச் செலாவணியையும் நாம் சம்பாதிக்க முடியும். இன்னும் சுமார் 500 ஏக்கர் நிலப்பரப்பில் சின்கோனா பயிரிடப்படும் என்று குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிச் சொல்லப் பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். அப்பொழுதுதான் நம்முடைய தொழிலாளர்களுக்கு அதிகப்படியான வேலைவாய்ப்பினைக் கொடுக்க முடியும். அதேபோன்று இலங்கையிலிருந்து வரும், தாயத்திற்குத் திரும்பும் அகதிகளுக்கு அதிக வேலைவாய்ப்பைக் கொடுக்க முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேநேரத்தில் அங்கேயிருக்கும் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி, விளக்கு வசதி முதலிய இன்றியமையாத வசதிகள் தேவைப் படுகின்றன. அத்தகைய வீட்டு வசதியை நாம் அவர்களுக்குச் செய்துதர வேண்டும். ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் அங்கே இருக்கிறார்கள். அதிலே எல்லோருக்கும் வீட்டு வசதி இல்லை. சிலருக்கு வீட்டு வசதி இருக்கிறது ; பலபேர் வீட்டு வசதியில்லாமல் இருக்கிறார்கள். ஆகவே, சின்கோனாத் தொழிற்சாலையில் வேலை செய்யும் அத்தனை தொழிலாளர்களுக்கும் வீட்டு வசதியை அவசியம் செய்து தர வேண்டுமென்று அமைச்சரவர்களை நான் பணிவன்போடு வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

அங்கே சின்கோனாத் தொழில் மட்டுமல்லாமல் மருந்து தயா ரிக்கும் செடிகளும், வாசனைத் திரவியத்திற்கான பொருள்களைத் தயா ரிக்கும் செடிகளும் பயிரிடப்படுகின்றன. நம் அரசாங்கத்திற்கு நிறைய லாபம் வரும் தொழிலாக அது இருக்கிறது. ஆகவே, அந்த மருந்துச் செடி வகையிலும், வாசனைப் பொருள்கள் தயாரிக்கும் செடி வகையிலும் இன்றைக்கு நாம் அதிகமாக அந்தப் பகுதியிலே இன்னும் விரிவுபடுத்த வேண்டும். அப்படிச் செய்தால் அரசாங்கத்

1972 மார்ச் 27] [திரு. அ. ப. சண்முகசுந்தரம்]

திற்கு இன்னும் வரவும் வருவதோடு, இன்னும் பல நூற்றுக்கணக் கான தொழிலாளர்களை அங்கே வேலையில் அமர்த்தவும் முடியும். ஆகவே அவைகளையும் நம்முடைய அரசாங்கம் செய்து தர வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் அந்தப் பகுதியிலே கோதப்புல் என்ற புல்லிலிருந்து தைலம் காய்ச்சுகிறார்கள். அந்தத் தைலத்தை ஆனைமலையிலிருந்து இன்றைக்குக் கேரளாவிலுள்ள கொச்சிக்கு விற்றுக் கொண்டிருக் கிறார்கள். அங்கே அது மருந்துக்குப் பயன்படும் என்று நினைக் கிறேன். அல்லது வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வார்கள் என்று எண்ணுகிறேன். அந்தக் கோதப்புல் தைலம் மருந்துக்கு மிகவும் உபயோகப்படும். அதை நம்முடைய பகுதியிலே பொள்ளாச்சிக்கு அருகில் உள்ள ஆனைமலைப் பகுதியிலேயே கோதப்புல் தைலத்தி லிருந்து மருந்து தயாரிக்கும் தொழிற்சாலையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கோவை மாவட்டத்தில் நிறைய மலைகள் இருக்கும் இடத்திலே பல பொருள்கள் அந்த மரங்களை அடிப்படையாக வைத்து இன்றைக் குத் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. கோவை மாவட் டத்திலும், நீலகிரி மாவட்டத்திலும் கிடைக்கும் கற்பூர மரங்கள், மிலாறு மரங்கள் அடிப்படையிலே சவுத் இண்டியா விஸ்கோஸ் நல்லமுறையில் நடக்கிறது. அதற்கென பல ஆயிரம் ஏக்கர்களில் இந்த மரம் வளர நம்முடைய அரசாங்கம் ஏற்படுத்தித் தந்திருக் கிறார்கள். அதை இன்னும் அதிக அளவில் கொடுத்தால் அதிக அள விற்கு இந்தத் தொழிற்சாலை விரிவடையும். அதற்கு நம்முடைய அமைச்சரவர்கள் வழிவகை செய்வார்கள் என்று நம்புகிறேன்.

அதைப்போலவே, இந்தக் கற்பூர மரம், மிலாறு மரம், மேலும் நீலகிரி மலை, ஆனைமலை, கொடைக்கானல் பகுதிகளில் வளர ஏற்பாடு செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்தப் பகுதியில் நல்ல வகையில் இந்த மரங்களை எல்லாம் வளர்ப்பதற்கு நல்ல சூழ்நிலை இருக்கிறது. மலைப் பகுதிகளில் இந்த மரங்களை எல்லாம் வைத்து வளர்ப்பதன்மூலம் தொழிற்சாலை களுக்குத் தேவையான மூலப் பொருள்கள் கிடைக்க ஏதுவாகின்றன. சேஷசாயி பேப்பர் ஆலைக்கு வேண்டிய நிறைய மூங்கில்கள் இங் கிருந்து சென்று கொண்டிருக்கின்றன. அந்த மூங்கிலை மேலும்

[திரு. அ. ப. சண்முகசுந்தரம்] [1972 மார்ச் 27

வளர்க்க சிறந்ததொரு திட்டத்தைத் தயாரிக்க வேண்டும். மூங்கிலை வெட்டினால் பிறகு மூங்கிலின் மேல்பகுதியாக இருக்கும் மூங்கில் மாரை சாதாரணமாகத் தீ வைத்து எரித்து விடுகிறார்கள். அந்த மூங்கில்மார் விவசாயிகளுக்கு உபயோகப்படும் பொருளாக இருக்கிறது. மாடுகளை வைத்து வேலி போட கரம்பைப் படல் என்று சொல்லும் வகையில் படல் கட்டும் தொழில் இரண்டு மூன்று கிராமங்களில் அந்தப் பகுதியில் நடக்கின்றது. அந்தத் தொழில் செய்யும் ஏழை எளியவர்களுக்கு இந்த மூங்கில் மார் அதிகமான விலைக்குத் தரப்படுகிறது. இது அவர்களுக்குக் குறைந்த விலையில் கிடைக்கச் செய்யவேண்டும். பேப்பருக்காக கொடுக்கப்படுகின்ற மூங்கிலைக் குறைந்த விலைக்கு கொடுக்கிறார்கள். அவர்களுக்கு உபயோகப்படாத இந்த மூங்கில்மாரையும் அந்தப் பகுதியிலிருப்பவர்களுக்குக் குறைந்த விலையில் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும்.

அதேபோன்று மலைப் பகுதிகளில் கிடைக்கக்கூடிய பல பொருள்களைக் கொண்டு நல்ல தொழிற்சாலைகளை ஏற்படுத்த முடியும். அப்படிப்பட்ட தொழிற்சாலைகளை எல்லாம் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

ஆனைமலைப் பகுதியில் சேத்துமடை சர்க்கார் என்ற பகுதி இருக்கிறது. அதற்குப் பக்கத்தில் 500 ஏக்கர் முதல் ஆயிரம் ஏக்கர் வரை சாகுபடி செய்யக்கூடிய நிலங்கள் இருக்கின்றன. அந்த நிலங்களை அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய ஏழை விவசாயிகளுக்கு ஒதுக்கித் தர வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

திரு. எம். தேவராசன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் அளித்துள்ள மானியக் கோரிக்கையை வரவேற்று என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

இந்தத் துறை மிகமிக இன்றியமையாத துறையாகும். வனத்துறையின்கீழ் வரும் மொத்தப் பரப்பளவு 21,072 சதுர கிலோ மீட்டர் ஆகும். இதில் 17,264 சதுர கிலோ மீட்டர் ஒதுக்கப்பட்ட காடுகளாகும். எஞ்சிய 3,808 சதுர கிலோ மீட்டர் ஒதுக்கப்பட்ட நிலங்களாகும். நமது மாநிலத்தில் காடுகளில் கீழுள்ள நிலப்பரப்பு,

[1972 மார்ச் 27] [திரு. எம். தேவராசன்]

மொத்த நிலப்பரப்பில் 16 சதவிகிதமாகும். இதிலிருந்து இந்தத் துறை எவ்வளவு இன்றியமையாத துறை என்பதை அறிந்து கொள்ளலாம்.

இந்த வனத்துறையின் பயனைப் பற்றி முன்னால் பேசிய உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னதுபோல், இது பல தொழில்களுக்குத் தேவையான மூலப் பொருள்களை அளிக்கிறது. இதுமட்டுமல்லாமல் வனங்கள் நன்றாக இருப்பதால்தான் நல்ல மழை வளமும் இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் இன்றையதினம் வனத்துறையை அவ் வளவு சரியாகக் கவனிக்காத ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. கண்டபடி மரங்களை வெட்டுவது குறிப்பாக இன்று நீலகிரி மாவட்டத்தில்கூட நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

நீலகிரி மாவட்டத்தில் முன்பெல்லாம் மழை பெய்தால் மூன்று நான்கு மாதங்கள் மழை காலத்தில் இடைவிடாது மழை பெய்து கொண்டிருக்கும். இப்போது அந்த நிலைமை இல்லை. அந்த மாவட்டத்தில்கூட ,தண்ணீர்ப் பற்றாக்குறை இருக்கிறது என்றால், அங்கு மரங்களை கண்டபடி வெட்டுவதுதான் அதற்கு காரணம். சில மடங்களின் ஆதிக்கத்தில்கூட காடுகள் நிறைய இருக்கின்றன. திருவாவடுதுறை ஆதீனத்திடம் 150 ஏக்கருக்கு மேற்பட்ட காடுகள் இருக்கின்றன. அந்தக் காடுகளை எல்லாம் அவர்கள் வேகவேகமாக அழித்துக்கொண்டு வருவதை அரசுக்கு எடுத்துக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். உடனடியாக அரசு தலையிட்டு அந்த வனங்களை அழிக்காமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டு மென்று வனத்துறை அமைச்சர் அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

காடுகளில் பல தொழில்களுக்கான மூலப் பொருள்கள் கிடைக் கின்றன என்பதைப் பற்றி முன்னால் பேசிய உறுப்பினர்கள் குறிப் பிட்டார்கள். காகிதம், காகிதக் கூழ், செய்தித்தாள் காகிதம், ரயான், தீக்குச்சிகள் போன்றவற்றைச் செய்வதற்கான தொழில்களை ஆரம்பிக்க நல்ல வாய்ப்பு இருக்கிறது. குறிப்பாக நீலகிரி மாவட் டத்தில் இந்த மாதிரித் தொழிற்சாலைகளை ஆரம்பித்தால் அங்குள்ள மக்கள் வேலையின்மை போகும், அரசுக்கு வருவாயும் கிடைக்கும். கூடலூர் பகுதியில் நல்ல தொழிற்சாலைகளை ஏற்படுத்தலாம். அங்கு

[திரு. எம். தேவராசன்] [1972 மார்ச் 27

ஒரு மரம் அறுக்கும் சா-மில் கூடக் கிடையாது. இப்போது கள்ளிக் கோட்டைக்கு எடுத்துச் சென்று மரங்களை அறுத்துக் கொண்டுவர வேண்டியிருக்கிறது. அந்தப் பகுதியில் ஒரு சா-மில்லை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றையதினம் நிலமற்றவர்களுக்கு நிலம் கொடுக்கிறோம் என்ற கொள்கையின் காரணமாக வனத்திற்குச் சொந்தமான ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்களைக் கொடுக்க ஆணை பிறப்பித்திருக் கிறார்கள். 275.13 ஹெக்டார் காட்டுப் பகுதியைக் கொடுக்கலாம் என்று கூறியிருக்கிறார்கள். இதை நான் மிகக் கடுமையாக எதிர்க் கிறேன். வனத்துறையின் நிலங்களில் எந்த முறையிலும் கை வைப்பதாக நான் ஒப்புக்கொள்ள முடியாது. வனத்துறையை அழித்து விட்டால் எதிர்காலமே மிகப் பயங்கரமாக இருக்கும். இயற்கையே மாறிவிடும். வனத்துறை காட்டுப் பகுதிகளை ஒருபோதும் விவசாயி களுக்கு சாகுபடிக்குக் கொடுக்கக்கூடாது என்பதைத் திட்டவட்ட மாகக் கூற விரும்புகிறேன்.

வன விலங்குகள் உய்விடங்களைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். நீலகிரி மாவட்டத்தில் முதுமலை மிகச் சிறந்த இடம். அதை ஒரு பெரிய சரணாலயமாக அமைக்க வாய்ப்புக்கள் இருக்கின்றன. மைசூர் மாநிலத்திலுள்ள பந்திப்பூர் சரணாலயத்தில் நிறைய விடுதிகள் கட்டப்பட்டிருப்பது போல் இங்கும் கட்டப்பட வேண்டும். தற்போது பயணிகள் வந்து தங்க அதிக வசதி இல்லை. ஆகவே, நிறைய விடுதிகள் கட்டி சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு வசதி செய்து தரவேண்டும். அந்தக் காட்சிகளைப்பார்க்க மரங்களில் டாரண் அமைத்துத் தரவேண்டும். ரிசர்வேஷன் செய்ய வசதி செய்வதோடு கூட வனங்களைப் பார்க்க எல்லா வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இலங்கையிலிருந்து வரும் அகதிகளுக்குத் தேயிலைத் தோட்டம் அமைக்க நல்ல திட்டத்தை வைத்திருக்கிறார்கள். வரவேற்கிறேன். 5.43 லட்சம் மதிப்பீட்டில் 1,500 ஹெக்டார் பரப்பளவில் தேயிலைத் தோட்டத்தை அபிவிருத்தி செய்யும் திட்டம் இருக்கிறது. அதை உடனடியாகச் செய்வதன்மூலம் அங்குள்ள பல பிரச்சினைகளைத் தீர்க்க முடியும்.

1972 மார்ச் 27] [திரு. எம். தேவராசன்]

அங்குள்ள பயங்கரமான நிலை போக்கப்பட வேண்டுமென்றால், நக்சல்பாரிகள் நடவடிக்கை ஒடுக்கப்பட வேண்டுமானால், தமிழர்கள் அந்தப் பகுதிகளில் குடியேற்றப்பட வேண்டும். அப்படிக் குடியேற்றினால்தான், இன்றையதினம் ஏற்பட்டுள்ள நிலப்பறி இயக்கங்கள் ஓரளவு அடங்கி நல்ல சூழ்நிலை ஏற்படும் என்று அரசுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்தகைய நல்ல ஒரு துறை நல்ல முயற்சியினை எடுத்து நீலகிரி மாவட்டத்தில் அமைச்சர் அவர்கள் கண்ணோட்டத்தைச் செலுத்த வேண்டும். குறிப்பாக, முதுமலையை அபிவிருத்தி செய்ய, வெளி மாநிலப் பயணிகள் மாத்திரமல்ல, உலகத்தின் பல பகுதிகளிலிருந்து வரக்கூடியவர்கள் தங்கியிருக்கக்கூடிய நிலையில் இண்டர்நேஷனல் சாங்சுவரியாக மாற்றியமைக்க வாய்ப்பு இருக்கிறது. இதையெல்லாம் தமிழக அரசு நல்ல முறையில் செய்து தரவேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொண்டு, இந்த மானியத்தை வரவேற்று என்னுடைய உரையை நிறைவு செய்து கொள்ளுகிறேன். வணக்கம்.

திரு. கு. அ. பொம்மன் : பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சி சார்பாகக் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து இந்த மானியத்தின்பேரில் என் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

முதலில் சின்கோனா மானியத்தைப் பற்றிச் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். மதிப்பீட்டுக் குழு இருபதுக்கு மேற்பட்ட பரிந்துரைகளை சின்கோனா விஷயத்தில் சொல்லியிருக்கிறது. தொழிலாளர்களின் ஊதிய உயர்வு பற்றியும் தெளிவாக அதில் சொல்லப்பட்டிருக்கிறது. மற்றத் தேயிலைத் தோட்டங்களில் உள்ள தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படுவதைப் போன்று சின்கோனா தோட்டத் தொழிலாளர்களுக்கும் கொடுக்கப்படுவதில்லை என்று சொல்லப்படுகிறது. இப்போது வேஜ் போர்ட் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டிருக்கிறது. வேஜ் போர்ட் ஏற்படும் வரையில் சின்கோனா தோட்டத் தொழிலாளர்களுக்கு இண்டரீம் உதவியாவது ஏதாவது செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சுகாதார வசதியைப் பொறுத்தவரையில் நடுவட்டத்தில் ஒரு ஆஸ்பத்திரி இருக்கிறது. ஆனால் அங்கு போதுமான வசதியில்லை. அப்பகுதியில் தொழிலாளர்கள் அதிகமாக இருப்பதால் அவர்களை

[திரு. கு. அ. பொம்மன்] [1972 மார்ச் 27

அங்கு அக்காமொடேட் செய்ய முடிவதில்லை. ஆகவே அந்த ஆஸ்பத்திரியை அப்கிரேட் செய்யவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதையும் கவனிக்க வேண்டும். தொட்டாப்பெட்டாவில் ஒரு டிஸ்பென்ஸரி மிகவும் அவசியம். இப்போது அங்குள்ளவர்கள் நாலரை மைல்கள் தள்ளி உள்ள உதகைக்கு வரவேண்டியிருக்கிறது. போக்குவரத்து வசதியும் குறைவாகயிருக்கிறது. எனவே அங்கு ஒரு டிஸ்பென்ஸரி அமைத்துத் தரவேண்டும். அதேபோல் சேரலம்பாடியிலும் ஒரு டிஸ்பென்ஸரி மிகவும் அவசியம். அதையும் அமைத்துத் தரவேண்டும்.

சின்கோனு தோட்டத் தொழிலாளர்களின் வீடுகள் மிகவும் பாத்தட்டிக் கண்டிஷனில் இருக்கின்றன. ஆகவே அவர்களுக்கு நல்ல வீடுகள் கட்டித் தரப்படவேண்டும். தற்போது அங்கு நான்கு வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டிருப்பதாக அறிகிறேன். மற்ற தேயிலைத் தோட்டங்களில் உள்ள தொழிலாளர்களுக்கும் கட்டிக் கொடுக்கப்பட்டிருப்பது போன்று இந்த சின்கோனு தோட்டத் தொழிலாளர்களுக்கும் எல்லா வசதிகளையும் கொண்ட வீடுகள் கட்டிக்கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தோட்டத் தொழிலாளர்களின் படித்த பிள்ளைகளுக்கு அங்கே வேலை தரப்படுவதில்லை. வெளியிலே இருந்து வருபவர்களை வேலைக்கு எடுத்துக்கொள்கிறார்கள். தொழிலாளர்களின் படித்த பிள்ளைகளை எடுத்துக்கொள்வதில்லை என்ற குறைபாடு இருக்கிறது. ஆகவே வேலைகள் அளிப்பதில் அங்குள்ள தொழிலாளர்களின் படித்த பிள்ளைகளுக்கு முன் உரிமை அளிக்கவேண்டும்.

1965 வரையில் சின்கோனுவின் விலை கம்மியாக இருந்தது. பாலுட்ரின் என்ற மருந்து வந்துகொண்டிருந்தால், அதன் விலை கம்மியாக இருந்தது. வெளிநாடுகளுக்கு அனுப்ப வாய்ப்பில்லாமல் இருந்தது. 1971-ல் இதன் விலை கிலோவிற்கு ரூ. 456-460 வரை விற்றதாக கூறப்பட்டிருக்கிறது. 5.69 இலட்சம் நிகர ஆதாயம் கிடைத்துள்ளதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. நமக்கு அன்னியச் செலாவணி சம்பாதித்துத் தரும் சின்கோனு விவசாயம் செய்யப்படும் இடம், அளவு போதுமானதாகவில்லை. ஆகவே பாரஸ்ட் டிப்பார்ட்மெண்டிலிருந்து ஒரு 1,500 ஏக்கர் நிலங்களை எடுத்து சின்கோனு பயிரிடப்படவேண்டும்.

1972 மார்ச் 27] [திரு. கு. அ. பொம்மன்]

அதோடு கூட ஹோசூர், தர்மபுரி போன்றயிடங்களில், 3,000 அடி உயரத்தில் எங்கெங்கு சின்கோனு வளருமோ அந்தயிடங்களில் அதைப் பயிர் செய்தால், நமக்கு நல்ல அன்னியச் செலாவணி கிடைக்கும்.

நடுவட்டத்தில் ஒரு வாசனைத் தொழிற்சாலை இப்போது நடக்கிறது. அங்கு சில வாசனை எண்ணெய்கள் தயாரிக்கிறுர்கள். ஆனல் அங்குள்ள மெஷின்கள் போதுமானவையாக இல்லை. அதற்கான இயந்திரங்களை வாங்குவதற்கான குறிப்பு இதில் இருக்கிறது. அவைகளை உடனடியாக வாங்கி மேற்கொண்டு என்னென்ன வாசனைப் பொருள்களிலிருந்து எண்ணெய் எடுக்கமுடியுமோ, அதைச் செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, வனவளம், நீலகிரியைப் பொறுத்தவரையில் நமக்குள்ள வனவளம் குறைவாகும். மொழிவழி மாநிலங்கள் பிரிந்த பிறகு நமது காட்டு வளம் குறைந்துள்ளது. நமது காட்டுவளத்தை வளர்ப்பது மிக மிக அவசியம். அதே சமயத்தில் காடுகள் அழிப்பது என்பது வருந்தத்க்க செயலாகும். நடுவட்டத்தில் ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்பு அங்குள்ள காட்டை அழித்துவிட்டு செயற்கை வளத்தை உற்பத்தி செய்திருக்கிறுர்கள். கற்பூர மரங்களை வன இலாக்காக்களின் மூலமாக நட்டிருக்கிறுர்கள். இயற்கை வளம் இருந்தால்தான் மழை வரும். ஈரத்தையும் நாம் காப்பாற்றிக் கொள்ளமுடியும். கற்பூர மரங்கள் தண்ணீரை உறிஞ்சுகின்றன. இதனல் இந்த கற்பூர மரங்களால் ஈரத்தை காப்பாற்ற முடியாது. ஆகவே காச்மென்ட் ஏரியாவில் கற்பூர மரங்கள், வாட்டில் மரங்கள் போன்றவைகளை இரண்டு மைல்களுக்கு தள்ளி நடுவதுதான் நல்லது.

வென்லாக்டௌன்ஸ்-ஐ நாஷனல் பார்க்காக ஆக்குவதாக சொல்லி வந்தார்கள். பின்னர் அணை கட்ட இடம் ஒதுக்கப்பட்டது, வெல்லிங்டன் ஹண்ட் க்ளப்-க்கு மூவாயிரம் ஏக்கர் ஒதுக்கப்பட்டது.

தோதுவர்களுக்கு நிலம் ஒதுக்கப்பட்டது. இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ்க்காக நிலம் ஒதுக்கப்பட்டது. மீதியுள்ள நிலத்தை ஏழைகளுக்கு விவசாயம் செய்ய கொடுக்கலாம்.

உதகை தொகுதி மெம்பர் அவர்கள் பேசும்போது ஏழைகளுக்கு அந்த நிலத்தைக் கொடுக்கக்கூடாது என்று சொன்னுர்கள். நான் அவர்களைக் குறை சொல்லவில்லை. காடுகளும் வளரவேண்டும்.

[திரு. கு. அ. பொம்மன்] [1972 மார்ச் 27

ஏழைகளும் வளரவேண்டும். ஆகவே நிலைமையை சீர்தூக்கிப் பார்த்து எந்தெந்த இடங்களில் காட்டுமரங்கள் வளரவோ அவ்விடங்களை ஏழைகளுக்கு பயிர் செய்யக் கொடுக்கவேண்டும். அங்கு பூர்வீகக் குடிகளான தோதுவர்களுக்கு நிலம் ஒதுக்கப்பட்டு வருகிறது. அவர்கள் அங்கு விவசாயம் செய்து வருகிறார்கள். அங்கு கற்பூர மரங்கள் நடுவதற்கு அதிகாரிகள் அவர்களை ஜபர்தஸ்து செய்து வருவதாக தகவல் வந்தது. தோதுவர்களுக்கு இவ்வளவு ஏக்கர் என்று கொடுத்தபிறகு மீதி நிலத்தை அந்த சமூகத்தாரின் பொது வாழ்வுக்கு கம்யூனிட்டி ஹால் போன்ற மற்ற காரியங்களுக்கு நிலங்கள் என்று ஒதுக்கவேண்டும்.

சந்தன மரங்களிலிருந்து நமக்கு நல்ல வருமானம் வருகிறது. நீலகிரி, கூடலூரிலிருந்து சந்தன மரங்கள், ரோஸ்வுட் போன்றவை கேரளாவிற்கு கடத்தப்பட்டு வருகின்றன. பல தடவை கடத்தல் செய்யப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக ஒரு கேஸ் கூட நடந்துள்ளது. கண்காணிப்பு சரியாக இல்லை. அலுவலர்கள் இதில் சம்பந்தப்பட்டிருக்கிறார்களோ என்று கூட சந்தேகிக்கவேண்டியிருக்கிறது. ஆகவே கடுமையான கண்காணிப்பு தேவை.

பின்னர், சரணாலயங்கள். முதுமலையில் இன்னும் அதிகப்படியான விடுதிகள் கட்டவேண்டும். தனித்தனியாக வீடுகளைத்தான் வெளி நாட்டிலிருந்து வருகிற உல்லாசப் பயணிகள் விரும்புகிறார்கள். அப்படிக் கட்டுவதினால் நாம் நம் அன்னியச் செலாவணியைப் பெருக்கிக்கொள்ள முடியும். ஆனால் அங்கு உணவு, போக்குவரத்திற்கான வசதிகள் மிக குறைவு. ஆகவே விடுதிகளை கூடலூர் நகரத்திலேயே கட்டினால் ஹோட்டல், போக்குவரத்து வசதி எல்லாம் அங்கு இருக்கின்றன. கூடலூரிலிருந்து சரணாலயம் உள்ள தூரம் எட்டு மைல்கள்தான் போகவேண்டியிருக்கும். மத்திய சர்க்காரிலிருந்துகூட ஒரு வான் கொடுத்திருக்கிறார்கள். அதில் போகலாம். கூடலூர் நகரத்திலுள்ள பி. டப்ளியூ.டி. கெஸ்ட் ஹவுஸ் பக்கத்தில் கட்டினால் நல்லது.

இலங்கை அகதிகளுக்கு குன்னூர், கூடலூர் போன்றயிடங்களில் தேயிலைத் தோட்டங்களில் வேலை கொடுக்கப்படுகிறது. அவர்களுக்குக் கொடுக்கப்படுகிற ஊதியம் குறைவானது என்று சொல்கிறார்கள். இதுபற்றி அமைச்சர் அவர்களுக்கும் தெரிவித்துள்ளார்கள். ஒரு குடும்பத்தில் இரண்டு பேர்களுக்கு வேலை கொடுத்துவிட்டு

மற்றவர்களுக்கு கொடுப்பதில்லை. ஆகவே அவர்கள் வாழ்வதற்கு கஷ்டமாகயிருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆகவே அவர்கள் கொடுத்துள்ள மனுவை நன்கு பரிசீலனை செய்யவேண்டும்.

மூங்கில், கற்பூர மரங்கள் இவற்றை சேஷசாயி, விஸ்கோஸ்க்கு, கொடுத்து வருகிறார்கள். எந்த அடிப்படையில் கொடுக்கிறார்கள் என்று தெரியவில்லை. டெண்டர் மூலம் கொடுக்கிறார்களா, ஏக்கர் அடிப்படையில் கொடுக்கப்படுகிறதா? இப்போது கொடுக்கப்பட்டுள்ள நிலையில் விலை மிகவும் குறைவாக இருக்கிறது. அதனால் அரசாங்கத்தின் வருவாய் கம்மியாகிறது. இதையும் புனர்பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு அதன் விலையை அதிகமாக்கிக் கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது கூடலூரில் மாண்புமிகு தேவராசன் அவர்கள் சொன்னமாதிரி ஏற்கெனவே ரோஸ் உட், சந்தன மரம் இருக்கிறது. கூடலூரில் வேலைவாய்ப்பு செய்வதற்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தர வேண்டுமானால், அந்த மரங்களை நன்கு அபிவிருத்தி செய்ய வேண்டும். அங்கே சா மில், பேப்பர் இன்டஸ்ட்ரி ஏற்படுத்த வேண்டும். பேப்பர் இன்டஸ்ட்ரி பற்றி நான் கேள்வி கேட்டு இருக்கிறேன். போதிய கச்சாப்பொருள்கள் கிடைக்காததால் அங்கே செய்ய முடியாது என்று அமைச்சர் அவர்கள் பதில் கூறியிருக்கிறார்கள். இன்று விஸ்கோ, சேஷசாயி போன்றவைகளுக்கு இங்கிருந்து மூங்கில் போன்ற பொருள்கள் போகிறபோது இங்கே அந்தப் பொருள்கள் இல்லை என்று சொல்லி இருப்பது தவறான பொருளில் கொடுத்து இருப்பார்கள் என்று நினைக்கிறேன். இதற்காக ஒரு ஹை-பவர் கமிட்டி வைத்து பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இது என்னுடைய அபிப்பிராயம்.

இப்போது அரக்கு செய்வதற்கு கூடலூர் தாலுக்காவில் நிறைய கச்சாப்பொருள் இருக்கிறது. அதையும் சரியான முறையில் பாதுகாப்பது இல்லை என்று சொல்லப்படுகிறது. அடுத்த மாநிலத்திற்குப் போய்விடுகிறது என்று சொல்லிவிடுகிறார்கள். இதை ரொம்பவும் கவனிக்க வேண்டும். இந்தத் துறையில் அதிகம் கவனம் செலுத்தினால், அதிகம் ஊழியர்கள் அமர்த்தி செயல்பட்டால், அவர்களுக்கு அதிக ஊதியம் கொடுத்தால், நல்ல வருமானம் வரும் என்று சொல்லிக் கொள்கிறேன். இந்தக் காட்டிலாக்காவில் பணி புரியும் ஏழைப் பணியர்களுக்கு, பணிக்கர்கள் என்று ஊழியம் செய்பவர்

களுக்கு சரியான ஊதியம் கொடுக்கப்படுவதில்லை என்று சொல்லப் படுகிறது. அவர்களுக்கு அவ்வப்போது ஊதியத்தைக் கொடுப் பதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொண்டு, வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. சி. க. வடிவேலு: சட்டப் பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் கொடுத்துள்ள மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை சொல்ல முன்வரு கிறேன்.

தமிழகத்திலே பொதுவாக வனத்துறை நல்ல முறையில் தற் போது செயல்பட்டுக்கொண்டு வருகிறது என்பது நாம் எல்லோரும் அறிந்த விஷயம். பொதுவாக வனத்துறை நல்ல முறையில் மரங் களை வளர்த்து, அந்த மரங்கள் நல்ல முறையில் வளர்ந்து, அதனால் நல்ல பருவ மழை பெய்ய வேண்டுமென்று இன்று நிலைமையை உரு வாக்கிக் கொண்டிருக்கிறோம். பொதுவாக மத்திய அரசின் ஒரு பகுதியாகவும், தமிழக அரசின் ஒரு பகுதியாகவும் இந்த வனத்துறை இலாகா இருந்து கொண்டு வருகிறது. பொதுவாக மத்திய அரசு மாநில அரசுக்கு இந்த முழு பொறுப்பையும் கொடுக்க வேண்டும். அப்போது தான் தமிழக அரசு பல காரியங்களை, முன்னேற்றங்களை ஏற்படுத்திச் செய்வதற்கு நல்ல ஒரு ஊக்கத்தை அவர்கள் பெறு வதற்கு நல்ல சந்தர்ப்பம் ஏற்படும் என்பதை மத்திய அரசுக்கு இந்த மன்றத்தின் மூலம் எடுத்துச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

பொதுவாக மத்திய அரசு பல அதிகாரங்களை வைத்துக்கொண்டு மாநில அரசுக்கு அதிகாரங்களைக் கொடுக்கக்கூடாது என்று இருந்து கொண்டு வருகிற நிலைமையை மாற்றவேண்டும். அப்போதுதான் இந்த வனத்துறையும், மற்ற இலாகாக்களும் நல்ல முறையில் செயல் படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக அரசு பல தரிசு நிலங்களை வனத்துறையிலிருந்து பெற்று ஏழை, எளிய ஹரிஜன மக்களுக்கு வழங்கிக்கொண்டு வருகிறது. பல லட்சக்கணக்கான மக்கள் இதனால் பயன்பட்டுக் கொண்டு இருக் கிறார்கள். இப்போதுகூட என்னுடைய முசிறி வட்டம், துறையூர் வட்டம் ஆகிய இடங்களில் நானும், திரு. முத்துச்செல்வன் அவர் களும் முசிறித்தொட்டியம் தொகுதியில் உள்ள 5,700 ஏக்கர் தரிசு

நிலங்களை ஏழை ஹரிஜன, பிற்பட்ட மக்களுக்கு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டோம். அதற்கேற்ப அரசு எங்களுக்கு ஒரு தகவலை அனுப்பியிருக்கிறது. ஆனால் இன்னும் அந்த நிலங்கள் யாருக்கும் கொடுக்கப்படாமல் இருக்கிறது என்று தெரிவித்து, அந்த நிலங்களை உடனடியாக ஏழை விவசாயிகளுக்குக் கொடுப்பதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய திருச்சி மாவட்டத்தில் இருக்கும் மாவட்ட வனத் துறை அலுவலகம் ஒரு வாடகைக் கட்டடத்தில் இருந்துகொண்டு இருக்கிறது. நமது அரசாங்கம் ஒரு கட்டடம் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக முதல்வர், டாக்டர் கலைஞர் பொறுப்பேற்றதற்குப் பின்னர், அனைத்து அதிகாரிகளுக்கும் சிப்பந்திகளுக்கும் 29-ம் தேதி அல்லது 30-ம் தேதி ஊதியம் கொடுக்க வேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கிறார்கள். ஆனால் வனத்துறையில் இருக்கும் மேல் அதிகாரிகள் கீழ் உள்ள சிப்பந்திகளுக்கு 8-ம் தேதி அல்லது 10-ம் தேதி அளவில்தான் கொடுத்து வருகிறார்கள்.

வனத்துறை சிப்பந்திகள் ஒரு சிலர் தற்காலிகமாகத் தான் வேலையில் இருந்து கொண்டு இருக்கிறார்கள். அவர்களையும் நிரந்தரமாக்க வேண்டும். பொதுவாக மேல்மட்ட அதிகாரிகள் மட்டும், வனத் துறையில், நிரந்தரமாக அதிகாரிகளாக பணியாற்றுகிறார்கள். ஆனால் கீழ்மட்டத்தில் உள்ள சிப்பந்திகள் தற்காலிகமாக நெடுங் காலமாக இருந்துகொண்டு வருகிறார்கள். அவர்களையும் நிரந்தர ஊழியர்களாக அரசு ஆக்குவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வனத்துறையிலே சில மரங்களை நடுவதற்கு ஏற்பாடு செய்கிறார்கள். ஆனால் கிராமப் பகுதியில் மாடுகள், கால்நடைகள் மேய்வதற்கு போதிய வசதி இல்லாமல் அங்கே உள்ள விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அப்படி மாடுகள் மேய்வதற்கு மேய்ச்சல் தரையை ஒதுக்கிவிட்டு, மற்றப் பகுதிகளில் காடுகளை, மரங்களை நடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1972 மார்ச் 27] [திரு. சீ. க. வடிவேலு]

ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒதுக்கப்பட்ட ஏரி, குட்டைகள், பொதுப்பணித்துறைக்கு ஒதுக்கப்பட்ட ஏரிகளேயும் எடுத்து வனத் துறையால் ஏரிகளில் மரங்களை நடுவதற்கு முன்வந்திருக்கிருர்கள். அனைத்து ஏரிகளிலும் இப்படிப்பட்ட மரங்களை வைத்து உற்பத்தி செய்தால் பருவ மழை பெய்வதற்கு நல்ல முறையில் சந்தர்ப்பம் இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி வைப்பதன் மூலம் அரசுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் நல்ல வருமானம் கிடைக்கும் என்று தெரிவித்து, இந்தச் சந்தர்ப்பம் கொடுத்த தலைவருக்கு நன்றியைத் தெரிவித்து, வணக்கத்தைச் சொல்லி என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

திரு. என். மருதாசலம் : தலைவரவர்களே, இந்த வனத்துறை மானியத்தின் மீது என்னுடைய கருத்தைக் கூற விரும்புகிறேன்.

வனத்துறை அபிவிருத்தி மிக நல்லது தான். வனத்துறை எவ்வளவுக்கெவ்வளவு அபிவிருத்தி அடையுமோ அவ்வளவுக்கவ்வளவு மழை பெய்யும். வனத்துறை அபிவிருத்திக்கு சிறந்த முறைகளை எடுத்து, எந்தெந்தப் பகுதிகளில் அபிவிருத்தி செய்யமுடியுமோ அந்த இடத்தை எடுத்து மீதியுள்ள இடத்தை விவசாயிகளுக்கு பகிர்ந்து கொடுப்பது மிகவும் பொருத்தமாக இருக்கும்.

வனத்துறைக்கு உள்ள கட்டாந்தரையில் தனிப்பட்டவர்களுக்கு காடுகள் நிறைய இருக்கின்றன. அந்தப் பகுதிகளில் இன்றைக்கு ஒவ்வொரு தனிப்பட்ட நபரும் காடுகள் மத்தியில் பூமிகள் இருக்கின்றன. அந்தக் காடுகள் மத்தியில் இருக்கும் பூமியில் மொத்தமாக நம்முடைய தமிழ் நாட்டில் $2\frac{1}{2}$ லட்சம் தனியார் பூமி இருக்கிறது. அந்தத் தனியார் பூமி ஏன் வனங்களின் மத்தியில் இருக்கிறது என்று சொன்னுல், அரசாங்கக் காடுகளை அவர்கள் சேர்த்துக்கொள்வதற்குத் தான் அந்த தனியார் பூமிகள் இருக்கின்றன. அந்த பூமிகளை அரசாங்கம் நஷ்ட ஈடு இல்லாமலே எடுத்து விவசாயிகளுக்கு பகிர்ந்து கொடுக்கவேண்டும். சொந்தக்காரர்களுக்கு இப்படி நஷ்ட ஈடு கொடுக்காமல் பூமியை எடுத்து இன்று நிலம் இல்லாத விவசாயிகளுக்கு பகிர்ந்து கொடுத்தால் நல்ல விவசாயம் செய்வார்கள். விவசாய உற்பத்தி நல்ல முறையில் ஆகும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

1972 மார்ச் 27] [திரு. என். மருதாசலம்]

நீலகிரியில் ஓவேலி எஸ்டேட் என்று பெரிய எஸ்டேட் இருக்கிறது. அது 2,000 ஏக்கர் நிலம் உள்ள எஸ்டேட். அந்த எஸ்டேட் தனிப்பட்ட நபருக்கு சொந்தமானது. அந்த எஸ்டேட் பொட்டல் காடாக இருக்கிறது. அந்த இடத்தை எடுத்து விவசாயிகளுக்கு பகிர்ந்து கொடுக்க வேண்டுமென்று எங்கள் கட்சித் தலைமையில் பாலதண்டாயுதம் போராட்டம் நடத்தினார்கள். இதுவரையிலும் அந்தப் பூமியை எடுத்து யாருக்கும் கொடுக்கவில்லை. அந்தப் பூமியை எடுத்து விவசாயம் செய்யாத விவசாயிகளுக்கு பகிர்ந்து கொடுக்க வேண்டும். அதற்கும் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டாம்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதேமாதிரி பழமுதிர்சோலை என்ற ஒரு பண்ணை இருக்கிறது. அந்தச் சோலை வெறும் பொட்டல் காடு. அங்கே பழமும் உதிர்வதில்லை, காயும் உதிர்வதில்லை. அந்தப் பண்ணையில் 4,000 ஏக்கர் பொட்டல் காடாக இருக்கிறது. அந்தப் பகுதியில் உள்ள நிலங்களை எடுத்து, அங்குள்ள நிலம் இல்லாத ஏழை விவசாயிகளுக்கு பகிர்ந்து அளிப்பதன் மூலம், நாட்டில் தானிய உற்பத்தி அதிகமாகும், தானியத்தின் விலையும் குறையும், நாடும் செழிப்பு அடையும். அந்த ஏற்பாட்டை அரசு நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டும். அப்படிக் கொண்டுவந்தால்தான் கிராமப் பகுதிகளில் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க நல்ல சந்தர்ப்பம் ஏற்படும். அந்த முறையை அரசு கையாளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த மாநிலத்தில் பொதுவாக எடுத்துக்கொண்டால் பல லட்சக் கணக்கான பூமிகள் தரிசாக கிடக்கின்றன. முன்னால் விவசாயம் செய்தவர்கள் விட்டுவிட்டுப் போனதெல்லாம் அப்படியே கிடக்கிறது. அந்தப் பகுதியிலே கிணறுகள் இருக்கின்றன. வரப்புகள் இருக்கின்றன. அதையெல்லாம் பார்த்து, அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு அவைகளைக் கொடுப்பதன் மூலம் அரசுக்கு நல்ல பெயர் கிடைக்கும். விவசாயிகளும் விவசாயம் செய்வார்கள். அந்த முறையை அரசு கையாள்வது மிக மிக நலம் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நீலகிரியில் கூடலூர்ப் பகுதியிலுள்ள விவசாயிகள் முன்னமேயே விவசாயம் செய்து கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு பட்டா கொடுக்காமல், அவர்களை வெளியேற்றியதற்காக போராட்டங்கூட

நடத்தினுர்கள். அவர்களுக்கு பட்டா கொடுக்காமல் இருந்தால், அவர்களுக்கு பட்டா கொடுத்து, விவசாயம் செய்ய அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு சின்கோனுவை எடுத்துக்கொண்டால் நல்ல வாசனை திரவியங்களெல்லாம் அந்தத் துறையில் செய்யப்படுகின்றன. ஜுரத்திற்கு சின்கோனு குளிகை மிகவும் அத்தியாவசியம். ஆனுல், அங்கு வேலை செய்யக்கூடிய தொழிலாளர்கள் மிகவும் கஷ்டப்படுகிறுர்கள். அவர்கள் வேலை பளுவைப்பற்றிக்கூட போராட்டம் நடத்தினுர்கள். அவர்களுக்கு எந்தவிதமான சௌகரியமும் செய்யப்படவில்லை. பல தொழிலாளர்கள் இன்னும் டெம்பரரியாகவே இருக்கிறுர்கள். அவர்களை பெர்மனெண்ட் ஆக்கவேண்டும். அவர்களுடைய சம்பளத்தை உயர்த்தினுல், வாழ்க்கைத்தரத்தை உயர்த்தினுல், அவர்கள் உற்சாகமாக வேலை செய்வார்கள்; அன்னிய நாட்டுச் செலாவணியும் ஏராளமாகக் கிடைக்கும்.

சின்கோனு தொழிலாளர்களுடைய குறைகளைத் தீர்த்துக் கொடுத்து, அவர்களுடைய சம்பளத்தை உயர்த்தி, நல்ல முறையில் அவர்களிடமிருந்து வேலை வாங்குவது நலம் என்று கூறி, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

திரு. ந. தருமலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, 1972–73-ம் ஆண்டுக்கான மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த மானியக் கோரிக்கையை வரவேற்று ஒரு சில கருத்துக்களை எடுத்துக்கூற விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதி காடுகள் நிறைந்த பகுதி. காடுகள் நிறைந்த பகுதியாக இருந்தாலும், அத்தனையும் எந்தவிதமான பலனும் தரக்கூடிய அளவுக்கு இல்லாமல், பொட்டைக் காடுகளாக இருக்கின்றன. அப்படிப்பட்ட காடுகளை ஏழை விவசாயிகளுக்குப் பகிர்ந்து கொடுத்தால், விவசாயப் புரட்சியில் அவர்களுக்கு முதல் இடம் கிடைக்கும் என்று நம்பியிருக்கிறுர்கள். அவர்களுக்கு கூட்டுறவு முறையிலாவது அந்த நிலங்களை ஒப்படை செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது சம்பந்தமாக எந்தவிதமான பலனும் இன்னும் விவசாயிகளுக்குக் கிடைக்கவில்லை. அவர்கள் எந்தவிதமான பலனையும் அனுபவிக்க முடியாத நிலையில் இருந்து கொண்டிருக்கிறுர்கள்.

1972 மார்ச் 27] [திரு. ந. தருமலிங்கம்]

பொதுவாக ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மலே கோட்டாலம் என்ற ஒரு பகுதி இருக்கிறது. அந்தப் பகுதியைப் பற்றி முன்னால் இருந்த சட்டமன்ற உறுப்பினர் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். 2,000 ஏக்கர் பொட்டல் காடுகளாக அந்த நிலங்கள் இருந்துகொண்டிருக்கின்றன. அந்த நிலங்களை 500 குடும்பங்களுக்கு, 1,000 குடும்பங்களுக்கு இரண்டு ஏக்கர் வீதம் அரசு பகிர்ந்து அளிக்கவேண்டும் என்று வற்புறுத்தி கேட்டுக் கொண்டுவருகிறோம். இதுவரையில் அது சம்பந்தமாக ஏதோ நடவடிக்கை நமது அரசு எடுத்திருக்கிறதே ஒழிய, தக்க நேரத்தில் அவர்களுக்கு நிலம் கிடைப்பதற்கு ஆவன செய்யப்படவில்லை. நான் ஒரு முறை அந்தப் பகுதிக்குச் சென்றிருந்தேன். மக்களுடைய மிக உருக்கமான கேள்விகளை நான் கேட்டு கண்ணீர் வடித்தேன். அந்த நிலங்களை அங்கு இருக்கும் ஏழை விவசாயிகளுக்கு பட்டா செய்துகொடுக்க வேண்டும் என்று அவர்கள் வெகு நாட்களாகக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். நான் அவர்களிடமிருந்து அன்புக் கட்டளைகளை பெற்று வந்திருக்கிறேன். நான் அரசிடத்தில் எடுத்துச்சொல்லி விரைவிலே பட்டா செய்து கொடுக்க ஏற்பாடு செய்கிறேன் என்ற உறுதிமொழியும் கொடுத்திருக்கிறேன். அந்த உறுதிமொழிக்கு ஏற்றவாறு நமது அரசு ஆவன செய்ய வேண்டுமென்று வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன்.

மற்றொன்று, வெறும் கரம்பாக கிடக்கக்கூடிய பகுதி. தரிசு நிலங்களால் எந்தவிதத்திலும் அரசுக்குப் பலன் கிடையாது. ஏதேனும் பலன் தரக்கூடிய அளவுக்கு இருந்தால் அரசு என்ன தடை போட்டாலும் நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். அரசுக்கு எந்தவிதமான பலனும் கிடைக்காத நிலங்களை ஏழை எளிய விவசாயிகளுக்கு பட்டா செய்து கொடுப்பதன் மூலம் அவர்கள் விவசாயம் செய்ய ஏதுவாக இருக்கும். ஆகவே, அந்த நிலங்களை அவர்களுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் அதேபோன்று கடுவனூர் என்ற ஓர் ஊர் இருக்கிறது. அது பொட்டல் காடாகக் கிடக்கிறது. அங்கே உள்ள காடுகளை அழித்து, முந்திரி போடலாம். முந்திரி பயிரிடக்கூடிய மணல் வளம் அங்கே இருக்கிறது. ஆகவே, அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று வேண்டிவிரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ந. தருமலிங்கம்] [1972 மார்ச் 27

மேலும், உதயமாம்பட்டூர்காடு, கருவானூரர் காடு, தியாக துர்க்கம் காடு, அவரியூர் காடு, சின்னமாம்பட்டூர் காடு போன்ற காட்டுப் பகுதிகள் இருக்கின்றன. இதுபற்றி மக்களுடைய கோரிக்கையை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவேண்டும். இது சம்பந்தமாக அரசாங்கத்திடம் மக்கள் எடுத்துச் சொல்லிக்கொண் டிருக்கிறார்கள். அரசிடம் கேட்டால் மத்திய அரசுக்கு தொடர் புடைய காடுகள் என்று சொல்கிறார்கள். நம்முடைய அரசு மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி, அவர்களுக்கு வேண்டிய பாதுகாப்பு அளிக்கவேண்டும். நிலம் இல்லாத ஏழைகளுக்கு இரண்டு ஏக்கர் வீதம் பிரித்துக்கொடுக்க வேண்டுமென்று வேண்டிவிரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

நாட்டிலுள்ள காடுகள் பல்வேறு இடங்களில் பொட்டல் காடு களாக கிடக்கின்றன, வீணாகக் கிடக்கின்றன. இவைகளை நிலம் இல்லாத ஏழை விவசாயிகளுக்கு புரட்சித் திட்டத்தின் கீழ் விவசாயம் செய்வதற்கு கூட்டுறவு முறையில் பட்டா செய்து தர வேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்றும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நீலகிரித் தைல மரங்களை நடுகிறார்கள். நாட்டின் பாதுகாப்புக்கு காடுதான் முக்கியம். அதற்கு ஏற்றவாறு இன்னும் வனத்துறையை பயன்படுத்தி, நீலகிரித் தைல மரங்களை வைக்கிறார்கள். ஆனால் என்னுடைய பகுதி யில் அந்த மரங்களினால் எந்தவிதமான பலனும் கிடையாது. 400 ஏக்கர், 800 ஏக்கர்களில் இந்த மரங்களைப் பயிரிடுகிறார்கள். அவை விறகுக்குத்தான் பயன்படுகின்றனவே தவிர, வேறு ஒன்றும் இல்லை. நமது அரசு எவ்வாறு ஊக்கத்தோடு செயல்படுகிறது என்பதை மக்கள் உணர்கிறார்கள். இருந்தாலும் அப்படி பயிர் செய்யப்பட்ட நீலகிரித் தைல மரங்கள் விறகுக்குத்தான் பயன்படுகின்றன. ஆகவே, நீலகிரித் தைல மரத்தை தவிர்த்து, விவசாயிகளுக்கு அந்த நிலங்களை பகிர்ந்து அளித்தால், அவர்கள் கூட்டுறவு முறையில் விவசாயம் செய்வார்கள், விவசாயப் புரட்சிக்கு ஒரு எடுத்துக்காட்டாக இருப் பார்கள் என்பதையும் தெரிவித்துக்கொண்டு, அம்மாதிரி செய்ய வேண்டும் என்று வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன்.

இம்மாதிரி பல விஷயங்களை நான் அமைச்சர் அவர்களுக்கு எடுத்துக் கூறியிருக்கிறேன். அவர்களும் விரைவில் முடித்துக் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். என்னுடைய தொகுதிக்கு நிச்சயம் விமோசனம் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடுதான் நான் இதையெல்லாம் சட்டசபையில் விவாதிக்கிறேன்.

1972 மார்ச் 27] [திரு. ந. தருமலிங்கம்]

எங்கள் பகுதி ஒரு காட்டுப் பகுதி, மலைப்பகுதி. எங்கு பார்த்தாலும் தீவுகளாக காட்சி அளிக்கின்றன. காடு இருக்கக்கூடிய நாடு வளமுடைய நாடு என்று சொல்லப்பட்டாலும், என்னுடைய பகுதி தீவு போன்ற தோற்றத்தைத்தான் அளிக்கிறது. நான் காட்டைச் சுற்றி ஒரு முறை வந்தேன். அங்கே வேலை செய்யக்கூடிய உத்தியோகஸ்தர்களைப் பார்த்தால் உண்மையிலேயே வருத்தப்படுகிறேன். வெய்யிலில் வேலை செய்து வியர்வைத் தண்ணீர் இத்துவிழுகிற அளவுக்கு அவர்கள் காடுகளை சுற்றி வருகிறார்கள். நல்ல அதிகாரிகளை வைத்துக்கொண்டு, ஏன் இப்படி ஏழை எளிய விவசாயிகள் தவிக்க வேண்டும் என்பது எனக்குப் புரியவில்லை. வனத்துறையில் வேலை செய்யக் கூடிய அதிகாரிகளுக்கு உத்தியோக உயர்வு கொடுக்க வேண்டும், நிறைய ஊதியம் கொடுக்கவேண்டும். மற்றைய அலுவலர்களுக்குக் கொடுக்கக்கூடிய ஊதியத்தைவிட, வனத்துறையில் வேலை செய்யக்கூடிய அலுவலர்களுக்கு அதிகமாக ஊதியம் கொடுத்தால் கூட தகும். அவர்கள் அப்படி உழைக்கிறார்கள். பயங்கரமான வனவிலங்குகள் மத்தியில் காட்டைச் சுற்றி வந்து உழைக்கிறார்கள், காவலாளிகளைப் போல் சுற்றி வருகிறார்கள். அவர்களுக்குத் தக்க பாதுகாப்பு கொடுக்க வேண்டும். தற்காப்புக்கு சில பொருள்கள் கொடுக்க வேண்டும். அவர்கள் குடும்பத்தை நல்ல முறையில் நடத்திச் செல்வதற்கு அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து தரவேண்டும். ஏன் இப்படிச் சொல்கிறேன் என்றால் என்னுடைய பகுதி காடுகள் நிறைந்த பகுதி. அங்கே காவல் புரிகின்ற அதிகாரிகளைப் பார்க்கும்பொழுது உண்மையிலேயே வருத்தப்படுகிறேன். அந்த அளவுக்கு உத்தியோகம் பார்த்து, சம்பாதித்து, குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய நிலையில் அதிகாரிகள் இருக்கிறார்கள். அந்த அதிகாரிகள் ஊக்கத்தோடு பாடுபடுகிறார்கள். அவர்களை நான் பாராட்டுகிறேன். என்னுடைய தொகுதி காடு நிறைந்த பகுதி என்று சொன்னேனே ஒழிய வேறு எதையும் சொல்ல விரும்பவில்லை. என்னுடைய பகுதியில் நெய்வாநத்தம் போன்ற ஊர் பகுதிகள் கோமுகி டாம் என்ற அணை கட்டப்பட்டதால் அந்த இடங்களில் உள்ள மக்களெல்லாம் குடியிருக்க நிலமில்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு வீடு கட்டி குடியிருக்க காட்டு நிலங்களை கொடுங்கள் என்று காட்டிலாகா அதிகாரிகளைக் கேட்டால், அரசாங்கத்தை கேளுங்கள் என்று சொல்கிறார்கள். அரசாங்கத்தை அணுகிக் கேட்டால் மத்திய சர்க்காரிடம் கேட்கவேண்டுமென்று சொல்கிறார்கள். இம்மாதிரியான சூழ்நிலையால் அந்த மக்கள் மிகவும்

அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நல்ல பல திட்டங்களை கொண்டு வருகிற இந்த நேரத்தில் நல்லபல நன்மைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்திப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தின் மீதான விவாதத்தில் என்னுடைய ஒரு சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

நான் பேசுவதற்கு எழுந்த உடனேயே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நான் பேசுகின்ற பொருள் இதுதான் இருக்கும் என்று அவர்களே சுட்டிக்காட்டுவதால் என்னுடைய கருத்தும் அவர்களுடைய கருத்தும் எவ்வளவு தூரம் ஒத்து இருக்கிறது என்ற காரணத்தால் நான் விரிவாக பேச வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன்.

இந்த அறிக்கையிலே நல்ல ஒரு ஆய்வுரை தந்திருக்கிறார்கள். காடுகள் எவ்வளவு தூரம் நாட்டுக்கு இன்றியமையாதவை, அவை எப்படி இந்த நாட்டினுடைய பொருளாதாரத்திற்கு அவசியம் என்பதைப் பற்றியெல்லாம் ஆராய்ச்சி செய்து முன்னுரையிலும், முடிவுரையிலும் தந்திருக்கிறார்கள். அவற்றைப் படிக்கிறபோது நான் உண்மையில் மெத்த மகிழ்ச்சி அடைந்தேன். ஆனால் ஆய்வுரை தந்த அதிகாரிகள் அதற்காக இங்கே நம்முடைய காடுகளைப் பாதுகாக்க என்னென்ன முயற்சிகளையும், நடவடிக்கைகளையும் எடுத்திருக்கிறார்கள் என்ற கேள்வியைக் கேட்டால் அதற்குப் பதில் இல்லை என்று நான் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுவாக இன்று தேசிய நிலையில் வளர்ச்சி 33 சதவிகிதம் ஆக இருக்கிறபோது இந்த மாநிலத்தில் இன்றைக்கு 16 சதவிகிதம்தான் என்பதை இந்த அறிக்கையிலேயே ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. இதை மாற்றுவதற்கு நாம் தீவிர முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். காடுகள் எல்லாம் அழிந்துவிட்டால் நிச்சயமாக சொல்லிக்கொள்கிறேன்—எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது; நான் சிறுவனாக இருக்கிறபோது வட ஆற்காடு மாவட்டத்தில் எவ்வளவு மழை இருந்தது; அந்த மழை இப்போதில்லை என்கிற நிலையில் இருக்கிறது. இதற்கு என்ன காரணம் என்றால் வட ஆற்காடு மாவட்டத்தில் மழை வருவதற்கு அடிப்படையாக இருந்த மலைகள், காடுகள் எல்லாம் அழிக்கப்பட்டிருக்கின்றன என்ற நிலைதான்.

1972 மார்ச் 27] [திரு. எம். ஏ. லத்தீப்]

என்னுடைய பகுதியில், ஆலங்காயம் ஒட்டிய பகுதியில் அடர்ந்த காடு இருந்தது. ஆனல் இப்போது அந்த ஆலங்காயம், காவலூர், ஜமாம்பூர் ஆகிய இடங்களிலிருந்த காடுகள் இல்லை; அழிக்கப்பட்டிருக்கின்றன. இந்த நிலை உடனடியாக மாற்றப்படாவிட்டால் நிச்சயமாக வட ஆற்காடு மாவட்டத்தில் மழை பொய்த்து விடும். அதைத் தவிர்க்க வேண்டுமென்று அரசை கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக நான் சொல்லிக்கொள்கிறேன். இங்கே கொடுத்திருக்கிற அறிக்கையில் இப்போது விறகு வெட்டி கொண்டு போக விடப்படும் குத்தகையின் மூலம் வருமானமாக லட்சத்துக்கும் மிக மிகக் குறைவான தொகை வருகிறது. ஆனல் வெட்டப்படுகிற விறகுகளை லாரி, லாரியாக கொண்டு வருகிறார்கள். பச்சைக் குழந்தைகளை வெட்டிக் கொண்டு வருவது போல் வெட்டி லாரி லாரியாக கொண்டு வருகிறார்கள். அதைப் பார்த்தபோது என்னுடைய இதயத்தில் ரத்தம் கசிந்தது.

ஆகவே, இந்தமாதிரி குத்தகைக்கு விடுவதை உடனடியாக மாற்ற வேண்டும். ஒரு லட்சம், இரண்டு லட்சம் வருமானம் எல்லாம் நமக்குத் தேவையில்லை. இதை உடனடியாக நிறுத்தவேண்டும். வட ஆற்காடு மாவட்டம் மட்டுமல்ல, வேறு மாவட்டங்களிலும் இந்த காடு வெட்டுகிற குத்தகையை உடனடியாக நிறுத்தச் சொல்லி உத்தரவிட வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் செய்யாவிட்டால் நாம் ஒரு நாள் இந்த மாநிலத்தில் காடுகளையே இழந்துவிடுவோம்.

எங்கள் பகுதியில் ஜவ்வாது மலை என்று ஒன்றிருக்கிறது. ஜவ்வாது மலை என்றால் அங்கே சந்தன மரம் இருக்கும், அகில் இருக்கும், முக்கனியும் இருக்கும். அதற்காக அந்த மலையைப் பற்றி புலவர்கள் கூட பாடியிருக்கிறார்கள். அந்த சந்தன மரங்களில் திருப்பத்தூரில் இருக்கும் டிப்போவில் ஓரளவுதான் கிடைக்கிறதென்று சொன்னல், அதை விட 100 மடங்கு அளவு களவு போகிறது. இதை வெளிப்படையாகச் சொல்லிக்கொள்கிறேன். இதை உடனடியாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜவ்வாது மலையில் நல்ல காடு இருக்கிறது. அதில் காட்டு எருமை, புள்ளி மான்கள் நிறைய இருக்கின்றன. அவைகளை எல்லாம் பாதுகாக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். அங்கே

ஆளுக்கொரு துப்பாக்கி வைத்துக் கொண்டு நாளுக்கொரு மிருகமாக அடித்துக் கொண்டிருக்கிறார்கள். அதைத் தடுப்பதற்கு வன விலங்கு சரணாலயம் ஒன்று ஏற்பாடு செய்ய வேண்டும். அங்கே ஒரு மான் பூங்கா ஏற்பாடு செய்வதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது)

திரு. இரா. மாணிக்கவாசகம்: பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே வனத்துறை மானியத்தினை வரவேற்று சிலபல கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன்.

வனத்துறை எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை நாடே நன்கறிந்திருக்கிறது. அப்படிப்பட்ட நிலையில், ஒருபுறத்தில் காட்டுப் பகுதிகளை எல்லாம் வெட்டி விட்டு விளை நிலங்களாக ஆக்க வேண்டுமென்றும், அப்படி அதை விளைநிலங்களாக ஆக்குகிற முறையில் ஈடுபட்டால் வனத்துறை அழிந்து விடும்; அதன் மூலம் வன விலங்குகள் அழிந்துவிடும்; நீர் பிடிப்பு அற்றுப் போய்விடும் என்றும் சொல்லியதைப் பார்க்கிறோம். வனத்துறையை அழிக்க வேண்டுமென்ற நோக்கம் எந்த உறுப்பினருக்கும், எந்த நிலையில் உள்ளவர்களுக்கும் உருவாகாது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். வனங்களில் இருக்கிற நிலங்களிலெல்லாம் அங்கே மரங்கள் வளர்க்கப்பட முடியாத நிலையில் சிலபல இடங்கள் இருப்பதை நாம் பார்க்கிறோம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

இப்படிப்பட்ட நிலைமையை கடந்த 20 ஆண்டுகாலமாக கண்ட பின்னர்தான் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இரண்டு ஆயிரம் ஏக்கர் நிலத்திற்கு மேல் கோவையில் இருக்கிற காட்டு நிலத்தில் உணவு உற்பத்தி செய்கிற நிலையை உருவாக்கி இருக்கிறார்கள். அதற்காக அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால் எப்படி எப்படி உபயோகித்தால் நாடு பயன் பெறும் என்று உணர்ந்து செய்த காரணத்திற்காக, அப்படிச் செய்ததின் காரணத்தால் வன விலங்குகளை எந்த அளவிற்குப் பாதுகாக்க வேண்டுமென்று நினைக்கிறீர்களோ அந்த அளவிற்கு அந்த மலைப் பகுதிகளில் வசிக்கிற மக்களையும் பாதுகாக்க வேண்டும். அப்படிச் செய்வதற்காக அந்த மலைவாழ் மக்களுக்கு அங்கேயுள்ள நிலங்களை கொடுத்தால் அதன்மூலம் அவர்கள் நல்ல பலன் பெறுவார்கள்.

1972 மார்ச் 27] [திரு. இரா. மாணிக்கவாசகம்]

அதே நேரத்தில் அங்கே இருக்கின்ற காடுகளில் தேக்கு, சந்தன மரம், மூங்கில் மரங்கள், தேன் போன்ற விலையுயர்ந்த பொருட்கள் கிடைக்கின்றன. அவை சம்பந்தப்பட்ட தொழில்களை கூட்டுறவுத் துறையின் மூலம் ஆரம்பிப்பதற்கு ஆர்வத்தோடு இருக்கிறார்கள். அந்த வசதி செய்து கொடுத்தால் அவர்கள் மிகுந்த பயனடைவார் கள்; அவர்களுடைய வாழ்வை வளமுடையதாக்கியவர்கள் ஆவோம். இப்போது மூங்கில் மரங்களை தனிப்பட்டவர்களுக்கு குறைந்த விலைக்கு வழங்குகிறோம். அதனால் தனிப்பட்டவர்கள்தான் வளர் கிறார்கள். இதைக் கருத்திலே கொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியாகிய தொண்டாமுத்தூரில் பல ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்கள் தரிசாகக் கிடக்கின்றன. அந்த நிலங் களைப் பட்டா செய்து கொடுக்காவிட்டாலும் நீண்டகால குத்தகை செய்து கொடுத்தால் அங்குள்ள மக்கள் நல்ல பயனடைவார்கள். இந்த அரசாங்கம் மக்களுக்கு எவ்வளவோ நல்ல காரியங்களை எல்லாம் செய்து வருகிறது. அதைப் போன்று அந்தப் பகுதி மக்களுக்கும் அந்த ஆயிரக்கணக்கான ஏக்கர் தரிசு நிலங்களை குத்தகை செய்து கொடுத்தால்கூட, அரசின் ஊக்கத்திற்கும், உறுதிக்கும் உறுதுணையாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

இப்போது காட்டை அழித்துவருவதாகச் சொல்கிறார்கள். காட்டை அழிக்கின்ற நிலைமை ஏற்படுவதற்கு காரணம் விறகுப் பஞ்சம். விறகுக்காக அதிக மரங்களை அழிக்கிறார்கள். விஞ்ஞான ரீதியில் மின்சாரம், வாயுப் பொருட்களைப் பயன்படுத்தும் முறையை எல்லோரும் தெரிந்துகொண்டால் இந்த நிலைமை வராது. (மணி யடிக்கப்பட்டது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மீண்டும் மாலை 4 மணிக்கு பேரவை நிகழ்ச்சி நடைபெற இருக்கிறது. 10 நிமிடங் களுக்குமேல் பேசினால் மணி அடிக்க வேண்டியிருக்கிறது. எனவே, சீக்கிரம் முடித்துக்கொண்டால்தான் அங்கத்தினர்கள் உணவருந்தி விட்டு, குறிப்பிட்ட நேரத்திற்குள் வருவதற்கு வசதியாக இருக்கும். ஆகையால் பேசுகின்ற உறுப்பினர்கள் குறிப்பிட்ட நேரத்திற்குள் முடித்துவிட வேண்டும்.

திரு. இரா. மாணிக்கவாசகம்: காடுகளுக்கு பாதுகாப்பு அளிப்பது சிறந்ததுதான். அது பாராட்டப்பட வேண்டிய ஒன்றுகும். காடுகள் பாதுகாக்கப்படுவதால் நமது வன விலங்குகள் பாதுகாக்கப்படுகின்றன. அதேநேரத்தில் மலைப்பகுதிகளுக்குச் செல்வதற்கு போதுமான பாதை வசதிகள் இல்லை. அதனுல் அங்குள்ள விளை பொருட்களை கொண்டு வருவதற்கு மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. ஆகவே, மலைகளுக்குச் செல்ல வேண்டிய வழித்தடங்களை செம்மைப் படுத்துவதற்கு ரூ. 5 லட்சம் ஒதுக்கியிருப்பதை இன்னும் அதிகமாக்க வேண்டும். 23 கிலோமீட்டர்தான் இந்த ஆண்டு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அது நம்முடைய மலைவளத்திற்குப் போதாது.

அதைப்போன்று எங்கள் பகுதியாகிய சிறுவாணிப் பகுதியில் நிறைய ஏலக்காய் கிடைக்கிறது. மேலும் ஏலக்காய் உற்பத்தியைப் பெருக்குவதற்குரிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. ஆகையால் அந்தப் பகுதி மக்கள் கூட்டுறவுத் துறையில் ஏலக்காய் சம்பந்தப் பட்ட தொழில்களை நடத்த விரும்புகிருர்கள். அதற்கு அரசாங்கம் ஊக்கமளித்தால், ஏலக்காய் உற்பத்தி பெருகி, அந்தப் பகுதி மக்கள் வளம் பெறுவதோடு, ஏலக்காய் விலையும் குறையும். (மணி அடிக்கப் பட்டது)

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி: தலைவரவர்களே, வனத்துறை அமைச்சரவர்கள் அளித்திருக்கின்ற இந்த மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இந்த மானியக் கோரிக்கை விளக்க அறிக்கையில் வனத்துறையின் முக்கியத்துவம் நன்கு விளக்கப்பட்டிருக்கிறது. மண்வளப் பாதுகாப்பு, நீர்வளப் பாதுகாப்பு, தட்ப வெப்ப நிலை, மணல் அரிப்பைத் தடுத்தல், வெள்ளப்பெருக்கைக் குறைத்தல் போன்ற பத்து காரியங்களுக்கு வனங்கள் பெரிதும் உதவுவதாக குறிப்பிட்டிருக்கிருர்கள். வனப் பாதுகாப்பில் நம்முடைய இலக்கு 16 சதவிகிதம் என்று குறிப்பிட்டிருக்கிருர்கள். தேசிய சதவிகிதம் 33 சதவிகிதம். அதில் பாதியாகிய 16 சதவிகித இலக்கினைத்தான் நாம் அடைந்திருக்கிருேம். அதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இதற்கு முன்பு 17 சதவிகிதம் இருந்தது. இப்போது அந்த அளவு குறைந்திருக்கிறது. வரவர அதிகமாகிக் கொண்டு போவதற்குப் பதிலாக ஒரு சதவிகிதம் குறைந்திருக்கிறது.

1972 மார்ச் 27] [திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி]

காட்டு வளத்தைப் பெருக்குவதற்கு நாம் ஒரு குறிக்கோளை வைத்துக்கொள்ள வேண்டும். இப்போது இருக்கின்ற 16 சத விகிதத்தை 35 சதவிகிதமாக உயர்த்த வேண்டுமென்ற ஒரு குறிக்கோளை வைத்துக்கொண்டு, கொஞ்சம் கொஞ்சமாக 20 சதவிகிதம், 25 சதவிகிதம் என்று உயர்த்திக்கொண்டே செல்ல வேண்டும். இனி மேலாவது அந்த முயற்சியை நாம் மேற்கொள்ள வேண்டும். ஏனென்றால் இது மிகவும் முக்கியமான விஷயம். இதை நாம் நல்ல முறையில் செயல்படுத்த வேண்டுமென்றால், நம்முடைய இலக்கினை வகைப்படுத்தி செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நான் ஒரு சின்ன யோசனையைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய காட்டு இலாகாவில் இப்போது வன விலங்குகள் சரணாலயம் இருக்கிறது. நம்முடைய சென்னையிலே ஒரு விலங்குகள் கண்காட்சி இருக்கிறது. அது இயற்கையான சூழ்நிலையில் இல்லாததால், சிறப்பான முறையில் அமையவில்லை. எனவே, மிருகக் கண்காட்சிகளை அமைக்கும்போது, மிருகங்கள் இருக்கக்கூடிய இயற்கையான சூழ்நிலைகளில் அமைக்கவேண்டும். இயற்கையான சூழ்நிலைகளில் கண்காட்சியை அமைத்து, நமது மாநிலத்தில் காணப்படுகின்ற எல்லா மிருகங்களின் வகைகளையும், வெளி மாநிலங்களில் காணப்படுகின்றன விலங்கின வகைகளையும், மற்றும் வெளிநாடுகளில் காணப்படுகின்ற அபூர்வமான விலங்கினங்களையும் அங்கே வளர்க்க வேண்டும். அப்போது கண்காட்சியும் நன்றாக அமையும், இயற்கையின் சூழ்நிலையும் கண்களுக்குக் குளிர்ச்சியை அளிக்கும். மற்ற மாநிலங்களில் உள்ளவர்களும், அயல்நாடுகளில் உள்ளவர்களும் அதை வந்து பார்ப்பதற்கும் ஆர்வம் ஏற்படும். அவர்கள் காட்சி சாலையைச் சுற்றிப் பார்ப்பதற்கு யானை மீது செல்லலாம் அல்லது வேறு வசதிகளை ஏற்படுத்திக்கொள்ளலாம்.

அதோடு காட்சிசாலையை ஒட்டி பிரயாணிகள் தங்குவதற்கு ஏற்ற வகையில் டூரிஸ்ட் பங்களாக்களையும் அமைக்கவேண்டும். அப்படிச் செய்தால் சிறந்த பயனுள்ளதாக அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, நமது மாநிலத்தில் பறவைகள் சரணாலயம் ஒன்று இருக்கிறது. அங்கே பலவிதமான பறவை இனங்களைப் பார்க்கிறோம். இந்த பறவைகள் சரணாலயத்தில் பலவிதமான—பல நாடுகளிலுள்ள

பறவைகளைக் கண்டு களிப்பது மட்டுமல்ல; நமக்கு வேறு பல வகைகளிலும் அது பயன்படுகிறது. அதாவது அந்தப் பறவைகளின் எச்சம் சிறந்த சத்துள்ள உரமாகவும் பயன்படுகிறது. பறவைகளின் எச்சம் சிறந்த உரமாக இருப்பதால், அந்தப் பகுதிகளிலே இருக்கக் கூடிய நிலங்களில் உற்பத்திப் பெருக்கமும் அதிகரிக்கிறது. ஆகவே, இப்போது ஒன்றாக இருப்பதை, 2, 3 என்று அதிகப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சின்கோனா பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சின்கோனாவில் இப்போது நாம் ஒரு ஆராய்ச்சிப் பிரிவைத் தொடங்கி இருக்கிறோம். இதற்கு முன்பு இங்கே கிடைக்கக் கூடிய மருந்து மூலிகைகளை—"ரா மெட்டீரியல்ஸ்"—வெளி நாடுகளுக்கு அனுப்பி, அதை அவர்கள் மருந்தாக ஆக்கி நமக்குக் கொடுத்து வந்தார்கள். ஆனால் இப்போது இருக்கக்கூடிய நம்முடைய இந்த ஆராய்ச்சிப் பிரிவினால் அந்த மருந்துகளை நாமே தயாரித்துக் கொள்ளலாம்; அதற்குரிய முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். அந்த முயற்சியை இன்னும் அதிகமாக ஊக்குவிக்க வேண்டும். இந்த முயற்சியினால் நாம் வெளிநாடுகளுக்கு மூலிகைகளை—ரா மெட்டீரியல்களை—அனுப்பாமல் நாமே அதிலிருந்து மருந்து தயாரித்துவிடலாம். அதனால் அன்னியச் செலாவணி மிச்சமாகும். எனவே, அந்த ஆராய்ச்சிக்கு இன்னும் அதிகத் தொகை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது).

* திரு. நா. வெ. குருசாமி :-பேரவைத் தலைவர் அவர்களே, வனத்துறை மானியக் கோரிக்கை சம்பந்தமாக என்னுடைய சில கருத்துக்களைக் கூறலாம் என்று ஆசைப்படுகிறேன்.

எனக்கு முன்பு பேசிய ஆளும் கட்சி உறுப்பினர்கள் வனத்துறை நிர்வாகம் எம்மாதிரி இருந்தது, இப்போது எப்படி உள்ளது, அதில் உள்ள ஒருசில குறைகள் என்ன என்பதைப்பற்றிக் கூறினார்கள். நேரம் அதிகம் இடம் கொடுக்காத காரணத்தினால் மேலும் குறைகளை அதிகமாகச் சொல்ல நான் விரும்பவில்லை.

என்னுடைய வர்ஷநாடு பகுதியில் பட்டாக்கள் சில பேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் பட்டா கொடுக்கப் படாமல் சில காடுகள் இருக்கின்றன. அவற்றிற்கும் பட்டா கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

நேற்றையதினம் ஒரு கேள்வி கூடக் கேட்டேன். வைகை தானியல் பயிற்சிப் பள்ளியில் இருக்கும் மியூசியத்தை வைகை ஆண்டிப்பட்டிச் சாலைக்கு ஒரு நல்ல இடத்திற்கு மாற்றினால் மிகவும் உபயோகமாக இருக்கும். பயிற்சிப் பள்ளிக்குப் பக்கத்தில் இருப்ப தால் யாரும் பார்ப்பதில்லை. நிறையப்பேர் வைகை அணையைப் பார்க்க வருகிறார்கள். வைகை ஆண்டிப்பட்டி சாலையில் அதை ஏற்படுத்தினால் அங்கு வருகிற மக்கள் எல்லாம் கண்டு களிக்க ஒரு வாய்ப்பை ஏற்படுத்தும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். குறிப் பாக திட்டக் குழு தலைவர் அவர்களும், திட்டக் குழு உறுப்பினர் களும் வைகை அணையைப் பார்க்க வந்தார்கள். அவர்களிடமும் இந்தக் கருத்து சொல்லப்பட்டது. அதையும் திட்டத்தில் சேர்க்க அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் வைகை அணையைப் பார்க்க தினசரி பல்லாயிரக்கணக் கான பேர்கள் வந்துகொண்டிருக்கிறார்கள். மைசூருக்கு அடுத்ததாக வைகை அணையில் பார்க்குகள் நல்ல முறையில் இருப்பதாக எண்ண வேண்டியிருக்கிறது. அந்த வைகை அணைப் பகுதியில் ஒரு மிருகக் காட்சிசாலையை ஏற்படுத்தினால் பார்க்க வருகிறவர்களுக்கு உதவியாக இருக்கும் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

வனப் பாதுகாப்பாளர்களுக்கு அவர்களது பயிற்சிக் காலத்தில் ஊதியம் போதுமான அளவு இல்லாத காரணத்தினால் தங்கள் குடும்பம் வேறு இடத்திலும் அவர்கள் வேறு இடத்திலும் இருக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே அவர்களது ஊதியத்தை உயர்த்திக் கொடுத்தால் உதவியாக இருக்கும். மனைவி மக்களோடு சேர்ந்து வாழ சந்தர்ப்பம் ஏற்படும் என்று தெரிவித்துக் கொள் கிறேன்.

அடுத்து, வைகை அணைப்பகுதியில் தானியல் பயிற்சிப்பள்ளிக்குப் பக்கத்தில் பல ஆண்டுகளாக சுற்றுப்புற கிராமங்களில் உள்ள மக்கள் போய்க் கொண்டிருந்த பாதைகள் இருந்தன. காட்டிலாகா அந்தப் பாதைகளை எல்லாம் அடைத்திருக்கிறது. அந்த அடைப்புக்களை அகற்றி மக்களுடைய போக்குவரத்துக்கு அந்தப் பாதைகளைத் திறந்துவிடும்படியாகக் கூறிக்கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. எம். சுரேந்திரன்: உதவி சபாநாயகர் அவர்களே, இங்கே வைக்கப்பட்டிருக்கிற காட்டு இலாக்கா மானியத்திலே ஒரு சில வார்த்தைகள் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

சில வருஷங்களுக்கு முன்னுல் காடு என்று சொன்னுல் மிருகங்கள் வாழ்கின்ற இடம் என்று பொருளாகும். ஆனுல் இப்போது மிருகங்கள் வாழ்வதைவிட ஜனங்கள் அதிகமாக நடமாடுகிற இடமாக மாறிக்கொண்டு வருகிறது என்பதை இங்கே தந்திருக்கிற அறிக்கை மூலமாக அறிய முடிகிறது. அப்படி மாறிக்கொண்டிருப்பதற்குக் காரணம் காட்டின் பிரயோசனம் முன்பு இருந்த தன்மையில் இருந்து மிக விரிவாக மாறிக்கொண்டு வருகிறது என்பதுதான் அதற்குப் பொருள். முன்பு ஜனங்கள் காடுகளில் இருந்து விறகுகளை வெட்டிப் பயன்படுத்திக்கொண்டு வந்தார்கள். ஜனத்தொகை அதிகமாக அதிகமாக விறகு வெட்டுவதும் அதிகமாகிவிட்டது. காடுகளில் விறகு வெட்டும்போது விறகு வெட்டும் குத்தகைக்காரர்கள் மிக அதிகமாகத் திருடுகிருர்கள் என்ற புகார்கள் அவ்வப்போது வந்துகொண்டே இருக்கின்றன. அவைகளைக் கண்காணிப்பதில் இன்னும் சிறிது அதிகமாகக் கவனம் செலுத்த வேண்டுமென்பது பிரதானமான ஒன்ருகும்.

அதேநேரத்தில் இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் மிருகங்களைப் பாதுகாப்பதற்கு சரணுலயங்களை உண்டாக்க வேண்டுமென்று கூறினுர்கள். இப்படி உண்டாக்க வேண்டுமென்பதற்குக் காரணம் காடுகளில் உள்ள மிருகங்களைக் கண்டு மனிதர்கள் ஓடி ஒளிந்ததற்குப் பதிலாக இன்றையதினம் மனிதர்களைக் கண்டு மிருகங்கள் பயந்தோடிவிடுகின்றன என்ற காரணத்திஞல் அங்கங்கே மிருகங்களுடைய சரணுலயங்களை உருவாக்கிஞல்தான் அவைகளைப் பாதுகாக்க முடியும் என்கிற நிலை உருவாகியிருக்கிறது. காடுகளில் மிருகங்கள் தேவையா இல்லையா என்பதை காட்டிலாகாவைச் சேர்ந்தவர்கள்தான் தீர்மானிக்க வேண்டும். அவை தேவையாஞல் முறையான வகையில் பாதுகாக்க தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

காடுகள்—பாதைகள் முன்பு இருந்ததைவிட இப்போது அதிகமாகத் தேவைப்படுகின்றன. அந்தப் பாதைகளை சரியான முறையில் அமைத்துத்தர நடவடிக்கை எடுக்கவேண்டும்.

1972 மார்ச் 27] [திரு. எம். சுரேந்திரன்]

அடுத்து இன்றையதினம் காடுகளில் உற்பத்தியாகிற மூங்கில், புல், மிளாறு போன்றவை எல்லாம் பல தொழிற்சாலைகளுக்கு மூலப் பொருளாகப் பயன்படுகின்றன. இப்படி பல்வேறு புல், மரங்களை வளர்ப்பது காட்டிலாகா. காட்டிலாகாவுக்குச் செலவு செய்கிற பணம் பொதுமக்களுடையது. காடுகளை அபிவிருத்தி செய்வதற்காக நாம் செலவிடுகிற பணமும் பொதுமக்களுடையது. இப்படி பொது மக்களுடைய பணத்தைச் செலவிட்டு—காடுகளில் வளர்க்கப்படுகிற பொருள்களை சில தனிப்பட்ட தொழிற்சாலைகளுக்கு மிகவும் குறைந்த விலைக்கு கொடுப்பதாக அறிகிறேன். எப்படி பெரிய தொழிற்சாலை களுக்கு மின்சாரத்தை மிகக் குறைந்தவிலையில் கொடுக்கிறோமோ அது போல காட்டுப்பொருள்களையும் மார்க்கெட் விலையைவிடக் குறைந்த விலையில் கொடுப்பதானது—ஜனங்களுடைய பணத்தை ஒரு சிலருடைய சொந்தலாபத்திற்காகப் பயன்படுத்துவதாகவே ஆகும். இப்படி மக்களுடைய பணத்தை விரயம் பண்ணுவதாக நாம் காடுகளில் உற்பத்தி செய்யப்படுகிற மூலப்பொருள்களை அளிப் பதைக் காட்டிலும் அது மக்களுக்குப் பயன்படுகிற வகையில் அமைய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல மண்வளப் பாதுகாப்பு என்பதாக மேட்டூர் அணைப்பகுதியில் ஒருதிட்டம் நடக்கின்றது. அதற்கு ஒரு வரன்முறை இல்லை. 730-ல் இருந்து 800 என்று கணக்குச் சொன்னால் அதற்குள் மரம் வைப்பதைப்பற்றி ஆட்சேபணையில்லை. சில இடங்களில் மராமத்து இலாகா நிலங்களில் விவசாயம் செய்கிறார்கள் என்பதற் காக விவசாயம் செய்கிற இடங்களில் எல்லாம் கண்டகண்டபடி மரங்கள் வைப்பது சரியல்ல. மரங்கள் முறையாக நடுவதற்கும், விவசாயிகளுக்கு வேலைசெய்கிற முறையிலும் இந்த மண்வள பாது காப்புத் திட்டம் செயல்பட வேண்டும் என்று தெரிவித்துக்கொள் கிறேன்.

இங்கே காட்டுவளம் 33 சதவிகிதம் கிடைத்துவந்ததற்கு மாறாக 16 சதவிகிதம் ஆகக் குறைந்திருக்கிறது. இம்மாதிரி குறைவு நாளா வட்டத்தில் அதிகமாக ஏற்படும் என்று நினைக்கிறேன்.

முன்பு மழைக்கு காடுகள் வேண்டும் என்கிற ஒரு சித்தாந்தம் சொல்லப்பட்டது. ஆனால் இன்றைக்கு இஸ்ரேல் போன்ற நாடு களில் காடுகளே இல்லாமல் மழை பெய்வதைப் பார்க்கிறோம்.

[திரு. எம். சுரேந்திரன்] [1972 மார்ச் 27

இப்படி நம்முடைய கடந்தகால மதிப்பீடு காலப்போக்கில் மாறுகிறது. மக்களும் விறகுக்குப் பதிலாக காஸ், மின்சாரம் ஆகியவற்றைப் பயன்படுத்த ஆரம்பித்தார்கள் என்ருல் காடுகளில் விறகுக்காக மரங்கள் வளர்க்கவேண்டும் என்கிற தேவை கூடக் குறையும். ஆகவே வேறு எந்த வகையில் காடுகளை அதிக லாபம் உடையனவாக ஆக்கலாம் என்பதும் பரிசீலிக்கத்தக்கது.

அடுத்து, காடுகள் என்று மரங்கள் இருந்தாலும் பரவாயில்லை. வெறுமனே பொட்டலாக இருப்பதை எல்லாம் காடுகள் என்று வளைத்து சும்மா போட்டிருப்பது புத்திசாலித்தனம் அல்ல. வேறு எந்தப் பலனையாவது அடைகிற வகையில் அவற்றைப் பயன்படுத்துவதுதான் சரியானது.

இப்படிப்பட்ட நிலங்கள் வழங்குவதில் பல கோளாறுகள் ஏற்பட்டிருக்கின்றன. என்னுடைய தொகுதியில் வனவாசி பகுதியில் நிலம் இருப்பவர்களுக்கு நிலம் வழங்கப்பட்டிருக்கிறது. நிலம் இருப்பவர்களுக்கே நிலம் வழங்கியது குறித்து ஹைகோர்ட்டிலே ஒரு ரிட் பதிவாகியிருக்கிறது. நிலம் வழங்கப்படும்போது சரியான கண்காணிப்பு இருக்கவேண்டும்.

என்னுடைய தொகுதியில் தண்டா பகுதியிலிருந்து உரத்திற்குத் தேவையான தழை வேண்டுமானுல் அதற்கு மேட்டூரிலிருந்துதான் பர்மிஷன் வாங்க வேண்டியிருக்கிறது. இப்படி பர்மிஷன் வாங்குவது விவசாயிகளுக்குக் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதியிலே கட்டணத்தைக் கட்டி பர்மிஷன் வாங்க வசதி செய்து தரவேண்டும். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. ஜே. ஜேம்ஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ள மானியக் கோரிக்கையின்மீது ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

சுருக்கமாக வனத் துறையின் கீழ் கன்னியாகுமரி ஜில்லாவில் இருக்கும் நிலைமைகளைச் சொல்ல விரும்புகிறேன். கன்னியாகுமரி ஜில்லாவில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரப்பர் பிளான்டேஷனுக்காக 100 இலட்சம் ரூபாய் செலவில் 800 ஹெக்டேர் நிலப்

1972 மார்ச் 27] [திரு. ஜே. ஜேம்ஸ்]

பரப்பில் விஸ்தரிக்க இருக்கின்றோம் என்ற செய்தியைக் கண்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். அந்த அறிக்கையில் கூடுதலான விவரங்களைத் தந்திருந்தால் இன்னும் வசதியாக இருந்திருக்கும். ரப்பர் பயிரிடப்படும் விதம், அதன் பயன்கள், அதனால் ஏற்படும் லாபம் போன்றவற்றை இன்னும் விரிவான அளவிலே கொடுத்திருந்தால் சட்டமன்ற பேரவை அங்கத்தினர்கள் ரப்பர் பிளேன்டேஷனைப்பற்றி நன்கு அறிந்துகொள்ள வசதியாக இருந்திருக்கும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கும் அறிக்கையின் 11-வது பக்கத்தில் "நான்காவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் 800 ஹெக்டேரில் ரூ. 100 இலட்சம் செலவில் ரப்பர் பயிரிடப்படும்" என்று போடப்பட்டிருக்கிறது. ஆனால் அதே அறிக்கையில் 22-வது பக்கத்தில் "கன்னியாகுமரி மாவட்டத்தில் ரூ. 124.63 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் 800 ஹெக்டேர் பரப்பளவில் இரப்பர் மரத் தோட்டங்களை வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்படி ஒன்றுக்கொன்று முரண்பட்ட நிலையில் புள்ளிவிவரம் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அடுத்து வருகிற ஆண்டிலாவது இந்தக் குறைகள் நீக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ரப்பர் தோட்டங்களைப் பொறுத்தவரையில் தனி அறிக்கையை அரசாங்கம் தருமானால் மிக்க பயனுள்ளதாக இருக்கும்.

அடுத்தபடியாக, ரப்பர் தோட்டமானது கன்னியாகுமரி ஜில்லாவில் எந்த நோக்கத்திற்காக ஆரம்பிக்கப்பட்டிருக்கிறதென்பதை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ரப்பரைப் பயன்படுத்தும் மோட்டார் தொழில் போன்றவற்றின் வளர்ச்சி அதிகரித்து வருவதால் ரப்பரின் தேவையும் பெருகும் என்பதால் நாம் ரப்பர் தோட்டத்தை விரிவுபடுத்திக் கொண்டே போகிறோம். நமது மாநிலத்தில் ரப்பர் டயர் பேக்டரி ஒன்றை வெளிநாட்டிலிருந்து ரப்பர் கொண்டு வந்து அமைக்கப் போவதாக தொழில் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படிச் செய்தால் நம் நாட்டில் உற்பத்தியாகின்ற ரப்பருக்கு மார்க்கெட் இல்லாமல் போய் விடும். ஆகவே, அரசு இதைப் பரிசீலிக்க வேண்டும்.

அடுத்தபடியாக ரப்பர் தோட்டத்தை அன்றிருந்த அரசாங்கம் தொடங்கியிருந்தாலும், இந்த நாட்டில் இருக்கும் மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்காகத்தான் தொடங்கப்பட்டது. இப்பொழுது

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1972 மார்ச 27

இந்தத் தோட்டங்களை இலங்கை, போன்ற இடங்களிலிருந்து வரும் அகதிகளுக்கு மறுவாழ்வு அளிக்கும் திட்டத்தின் பெயரால் விஸ்தரிக் கிறோம். இந்தத் திட்டம் செம்மையான முறையில் செயல்பட வில்லையென்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இன்றையதினம் ரப்பர் தொழிலில் பணிபுரி கின்ற அதிகாரிகள் பயிற்சி பெற்றவர்கள் அல்ல. அவர்களை வைத்து ரப்பர் தொழில் நடத்தினுல் அது நஷ்டத்தில்தான் போய்முடியும். ரப்பர் மரத்திலிருந்து ரப்பர் பால் எடுக்கும் முறை மிகமிக நுட்ப மானது. ரப்பர் பால் எடுக்கும் கருவியை சற்று ஆழமாகப் பதித்து விட்டால் மரம் கெட்டுவிடும், மேலாக வெட்டினுலும், மரத்தி லிருந்து பால்கிடைக்காது. ஆகவே ரப்பர் மரத்திலிருந்து பால் எடுப்பதைப் பொறுத்தவரையில் தனியான பயிற்சி இருக்க வேண்டும். பயிற்சி உள்ளவர்களால்தான் செம்மையாக பால் எடுக்க முடியும். இல்லாவிடில் சரியான அளவில் ரப்பர் பாலும் கிடைக்காது; அதேசமயத்தில் ரப்பர் மரங்களும் கெட்டுப்போய் நஷ்டத்தில் கொண்டுபோய் விட்டுவிடும். ஆகவே, ரப்பர் தோட் டங்களில் உத்தியோகம் செய்கின்ற அதிகாரிகள், பணியாளர்கள் ஆகி யோருக்கு நல்ல பயிற்சி அளிக்கவேண்டும். வேண்டுமானுல் மலேசியா, கொழும்பு போன்ற நாடுகளுக்கு அனுப்பி பயிற்சி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இப்போது எடுக்கக்கூடிய பாலே ஷீட்டாக மாற்றக்கூடிய ப்ராசசிங்ஐ முறையாகச் செய்யவில்லையென்ருல் முதல் தரமாக கிடைக்க வேண்டிய ரப்பர் ஷீட் இரண்டாம் தரமாக மாறி விடும், இரண்டாம் தரமாக கிடைக்கவேண்டியது மூன்ரும் தரமாக மாறிவிடும். முதல் தரத்திற்குக் கிடைக்கக்கூடிய விலே இரண்டாம் தரத்திற்குக் கிடைக்கிறது. இரண்டாம் தரத்திற்குக் கிடைக்கக் கூடிய விலே மூன்ரும் தரத்திற்குக் கிடைக்கிறது. இதனுல் பெரும் நஷ்டம் ஏற்படும். அதில் கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, 1,500 தொழிலாளர்கள் பல கோரிக்கைகளே அரசாங்கத்திற்கு வைத்திருக்கிருர்கள். அதை ஏற்காவிடில் போராட் டங்கள் நடைபெறுவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாகச் சொன்னுர்கள். கடந்த 20-ம் தேதி முதல் வேலைநிறுத்தம் செய்து, அந்தப் பகுதி அமைதியில்லாத நிலையில் இருக்கிறது. அரசாங்கத் திற்கு அவர்கள் மனு கொடுத்துப் பார்த்தார்கள். சட்டமன்ற

1972 மார்ச் 27] [திரு. ஜே. ஜேம்ஸ்]

உறுப்பினர்களும் மனுக் கொடுத்துப் பார்த்தார்கள். நாங்கள் கொடுத்த மனுக்கள், கோரிக்கைகள் எல்லாம் "செவிடன் காதில் ஊதிய சங்குபோல" ஆகிவிட்டது. இந்த நிலையில்தான் அவர்கள் வேலைநிறுத்தம் செய்திருக்கிறார்கள். அரசாங்கம் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் ஏற்கனவே 7 நிமிடங்கள் எடுத்துக்கொண்டிருக்கிறீர்கள். சீக்கிரத்தில் பேச்சை முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : எனக்குக் கொஞ்ச நேரம் தரும்படிக் கேட்டுக் கொள்கிறேன். 1,500 பேர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நிரந்தரமான வேலை அளிக்க வேண்டும்; குடியிருப்புக்கு வீடு அளிக்க வேண்டும். தொழிலாளர்களுக்கு நிரந்தர வேலை கொடுத்து முடிகிறவரைக்கும் கேஷுவல் லேபர் ஓர்க்கர்ஸ்களை வைக்கக்கூடாது. தனியார் தோட்டங்களில் கொடுக்கின்ற சம்பளம் கொடுக்கவேண்டும் என்றெல்லாம் பல கோரிக்கைகளை முன்வைத்துப் போராட்டம் நடத்துகிறார்கள். இன்றைக்கு இருக்கின்ற தனியார் தோட்டங்களில் கிடைக்கின்ற ஊதியத்திற்கும், அரசாங்க ரப்பர் தோட்டங்களில் கிடைக்கின்ற ஊதியத்திற்கும் வித்தியாசம் இருக்கிறது. அரசாங்க ரப்பர் தோட்டங்களில் வேலை செய்பவர்கள் 1 ரூபாய் 56 காசு குறைவாகப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். 31—12—1969-ல் லேபர் ஆபீசர் முன்னிலையில் ஒரு ஒப்பந்தம் நடைபெற்றது. அது லேபர் கமிஷனரின் தீர்ப்புக்கு அனுப்பிவைக்கப்பட்டது. அவர் அதை பரிசீலனைசெய்து தனது அறிக்கையை அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். அரசாங்கத்திலிருந்து இதுவரை அதற்கான ஆணை பிறப்பிக்கப்படவில்லை. லேபர் அட்வைசரி கமிட்டி என்ற ஒன்று இருக்கிறது. அந்தக் கமிட்டிக்கு மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் தலைமை வகிக்கிறார்கள். அது பல தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறது. லேபர் ஆக்ட் ஒரு இம்மியளவாவது கூட அனுசரிக்கப்படவில்லை. கழிந்த ஆண்டு பட்ஜெட் உரையின்மீது இதைப்பற்றிச் சொல்லியிருக்கிறேன். எங்கள் சங்கத்தின் துணைக் காரியதரிசியை சுட்டு வீழ்த்துவேன் என்று அங்கிருக்கக்கூடிய கன்சர்வேட்டர் ஆணை பிறப்பித்திருக்கிறார் என்று கூறினால் அதை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. எனக்கு பத்து நிமிஷத்திற்கு முன்புதான்

டெலிபோனில் ஒரு தகவல் வந்திருக்கிறது. பாக்டரி தொழிலாளி சுப்பிரமணியம் என்பவரை அதிகாரிகள் அடித்து நொறுக்கிக் கொன்றிருக்கிறார்கள் என்ற துக்ககரமான செய்தியை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அன்று "கூலி உயர்வு கேட்டான் அத்தான். குண்டடிப்பட்டு செத்தான்" என்று சொன்னார்கள். இன்றையதினம் சுப்பிரமணியம் என்னும் தொழிலாளி அடிப்பட்டு செத்தான் என்பதை கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவர் அவர்களே, அப்படி முடிவாகத் தெரியுமா? ஒருவர் இறந்துவிட்டார் என்று சொன்னால் தொலைபேசி மூலமாகக் கேட்டதாகச் சொன்னார்கள், அது உண்மையா? இப்படிப்பட்ட தகவலை வைத்துக்கொண்டு சொன்னால் அது இந்தச் சபைக்கு நல்ல செய்தியாக இருக்காது. எனவே உண்மையாக இருந்தால் விசாரிப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: நான் கழிந்த விவாதத்தின்போதே சொன்னேன், அங்கிருக்கக்கூடிய கன்சர்வேட்டர் இந்த நாட்டிலே வேலை பார்க்கத் தகுதியற்றவர் என்று. வெள்ளைக்காரன் காலத்திலே இருந்த அதிகாரி நம்முடைய ஜனநாயகத்திற்கு தகுதியற்றவர் என்று சொன்னேன். ஒரு தொழிலாளியை அடித்துக் கொன்றிருக்கிறார்கள் என்றால் நான் உயிரோடு இருந்து என்னதான் பயன்? இன்று தொழிலாளியை அதிகாரிகள் கொன்றிருக்கிறார்கள் என்றால் அந்த அதிகாரிகள் யாரைத்தான் விட்டு வைப்பார்கள்?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தொழிலாளியை அதிகாரிகள் கொன்றார்களா என்பதைத் திட்டவட்டமாகச் சொல்கிறார்களா? அல்லது யார்மீது தவறு என்று தெரிகிறது என்று சொல்கிறார்களா? உண்மையிலேயே அதிகாரிகள் என்றால் நடவடிக்கை எடுக்கலாம். உண்மையில்லாத நிலையில் பத்திரிகையிலே செய்திவரவேண்டுமென்பதற்காக இப்படி நடந்தது என்று சொல்கிறார்களா? இப்பொழுதுதான் நடந்தது என்று சொல்கிறார்கள். ஒரு வாரத்திற்கு முன்னாலே நடந்திருந்தால் விசாரித்துக் கூறியிருக்கலாம். இப்பொழுதுதான் சொல்லியிருக்கிறார்கள், இனிமேல்தான் விசாரிக்கவேண்டும். விசாரித்தபிறகு இந்த அரசு பொறுப்பா அல்லது பேசுகின்றவர் பொறுப்பா என்ற உண்மையைப் பிற்பாடு பார்த்துக்கொள்ளலாம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : நான் தெரிவிக்கவேண்டிய முறையிலே தெரிவித்துவிட்டேன். நீங்கள் பார்த்துக்கொள்ளுங்கள். அந்த அதிகாரி இதுவரையில் கன்சிலியேஷனுக்கு வரவில்லை. லேபர் கமிஷன் கேட்டார்கள். டெபுடி லேபர் கமிஷனர் கேட்டார்கள். இருந்தாலும் இதுவரையில் அவர் கன்சிலியேஷனுக்கு வரவில்லை. கன்சிலியேஷன் நடக்கவில்லை. டி.டி.சி. கூட்டத்திற்கும் அவர் வரவில்லை. கலெக்டர் நடத்துகின்ற கூட்டங்களுக்கும் அவர் வரவில்லை. இந்த நிலையில் இந்த நிர்வாகம் போய்க்கொண்டிருந்தால் யாருக்குக் கேடு என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, அந்த குறிப்பிட்ட தொழிலாளி அதிகாரிகளால் கொல்லப்பட்டார் என்று சொல்கிறார். அதிலே ஆதாரம் இருக்கிறதா? ஆதாரமில்லாமல் சொன்னால் வழக்குக்கு பிரஜுடிஸ் ஏற்படுகிற நிலைமை இருக்கிறது. எனவே ஆதாரமில்லாமல் சொல்லியிருந்தால் அது சபைக் குறிப்பிலே இருக்க வேண்டுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

THIRU R. PONNAPPA NADAR : Now that an allegation has been made, it is better that it is enquired into. He says that telephonioc information has been received and if it is a fact, that has to be enquired into by the Police. I do not think there is anything inappropriate in that regard.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசும்பொழுது சில அதிகாரிகளின் பெயரைச் சொல்லி சொன்னார்கள். அப்படிச் சொல்லியிருப்பது விசாரணைக்கு பிரஜுடிஸ் ஆக வரும் என்பதால் அதிகாரிகள் என்பதை குறிப்பிலிருந்து அகற்றிவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் சொன்னீர்களா?

THIRU J. JAMES : I never said.

MR. DEPUTY SPEAKER : Did you mention the name of any officer?

THIRU J. JAMES : I never mentioned name of any officer. I simply said 'officer'.

MR. DEPUTY SPEAKER : I do not think it is proper to say "officer".

THIRU R. PONNAPPA NADAR : Nothing will turn out on this. Certain allegations have been made on those persons. It will be enquired into by the Police. Now that allegations have to be enquired into by police, it is better let it remain like that instead of dragging in names; that will further complicate matters.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : ஒரு சுமுகமான நிலை தொழிலாளர்களுக்கும் அதிகாரிகளுக்கும் ஏற்படுவதுதான் நாட்டிற்கு நல்லது. அதிகாரிகள் அடித்துக் கொன்றிருக்கிறார்கள் என்ற தகவல் வந்திருக்கிறது, இந்த இடத்திலே நான் இருக்கவேண்டுமா? என்று பேசுகிறார்கள். அவர்கள் பேசும்பொழுது இப்படி புகார் இருக்கிறது, இதைத் திருத்திக்கொண்டால் நலமாக இருக்கும், சுமுக மாக இருக்கும் என்று சொன்னால் தொழிலாளர்கள் அதிகாரிகள் உறவு சுமுகமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU R. PONNAPPA NADAR : May I know from the Hon. Minister whether no such murders have ever taken place ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அதிகாரிகள் அடித்துக் கொன்று இருக்கிறார்கள் என்ற அளவுக்குச் சொல்லக்கூடாது. என்ன ஆதாரம் இருக்கிறது? என்ன ஊர்ஜிதம் இருக்கிறது என்பதைச் சொல்லவேண்டும். அது இல்லாமல் சொல்வது சுமுகமாக இருக்காது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒரு கொலை நடந்திருக்கிறது என்று சொல்கிறார்கள். யார் செய்தது என்பதைச் சொல்லவேண்டியதில் நீதிமன்றத்திற்குத்தான் பொறுப்பு இருக்கிறது. யார் செய்தார்கள் என்று சொல்வது நிலைமையைப் பாதிக்காதா என்று வழக்கறிஞர்களாக இருக்கிறவர்கள்—பெரும்பாலும் வழக்கறிஞர்கள் தான்—அமைச்சர் அவர்களும் வழக்கறிஞர் தான்—இன்னார் என்று சொல்வது சரியல்ல. அதிகாரிகள் என்று சொல்வதுகூட தவறுதான். ஒரு பார்டிகுலர் செக்ஷனைப்பற்றி சொல்கிறார்கள். அப்படிச் சொல்வதுகூட சரியல்ல. சார்ஜ் ஷீட் போடும்பொழுது, எப்.ஐ.ஆர்-ல் இருந்து கடைசி வரைக்கும் அது பாதிக்கும். எனவே, அதிகாரிகள் என்ற வார்த்தையை வாபஸ் வாங்குவதுதான் நல்லது.

1972 மார்ச் 27]

திரு. ஜே. ஜேம்ஸ் : எனக்குக் கிடைத்த தகவல். நேரடியாகத் தகவல் கிடைத்திருக்கிறது. அதை வைத்துத்தான் பேசுகிறேன். மறைத்துப் பேச முடியாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்களுக்குக் கிடைத்த தகவல் என்றால் உங்களுக்கு வேண்டிய சிலர் சொல்லியிருக்கக்கூடும். நீதிமன்றம்தான் யார் என்று சொல்லவேண்டும். உங்களுக்கு வந்த தகவலை வைத்துப் பேசுவது சரியல்ல. We cannot reply upon such things உங்களுக்கு ஒரு தகவல் வந்திருக்கலாம். அமைச்சர் அவர்களுக்கு போலீஸிலிருந்து ஒரு தகவல் வந்திருக்கலாம். தகவலை வைத்துக்கொண்டே அமைச்சர் சொல்வதை எடுத்துக்கொள்ளவோ அல்லது நீங்கள் சொல்வதை எடுத்துக்கொள்வதோ சரியல்ல. உங்களுக்கு வேண்டிய சிலர் சொல்லியிருந்தால் அதை ஆதாரம் என்று ஏற்றுக்கொள்ள முடியாது. நிகழ்ச்சியிலே சம்மந்தப்பட்டவர்கள் யார் என்று சொல்லக்கூடாது, கொலை நடந்திருக்கிறது, விசாரியுங்கள் என்று வேண்டுமானால் சொல்லலாம். இன்னார்தான் செய்தார்கள் என்று தகவலை வைத்துக் கொண்டு சொன்னால் உண்மைக் குற்றவாளியைக்கூட தப்ப வைக்கக்கூடும். அது முறைகேடானது. எனவே, அதிகாரிகள் என்ற வார்த்தையை வாபஸ் வாங்கிக் கொள்வதுதான் நல்லது. யாரோ அடித்துக் கொன்றார்கள் என்று வேண்டுமானால் சொல்லலாம். நடந்த நிகழ்ச்சி என்று தொலைபேசிமூலம் வந்த செய்தியை வைத்துக்கொண்டு குற்றவாளி இன்ன வகுப்பைச் சேர்ந்தவர் என்று சொல்வது பொருத்தமல்ல.

THIRU R. PONNAPPA NADAR : Now that this has to be investigated by the Police as to who has done it; it is a matter for the Police to say when they will lay charge-sheet. When a murder has taken place the Police will enquire into the matter further. The matter will be further investigated.

MR. DEPUTY SPEAKER : The word ' officer ' is not proper.

திரு. ஜே. ஜேம்ஸ் : எனக்குச் சொன்னவர் ஆபீஸர் பெயரைக் கூடச் சொன்னார்கள். ஆனால் நான் அதைக் கூறவில்லை.

திரு. நா. வீராசாமி : திரு. ஜேம்ஸ் அவர்கள் பேசும்பொழுது கொலை நடந்திருக்கிறது, அதிகாரிகள் கொன்றிருக்கிறார்கள், நடவடிக்கை எடுக்கவில்லை, அதற்குப் பின்னாலே நான்கூட உயிரோடு இருக்கவேண்டுமா என்று சொல்லியிருக்கிறார்கள். தகவல் கிடைத்ததை வைத்துப் பேசுகிறார்கள். தகவலை வைத்துக்கொண்டு இந்த மன்றத்திலே பேசக்கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. எனவே அவர் கூறியதற்குப் பொறுப்பு ஏற்றுக்கொள்கிறாரா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ஜேம்ஸ் அவர்களின் உணர்ச்சியை நான் புரிந்துகொள்கிறேன், கொலை நடந்த அதிர்ச்சியினால் பேசியிருக்கக்கூடும். அதிகாரிகள் செய்திருக்கிறார்கள் என்று சொல்வது சரியல்ல. "அதிகாரிகள்" என்ற வார்த்தையை "யாரோ" என்று மாற்றிக்கொள்ளும்படி கூறுகிறேன்.

THIRU J. JAMES : You are the final authority. I leave it to you.

THIRU R. PONNAPPA NADAR : That may be done.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, இங்கே வைக்கப்பட்டிருக்கின்ற சின்கோனா, காட்டுவளம் ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் நல்ல கருத்துரைகளை, அறிவுரைகளை, வேண்டுகோள்களை சில குற்றச்சாட்டுகளைச் சொல்லியிருக்கிறார்கள். பொதுவாக ஆண்டுதோறும் பேசப்படுவதுபோன்று உறுப்பினர்கள் பாராட்டியும் எதிர்தரப்பிலே சிலர் சில குற்றச்சாட்டுகளைச் சொல்லியும் இந்தத் தடவையும் பேசியிருக்கிறார்கள். இருந்தாலும் நாம் எந்த எந்த முறையிலே நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமோ அதையெல்லாம் கருத்தில்கொண்டு நடவடிக்கை எடுக்கலாம் என்ற உறுதியை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன். இந்த விவாதத்திலே பங்கு கொண்டு இனிய கருத்துரைகளை வழங்கிய மாண்புமிகு உறுப்பினர்களுக்கெல்லாம் என்னுடைய பணிவன்பான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்வதை என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

காட்டுவளத்துறை பற்றியும், சின்கோனாத்துறை பற்றியும் பேசிய உறுப்பினர்களெல்லாம் பொதுவாகக் காட்டிலாகா நிலங்களை ஏழைகளுக்கு, விவசாயிகளுக்கு, நிலமற்றவர்களுக்குப் பிரித்துத் தர

1972 மார்ச் 27] [திரு. ஓ. பி. இராமன்]

வேண்டுமென்று சிலர் சொன்னார்கள். நமது நண்பர் மாண்புமிகு உறுப்பினர் தேவராசனைப் போன்றவர்கள், மாண்புமிகு உறுப்பினர் சௌடி சுந்தரபாரதியைப் போன்றவர்கள், லத்தீப் போன்றவர்களெல்லாம் காட்டிலாகா நிலங்களை எந்தக் காரணத்தை முன்னிட்டும் பிரித்துத் தருவதை நிறுத்தியதாக வேண்டும், காட்டு வளத்தைப் பெருக்கியாக வேண்டும், காத்தாக வேண்டும் என்று சொன்னார்கள்.

சிலர் பேசும்பொழுது மலைப்பகுதிகளைப் பாதுகாக்க வேண்டும், ஆனால் தரைப்பகுதியிலே இருக்கும் தரிசு நிலங்களை ஏழைகளாக இருப்பவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்றும் சொன்னார்கள். ஒரு பக்கம் காக்க வேண்டும், ஒரு பக்கம் கொடுக்க வேண்டும் என்றால் இடையிலே கூட்டிப்பார்த்தால் ஒன்றுமே இருக்காது. இப்படியும் சிலர் பேசியிருக்கிறார்கள். சிலர் காட்டிலாக்கா நிலங்களைக் கொடுத்தே ஆகவேண்டும், கட்டாயம் தந்தே ஆகவேண்டும் என்று ஆணித்தரமாகச் சொல்லி இருக்கின்றார்கள். என்னைப் பொறுத்தவரையில் இதற்கு விடையாக தமிழக அரசின் கொள்கையை நான் முதலிலே சொல்லலாம் என்று கருதுகிறேன். 'The first object of the Forest Department is to preserve the forest and grow more forests. இன்றைக்கிருக்கும் காட்டிலாக்காவின் தலையாய கடமை, குறிக்கோள் காட்டுக்கு இருக்கின்ற நிலங்களைப் பாதுகாத்தல், பேணிப் பாதுகாத்தல், இரண்டாவது, காடுகளை வளர்த்தல். ஆகவே இரண்டு கொள்கைகளையும் அரசு ஏற்றுக்கொண்டு காடுகளைப் பராமரிப்பதிலேயும், புதிதாகக் காடுகளை வளர்ப்பதிலேயும் இன்றைக்கு அகில இந்தியா மட்டுமல்ல, அகில உலக அரங்கிலே சொல்லப்படும் கருத்தின் அடிப்படையிலே இன்று ஏற்று ஓரளவிற்கு செயல்பட்டு வருகிறோம்.

நீலகிரி மலையைப்பற்றி திரு. தேவராசன் அவர்கள் பேசும்பொழுது ஆண்டாண்டு தோறும் அந்த மலைப்பகுதி அழிக்கப்பட்டு மழை வளம் இல்லை என்று சொன்னார்கள். நமது ஜவ்வாது மலையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள்கூட ஜவ்வாது மலை நாளுக்குநாள் அழிக்கப்பட்டு, தான் சிறுவனாகயிருந்து விவரம் தெரிந்த காலம் வரையில் சராசரி பருவமழை குறைந்ததாகக் கூறினார்கள். இன்றைக்கு விஞ்ஞானிகள் கணக்கின்படி பார்த்தால் நிலப்

பரப்பு, காட்டுப்பகுதி என்று சொல்லக்கூடிய மூன்றில் ஒரு பாகம், கிட்டத்தட்ட 33 சதவிகிதம் தேவை என்று சொல்கிறார்கள். ஆனால் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் 16-க்கும் 17-க்கும் இடையிலே இருக்கிறோம் என்று திரு. சௌடி சுந்தரபாரதி அவர்கள் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். ஆகவே அவர்கள் வாதத்தை வைத்துப் பார்த்தால் அறிஞர்கள், காட்டிலாக்காவில் நிபுணத்துவம் உடையவர்கள் மழை பெய்ய வேண்டுமென்ற சூழ்நிலையில் நிபுணர்களின் கருத்தைப் பார்த்தால் காட்டிலாக்கா நிலங்களை மீண்டும் விநியோகிக்காமல் அதை வளர்க்கும் முயற்சியிலே ஈடுபட வேண்டுமென்றுதான் நம்மைப் பொறுத்தவரையில் புலனாகின்றது. ஏதோ மலைப்பகுதிகளில் மரங்கள் அடர்ந்திருக்கின்ற காடுகளைப் பாதுகாத்தால் போதும், தரை மட்டத்திலேயிருக்கின்ற காடுகளாக இருக்கின்ற, தரிசுகளாக இருக்கின்ற அல்லது பொட்டல்களாக இருக்கின்ற பகுதிகளை விவசாயிகளுக்கு, நிலமற்ற ஏழைகளுக்குக் கொடுத்துவிடுவது நல்லது என்றும் சொல்கிறார்கள். இதை நாம் விவரமாகப் பேசிப்பார்ப்பது நல்லது என்று கருதுகிறேன். ஏதோ மலையிலே பெய்யும் மழையினால் மைசூரில் பெய்யும் மழையினால் இங்கே காவேரியிலும் வந்து விடலாம், மேற்குத் தொடர்ச்சி மலையிலே நீலகிரியிலே பெய்வதால் பவானியாற்றிலே வந்துவிடலாம். மேற்குத் தொடர்ச்சி மலையின் தென் கோடியிலே பெய்யும் மழையின்மூலம் பெரியாற்றுக்கு வந்து விடலாம், இப்படி மலையிலே பெய்கின்ற மழையின் காரணமாக அந்தந்தப் பகுதிகள் மட்டும் பெறலாம், எல்லாப் பகுதியுமா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இப்படி மலைப்பகுதிகளில் மழை பெய்தும் அதனால் வரும் தண்ணீர் போதாத நிலையிலே இன்றைக்கு நூற்றுக்கு 75 சதவிகிதம் பகுதிகள் இருப்பதைப் பார்க்க வேண்டும். உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால், வடார்க்காடு மாவட்டத்தில் முக்கால் பகுதி, தென்னார்க்காடு மாவட்டத்தில் முழுப் பகுதி, அதற்குப்பின் தெற்கே போனால்கூட திருச்சி மாவட்டத்திலே தஞ்சை மாவட்டத்திலே மலைப்பகுதி அதிகமாக இருப்பதாகச் சொல்ல முடியாது. ஆகவே, ஆங்காங்கேயிருக்கும் காட்டு நிலங்களைக் கொடுத்துவிட்டால் என்ன வரும் என்பதை யோசனை செய்ய வேண்டும்.

கண்மாய், குட்டை என்று சொல்கிறார்கள். ஊரணி என்று சொல்கிறார்கள், குளம் என்றும் சொல்வார்கள் இவைகளுக்குத் தண்ணீர் வருவது ஆங்காங்கு இருக்கும் சரளைக் காடுகளாக

1972 மார்ச் 27] [திரு. ஓ. பி. இராமன்]

இருக்கும், தரிசுக் காடுகளாக இருக்கும் காட்டிலாக்காவில் பெய்யும் மழையின்மூலம் பெருக்கெடுத்தோடி சிறு ஓடைகள், கண்மாய்களில் தேங்குவது என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். புதுக் கோட்டைப் பக்கத்திலே காட்டிலாக்காவிலே தரை மட்டத்திலே இருக்கும் நிலங்களைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டதற்கிணங்க நான் சமீபத்தில் பார்வையிடச் சென்றேன். அந்தக் கண்மாய்க்கு வரும் தண்ணீர் பக்கத்திலேயிருக்கும் சிறுசிறு புதர் அடங்கியுள்ள, வேறு பயனற்ற 400 ஏக்கர் பொட்டலில் பெய்யும் மழையினால்தான் அந்தக் கண்மாய் நிரம்பி 400 ஏக்கர் நஞ்சையாக்கப்படுகிறது என்று சொன்னார்கள். யாருக்கும் கொடுப்பதற்கு அனுமதிக்க மாட்டோம். இந்த 400 ஏக்கரும் தரிசாகவே இருக்க வேண்டும், மேய்ச்சலுக்குப் பயன்படுகிறது, நீர்ப்பிடிப்பிற்குத் தாயகமாக விளங்குகிறது என்று சொல்கிறார்கள்.

உண்மையிலேயே தரிசாக இருப்பதைக் கொடுத்துவிடுவது என்பது என்னைப் பொறுத்தவரையில் நல்லதாகக் கருதவில்லை. சொல்லக் கூடிய நிபுணர்கள் இப்படிச் சொல்கிறார்கள், ஆங்காங்கு பெய்யும் மழையினால் வரும் தண்ணீர் குளம், குட்டைகளில் நிரம்புவதன் மூலமாக அங்கே ஊற்றுக்கள், கிணறுகளெல்லாம் வெட்டப்படுகிறது. அதன்மூலம் கிணறுகள் தோண்டி வருகிறோம் என்று சொல்கிறார்கள். அப்படிப் பார்க்கும்பொழுது இன்றைக்கு இந்தியாவிலே மூன்றிலே ஒரு பங்கு நிலம் வேண்டுமென்று சொல்கிறார்கள். வெளியுலகிலே இருந்து சொல்லும் ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள். இங்கே 16, 17 சதவிகிதம் என்றால் இவைகளைத் தரிசு என்று குற்றம் சாட்டினால், பொட்டல் என்றும் புதர் என்றும் சொன்னால், தரை மட்டத்தில் இருக்கிறது என்று சொன்னால், கொடுத்துவிடுவது நியாயமா என்பதை ஒருகனம் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிக் கொடுப்பதன்மூலம் ஏழைகளின் வாழ்க்கை பொங்குகிறது, குலுங்குகிறது, அந்தச் சூழ்நிலையை ஏற்படுத்த முடியுமென்று கருதினால் முதல் கடமையாக திராவிட முன்னேற்றக் கழக அரசு தயங்காது கொடுக்கும் என்பதை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சென்ற ஆண்டு கொடுத்தோம்; 50,000 ஏக்கர் காட்டிலாகாவுக்குச் சொந்தமான நிலத்தை ஆட்சி பீடத்திலிருக்கின்ற மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் கொடுத்தார்கள். அதற்குப் பிறகுகூட

மத்திய அமைச்சரவையிலிருந்து ஒரு தாக்கீது வந்தது. காட்டிலாக் காவில் பரம்பரை பரம்பரையாக, உலகம் தோன்றியது முதல், அரசு ஏற்பட்ட காலத்திலேயிருந்து பொது நிலமாக, அரசாங்க சொத்தாக, பொது நன்மைக்காக வெப்பதட்பத்தைப் பாதுகாக்க, மழையை உருவாக்குவதற்காக காடு காக்கப்பட்டு வருகிறது; அவைகளைக் கொடுத்துவிடுவது அவ்வளவு நல்லதல்ல என்று மத்திய சர்க்காரே கூட ஒரு தாக்கீது அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே, மத்திய சர்க்கார் சொல்வது எல்லாம் சரி இல்லை என்றும் சொல்ல முடியாது, எல்லாம் சரி என்றும் சொல்ல முடியாது.

இப்படிப்பட்ட நல்ல காரியங்களை நாம் ஆராய்ந்து பார்க்கும் கடமையிலே இருக்கிறோம் என்பதை மட்டும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அந்த அடிப்படையிலே வைத்து, ஏதாவது கொடுத்துத்தானகை வேண்டுமென்ற அத்தியாவசியமான கட்டம் வந்து, ஒரு கல்லூரிக்கு வேண்டுமென்று 500 ஏக்கர் நிலம் என்று சொல்கிறார்கள் என்றால் பல இடங்களில் காட்டிலாகா கொடுக்கக் கூடிய நிர்பந்தத்திற்கு வருகிறோம். ஆஸ்பத்திரி கட்ட வேண்டுமென்று சொன்னால் தவிர்க்க முடியாது, கொடுத்துத்தான் ஆக வேண்டும். விவசாயப் பண்ணை ஆரம்பிக்க வேண்டுமென்றால் வளர்ச்சிக்காக நாம் கொடுத்தாக வேண்டும். இப்படி அரசுக்கு இருக்கும் நிலங்களை பல்வேறு காரியங்களுக்காக இன்றைக்கும் சரி, வருங் காலத்திலும் சரி நிலையான அரசு ஏற்படுத்த, நல்ல திட்டங்கள் ஏற்படுத்தி வைத்திருக்க வேண்டுமென்று உணர்ந்து ஈடுபட வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு இங்கே பேசியவர்கள் சின்கோனத் துறையைப்பற்றிப் பேசினார்கள். அந்தத் துறையில் இருக்கும் தொழிலாளர்களுக்கு ஊதியம் தர வேண்டுமென்று சொன்னார்கள். அருமை நண்பர் ஜேம்ஸ் அவர்கள் உருக்கமாகச் சொன்னார்கள். அவர்கள் சொல்வது உண்மையாக இருந்தால் அவர்கள் படும் வருத்தத்தைவிடச் சற்று அதிகமாக நான் வருத்தப்படுகிறேன். அவர்கள் ஆவேசப் பட்டுப் பேசத் தேவையில்லை. இன்றைக்கு நடந்த காரியம் என்று சொல்கிறார்கள், தகவல் வந்திருக்கிறது, விசாரிக்கலாம். ஆனால் ஒரு அதிகாரி இம்மாதிரி செய்தார் என்று சொல்வது சபைக்கு என்று கூட அல்ல, சமுதாயத்தில் எல்லோருக்கும் அங்கமாக, அதிகாரிகள், தொழிலாளர்கள், விவசாயிகள், வெவ்வேறு காரியங்களாக இருந்தும்

1972 மார்ச் 27]

இந்த நாட்டுக்கு பொது அங்கங்கள். அங்கங்களாக விளங்கும் இயந்திரம் போன்ற பகுதியை, விசாரித்து முடிவிற்கு வருவதற்கு முன் குற்றம் சாட்டுவதற்கு ஆட்சேபணையைத் தெரிவித்துக்கொள்வதற்கு மிகவும் கடமைப்பட்டவனுக இருக்கின்றேன்.

ரப்பர் தோட்டத் தொழிலாளர்களுடைய சம்பள விகிதத்தைப் பற்றியெல்லாம் சொன்னுர்கள். 1967-ல் தி.மு.க. ஆட்சிப்பீடத்தை ஏற்ற பிறகு எவ்வளவு முறை சம்பளத்தை உயர்த்திக் கொடுத்திருக் கிறோம் என்று பார்க்க வேண்டும். ஜேம்ஸ் அவர்கள் இங்கே பேசினுர்கள். நானும் சட்ட அமைச்சர் அவர்களும் அறையிலே விஷயங்களை எடுத்துச் சொன்னேம். அப்போது அவர்கள் எங்களைப் பாராட்டியிருக்கிறுர்கள். அது அறையில் நடந்த விவாதம்.

நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். 1966-ல் இவர்களுக்கு இருந்த கூலி விகிதம் ஆணுக்கு ரூ. 1.59; பெண்ணுக்கு ரூ. 1.20 ; அடலசென்ட் என்று சொல்லப்படுகின்ற நடுத்தர ஆளுக்கு 0.80 காசு. ஆனல் 1967–68-ல் ரூ. 1.59 காசு ரூ. 2.65 காசாகவும்; ரூ. 1.20 காசு ரூ. 2.35 காசாகவும், 0.80 காசு ரூ. 1.72 காசாகவும் உயர்த்தப்பட்டிருக்கிறது. அடுத்த ஆண்டில் 1968–69-ல் ரூ. 2.65 காசாக இருந்தது ரூ. 2.77 காசாகவும், ரூ. 2.35 காசாக இருந்தது ரூ. 2.47 காசாக வும், ரூ. 1.72 காசாக இருந்தது ரூ. 1.84 காசாகவும் உயர்த்தப்பட்டிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தனியார் ரப்பர் தோட்டத்தில் கொடுக்கப்படுகின்ற சம்பள விகிதம் அரசாங்கம் ரப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இதைப் பற்றியெல்லாம் பல முறை தெளிவாக விளக்கிச் சொல்லியிருக்கிறோம். ஆண்டுக்கு ஆண்டு நான்கு முறை அவர்களுடைய கூலி விகிதம் உயர்த்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தோட்டத் தொழிலாளர்களுடைய கோரிக்கைகள் நியாயம் என்பதை உணர்ந்து உயர்த்திக் கொடுக்கப் பட்டிருக்கிறது. தனியார் தோட்டத் தொழிலாளர்களைப் பற்றி எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறுகிறுர்கள். அரசுத் துறையிலே உள்ள அந்தத் தொழில் வளர வேண்டாமா? அது வளர வளர அவர்களுக்கு சம்பள விகிதம் ஆண்டுக்கு ஆண்டு உயர்த்திக் கொடுக்கப் பட்டு வந்திருக்கிறது. பத்தாயிரம் ஏக்கர் அளவிலே ரப்பர் தோட்

டத்தை உண்டாக்கி ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் வேலை வாய்ப்புப் பெற வேண்டுமென்ற முறையில், அதன் பலனை தொழிலாளர்கள் பெற வேண்டுமென்ற முறையில் அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. இன்றைக்கு இருக்கும் அரசின் சட்டத்தில் என்ன தவறு? எங்களைப் பொறுத்தவரையில் தொழில் நல்ல முறையில் பெருக வேண்டும் என்ற முறையில் பத்தாயிரம் ஏக்கரில் ரப்பர் பயிரிட்டு ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய் லாபம் கிடைக்குமென்று திட்டமிட்டு உழைக்கின்ற தொழிலாளர்களுக்கு இந்த அரசு ஆண்டுக்கு ஆண்டு சம்பளத்தை உயர்த்திக் கொண்டே வந்திருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: நான் கூறியதெல்லாம் நமது அரசாங்கத்திலுள்ள தோட்டத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கின்ற ஊதியத்திற்கும், அந்த மாவட்டத்தில் இருக்கக்கூடிய தனியார் தோட்டத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கின்ற ஊதியத்திற்கும் இடையில் ரூ. 1.56 காசு வித்தியாசம் இருக்கிறது என்பதுதான். கேரள அரசாங்கம் நடத்துகின்ற நிறுவனங்களில் இந்தத் தனியார் கொடுக்கின்ற அளவுக்குச் சம்பளம் கொடுக்கின்றார்கள். கேரள ராஜ்யத்திலுள்ள தனிப்பட்ட முதலாளிகள் இந்த அளவுக்குக் கொடுக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் நமது அரசு நடத்தும் தோட்டத்தில் வேலை செய்கிற தொழிலாளர்களுக்கு அவர்களை விட 1.56 காசு குறைவாகக் கொடுப்பதை சேர்த்து கொடுப்பார்களா என்றுதான் கேட்டேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தனியார் தோட்டத் தொழிலாளர்கள் பற்றி மாண்புமிகு கே. டி. கே. அவர்கள் கூடக் கூறினார்கள். அரசுத் துறையில் கொடுக்க வேண்டுமென்று சட்டப் பூர்வமாகக் கட்டாயம் இல்லை. எந்தவிதமான நிர்பந்தமும் இல்லை. கடந்த நான்கு ஆண்டுகளில் இந்த அரசு எந்த அளவுக்கு அந்தத் தொழிலாளர்களுக்கு ஊதியத்தைக் கூட்டிக் கொடுத்து வந்திருக்கிறது என்பதை உணர வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் உயர்த்தி வந்திருக்கிறோம். 1966-ம் ஆண்டில் ரூ. 1.59 காசாக இருந்ததை இன்று நாம் ரூ. 3.32 காசு அளவுக்கு ஏற்றியிருக்கிறோம். இன்னும் அங்கு நல்ல முறையில் லாபம் வருமானால் மேலும் சம்பளத்தை ஏற்றலாம். அந்தத் தொழிலாளர்கள் படிப்படியாக நன்மை அடைவார்கள். அந்தத் தொழிலாளர்களிடையே சுமுகமான சூழ்நிலை

இருக்கிறது. தொழிலாளர் தலைவர்கள் அறிவார்கள். அவர்கள் கேட்டதைப் பெற்றிருக்கிறார்கள். தொழிலாளர்களிடையே சுமுக மான நல்லுறவு ஏற்பட்டிருக்கின்ற இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் நல்ல ஒத்துழைப்பைத் தரவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

சின்கோனா பற்றி நேரம் அதிகமில்லாத காரணத்தால் விரிவாகப் பேச விரும்பவில்லை. சின்கோனா தொழிலாளர்களுடைய சம்பளம் 1965–66-ல் ரூ. 1.75 காசாக இருந்தது. இன்றைக்கு 2.60 காசு அள வுக்கு நான்கு முறை அவர்களுடைய சம்பளம் உயர்த்திக் கொடுக்கப் பட்டிருக்கிறது. சின்கோனா தொழிலாளர்களுக்கு லட்ரின் போன்ற நல்ல பல வசதிகளைச் செய்து தருவதற்காக இந்த ஆண்டு $3\frac{1}{2}$ லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. வால்பாறையில் சரணாலயம் ஏற் படுத்துவதற்காக ஒரு லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. முது மலை சரணாலயத்தை விஸ்தரிப்பது பற்றி நண்பர் தேவராசன் அவர்கள் சொன்னார்கள். அதைப் பற்றியும் ஆய்வில் எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பள்ளகுளம் எஸ்டேட் பற்றி எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். அது சுப்ரீம் கோர்ட்டில் இருப் பதால் அது பற்றிப் பேச விரும்பவில்லை. திரு. கே. டி. கே. அவர்கள் நீண்ட நாட்களாக இந்த எஸ்டேட்டுகள் எல்லாம் அப்படியே இருக் கின்றன என்ற முறையிலே சொன்னார்கள். இந்த அரசு முற்போக்கு எண்ணம் கொண்ட அரசுதான். நிலம் இல்லாதவர்களுக்கு நிலம் கொடுக்க வேண்டுமென்பதிலே மிகுந்த அக்கறை கொண்ட அரசுதான்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : பள்ளகுளம் வழக்கு சுப்ரீம் கோர்ட்டில் இருக்கிறது என்று சொன்னார்கள். அதிலே டிலே இருந்ததாகச் சொல்லப்படுகிறது. அப்பீல் பண்ணக்கூடிய நிலை ஏற் பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அதில் ஒரு ஸ்டே இருக் கிறது. மரங்களை வெட்டினால் எடுத்துச் செல்ல சட்டப்படி அனுமதி வேண்டும். கடத்துகின்ற சூழ்நிலை வந்தால் தடுப்பதற்கு சட்டப் பூர்வமாக நடவடிக்கை எடுத்துக் கொள்ள முடியும்.

[திரு. ஓ. பி. இராமன்] [1972 மார்ச் 27

கூடலூர் ஜன்மியைப் பற்றிக் கூறினர்கள். அதுவும் சுப்ரீம் கோர்ட்டில் இருப்பதால் முழுமையாக அதைப் பற்றிப் பேச விரும்பவில்லை கோர்ட்டில் இருக்கும் காரணத்தால் முடிந்தவுடன் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

தொழிற்சாலைகளுக்குக் குறைந்த கட்டணத்தில் மூங்கில் போன்ற மூலப் பொருள்களைக் கொடுப்பதாகக் கூறினர்கள். உதாரணத்திற்குக் கேரளாவைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். அங்கு மூங்கில் டன் ஒன்றுக்கு 5 ரூபாய்க்குக் கொடுக்கிருர்கள். ஆனல், நாம் 10, 15 ரூபாய் வாங்குகிருேம். இதனல் தமிழ்நாட்டில் இருக்கக் கூடிய ஒரு தொழில் அதிபர் கேரளத்திற்குச் சென்று தொழிலை ஆரம்பிக்கக்கூடிய நிலைகூட ஏற்பட்டிருக்கிறது. நம்முடைய மாநிலத்தில் தொழில் வளர வேண்டுமென்ருல் இதுபோன்ற சலுகைகளை கொடுத்துத்தான் ஆகவேண்டும். ஆனல் பிறகு நமக்கு சேல்ஸ் டாக்ஸ் மூலம் ஒரு வருடத்திற்கு 15 லட்சம், 20 லட்சம் ரூபாய் வருகிறது. அதோடு தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுகிறது. வெளிநாட்டுச் செலாவணியையும் ஈட்டித் தருகிறது. விஸ்கோசை எடுத்துக் கொண்டால் அது வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டித் தருகின்ற ஒன்ருக இருப்பதால் உண்மையிலேயே நாம் அதை வரவேற்க வேண்டும். தொழிற்சாலைகளை ஆரம்பிக்கும்போது "நீட் பேஸ்ட் இண்டஸ்ட்ரீஸ்" என்ற அளவில் பார்த்து ஆரம்பிக்க வேண்டுமென்று மாண்புமிகு தொழிலமைச்சர் மாதவன் அவர்கள் ஆராய்ந்து கொண்டிருக்கிருர்கள்.

ஆங்காங்கு நிலம் தரப்படவில்லை என்ற பிரச்சினை பற்றி சட்ட மன்ற உறுப்பினர்கள் கூறினர்கள். மத்திய சர்க்கார் சொல்லுகிறது என்பதற்காக அந்தப் பிரச்னையைத் தட்டிக் கழித்துவிட முடியாது. டாக்டர் கலைஞர் அவர்கள் இந்தப் பிரச்னையை நிதானமாகப் பார்க்க வேண்டுமென்று கூறியிருக்கிருர்கள். காட்டு வளத்தைக் குலைக்காத அளவுக்கு இதைப் பற்றிச் சிந்தித்து முடிவு எடுக்க வேண்டுமென்று முதல்வர் அவர்கள் கூறியிருக்கிருர்கள்.

காடுகள் அழிக்கப்படுகின்றன என்று சொன்னர்கள். முடிந்த வரையில் அதைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மீண்டும் எடுக்கப்படும். பேசப்பட்ட கருத்துக்களுக்கு முழுமையாகப் பதில் சொல்லாவிட்டாலும் அவை நன்கு பரிசீலனை

1972 மார்ச் 27] [திரு. ஓ. பி. இராமன்]

செய்யப்பட்டு தக்க நிவாரணம் காணப்படும். திரு. குருசாமி அவர்கள் ஒரு மியூசியம் வைக்கவேண்டுமென்று சொன்னார்கள். பரிசிலனை செய்துகொண்டிருக்கிறேன். சாத்தியக் கூறு இருந்தால் வைக்கலாம் என்று கூறிக்கொண்டு கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணைகளைத் திரும்பப் பெற்று மானியத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : நேரம் அதிகமாகிவிட்டாலும் ரொம்ப முக்கியமான ஒன்றிரண்டு விஷயங்களைப் பற்றி தெரிந்துக் கொள்ள விரும்புகிறேன். மலைமேல் உள்ள நிலங்களுக்கு விதிவிலக்கு ரத்து செய்வதற்கு முடிவு செய்திருக்கிறோம். அந்த அடிப்படையில் பழமுதிர் பண்ணையையொட்டி பி.எஸ்.ஜி-க்கு சொந்தமாகவுள்ளப் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் இருக்கிறதே, அதைப்பற்றி என்ன முடிவு எடுத்திருக்கிறார்கள்? பிர்லாவுக்குச் சொந்தமான ஒவாலி எஸ்டேட் நிலம் பற்றி என்ன முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது? டான் இந்தியா சம்பந்தமாக ஒரு சிக்கல் இருந்ததே, அது தீர்ந்து விட்டதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : டான் இந்தியா பற்றி திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் சொன்னார்கள். அதில் சில சிக்கல்கள் இருப்பதால் அதிகாரிகளை ஆய்வதற்குச் சொல்லியிருக்கிறோம். வெற்றிகரமாக நடத்தவேண்டும் என்பதில் உற்சாகம் குன்றவில்லை. எந்த அளவிற்கு ஒத்தாசை செய்யமுடியுமோ அந்த அளவிற்குச் செய்யலாம். கூடியவரையில் கலந்துபேசி எந்தளவில் செய்ய முடியுமோ அந்த அளவிற்கு கலைஞர் அவர்கள் ஆலோசனையைப் பெற்றுச் செய்யலாம் என்று இருக்கிறேன்.

பிர்லாவிற்குச் சொந்தமான நிலம்பற்றி சுப்ரீம் கோர்ட்டில் இருக்கிறது என்று நினைக்கிறேன். தீர்ப்பு வந்த பிறகு என்ன நடவடிக்கைகள் எடுத்தால் நன்றாகயிருக்குமென்று யோசிக்கிறேன். இது டெஸ்ட் கேஸ் போல் பலன்தரும். ஒன்றிரண்டு வழக்குகள் தலைமை நீதிமன்றத்தில் இருப்பதினால் பின்னர் நடவடிக்கைகள் எடுக்கப்படும். ஒரு உத்தரவாதம் தருகிறேன். மரத்தை வெட்டி எங்கேயும் எடுத்துச் செல்ல, இப்போதுள்ள சட்டப்படி, அனுமதிக்கப் போவ

தில்லை. தகவல் கொடுத்தால் நடவடிக்கைகள் எடுக்கிறோம். ஹில் ப்ரிசர்வேஷன் ஆக்ட் இருக்கிறது. மரத்தை வெட்ட உத்தரவு வேண்டும். உத்தரவு கொடுக்கக் கூடாது என்று கட்டளை இருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : பள்ளக்குளம் விஷயத்தில் ஸ்டே வாங்கியிருப்பது Status quo to be maintained இருக்கிற இஷ்யூ, அரசாங்கம் கைவசம் இருக்கிறதா, தனியார் கைவசம் இருக்கிறதா என்பது பிரச்னை. பத்தாயிரத்திற்கு மேல் ரூபாய் செலவு செய்து தேக்கு, ஈட்டி வெட்டி ஸ்டாக் செய்து வைத்திருந்தோம். அந்தத் தடிகள் கூட அங்கே இல்லையென்று கூறப்படுகிறது. அதைப் பாதுகாக்கும் பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறதா? தடிகள் மோசம் போய்விட்டால் கேஸ் தீருகிறவரையில் அதைப் பார்க்கவேண்டியதில்லையா, அதைப் பாதுகாப்பு செய்யவேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இல்லையா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : வெளியே வெட்டி எடுத்துச் செல்வதைத் தடை செய்யலாம். சட்டத்தை வைத்துக்கொண்டு ஏதாவது செய்யலாமா, தலைமை நீதிமன்றத்தில் ஒரு நிவாரணம் தேடமுடியுமா என்று கேட்டிருக்கிறேன். சிக்கலான பிரச்னை, நிபுணர்களைக் கேட்டுச் செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது.

டாக்டர் எச். வி. ஹாண்டே அவர்களும், திரு. சோ. அழகர்சாமி அவர்களும் தங்களது இருப்பிடங்களில் இல்லையாதலால் கோரிக்கை எண் 21-க்கான அவர்களது வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 21—சின்கோனா என்ற தலைப்பின்கீழ் ரூ. 65,74,200-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

1972 மார்ச் 27] [பேரவைத் துணைத் தலைவர்]

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

டாக்டர் எச். வி. ஹாண்டே அவர்களும், திரு. கே. எ. வகாப் அவர்களும் தங்களது இருப்பிடங்களில் இல்லையாதலால் நிதிக் கோரிக்கை எண். 35-க்கான அவர்களது வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டனவாக கருதப்பட்டன.

திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களது வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன், திரும்பப்பெறப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் முன் னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண். 35—காட்டு வளத் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,32,83,400-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக்கோரிக்கை எண். 44-க்கான திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களது வெட்டுத் தீர்மானமும், திரு. ஜே. ஜேம்ஸ் அவர்களது வெட்டுத் தீர்மானமும், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் முன் னுள்ள கேள்வி—

நிதிக்கோரிக்கை எண். 44—கர்ட்டுவள மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,62,14,500-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் காலை நிகழ்ச்சிகள் நாம் எதிர்பாராத அளவிற்கு நீடித்துவிட்டன. எனவே, மாலை நிகழ்ச்சிகள் 4-30 மணி அளவில் தொடங்கும். அனைவரும் தவறாமல் வரும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் மாலை 4-30 மணிக்குப் பேரவை மீண்டும் கூடியது.

(5) 1972–73-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(உ) நிதிக் கோரிக்கை எண் 17—மீனளம்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, "ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல்

"நிதிக் கோரிக்கை எண் 17—மீனளம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,51,06,200-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU R. PONNAPPA NADAR : Sir, I move the following cut motion to discuss about the necessity of opening a fishing harbour in Colachel in Kanyakumari district—

"That the allotment of Rs. 2,51,06,200 under Demand No. 17—Fisheries be reduced by Rs. 100."

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, மீனளத் துறையைப் பற்றி கொள்கை விளக்க அறிக்கை* ஒன்று சபை முன் வைக்கப்பட்டிருக்கிறது. அதை இன்றைய நிகழ்ச்சி ஏட்டில் பதித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மீனள மானியத்தின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நமது தமிழகத்திலுள்ள கடற்கரை வளம் 1000 கிலோ மீட்டர் நீளமுள்ளதாக அமைந்திருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இப்படி ஆயிரம் கிலோ மீட்டர் நீள கடற்கரை இருந்தும் கூட, மக்களின் தேவைக்கேற்ற அளவு மீன் பிடிக்கப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்றைக்கு மொத்தம் 20 உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். பேசுகிற உறுப்பினர்கள்

* 335–348-ம் பக்கங்களில் 5-வது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

7 நிமிடங்களுக்குள் முடித்துவிட வேண்டும், அப்போதுதான் 9 மணிக்காவது முடிக்கலாம்.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, 7 மணிக்குள் முடித்தால் நன்றாக இருக்கும். நாங்களெல்லாம் சேர்ந்து பார்ட்டி மீட்டிங் வைத்திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதைக் கட்சித் தலைவர் சொல்லவேண்டும். அதற்கும் அசெம்பிளிக்கும் சம்பந்தம் கிடையாது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : அமைச்சர் அவர்கள் இந்த அறிக்கையிலே, இந்த நாட்டிலே ஒரு "புளூ ரெவல்யூஷன்" "கடல் வளப்புரட்சியை" செய்யவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதை வரவேற்கிறேன். பாராட்டுகிறேன். கடல் வளப் புரட்சியை எவ்வளவு சீக்கிரத்தில் கொண்டு வரமுடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுதான் இந்த நாட்டிற்கு நல்லது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஏனென்றால் உணவுப் பற்றாக்குறையைப் பற்றி நாம் சிந்தித்துக்கொண்டிருக்கிறோமே தவிர இந்த மீன் வளத்தை பெருக்குவதற்கு உண்மையிலேயே நாம் அவ்வளவு அக்கறை காட்டவில்லை. உண்மையிலேயே சொல்லப்படுகிறது, 300 ஆண்டுகளுக்குத் தேவையான உணவுப் பொருள்கள் மீன் உருவத்தில் இந்த சமுத்திரத்தில் மறைந்து கிடக்கின்றன என்று சொல்லப்படுகின்றது. அவற்றை நாம் எடுத்துக்கொள்ளவேண்டியதுதான் பாக்கி என்று சொல்லப்படுகிறது. நம்மைச் சுற்றி இத்தனை பெரிய உணவுப் பொருள் இருக்கிற போது, நாம் ஏன் உணவுப் பொருள் பற்றாது போய் விடுமென்பதைப் பற்றி சிந்தித்துக்கொண்டிருக்கவேண்டுமென்று தெரியவில்லை. இந்த 20 ஆண்டு காலத்தில் அதாவது 1971–72 வரையில் 1 லட்சம் டன் மீன்வளம் தான் கூடுதலாக அடைந்து இருக்கிறோம். இந்த அளவு அவ்வளவு திருப்திகரமாக இல்லை. மீன் வளத்தில் போதுமான அளவு கவனம் காட்டப்படவில்லை என்றே நான் அஞ்சுகிறேன்.

1,198 படகுகள் தான் இதுவரையில் கட்டப்பட்டு மீனவர்களுக்கு கொடுக்கப்பட்டதாக அறிகிறேன். இதை இன்னும் கூடுதலாக்க வேண்டும். சிறிய படகுகள், பெரிய படகுகள் அனைத்தும் சீக்கிரமாகக் கட்டி முடிக்கப்பட்டு, கட்டு மரங்களும் அதிகரிக்கப்பட்டு,

போதுமான அளவுக்குக் கொடுக்கப்பட வேண்டும். தனியார் துறையிலும் மீன் பிடிக்க ஊக்குவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் மீன் வளம் பெருகும் என்று சொல்லிக் கொள்கிறேன். மீன் சார்ந்த தொழில்கள், அதாவது காட்லீவர் ஆயில், ஷார்க்லீவர் ஆயில் ஆகியவைகள் மருத்துவ உபயோகத்திற்கு மிகவும் உகந்தது. அதோடு அது மிகவும் சத்துள்ள உணவு. அதைப் பற்றி இந்த அறிக்கையில் அமைச்சர் அவர்கள் ஒன்றும் கூறவில்லை. அவைகளை உற்பத்தி செய்வதற்கும் மக்களிடையே வினியோகிப்பதற்கும் நடவடிக்கைகளை அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

300 டிராலர்கள் வாங்குவதற்கு மத்திய அரசில் திட்டம் இருப்பதாக அறிகிறேன். அப்படி வாங்கும் 300 டிராலர்களில் நூறு தமிழ் நாட்டிற்குக் கொண்டு வந்து, அதிகமான அளவில் மீன் பிடிக்க முடியும். நார்வே போன்ற சிறிய நாடுகள் மீன் துறையில் நல்ல அபிவிருத்தியடைந்திருக்கிறார்கள். அவர்கள் கப்பல்களில் 10–15 நாட்கள் வரை தங்கி இருந்து ஆழ் கடலில் இருந்து மீன் பிடித்து வருகிறார்கள். அதிலேயே மீன்களைப் பிடித்து, உறைய வைத்து, பக்குவப்படுத்திக் கொண்டு வந்து வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். அதனால் அதிகமாக வெளிநாட்டுச் செலாவணி பெறுகிறார்கள். அந்த முறையில் நாம் ஏன் வளர்ச்சியடைய முடியாது என்பது எனக்கு விளங்கவில்லை.

மீன்பிடிக்கும் தொழிலில் மிக நல்ல அபிவிருத்தி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நமது மாநிலமும், ஆந்திர மாநிலமும் சேர்ந்து புலிக்காட்டு ஏரியிலிருந்து கூட்டாக மீன் பிடிப்பதற்கு ஏற்பாடு செய்து இருப்பதாக அறிகின்றேன். அது திட்ட அளவில் நின்று விடாமல் செயல் அளவில் விரைவாக செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மண்டபம் ஆராய்ச்சியில், ஆழ்கடலில் எரால அதிகமாக இருப்பதாகத் தெரியவருகிறது. கடற்கரை ஓரத்தில் உள்ள எராலை மட்டும் பிடித்து வருவதால், நமது மக்களுக்கு எரால் கிடைக்க முடியாமல் போய்விடுகிறது. வழக்கமாக இன்று எரால் 11 ரூபாய் 12 ரூபாய்க்கு வெளிநாட்டு ஏற்றுமதியாளரால் வாங்கப்படுகிறது. ருசியான நல்ல பெரிய எரால் மக்களால் பார்க்க முடியாமல் இருக்கிறது. ஆகவே, ஆழ்கடலில் சென்று அதிக அளவில் எராலைப்

1972 மார்ச் 27] [திரு. வா. மை. அப்துல் ஜப்பார்]

பிடித்து வந்து எல்லா மக்களுக்கும் கிடைக்கும் வகையில் செய்ய வேண்டும். இதற்காக மண்டபம் ஆராய்ச்சித் துறையினரின் அறிவுரையை வெகுவாக பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் சொல்லும் போது, நீர்ப் பாசனம், வாய்க்கால் இல்லாத பகுதி. அதே போல் அக நாட்டு நீர்நிலைகள் இல்லாத பகுதி. அக நாட்டு நீர் நிலை இல்லையென்று சொல்லுகிறபோது, அங்கே மீன்கள் கிடைப்பது அரிது. நாரிப்போன மீன்கள் தான் கிடைக்கின்றன. நல்ல மீன்கள், போஷாக்குத்தரும் மீன்கள் மலிவாகக் கிடைப்பதில்லை. ஆகவே, அரசாங்கம் நடமாடும் மீன் கடைகள் ஏற்படுத்த வேண்டும். இப் போது எதற்கெடுத்தாலும் மொபைல் பஸ்கள் வருகிற மாதிரி இந்த மீன் விற்பதற்கும் "மொபைல் பிஷ்ஷிங் ஷாப்" ஏற்படுத்தவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். இப்படி வைத்தால் நல்ல மீன்களை சிறு சிறு கிராமங்களுக்கும் எடுத்துச்சென்று மிகக் குறைவான விலை யில் அங்குள்ள மக்களுக்கும் வழங்க முடியும். ஆகவே, இம்முறையை கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற மானியத்தின் மீது பேசும்போதே சொன்னேன். பரங் கிப்பேட்டை போன்ற இடங்களில் மீன்பிடித் துறைமுகங்களை ஏற் படுத்தலாம் என்று. இந்த பறங்கிப்பேட்டையில் மீன் பிடிக்கும் துறைமுகத்தை ஏற்படுத்தினால் அந்த வட்டாரத்து மக்களுக்கு நல்ல பயன் அளிக்கும். அதோடு அந்தப் பகுதியில் இந்த மீன் வளத்தைக் கொண்டு செய்யப்படுகிற தொழிற்சாலைகளையும் தொடங்குவதற்கு ஏதுவாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அதிராமப்பட்டினத்திலும் மீன் பிடித் துறைமுகம் ஒன்று ஏற் படுத்தப்பட வேண்டும். இங்கே மீன் வளத் தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மணியடிக்கப்பட்டு, அடுத்த உறுப்பினர் அழைக்கப்பட்டார்.)

(திரு. எஸ். முருகையன் தலைமை)

திரு. இரா. இராமலிங்கம் : தலைவர் அவர்களே, மீனளத் துறை மானியக்கோரிக்கையை வரவேற்று என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

1000 கிலோ மீட்டர் கடற்கரையைக் கொண்டிருக்கிற தமிழ் நாட்டில் மீன்வளம் மிகுதியாக இருக்கிறது, மீன்வளம் நல்ல உணவுப் பொருளாக இருப்பதால் அதிகமாக மீன் பிடிக்கின்ற வாய்ப்பினை நாம் தொழிலாளிகளுக்கு ஏற்படுத்தித் தர வேண்டும். நான்காவது திட்ட இறுதியில் 3 லட்சம் டன்களுக்கு மேல் கடலில் மீன் பிடிப் பதற்கும், உள்நாட்டு நீர் நிலையங்களில் 2 லட்சம் டன்களுக்கு மேல் மீன் பிடிப்பதற்கும் இன்றைக்கு அரசு திட்டம் தீட்டி செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. அதற்கு இன்றியமையாத விசைப் படகுகளும் அதிகமாக தயாரித்து நாம் கொடுக்கவேண்டும். இதுவரையில் 1,198 விசைப் படகுகள் கட்டப்பட்டு தொழிலாளர்களுக்கு கொடுக்கப்பட் டிருக்கின்றன. இப்பொழுது கட்டப்படுகிற மீன் படகுகள் 32 அடி நீளம் உள்ளதாக இருக்கின்றன. இதைவிட 40 அடி நீளத்தில் கட்டினால் தொழிலாளர்களுக்கு நல்ல வசதியாக இருக்கும் என்று மீனவர்கள் கூறுகிறார்கள். ஆகவே, இனிமேல் கட்டுகின்ற மீன் படகுகள் குறைந்தது 40 அடி நீளம் உள்ளதாக கட்டப்படவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தப் படகுகளில் இருக்கின்ற இயந்திரங்கள் பொதுவாக சரி யான முறையில் செயல்படவில்லை என்று புகார்கள் கூறப்படுகின்றன. யான்மார் என்ஜின்கள் ஜப்பானில் செய்யப்பட்டு, அந்த என்ஜின்கள் பொருத்தப்பட்ட விசைப்படகுகள் நல்ல முறையில் நமது பக்கத்தில் ஓடிக்கொண்டிருக்கிறது. அத்தகைய நல்ல என்ஜின்களை கொண்ட படகுகள் மீனவர்களுக்கும் கட்டிக் கொடுக்கவேண்டும். ஜப்பான் நாட்டோடு கொலாபரேஷன் முறையிலே மத்திய அரசை, கலந்து அத்தகைய நல்ல என்ஜின்களை தயாரித்து அதை வைத்து படகுகள் கட்ட ஏற்பாடு செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தூத்துக்குடி பகுதியிலே உள்ள மீனவர்கள் கூட்டுறவு சங்கங்கள் மூலமாகக் கடன் வாங்குகிறார்கள். அவர்களுக்கு அந்தக் கடனை பூரணமாக திருப்பிக் கொடுக்க முடியவில்லை. காலம் அதிகமாகி விட்ட காரணத்தினால், வட்டியையும் சேர்த்து கட்ட முடியாத நிலைமை இருப்பதன் காரணமாக, தொழிலாளர்களுக்கு வட்டியைத் தள்ளிக் கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் இந்திய–பெல்ஜிய திட்டத்தின்கீழ் நாட்டுப் படகுகளுக்கு கட்டு மரத்தில் இயந்திரத்தைப் பொருத்தி ஒரு திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டத்தை மற்ற மாவட்டங் களுக்கும் விஸ்தரிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மீனவர்களுக்கு கடலில் எந்தெந்தப் பகுதிகளிலே மீன்கள் இருக்கின்றன என்று சரியாக கண்டுபிடிக்க முடியவில்லை. கடலில் பிஷிங் கிரௌண்டு எந்தெந்த பக்கத்தில் இருக்கிறதோ அதைக் கண்டறிந்து, அரசின் மூலம் மீனவர்களுக்கு பிஷிங் கிரௌண்டு இருக்கின்ற இடத்தைக் காட்டினுல், அதிகமாக மீன்களைப் பிடிப்பதற்கு வசதியாக இருக்கும். அதற்காக ஒரு குழு இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். ஆனுல், அது சரிவர இப்பொழுது வேலை செய்யவில்லை. பிஷிங் கிரௌண்டு இருக்கின்ற இடத்தைக் கண்டுபிடித்து உடனுக்குடன் மீனவர்களுக்குக் காட்டிக் கொடுத்தால், இதைவிட அதிகமாக மீன் பிடிப்பதற்கு வசதி ஏற்படும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

கடலோரப் பகுதியிலே எரால் மீன்கள் போன்ற மீன்கள் அதிகமாகக் கிடைக்கின்றன. கேரளத்திலுள்ளவர்கள் கூட இங்கே வந்து அந்த மீன்களை வாங்கிச் செல்கிருர்கள். அதன் மூலம் அன்னியச் செலாவணி அதிகமாகக் கிடைக்கின்றது என்று சொல்லப்படுகிறது. அத்தகைய உயர்ந்த மீன்களை நாமே பிடித்து, பிரீசிங் பிளாண்டைப் பயன்படுத்தி, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய அளவிலே செயல்படவேண்டும். அதுபோல மீன் எண்ணெய் தயாரிக்கின்ற தொழிற்சாலைகள் நமது மாநிலத்தில் 7 நிலையங்கள் இருக்கின்றன. சுத்தம் செய்யப்படாத மீன் எண்ணெய்தான் அங்கெல்லாம் தயாரிக்கப்படுகிறது. சுத்தம் செய்யப்பட்ட மீன் எண்ணெய் தயாரிப்பதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நல்ல வலைகளை மீனவர்களுக்குக் கொடுக்க வேண்டும். நைலான் நூல் அவர்களுக்கு அதிகமாகக் கொடுக்க வேண்டும். கடந்த ஆண்டில் 17 டன் நைலான் நூலை கொடுத்திருக்கிருர்கள். அதிகமாக மீனவர்களுக்கு நைலான் நூல் வழங்கப்பட வேண்டும். நைலான் நூலுக்கு சப்சிடியை அதிகரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மீன் பிடிப்பதற்கு இயந்திரப் படகுகள் கட்டுதல், மீன் பிடித்தால் பிடித்த மீன்களை பதப்படுத்தி வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்தல், உள்நாட்டிலுள்ள மற்ற மீனவர்களுக்கு கடன் சலுகைகளை வழங்குதல் போன்ற காரியங்களைச் செய்வதற்கு ஒரு கார்ப்பரேஷன் ஏற்படுத்த முன்வந்தால், இதைவிட நல்ல முறையில் செயல்படலாம் என்று கூறிக்கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[திரு. இரா. இராமலிங்கம்] [1972 மார்ச் 27

சங்கு குளிக்கின்ற தொழில் இந்த மாநிலத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. குறிப்பாக, திருநெல்வேலி மாவட்டத்தைத் தவிர, மற்ற மாவட்டங்களில் சங்கு குளிக்கின்ற தொழில் தாராளமாக நடைபெறுகிறது. தூத்துக்குடியில் மட்டும் அரசுத் துறையில் சங்கு குளிக்கிறார்கள். என்ன காரணம் என்று கேட்கும்பொழுது தூத்துக்குடியில் தான் பேர்ல், அதாவது முத்துக் குளிக்கின்ற பகுதி இருக்கிறது, சங்கு குளித்தால் அந்தப் பகுதி பாதிக்கப்படும் என்று கூறுகிறார்கள். இருந்தாலும், இன்றைக்கு 1,000-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் தூத்துக்குடியில் சங்கு குளிக்கின்ற தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

1971-ம் ஆண்டில் 5 லட்சத்திற்கு மேற்பட்ட சங்குகள் அரசுத் துறையில் எடுக்கப்பட்டது. ஒரு சங்குக்கு ஒரு ரூபாய் மட்டும் அந்தத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்பட்டது. அந்தத் தொழிலாளர்கள் ரூ. 1.25 கொடுக்கவேண்டும் என்று அரசிடம் முறையிட்டிருக்கிறார்கள். நமது அரசின் பரிசீலனையில் அந்தக் கோரிக்கை இருக்கிறது. நான் அரசைக் கேட்டுக்கொள்வது என்னவென்றால் அந்தத் தொழிலாளர்களுக்கு 1970–71-ம் ஆண்டுக்கு ஒரு சங்குக்கு ரூ. 1.25 வழங்க வேண்டுமென்பதுதான். 1973-ம் ஆண்டு முத்துக் குளிக்கின்ற ஆண்டாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ஜப்பான் போன்ற நாடுகளில் செயற்கை முறையில் முத்துச் சிற்பிகளை வளர்க்கிறார்கள். அதைக் கண்டறிந்து நமது பகுதியிலும் செயற்கை முறையில் முத்துச் சிற்பிகளை வளர்க்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் விவாதத்திலுள்ள மீன்வளத்தைச் சார்ந்த மானியக் கோரிக்கைக்கு என்னுடைய ஆதரவைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மீன்வளத் துறை நான்காவது ஐந்தாண்டுக் காலத்தில் 5 லட்சம் டன் மீன் உற்பத்தி செய்யவேண்டும் என்ற இலக்கை நிர்ணயித்து, அதற்காக எத்தனையோ திட்டங்களை, பணிகளை நிறைவேற்ற இருக்கிறது இந்த அரசு. ஆழ்கடலுக்குச் சென்று எங்கெங்கே மீன்கள் மண்டிக்கிடக்கின்ற பகுதி இருக்கிறதோ, அதைக் கண்டு

1972 மார்ச் 27] [திரு. கே. பி. கந்தசாமி]

பிடிக்கக்கூடிய அளவுக்கு ஆய்வு வேலே நடத்துவது, அங்கெல்லாம் சென்று மீன் பிடிக்கக்கூடிய அளவுக்கு விசைப் படகுகளே ஆக்கித் தருதல், இன்னும் உள்நாட்டு நீர் தேக்கங்களில் எந்தெந்த முறையில் மீன் உற்பத்தியைப் பெருக்க முடியுமோ, அப்படிப்பட்ட திட்டங்களே செயல்படுத்துதல், கடலில் பிடித்த மீன்களே கரை சேர்ப்பதற்காக செய்யவேண்டிய வசதிகளேச் செய்து தூத்துக்குடி போன்ற இடத்தில் மீன்பிடித் துறைமுகத்தை ஏற்படுத்திக்கொடுத்தல், கரைக்கு வந்து சேர்ந்த பிறகு மீன்களே நல்ல முறையில் பதனப்படுத்தி, அவை கெட்டுப்போகாமல் பார்த்துக்கொள்ளக்கூடிய அளவுக்கு ஆங்காங்கு நல்ல நிலேயங்களே ஏற்படுத்துதல், இப்படி எத்தனேயோ திட்டங்களேத் தீட்டி நம்முடைய மீன்வளத் துறை இதுவரையில் செய்திருந்த நல்ல காரியங்களுக்காகவும், இனிமேல் செய்யப்போகிற நல்ல பணிகளுக்காகவும் மீன்வளத் துறையையும், அந்தத் துறையைச் சார்ந்த அதிகாரிகளேயும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்படி எத்தனேயோ திட்டங்களிலும், பணிகளிலும் ஈடுபட்டிருக்கின்ற நேரத்தில், நாட்டில் வளர்ச்சி இருக்கவேண்டும், நல்ல முன்னேற்றம் இருக்கவேண்டும் என்று பலவிதமான பணிகளில் ஈடுபடுகிற நேரத்தில், ஆங்காங்கு தோன்றுகின்ற பிரச்னேகளே எதிர்த்துச் சமாளிக்கவேண்டிய கடமை நமக்கு இருக்கிறது. இன்னும் அதிகமாக மீன் உற்பத்தி செய்யவேண்டும் என்ற நோக்கத்தோடு விசைப் படகுகளே அதிகமாகப் பயன்படுத்துகிறோம். ஆங்காங்கு விசைப் படகுகள் சொந்தக்காரர்களுக்கும் அல்லது விசைப் படகுகளே ஓட்டுகின்ற மீனவர்களுக்கும், நாட்டுப் படகுகளின் சொந்தக்காரர்களுக்கும் தகராறு ஏற்பட்டுக்கொண்டே இருக்கிறது. அந்தத் தகராறு அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. சமீபத்தில் கூட கொச்சிக் கடலோரத்தில் இப்படிப்பட்ட ஒரு தகராறு ஏற்பட்டு, ஒரு விசைப்படகு நடுக்கடலிலேயே கொளுத்தப்பட்டிருக்கிறது. தமிழகத்தில் கூட ஆங்காங்கு பல தகராறுகள் ஏற்படுகின்றன என்று இங்கே சட்டசபையிலும், மேலவையிலும் கூறப்பட்டது. எனது பகுதியைச் சார்ந்த நீண்ட கடலோரத்தில் இருக்கிற திருச்செந்தூர் கடலோரத்தில் கடந்த ஆண்டு நிகழ்ந்த நிகழ்ச்சியை வைத்து இங்கே கேள்விகள் கேட்கப்பட்டன. ஏறத்தாழ 12 விசைப்படகுகள் கொளுத்தப்பட்டன, 33 படகுகள் சேதமாக்கப்பட்டன், அதைத் தொடர்ந்து நாட்டுப் படகுகளும் சேதமாக்கப்பட்டிருக்கின்றன. பல படகுகளின் சொந்தக்காரர்களின் வலேகள் சேதப்படுத்தப்பட்டிருக்

கின்றன என்றெல்லாம் தகவல் கொடுக்கப்பட்டது. இந்தத் தகராறைத் தீர்த்து வைக்கக் கூடிய பொறுப்பு மீன் துறையைச் சார்ந்தது என்று சொல்லிக்கொள்கிறேன்.

திருச்செந்தூர் பகுதியில் நடைபெற்ற சம்பவத்திற்குக் காரணம் என்ன என்பதை எடுத்துச்சொல்லி, அப்படிப்பட்ட சம்பவங்கள் மீண்டும் நமது தமிழகத்தில் நடைபெருதவாறு இந்த மீன்வளத் துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அந்தப் பகுதியில் ஒரு இடம் இருக்கிறது. மணப்பாடு, பெரியதாழை போன்ற பகுதிகள் கடலிலிருந்து 10 மைல்கள் தள்ளியிருக்கின்றன. 10 மைல் அகலமும், 20 மைல் நீளமும் உள்ள "மடை" என்ற இடத்தில் "பிரான்" என்ற எரால் மீன் அதிகமாக இருக்கிறது. அதை நாட்டுப் படகுச் சொந்தக்காரர்கள் தான் பிடிப்பது வழக்கம். கடலோரப் பகுதியில் 20 கிராமங்கள் இருக்கின்றன. போன ஆண்டு மட்டும் அதில் ஒரு கிராமத்திலிருந்து சில வியாபாரிகள் கடலில் மீன் பிடிப்பதில் பழக்கமில்லாதவர்கள் 20, 30 விசைப் படகுகளைக் கொண்டுவந்து குவித்து அந்த விரால் மீனைப் பிடிக்க, நாட்டுப் படகுக்காரர்கள் விசைப் படகுக்காரர்களுக்கு இடையே தகராறு ஏற்பட்டது: கடந்த மே மாதம் இருந்து இந்தத் தகராறு தோன்றி இரு சாராரும் தந்திகளையும், மனுக்களையும் மீன் வளத்துறை அதிகாரிகளுக்கு அனுப்பினுர்கள். கடைசியில் அந்தப் பகுதியில் உள்ள போலீஸ்காரர்கள் வந்து ஏதோ சமரசம் செய்தாலும் கூட கடந்த அக்டோபர் மாதம் இந்தத் தகராறு முற்றி, அந்த சமயத்தில் அங்கே வந்து மீன் வளத்துறை அமைச்சர் அவர்களை சந்தித்து நாட்டுப் படகுக்காரர்கள் முறையிட, கடந்த அக்டோபர் மாதம் 4-ம் தேதி அங்கேயுள்ள சப்-கலெக்டர் தலைமை யின்கீழ் பேச்சு வார்த்தை நடந்து, சமரச மாநாடு கூடி, அங்கே இரண்டு பகுதியினருக்கும் இடையே ஒரு ஒப்பந்தம் செய்துவைக்கப் பட்டது. அந்த ஒப்பந்தம், சரிவர செயல்படவில்லை. அக்டோபர் மாதம் 18-ம் தேதி 13 விசைப் படகுகள் அளிக்கப்பட்டன. அதற்குப் பிறகு சென்னையில் அந்தத் துறையில் உள்ள பெரிய அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு ஏன் இந்த அக்டோபர் 4-ம் தேதி நடந்த ஒப்பந்தத்தை செயல்படுத்தவில்லை என்று நான் கேட்டபோது It is a jumy agreement என்று சொன்னுர்கள். ஒப்பந்தம் அதனுல் செயல்படுத்தப்படவில்லை என்று சொன்னுர்கள். அதற்குப் பிறகு நான் இனிமேலாவது அந்த ஒப்பந்தத்தை அமுல்படுத்துவீர்

[திரு. கே. பி. சுந்தசாமி] [1972 மார்ச் 27

களா என்று கேட்டபோது "After the incident on 18th the agreement is dead." என்று சொன்னார்கள். அந்த சம்பவத்திற்கு முன்பு அது வேடிக்கையான ஒப்பந்தம் என்பதால் செயல்படுத்தவில்லை; அதற்குப் பிறகு அந்த சம்பவம் காரணமாக அந்த ஒப்பந்தம் செத்துவிட்டது என்று சொன்னார்கள். இப்படிப்பட்ட மனப்பான்மையை மாற்றிக் எப்படியாவது இந்தத் தகராறைத் தீர்க்க இந்த இலாக்கா அதிகாரிகள் முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் கடல் பகுதியில் டெரிடரி வாட்டர் என்றிருக்கிறது. இந்த முத்துக் குளிப்பிற்கு இருக்கிற வரையறை போன்று, நாட்டுப் படகுகாரர்களுக்கும் 20 மைல் வரை போய் மீன்பிடிக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தலைவர் அவர்களுக்கு நன்றி, அமர்கிறேன்.

திரு. க. சுப்பு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மீன் வளத்தைப் பொறுத்த வரையில் இராமநாதபுரம் மாவட்டத்தில் தான் தமிழகத்தில் அதிகமாகக் கிடைக்கின்றது என்பதை எல்லோரும் நன்கு அறிவார்கள். இராமநாதபுரம் மாவட்டம் பிற்பட்ட மாவட்டம் என்று சொல்லியபோதிலும், அங்கேயுள்ள மீன் வளத்தை சரியான முறையில் பயன்படுத்தினால் அதன் மூலம் வருமானம் இந்தத் துறைக்கு அதிகரிக்கும். ஏற்கெனவே, இந்தப் பகுதியில் உள்ள மீனவர்களைப் பொறுத்தவரையில் அங்கே உள்ள விசைப் படகுக்காரர்களுக்கும், வலை வீசிப் பிடிக்கிறவர்களுக்கும் இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டு வருகிறது. வலை வீசிப் பிடிக்கிறவர்கள் 7 மைல் அளவிற்கு வலை வீசி மீன் பிடிக்கிறார்கள். ஆனால் விசைப் படகு வைத்திருப்பவர்கள் இவர்கள் மீன் பிடிக்கும் இடத்திற்கும் வந்து மீன்களைப் பிடிப்பதால் இவர்களுக்குள் அடிக்கடி தகராறு ஏற்படுகிறது. அதைத் தவிர்க்க அரசாங்கம் உடனடியாக ஏற்பாடு செய்யவேண்டும்.

அடுத்து, அந்தப் பகுதியில்தான் மீன் வளம் அதிகமாக இருக்கிற தென்று சொல்லி ஒரு "மத்திய மீன் வள ஆராய்ச்சித் துறை" ஆரம்பித்தார்கள். அது மண்டபத்தில் செயல்பட்டுக் கொண்டிருந் தது. ஆனால் என்ன காரணமோ தெரியவில்லை, இன்றைக்கு அது மாற்றப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட, இது அநீதி, இதை எதிர்த்துப் போராட வேண்டுமென்று

சொன்னார்கள். உண்மையில் இது இராமநாதபுரத்திற்கு ஓர் பேரிழப்பு ஆகும். அந்த ஆராய்ச்சி நிலையத்தை இன்றைக்கு கொச்சிக்கு மாற்றியிருக்கிறார்கள். அங்கே இப்போது பாத்ரூமில் கூட ஆபீஸ் வைத்திருப்பதாகச் சொல்கிறார்கள். சில அதிகாரிகள் இதில் தலையிட்டு தங்களின் சுயநலத்திற்காக இப்படி மண்டபத்தி லிருந்து மாற்றி இருக்கிறார்கள் என்பது புலனாகிறது. மண்டபம் பகுதியில் "குருசடை" என்ற பகுதி முன்பு அந்த ஆராய்ச்சி நிலையம் இருக்கிற போது மிகவும் வளமுள்ள இடம் போல் இருந்தது. ஆனால் இன்றைக்கு அந்த இடம் ஒரு "டெஸர்ட் ஐலன்ட்" மாதிரி இருக்கிறது. அந்த இடத்திலே மாநிலத்திற்குச் சொந்தமான ஒரு ஆராய்ச்சி நிலையம் இருக்கிறது. அதிலும், அதேபோன்று ஒவ்வொரு ஆபீஸ்களாக மாற்றிக் கொண்டு இருக்கிறார்கள். இதற்குக் காரணம் என்ன என்று பார்க்கிறபோது இந்தத் துறையில் பணியாற்றுகிற டாக்டரேட் பட்டம் வாங்கியவர்கள் தமிழகத்தில் அதிகமாக இல்லை என்று சொல்கிறார்கள். வட நாட்டில் இந்தப் பட்டம் வாங்கி வருகிறவர்களை தமிழகத்தில் அங்கீகரிப்பதில்லை. மதுரைப் பல்கலைக் கழகம் அங்கீகரிக்கப்போவதாகச் சொல்லிக்கொண்டிருக் கிறது. ஆகவே இப்படிப்பட்ட நிலையில் இப்படி அதிகாரிகளையும், அலுவலகங்களையும் மாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால் அதற்கு என்ன காரணம் என்று ஆராய்ந்து பார்த்து தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அதற்குப் பிறகு, இங்கே குடும்பத்தோடு வருகிற அதிகாரிகளுக்கு போதிய வசதிகள் இல்லாததால் அடிக்கடி மாற்றிக்கொண்டு போய் விடுகிறார்கள். திருமணம் ஆகாமல் வருகிறவர்கள் திருமணம் ஆகிற வரை இருக்கிறார்கள். திருமணம் ஆனவுடன் அவர்களும் மாற்றிக் கொண்டு போய்விடுகிறார்கள். இப்படி என்று சொன்னால் அதைத் தவிர்ப்பதற்கு எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. குறைந்த பட்சம் இராமநாதபுரம் மாவட்டத்தில் தலைநகரை அந்த மாவட்டத்திலே வைத்தாலாவது அதற்கு வேண்டிய வசதிகளைச் செய்திருப்பார்கள். ஆனால் என்ன காரணத்தாலோ அப்படிச் செய்யப்படவில்லை. அந்தக் காரணத்தால் ஒரு தலைநகரமே இல்லாத மாவட்டத்தில் எதற்காக ஆராய்ச்சிக் கூடம் வைத்திருக்கவேண்டும் என்று அதிகாரிகள் கேட்கிறார்கள். நாம் வேண்டுமானால் சொல்ல லாம், ஆபீஸைத் தானே எடுத்துக் கொண்டு போயிருக்கிறார்கள். கட்டிடம் அப்படியே தானே இருக்கிறது என்று, கட்டிடம் போக

1972 மார்ச் 27] [திரு. க. சுப்பு]

வில்லை. உண்மை தான். ஆனால் உயிர் போய்விட்டதே! ஆகவே, இந்த விஷயத்தில் மத்திய சர்க்காரை கடுமையாக எதிர்த்து மண்டபத்திலிருந்து இதை மாற்றக் கூடாதென்று சொல்ல வேண்டும்.

இன்னொன்று, அந்தப் பகுதிகளில் மீனவர்களின் வாழ்க்கை மிக பயங்கரமாக இருக்கிறது. அங்கே இன்டோ–நார்வேஜியன் பிளான்ட் போன்றவை இருக்கின்றன. ஆனாலும் அந்தப் பகுதி மீனவர்களின் வாழ்க்கைத் தரம் இன்னும் உயரவில்லை. அவர்களின் வாழ்க்கை மிகவும் பரிதாபகரமாக இருக்கிறது.

கரையூர் என்ற பகுதியில் மீனவர்கள் குடிசையில் போதிய வசதி இல்லாத இடத்தில் வசிக்கிறார்கள். இந்த மீனவர்களுக்கு வீடு கட்டுகிற திட்டம் போடப்பட்டு அமுல்படுத்தப்படாமலிருக்கிறது. அடுத்த ஊர்களிலுள்ளவர்கள் வந்து அந்த இடங்களுக்கு பட்டா வாங்கிக் கொண்டு அவர்களுக்கு வீடு கட்ட இடம் இல்லாமல் செய்துவிட்டார்கள். அந்த மீனவர்கள் ஒதுங்கக் கூட இடம் இல்லாமலிருக்கிற நேரத்தில் அந்த ஆட்கள் அந்த இடங்களில் தென்னங்கன்று போடப்போவதாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட நிலைமைகள் போக்கப்பட வேண்டுமென்று ம
விண்ணப்பங்கள் எழுதிக்கொடுத்தும், அதைப்பற்றி கலெக்டர் 5
நடவடிக்கை எடுக்காமல் இருக்கிறார். அதோடு அந்தப் பகுதியில் கடலரிப்பு அதிகமாக இருக்கிறது. அந்த கடலரிப்பைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படவில்லை. அதற்குப் பதிலாக அங்கே இருக்கின்ற கல்லை வெட்டியெடுத்து, தாளையூத்து சிமெண்ட் பாக்டரிக்குக் கொண்டு செல்கிறார்கள். அந்தப் பகுதியிலே உள்ள கற்களில் கால்சியமும், கார்டைட்டும் அதிகமாக இருக்கின்றன. அவை சிமெண்டுக்கு முக்கியமாகத் தேவைப்படுகின்றன. ஆகவே, அங்கிருந்து கற்களை லாரி லாரியாக வெட்டிச் செல்கிறார்கள். அந்தத் தாளையூத்து சிமெண்ட் பாக்டரியில் ஆதித்தனாரின் ஆதிக்கம் ஏற்பட்ட பிறகு மேலும் அதிகமாக வெட்டிச் செல்லப்படக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அங்கே ஒரு மரக்காரயர் இருக்கிறார். அந்தக் கற்களை வெட்டி எடுப்பதற்கு அவர் கான்ட்ராக்ட் எடுத்திருக்கிறார். ஒரு லாரி கல்லுக்கு 25 ரூபாய் இருக்கிறது. அந்த கற்களை வெட்டி அனுப்பபுவதன் மூலம் கமிஷனாக ஒரு நாளைக்கு 500 ரூபாய் அந்த

[திரு. க. சுப்பு] [1972 மார்ச் 27

மரக்காயர் சம்பாதிக்கிறுர். இப்படியாக அங்கேயிருந்து கற்களை வெட்டி எடுப்பதினுல், கடல் நீர் உள்ளே வந்து கடல் அரிப்பு ஏற்படுகிறது. இதை உடனடியாகத் தடுக்கவேண்டும்.

மீனவர்களின் வாழ்க்கை மிகவும் கேவலமான நிலையில் இருக்கிறது. அந்த ஊரில் உள்ள நிலத்தில் கால் பகுதிதான் அந்த மீனவர்களுக்குச் சொந்தம். மீதியுள்ள முக்கால் பகுதியும் அந்த மரக்காயருக்குச் சொந்தமாக இருக்கிறது. எனவே, மீனவர்களுக்கு அங்கே வீடு கட்டிக்கொள்வதற்கு வசதி இல்லை. அங்கே மறவர் தெரு என்று ஒரு தெரு இருக்கிறது. அங்கே ரோடு போடுவதற்காக மீனவர்களின் குடிசைகளை காலிபண்ணச் சொல்கிறுர்கள். காலி பண்ணுமல் இருப்பதற்கு விண்ணப்பங்களும், வேண்டுகோள்களும் விடுக்கப்பட்டும், ஒன்றும் பயன்படாமல் இருக்கிறது. அவர்களை வெளியேற்றுவதில்தான் மும்முரமாக இருக்கிறுர்கள் அதற்கு மாற்றுத் திட்டம் கொடுத்தும், அரசாங்கம் அதை கவனிக்காமல், வெளியேற்றுவதற்கு நோட்டீஸ் கொடுத்திருக்கிறுர்கள். இவையெல்லாம் அந்தக் கடலோரப் பகுதியில் வாழக்கூடிய சாதாரண மக்களைப் பாதிக்கிறது. அந்தக் கடலோர மக்களின் மேம்பாட்டிற்காக ஒரு போர்டு அமைக்கப்பட்டிருக்கிறது. போர்டின் அட்வைசரி கமிட்டியில் அந்த மக்களின் மீது அக்கறையில்லாத மரக்காயர் நியமனம் பெற்றிருக்கிறுர். அவர் பெயர் சேட்சுல்தான். அவருக்கு மீனவர்களின் வாழ்க்கையைப் பற்றி ஒன்றும் தெரியாது.

அதேமாதிரி கூட்டுறவுத் துறையில் அமைத்திருக்கக்கூடிய அமைப்புகளில் மீனவர்களுக்குச் சரியான பங்கு கிடையாது. சாதாரண மீனவர்கள் அங்கு இருக்கக்கூடியவர்களுக்கு கூலி வேலைக்கு இருக்கிறுர்கள். அவர்களுக்குச் சரியான கூலி கொடுக்கப்படுவதில்லை. வருஷத்திற்கு 300 ரூபாய் கூலி வாங்கிக்கொண்டு வேலை செய்கிறுர்கள். அவர்களுக்கு சரியான கூலி கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கவேண்டும். அவர்களுக்கு வீடு கட்டுவதற்கு சரியான திட்டம் ஒன்று செய்து கொடுக்கப்பட வேண்டும். இவையெல்லாம் செய்து கொடுத்தால் இராமநாதபுரம் மாவட்டத்தில் வாழுகின்ற மீனவ மக்கள் வாழ்க்கை வளம் பெறும், முன்னேறும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

1972 மார்ச் 27]

திரு. தொ. ப. சீனிவாசன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த மீனளத் துறை மானியத்தை மனதார ஆதரித்து என்னுடைய கருத்துக்களை கூற முற்படுகிறேன். பொதுவாக இந்த அரசு மீனவர்களுக்கு எந்த அளவு வசதிகளைச் செய்கிறதோ, அவையெல்லாம் உளமாரச் செய்யவேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு செய்து வருகின்றது என்பதைப்பற்றிச் சொல்வதிலே நான் பெருமைப்படுகிறேன்.

குறிப்பாக, தூத்துக்குடியிலே சங்கு குளிப்புப் பற்றி இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு முன்பு குளிக்கப்பட்ட சங்கு நான்கு அணு வீதம் தனியாருக்குக் குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. ஆனால் இந்த அரசு ஆழ்கடலிலே மூழ்கி சங்கு எடுக்கின்ற சங்குத் தொழிலாளர்கள் பாதிக்காத வகையில் குத்தகையை ரத்து செய்து இருக்கிறது. அந்தச் சங்கு இன்றையதினம் நான்கு ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

அடுத்தாற்போல், அரசுத் துறையிலே சங்குகளை ரூ. 1.25-க்கு வாங்கி வந்ததை மாற்றி ரூ. 1.75-ஆக ஆக்கியிருக்கிறது. இந்த நல்ல காரியத்தைச் செய்த இந்த அரசை அந்தத் தொழிலாளர்களின் சார்பிலே பாராட்டுகிறேன் ; வாழ்த்துகிறேன். அந்த மக்களுக்கு ஒரு குறிப்பிட்ட அளவுக்குமேல் சங்கு எடுத்தால், மானியம் வழங்குவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. அவர்கள் அந்த அளவுக்குமேல் சங்கு எடுத்துவிட்டார்கள். ஆகவே, அவர்களுக்கு மானியம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மீனவர்களுக்கு கடலோரத்தில் தான் பிழைப்பு. அவர்களுக்குப் போதுமான வசதி இல்லை. இந்த அரசு எந்த வகையிலே மற்ற துறைகளிலே, குறிப்பாக விவசாயத் துறையிலே பசுமைப் புரட்சி செய்து வருகிறதோ, அதைபோன்று மீனவர்களுக்கும் புரட்சிகரமானத் திட்டங்களைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நேரத்திலே மீனவர்களுக்கு விசைப் படகுகள் கட்டிக் கொடுப்பதில் மிகுந்த அக்கறை கொண்டுள்ளது அரசு என்பதை யாரும் மறுக்கமுடியாது. ஆனால் இந்த ஆண்டு மீனவர்களுக்கு கொடுக்கப்பட்ட விசைப் படகுகளுக்கான மானியத்தை நிறுத்தி விடுவதாகக் கூறப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி நான் மிகவும்

[திரு. தொ. ப. சீனிவாசன்] ந1972 மார்ச் 27

வேதனைப்படுகிறேன். மானியத்தை நிறுத்திவிடக்கூடிய அளவுக்கு மீனவர்கள் முன்னேறிவிடவில்லை. அவர்கள் நிலை இன்னும் மிக மிக மோசமாகவே இருக்கிறது. அவர்கள் வாழ்கின்ற குப்பம் இன்னும் மோசமாக இருக்கிறது. நகரங்களிலிருந்து அந்தக் குப்பங்களுக்குச் சென்றால், எப்போது அங்கிருந்து வெளியேறுவோம் என்ற எண்ணம் ஏற்படக்கூடிய அளவிலே தான் இருக்கிறது. ஆகவே, அந்த மானியத்தை நிறுத்திவிடாமல் தொடர்ந்து கொடுத்துவரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல், இந்த அரசு தீவிரத் திட்டத்தின்கீழ் மீன்பிடித் தொழிலை நடத்தவேண்டுமென்று ஆர்வத்தோடு இருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் இந்தத் துறையிலே ஆழ்கடலிலே சென்று மீன் பிடிக்க இந்த அரசு அதிக நம்பிக்கை அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு நல்ல செய்தியை இப்போது கேள்விப் படுகிறோம். பத்திரிகையிலே அந்தச் செய்தியைப் பார்த்தேன். நமது மத்திய அரசு சோவியத் நாட்டுடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொள்வது பற்றி செய்தி வந்திருக்கிறது. ஆழ்கடலில் மீன்பிடிக்கக் கூடிய சிறந்த வசதி கொண்ட விசைப் படகுகளை வாங்குவதற்கு மத்திய அரசு சோவியத்துடன் கையெழுத்து செய்திருக்கின்ற நல்ல செய்தி அது. அந்த விசைப் படகுகளை மத்திய அரசு மிகவும் பின்தங்கிய பகுதியில், பின்தங்கிய நிலையில் இருக்கக்கூடிய மக்களுக்கு கொடுக்கவேண்டுமென்றும், அதற்கு வழி செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், மற்றெல்லாத் துறைகளையும் விட மீன்பிடித் துறையிலே நாம் மிக மிகப் பின்னடைந்திருக்கிறோம். 1968-ம் ஆண்டு நமது இந்திய நாட்டின் மீன்பிடி முறையைப்பற்றி ஆராய்ச்சி செய்யப் பட்டது. அந்த ஆராய்ச்சியின் மூலம் அளிக்கப்பட்ட புள்ளிவிவரங் களைப் பார்த்தால் நாம் மற்ற நாடுகளை விட மிக மிக பின்தங்கியிருக் கிறோம் என்பது தெளிவாகத் தெரிகிறது. ஜப்பான் நாட்டில் 8.65 மிலியன் டன் மீன் பிடித்திருக்கிறார்கள். சோவியத் நாட்டில் 6.08 மிலியன் டன் மீனும், சீனா தேசத்தில் 5.18 மிலியன் டன்னும், நார்வேயில் 2.80 மிலியன் டன்னும், அமெரிக்காவில் 2.44 மிலியன் டன்னும் பிடித்திருக்கிறார்கள். ஆனால் 55 கோடி மக்கள் தொகையைக் கொண்ட இந்தியாவில் 1.53 மிலியன் டன் மீன்தான் பிடிக்கப்

பட்டிருக்கிறது. இந்த நிலையை நிச்சயமாக நாம் போக்கியாக வேண்டும். இந்த அரசு இதில் மிகவும் அக்கறை செலுத்தி, இதற்கு அதிகத் தொகை ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அந்நிய நாடுகளிலே பரின் வலைகளைப் பயன் படுத்தி மீன் பிடிக்கின்றார்கள். அந்தத் திட்டத்தை நமது நாட்டிலும் பின்பற்ற வேண்டும். அந்த வலையின் மூலம் ஒரு நாளைக்கு 50 டன் மீன் பிடிக்கமுடியும். அந்த பரின் வலையின் விலை சுமார் ஒரு லட்சம் ரூபாயாக இருக்கிறது. மண்டபத்திலே அந்த வலையின் மூலம் ஒரு நாளைக்கு 50 டன் மீன் பிடிக்கமுடியுமா என்று பரீட்சித்துப் பார்த்தார்கள். இறுதியில் பிடிக்கமுடியும் என்று சொல்லியிருக் கிறார்கள். ஆகவே, அந்த வகை வலைகளை அதிகமாக இறக்குமதி செய்து, பயன்படுத்த வேண்டும். பொதுவாக ஒரு கிலோ மீனின் விலை ஒரு ரூபாயாக வைத்துக்கொண்டாலும், 6,000 டன் மீன் பிடிக் கப்படும்போது ஏறத்தாழ 6 கோடி ரூபாய்க்கு மீன் கிடைக்கக்கூடிய புரட்சிகரமானது இந்த பரின் வலைகள் என்பதைக் கண்டிருக்கிறோம். ஒரே வலையைக் கொண்டுபோய் இரண்டு கட்டுமரங்களில் கூட மீன் பிடிக்கலாம். இந்த வலையில் மீன் கூட்டம் கூட்டமாகக் கிடைப்ப தாகச் சொல்கிறார்கள். காளுங்கழுத்தான், சூரை, தவளை போன்ற விலை உயர்ந்த மீன்கள் எல்லாம் இதில் பிடிக்கக்கூடிய சூழ்நிலை இருக் கிறது. ஆகவே இந்த அரசு அதிலே கவனம் செலுத்தி, அதைக் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாம் விசைப் படகுகளில் தீவிரம் காட்டுகின்ற நேரத்தில் மீன் துறைகளை அதிகப்படுத்த வகை செய்யவேண்டும். குறிப்பாக 35 மைல் தூரத்திற்கு மேல் மீனவர்கள் விசைப்படகுகளில் கடலில் சென்று வரவேண்டியதாக இருக்கிறது. இன்றையதினம் பழவேற் காட்டில் ஒரு மீன்துறை ஏற்படுத்துவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதை ஏற்படுத்தித்தர வேண்டும். அடுத்ததாக (மணியடிக்கப் பட்டது).

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மீனளத்துறை மானியத்தின் மீது ஒரு சில கருத்துக்கள் சொல்வதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி] [1972 மார்ச் 27

முதன் முதலாக எனக்கு முன்பு பேசியவர்கள் நாட்டுப் படகுக்காரர்களுக்கும், விசைப்படகுக்காரர்களுக்கும் அடிக்கடி ஏற்படுகிற சச்சரவுகளைப்பற்றிச் சொன்னார்கள். விசைப்படகுகளை எல்லாம் சர்க்காரே தயார் செய்து தனிப்பட்டவர்களுக்கு அளித்து வருகிறது. இதுபோன்று நாட்டுப்படகுக்காரர்களுக்கும், விசைப்படகுக்காரர்களுக்கும் அடிக்கடி இனிமேலும் தகராறு எழாதிருக்க விசைப் படகுகளை யாருக்கும் கொடுக்காது, அரசே உடமையாகக் கொண்டு, கடலில் போக வாடகைக்குவிடும் ஒரு திட்டத்தை ஏற்படுத்தினால் நல்லது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நாம் நிறையக் கடல் பரப்பைக் கொண்டிருக்கிறோம். ஆனால் நம்மிடம் இருக்கக்கூடிய துறை சிறியதாக இருக்கிறது. அந்தத் துறைகளை அதிகப்படுத்தவேண்டும். திரை கடல் ஓடியும் திரவியம் தேடு என்பதாக கடல்களில் நீண்ட தூரம் சென்றவர்கள் நம் முன்னோர்கள். அந்த மீனவ சமுதாயம் இன்றைக்கு இருக்கிறது. அவர்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுத்தால் நிறைய அந்நியச்செலாவணியைத் தேட முடியும். இப்போது அளிக்கப்படுகிற கடன் உதவிகளும், சலுகைகளும் போதா. இப்போதிருக்கிற நிலைமையில் தாழ்த்தப்பட்ட மக்களைப்போல சிரமதிசையில் அவர்கள் இருக்கிறார்கள். அதிகமான அளவில் நம்முடைய உதவிகளை அளிக்கவேண்டும்.

கடைசியாக ஒரு சிறிய கருத்தைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நம்மிடத்தில் ஒரு அக்வேரியம் இருக்கிறது. ஆனால் பம்பாயில் ஒரு அக்வேரியம் இருக்கிறது. அங்கே இருப்பதுபோல இங்கே சரியானமுறையில் கவனிக்கப்படவில்லை. தமிழகத்தில் உள்ள அக்வேரியத்தை நல்லமுறையில் அபிவிருத்தி செய்து, பற்பல வகையான மீன்களும் இருக்கும்படியாகச் செய்தால்—அதை நல்ல முறையில் பெரிதுபடுத்தினால் நன்றாக இருக்கும் என்று தெரிவித்துக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. செ. இராமலிங்கம்: பேரவை துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கோரியுள்ள மீனளத்துறை மானியத்தை வரவேற்று என் கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

1972 மார்ச் 27] [திரு. செ. இராமலிங்கம்]

பொதுவாக இந்த அறிக்கையில் விவசாயத்துறையில் பசுமைப் புரட்சியை ஏற்படுத்தி தன்னிறைவைக் கண்டிருப்பதைப்போல, கடல் புரட்சித் திட்டத்தை உருவாக்கி வெற்றி காண்போம் என்று குறிப்பிட்டிருப்பதை வரவேற்றுப் பாராட்டுகின்றேன்.

பொதுவாக, இந்த அரசு மீனவ சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காக ஆண்டுதோறும் விசைப்படகுகள் தயாரித்து வழங்கி வருகிறது. விசைப்படகு வேண்டும் என்கிறவர்கள் 500 ரூபாய் கட்டி தங்கள் பெயரை ரிஜிஸ்தர் செய்துகொள்ள வேண்டும் என்கிறார்கள். பிறகு எல்லாருடைய பெயரையும் எழுதி லாட்டுப்போட்டு யார் பெயர் வருகிறதோ அவருக்குக் கொடுத்து வருகிறார்கள். இது சரியில்லை. இந்த லாட் முறையை ஒழித்துவிட்டு ரிஜிஸ்தர் செய்துகொண்டுள்ள வரிசையில் விசைப்படகுகள் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஆண்டு 12 விசைப்படகுகள் வழங்கப்பட்டிருப்பதாக அறிகிறேன். பொதுவாக இராமநாதபுரத்தில்தான் மீனவ சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் அதிகம். தமிழகத்தில் ஏற்றுமதியாகின்ற மீன்களில் மிக அதிகமான அளவு இராமேஸ்வரத்தில் இருந்துதான் ஏற்றுமதியாகிறது. இராமேஸ்வரத்தில் உள்ள மீனவர்களுக்கு இப்போது அலாட் செய்கிற விசைப்படகுகள் போதாது. அதை அதிகப்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இராமேஸ்வரத்தில் உள்ள மீனவர்கள் ஆழ்கடல் மீன் பிடிப்புக்குப்போய் திசை தவறிவிட்டால் மூன்று நான்கு நாட்கள் கடலில் தத்தளிக்க வேண்டியிருக்கிறது. சென்னைக்குத் தெரிவித்து சென்னையில் இருந்து அவர்களைத் தேடி விசைப்படகு, ஹெலிகாப்டர் எல்லாம் வரவேண்டியதாக இருக்கிறது. அப்படியின்றி இராமேஸ்வரம் பகுதி மீனவர்களின் பாதுகாப்புக்காக இராமேஸ்வரத்திலேயே விசைப்படகு, ஹெலிகாப்டர் கூட நிரந்தரமாக இருக்க தக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏற்பட்ட பிறகு தான் சங்குத் தொழிலாளர்களுடைய துன்பங்கள் துடைக்கப்பட்டன என்று கூறிக்கொள்வதில் நான் பெருமைகொள்கிறேன். முன்பு தனியார்கள் லைசென்சு பெற்று சங்குத் தொழிலாளர்களிடம்

[திரு. செ. இராமலிங்கம்] [1972 மார்ச் 27

இருந்து குறைந்த விலையில் சங்கு வாங்கிவந்தார்கள். இன்றைக்குக் கழக அரசு தனியார்களுக்கு அளித்த லைசென்சுகளை ரத்துசெய்து விட்டு சங்கு எடுக்கும் தொழிலாளர்களுக்கே லைசென்சு வழங்கி அவர்கள் இன்றையதினம் பயன் அடைந்து வருகிறார்கள்.

பொதுவாக, இன்றையதினம் மீனவர்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்த அரசு இன்னும் அதிகமான பண உதவியும், சலுகைகளும் அளிக்க முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. குழ. செல்லையா : துணைத் தலைவர் அவர்களே, மீனள மானியத்தை வரவேற்று என் கருத்துக்களைச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இங்கே பேசிய உறுப்பினர்கள் நாட்டுப்படகுக்காரர்களுக்கும், விசைப்படகுக்காரர்களுக்கும் அடிக்கடி சச்சரவுகள் ஏற்பட்டு வருவதைச் சொன்னார்கள். எவ்வளவு சமாதானம் செய்துவைத் தாலும், இரண்டுபேர்களுமே ஒத்துக்கொண்டாலும் பயன்பட வில்லை. மல்லிப்பட்டணம் கிராமத்தில் சமீபத்தில் நடந்த கலவரம் கூட எல்லோருக்கும் தெரியும். இதற்கு அரசாங்கம் ஏதாவது ஒரு நல்ல முடிவை ஏற்படுத்தியாக வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

என்னுடைய தொகுதியில் சுமார் 10 ஆயிரம் மீனவர்கள் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். கடலில் நாட்டுப் படகுக்காரர் களும், விசைப்படகுக்காரர்களும் அடிக்கடி சண்டையிட்டுக் கொள்கிறார்கள். நாட்டுப்படகில் சென்று மீன்பிடிப்பவர்கள் கரையி லிருந்து பத்து மைல் வரையில் சென்று மீன் பிடிக்கலாம் என்றும், விசைப்படகுக்காரர்கள் பத்துமைலுக்கு அப்பால் பத்து மைல் வரையிலும் சென்று மீன் பிடிக்கலாம் என்று ஒரு எல்லையை வரை யறுத்தால் மிகவும் சௌகரியமாக இருக்கும். இந்த இரு ரக படகுக் காரர்களுக்கும் இடையே சண்டை சச்சரவு வராமல் பார்த்துக் கொள்ள இதுதான் சிறந்த வழி என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விசைப்படகுக்காரர்கள் இரவிலே கடலிலே சென்று மீன் பிடிக்கக்கூடாது என்று பஞ்சாயத்திலே ஒரு முறை செய்திருக்கிறார்கள். அவர்கள் விடியற்காலையில்தான் மீன் பிடிக்கச்

[திரு. குழ. செல்லையா]

செல்லவேண்டுமென்று கட்டுப்பாடு இருக்கிறது. ஆனால் சிலர் சைலன்சரிலே துணியை அடைத்து சத்தம் வராமல் செய்து இரவிலே சென்று மீன்பிடித்துவிடுவதால் காலையில் எழுந்து செல்லும் நாட்டுப் படகுக்காரர்களுக்குச் சரியான அளவு மீன் கிடைப்பதில்லை. அதனால் அவர்களுடைய வாழ்வு நசிக்கப்படுவதால் அவர்களுக்கும் விசைப் படகுக்காரர்களுக்கும் இடையில் அடிக்கடி மோதல் ஏற்படுவதற்கான நிலைமை ஏற்படுகிறது.

மேலும், விசைப்படகுக்காரர்கள் தங்களுடைய பட்டி வலையை வீசி நாட்டுப்படகுக்காரர்களின் படு வலைகளையெல்லாம் அறுத்து விடுகிறார்கள் என்கிற புகார் அடிக்கடி கிளம்புகின்றது. ஆகவே, நாட்டுப்படகுகளில் சென்று மீன்பிடிப்பவர்கள் கரையிலிருந்து பத்து மைல்தூரம் என்றும் அதற்கு மேல் ஐந்திலிருந்து பத்துமைல் தூரம் வரையில் விசைப்படகுக்காரர்கள் சென்று மீன்பிடிக்கலாம் என்ற விதியைக் கண்டிப்பாக அமல் நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஏழை எளிய மீனவர்கள் முன்னேற்றம் அடைய வேண்டுமென்பதற்காக நாம் விசைப்படகுகளைக் கொடுத்து வருகிறோம். மேலும், இலங்கையிலிருந்து வருகின்ற அகதிகளுக்கு மறுவாழ்வு அளிக்கும் பொருட்டும் விசைப்படகுகளைக் கொடுத்து அவர்களை வாழ வைக்கிறோம். நாம் எந்த நோக்கத்திற்காக, எந்த லட்சியத்திற்காக இந்த விசைப்படகுகளை வழங்குகிறோமோ அந்த லட்சியம் நிறைவேறாத வகையில் சிலர் ஏழை மீனவர்களிடமிருந்து பணம் கொடுத்து வாங்கிக்கொள்கிறார்கள். 32 அடி நீளமுள்ள இந்த விசைப்படகின் விலை 52 ஆயிரம் ரூபாய் ஆகிறது. நாம் இதை மீனவர்களுக்கு சப்சிடி ஸ்கீமில் கொடுக்கிறோம். ஆனால் சில பண முதலாளிகள் அந்த ஏழை மீனவர்களிடம் 10 ஆயிரம் அல்லது 12 ஆயிரம் ரூபாய் கொடுத்து அந்த விசைப்படகை வாங்கிக்கொண்டு, அதன்மூலம் அதிக இலாபத்தைச் சம்பாதிக்கிறார்கள். வசதி படைத்தவர்கள் வேண்டுமானால் முழுத் தொகையையும் கட்டிவிட்டு, விசைப் படகை வாங்கிக்கொள்ளலாம். அவ்வாறு செய்யாமல் குறைந்த தொகையை மீனவர்களுக்குக் கொடுத்துவிட்டு, அவர்கள் மூலமாகப் படகுகளை வாங்கிக்கொள்வார்கள். ஆகவே, இதைத் தடுக்க வழி வகை செய்ய வேண்டும். இம்மாதிரி படகுகளை வாங்குபவர்களையும் விற்பவர்களையும் கண்டுபிடித்து தக்க நடவடிக்கை எடுப்பதற்காக ஒரு தனியான குழுவை அமைக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப் பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. குழ. செல்லையா]

எனது தொகுதியில் ஏரிபுறக்கரைப் பகுதியில் மீனவர் கூட்டுறவுச் சங்கம் இருக்கிறது. அந்த சங்கத்தில் அரிசனங்களை உறுப்பினர் களாகச் சேர்த்துக்கொள்ள முடியாது என்கிறார்கள். வசதி படைத்தவர்கள் தாம் அந்தச் சங்கத்தின் உறுப்பினர்களாக இருக் கிறார்கள். அந்தப் பகுதியில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் உப்பளப் பகுதியாக இருக்கிறது. அந்தச் சங்க உறுப்பினர்கள் ஆளுக்கு 200 ஏக்கர் உப்பளப் பகுதி என்று எடுத்துக்கொண்டு கொழுத்த லாபம் அடைகிறார்கள். ஆகவே, அந்தப் பகுதியில் உள்ள அரிசனங்களையும், மீனவர் சங்கத்தின் உறுப்பினர்களாகச் சேர்த்து, ஆளுக்கு 10 ஏக்கர் அல்லது 15 ஏக்கர் உப்பளத்திலே குத்தகை எடுக்கின்ற அளவுக்கு நல்ல நிலைமையை உண்டாக்கித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதிராம்பட்டினத்திலிருந்து கட்டுமாவடி வரைக்கும் இடையில் ஒன்பது பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. அந்தப் பகுதிகளில் எல்லாம் முஸ்லீம் பெருங்குடிமக்கள், அரிசனங்கள், மீனவர்கள் எல்லோரும் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுக் கெல்லாம் மருத்துவ வசதி மிகவும் முக்கியமானது. மேலும் அவர் களுக்குக் குடிநீர்ப் பிரச்சினை நீண்டகாலப் பிரச்சினையாக இருக்கிறது. அவர்கள் ஊற்று தோண்டி, மண்பாத்திரத்தில் துணிபோட்டு வடிகட்டிதான் தண்ணீரைக் குடித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமையை மாண்புமிகு அமைச்சர் அவர்களே நேரில் வந்து பார்த் திருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையை அரசு விரைவில் தீர்த்து வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இறால் என்கிற உயர்ந்த ரக மீன் தஞ்சை மாவட்டத்தின் கடற்கரைப் பகுதியில் நிறைய கிடைக்கிறது. அதை கொச்சி துறைமுகத்திற்கு எடுத்துச்சென்று பதப்படுத்தி ஏற்றுமதி செய்கிறார்கள். இறால் மீனை நல்ல முறையில் பதனப்படுத்துவதற் காக அந்தப் பகுதியிலே ஒரு இறால் பதனிடும் தொழிற்சாலையை அமைத்துத் தர வேண்டும். இதனால் மீனவர்களுக்கு நல்ல சௌகரியம் கிடைப்பதுடன் இலாபமும் கிடைக்கும். வெளிநாட்டுச் செலாவணியும் கிடைக்கும். அரசு இந்தத் தொழிற்சாலையை அமைத்துத் தர வேண்டும். மீனவர்களுக்கு வேண்டிய மருத்துவ வசதிகளையும் பிற வசதிகளையும் செய்து தர வேண்டும்.

1972 மார்ச் 27] [திரு. குழ. செல்லையா]

அடுத்தபடியாக, வாணிபத்தைப் பெருக்குகின்ற வகையில் சாலைகள் அமைக்க வேண்டும். ஆறு, ஏழு சாலைகள் அமைக்கப் பட்டிருக்கின்றன. மேலும், மனோரா என்ற பகுதியில் சிறிய போட் கட்டுவதற்கு வேண்டிய ஏற்பாடு அரசு மேற்கொண்டுள்ளதாக அறிகிறேன். விரைவாகச் செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, அரசைப் பாராட்டி, என் உரையை முடித்துக்கொள் கிறேன். வணக்கம்.

திரு. வீ. கார்த்திசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒருசில கருத் துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

முதன்முதலாக, நெல்லை மாவட்டத்தில் கடலோரப் பகுதிகளில் மீன்பிடி தொழிலில் ஏற்பட்டிருக்கிற நெருக்கடியான நிலைமையைச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய பகுதியில் பெரும்பாலோர் கட்டுமரங்களில் கடலில் சென்று மீன் பிடிக்கிறார்கள். கடலில் கரையிலிருந்து ஐந்து மைல் தொலைவில் சென்று மீன்பிடிக்கிறார்கள். அதிகமான தூரம் கட்டுமரங்களில் சென்று மீன் பிடிக்க முடியாது. கேரள மாநிலத்தைச் சேர்ந்த மீனவர்களும், மற்ற மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்களும், விசைப்படகுகளில் வந்து கரையோரப் பகுதிகளில் உள்ள "இறால்" என்கிற மீன்களைப் பிடித்துச் சென்று விடுகிறார்கள். இவர்கள் இப்படிச் செய்வதால் கட்டுமரங்களில் செல் கின்ற மீனவர்களுக்குத் தகுந்த அளவு மீன் கிடைக்காமல் அவர்கள் கஷ்டப்பட நேரிடுகிறது. ஆகவே, கட்டுமரங்களில் மீன்பிடிப்பவர் களுக்கும், விசைப்படகுகளில் சென்று மீன்பிடிப்பவர்களுக்கும் இடையே அடிக்கடி தகராறுகள் எழுந்து நிலைமைகள் மோசமாகி விடுகின்றன. ஆகவே, கட்டுமரங்களில் சென்று மீன்பிடிப்பவர்கள் கரையிலிருந்து ஐந்து மைல் அல்லது அதற்குச் சற்று மேலே என்றும், விசைப்படகுகளில் சென்று மீன்பிடிப்பவர்கள் 10 மைல், 15 மைலுக்கு அப்பால்தான் சென்று மீன பிடிக்கவேண்டும் என்றும் ஆணை பிறப்பித்துவிட்டால், இருபாலாருக்கும் சௌகரியமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் கட்டுப் பாட்டைச் செய்யாவிட்டால் பல இக்கட்டான மோசமான நிலைமை கள் உண்டாக்கின்றன. ஆகவே, அரசு இதில் தக்க கவனம் செலுத்தி நல்ல ஏற்பாட்டைச் செய்யவேண்டும்.

[திரு. வீ. கார்த்திசன்] [1972 மார்ச் 27

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியில் கிட்டத்தட்ட 15 ஆயிரம் மீனவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான வலை வசதிகள், மரக்கட்டைகள் வாங்குவதற்குத் தேவையான உதவித் தொகைகள் ஒழுங்காகக் கிடைப்பதில்லை. ஆகவே, கூட்டுறவுச் சங்கம் அமைத்து, நைலான் வலைகள் போன்றவற்றை மீனவர்களுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இடிந்தகரையில் ஐஸ் பிளான்ட் கட்டினார்கள். அது சரியான முறையில் இயங்கவில்லை. அந்த ஐஸ் பிளான்டை ஒழுங்காக இயங்கவைத்தால் நல்ல பலன் தரும். அங்குள்ள மீன்களைப் பதனப்படுத்தி வைக்க வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நைலான் வலை கட்டுவதற்கு ஒரு தொழிற்சாலை அமைத்தால் நல்லதாக இருக்கும். மீனவர்கள் கறுப்பு மார்க்கெட்டில் அதிக விலை கொடுத்து நைலான் வலை வாங்கும்படியாக இருக்கிறது. அவர்களுக்கு நியாயவிலையில் வலை கிடைப்பதில்லை. ஆகவே, அந்தப் பகுதியில் நைலான் வலை கட்டும் தொழிற்சாலை ஒன்றை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இணைப்பு ரோடுகளைப்பற்றி எல்லோரும் சொன்னார்கள். நாகர்கோயிலிலிருந்து திருச்செந்தூருக்குச் செல்லும் ஹைவேஸில் மீனவர் கிராமங்கள் பல இருக்கின்றன. அவற்றிற்கு இணைப்பு ரோடுகள் மண்ணால் போடப்பட்டிருக்கின்றன. அந்த ரோடுகளைத் தார் ரோடுகளாக மாற்றிக் கொடுத்தால் மீனவர்களுக்கு அதிகச் சௌகரியமாக இருக்கும். கூடுவாப்பட்டி, கூட்டுப் பட்டி போன்ற கிராமங்களுக்குச் செல்கின்ற பாதைகளையும் தார் ரோடு ஆக மாற்ற வேண்டும்.

அடுத்தபடியாக, மீனவர்கள் ஏழ்மை நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு வீட்டு வசதி இல்லை. நூற்றுக்கணக்கான மீனவர்கள் வீட்டுவசதியில்லாமல் தவிக்கிறார்கள். நூற்றுக்கு 75 பேர் குடிசைகளில்தான் வாழ்கிறார்கள். ஆகவே, அவர்களுக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக நல்ல வீட்டுவசதிகளை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மீனவர் சொசைட்டிகளை ஆங்காங்கு ஏற்படுத்தி மீனவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். கூட்டுறவு நிறுவனங்களை ஏற்படுத்தி மீனவர்களுக்கு வேண்டிய சகல வசதிகளையும் செய்து தர வேண்டும்.

1972 மார்ச் 27] [திரு. வீ. கார்த்திகேயன்]

அடுத்து, இருல் மீன் பிடிக்கும் சண்டை மீண்டும் வராமல் அமைச்சர் அவர்கள் பார்த்துக்கொள்ள வேண்டும். கடந்த ஆண்டில் நிலைமை மோசமாக இருந்தது. கட்டுமரங்களில் செல்லும் மீனவர்களுக்கும், விசைப்படகுகளில் செல்லும் மீனவர்களுக்கும் அடிக்கடி தகராறு வருகின்றது. இந்த ஆண்டும் அந்தமாதிரி நிலைமை ஏற்படாமலிருக்க அமைச்சர் அவர்கள் முன்கூட்டியே தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த இருவகைகளில் மீன்பிடிக்கிறவர்களுக்கும் எல்லைக் கோடு நிர்ணயிக்க வேண்டும். அப்படிச் செய்தால் அவர்களுக்குள் சண்டை சச்சரவு எழாது.

அடுத்தபடியாக, நாட்டுப் படகில் என்ஜின் கட்டிக் கொடுத்தால் விரைவாக மீன் பிடிக்க வாய்ப்பு ஏற்படும். ஆகவே, அதைச் செய்து தரவேண்டும்.

அடுத்து, கூவம், எண்ணூர், அடையாறு போன்ற பகுதிகளில் மீன்கள் கிடைப்பது குறைந்துவிட்டது. பி. அண்டு சி. மில்லிலிருந்து வருகின்ற கழிவுநிர் இந்தக் கூவம் ஆற்றில் கலப்பதால் கூவம் ஆற்றிலுள்ள மீன்கள் செத்துவிடுகின்றன. இதேபோல எண்ணூர் பகுதியிலும் கழிவுநீர் வந்துசேருவதால் மீன்கள் இறந்துவிடுகின்றன. ஆகவே, கூவம் ஆற்றுக்கும், எண்ணூர் பகுதியிலும் இந்தக் கழிவுநீர் வந்து கலக்காதபடி தடுத்து நிறுத்த வேண்டிய வழிவகைகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, பேச வாய்ப்பளித்த துணைத் தலைவருக்கு நன்றி கூறி, என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சியின் சார்பாகக் கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானத்தையொட்டி ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். மா 5·3

இந்த இலாகாவானது தனியாக ஒரு இலாகாவாக இருக்க வேண்டுமென்ற ஆலோசனையை முதலிலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். முன்பு இந்த இலாகாவானது காமர்ஸ் அன்ட் இண்டஸ்ரீஸ் டிபார்மெண்டோடு இருந்தது. பிற்பாடு அக்ரிகல்சர் இலாகாவோடு இருக்கிறது. இதைத் தனியாகப் பிரித்து தனி செகரட்டரியின்கீழே செயல்படுமாறு செய்ய வேண்டுமென்ற ஆலோசனையைத் தெரிவித்துக்கொள்கிறேன். எப்படி விவசாயம் உணவுத் துறையிலே

முக்கியத்துவம் வாய்ந்ததோ அதே மாதிரி மீனளமும் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கின்ற, வேலைப்பளு அதிகமாக இருக்கின்ற காரணத்தாலேயும் இதனை செகரட்டரியேட்டிலும் சரி மற்ற அலுவலகங்களிலும் சரி தனியான இலாகாவாக மாற்றினால்தான் காலாகாலத்திலே வேலைகள் நடைபெறுவதற்குப் பொருத்தமாக இருக்கும் என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த இலாகாவைப் பொறுத்தவரையில் பல நல்ல காரியங்களைச் செய்யத் திட்டங்கள் தீட்டியிருக்கிறார்கள். ஆனால் எந்தச் சமூகம் நன்மையடைய வேண்டுமென்று, எந்தச் சமூகம் விருத்தியடைய வேண்டுமென்று இந்த இலாகா இருக்கிறதோ அந்தச் சமூகத்திற்குக் காலாகாலத்திலே உதவிகள் கிடைக்கவில்லை என்ற குற்றச்சாட்டு அவர்கள் மத்தியிலிருந்து அடிக்கடி வந்து கொண்டுதான் இருக்கிறது.

உதாரணத்திற்கு, படகு விநியோகம்பற்றி நான் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பிட்ட சில எஞ்சின்களைத்தான் மீனவர்கள் பெரும்பாலும் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொண்டே இருக்கிறார்கள். யான்மார் எஞ்சின்களைத்தான் அவர்கள் அவசியமாக வற்புறுத்திவருகிறார்கள், அதுதான் அவர்களுக்கு உகந்ததாக இருக்கிறது என்ற கருத்தையும் சொல்லிவருகிறார்கள். எனவே மத்திய அரசாங்கத்தோடு தொடர்பு கொண்டு, போட் பில்டிங்கில் பல சங்கடங்கள் இருந்தாலும்கூட, நல்லமுறையிலே படகுகள் பயன் படக்கூடிய வகையில் அந்தக் குறிப்பிட்ட எஞ்சினை போட் பில்டிங் யார்டில் செய்வது பொருத்தமாக இருக்குமென்று நினைக்கிறேன்.

விசைப்படகுகள் அளிக்கப்படும்பொழுது குலுக்கல் முறையில் லாட் சிஸ்டம் வைத்து வழங்குகிறார்கள். அந்த முறை பொருத்தமானதல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஜோதிடம், பறவை சாஸ்திரம் போன்ற சாஸ்திரங்களில் முன்னாலே நம்பிக்கை இருந்தது. அந்த நிலைமை மாறிவருகின்ற நிலையில் குலுக்கல் முறை அதற்கு வேண்டுமா? ஒரு வரிசைக் கிரமம் வைத்து அந்த அடிப்படையிலே விநியோகம் செய்வது பொருத்தமானது. இலாகா யாருக்கு வழங்கவேண்டுமென்று பரிந்துரை செய்கிறதோ அந்த அடிப்படையிலே பிரையாரிடி லிஸ்ட் வைத்து வழங்குவது நலமாக இருக்கும் என்ற கருத்தை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இப்பொழுதிருக்கிற விதிமுறைகளில் மாறுதல்கள் ஏற்படுத்துவதன் மூலமாக பொருத்தமான முறையை ஏற்படுத்தமுடியும்.

1972 மார்ச் 27] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

மீனவர்களுக்குக் கஷ்டமாக இருக்கிற இன்னொன்றையும் அவர்கள் சொல்கிறார்கள். வழங்கப்படுகின்ற போட்களுக்கு ஆரம்பத்திலே முன்பணம் கொடுக்கவேண்டும் என்ற நிபந்தனை இல்லாமல் இருந்தது. அதற்குப் பிற்பாடு 5 ஆயிரம் ரூபாய் முன்பணம் கட்ட வேண்டுமென்று நிபந்தனை இருந்தது. அதற்குப் பிறகு இப்பொழுது ஆயிரம் ரூபாய் முன்பணம் கட்டவேண்டுமென்ற நிபந்தனை இருப்பதாகத் தெரிகிறது. வழங்கப்பட்ட போட்களுக்காக கொடுக்கப்பட்ட ரூபாயை மாதத் தவணையில் 7 வருடங்களுக்கு என்று போட்டு அந்த அடிப்படையிலே வசூலிக்கிற கருத்தும் இருக்கிறது. அப்படி மாதாமாதம் அவர்கள் தவணைகளாகச் செலுத்துவதிலே கஷ்டங்கள் இருப்பதால் 7 வருடம் என்று இருப்பதை 10 வருடங்களாக அதிகப்படுத்துவது பொருத்தமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதைத்தவிர தவணையில் ஏதாவது முடக்கம் ஏற்பட்டு விட்டால் அதற்காக அபராத வட்டி, அதாவது பீனல் இன்ட்ரஸ்ட் போட்டு $14\frac{1}{2}$ சதவிதம் என்ற அளவிலே வாங்குகிறார்கள். சாதாரணமாக, மீனவர்கள் பெரும்பாலும் ஏழைகளாகத்தான் இருக்கிறார்கள். அவர்களுக்கு பீனல் இன்ட்ரஸ்ட் போடுவதாலே அவர்கள் எத்தனையோ கஷ்டங்களுக்கு, சங்கடங்களுக்கு ஆளாகிறார்கள். அதைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இன்ஷ்யூரன்ஸானது யார் போட் வாங்குகிறார்களோ அவர்கள் கட்டியாகவேண்டுமென்ற விதிமுறை இருக்கிறது. அதை மாற்றி அரசாங்கமே இன்ஷ்யூரன்ஸ் பணத்தையும் சேர்த்துக் கட்டிவிட்டு தவணைகளோடு அதைச் சேர்த்து வசூலிப்பது பொருத்தமாகும். அண்டை மாநிலமான கேரளத்திலே இந்த முறைதான் நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே இன்ஷ்யூரன்ஸ் அரசாங்கமே கட்டி விட்டு போட் யாருக்கு வழங்குகிறார்களோ அவர்களிடமிருந்து பின்னாலே வசூலித்துக்கொள்கின்ற தன்மையைக் கொண்டுவர வேண்டும்.

விசைப்படகுகள் கொஞ்சம் பேர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. கட்டுமரக் காரர்களுக்கும், விசைப்படகுக்காரர்களுக்கும் அடிக்கடி மோதல் ஏற்படுகிற நிலைமையைப் பார்க்கிறோம். தூத்துக்குடியிலே கலவரம், கொளச்சிலிலே கலவரம் ஏற்பட்டிருக்கிறது. மீனவர்கள் மோதிக்கொண்டிருக்கிறார்கள், கடலுக்குள்ளே. அவர்களிடையே ஒரு பீதி இருக்கிறது. கட்டுமரக்காரர்களுக்கு மீன்கள் கிடைக்கவில்லை. விசைப்படகுக்காரர்களுக்குத் தாராளமாக மீன்கள்

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1972 மார்ச் 27

கிடைக்கின்றன என்ற காரணத்தினாலே மோதிக்கொள்கிறார்கள். அதைப்பற்றி இங்கே உறுப்பினர்கள் பலரும் எடுத்துச் சொன்னார்கள் தனித்தனி இடத்தை வைக்கவேண்டுமென்று சொன்னார்கள்.

மீன் எல்லாப் பகுதிகளிலும் வருவதில்லை. மீன் மடைகள் என்று சொல்லப்படுகிற பிஷிங் பீல்ட்ஸ், பிஷிங் கிரவுண்ட்ஸ் என்று ஆங்கிலத்திலே சொல்வார்களே அந்தப் பகுதிகளிலேதான் மீன் வருவது வழக்கம். எனவே எப்படி வரையறுப்பது என்பது பிரச்னைக்குரியதாக இருக்கிறது.

அடுத்தபடியாக, டீப் ஸீ பிஷிங்க்கு வேண்டிய கருவிகளையும் தளவாடங்களையும் உற்பத்தி செய்தாகவேண்டும். வலை போன்றவற்றைப் பயன்படுத்துகின்ற வழக்கமானது தொன்று தொட்டே இருக்கின்ற வழக்கமாக இருக்கின்றது. ஜப்பான் நாட்டிலே எப்படி டிராலர்ஸ் வைத்து ஆழ்கடலில் மீன்பிடிக்கின்றார்களோ அப்படிப்பட்ட திட்டங்களை நாமும் தீட்டவேண்டும். ஏற்கனவே திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்கள். அடிக்கடி கன்னியாகுமரி பகுதியிலே ஆழ்கடல் மீன்பிடிக்க ஜப்பானில் டிராலர்ஸ் வருவதாக மீனவர்கள் கூறுகிறார்கள். எனவே அதையும் ஆலோசிக்கவேண்டும்.

நம்முடைய இலாகா முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள், இல்லையென்று நான் சொல்லவில்லை. அம்மையார் அவர்கள் கழிந்த தடவை முயற்சிகள் மேற்கொள்வதாகச் சொன்னார்கள். இன்னும் இதனைத் துரிதப்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆழ்கடல் மீன் பிடிப்பதால் மீன்கள் நல்ல மீன்களாகவும் அதிகமாகவும் கிடைக்கும், நல்ல வருவாயும் கிடைக்கும்.

ஆப் ஷோர் பிஷ்ஷிங், இன்லண்ட் பிஷ்ஷிங் பெருகச் செய்வதற்கு வழிவகைகளைச் செய்யவேண்டும். பல நீர்த்தேக்கங்களிலே மீன்களை வளர்த்துக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் அதிகமாக நல்ல ரக மீன்களை மீன்குஞ்சுகளை விட்டு உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டும். எப்படி உணவு உற்பத்திக்கு முக்கியத்துவம் அளிக்கிறோமோ அதே போன்று இந்த இலாகாவுக்கும் முக்கியத்துவம் அளிக்கவேண்டும்.

இன்னொரு விஷயம். மீனவர்களுக்காகக் கூட்டுறவுச் சங்கங்கள் பல இடங்களிலே இயங்கிக்கொண்டிருக்கின்றன. எல்லோருக்கும் சரியான முறையிலே கடன்கள் கிடைக்கவில்லை என்று சொல்லிச்

1972 மார்ச் 27] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

கொண்டிருக்கிறார்கள். எப்படி நிலவள வங்கிகள் இருக்கின்றனவோ அதைப்போன்று மீன் வளவங்கிகள் ஏற்படுத்த முடியுமா என்று இந்த இலாகா ஆராயவேண்டும். அப்படிச் செய்தால்தான் ஏழைகளாக இருக்கின்ற மீனவர்களுக்கு நைலான் வலை வாங்கிக்கொடுப்பதற்கும், போட்கள் வாங்கிக் கொடுப்பதற்கும் ஏற்ற வழி வகைகள் இருக்கும்.

அதுமட்டுமல்ல, பல இடங்களிலே மீனவர்களுக்குப் பல கஷ்டங்கள் இருக்கின்றன. பல இடங்களிலே போட்களை ரிப்பேர் செய்வதற்கு வசதியில்லாமல் இருக்கிறது. எனவே போட்களை ரிப்பேர் செய்வதற்கு வசதியாக டிரை டாக் பெசிலிட்டிஸ் செய்து கொடுக்கவேண்டும்.

மீன்பிடிப்புத் துறைமுகங்கள் ஏற்படுத்தவேண்டும், நாகப்பட்டினத்தில், எண்ணூரில் ஏற்படுத்தவேண்டும். கடலூரில் ஏற்படுத்த முயற்சிகள் நடந்துகொண்டிருக்கின்றன. மண்டபத்தில் ஏற்படுத்த முயற்சிகள் நடந்துகொண்டிருக்கின்றன. தூத்துக்குடியில் முயற்சிகள் நடக்கின்றன. அதேபோன்று மேற்குக் கடற்கரையோரமாக இருக்கும் கொளச்சலிலும் ஏற்படுத்த திட்டங்கள் தீட்ட வேண்டும்.

மீனவர்களுக்குப் பல இடங்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது. எப்படி விவசாயக் கல்லூரிகளிலே தனியாகப் பயிற்சி கொடுக்கப்படுகிறதோ அதேமாதிரி அவர்களுக்கும் பயிற்சி கொடுக்கக்கூடிய முறையிலே கல்லூரி பட்டப்படிப்பு போன்றவை, விஸ்தரிக்கப்பட்ட இன்ஸ்டிட்யூட் போன்றவை மூலம் பயிற்சி கிடைக்கச்செய்வது பொருத்தமாக இருக்கும். ஏனென்றால் விஞ்ஞானத் துறையிலே நவீன படகுகளை ஓட்டவும் எல்லா வகைகளையும் செய்ய வேண்டுமென்ற ஆலோசனையை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு விஷயம், பொதுவாக, இன்றைக்கு மீனவர்கள் அதிகமாகச் சில நேரங்களில் உற்பத்தியைச் செய்கிறார்கள், மீனை உற்பத்தி செய்கிறார்கள். அவைகளைப் பராமரிப்பதில் அவர்களுக்கு நிறையக் கஷ்டங்கள் இருக்கின்றன. பலவிடங்களிலும் பதனிடுவதற்குப் போதிய வசதிகள் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். ஒருசில

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1972 மார்ச் 27

இடங்களில் இருக்கின்றன, ஆனால் தாராளமாகக் கிடைக்கும் இடங்களில் வெளிநாடுகளுக்கு அனுப்புவதில் கஷ்டமாக இருக்கின்றது. ஆகவே, குளிர்பதனம் செய்ய வேண்டிய வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு விஷயம் மீனவர் பகுதியில் இருப்பது என்னவென்றால், அவர்கள் வறுமையிலே வாடி வதங்குகிறார்கள். ஒருசில காலங்களில் அவர்களுக்கு மீன் கிடைப்பதுண்டு. மற்ற நேரங்களில் அவர்கள் பட்டினியும் பசியுமாக இருக்கிறார்கள். ஆகையால் அவர்களுக்கு ஒரு சேமிப்புத் திட்டத்தை உருவாக்க வேண்டும். எப்படி இன்ஷ்யூரன்ஸ் திட்டம் மாதிரி வைத்திருக்கிறார்களோ அதே மாதிரி மீனவர்களுக்கு மீன்கள் கிடைக்காவிட்டால் அந்தக் காலங்களில் சேமிப்புத் திட்டத்திலிருந்து கடன் வாங்கி பிழைப்பை நடத்துவதற்கான ஒரு திட்டத்தை வைப்பது பொருத்தமானதாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் கடலில் போகின்றவர்கள் விபத்திற்காளாகிறார்கள். அவர்களை மீட்பதற்கு வேண்டிய நவீனமான காரியங்கள் இருக்க வேண்டும், கப்பல் தளவாடங்கள் இருக்க வேண்டும், மீட்புக் கப்பல்கள் அதிகமாக இருக்க வேண்டும். இராமேஸ்வரம் போன்ற பகுதிகளில் அல்லது செங்கற்பட்டு ஜில்லாவில் இருக்கும் பகுதிகளில் அடிக்கடி புயலினால் பாதிக்கப்படுகிறார்கள். அந்தப் பகுதிகளிலுள்ள மீனவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கின்ற முறையிலே இம்மாதிரியான மீட்புக் கப்பல்களை வைத்து இருப்பது மிகவும் பொருத்தமாக இருக்குமென்றே நான் கருதுகிறேன்.

அடுத்தபடியாக, அவர்களுக்கிருக்கும் ஒரு இன்னல் கடல் அரிப்பு. இதனால் பலரும் பாதிக்கப்படுகிறார்கள். கடலோரத்திலே அதிகமாக இந்தத் திரை அடிக்கும் கடல்கள் அருகில் இருப்பதால் இராமேஸ்வரத்தில் புயல் வந்தால் கஷ்டம் ஏற்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் குளச்சல், இளையம் போன்ற பகுதிகளிலுள்ளவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். அப்படிப் பாதிக்கப்படும் பொழுது அவர்கள் வீட்டை இழக்கிறார்கள். அதிகமான சொத்துக்களை இழக்கிறார்கள். எனவே அவர்களுக்கு வேறிடத்திலே வீடு கட்டிக்கொடுக்க அரசாங்கம் திட்டம் செய்ய வேண்டும். முன்பு கூட்டுறவு அடிப்படையில் வீடு கொடுப்பதற்குத் திட்டம் இருந்தது. அதை மறுமுறையும் கொண்டு வருவது பொருத்தமாக இருக்கும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக, இந்த இலாகாவை இன்னும் கொஞ்சம் துரித முறையிலே நடத்த "ரீ கண்டிஷனிங்" செய்ய வேண்டுமென்ற ஆலோசனையைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மீனவர்கள் மத்தியிலேயிருக்கும் பிரச்னைகளை அனுதாபபூர்வமாக ஆராய வேண்டும். அப்படியானால்தான் மீனவர்கள் குறிப்பாக ஏழைகளாக இருப்பதால் அவர்களுக்குப் பெரிதும் ஊக்கம் அளிக்க முடியும். கட்டுமரத்தில் போகின்றவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கின்ற வழி வகைகளைக் காண வேண்டும்.

கட்டுமரத்தோடு விசை மோட்டார்களைப் பொருத்த முடியுமா, விசையேற்றங்களைப் பொருத்த முடியுமா என்பதையெல்லாம் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மோட்டார் பொருத்தி வைத்தால் அவர்களுக்கு அதிக மீன் பிடிக்கவும், இப்பொழுது பிடிப்பதைவிடச் சற்றுத் தூரமான இடங்களில் சென்று துரிதமாகத் திரும்பவும் வழி யிருக்கும். ஆகவே, அம்மாதிரியான திட்டங்களை ஏற்படுத்த முடியுமா என்பதைச் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தோ–நார்வேஜியன் ஸ்கிமைப்பற்றிச் சொன்னார்கள். மண்டபத்தில் இருப்பதைக் கேரளத்திற்கு மாற்றத் திட்டமிட்டிருக்கிறார்கள் அதைப்பற்றி அமைச்சரவர்கள் பலமுறை விளக்கினார்கள். அரசாங்கத்தின் சார்பாக ப்ரொட்டஸ்ட் அனுப்பினார்கள் என்று கூறினார்கள். அதை எதிர்த்து மறுமுறையும் கூறவேண்டும். நம் பகுதியிலேயிருக்கும் அந்த நிறுவனத்தை மற்றப் பகுதிக்கு மாற்றக்கூடாது, யார் பின்னாலிருந்தாலும் அதை எதிர்க்க வேண்டிய பொறுப்பும், கடமையும் நம்மைச் சேர்ந்தது என்று கூறி விடைபெறுகிறேன்.

<u>மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து</u> : தலைவரவர்களே, இன்றைக்கு நமது தமிழகத்தில் ஒரு மிக முக்கியமான பெரிய, வளரக் கூடிய தொழிலாக இருக்கின்ற மானியத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பலபேர் தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்லி யிருக்கிறார்கள். மீனவர் பகுதியிலே இருக்கும் குறைகளைப்பற்றியும், அந்தத் தொழில் எப்படியெல்லாம் அபிவிருத்தி அடைய வேண்டு மென்பதைப்பற்றியும், இன்னும் மேல் நாட்டினரைப்போல் நாமும் முன்னேற வேண்டுமென்ற கருத்துக்களையும் கூறியிருப்பதிலிருந்தே மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இந்தத் துறையில் எவ்வளவு ஆர்வம் இருக்கிறது என்பதை நான் உணர்கின்றேன். அந்த ஆர்வம் உள்ள படியே வரவேற்கத் தக்க ஆர்வம், தேவையான ஆர்வம்கூட,

[திருமதி சத்தியவாணிமுத்து] [1972 மார்ச் 27

ஏறத்தாழ 1,500 கிலோமீட்டர் இடம் பெற்றிருக்கும் நமது மாநிலம் அதற்கேற்ற வகையில் மீனளத்துறையில் நல்ல முன்னேற்றத்தைக் காணுமல் இருந்தது. அதை நான் ஒத்துக் கொள்கிறேன். 1967-க்கு முன்பு வேண்டுமானுல் இந்தத் துறை ஏனோதானோ என்று விடப்பட்டிருக்கலாம். ஆனுல் 1967-க்குப் பிறகு பல புதிய திட்டங்களை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது என்பதைத் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் நாம் காண்கிறோம்.

மீனவர் பகுதிகளிலே பொறுப்பேற்றிருக்கும் சட்டமன்ற உறுப்பினர்கள் அவைகளையெல்லாம் நேரிலேயே அறிவார்கள். நாம் விவசாயத்துறையில் எப்படி ஒரு பசுமைப்புரட்சியை உண்டாக்க வேண்டுமென்று கருதுகிறோமோ அதேபோன்று இவ்வளவு பெரிய கடற்கரைப் பகுதியைக் கொண்டிருக்கிற நாம், ஒரு குறிப்பிட்ட தொகை மீனவ சமுதாயத்தைக் கொண்டிருக்கின்ற நாம் இந்தக் கடலிலே ஒரு வளப்புரட்சியை உண்டாக்க வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் அதற்குரிய வகையில் கொஞ்சம் கொஞ்சமாக பல திட்டங்களை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது.

வெறும் மீன் பிடிக்கின்ற தொழில், அதை வைத்துக்கொண்டே உலகத்தில் பல நாடுகள் மற்ற நாடுகளோடு போட்டி போட்டுக் கொண்டு தன்னந்தனியாக இன்றைக்கு ஐ. நா. சபையில் இடம் பெற்று வாழும் அளவிற்கு மிகச்சிறிய நாடுகள் பெரும் மீன்பிடிப்பதையே வைத்து இயங்குகின்றன என்பதைப் பலரும் அறியக்கூடும். ஆனுல் நாமோ நமது மாநிலத்தில் மிகப்பெரிய கடற்கரைப் பகுதியிருந்தாலும் அதை அந்த அளவிற்குப் பயன்படுத்திக்கொண்டு இந்தத் துறைக்கான முன்னேற்றத்தை நாம் காணவில்லை என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதிலே வருந்துவதாகக்கூட கூறிக் கொள்ள விரும்புகிறேன். இதற்காக நாம் எடுத்திருக்கின்ற முயற்சிகளை மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அனைவருமே இங்கே பேசினுர்கள். இன்றைய பத்திரிகையில் மத்திய சர்க்கார் அறிவித்திருப்பதைப்போல ரஷ்யாவிலிருந்து 300 கப்பல்கள் வரத்தக்க அளவில் ரஷ்ய நாட்டோடு இந்திய நாடு ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறது, பெரிய பெரிய இழுபடகுகள் வருவதாகச் சொன்னுர்கள். எனக்கும் பத்திரிகையைப் பார்த்துத் தான் தெரியுமே தவிர மத்திய சர்க்காரிலிருந்து மாநில அரசுக்கு

1972 மார்ச் 27] [திருமதி சத்தியவாணிமுத்து]

வாங்கப்படுகின்ற அப்படிப்பட்ட பெரிய கப்பல்கள் எத்தனை வழங்கப்படும் என்றோ, இந்தத் திட்டத்தை மத்திய சர்க்கார் எந்த அளவிற்குச் செயல்படுத்த இருக்கிறது என்றோ இதுவரையில் மாநில அரசுக்குத் தெரியவில்லை. ஆனால் நாம் நினைப்பதைப்போலவே மத்திய சர்க்காரும் இந்த மீன்பிடி தொழிலை மிகச் சிறந்ததாக ஆக்கும் எண்ணத்தில் ஈடுபட்டிருக்கிறது என்பதை இந்தத் தகவலிலிருந்து நாம் காண்கிறோம்.

குறிப்பாக, இன்றையதினம் முதலிலே இந்தக் கடல்களிலெல்லாம் நாம் மிகுந்த அளவிற்கு விசைப்படகுகளை அனுப்பி மீன்பிடிக்கும் முறையை ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும். இன்றைக்கு இருக்கும் 30, 32 அடி படகுகள் 20 மைல் தூரம்தான் செல்ல முடியும். 20 மைல்களுக்கு அப்பால் சென்றால்தான் ஆழ்கடலிலே சென்றால்தான் அதிகமான மீன்கள் கிடைக்கும் என்று இதுவரை கூறப்பட்டிருக்கிறது. ஆனால், நமது கடலைப் பொறுத்தவரையில் எந்தெந்த இடத்திலே என்னென்ன ரகமான மீன்கள் இருக்கின்றன என்ற சர்வே இதுவரையிலேயும் நாம் செய்யவில்லை. எத்தனை ஆண்டுகள் நாம் இதைப்பற்றி யோசித்திருக்கிறோம்! ஆனால், இன்னும் அந்த சர்வே செய்யப்படாமலேயே இருக்கிறது. சர்வே செய்தால்தான் எந்தப் பகுதியில் என்ன மீன் கிடைக்கும், எத்தனை மைல் தூரத்தில் கிடைக்கும். எத்தனை மைல் தூரம் செல்ல என்ன கப்பல்களைச் செலுத்த வேண்டும் என்ற விவரங்களை அறிந்து அதைத் தயாரித்து அதற்கான முறையில் பயிற்சியைக் கொடுக்க வேண்டும், மீனவ மக்களையும், அதிகாரிகளையும் அனுப்ப வேண்டும் என்று இப்படி படிப்படியாக முயற்சியில் ஈடுபட்டிருந்தால் இன்றைக்கு சின்னஞ் சிறிய நாடாகிய ஜப்பானைவிட தமிழகம் மீனளத்துறையில் எவ்வளவோ முன்னேறியிருக்க முடியும். நாம் அந்த சர்வேயை இன்னும் எடுக்கவில்லை.

இன்றைக்கு இந்த அரசு பொறுப்பேற்றவுடன் அப்படிப்பட்ட தொரு டிராலர்ஸ், 4 இழுபறி படகுகள் வேண்டுமென்று மத்திய சர்க்கார் ஒப்பந்தத்தோடு கல்கத்தாவில் இருக்கும் ஒரு கம்பெனியிடத்தில் நாம் உத்தரவு கொடுத்தோம். அவர்களும் இரண்டு இழுபறி படகுகளை இன்றைக்கு அனுப்பியிருக்கிறார்கள்.

நான் கொடுத்திருக்கும் விளக்க உரையின் மேல் இருப்பது அப்படிப்பட்ட டிராலரில் ஒன்று. அதற்கு "மருதம்" என்று பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. "முல்லை" என்ற ட்ராலரும் வந்து

விட்டது. இந்த இரண்டிலே ஒன்றைச் சென்னையிலும், மற்றொன்றை மண்டபத்திலும் வைக்க இருக்கிறோம். இவை இரண்டையும் கொண்டு மீன் பிடிக்கவும் முடியும். ஆழ்கடலில் சென்று சர்வே செய்யவும் முடியும். முதலில் இவை இரண்டையும் பயன்படுத்தி ஆழ் கடலில் சென்று எந்தெந்தப் பகுதிகளில் ஃபிஷ்ஷிங் கிரவுண்ட்ஸ் இருக்கின்றன என்று கண்டுபிடிக்கப்படும்.

மேலும், மாநில அரசு மூலமாக ஒரு ஸ்டீம் ட்ராலர் கட்டுவதும் யோசனையில் இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் தனியார் துறையில் சிலர் சிறு சிறு ட்ராலர்ஸ் வைத்திருக்கிறார்கள். அவர்கள் அதை மீன் பிடிக்கத்தான் பயன்படுத்துகிறார்கள். ஆய்வு நடத்தி முடிந்த பிறகு மீன் பிடிப்பதற்காக 150 ட்ராலர்ஸை வாங்கும் அளவுக்கும், மேலும் ஆயிரம் விசைப் படகுகளைப் பெறும் அளவுக்கும் திட்டம் போடப்பட்டிருக்கிறது. இவை எல்லாம் முடிந்த பிறகு என்னென்ன வகையான மீன்கள் எங்கெங்கு கிடைக்கிறது. மீன் மடை என்று சொல்லப்படுகின்ற அந்த மடைகள் எங்கெங்கு இருக்கின்றன என்று பார்த்து ஆழ்கடலில் சென்று மீன் பிடிப்பதற்கான வழி வகைகளைச் செய்ய முடியும். எங்கெங்கு மீன்கள் இருக்கின்றன என்று கண்டு பிடித்து விஞ்ஞான ரீதியாக மீன் பிடிப்பதற்கும், பிடித்த மீனைப் பதப் படுத்தி டப்பாவில் அடைத்து உள்நாட்டிற்கோ, வெளிநாட்டிற்கோ அனுப்புகின்ற வகையில் இந்தத் தொழிலை மேம்பாடு செய்ய வேண்டு மென்ற நோக்கத்தோடு அடிப்படை வேலைகள் நடைபெற்று வரு கின்றன.

இந்த வேலைகள் எல்லாம் முடிவுற்ற பிறகு துறைமுகங்கள் நிறைய தேவைப்படுகின்றன. அந்தத் துறைமுகங்களைச் சேர்ந்தாற்போல் கட்ட வேண்டும். சென்னையில் துறைமுகம் கட்டுவதற்கான ஒப்புதல் —நான் அடிக்கடி மன்றத்தில் எடுத்துச் சொன்னது போல் பூனாவில் இருந்து வரவேண்டும். அவர்கள் இதற்கு ஒப்புதல் கொடுத்து விட்டார்கள். இப்போது அதற்கான இடங்களைக் கையகப்படுத்திக் கொண்டிருக்கிறோம். கையகப்படுத்தும்போது சில தகராறுகள் வரு கின்றன. குடியிருக்கின்ற மீனவர்களை அப்புறப்படுத்தி அவர்களுக்கு மாற்று இடம் கொடுத்து கையகப்படுத்த வேண்டியிருக்கிறது. 3 கோடி 88 லட்சம் ரூபாய் செலவில் சென்னையில் துறைமுகத்தை அமைக்க இருக்கிறோம். கிட்டத்தட்ட 500 படகுகளை அங்கு வைக்க முடியும்; 50 டிராலர்களை வைக்க முடியும்.

1972 மார்ச் 27] [திருமதி சத்தியவாணிமுத்து]

அடுத்து, தூத்துக்குடி துறைமுகத்தை இப்போது கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு கட்டி முடித்துவிடப்படும். அந்தத் துறைமுகம் 2 கோடி 10 லட்சம் ரூபாயில் கட்டப்பட்டிருக்கிறது. அடுத்து, கன்னியாகுமரி மாவட்டத்தில் குளச்சலில் 2 கோடி 88 லட்சம் ரூபாயில் துறைமுகத்தைக் கட்ட சமீபத்தில்தான் ஒப்புதல் கிடைத்திருக்கிறது. குஜராத்தில் இருக்கக்கூடிய ஒரு இடத்தில் அவர்கள் கட்டி வைத்திருப்பது போல் ஒரு இடம் என்ற வகையில் குளச்சல் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. இலங்கைக்கும் தமிழகத்திற்கும் இடையில் வேஜ் பாங்க் என்ற பகுதி இருக்கிறது. அங்கு நிறைய மீன்மடைகள் இருப்பதாகக் கூறப்படுகிறது. அந்த இடத்தில் துறைமுகம் கட்டுவதற்கான அடிப்படை ஏற்பாடுகள் எல்லாம் செய்யப்பட்டிருக்கின்றன.

ஆழ்கடலில் சென்று மீன்பிடிக்க கப்பல்கள், படகுகளை உற்பத்தி செய்தால் அவைகள் வந்து தங்க ஹார்பர்கள் கட்டியாகவேண்டும். ஏற்கனவே இருக்கும் மண்டபம், இராமேஸ்வரம், கடலூர், நாகப்பட்டினம் போன்றவை இருந்தாலும் கூட ஆயிரம் விசைப் படகுகள், 150, 200 இழு படகுகள் ஆகியவை எல்லாம் வந்துவிட்டால் மேலும் துறைமுகங்கள் தேவைப்படுகின்ற நிலையில்தான் புதிய துறைமுகங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் படகுகள் மற்றவைகள் எல்லாம் வந்து விட்ட பிறகு அதிலே பயிற்சி கொடுக்க பயிற்றுவிக்கும் நிலையங்கள் தமிழகத்தில் ஏழெட்டு இடங்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதிலே மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டு விஞ்ஞான முறைப்படி எப்படி மீன்கள் இருக்கும் இடங்களைக் கண்டு பிடிப்பது, அதற்குரிய லென்ஸ் வைத்துக் கண்டுபிடிப்பது, எப்படி மீன்களைப் பிடிப்பது, எப்படி படகுகளை இயக்குவது போன்ற எல்லா விதமான முறையான, நவீனமான பயிற்சிகள் மாணவர்களுக்கு அளிக்கப்படுகின்றன. பிறகு அந்த மாணவர்கள் இதிலே பொறுப் பேற்றுக் கொள்ளுவார்கள். அப்படிப்பட்ட நிலையில் நாம் இன்று காரியமாற்றுகின்ற காரணத்தால்தான் பெரிய நல்ல திட்டங்கள் விரைவில் வரும் என்று எதிர்ப்பார்க்கிறோம்.

அரசுக்கு இருக்கின்ற எண்ணத்தைப்போல் சில தனியாருக்கும் அந்த எண்ணம் இருக்கிறது. இன்னும் மற்ற நாட்டுக்காரர்கள் கூட நம்மோடு தொடர்பு கொண்டு ஆழ்கடலில் சென்று மீன் பிடிக்க விரும்புகிறார்கள். ரஷ்யாவிலிருந்து வந்து கேட்டிருக்கிறார்கள்.

கனடாவில் இருந்து வந்து கேட்டிருக்கிறார்கள். போலந்திலிருந்து வந்து கேட்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் நம்முடைய நாட்டு அரசோடு ஒப்பந்தம் வைத்துக் கொண்டு ஆழ்கடலில் சென்று மீன் பிடிக்க பேச்சு வார்த்தைகளை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை ஏற்றுக் கொள்ள வேண்டுமா, வேண்டாமா, ஏற்றுக் கொள்ளுவது என்றால் எப்படி ஏற்றுக் கொள்ளுவது என்பதைப் பற்றியெல்லாம் இப்போது கூறுவதற்கில்லை.

தனியார் கூட இதிலே ஈடுபடுவதற்கான தங்களுடைய எண்ணத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். பிர்லாஸ், டாட்டாஸ், டி.சி.எம்., இம்பீரியல் டுபாக்கோ கம்பெனி, ராஜரத்தினம், கருமுத்து தியாக ராஜ செட்டியார் ஆகியவர்கள் எல்லாம்கூட தாங்களே இந்த மாதிரி ஏற்பாடுகளைச் செய்து ஆழ்கடலில் சென்று மீன் பிடிப்பது பற்றிப் பேசி வருகிறார்கள். அவர்களுக்குச் சாத்தியக்கூறுகள் இருந்தால் துவக்குவார்கள். எல்லோருக்கும் நமக்கு இருக்கக்கூடிய பரந்த கடலை வெறுமனே போட்டு வைத்திருக்க விருப்பம் இல்லை. அதை நல்ல முறையில் பயன்படுத்தி இந்தத் தொழிலை மேம்பாட்டுக்குக் கொண்டு வரவேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது. இதிலே நாம் நினைப்பது போலவே பலபேர் பங்கு கொள்ள முன்வருகிறார்கள். அந்த வகையில் இன்றைக்கு இந்த முயற்சிகளில் அரசு ஈடுபட்டு வருகிறது என்பதைக் கூறிக் கொள்ளுகிறேன்.

பெரிய மணல் லாரி (ட்ரெஜ்ஜர்) ஒன்றை நாம் 16 லட்சம் ரூபாய்க்கு வாங்கியிருக்கிறோம். தூத்துக்குடி துறைமுகம் கட்டுவதில் தாமதம், கடலூர் துறைமுகம் கட்டுவதில் தாமதம், புன்னைக்காயல் பகுதியில் தாம்பிரபரணி ஆற்றில் மணல் மேடிட்டு படகுகள் செல்ல முடியாத நிலை ஆகியவை உருவாகியிருக்கிறது. அதற்காக இந்தியாவில் எந்த மாநிலமுமே வைத்திருக்காத நிலையில் நாம் 16 லட்சம் ரூபாய் கொடுத்து ஒரு ட்ரெஜ்ஜரை வாங்கியிருக்கிறோம். தூத்துக்குடியில் வேறு ஒரு இடத்தில் இருந்து ட்ரெஜ்ஜரைக் கொண்டு வந்து வேலை செய்கிறார்கள். மத்திய அரசு அதை உடனே அனுப்ப வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறது. அதற்கு மேலும் 10, 15 நாட்கள் தவணை கேட்கப்பட்டிருக்கிறது. அதைத் திருப்பி அனுப்பிவிட்ட பிறகு நமது ட்ரெஜ்ஜரை அந்தப் பணிகளுக்கெல்லாம் பயன்படுத்த முடியும். இப்போது அது கடலூரில் இருக்கிறது.

1972 மார்ச் 27]

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: புன்னைக்காயலில் இருந்து எனக்கு ஒரு தந்தி வந்திருக்கிறது. இதுபோல் அமைச்சர் அவர்களுக்கும் வந்திருக்கும் என்று கருதுகிறேன். அங்கு மணல் மேடிட்டிருப்பதன் காரணமாக மீனவர்கள் மிகுந்த கஷ்டத்திற்குள்ளாகியிருக்கிறார்கள். அதை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். எனக்கு வந்த தந்தியை அமைச்சர் அவர்களிடம் கொடுக்கிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் புன்னைக்காயலில் தாம்பிரபரணி ஆற்றில் மணல் மேடிட்டது பற்றி மீனவர்கள் கொடுத்த தந்தியைக் கொடுத்தார்கள். இது பழைய விஷயம்தான். ஏற்கனவே, இந்த மன்றத்தில் கேள்வி நேரத்தின்போது மிக விளக்கமாகப் பதில் கூறியிருக்கிறேன். மணல் மேடிடுவது தானாக வந்து சேருவதாகும். அதை எடுக்க தொழிலாளர்களைப் போட்டு அவர்களுடைய உடல் உழைப்பின் மூலம் எடுக்கிறோம். 3,000 ரூபாய் வரை செலவழிக்கப்பட்டிருக்கிறது. சில வேளைகளில் தானாகவே காற்றடித்தால் மணல் மேடு நீங்கிவிடுகிறது. சில நேரங்களில் சாண்ட் பம்ப் வைத்து அந்தப் பணியைச் செய்கிறோம். இப்போது நமக்கு ட்ரெஜ்ஜர் கிடைத்து விட்டதால் அப்படிப்பட்ட கஷ்டங்கள் இனிமேல் நமக்கு இருக்காது. கடலூரில் வேலை முடிந்த பிறகு அந்த ட்ரெஜ்ஜர் தூத்துக்குடிக்கும், சுற்றி இருக்கும் பகுதிகளுக்கும் போக இருக்கிறது. அப்படி நம் மாநிலத்திற்கு என்றே ஒரு ட்ரெஜ்ஜர் வாங்கியிருப்பதால் இந்த கஷ்டங்கள் எல்லாம் இனி போக்கப்படும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

எனவே இப்படிப்பட்ட வகையில் இந்த அரசு திட்டங்களை மேற்கொள்ள இருக்கிறது. மீனவ மக்களை விட தனியாருக்கு ஊக்கமளித்தால் நிறைய மீன் பிடிக்கக்கூடும் என்று சொல்லப்பட்டது. அந்த வகையில் அப்படி தனிப்பட்டவர்களும் இத்தொழிலில் அக்கறை காட்டவேண்டும் என்று கருதி அக்ரிகல்சரல் ரீ பைனான்சிங் கார்ப்பரேஷன் மூலம் கிடைக்கும் நிதியிலிருந்து உதவி கொடுத்து, நம் அரசு 25 சதவிகிதம் கொடுத்து, 25 சத விகிதம் தனியார் போட்டு செய்து கிட்டத்தட்ட ஐம்பது பேர்களுக்கு படகுகள் கொடுத்து அவர்கள் சென்று மீன் பிடிக்க ஏற்பாடு செய்ய இந்த அரசு முன் வந்திருக்கிறது.

பிற் பகல் 6·00

[திருமதி சத்தியவாணிமுத்து] [1972 மார்ச் 27

திரு. ராமலிங்கம் அவர்கள், தூத்துக்குடியில் தொழிலாளர்கள் கடன் வாங்கியிருக்கிறுர்கள். அவர்கள் வட்டியை ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். கடன் கொடுக்கும் போது வட்டி இல்லாமல் கொடுக்கப்படுகிறது. அந்தப் பணத்தைத் திருப்பிக் கட்டவேண்டியது அவர்கள் கடமை. அப்படிக் கட்ட வில்லை என்றுல் வட்டி போட்டு வாங்கவேண்டியிருக்கிறது. விவசாயத்துறையில் கூட பீனல் இன்டரஸ்ட் போட்டுக் கொண்டிருக் கிறுர்கள். இதை எடுத்தால் அதையும் எடுக்கவேண்டுமென்று கேட்பார்கள். அதை உணர்ந்து அவர்கள் அந்த வட்டியைக் கட்டி விடவேண்டும்.

தூத்துக்குடியில் சங்கு குளிப்பவர்கள் முத்து எடுக்கிறுர்கள். சங்கு குளிப்பவர்களுக்கு இலவசமாக திருநெல்வேலி மாவட்டத்தைத் தவிர எல்லாயிடத்திலும் தாமாகவே எடுக்கலாம் என்று கடந்த ஆண்டு அரசு உத்தரவு பிறப்பித்தது. 1971–72-க்கு முன்னுல் விலை தமிழ்நாட்டில் 60 காசு ஒரு ரூபாய் என்றிருந்தது. இதை உயர்த்தி யிருக்கிறேம். இரண்டாகப் பிரித்து சிறியவற்றிற்கு ரூ. 1.25 என்றும் பெரியவற்றிற்கு ரூ. 1.75 என்றும் விலையைக் கூட்டியிருக்கிறேம். அதை வெஸ்ட் பெங்கால் கார்ப்பரேஷன் வாங்கிக் கொள்கிறுர்கள். ஆகவே, தொழிலாளர்களுக்கு அதிகப்படியான தொகை கொடுத்து சங்கு வாங்குகிறேம்.

1971–72-ல் பிடித்து வைத்திருப்பதற்கும் இந்த விலை கொடுக்க வேண்டுமென்று ராமலிங்கம் அவர்கள் கேட்டார்கள்.

ஜப்பான் போன்று முத்துக்களை செயற்கை முறையில் அதிகமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். மண்டபத்தில் இப் போது ஆராய்ச்சி நடக்கிறது. ஜப்பானிலிருந்து நிபுணர்களைக் கொண்டு வந்து வைத்து சிப்பிகளை எடுத்து நல்ல முத்துக்களாக யீல்ட் தரும் சிப்பிகளாக ஆக்கமுடியுமா என்று இன்செக்ஷன்ஸ் எல்லாம் போட்டு செய்து பார்க்கிறுர்கள். இதுகுறித்த ஆராய்ச்சி மண்டபத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

சங்கு எடுப்பதுபற்றியும், முத்து எடுப்பது பற்றியும் விதிகளை மாற்றியமைக்கவேண்டுமென்று சொன்னுர்கள். அது சரியல்ல.

அடுத்து நாட்டுப் படகுக்காரர்களுக்கும் விசைப்படகுகாரர் களுக்கும் இடையே உள்ள சச்சரவு பற்றிச் சொன்னுர்கள். குறிப்பாக சாத்தானகுளம் உறுப்பினர் அவர்கள் பேசும்போது, இரண்டு

1972 மார்ச் 27] [திருமதி சத்தியவாணிமுத்து]

பேர்களுக்கும் இடையே உள்ள ஏற்பாட்டை எக்ரிமென்ட் என்று கூறினார்கள். எல்லை வகுப்பது நாம் அல்ல. இன்டர்நாஷனல் வாட்டர் டெரிட்டரி என்று எல்லை வகுக்கிறார்கள். அகில உலகத்தி லும் எந்த நாட்டுக் கடற்கரையிலும் 12 மைல்களுக்கு அப்பால் யார் வேண்டுமானாலும் சென்று மீன் பிடிக்கலாம். அதை மாற்றவேண்டு மென்று சொன்னால் மத்திய அரசைக் கேட்டு அவர்கள் அதை மாற்றவேண்டும். அந்த முயற்சியிலும் ஈடுபட்டுக்கொண்டிருக் கிறோம். பலமுறை எழுதியிருக்கிறோம். பெரு 130 மைல்கள் என்ற அளவிற்கு எல்லை வகுக்கவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். கொரியா கேட்டிருக்கிறார்கள். நாமும் வற்புறுத்துகிறோம். ஆகவே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறியதுபோல் ஜப்பானிலிருந்து வந்து மீன் பிடிக்கிறார்கள். ரஷ்யாவிலிருந்து வந்து மீன் பிடிக் கிறார்கள். அப்படி ஜப்பான் நாட்டுக்காரர்களும், ரஷ்ய நாட்டுக் காரர்களும் வந்து மீன் பிடிக்கும்போது கேரள மாநிலக்காரர்களை பிடிக்காதே என்று சொல்லமுடியாது. நம் மீனவர்களும் கேரளா விற்குச் சென்று மீன் பிடிக்கிறார்கள். எனவே இந்த ஒப்பந்தம் கட்டுப்படுத்த முடியாது. அவர்கள் உடனே கோர்ட்டுக்குச் செல்ல லாம், வழக்கில் வெற்றியும் பெறலாம். அது இன்டர்நாஷனல் வாட்டர் டெரிட்டரி சட்டப்படியுள்ளதாகும்.

ஆகவே மீனவர்கள் இடையே சமாதானமான முறையில் ஒரு ஒப்பந்தம் செய்கிற முறையில் அதிகாரிகள் ஈடுபட்டிருக்கிறார்கள். அப்படி அவ்வப்போது ஈடுபடுகிறார்கள். வீரபாண்டியபட்டணம், மணப்பாடியில் தகராறு வந்தது. சட்டமன்றத்தில் அதுபற்றிக் கூறி யிருக்கிறேன். கேரளாவிற்குச் சென்று வாடகைக்கு படகுகளை வாங்கி வந்து ராங்க் ஸீஸனில் மீன் பிடித்திருக்கிறார்கள் சிலர். மூன்று நான்கு மாதங்கள் இருக்கும். கட்டுமரத்தில் அந்த அளவிற்கு ஆழ்கடலில் செல்லமுடியாது. குறிப்பாக அங்கு பல பாறைகள் உள்ளன. பாறைகளைக் கடப்பது என்றால் கட்டுமரத்திலிருந்து எகிறி விழுந்தால்தான் முடியும். ஆகவே கட்டுமரங்களில் செல்பவர்கள் நாங்கள் 12 மைல்கள்தான் செல்லமுடியும். ஆகவே அதை எங்கள் எல்லையாகப் போட்டுத்தாருங்கள் என்கிறார்கள். இரால் 12 மைல் களுக்கு அப்பால்தான் நிறையக் கிடைக்கிறது. விசைப்படகுகள் வேகமாகப் போகின்றன. எல்லையைக் கடக்கக்கூடாது என்று சமாதானம் செய்தோம். போலீஸ் போட்டோம். தனி படகுகளில் போலீஸ் காவல் வைத்து யாரும் அந்தப் பகுதியில் சென்று மீன்

பிடிக்கக்கூடாது, குறிப்பிட்ட எல்லை வரை கட்டுமரக்காரர்கள்தான் சென்று பிடிக்கலாம் என்று இரவு பகல் போலீஸ் காவல் வைத்தோம். அப்படியிருந்தும் இப்படிப்பட்ட அசம்பாவிதம் நடைபெற்றிருக்கிறது. 97 விசைப்படகுகள் நாசம். 12 படகுகள் எறிந்துவிட்டன. ஒரு நாட்டுப் படகு மூழ்கியது. இது உண்மை. கட்டுமரத்தை வைத்து ஜீவனம் செய்யவேண்டியிருக்கிறது. இவ்வளவு தூரம்தான் போகமுடியும். இவர்களாவது வரவேண்டும். இல்லை, விசைப்படகுக்காரர்களாவது விசைப்படகு இருக்கிறது, நாம் எங்குவேண்டுமானாலும் போகலாம். ஜப்பான்காரர், ரஷ்யாக்காரர் வரும்போது ஏன் நாமும் போகக்கூடாது, கேரளாக்காரர் வரும்போது நாம் ஏன் அப்படிப் போகக்கூடாது என்று வாதாடுகிறார்கள். கட்டுமரத்தினால் அதிக இலாபம் இல்லை, இதை விட்டுவிட்டு விசைப்படகுகளை வாங்கிக் கொள்ளுங்கள் என்றால் மறுக்கிறார்கள். ஏன் பழைய முறையை வைத்துக்கொண்டிருக்கிறீர்கள்? உங்களுக்கு விசைப்படகுகள் கொடுக்கிறோம் என்றால் எங்களுக்கு பழக்கம் இல்லை என்று ஒத்துவரமாட்டோம் என்று சொல்கிறார்கள். இப்போது அந்தப் பிரச்னை முடிந்துவிட்டது. அங்கு விசைப்படகுக்காரர் யாரும் இல்லை. வாடகைப் படகுகள் கேரளாவிற்குப் போய்விட்டன. அடுத்த ஆண்டு இறால் வரும்போதுதான் மீண்டும் தகராறு. இதற்கு உறுப்பினர்கள்தான் ஒரு வழி சொல்லவேண்டும். நான் பலமுறை முயற்சித்துப் பார்த்தேன்.

திரு. கே. பி. கந்தசாமி: நான் அந்த வழியைத்தான் சொல்ல நினைத்தேன். ஜனாதிபதியின் ப்ராக்ளமேஷன் நம்பர் 3 ஆஃப் 1956-ன் பிரகாரம் இன்டர் நாஷனல் வாட்டேர்ஸ் 12 மைல்கள் என்றிருக்கிறது. இதற்கு அப்பால் 100 மைல் அளவிற்கு மீன் வளத்தையும், மீன் பிடிக்கிற முறையையும் கட்டுப்படுத்தக்கூடிய முறையில் விதிமுறைகளை ஏற்படுத்திக்கொள்ளலாம் என்றிருக்கிறது. கேரளா விசைப்படகுக்காரர்களை விட்டுவிடலாம். நம் நாட்டிலிருந்து விசைப்படகுகளில் செல்கிறவர்களையாவது கட்டுப்படுத்தும் அளவிற்கு இந்தச் சட்டமன்றத்தில் விதிமுறைகளை வகுக்கலாம் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் எடுத்துக்கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இன்டர்நேஷனல் ஆக்ட் எதுவாக இருந்தாலும் அதற்கு நமது மத்திய அரசாங்கம் தான் முயற்சி எடுக்கவேண்டுமே தவிர மாநில அரசாங்கம், அதுவும்

இந்தச் சட்டமன்றத்திலே முடிவு எடுக்க முடியாது. இந்தத் துறையின் மூலம் மத்திய அரசுக்கு எத்தனையோ முறை தெரிவித்து இருக்கிறோம். கொரியா போன்ற நாடுகளில் கூட இந்தப் பிரச்னைகள் இருக்கின்றன. அவை கூட இவற்றை வலியுறுத்திக்கொண்டு வருகின்றன. உலக சட்டத்தின் முறைப்படிதான் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். நாம் இங்கே தீர்மானம் நிறைவேற்றிவிடுவதால் ஒன்றும் இலாபம் கிடையாது. இன்னும் கூட நான் வலியுறுத்திக்கூறுவேன், அவர்களுக்குள் ஒரு ஒற்றுமை ஏற்பட்டால் தான் இந்தப் பிரச்னை தீரும்.

மண்டபத்தில் இருக்கும் சென்டிரல் மெரைன் பிஷரீஸ் ரிசர்ச் ஸ்டேஷன் கொச்சிக்கு மாற்றப்பட்டுவிட்டதாக மாண்புமிகு உறுப்பினர்கள் கூறினார்கள். அதை வைத்து முன்னால் முதலமைச்சர் அண்ணா அவர்கள் காலத்திலிருந்து......

திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன்: கேரளத்திலிருந்து படகை வாடகைக்கு வாங்கி இங்கே ஒரு சாரார் உபயோகப்படுத்துவதால், நாட்டுப் படகுக்காரர்களுக்கும் அவர்களுக்கும் கைகலப்பு ஏற்பட்டதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் என்ன சொல்கிறேன் என்றால், கேரளத்திலுள்ள எல்லா இயந்திரப் படகுகளையும் சர்க்காரே வாங்கி, அவர்கள் எல்லோருக்குமே சர்க்கார் குறைந்த வாடகையில் அந்த படகுகளைக் கொடுத்து, அந்தப் பிணக்கை நிவர்த்திக்கலாம். அதற்கு சர்க்கார் ஆலோசிக்குமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: நானும் அதைத்தான் சொன்னேன், அவர்களிடத்தில் நீங்கள் ஏன் வாடகைக்கு வாங்க வேண்டும்? நானே கொடுக்கிறேன், இந்த மீனளத்துறையின் மூலமாக. நீங்கள் அந்த விசைப்படகை எடுத்துக்கொண்டு போய் மீன் பிடியுங்கள். கட்டுமரத்தை எடுத்துக்கொண்டு போய் கஷ்டப் படாதீர்கள் என்று சொன்னேன். எங்களுக்கு பழக்கப்பட்டது அது தான் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். நாம் மெகனைசேஷன் செய்யவேண்டுமென்று விரும்புகிறோம். இங்கே மாண்புமிகு உறுப்பினர்களும் அதைப்பற்றிச் சொன்னார்கள். ஆனால் மீனவர்களுக்கு இருக்கும் தனிப்பட்ட மனப்பான்மை காரணமாக விசைப்படகுகள் வேண்டாம் என்று சொல்லுகிறார்கள். அந்த மனப்பான்மை மாறும் வரையில் எதுவும் செய்வதற்கில்லை.

கொச்சிக்கு ரிசர்ச் சென்டர் மாற்றப்பட்டு விட்டது என்று சொன்னார்கள். அது பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலிருந்து மத்திய அரசாங்கத்திற்கு எழுதிக்கொண்டிருக்கிறோம். பிரதம மந்திரி அவர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் எழுதியிருக்கிறார்கள். நானும் மத்திய அமைச்சரோடு இது பற்றி பேசியிருக்கிறேன். அவர்களும் இன்றைக்கு கூறுகிறார்கள். அந்த ரிசர்ச் சென்டர் மாற்றப்படவில்லை. இன்னும் ரிசர்ச் நிலையம் அங்கேயே இருக்கிறது. ஆனால் அங்கேயிருக்கிற டைரக்டர் தான் எர்ணாகுளத்திற்கு மாற்றப் பட்டிருக்கிறார். அந்த டைரக்டருக்குத் துணையாக, 2 அசிஸ்டெண்ட், 2 கிளார்க்குகள், 2 ஸ்வீப்பர், இன்னும் 2 பேர் ஆக 8 பேர் அங்கே மாற்றப்பட்டிருக்கிறார்கள். டிபுடி டைரக்டர் இப்போது அந்த மண்டபம் ரிசர்ச் ஸ்டேஷனை பார்த்து வருகிறார்கள். வேறு எந்த விதமான மாற்றத்தையும் செய்யவில்லை. அங்கே இருக்கிற ஸ்பெசிமென்களை, புத்தகங்களை எடுத்துக்கொண்டு போகவில்லை. அந்தப் புத்தகங்கள் எல்லா மாநிலத்திற்கும் சுற்றி வரவேண்டியது. இருந்தபோதிலும் அந்தப் புத்தகம் அந்த ரிசர்ச் ஸ்டேஷனில் இருக் கிறது. இன்னும் அதிகமான அளவில் அங்கே ரிசர்ச் நடக்கும் என்று மத்தியத் துறை அமைச்சர் சொல்லியிருக்கிறார்கள். மாற்றப்பட்ட வர்கள் கூட நான் சென்றபோது புகார் கொடுத்தார்கள். நான் விசாரித்தேன், அதைப்பற்றி, அவர்கள் கூறுவது, மாற்றப்படவில்லை, இங்கேயிருக்கின்ற சில சிப்பந்திகளுக்கு பதவி உயர்வு கொடுத்து இருக்கிறோம். அங்கேயிருக்கிற ஸ்வீப்பர் கூட மாற்றப்பட்டு இருக் கிறார்களே என்று கேட்டபோது, அங்கே கக்கூஸ் கட்ட இடம் இல்லை. அங்கே போய் இடம் வைத்து இருக்கிறீர்கள், அப்படிப் பட்ட இடம் என்று சொன்னார்கள். நாங்கள் யாரையும் மாற்ற வில்லை. ப்ரமோஷன் கொடுத்து மாற்றியிருக்கிறோம். ஸ்வீப்பராக இருப்பவர்களை லேப் அசிஸ்டெண்ட்டாகப் போட்டிருக்கிறோம். வாட்ச்மேன்களாக இருப்பவர்களை போர்மேனாகப் போட்டிருக் கிறோம். அவர்களுக்கு ப்ரமோஷன் கொடுத்துத்தான் மாற்றினோம். ஏனென்றால் ஸ்வீப்பராக இருப்பவர்கள் ஸ்வீப்பராகத்தான் இருக்க வேண்டும். அவர்களை லேப் அசிஸ்டெண்டாகப் போட்டிருக்கிறோம். அவர்கள் விருப்பம் தெரிந்துதான் போட்டு இருக்கிறோம். அவர் களும் விரும்பித்தான் போய் இருக்கிறார்கள். யாரையும் நாங்கள் வற்புறுத்தவில்லை. இரண்டு பேர் அங்கு இருக்க மாட்டோம் என்று சொன்னார்கள். அவர்களை மீண்டும் வரவழைப்பதற்கு நடவடிக்கை களை மேற்கொண்டு இருக்கிறோம். அவர்கள் விரும்பித்தான்

சென்றுர்கள், ப்ரமோஷன் கொடுத்துத்தான் அனுப்பி வைத்தோம், ஊதிய உயர்வு கொடுத்தோம். சம்பளம் அதிகம் கொடுத்துத்தான் அனுப்பிவைத்தோம் என்று சொல்லுகிறுர்கள். எல்லோரையும் கொச்சிக்கு அனுப்பவில்லே. சில பேர் கோழிக்கோடு, வால்டேர், விழிச்சல், மங்களூர், பாம்பே, கோவா, ஓங்கோல், இப்படிப்பட்ட இடங்களுக்கெல்லாம் கூட மாற்றப்பட்டிருக்கிறுர்கள். அவர்களுடைய விருப்பத்தின் பேரில் தான் மாற்றப்பட்டிருக்கிறுர்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இம்மாதிரி ஏற்கெனவே மண்டபத்தில், ஆராய்ச்சியில் இருப்பவர்களே மற்ற மாநிலத்திற்கு மாற்றிவிட்டார்கள். எத்தனே பேர் அவர்கள்? அவர்கள் பதவியில் புதிதாக ஆட்கள் எடுக்கப்பட்டிருக்கிறுர்களா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: புதிதாக ஆள் எடுக்கப் பட்டதா என்பதைப்பற்றிய குறிப்பு இல்லே. அது பற்றி விசாரிக்கிறேன். பொதுவாக மாற்றப்பட்ட இடங்களுக்கு ஆட்களே போட வேண்டியதுதான். சிலரைப் போடுவதற்கு வாய்ப்பு இருக்கும். அது பற்றி விசாரிக்கலாம். மாற்றப்பட்டது என்ற தகவல் தவறு என்பதற்காகத்தான் சொல்கிறேன். நிலேயம் இருக்கிறது. இன்னும் வேறு பல இடங்களிலும் அப்படிப்பட்ட ரிசர்ச் ஸ்டேஷன் வைக்கலாம் என்று இருக்கிறுர்கள். சென்னேயில் கூட வைப்பதற்கு அவர்கள் பெரிய இடம் கேட்கிறுர்கள். பெரிய சென்டர் வைக்கிறேம் என்று சொல்கிறுர்கள் கேட்கிறுர்கள். இடம் பார்த்துக்கொடுப்பதற்கு ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறேம். அதோடு அவர்கள் சென்னேயிலும், தூத்துக்குடியிலும் சப்-சென்டர் வைக்கலாம் என்று இருக்கிறுர்கள்.

திரு. க. சுப்பு: அமைச்சர் அவர்கள் சொல்லுவதைப் பார்த்தால் அங்கே இருக்கின்ற சில நபர்கள் மாற்றப்பட்டு, தலேமையாளர் கொச்சிக்கு மாற்றப்பட்டு இருக்கிறுர் என்று சொன்னுர்கள். என்ன அர்த்தம்? டைரக்டர் மாற்றப்பட்டதை தொடர்ந்து, கணக்கு கூட மாற்றப்பட்டிருக்கிறது என்பது அமைச்சர் அவர்களுக்கு தெரியுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: நான் சொன்னது தலேமை டைரக்டர் தான் மாற்றப்பட்டிருக்கிறுர். அங்கே கொச்சியில் அதிகமாக வேலேயிருக்கிறது ஆகவே, மாற்றப்பட்டிருக்கிறுர் என்று

சொல்லுகிறார்கள். அந்த டைரக்டருக்குத் துணையாக சில பேர் போய் இருக்கிறார்கள். நிலையம் மாற்றப்படவில்லை. நிலையத்தில் இருக்கும் ஆராய்ச்சி மாற்றப்படவில்லை. புத்தகங்களும் அங்கேயே இருக்கின்றன. ஆராய்ச்சி வேலைகள் இன்னும் அதிகமாக நடைபெறு கின்றன. பல ஆராய்ச்சி வேலைகள் செய்வதற்கு மத்திய அரசு அனுமதி அளிக்கும் என்று உறுதி கொடுத்து இருக்கிறார்கள். எந்த விதத்திலும் அது குறையாது. முன்பு டைரக்டர் தலைமையகம் அங்கே இருந்தது. இப்போது டைரக்டர் எர்ணாகுளம் போய் இருக்கிறார். அதற்கு பதிலாக டெபுடி டைரக்டர் இருக்கிறார்.

வீடுகட்டும் திட்டங்களைப்பற்றியெல்லாம் சொன்னார்கள். ஆண்டு ஒன்றுக்கு 1 லட்சம் ரூபாய் ஒதுக்கி வீடுகள் கட்டித்தருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் கார்த்திசன் அவர்கள் சொன்னார்கள். இராதாபுரத்திலும் வீடுகள் கட்ட திட்டம் இருக்கிறது. பல இடங் களில் வீடுகள் கட்ட இருக்கிறோம்.

அதோடு மட்டுமல்ல, மீனவர்கள் குடும்பங்களில் குடும்பத் தலைவர் இறந்துவிட்டால் 1,000 ரூ. அவர்களுக்கு எக்ஸ்-கிரேசியா பேமெண்ட் கொடுக்கிறோம். ஒருவருக்கு கொடுத்து வந்தோம். குடும்பத்தில் இருவர் செத்தால் ஒருவருக்கு கொடுத்து வந்தோம். இப்போது 2 பேருக்கு கொடுக்கிறோம். அதிலே மகன் செத்தால் அவன் தாய் அல்லது மனைவிக்கு கொடுக்கிறோம். தகப்பன் செத்தால் அவனுடைய மனைவி அல்லது மகனுக்கு கொடுக்கிறோம். இரண்டு பேருக்கு உரிய தொகை இப்போது வழங்கப்பட்டு வருகிறது. இந்த அரசு வந்ததற்குப் பிறகு தான் அரசு இதையேற்படுத்தியிருக் கிறது. இந்த மீனவ சமுதாயமே இதைக்கேட்டு மிகவும் மகிழ்ச்சி அடைந்து இருக்கிறது என்று உங்கள் மத்தியில் கூறிக்கொள்கிறேன்.

பரிசில் வலை வேண்டுமென்று சொன்னார்கள். இந்த வலை பர்ஸ் போல் இருக்கும். இந்த வலையை வீசி இழுத்தால் வரும்போது அப்படியே கொத்தாக மீன்களை அள்ளிக்கொண்டு வரும் என்று சொல்கிறார்கள். அப்படி ஒரு தடவை இழுத்து 50 டன் மீன் கிடைத்தது என்று சொல்கிறார்கள். அது தான் இந்தத் தடவை ரிகார்டு என்று சொல்கிறார்கள். அது ஒன்றுதான் இப்போது இருக் கிறது ; நிறையவேண்டுமென்று சொன்னார்கள். ரிசர்ச் முடிந்து ஆழ் கடலில் மீன்பிடிக்கிற நிலை வருகிறபோது நிறைய பரிசில் வலைகளை வாங்குவதில் எந்தவிதமான சங்கடமும் இருக்க முடியாது.

1972 மார்ச் 27]

திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன் : அந்த வலை என்ன விலை இருக்கும் என்பதை அறியலாமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அந்த வலையின் விலை ரூ. 1 லட்சம்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அடுத்தபடியாக, அந்த குலுக்கல் முறையை ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டார்கள். 1967–68 வரையிலும் ரெஜிஸ்டர் செய்துகொண்டவர்களுக்குத் தான் இந்தக் குலுக்கல்முறை செயல் படுத்தப்படுகிறது. இப்படி ஒரு ரிஜிஸ்டர் வைத்து 1,400 பேர் களுக்கு படகுகள் கொடுக்க முன்வரும்பொழுது பல தகராறுகள், குழப்பங்கள் ஏற்படுகின்றன. அதற்காகத் தான் குலுக்கல் முறையை வைத்திருக்கிறோம்.

பயிற்சி பெற்றவர்கள், பயிற்சி பெறாதவர்கள் ஏற்கனவே படகு வாங்கிய கிராமங்கள், படகுகள் வாங்காத கிராமங்கள் என்றெல்லாம் விண்ணப்பங்களைப் பரிசீலனைசெய்து எடுத்துத்தான் பிறகு குலுக்கல் முறையை கையாளுகிறோம். இப்பொழுது 700 பேர் களுக்கு முறையாக படகுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் 700 பேர்களுக்கு கொடுக்க வேண்டும். இந்த 700 எண்ணிக்கை தீர்ந்துவிட்ட பிறகு தான், மீண்டும் நாம் ரிஜிஸ்டர் செய்ய வேண்டும். அப்படி ரிஜிஸ்டர் செய்துவிட்ட பிறகு, ஸீனியாரிடி, அல்லது தகுதியை அடிப்படையாக வைத்துக் கொடுப்பது பற்றி நாம் யோசிக்கலாம். அப்பொழுது கூட பல தவறுகள் நேரும் என்று, அதிலும் குறிப்பாக எதிர்க்கட்சியினர் அரசாங்கத்தின் மீது குற்றம் சாட்டுவார்கள்.

எவ்வளவுதான் அதிகாரிகள் தரத்தையும், தகுதியையும் அறிந்து, ஸீனியாரிடி, பிரையாரிடி என்றெல்லாம் பார்த்து, அவர்களுக்கு படகுகள் கொடுத்தாலும் கூட, கழகக்காரர்களுக்குத் தான் இந்த அரசு செய்துகொண்டிருக்கிறது, வேறு யாருக்கும் நாங்கள் கொடுக்கவில்லை என்று வெளியே பல தலைவர்கள் பேசுவது போல மாமன்றத்திலும் பல உறுப்பினர்கள் கூட இங்கே பேசுகிறார்கள். இந்த அரசு தன் கட்சிக்குத் தான் நன்மை செய்கிறது என்ற குற்றச் சாட்டை தவிர்ப்பதற்குத் தான் குலுக்கல் முறை கையாளப்பட்டு வருகிறது. அதில், யாருக்கு வருகிறதோ வரட்டும், தகுதியுள்ளவர் கள்தான். பயிற்சி பெற்றவர்களா, பயிற்சி பெறாதவர்களா, படகு

இல்லாதவர்களா, அப்படிப்பட்ட கிராமங்களைச் சார்ந்தவர்களா, இல்லையா என்றெல்லாம் பார்த்துப் பரிசீலனை செய்து அந்த விண்ணப்பங்களைப் போட்டுத்தான் குலுக்கல் நடைபெறுகிறது. எனவே, அது நல்ல முறை என்று கருதுகிறேன்.

காணுமல் போன மீனவர்களை கண்டுபிடிக்க ஹெலிகாப்டர் வேண்டும் என்று திரு. ராமலிங்கம் அவர்கள் சொன்னுர்கள். ஹெலிகாப்டர் சர்வீஸ் எப்பொழுதும் கிடைக்கிறது. காணுமல் போனுர்கள் என்ற தகவல் வந்தவுடனேயே நாங்கள் கப்பலுக்கு செய்தி அனுப்புகிறேம். கப்பல் கண்டுபிடிக்க முடியவில்லை என்ருல், ஹெலிகாப்டரை அனுப்பி கண்டுபிடிக்கிறேம். வானெலி மூலம் தகவல் கொடுக்கிறேம். மிக துரிதமாக இந்த வேலைகளில் ஈடுபடு கிறேம். காணுமல் போன மீனவர்கள் காணுமலே போய்விடு வதில்லை. எப்படியும் கண்டுபிடிக்கப்பட்டு வந்து சேர்ந்து விடுகிருர். கள். ஹெலிகாப்டர் சர்வீஸ் நமக்கு இருக்கிறது. தனியாக ஒரு ஹெலிகாப்டர், மண்டபத்திலேயோ அல்லது இராமனுதபுரத் திலேயோ வைத்துக்கொள்ளவேண்டிய அவசியமில்லை.

இராமனுதபுரத்தில் 12 படகுகள் தான் வைக்கப்பட்டிருக்கின்றன என்று கூறினுர்கள். கொடுத்த படகுகள் 12 ஆக இருக்கலாம். எல்லாப் படகுகளும் இராமனுதபுரத்தில்தான் முகாம் இடுகின்றன. கேரளத்திலிருந்து வருகிற அத்தனை படகுகளும் இராமனுதபுரத்தில் தான் முகாம் இடுகின்றன. சென்னையிலிருந்தும் பல படகுகள் இராமனுதபுரத்திற்குத் தான் போகின்றன. கடலூரிலிருந்து படகுகள் அங்கு தான் செல்கின்றன. இராமனுதபுரத்தில் அதிகமாக இருல் கிடைக்கின்ற காரணத்தினுல் எல்லாப் படகுகளும் அங்கே தான் முகாம் இடுகின்றன. ஜப்பான் படகு கூட மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் அங்கு கண்டுபிடிக்கப்பட்டு அனுப்பப்பட்டிருக்கிறது. எல்லா படகுகளும் அங்கேதான் முகாம் போடுகின்றன. அரசு கொடுத்திருக்கிற படகுகள் 12 படகுகள் என்ருலும், இராமனுதபுரத் தில் படகுகளுக்குக் குறைச்சல் இல்லை. நிச்சயம் இங்கே அதிகப்படி யான பணியில் அதிகப் படகுகள் ஈடுபட்டிருக்கின்றன.

மேலும், உள்நாட்டு மீனவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க வேண்டும் என்றும், சாலைகள் அமைத்துத் தரவேண்டுமென்றும், பாதுகாப்புத் தருவது போன்ற பல பிரச்னைகளைப் பற்றியும்

1972 மார்ச் 27] [திருமதி சத்தியவாணிமுத்து]

திரு. செல்லையா போன்றவர்கள் கூறினர்கள். அவைகளையெல்லாம் கூடுமானவரையில் அரசு செய்துகொண்டு வருகிறது.

பி. அண்டு ஸி. மில்லிலிருந்து வருகிற ரசாயன தண்ணீர் மீன்களை பாதிக்கிறது என்று சொல்லப்பட்டது. அந்தத் தண்ணீரைச் சுத்தப் படுத்தி, இதில் இருக்கிற விஷத் தன்மையை நீக்கிவிட்டு வெளியே அனுப்பவேண்டும் என்று இப்படிப்பட்ட தொழிற்சாலைகளுக் கெல்லாம் நாம் தாக்கீது பிறப்பித்திருக்கிறோம். அந்தப் பணியில் அவர்கள் ஈடுபட்டு, அந்தத் தண்ணீரில் இருக்கிற விஷத் தன்மையை மாற்றி, அதை நீக்கிவிட்டு அந்தத் தண்ணீரை வெளியே அனுப்ப வேண்டும் என்ற அப்படிப்பட்ட பணியில் இன்றைக்கு இந்த அரசு ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது என்பதை நான் கூறிக்கொள்ள விரும்பு கிறேன்.

கட்டுமரப் படகுகளில் மோட்டார் இணைக்கவேண்டும் என்று கேட்டார்கள். கன்னியாகுமரியில் தனியார் ஒருவர் இந்தப் பணியில் ஈடுபட்டிருக்கிறார். கட்டுமரத்தில் சிறிய மோட்டாரை வைத்துக் கொண்டு அதிலே போய் மீன் பிடிக்கிறார்கள். அதை அரசு பரிசீலனை செய்துவருகிறது. இப்பொழுது 1,500 ரூபாய் அளவில் கட்டுமரங் களை வாங்குவதற்காக அரசு ஏற்பாடு செய்து, அந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள மீனவர்களுக்கு கட்டுமரங்களைக் கொடுக்கலாம் என்று ஏற்பாடு செய்திருக்கிறோம். அவைகளில் இயந்திரத்தைப் பொருத்திக் கொடுப்பது பற்றி ஆராய்ச்சி செய்து முடிவு ஏடுக்கவில்லை. தனியார் கொடுப்பது பற்றி ஆராய்ச்சி செய்து முடிவு எடுக்கவில்லை. தனியார் தில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்பு கிறேன்.

இன்னமும் அக்ரிகல்சரைப் போல, விவசாயத்தைப்போல இங்கேயும் பல பணிகளைச் செய்ய வேண்டுமென்பதற்காகத் தான், இந்த ஆண்டு இரண்டு மாதங்களுக்குள் ஒரு பெரிய கருத்தரங்கை நடத்த இருக்கிறோம். மரைன் கல்சர் அண்டு மெகனைஸ்டு பிஷிங் என்பதைப்பற்றி கருத்தரங்கு நடத்துகிறோம். இதுவரையில் கடலில் இருக்கிற மீனை, இயற்கையாக உற்பத்தியாகின்ற மீனைத் தான் பிடித்துக்கொண்டு வருவதற்கான முயற்சியில் ஈடுபட்டிருந்தோம். இப்பொழுது மீன் உற்பத்தி எப்படிச் செய்வது என்பது பற்றி எப்படி நிலத்தை உழுது பயிரிட்டு, அதில் தீவிரமாக நெல்லைப் போட்டு பயிர் செய்கின்ற முயற்சி விவசாயத்தில் இருப்பது போல, மீன் வளர்ப்பு பற்றி கருத்தரங்கு நடத்த இருக்கிறோம்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[திருமதி சத்தியவாணிமுத்து] [1972 மார்ச் 27

உலகத்திலேயே இறால் தான் அன்னிய நாட்டுச் செலாவணியை ஈட்டித்தருகிறது. ஆந்திர அரசும், தமிழக அரசாங்கமும் சேர்ந்து உப்பங்கழிகளில் இறால் குஞ்சுகளைக் கொண்டுவந்து வைத்து, அவைகளை ஒரு பருவம் வருகிற வரைக்கும் வளர்த்து, பிறகு கடலில் விட்டு, மீன்களை வளர்ப்பதற்கான ஆராய்ச்சியைப்பற்றி இந்த அரசாங்கம் ஆலோசித்துக்கொண்டு வருகிறது. இதுவரையில் நாம் இதைச் செய்யவில்லை. மரைன் கல்சர்—இதை இதுவரையில் நாம் செய்யவில்லை. இதுவரையில் இயற்கையாக கடலில் உற்பத்தியாகின்ற மீன்களை பிடிக்கும் முயற்சியில்தான் ஈடுபட்டு வந்திருக்கிறோம். உழாமல் இருக்கிற பூமியில் அறுவடை செய்கின்ற முயற்சியில் தான் ஈடுபட்டு வந்திருக்கிறோம்.

இப்பொழுது மீன்களை எப்படி உற்பத்தி செய்வது என்கின்ற ஆராய்ச்சியிலே இறங்கியிருக்கிறோம். நாட்டு மீன்களை, கென்டை போன்ற ரகங்களை உற்பத்தி செய்வதிலும் ஈடுபட்டிருக்கிறோம். மணிமுத்தாறு மீன் பண்ணையில் பார்த்தேன். ஒரு மணி நேரத்திற்குள்ளாகவே கண் முன்னாலேயே பார்த்தேன். ஆண் மீன், பெண் மீன் இரண்டுக்கும் இன்ஜெக்ஷன் கொடுக்கிறார்கள். கொடுத்துவிட்டு, தனியாக டப்பிகளில் தண்ணீர் வைத்து அவைகளில் விடுகிறார்கள். தண்ணீரில் விடுகிறார்கள், நான் பார்த்துக்கொண்டே இருந்தேன். தண்ணீரில் விட்ட பிறகு முட்டைகள் இடுகிறது. பிறகு குஞ்சுகள் பொறிக்கிறது. ஒரு மணி நேரத்திற்குள்ளேயே ஊசி போட்டவுடன் கிட்டத்தட்ட ஒரு லட்சம் முட்டைகளை ஒரு மீன் இடுகிறது. அவைகளைப் பாதுகாத்து வளர்ப்பது மிகவும் கஷ்டமாகத்தான் இருக்கிறது. அம்மாதிரியான முறைகளில் அதிகமாக மீன்களைப் பிடிக்கும் முயற்சியில் தான் ஈடுபட்டு வந்திருக்கிறோம், கடலில் இருக்கிற இரால்களை அதிகமாக உற்பத்தி செய்ய இந்த முறைகள் கையாளப்படுகின்றன. அவைகளை வைத்துத்தான் விவாதிக்க இந்த கருத்தரங்கு நடக்க இருக்கிறது.

மேலும், நான் கூறியபடி ப்ளூ ரிவல்யூஷன் என்ற முறையில் அதிகமாக மீன் உற்பத்தி செய்யவேண்டும் என்ற அடிப்படையிலே தான் மரைன் கல்சர் அண்டு மெகனேஸ்டு பிஷிங் பற்றி இந்தக் கருத்தரங்கிலே விவாதிக்க இருக்கிறோம். அதற்கு அகில இந்தியாவிலிருந்தும் பல பிரதிநிதிகள் வர இருக்கிறார்கள். அகில உலகத்திலிருந்தும் யாராவது பிரதிநிதிகள் வரக்கூடும் என்று நினைக்கிறேன். அப்படிப்பட்ட ஒரு மகாநாடு இந்த ஆண்டுக்குள்ளேயே நடத்த இருக்கிறோம்.

1972 மார்ச் 27] [திருமதி சத்தியவாணிமுத்து]

அதன் மூலம் இந்தத் தொழிலை மேம்பாடு செய்து, ஒரு பெரிய புரட்சிகரமான காரியத்தில் ஈடுபட இருக்கிறோம்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் இந்த இலாகாவை தனியாக வைத்து, அதற்காக ஒரு தனி செயலாளர் நியமிக்க வேண்டும் என்று கேட்டார். இப்படிப்பட்ட முன்னேற்றங்கள் ஏற்படுமானால் அம் மாதிரி இந்தத் துறைக்காக தனியாக ஒரு இலாகாவை ஏற்படுத்தலாம்; தனி செயலாளரை நியமிக்கலாம். இப்பொழுது ஆரம்ப கட்டத்தில்தான் இருக்கிறோம். எனவே, தனிச்செயலாளரும், தனி இலாகாவும் இப்போதைக்கு அவசியமில்லை.

நான் கூறிய விளக்கங்களுக்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களை திருப்பிப் பெறவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி வெட்டுத் தீர்மானத்தை திரும்பப்பெற்று அதிகமான ஒத்துழைப்பு தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இத்துடன் விவாதம் முடிவுற்றது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் அவர்கள் வெட்டுத் தீர்மானத்தை வற்புறுத்துகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : "நாட் பிரெசிங்"

திரு. பொன்னப்ப நாடார் அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி :

"நிதிக் கோரிக்கை எண் 17—மீனளம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,51,06,200-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

(ஊ) நிதிக்கோரிக்கை எண் 8–ஏ—பால் வழங்குத் திட்டங்கள்

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, ஆளுனர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"நிதிக் கோரிக்கை எண் 8-ஏ பால் வழங்குத் திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 5,15,33,200-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

திரு. ஜே. ஜேம்ஸ்: கிராமங்களில் பால் வழங்கு திட்டத்தை தீவிரமாக விஸ்தரிக்க வேண்டிய அவசியம் பற்றியும் கிராம மக்களுக்கு வெளிநாடுகளிலிருந்து நல்ல பால் தரும் ஜாதி பசுமாடுகள் அதிகமாக வாங்கி கடனுக வழங்க வேண்டிய அவசியம் பற்றியும் விவாதிக்க,—

I move the following cut motion, viz. :—

"That the allotment of Rs. 5,15,33.200 under Demand No. 8A Milk Supply Schemes be reduced by Rs. 100".

THIRU B. VENKATASWAMY : To discuss about the necessity to increase the rate for the milk supplied by the Co-operative Milk Supply Societies to Madhavaram Milk Colony, I move the following cut motion :

"That the allotment of Rs. 5,15,33,200 under Demand 8A—Milk Supply Schemes be reduced by Rs. 100."

THIRU K. T. K. THANGAMANI : Sir, I move the following cut motion to discuss the need to improve the sale of milk in Madurai—

"That the allotment of Rs. 5,15,33,200 under Demand 8A—Milk Supply Schemes be reduced by Rs. 100."

1972 மார்ச் 27]

(ஏ) கோரிக்கை எண் 9-ஏ—1959-ம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் நிர்வாகம்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் "நிதிக் கோரிக்கை எண் 9-ஏ—1959-ம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய–அறக்கட்டளைகள் சட்டத்தின் நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 60,80,200-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும் என்று முன்மொழிகிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, I move the following cut motion to discuss about the lands belonging to temples—

"That the allotment of Rs. 60,80,200 under Demand No. 9-A—Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959—be reduced by Rs. 100."

THIRU K. T. K. THANGAMANI : Sir, I move the following cut motion to discuss about the need to distribute temple, mutt and other religious institutions lands to cultivators and supply cash for worship purposes—

"That the allotment of Rs. 60,80,200 under Demand No. 9-A—Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959—be reduced by Rs. 100."

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, இந்தப் பால் வளர்ச்சித் துறைக்கும், இந்து சமய–அறக்கட்டளைக்கும்* அதிக சம்பந்தமிருப்பதால் மற்றும் நிறைய உறுப்பினர்கள் இதில் அவர்களின் கருத்துக்களைத் தெரிவிக்க இருப்பதால், கொஞ்சம் கூடுதல் நேரம் இதற்கு ஒதுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சுருக்கமாகப் பேசினாலே கோயில்களைப் பற்றிப் பேசிக்கொண்டே இருக்கலாம். அநாதி காலம் தொட்டு பேசிக் கொண்டேயிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அறநிலையத் துறைக்கும், அமைச்சருக்கும் என்ன சம்பந்தம் என்பதைப்பற்றிப் பேசினால் போதும். இந்தப் பாலும் ஆண்டவனுக்குப் பிரீதியானதுதான்.

*349-365-ம் பக்கங்களில் ஆறுவது, ஏழாவது இணைப்புக்களாக அச்சிடப்பட்டுள்ளன.

ஆகவே, இரண்டையும் சேர்த்து, ஏறக்குறைய 12 உறுப்பினர்கள் இங்கே பேச வேண்டியிருப்பதால் எல்லோருமே அவரவர்களின் பேச்சைக் கொஞ்சம் சுருக்கமாக முடித்துக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மணலி சி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு மானியங்களின் மீது குறிப்பாக சில கருத்துக் களை சொல்ல விரும்புகிறேன்.

முதலில் பாலை எடுத்துக் கொண்டால், இதற்கு ரூ. 5,15,33,200 மானியம் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்தத் துறை இன்றைய தினம் சுமார் 3 லட்சம் லிட்டர் பால் தினசரி சப்ளை செய்யக் கூடிய அளவிற்கு வளர்ந்திருக்கிறது. இன்றைக்கு நாட்டிலிருக்கிற பால் பஞ்சத்தைப் பார்க்கிற நேரத்தில், ஏறக்குறைய எல்லோருமே பால் சாப்பிட வேண்டுமென்ற உணர்வோடு இருந்தாலும், அது கிடைக்க கூடியதாக இல்லை. அதை யாரும் மறுக்க முடியாது. இன்றைக்கு 4 கோடி ஜனங்கள் தமிழ்நாட்டில் இருக்கிற நேரத்தில் அவர்களுக் கெல்லாம் குறைந்த செலவில் போஷாக்குக் கொடுக்கக் கூடிய ஒரு ஏற்பாட்டை இந்த இலாகா செய்யவேண்டும். இந்தப் பால் பண்ணை சம்பந்தமாக, நல்ல தரமான மாடுகள், அதற்கு நல்ல தீவனம், அடுத்தபடியாக இந்தப் பாலை நியாயமான விலையில் எல்லோருக்கும் கிடைக்கச் செய்வது இதெல்லாம் சேர்த்துத்தான். இன்றைக்குப் பால் தமிழ்நாட்டில் குறிப்பாக குழந்தைகளுக்கு, கர்ப்ப ஸ்திரிகளுக்கு நல்ல முறையில் விநியோகிக்க அந்த மானியத்தில் கேட்கப்பட்டுள்ள பணம் செலவழிக்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாதவரம், மதுரை போன்ற இடங்களிலிருக்கிற அரசாங்க பால் பண்ணை மூலம், மற்றும் சில கூட்டுறவுப் பண்ணைகள் மூலமும் இன் றைக்கு கிட்டத்தட்ட 3 லட்சம் லிட்டர் பால் தினசரி விநியோகிக்கப் படுகிறது. அதைப் பார்க்கிற நேரத்தில் இன்னும் அதிகப்படியான பால் விநியோகத்திற்கு மிகவும் தீவிரமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்ள வேண்டியிருக்கிறது. இப்படி இருக்கிற நிலையில் இந்தக் கார்ப்பரேஷனைக் கொண்டுவந்தால் மட்டும் போதாது. இதில் துரிதமான நடவடிக்கை எடுத்து பல லட்சம் லிட்டர் பால் விநியோகம் பண்ணக் கூடிய அளவிற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சர்க்காரே இந்தப் பால் விநியோகத்தை தமிழ்நாடு முழுவதும் எடுத்துக்கொள்ள வேண்டும். இதனல் தனியார் யாரும் பாதிக்கப்படபோவதில்லை.

1972 மார்ச் 27] [திரு. மணலி சி. கந்தசாமி]

அதே நேரத்தில் முனிசிபாலிடிகளுக்கும் இந்த கார்ப்பரேஷன் பால் பண்ணை வைப்பதற்கு ஊக்கம் கொடுத்தால் இந்தப் பால் விநியோகம் நல்லமுறையில் செய்யப்படும். அந்த அடிப்படையில் மாதவரம் மாத்திரம் அல்ல, மதுரை மாத்திரம் அல்ல, எல்லா முனிசிபாலிடிகளுக்கும் சர்க்காரே மாடுகள் வாங்கிக் கொடுத்து, புஷ்டியான ஆகாரம் கொடுத்து அவற்றின் பாலை எடுத்துத் திறம்பட விநியோகம் செய்யவேண்டும். இதற்காக என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறுர்கள் என்பது விவரமாகத் தரப்படவில்லை. அதைச் செய்ய வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஒரு மாடு வாங்க ரூ. 500 ஒவ்வொருவருக்கும் தரப்படுகிறது. ரூ. 500-க்கு ஒரு தரமான மாடு வாங்க முடியுமா என்று பார்க்கவேண்டும். அப்படிப் பணம் வாங்குகிறவர்களும் அதை நியாயமான முறையில் செலவழிக்கிறுர்களா என்று பார்க்கிறபோது அப்படி வாங்குகிற 500 ரூபாயில் ஐம்பதோ, நூருே மாடு வாங்குவதில் மீதம் பிடிக்கிறுர்கள். ஆகவே, நல்ல மாடுகளை வாங்கி அரசாங்கமே, இந்த கார்ப்பரேஷனே கொடுக்கவேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம். சர்க்காரே சிந்தி, முர்ரா போன்ற நல்ல இன மாடுகளை வாங்கி, நியாயமான விலைக்கு அவர்களுக்குக் கொடுப்பதின் மூலமாகப் பால் உற்பத்தியை அதிகப்படுத்த முடியும். அதைவிட்டு இப்படிப் பணம் கொடுப்பது வீண் விரயம் தான்.

அடுத்தபடியாக, சொசைட்டிகள். இன்றைக்குப் பல சொசைட்டிகள் இருக்கின்றன. அவை எப்படி இயங்குகின்றன என்பதைப்பற்றியெல்லாம் கூட்டுறவுத் துறையிலிருந்து நமக்கு விவரங்கள் இல்லை. ஆனுல் ஒன்று மட்டும் சொல்வேன். இந்த சொசைட்டிகளெல்லாம் இன்றைக்குக் கட்சி நோக்கத்தோடு செயல்படத் தொடங்கிவிட்டன. எனக்குத் தெரிந்து, வத்திரார்யிருப்பு என்ற ஊரில் ஒரு கூட்டுறவு சொசைட்டி இருக்கிறது. அங்கே இப்படிப்பட்ட கட்சித் தலையீடு இருக்கிறது. அதனுல் அங்கே வருகிற அதிகாரிகள் அடிக்கடி மாற்றப்படுகிறுர்கள். அதனுல் அந்தக் கூட்டுறவு சொசைட்டி பாழ்ப்பட்டுப் போகிறது. நியாயமாக ஒரு செகரட்டரி 3 வருடம்வரை இருக்கலாம் என்றிருக்கிறது. ஆனுல் அதற்குள்ளாகவே அங்கே உள்ளவர்கள் தந்தி அடித்து, மனுப்போட்டு அவர்களை மாற்றிவிடுகிறுர்கள். இதனுல், ஒருவர் போய் அடுத்தவர் வருவதால், அந்த சொசைட்டிக்கு வீண் செலவுகள்

அடிக்கடி ஏற்படுகின்றன. பயணச் செலவுகள் ஏற்படுகிறது. ஆகவே, இப்படிப்பட்ட கட்சித் தலையீடுகளைத் தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, இன்றைக்கு காபி ஹோட்டல்களில் விற்பது போல, கள்ளுக்கடைகள், சாராயக்கடைகள் இருப்பதுபோல் நமது சர்க்கார் ஏன் பால் கடைகளை ஒவ்வொரு ஊரிலும் திறக்கக்கூடா தென்று கேட்கிறேன். பெரிய நகரங்களிலாவது இதைச் செய்தால் சர்க்காருக்கும் ஓரளவு பணம் வரும். மக்களுக்கும் நல்ல தரமான பால் கிடைக்கும். அந்த அடிப்படையில் சர்க்கார் இந்த மாதிரிக் கடைகளைத் திறந்து மக்களுக்கு நல்ல தரமான பால் கிடைக்க வகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சென்னையில்கூட இதை ஆரம்பித்தால், ஹோட்டல்களுக்குச் சென்று ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் என்று கொடுத்து கண்டதைச் சாப்பிட்டு உடம்பைக் கெடுத்துக்கொள்வதைவிட, இப்படிப்பட்ட கூட்டுறவு சொசைட்டி களின்மூலம் பால் கடைகள் வைத்துப் பால் விற்பனை செய்தால் எல்லோருக்கும் நல்ல தரமான பால் கிடைக்கும்.

அடுத்தபடியாக, மிகவும் முக்கியமான விஷயம். அடுத்த தலைமுறையில் பிறக்கிற குழந்தைகளாவது நல்ல ஆரோக்கியத்துடன் இருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டும். இன்றைக்கு பிறக்கிற குழந்தைகளுக்குக் கண் தெரியவில்லை என்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட குழந்தைகளுக்கு இப்படிப்பட்ட புஷ்டி உள்ள பால் கொடுக்கப்பட்டால், அதற்காக வேண்டி ஒரு கோடி ரூபாய் ஒதுக்கினாலும் தவறில்லை. அப்படிப்பட்ட ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தால் எந்தக் கட்சியும் அதை எதிர்க்கமாட்டார்கள். இது குறை கூறுகிற ஒரு திட்டமல்ல. வரவேற்கக் கூடிய திட்டம் ஆகும். இப்படிப்பட்ட நிலையில் தரமான மாடுகளை வாங்கக் கூடிய அளவிற்குத் திட்டம் போடவேண்டுமென்று இந்த கார்ப்பரேஷனைக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் கார்ப்பரேஷன் வந்தால் இப்போது இருக்கிற இலாகா வோடு இணைந்து செயல்படுமா, எப்படி இணைப்புச் செய்யப்படும் என்பன போன்ற விபரங்களை எல்லாம் சிறந்த முறையிலே யோசனை செய்து கனம் அமைச்சரவர்கள் செயல்படுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. எனவே, இதை இத்தோடு நிறுத்திவிட்டு, அடுத்த விஷயத்திற்குச் செல்கிறேன்.

1972 மார்ச் 27] [திரு. மணலி சி. கந்தசாமி]

அடுத்தபடியாக, பால் அபிஷேகத்தைப்பற்றிச் சொல்லச்சொல்லி யிருக்கிறார்கள். இன்றைக்கு இந்தத் தேசத்திலே இருக்கக்கூடிய பிரபுக்கள்—நிலப் பிரபுக்கள்—யார் என்றால் இங்கே இருக்கின்ற கடவுள்கள்தான். ஏனென்றால் அவர்களுக்கு இருக்கக்கூடிய அளவு சொத்து இன்றைக்கு வேறு யாருக்கும் இல்லை. நான் இதைச் சொல்வதால் கடவுளின்மீது எனக்குத் துவேஷம் இல்லை. இந்த கடவுள்களுக்கு சொத்து வைத்திருப்பதன்மூலம் பலவிதமான அக்கிரமங்கள் அட்டூழியங்கள், அநியாயங்கள் நடைபெறுகின்றன.

கடவுளுக்குச் சொத்து இல்லாமல் இருந்தால், கடவுளை நல்ல மனத்தோடு வணங்குவார்கள். கடவுளுக்கு ஏராளமான சொத்துக்களைச் சேர்த்து வைத்திருப்பதனால் அந்தச் சொத்துக்களுக்காகவே கடவுளை வணங்குபவர்கள்தான் இன்று அதிகமாக இருக்கிறார்கள். ஒரு பழமொழிகூடச் சொல்வார்கள் "கோயில் பெருச்சாளிகள்" என்று. அந்தக் கோயில் பெருச்சாளிகள் இன்றைக்கு அதிகமாக இருக்கிறார்கள். அந்தப் பெருச்சாளிகளின் தலையீடு இல்லாமல் இருக்கவேண்டும். அதற்கு வேண்டுமானால் அவர்களுக்கு ஒரு சிறு தொகையைக் கொடுத்துவிட்டு, அந்த நிலங்களை உழுது பயிர் செய்கிறவர்களுக்கு, ஏழைகளுக்குக் கொடுத்தால் பிரயோஜனமாக இருக்கும். அதைச் செய்யவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

கோவில் சொத்து எப்படி வந்தது என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். பிள்ளை இல்லாதவர்களும், விதவைப் பெண்களும், பக்தர்களும்தான் தங்கள் சொத்துக்களைக் கடவுளுக்கு எழுதி வைத்தார்கள். இப்படிச் சேர்க்கப்பட்ட சொத்து தியாகராஜர் கோயிலுக்கு 10, 13 ஆயிரம் ஏக்கர், வைத்தீஸ்வரர் கோயிலுக்கு ஒரு 15, 16 ஆயிரம் ஏக்கர் இப்படிப் பல கோயில்களுக்கு இருக்கிறது. அங்கே இருக்கக்கூடிய அறங்காவலர்கள், கமிஷனர்கள், எக்சிகூடிவ் ஆபீசர்கள்தான் அந்தச் சொத்துக்களை வைத்து அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டச் சொத்துக்களை எல்லாம் நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்துவதிலே எந்தவிதத் தப்பும் கிடையாது. அதனால் கோயிலுக்கு இருக்கின்ற சொத்துக்களை எல்லாம் எடுத்துவிடவேண்டுமென்று நான் சொல்லவில்லை: சொத்து இருக்கட்டும். இப்போது அந்த சொத்துக்காக ஓட்டிக் கொண்டிருக்கக்கூடியவர்களுக்கு மாதம் 100 ரூபாயோ, 50 ரூபாயோ

சம்பளமாகக் கொடுத்துவிட்டு, மீதி வருமானத்தை எடுத்துக் கொண்டால் போதுமானது. அப்படிச் செய்தால் இப்போது வருகின்ற 5 கோடி, அல்லது 6 கோடி வருமானமல்ல, 10 கோடிக்கு மேல் வருமானம் கிடைக்கும். அதற்குள்ள வாய்ப்பு இருக்கிறது. அந்தச் சொத்துக்களினுல் அதிகாரிகளுக்கும் பலன் இல்லே; கோயிலுக்கும் லாபம் இல்லே. இடையிலே இருக்கக்கூடியவர்கள் வருமானத்தைச் சாப்பிட்டுக்கொண்டிருக்கிருர்கள்.

அடுத்து, இந்த மடங்கள் இருக்கின்றன. 157 மடங்கள் இருக்கின்றன. அதில் நான்கு மடங்கள் ரொம்ப கொழுத்துப்போய் இருக்கின்றன. அதுவும் எங்கள் ஜில்லாவில் இருக்கின்றன. அந்த மடாதிபதிகளுக்கு மாதம் 500 ரூபாய் கொடுத்துவிட்டு, சொத்துக்களே எல்லாம் எடுத்துக்கொள்ளலாம். சொத்துக்களே எடுத்துவிட்டால் அங்கே நடக்கின்ற அறியாயங்களே அக்கிரமங்களேக் குறைத்து விடலாம். நான் வேண்டுமென்றே இதைச் சொல்லவில்லே. பெரிய பெரிய கிரிமினல் குற்றங்கள் எல்லாம் அங்கேதான் உருவாகின்றன. கடவுளே வணங்கினுல், சிவபதம் அடையலாம்; கைலாசத்திற்கு வழி காட்டுவார் என்றெல்லாம் சொல்வார்கள். ஆனுல் அங்கே நடை பெறுகின்றவைகளேப் பார்த்தால் நரகத்திற்குத்தான் வழி காட்டுவார் போலிருக்கிறது. அவ்வளவு அட்டூழியங்களே மடாதிபதிகள் செய்து கொண்டிருக்கிருர்கள். அப்படிப்பட்ட மடாதிபதிகள் இருக்க வேண்டுமா? இருக்கவேண்டுமா என்ருல் அவர்களே ஒழித்துவிட வேண்டுமென்று சொல்லவில்லே. அவர்களுக்கு மாதம் 500 ரூபாய் கொடுத்து சாப்பிட்டுக்கொண்டு இருக்கச் சொல்லலாம். கோயிலுக்கும் அவர்களுக்கும் சம்பந்தம் இல்லாமல் செய்துவிட்டால் போதும். இப்படிப்பட்ட சீர்கேடுகளே எல்லாம் ஒழித்துவிட்டோமானுல் உண்மையான தெய்வ பக்தி ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது இந்த கோவில் பஞ்சாயத்துக்களுக்கு ஏற்படுகின்ற போட்டி சொல்லமுடியவில்லே. எம்.எல்.ஏ.-க்குகூட அவ்வளவு போட்டி கிடையாது. கோயில் பஞ்சாயத்துக்கு அவ்வளவு பெரிய போட்டி ஏற்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் அங்கே ஏராளமான சொத்துக்கள் இருப்பதுதான். அதனுல்தான் அப்படிப் போட்டி போடுகிருர்கள். ஆகவே, அந்த நிலங்களே உண்மையிலே உழுது பயிரிட்டுக்கொண்டிருப்பவர்களுக்கும், குத்தகை கட்டிக்கொண்டிருப்பவர்களுக்கும் நியாயமான முறையிலே பயன்படுத்திக்கொண்டிருப்பவர்களுக்கும் கொடுத்துவிட்டால், கோயில் சொத்துக்களே

1972 மார்ச் 27] [திரு. மணலி சி. கந்தசாமி]

மற்றவர்கள் பயன்படுத்த முடியாமல் செய்துவிட்டால் இந்தவிதமான போட்டிகள் ஏற்பட வழியில்லை. இப்போது இருக்கின்ற அந்த அர்ச்சகர்களுக்குப் பதிலாக சர்க்கார் உத்தியோகஸ்தர்களைப் போட்டால்கூட கோயில் நிர்வாகம் நல்லமுறையில் நடைபெறும். இதை அமைச்சரவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அம்மாதிரியான ஒரு ஏற்பாட்டைச் செய்துவிட்டால் உண்மையிலேயே கடவுள் பக்தி உள்ளவர்கள்தான் அங்கே போவார்கள். அதனால் அந்த இடமும் தூய்மை பெறும். இப்போதிருக்கின்ற நிலையைப் பார்த்தால் அங்கே கயவாளித்தனம்தான் நடைபெறுகிறது. கயவர்கள் கூட்டம் அதிகமாக இருக்கிறது. உண்மையான பக்திமான்கள் அதனால் அங்கே போவதில்லை. அவர்கள் வீட்டிலேயே கடவுளை வழிபடுகிறார்கள். எனவே, களவாளித்தனத்தை அகற்றும் வகையில் ஒரு மதச் சீர்திருத்தம் கொண்டுவந்தால்கூட நல்லது. அதனால் ஒன்றும் தப்பில்லை. சாமி தலையிலே பன்னீர், பால், பழம், தேன், பஞ்சாமிர்தம் இவைகளை வைத்துத் தேய்க்கிறார்கள். மனிதன் கூட தலையில் இவைகளை வைத்துத் தேய்க்கமாட்டான்; தேய்க்கவும் விடமாட்டான். அதனால் என்ன ஏற்படுகிறது என்பதைக் கோயிலைச் சுற்றிவந்தால் தெரியும். ஒரே சாக்கடை நாற்றம்தான் ஏற்படுகிறது. பன்னீர், சந்தனம், மற்ற வாசனைப் பொருள்களால் சாமியைத் தேய்த்துச் சுத்தம் செய்யட்டும். அது நல்லது. அதனால் தூய்மை ஏற்படும். விஷக்கிருமிகளும் அழியும். அதனால் சுகாதாரம் விருத்தியாகும். மனிதனுக்கே சாப்பிடுவதற்குப் பாலும், பழமும் கிடைக்காத நேரத்தில் சாமியின் தலையில் அதையெல்லாம் வைத்து தேய்த்து, சாக்கடை நாற்றத்தை உண்டாக்க வேண்டுமா என்பதை யோசித்துப்பார்க்கவேண்டும். இதை அம்மையார் (திருமதி த. ந. அனந்தநாயகி) அவர்களும் யோசனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இராமலிங்க சுவாமிகளும், தாயுமானவரும் இறைவனை இப்படியா வழிபட்டார்கள்? இல்லையே? அவர்களெல்லாம் கண்ணீர் கசிந்துருக, பக்திப் பாடல்களால் கடவுளை வழிபட்டார்கள். கடவுள் எங்கும் இருக்கிறார் என்ற நிலையை மக்களுக்கு உணர்த்தினார்கள். இன்றைக்குத் தமிழ்நாட்டிலே கடவுளை ஒரு குறுகிய இடத்திலே வைத்துவிட்டார்கள். இப்போதிருக்கின்ற வழிபாட்டு முறை அப்படி இருக்கிறது. குறுகிய நோக்கம் உடையவர்கள்தான் இன்றைக்கு உண்மையான பக்தர்கள் என்று

[திரு. மணலி சி. கந்தசாமி] [1972 மார்ச் 27

சொல்லிக்கொள்கிருர்கள். ஒவ்வொரு கோயிலிலும் 5, 6 கோயில் பெருச்சாளிகள் சில குண்டர்கள் இவர்கள் இருந்துகொண்டு கோயில் வருமானத்தைச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிருர்கள். இவர்களைச் சரிப்படுத்திவிட்டால் இப்போது வருகின்ற 5 கோடியே 15 லட்சம் ரூபாய் 10 கோடிக்கு மேல் வரும். பரந்து விரிந்திருந்த இந்து மதம் இந்த குண்டர்களாலும், கோயில் பெருச்சாளிகளாலும் குறுகிப் போய் இருக்கிறது. இவர்களையெல்லாம் அப்புறப்படுத்திவிட்டு, உண்மையான பக்தி முறையில் ஆலய வழிபாடு நடைபெறவேண்டும்.

ஒவ்வொரு கோயிலிலிருந்தும் ஏராளமான வருமானம் வருகிறது. அந்த வருமானத்தையெல்லாம் இப்போது இந்த குண்டர்களும், கோயில் பெருச்சாளிகளும் சாப்பிட்டுக்கொண்டிருக்கிருர்கள். அதற்கு இடம் கொடுக்காமல், வீண் செலவுகளுக்கு வழியில்லாமல் செய்து, அந்த வருமானத்தைக்கொண்டு கல்வி, மருத்துவம் இவை போன்ற மக்களுக்கு நன்மை பயக்கின்ற பொதுக்காரியங்களுக்குப் பயன்படுத்தவேண்டும். அப்படிச் செய்யும்போது அதனுல் பயன் பெறும் மக்களுக்கு இறைவன் பேரில் ஒரு பக்தி ஏற்படும். இறைவனின் கருணையால், அவன் கொடுக்கும் பணத்தால் நாம் நன்மை பெறுகிருேம் என்ற உணர்வு ஏற்படும். ஐந்து கோடி ரூபாய் வருகிறதென்ருல், கல்விக்கு 3 கோடி என்றும், மருத்துவத்திற்கு 2 கோடி ரூபாய் என்றும் பிரித்து, செலவிட்டால் அதன்மூலம் மக்களுக்குப் பெரும் பயன் கிட்டும். மேலும் அந்தப் பணத்தைக் கொண்டு கல்விச்சாலைகள் அமைக்கலாம்; படிக்கின்ற பிள்ளைகளுக்குப் புத்தகங்கள் உடைகள் வாங்கிக் கொடுக்கலாம்; இலவச உணவு அளிக்கலாம்.

இப்போதும் கோயில் பணத்தில் ஒரு சிறு பகுதியை இம்மாதிரியான காரியங்களுக்குப் பயன்படுத்துகிருர்கள். ஆனுல் அப்படிப் பயன்படுத்தும்போது, கோயில் பெருச்சாளிகளும், குண்டர்களும் அதைத் தங்கள் பணம்போலக் கருதி, அங்கேயும் தங்கள் அதிகாரத்தை நிலைநாட்டிக்கொள்கிருர்கள். அம்மாதிரியான நிலைகளைத் தடுத்து நிறுத்தவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். விரைவிலேயே ஆலய வழிபாட்டில் ஒரு சீர்திருத்தம் கொண்டுவரவேண்டும். இந்து மத மேம்பாட்டுக்குக் குறைந்த பட்சம் என்னென்ன செய்யவேண்டுமென்று அனைவரும் கூடி யோசனை செய்யவேண்டும்.

சட்டமன்ற TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

1972 மார்ச் 27] [திரு. மணலி சி. கந்தசாமி]

இப்போது இங்கே ஒரு சண்டை நடந்துகொண்டிருக்கிறது. அதாவது தமிழில் அர்ச்சனை செய்வதா கூடாதா என்பது அந்த சண்டை. தமிழில் அர்ச்சனை செய்தால் நல்லதல்ல, வழிபாடு சிறப்பாக அமையாது என்று சொல்கிறார்கள். ஏன் அப்படி? சாமிக்குத் தமிழ் தெரியாதா? சமஸ்கிருதம்தான் தெரியுமா? தமிழ் தெரியாத சாமி ஏன் இங்கே இருக்கவேண்டும்? அவரவர் விருப்பப் படி வழிபாடு இருக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். அப்படியானால் எனக்கு ஆங்கிலத்தில் வழிபடத்தான் விருப்பம். ஆங்கிலத்தில் அர்ச்சனை நடத்திக்கொடுப்பார்களா? (சிரிப்பு) அப்போது சாமிக்கு ஆங்கிலம் தெரியாது என்பார்கள். சாமிக்குத் தெரியுமோ தெரி யாதோ, அங்கே இருக்கின்ற அர்ச்சகர்களுக்குத் தெரியாது. வழிபடு கிறோம் என்று சொல்லிவிட்டு, ஆங்கிலத்தில் எதையாவது சொல்லிக் கொண்டிருந்தால் ஐயருக்கு அது புரியாது, திரு திரு வென்று விழிப்பார். ஆகவே, சமஸ்கிருதத்தில் அர்ச்சனை பண்ணுவது என்பது கூடாது. அந்தந்த மாநிலத்தில் உள்ள மொழியில்தான் அர்ச்சனை பண்ணவேண்டுமென்ற நிலையை உருவாக்கவேண்டும்.

தேவாரமும், திருவாசகமும் அழகான பக்திப்பாடல்களால் ஆனவைதானே. அந்தப் பாடலைக் கேட்டு இறைவன் அருள்புரிந்த தாகத்தானே நாம் அறிகிறோம். "நமோ" என்றால் என்ன? அதை சரணம் என்று ஏன் சொல்லக்கூடாது? அல்லது வணக்கம் என்று ஏன் சொல்லக்கூடாது? தாராளமாகச் சொல்லலாம். அதில் ஒன்றும் தப்பு இல்லை. ஆகவே, தமிழ்நாட்டில் தமிழில்தான் அர்ச்சனை செய்யவேண்டுமென்று அமைச்சரைக் கேட்டுக்கொண்டு, என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM: Mr. Speaker, Sir, let me at the outset congratulate the D.M.K. Government for having done something substantial for the improvement of the temples of Tamil Nadu. I think I should be honest to certain facts. I cannot for the sake of politics forget the things that the Hindu Religious and Charitable Endowment Board has been doing to the Hindu religion particularly in the matter of its materialistic growth. So far as temple buildings, utilisation of temple money, starting of small Tamil libraries and Siddha hospitals are concerned, I think the Board is very very active and it deserves our congratulations. What the figures speak is true. I think they are doing well in the matter of renovation of many old temples. Now I am saying

this; If a nation has to grow, if a nation has to be disciplined and if a nation has to carry on honestly according to Dharma, I am sure, that nation must be religious, whatever its religion, Hinduism or Christianity or Mohamedanism. There should be faith in God and there should be faith in 'Pavam' and 'Punniyam'. There should be a motivating force to do good things in life. Otherwise, nobody would do good things.

Whatever my hon. Friend, Thiru Manali Kandaswamy might say, there should be a motivating force for doing good things. There are four forces—(1) money, (2) power, (3) name and (4) self-satisfaction. One must have a feeling that he has done some thing good, and for that religion plays a very important part. Sir, the Board is able to control and administer the temples well, with the object of augmenting the income of the temples. This is the purpose with which this organisation was started. Also there was heavy misuse of temple lands and in order to stop that, this Board was started. From that purpose, it is now gradually intruding into the religious worship of the temples. At the same time it must be said that the temples are becoming good, well kept, well repaired and a museum of idols. It is not with the idea of seeing a museum that the people go to the temples. They go to the temples with the idea that there is something significantly spiritual about it.

If the temple fund is to be diverted, let it be diverted for useful purposes. If it is diverted to non-secular purposes, people will stop going there. What will happen then? Temples will become a place of archaeological importance only.

In this connection, I must say that it pains me very badly that the Central Government have refused permission to instal the statue of Raja Raja Cholan in the Brahadeswara temple in the Thanjavur district. It is the greatest temple and it should be handed over to the State Government so that the statue can be installed there. There is nothing wrong in that.

So also with regard to Jalakandeeswara temple at Vellore, the Central Government has stated: "No, you do not interfere with our Archaeological Department". Temples cannot be an object for control by the Archaeological Department. Temples can be some–

1972 மார்ச் 27] [Thiru K. M. Subramaniam]

—what objective for admiration by foreigners but that is a different matter. Temples are temples and nothing else and that is my point.

Sir, some hon. Member has mentioned about archanas. My only view in regard to this matter is that temples should survive whatever archanas are performed. I do not care about the archanas whether it is Tamil archana or Sanskrit archana or English archana as Thiru Manali Kandaswami has mentioned..................

Mr. SPEAKER : Or even Russian archana.................

Thiru K. M. SUBRAMANIAM : It does not matter. We want recitation with all purity and sincerity. It does not matter if it is not in Sanskrit. But in this connection, I have to quote, with your permission, the greatest saying of Kalidasa :

"நாரீஷு ரம்பா—நகரேஷு காஞ்சி"

Among the ladies, the most beautiful is the Ramba and among the cities the most beautiful city is Kanchi. This was stated thousands of years ago by Kalidasa during the time of Bhoja Rajan.

Sir, there are 108 temples in Kancheepuram and there are three big temples in Kancheepuram. The gopurams are in a straight line which no other city has got. So far as the streets of Kancheepuram are concerned, it is the most well planned city because the main street was the broadest street in India in those days. Such a city we are neglecting. I very humbly suggest that the Government should start a Sanskrit University at Kancheepuram for those persons who want to study Sanskrit. Nobody should be compelled to study it.

Sir, in those days of Kalidasa there were 1,039 vedic branches. Now there are only 9 vedic branches and the rest were abolished. Sir, temples should be maintained well and all the rituals attached to the temples should be maintained. They should not be a mere show-piece.

So far as Madurai is concerned, during the question hour it was stated..................

Mr. SPEAKER : Let the hon. Member finish his speech with Kancheepuram.......................

THIRU K. M. SUBRAMANIAM: Sir, in Madurai they are going to construct new buildings. Good money making is not temples' business. In a Nandavanam you see good architecture as well as good scenic beauties. Please preserve it and Nandavanam is our ancient cultural heritage. Money is nothing. I am trustee of a temple. My temple is not having one pie of property. The only property which the temple has is its building. But because of the manner in which worship is conducted, we are spending Rs. 30,000 per annum on various activities. We are not moving for donations for that sum. The sincere way in which worship is being conducted brings us that money. So, money is secondary. Nobody need worry about it. What is important is that rituals must be maintained well. For that what I would like is, form a Committee just like Kerala Devoswom Committee to help the Commissioner in the proper conduct of ritualism in temples. Today we say the children are going astray. We see them going astray. It is because of the parents they have become like this. So sufficient attention should be paid to them. We should not pay attention to the materialistic side alone. I have got so many things to say and I have got this much of pamphlets to speak on. But there is no time. There is the Salem Mariamman temple where a gopuram is not being allowed to be put up. As the Hon. Speaker has said, I will say what other things I have to say in the Hon. Minister's room. Thank you.

திரு. சொ. காவேரிமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற மானியக் கோரிக்கையை ஆதரித்து, வரவேற்று என் உரையை தொடங்குகின்றேன்.

கொடுக்கப்பட்டிருக்கிற விளக்க உரையில் காட்டப்பட்ட புள்ளி விவரங்கள், எழுப்பப்பட்ட திருமண மண்டபங்கள், புதிதாகச் சேர்க்கப்பட்ட கோயில்களின் விவரங்கள், அவற்றில் கிடைத்த அதிகமான வருமானங்கள் போன்ற நல்ல விளக்கங்களைத் தெளிவாகச் சுட்டிக் காட்டி இந்தத் துறை நம்மிடம் அறிக்கையைக் கொடுத்திருக்கிறது. கடந்த ஆண்டு கூட்டத்தொடரில் மாண்புமிகு உறுப்பினர்கள் கோயிலுக்குச் சொந்தமான நிலங்களிலிருந்து வருகின்ற வருமானம் குறைவாக இருக்கிறது என்றும் அதைக் கண்காணிக்கவேண்டும்

1972 மார்ச் 27] [திரு. சொ. காவேரிமணியம்]

என்று எடுத்துச்சொன்ன காரணத்தினுல், மாவட்டந்தோறும் வருவாய்த் துறை அதிகாரிகளை நியமித்து, அதிகமான வருமானத்தை இந்தத் துறைபெற்றுத் தந்திருப்பது குறித்து உண்மையிலேயே மகிழ்ச்சியடைகிறேன்.

(திரு. செ. கந்தப்பன்—தலைமை)

1377-ம் பசலியிலிருந்து ஐந்தாண்டுக் காலம் தொடர்ச்சியாக வருமானம் எந்த அளவிற்கு வளர்ந்து வந்திருக்கிறது என்பதைச் சிறந்த எடுத்துக்காட்டாகக் குறிப்பிட்டிருப்பது பாராட்டப்பட வேண்டிய குறிப்பாக இருக்கிறது. இந்த நேரத்தில் பல்வேறு கருத்துக்களைச் சொல்ல முற்பட்டால் நேரம் அதிகமாகும் என்று கருதி, மாண்புமிகு உறுப்பினர் பெரியவர் மணலி அவர்கள் நல்ல புரட்சிகரமான கருத்துக்களை, பெரியார் தந்தை கூறுவதைப்போல சுட்டிக்காட்டியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நாட்டுமக்கள் ஜீரணிக்க சக்தியில்லாத காரணத்தால், தமிழக அரசு நேர்மையான முறையில், நல்ல வழியில் படிப்படியாகச் சீர் திருத்தங்களைச் செய்கின்ற வகையில் நடந்து வருகிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் பலமுறை சொன்னது போல இந்த மாமன்றத்திலும் குறிப்பிட விரும்புகிறேன். மதுரை மாவட்டத்தில் உள்ள திருப்பரங்குன்றத்தில் இருக்கக்கூடிய சுப்பிரமணிய சுவாமிகள் கோயிலைத் தனியாகப் பிரிக்க வேண்டு மென்று கடந்த ஆண்டு தொடர்க்கூட்டத்திலும் சொல்லியிருக்கி கிறேன் . அதற்கான புள்ளிவிவரங்கள், காரண காரியங்கள், அந்தக் கோயிலின் வருமானம், அதன் அவசியம், உணர்வு ஆகியவற்றைத் தெளிவாக எடுத்துக்காட்டினேன். காரண காரியங்களைக் கொள்கை யளவில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்கிறேன் என்ருர்கள். அதற்கு என்னுடைய மகிழ்ச்சி. கொள்கையளவில் ஏற்றுக்கொண்டாலும், இன்னும் இரண்டு ஆண்டுகள் தள்ளிப் போடுங்கள் என்ருர்கள். இந்த இரண்டு ஆண்டுக் காலத்திலே என்ன செய்யப்போகிறீர்கள் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்பு கிறேன். சுமார் 7 லட்சம் ரூபாய் வருமானமுள்ள திருப்பரங்குன்றம் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகள் கோயிலில் ஏற்படக்கூடிய குறைகளை—நேரம் அதிகம் இல்லாத காரணத்தினுல் வேகமாக—சொல்ல விரும்புகிறேன். அங்கு தேரோடுகின்ற வீதிகளும், பொய்கையும்

பாழடைந்திருக்கின்றன. அந்தக் கோயிலைத் தனியாகப் பிரிக்க வேண்டுமென்பதற்கான காரணங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நேரடியாகச் சொல்லியிருக்கிறேன். பிரிக்கப்பட வேண்டுமென்பது இப்போது இல்லாவிட்டாலும், அது தனியாக எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.

ஏழு லட்சம் ரூபாய் கொடுக்கக்கூடிய திருப்பரங்குன்றம் கோயிலின் வருமானத்திலிருந்து ஒரு உயர்நிலைப்பள்ளி, அனாதை இல்லம், குழந்தைகளைப் பராமரிக்கும் இல்லம் போன்றவைகளை ஏற்படுத்த வேண்டும். பல சுப்பிரமணிய சுவாமி கோயில்களிலிருந்து பெரிய பெரிய கல்லூரிகளை, பள்ளிகளை ஏற்படுத்துகிறார்கள். பழனியில் உள்ள தண்டாயுதபாணி தேவஸ்தானத்தின் சார்பாக ஆண்களுக்கென்று ஒரு கலைக் கல்லூரியும், பெண்களுக்கென்று ஒரு கலைக் கல்லூரியும், இன்னும் தமிழ் கலைக் கல்லூரியும் எல்லாம் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. ஆகவே, நாம் அம்மையாரிடத்திலிருந்தோ, ஆண்டவனிடத்திலிருந்தோ மகனைப் பிரிக்கவில்லை. அவர் வள்ளி–தெய்வானையோடு குடும்பசமேதராக இருக்கிறார், அப்படியே இருக்கட்டும்.

அந்தக் கோயிலைப் பிரிக்க வேண்டுமென்பதற்கான காரணங்கள் இவைதாம். இந்த ஏற்பாடுகள் எல்லாம் செய்யப்படவேண்டும். இந்த வேண்டுகோளை ஏற்று, இந்த மாமன்றத்திலே தகுந்த விளக்கத்தைச் சொல்லவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் இரண்டு அறங்காவலர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றிகூறி, என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. எம். கந்தசாமி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து எனது கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

அறநிலையத் துறையைப் பொறுத்தவரையில் திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்த பிறகு பெரும் மாறுதல்களைச் செய் திருக்கின்றது என்று சொன்னால், அது மிகையாகாது. மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலே அதற்காக ஒரு தனி மானியத்தைக் கொண்டுவந்து, டாக்டர் கலைஞர் அவர்களுடைய

1972 மார்ச் 27] [திரு. எம். கந்தசாமி]

காலத்தில் தனி அமைச்சரைக் கொண்டுவந்து, இன்றையதினம் நமது அறநிலேயத் துறை ஆணையாளரும், அவரின்கீழ் பணியாற்றுகின்ற அதிகாரிகளும் சிறப்பான முறையில் பணியாற்றிய காரணத்தால் இன்றையதினம், தமிழகத்திலுள்ள கோயில்களிலே நல்ல வருமானம் கிடைத்துக் கொண்டிருக்கிறது. இந்த ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தந்த நிதிநிலே அறிக்கையிலே கோயில் நிலங்களில் விவசாயம் செய்துவந்த விவசாயிகள் இந்த ஆண்டு பாக்கியைக் கட்டிவிட்டால் முன்பிருந்த பாக்கிகள் எல்லாம் நீக்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை அளித்திருக்கிற காரணத்தினுல் அந்த விவசாயிகள் இதை வரவேற்கிருர்கள், பாராட்டுகிருர்கள்.

தமிழகத்தில் உள்ள கோயில்களில் நல்ல நிர்வாகம் ஏற்பட்டாலும், "தமிழ் வழிபாடு" என்று சொன்னவுடனே பலரிடமிருந்து எதிர்ப்புக் கணைகள் வந்ததை நாம் எல்லோரும் அறிவோம். இருந்தாலும் விருப்பப்படி அர்ச்சனை செய்யலாம் என்ற நியதி இருந்தாலும், தமிழ் அர்ச்சனை வேண்டுமென்ருல், அர்ச்சனை தமிழில் செய்கிருர்கள். இன்னும் சில கோயில்களில் வடமொழியில் அர்ச்சனை இருந்துகொண்டிருக்கிறது. அறநிலேயத் துறையினர் ஆங்காங்கு, யார் யார் தமிழ் அர்ச்சனை வேண்டுமென்று கேட்கிருர்களோ அவர்களுக்குத் தமிழ் அர்ச்சனை செய்து தருவதற்கான ஏற்பாட்டை, நல்ல உத்தரவை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பல கோயில்கள் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின்கீழ் இருந்து வருகின்றன. இன்றைக்கு தஞ்சாவூர் பெரிய கோயில், வேலூரில் உள்ள கோயில் இவையெல்லாம் நல்ல முறையில் கவனிக்கப்படாமல் இடிந்துவிழக்கூடிய நிலேமையில் இருக்கின்றன. இந்த அரசின்கீழ் அவையெல்லாம் இருந்தால் நல்லவிதமாக முன்னேற்ற முடியும்.

அடுத்தபடியாக, பரம்பரை அர்ச்சகர்கள் ஒழிப்புமுறையை இந்த அரசு செய்திருக்கிறது. இதை எல்லோரும் வரவேற்கிருர்கள். பரம்பரை அர்ச்சகர்களுக்கு 20 ஏக்கர், 30 ஏக்கர் என்ற அளவில் நிலம் இருக்கிறது. தாசி மானியம் என்ற முறையிலே இன்னும் பல இடங்களிலே அவர்களுடைய பரம்பரைக்கு எல்லாம் கொடுக்கப்படுகிறது. அதை நிறுத்தவேண்டும்.

[திரு. எம். கந்தசாமி] [1972 மார்ச் 27

அறநிலையத் துறை அதிகாரிகள் கோயில்களுக்குச் சென்றால் நிர்வாகத்தை மட்டும் கவனிப்பதோடு நின்றுவிடாமல் கோயில் களுக்கு அறங்காவலர்கள் யார் யார், அவர்கள் எந்த அளவிலே கவனிக்கிறார்கள், இதற்கு முன்பு அந்தக் கோயிலுக்கு இருந்த வருமானம் என்ன? இப்பொழுது எப்படி நிலைமை இருக்கிறது என்பன போன்றவற்றையும் கவனிக்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

இன்றைய தினம் தமிழகத்திலே 5 கோடி ரூபாய்க்கு மேல் வருமானம் இதன்மூலம் வருகிறது. திரு மணலி அவர்கள் 5 கோடி பெருச்சாளிகளுக்கு அது போவதாக நகைச்சுவையோடு சொன்னார்கள். கோயில்களின் நிர்வாகம் தொன்றுதொட்டு முன்பு மோசமாக இருந்து வந்திருக்கின்ற காரணத்தினாலே பல இடங்களிலே திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்ததற்குப் பிறகு எவ்வளவு தூரம் அதிகமாக கவனித்து வருமானத்தைப் பெருக்கியிருக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும். இன்னும் பல இடங்களிலே மடாதிபதிகள் இருந்துகொண்டு தன்னிச்சையாகச் செயல்பட்டுக் கொண்டு வருகிறார்கள். அப்படிப்பட்டவற்றையெல்லாம் அரசாங்கமே ஏற்றுக்கொண்டு ஆங்காங்குள்ள கோயில்களுக்கு மடங்களுக்கு அதிகாரிகளை நியமிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அறநிலையத் துறையின்கீழ் வேலைசெய்யும் கீழ்நிலை எழுத்தர் களுக்குச் சம்பளம் போதுமான அளவுக்குக் கொடுப்பதில்லை. ஏழை கோயில்களாக இருந்தால் மாதம் ஒன்றுக்கு 20 ரூபாய், 30 ரூபாய் கூட கிடைப்பதில்லை. எனவே, அவர்களை அரசாங்க ஊழியர்களாக மாற்றுவிட்டாலும்கூட முடிந்த அளவிலே ஊதியம் போதுமான அளவுக்குத் தருவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் வேதாரண்யம் போன்ற கோயில்களிலே பரம்பரை டிரஸ்டிகள் இன்னும் இருந்துகொண்டிருக்கிறார்கள். இலங்கையில் இருந்து வந்தவர்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள். 20 ஆயிரம் ஏக்கர்வரை இருந்துகொண்டிருக்கிறது. அவருக்கு மாதம் 300 ரூபாய் சம்பளம் தரப்படுகிறது. அப்படிப் பரம்பரை டிரஸ்டிகளாக இருந்துகொண்டிருக்கிறவர்களை, பரம்பரை அர்ச்சகர் முறையை ஒழித்ததுபோல், பரம்பரை டிரஸ்டி முறையையும் ஒழிக்கவேண்டும்.

அதற்கான முயற்சிகளை எடுப்பதற்கு நம்முடைய அரசு மேலும் உறுதி எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. குப்பல் கே. எஸ். ராமகிருஷ்ணன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இன்று அறநிலையத் துறை மானியக் கோரிக்கையை ஆதரித்துக் கருத்துக்களைக் கூறவிரும்புகிறேன்.

இன்று அறநிலையத் துறை செய்யக்கூடிய காரியங்கள் பாராட்டக்கூடியனவாக அமைந்திருக்கின்றன என்று எதிர்க்கட்சி உறுப்பினர் கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் ஆரம்பித்தார்கள். தேர்தல் காலங்களிலே கோயில்களைக் காப்போம், கோயில்களைக் காப்போம் என்று சொல்லிக்கொண்டு, இந்த ஆட்சி ஏற்பட்டால் கோயில்களை இடித்துவிடுவதுமாதிரி ஜனங்களுடைய எண்ணத்தை மாற்ற வேண்டுமென்று எண்ணி கோயில்களைக் காப்போம் கோயில்களைக் காப்போம் என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். இந்த ஆட்சி வந்தபிறகு எந்தக் கோயிலும் பழுதடையவில்லை, கோயில் பணிகள் செம்மையாக நடக்கின்றன. எல்லோரும் பாராட்டக்கூடிய வகையிலே அறநிலையப் பணிகள் இன்றைக்கு நடந்துகொண்டிருக்கின்றன.

"Old order changeth, yielding place to new. . . ."

என்று ஆங்கிலத்திலே சொல்வார்கள். ஒரே நல்ல காரியத்தைத் தொடர்ந்து செய்தாலும் கெடுதல். கடவுள் காரியங்களுக்கு என்று உற்சவங்களுக்கு என்று காரியங்களைச் செய்வதோடு வேறு விதங்களிலும் ஏழைகளுக்கு உதவி, கல்வியறிவு என்ற வகையிலேயும் குழந்தைகளுக்குப் பால் என்ற வகையிலேயும் கல்யாண மண்டபங்களையும் கட்டுவது போன்ற வகைகளிலேயும் செய்யலாம். இந்த அறிக்கையிலே எவ்வளவு பெரிய காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன என்பதைப் பார்ப்போமானால் நிச்சயமாக எல்லோரும் பாராட்டுவார்கள்.

மதுரையிலே நல்ல காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன. அழகர் கோயிலுக்கு ஏராளமான ஜனங்கள் வருகின்றனர். ஆனால் மலைமேல் ஏறிச்சென்று ஸ்நானம் செய்வதற்கு ஏற்றவசதிகள் இல்லாமல் இருக்கிறது. அங்கே ஒரு வண்டிப்பாதை போட வேண்டுமென்று பல முறைகள் ஆராயப்பட்டும் என்ன காரணத்தினாலோ, செய்யப்படாமல்

இருக்கிறது. அங்கே ஒரு நல்ல பாதை போடவேண்டுமென்று அழகர்கோவில் தேவஸ்தானத்திலிருந்து தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறார்கள். எனவே ரோடு போடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மற்றும் பெரிய பெரிய நகரங்களிலே இருக்கக்கூடிய கோயில்களில் நடக்கக்கூடிய கூட்டங்களுக்குச் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும் அந்தக் கூட்டங்களைப்பற்றிய தகவல்கள் தெரிவித்தால்—நமக்கு கமிட்டியிலே உறுப்பினர்கூட கொடுக்க வேண்டாம்—நான்-அபிஷியலாக, எக்ஸ்-அபிஷியோவாக கலந்து கொள்வதற்கு ஏற்பாடு செய்தால் அங்கே நடக்கின்ற கூட்டங்களில் சட்ட மன்ற உறுப்பினர்களும் நல்ல பல யோசனைகளைச் சொல்வதற்கு வாய்ப்பு இருக்கும்.

சில சமயங்களிலே நான் கேள்விப்படுகிறேன். கடவுள் பக்தராக இருக்கிறவர்தான் அறங்காவலராகப் போடவேண்டுமென்று சொல்கிறார்கள். கடவுள் பக்தராக இல்லாதவர்களையும்தான் காப்பாற்றுகிறார். எனவே மற்றவர்களையும் போடுவதிலே தவறு இல்லை.

உள்ளன மற்றும் உளவா, புறமே சிலமாயம் சொல்லி
வள்ளல் மணிவண்ணனே என்று வஞ்சிக்கும்
கள்ள மனம் கொண்டவனையும் கடவுள்
ஆட்கொண்டிருக்கிறார்

என்று நம்மாழ்வார் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். சில ஆஸ்திகர்கள், நாஸ்திகர்கள் என்றால் தள்ளிவிடுவது என்ற மனப்பான்மையுடன் இருக்கிறார்கள். அவர்கள் ஆஸ்திகர்களே அல்ல, அவர்கள் நாஸ்திகர்கள்தான். எனவே ஆஸ்திகர்கள் நாஸ்திகர்களை விரட்டி விரட்டியடிக்காதபடி யாராக இருந்தாலும் அவர்களுக்கு உரிய கடமைகளைச் செய்வதற்கு வழிவிடவேண்டும்.

கோயில் பணிகளிலே எல்லாக் காரியங்களும் சிறப்புற நடைபெறத்தக்க விதத்திலே நம்முடைய அரசு ஈடுபட்டு அதே நேரத்திலே உபரி வருவாயைப் பெருக்கிக் காட்டுகிற நிலைமையைப் பாராட்டி நான் மனப்பூர்வமாக ஆதரித்து முடித்துக்கொள்கிறேன்.

* திரு. எம். ஏ. லத்திப்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் இந்த மானியத்தின்மீது என்ன பேசப்போகிறேன் என்ற கேள்விக்குறியோடு முகத்திலே தோன்றுகின்ற தோற்றத்தின் வாயிலாக பலர் கேட்பதை நான் அறிகிறேன். ஜனநாயகத்திலே ஒரு

1972 மார்ச் 27] [திரு. எம். ஏ. லத்தீப்]

தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிற எல்லா, மக்களுக்கும் சேர்ந்த ஒரு பிரதிநிதி என்ற முறையிலே இந்து பிரதிநிதிகளும் சேர்த்துத் தேர்ந்து எடுக்கப்பட்டிருக்கின்ற பிரதிநிதி என்ற முறையிலே நான் சில விஷயங்களைச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

நான் மதிப்பிற்குரிய திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்களைப் பாராட்டுகிறேன். அவர்கள் மனப்பூர்வமாக ஒரு விஷயத்தை ஒத்துக் கொண்டதற்காக அவர்களை நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

திரு. கே. எம். சுப்பிரமணியம்: எப்பொழுதும் நான் மனப் பூர்வமாகவே பேசுகிறேன்.

Mr. CHAIRMAN (Thiru S. KANDAPPAN): He is only complimenting you. You need not take objection to it.

திரு. எம். ஏ. லத்தீப்: எதைச் சொன்னாலும் மனப்பூர்வமாகச் சொல்லுகிறேன் என்று சொல்கிறார்கள். நான் அதை ஒத்துக்கொள் கிறேன். நகரேஷு காஞ்சி, நாரீஷு ரம்பா என்று கூறி காஞ்சி நகரம் நகரமாகக் காட்சியளிக்கவில்லை என்று உருக்கமாகச் சொன் ஞர்கள். ஆனல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்பட்ட தற்குப் பின்னலே நகரேஷு காஞ்சியாக பல்லவனுடைய தலைநகராக இருந்த காஞ்சி இன்றைக்கு செங்கற்பட்டு மாவட்டத்தின் தலைநகர மாக மாற்றி, சிறப்புக்கு வழிகோலும் வகையிலே பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இது பல ஆண்டுகளாக நடைபெற வில்லை. ஆனல் நம்முடைய ஆட்சியிலே அது நடைபெற்றிருக்கிறது என்பதை நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கோயில்களில் உள்ள பள்ளிகளையும், சித்த வைத்திய சாலைகளையும் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற கருத்துச் சொல்லப்பட்டது. என்னைப் பொறுத்தவரையில் அந்தக் கருத்தை ஏற்றுக்கொள்வதற்குச் சிறிது தயக்கம் காட்டுகிறேன். ஏனென்றல் கோயிலிலே நடத்தப் படும் கல்விச்சாலைகளின் தத்துவம், அதனுடைய அடிப்படை, அதனுடைய நோக்கம் சாதாரணமாகக் கல்வி கொடுப்பதாக இருந் தாலும் அது ஒரு தர்மத்தின் கடமை, தர்மத்தின் லட்சணம் என்ற முறையில்தான் கொடுக்கிறார்கள். ஆகவே, கோயிலினுடைய ஒரு பகுதியாக அது கருதப்பட்டுத்தான் அப்படிச் செய்யப்படுகிறது.

128- 12—28

Dhruti Shama Damodsteya Souc'cha Mindriyanigraha Dheer Vidya Satyam Khuroa-do Dasakama Dharma Lakhanam.

என்று ஆதிசங்கரர் கூறினர். தர்மத்தினுடைய லட்சணமாக மதத்தினுடைய, தர்மத்தினுடைய பத்து லட்சணங்களை வகுத்து ஆதிசங்கரர் வித்யா என்பதைக்கூடச் சேர்த்துதான் சொன்னர்கள். ஆகவே, கல்வியை அளித்து அந்தத் தர்மத்தின் ஒரு பகுதியாகக் கருதியே அது கோயிலின் ஒரு பகுதியாகக் கருதப்பட்டு அதன் மானியத்தை ஒதுக்கி கல்விச்சாலைகளை நடத்துகிறார்கள். ஆகவே, அவர்கள் நடத்துவதை நாம் பாராட்ட வேண்டும். அவர்களுடைய அந்த முறையை நாம் மேலும் ஊக்குவிக்கின்ற முறையிலே நடக்க வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோளாகும்.

இந்த நேரத்திலே அவர்கள் காஞ்சியைப் பற்றிச் சொன்னர்கள். நமது காஞ்சி பாலாற்றங்கரையிலுள்ள ஒரு நகரம். நாரீஷு ரம்பா மட்டும் அல்ல, அங்கே ஊர்வசி, திலோத்திமை என்று சொல்லுமளவில் பாலாற்றங்கரையில், எப்படிக் காவேரிக்கரையில் 64 சிவாலயங்களைச் சோழமன்னன் ஏற்படுத்தினனே அதற்கும் அதிக மாக மிகச் சிறப்புப் பெற்ற ஆலயங்கள் பாலாற்றங்கரையிலே அந்தக் காலத்திலிருந்ததாக ஒரு சரித்திரத்தை அறிகிறோம். இன்றைக்குக் காவிரிக்கும் அதிகமாகச் சிறப்புப் பெற்ற அந்தப் பாலாறு பாழாருக மாறிவிட்டிருக்கிறது. அதன் காரணத்தை அனைவரும் அறிவார்கள் என்று கருதுகிறேன். கரை முழுதும் வரலாற்றுச் சிறப்புப் பெற்ற கோயில்கள் இருக்கின்றன. அவை களெல்லாம் மிகவும் பழுதடைந்திருக்கின்றன. அவைகளை இந்த அரசு கவனித்துச் செப்பனிட வேண்டுமென்று நான் என்னுடைய தொகுதி மக்களின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, என்னுடைய தொகுதியில் ஆலங்குளத்தில் பழைய மாரியம்மன் கோயில் ஒன்று இருக்கிறது. அந்தக் கோயிலில் சித்திரை மாதத்தில் திருவிழா நடைபெறும். கங்கையம்மன் திருவிழா நடக்கும். நாள் முழுவதும் பல்லாயிரக்கணக்கான மக்கள் அங்கே சேர்வார்கள். ஆனல் அந்தக் கோயிலுக்குச் சொந்தமான நிலத் திலே இன்றையதினம் பலபேர் ஆக்கிரமிப்புச் செய்து திருவிழா சிறப்பாக நடைபெறுவதற்குத் தடங்கல் செய்துள்ளார்கள். அந்தத் தடங்கலை நீக்க இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். கோயிலுக்குரிய மைதானத்தைப் பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

1972 மார்ச் 27] [திரு. எம். ஏ. லத்தீப்]

அதுமட்டுமல்ல, ஜவ்வாது மலையில் நெல்லிவாசல் என்ற இடத்தில் சுமார் 800 அல்லது 1,000 ஆண்டுகளுக்கு முன்னால் தோன்றிய கோயில், பிரதானமான கோயிலில் குடிகொண்டிருக்கும் அவள் பைரவியாகக் காட்சி அளிக்கிறாள். அவள் பைரவியாக, காட்டுக்குரிய தெய்வமாக இருக்கிறாள். அவள் மழையைத் தாங்கிக்கொண்டு, வெயிலைத் தாங்கிக்கொண்டு, எதையும் தாங்கிக்கொண்டு வருபவர்களுக்கெல்லாம் அருள்பாலித்துக்கொண்டு அங்கே வீற்றிருக்கின்றாள். அவளை அங்கே சரியான முறையில் பரிபாலிக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்த இடத்திலே உடனடியாக அரசே முன்வந்து காட்டுத் தெய்வமாக இருக்கின்ற அந்தப் பைரவிக்கு கோயிலை அமைப்பதற்கு இந்து அறநிலையத் துறை முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, வாணியம்பாடிக்கு வாணியம்பாடி என்ற அந்தப் பெயர் ஏன் வந்தது- தெரியுமா? வாணியம்பாடியில் ஒரு அதிசய மிக்க சிறப்புப்பெற்ற கோயில் இருக்கிறது. ஈஸ்வரன் கோயிலில் நாம் சாதாரணமாக ஈஸ்வரனுடன் அம்பாள் வீற்றிருப்பதைப் பார்ப்போம். ஆனால் எங்கள் ஊரில் ஈஸ்வரனோடு வீற்றிருப்பவள் கல்விக்குத் தெய்வமான வாணியே வீற்றிருக்கின்றாள். வாணி வீற்றிருக்கின்ற காரணத்தினால், முல்லை நாட்டுக்குரிய நாடாக இருப்பதனால், முல்லை நாட்டுக்குரிய பெயராகிய பாடி என்றும், அழகாக இருக்கின்ற காரணத்தினால் அம் என்பதைச் சேர்த்து வாணி + அம் + பாடி என்பதைச் சேர்த்து வாணியம்பாடி என்ற பெயர் வந்திருக்கிறது. அந்த வாணியம்பாடி கோயிலை இன்றைக்குச் சரியாகப் பராமரிப்பதற்கு வழிவகைகள் இல்லை. அதற்கு இந்த இந்து அறநிலையத்துறை வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக வேண்டிக் கொள்கிறேன்.

கடைசியாக, நம்முடைய கே. எம். எஸ். அவர்கள் மிகவும் உருக்கத்தோடு சொன்னார்கள். இன்றைக்கு நாட்டிலே அமைதி ஏற்படுவதற்கு, நாட்டிலே ஒழுங்கு ஏற்படுவதற்கு நமக்கு ஒழுக்கம் தேவை, அந்த ஒழுக்கத்தைத் தருவது நாட்டிலேயிருக்கும் சமயங்கள். அந்தச் சமயத்திற்குச் சில தவறுகளை எடுத்துச் சொன்னார்கள். ஆனால் நான் சொல்கிறேன், இந்து சமயமாக இருந்தாலும் சரி அல்லது வேறு எந்தச் சமயமாகயிருந்தாலும் சரி அவர்கள் சொன்னதைப்போல் எந்தச் சமயமும் இத்தகைய அராஜகத்தையும்,

கேடுகளையும் விளைவிக்கும் குற்றத்தைச் செய்ய வேண்டுமென்று கூற வில்லை. நடுவிலே இருப்பவர்கள் அப்படிச் செய்கிறார்கள். அவர்கள் செய்வதால் எந்த மதத்தையும், எந்தக் கோயிலையும் கெட்டவை களாகக் கருதுவது தவறு. ஆகவே அருமைத் தலைவரவர்களே, இந்தக் கோரிக்கைகளை இந்த இந்து அறநிலையத்துறை பரிவோடு கவனித்து ஆவன செய்யும் என்ற நிலையிலே என்னுடைய தொகுதி யிலே வாழும் இந்துப் பெருங்குடிமக்களுக்கு நான் ஆற்ற வேண்டிய கடமை என்ற முறையில் இவைகளை முன்வைத்து வேண்டுகோள் விடுத்து அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி : தலைவரவர்களே, எனக்கு முன் பேசியவர்கள் நமது இந்துக் கோயில்களிலே இருக்கும் நிலைகளைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். குறிப்பாக காஞ்சியைப்பற்றிக் குறிப் பிட்டார்கள். அதைப்போல பல கோயில்கள் செப்பனிடப்பட வேண்டிய கோயில்களாக இருக்கின்றன என்பதைப்பற்றிக் குறிப் பிட்டார்கள். எத்தனையோ கோயில்களிலே அவற்றையெல்லாம் ஆண்ட அரசர்கள் எவ்வாறு நிர்வகித்து வந்தார்களோ, எவ்வாறு செப்பனிட்டுச் சீரோடு வைத்திருந்தார்களோ அவ்வாறு வைத்திருக்க முடியாமல் இருக்கிறது என்பதை அவர்கள் எடுத்துக் காட்டினார்கள். நான் இதிலே முக்கியமாக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

நமது அறநிலைய சட்ட நிர்வாகத்தின்கீழே இதற்கு ஆகக்கூடிய செலவு பூராவையும் இப்பொழுது அரசு நிதியிலிருந்து கொடுத்துக் கொண்டிருக்கிறது. இந்த அறநிலைய நிர்வாகத்திலிருந்து வரும் பணத்தைக்கொண்டு அவற்றை நாம் ஈடு செய்கிறோம். நாம் ஏற்கனவே மக்களிடம் வாங்கும் வரியிலே இந்தச் செலவை வைத்துக்கொள்ள வேண்டுமே தவிர அறநிலையத்திலிருந்து வரும் வரும்படியை ஏற்கக்கூடாது. இதன்மூலம் பெரிய வருவாய் கிடைக்கும். எதற்காகச் சொல்கிறேன் என்றால், ஏற்கனவே மக்களிடம் ஒரு வரியை வாங்குகிறோம், இந்துக்களிடமிருந்து மட்டும் இரண்டாவதாக ஒரு வரியைத் தனியாக வாங்கும் நிலை இருக்கிறது.

இதை ஏன் சொல்கிறேன் என்றால், எத்தனையோ சீர் செய்யப் படாத கோயில்கள் இருக்கின்றன என்பதை ஒப்புக்கொள்கிறோம். உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால் மதுரையிலேயிருக்கும் பெரும் கோயிலைத் திருப்பணி செய்யத் தனிப்பட்ட ஒருவர் அங்கேயிருக்கும் தன்னுடைய செல்வாக்கை உபயோகித்து,

1972 மார்ச் 27] [திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி]

மக்களிடமிருந்து பணம் வசூல் செய்து, கோயில் திருப்பணியைச் செய்ய வேண்டியிருந்தது. இதைப்போன்ற நிலை தமிழகத்தில் இந்துக்கோயில்களுக்கு இருக்கிறது. மற்றச் சமயத்திலிருக்கும் கோயில்களுக்கும் இதே நிலை இருக்கிறதா என்பதைப் பார்க்க வேண்டும். இதற்காகத்தான் நான் சொல்கிறேன், இந்தப் பணத்தை ஏற்கனவே உள்ள நிதியிலிருந்து எடுக்காமல் இருந்தால் நிச்சயமாகப் பணம் கிடைக்கும். ஏராளமான நல்ல பணிகளைச் செய்து கோயில்களைச் சீர்திருத்தம் செய்ய அந்தப் பணம் நிச்சயமாக உதவும். எனவே அந்த முறையில் அரசு சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

குறிப்பிலே ஏராளமான நல்ல வேலைகளெல்லாம் அறநிலையத் துறையின் வருவாயிலிருந்து செய்வதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பல கல்லூரிகள், பள்ளிக்கூடங்கள், அனாதைகளுக்கு இடங்கள் போன்ற சிறந்த பணிகளுக்கெல்லாம் இந்த நிதியிலிருந்து செய் கிறோம். எனவே அதிகமாக நிதி கிடைத்தால் இன்னும் சிறப்புற இத்தகைய பல பணிகளைச் செய்யவும் வாய்ப்பு அதிகம் கிடைக்கும்.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, on a point of order. There is an exchange of seats between the Hon. Minister (Thiru S. Madhavan was sitting in Thiru Kovai Chezhiyan's seat) and Thiru Kovai Chezhiyan (who was seen sitting on the Treasury Bench where Thiru Madhavan used to sit)............I want to know when this has happened?

MR. CHAIRMAN (THIRU S. KANDAPPAN): There is no point of order.

திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி: இன்னொன்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இதற்கு முன்னால் நமது சமயத்தின் மாட்சிமையைப்பற்றிய கருத்துக்களை வெளிநாடுகளுக்குச் சென்று விவேகானந்தர் சொன்னார். அவர்கள் சென்ற நேரத்தில் இந்துக் கோயில்களில் இருந்து வரும் பணத்தில் எந்தச் செலவும் கொடுக்கப் படவில்லை. அதற்குப் பதிலாக மக்களிடமிருந்து கிடைத்த பிச்சைக் காசைக்கொண்டு வெளிநாடுகளுக்குச் சென்று மதத்தின் பெருமை யைச் சொன்னார்கள். இதுபோன்று மதத்தின் பெருமையை எடுத்துச் சொல்பவர்கள் யாராகயிருந்தாலும் அவர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பும் திட்டம் இருக்கிறதா, அதற்கு வேண்டிய பணம்

[திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி] [1972 மார்ச் 27

இருக்கிறதா என்றால் இல்லை என்றுதான் சொல்லவேண்டும். இருக்கும் கோயில்களையே செப்பனிட முடியாமல் இருக்கும்பொழுது பெரியவர்கள் மக்களிடம் கைநீட்டி பணம் வாங்கிச் செல்ல வேண்டியதாகயிருக்கிறது. ஆனால் இதேநேரத்தில் மற்ற சமயங்களில் அந்த நிலை இல்லை. இந்த நிலையிலிருந்து மாற்றத்திற்குத் தயாராக இருக்கும் நம்மை மாற்ற எதையும் சொல்லக்கூடிய அளவில் இருக்கும் எதையும் சிந்தித்துப் பார்த்து இதிலிருந்து வரும் வரும்படியைப் பார்க்க வேண்டும். எனக்கு முன் பேசியவர்கள் சொன்னார்கள்.

இதிலே பல தவறுகள் இருக்கின்றன என்று கூறப்பட்டது. இதற்கு அடிப்படைக் காரணம் ஏராளமான கோயில்களில் இருக்கக் கூடிய நிதியின் நிர்வாகப் பொறுப்பு சில தனிப்பட்டவர்களுடைய கையில் சிக்கிக் கொண்டிருப்பதன் காரணமாகத்தான் இந்தத் தவறுகள் நடைபெறுகின்றன. ஆகவே, இந்த நிதிவாயில்களை எல்லாம் தனிப்பட்டவர்கள் கையிலிருந்து எடுத்து அரசாங்கமே ஏற்று நல்ல முறையில் அதைச் செலவிட வேண்டிய திட்டத்தையும் அரசு செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் இந்த ஊழல்கள், தீங்குகள் எல்லாம் அடங்கிவிடும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

கோயில்களில் பத்தாயிரத்திற்குமேல் வரும்படி வரக்கூடிய கோயில்கள், பத்தாயிரத்திற்குக்கீழ் வரும்படி வரக்கூடிய கோயில்கள் என்று இருக்கின்றன. இதிலே சில கோயில்களுக்கு விளக்கு ஏற்றி வைக்கக்கூட முடியாத நிலைமை எல்லாம் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, எல்லாக் கோயில்களின் வருமானத்தையும் மொத்தமாக எடுத்துக்கொண்டு எந்தெந்தக் கோயில்களுக்கு எவ்வளவு எவ்வளவு கொடுக்க வேண்டுமென்று நிர்ணயித்து அந்த முறையில் செலவிடலாம். அதற்கும் அரசு வேண்டிய வசதிகளைச் செய்ய வேண்டும். கோயில்களில் சிலைகள் திருடுவது அதிகமாகிக் கொண்டிருக்கிறது. அதைத் தடுக்க தக்க நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டும்.

பால் பண்ணையைப் பற்றி ஒரு விஷயத்தைக் கூறி முடித்துக் கொள்கிறேன். நம்முடைய நாட்டில் அதிகமான அளவுக்குப் பால் உற்பத்தியானாலும்கூட மிஞ்சக்கூடிய பாலை ஒன்றும் செய்ய முடியாத நிலை இருக்கிறது. அப்படி மிஞ்சக்கூடிய பாலை பால் பவுடர் ஆக்குவதற்கு ஒரு மெஷின் வாங்கப் போவதாக அறிக்கையில்

1972 மார்ச் 27] [திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி]

கூறியிருக்கிறார்கள். ஒன்று போதாது. இரண்டு மெஷின்கள் வாங்கினால்தான் நல்ல முறையில் செயல்பட முடியும். அந்த முறையிலே அரசு உடனடியாக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டு மென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. மா. வே. நாராயணசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கொடுத்துள்ள பால் வழங்கு திட்டங்களுக்கான மானியக் கோரிக்கையை ஆதரித்து நான் ஒருசில கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நமது சென்னை மாநகரத்தை அடுத்துள்ள மாதவரத்திலே பால் பண்ணை இருக்கிறது. மாதவரம் பால் பண்ணை நீண்ட நெடு நாட்களாக சிறப்பான முறையில் இயங்குவதில்லை, லாபகரமான முறையில் இயங்குவதில்லை என்ற நிலை இருந்து வந்தது. ஆனால் இன்றையதினம் நம்முடைய கழக அரசு எடுத்துக்கொள்ளக்கூடிய பெருமுயற்சியின் விளைவாக லாபகரமாக இயங்கக்கூடிய நிலைமை உருப்பெற்று வருவதைப் பற்றி உள்ளபடியே அனைவரும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். அந்த அளவிலே இன்றையதினம் மாதவரம் பால் பண்ணை லாபகரமான நிலையில் நடைபெறத் தொடங்கி இருக்கிறது.

மாதவரம் பால் பண்ணையில் பணியாற்றக்கூடிய தொழிலாளர்கள் நீண்ட நெடு நாட்களாகத் தங்களுக்குப் போனஸ் வேண்டு மென்று கேட்டுக்கொண்டிருந்தார்கள். நீண்ட நாளைய கோரிக்கை அது. கடந்த பத்து, பதினொரு ஆண்டு காலமாக அந்தக் கோரிக்கை யினை மாதவரம் பால் பண்ணைத் தொழிலாளர்கள் வைத்துக்கொண் டிருந்தாலும்கூட இந்த ஆண்டுதான், நம்முடைய அரசு, நம்முடைய அறநிலையத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. கண்ணப்பன் அவர் களும், மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களும் மனதார அவர்களது கோரிக்கையை ஏற்று அந்தத் தொழிலாளர்களுக் கெல்லாம் 75 ரூபாய், 100 ரூபாய் என்ற அளவிலே போனசாக வழங்கினார்கள், எக்ஸ்க்ரேஷியா பேமென்ட் என்ற முறையிலே. போனஸ் சட்டப்படி அந்தத் தொழிலாளர்களுக்குப் போனஸ் அளித் துத்தான் திரவேண்டுமென்ற அவசியம் இல்லை. இந்த அரசு தொழிலாளர் நல அரசு. அரசாங்கத் துறையில் பணியாற்றக்கூடிய அந்தத் தொழிலாளர்களுக்கு நிச்சயமாக ஒரு தொகையை அளித்திட

[திரு. மா. வே. நாராயணசாமி] [1972 மார்ச் 27

வேண்டுமென்று விரும்பி, தொழிலாளர் கோரிக்கையை ஏற்று பொங்கல் பண்டிகையின்போது அந்தத் தொகை அந்தத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதற்காக அந்தத் தொழிலாளர்கள் சார்பில், நம்முடைய மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கும், தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் என்னுடைய இதயபூர்வமான நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அப்போது மாதவரம் பால் பண்ணைத் தொழிலாளர்களுக்கு மட்டுந்தான் அந்தத் தொகை வழங்கப்பட்டது. அண்மையில் தமிழகத்தில் உள்ள மற்ற இடங்களில் பால்வழங்கு துறையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கெல்லாம் அந்தத் தொகை அளிப்பதற்கான முறையில் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது என்ற செய்தி அறிந்து மகிழ்ச்சிகொள்ளுகிறேன். பால் வழங்கு துறையில் பணியாற்றக் கூடிய ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் இந்த அரசை வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நேரத்தில் அந்தத் தொழிலாளர்களுடைய நீண்ட நாளைய கோரிக்கையைக்கூட அமைச்சர் அவர்களிடத்தில் முறைப்படி சொல்லுவது நல்லது என்று கருதுகிறேன். ஏற்கனவே சொல்லி இருக்கிறேன், இருந்தாலும் கூறுகிறேன்.

மாதவரம் பால் பண்ணையில் ஏறத்தாழ 400 தொழிலாளர்கள் மஜ்தூர்கள் என்ற பெயரில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் நிரந்தரத் தொழிலாளர்கள் போல்தான் வேலை செய்கிறார்கள். ஆனால் அவர்கள் நிரந்தரமாக்கப்படவில்லை. அவர்களை எல்லாம் நிரந்தரமாக்குவது தேவையான ஒன்று என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, பார்ட் டைம் சேல்ஸ் அசிஸ்டென்ட் என்ற பெயரில் ஆங்காங்கு சென்னை மாநகரத்திலே பல்வேறு இடங்களில் உள்ள டெப்போக்களில் ஏராளமான தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள். அவர்கள் காண்டிராக்ட் அடிப்படையில் வேலை செய்கிறார்கள். பகுதி நேர விற்பனையாளர்கள் என்று அழைக்கப்படுகின்ற அந்தத் தொழிலாளர்கள் 100 ரூபாய்க்குக் குறைந்த அளவு ஊதியம் பெறும் நிலையில்தான் இருக்கிறார்கள். அவர்களுடைய நியாயமான கோரிக்கையை இந்த அரசு ஏற்குமென்ற நம்பிக்கையில் இருக்கிறார்கள்.

1972 மார்ச் 27] [திரு. மா. வே. நாராயணசாமி]

அந்த பார்ட் டைம் சேல்ஸ் அசிஸ்டெண்டை நிரந்தரத் தொழிலாளர்களாக நம்முடைய அரசு ஆக்கிட வேண்டுமென்று இந்த நேரத்தில் வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன்.

அதோடு மட்டுமல்லாமல் சில பகுதிகளில் சென்னையில் இருக்கும் பார்ட் டைம் அசிஸ்டண்ட் கட்டாயமாக நெய் விற்பனை செய்ய வேண்டுமென்று வற்புறுத்தப்படுகிறார்கள். அதனுடைய விளைவு, நெய் வாங்க பொதுமக்கள் முன்வராத காரணத்தால் அதைத் தங்கள் இல்லங்களுக்கு வைத்துக்கொண்டு அதற்குரிய பணத்தை நம்முடைய அதிகாரிகளிடத்தில் தரத்தக்க நிலைமை ஏற்பட்டு விடுகிறது. அதுபோன்ற குறைகளைப் போக்கிட வேண்டுமென்று இந்த நேரத்தில் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அயனாவரம் பால் பண்ணை கடந்த 40 ஆண்டுக் காலமாக சென்னை மாநகரில் கூட்டுறவுத் துறையில் இயங்கி வரக்கூடிய அருமையான நிர்வாகமானது இன்று மிகவும் பரிதாபகரமான நிலைமையில் இருக்கிறது. அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய முன்வந்திருக்கிறார்கள். அதை விரிவுபடுத்தி மருத்துவ மனைகளுக்கெல்லாம் கூட்டுறவுப் பண்ணையில் இருந்து பால் விநியோகம் செய்ய ஏற்பாடு செய்ய முன்வரவேண்டும். அங்குள்ள ஆயிரக்கணக்கான தொழிலாளர்களின் கோரிக்கைகள் நீண்ட நாளைய கோரிக்கைகள். அவற்றை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும். மாதவரம் பால் பண்ணையில் இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்குள்ள குடியிருப்பு காலனியில் பல வசதிகளைச் செய்ய வேண்டும். அங்குள்ள சாலைகளை நல்ல முறையில் அபிவிருத்தி செய்ய வேண்டுமென்ற வேண்டுகோளை விடுத்து விடை பெறுகிறேன். வணக்கம்.

<u>திரு. நா. வெ. குருசாமி</u> : தலைவர் அவர்களே, அறநிலையத் துறை மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

மதுரை மீனாட்சி அம்மன் கோயிலைச் சுற்றிக் கடைகள் வைக்கப் போவதாக அறிகிறேன். கோயிலைச் சுற்றியுள்ள இடம் நந்தவனம் என்ற முறையிலே இருக்கிறது. அந்தக் கோயிலுக்கு ஏற்கனவே அதிகமான வருமானம் வருகிறது. வெளிநாட்டவர்கள் அந்தக் கோயிலைப் பார்க்க வருகிறார்கள். அந்தக் கோயிலைச் சுற்றிக் கடைகளைக் கட்டினால் கோயிலின் அழகு பாதிக்கப்படும் என்று இந்த நேரத்தில் வலியுறுத்திக் கூறக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

128-12—29

மதுரையிலுள்ள பல சங்கங்கள் கோயிலைச் சுற்றிக் கடைகள் கட்டக்கூடாது என்று தீர்மானம் போட்டு அரசுக்கு அனுப்பி இருப்பதாகத் தெரிகிறது. நமது கல்வி அமைச்சர் அவர்கள் முன்பு அறநிலையத் துறை அமைச்சராகவும் இருந்தபோது கடைகள் கட்டக்கூடாது என்று பலர் அவரிடம் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சி ஆட்சியிலிருக்கும்போது திரு. காமராஜ் அவர்களிடமும் இது குறித்துத் தெரிவிக்கப்பட்டது. அவர்கள், அது மாதிரி கடைகள் கட்டுவதாக இல்லையென்று கூறியதாகத் தெரிகிறது. ஆகவே, அங்கு கடைகள் கட்டுவதை நிறுத்தவேண்டும். அந்தக் கோயிலின் அழகு கெடாது பாதுகாக்க வேண்டுமென்று 1883-ம் வருடமே அதைச் சுற்றி ஒன்றும் கட்டக்கூடாது என்று தீர்மானம் போட்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தக் கோவிலைச் சுற்றிக் கடைகளைக் கட்ட வேண்டாமென்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் ஐம்புலிபுத்தூர் கதலி நரசிங்கபெருமாள் கோவில் என்று ஒரு கோவில் இருக்கிறது. காலையில் ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும்போது அங்கு திருப்பணிக் கமிட்டி சரிவர வேலை செய்யாததால் திருப்பணி வேலை தடைப்பட்டதாகக் கூறினார்கள். அந்தக் கோவிலுக்கு வருமானம் இல்லை. ஆகவே திருப்பணிக் குழுவிற்குக்கூட ஆள் கிடைப்பது அரிதாகிவிட்டது. இப்போது ரூ. 40,000 சாங்ஷன் செய்திருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்தப் பணம் முழுமையும் அரசாங்கத்திலிருந்து போட்டு அந்தக் கோவிலைச் சீர்படுத்தித் தரவேண்டும். 1802-ம் ஆண்டில் அரசு மூலம் மானியமாக ரூ. 948 கொடுத்து வருகிறார்கள். ஆண்டுக்கு ஒரு முறை சித்திரை மாதம் அங்கு பத்து நாட்கள் திருவிழா நடைபெறுகிறது. இந்த 948 ரூபாயில்தான் அந்தத் திருவிழாவையும் நடத்தவேண்டியிருக்கிறது. ஆகவே தற்போதுள்ள சூழ்நிலையை அனுசரித்து அந்தக் கோவிலுக்குச் சற்று அதிகப் பணம் ஒதுக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, அறநிலைய அமைச்சர் அவர்களால் பேரவை முன் வைக்கப்பட்டிருக்கும் மானியக் கோரிக்கையை ஆதரித்து என் கருத்துக்கள் சிலவற்றினைக் கூற விரும்புகிறேன்.

நம் அறநிலையத் துறை நிர்வாகம் சிறப்பான முறையில் நடைபெற்றுவருவதை தமிழகத்தில் உள்ள பெரும் பகுதி மக்கள் பாராட்டி, போற்றி வருகிறார்கள். 1967-ல் கழகம் தேர்தலுக்கு நின்ற சமயத்தில் கழக அமைச்சர்கள் வந்துவிட்டால் கோவில்களுக்குப் பாதகம் ஏற்படும் என்ற ஐயப்பாடு மாற்றுக் கட்சியினரால் தமிழக மக்களிடம் எழுப்பிவிடப்பட்டது. ஆனால் கழக அரசு வந்த பிறகு ஓடாத திருவாரூர் தேர் ஓடிற்று. பழைய காலங்களில் வௌவால்கள், பல்லிகள் போன்ற அநாகரீகப் பிராணிகளும், பட்சிகளும் துர்நாற்றமும் கோவில்களில் இருந்து வந்த நிலைமையை மாற்றி அமைத்து இன்றையதினம் நல்லமுறையில் கோவில்கள் பழுது பார்க்கப்பட்டு சீரும் சிறப்பும் பெற்று விளங்குகின்றன.

திரு. நா. வெ. குருசாமி : வௌவால்கள் இப்போதும் இருக்கத்தான் செய்கின்றன.

திரு. காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி : அது தனியார் கோவில்களாக இருக்கலாம். அரசாங்கப் பொறுப்பில் உள்ள கோவில்களில் அப்படிப்பட்ட நிலைமை இருந்தால் அமைச்சர் அவர்களுக்கோ அல்லது அறநிலைய இலாகா அதிகாரிகளுக்கோ எழுதி அனுப்பினால் உடனடியாக அவர்கள் அதைக் கவனிப்பார்கள் என்ற உறுதியை நான் அரசாங்கச் சார்பில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : எழுதியனுப்பினால் அமைச்சரோ அல்லது அதிகாரிகளோ வௌவால்களைப் பிடித்து மாற்றிவிடுவார்களா? வௌவால் பிடிக்கிற வேலைதான் அமைச்சர்களின் வேலையா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் கோவில்களுக்கு உள்ளே புகுந்த வௌவால்களை விரட்டுகிற வேலையில் அவை விடுபட்டிருந்தால் ஒழுங்காக விரட்டுவோம்.

திரு. காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி : பழுதடைந்துகிடந்த கோவில்கள் புதுப்பிக்கப்பட்டிருக்கின்றன என்பதைத்தான் சொல்கிறேன். வௌவால் பிடிக்கும் தொழிலைப் பற்றிச் சொல்லவில்லை.

அம்மையார் அவர்கள் அடிக்கடி கோயில்களுக்குச் சென்று வரக் கூடியவர். அவர்கள் மனச்சாட்சிப்படி இதை ஒப்புக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். ஐந்தாண்டுகளுக்கு முன்பு இருந்ததைவிட இப்போது பல கோயில்கள் புதுப்பிக்கப்பட்டு நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருவதை எல்லோரும் அறிவார்கள்.

இன்னும் கோவில்களில் சில பழமையான கொள்கைகளை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அறங்காவலர்களை நியமிப்பதில் முன்பு பத்து ஆண்டுகள், இருபது ஆண்டுகள் என்று நியமித்து வந்தார்கள். நான் சொல்வது என்னவென்றால் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை அறங்காவலர்கள் மாற்றியமைக்கப்பட வேண்டும். அப்போதுதான் திறமையான நிர்வாகம் ஏற்பட வாய்ப்பாக இருக்கும்.

மடாதிபதிகளிடத்தில் லட்சோபலட்சம் ரூபாய் பெறுமான சொத்துக்கள் உள்ளன. மணலி ஐயா அவர்கள் அதைப் பற்றி மிகத் தெளிவாகக் குறிப்பிட்டார்கள். பழைய காலத்து ஜமீன்தார்களைப் போல் அவர்கள் வாழ்ந்து வருகிறார்கள். இன்றும் பாமர மக்கள், உழவர்கள் அவர்கள் கால்களில்விழுந்து வணங்கக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். ஆகவே நான் சொல்வது என்னவெனில், இத்தகைய மடாதிபதிகளின் நிர்வாகம், சொத்துக்கள் அனைத்தையும் அரசு தேசியமயமாக்கவேண்டும். சில கோவில்கள் எக்ஸெம்ஷனின்கீழ் வருகின்றன. எல்லாக் கோவில்களையும் அறநிலையத் துறையின்கீழ் கொண்டுவரவேண்டும். எங்கள் முதுகுளத்தூர் பகுதி எல்லாத் துறைகளைப் போலவே இத்துறையிலும் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. எங்கள் பகுதியில் மண்டலமாணிக்கம் கோவில், கமுதி சுப்பிரமணிய சுவாமி கோவில், ஈஸ்வரன் கோவில் போன்ற கோவில்கள் உள்ளன. அவற்றைப் புதுப்பிக்க மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு ஒரு ஆண்டு ஆகியும்கூட இன்னும் அனுமதி கிடைக்கப் பெறவில்லை. ஆகவே அந்தக் கோவில்களைப் புதுப்பித்து நல்ல கட்டடங்கள் கட்டிக் கொடுத்து அவை சீரும் சிறப்புடையதுமாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன், வணக்கம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவர் அவர்களே, இந்த முக்கியமான மானியக் கோரிக்கையின்மீது நான் என் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

1972 மார்ச் 27] [திருமதி த. ந. அனந்தநாயகி]

நான் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானத்தில் இந்த அறநிலையங்கள் நிர்வாகம் பூராவையும் ஒரு ஹிந்து போர்ட் என்று ஒரு தனி போர்ட் ஏற்படுத்தி அதன் கையில் ஒப்படைக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறேன். காரணம், முஸ்லீம்களின் சொத்துக்களுக்கு வாக்ஃப் போர்ட் என்றிருக்கிறது. அதுதான் அந்தச் சொத்துக்களை நிர்வகித்து வருகிறது. அதேபோல் கிருஸ்துவர்களுக்கு அவர்களின் அந்தச் சொத்துக்கள் அரசாங்கத்தின் பராமரிப்பில் வரவில்லை. ஆனால் இந்துக்களின் அறநிலையங்களில் மட்டும் இன்று அரசு தலையிடுவதினால்தான் காலணாகூட செலவழிக்காத மணலி கந்தசாமி ஐயா போன்றவர்கள் கோவில்களைப் பற்றி அவதூறாகப் பேசுகிறார்கள்.

அவரவர்களுக்கு சில சில நம்பிக்கைகள் உண்டு. இந்து மதத்தில் நம்பிக்கை உள்ளவர்கள் இருக்கிறார்கள். முஸ்லீம் மதத்தில் நம்பிக்கை உள்ளவர்கள் இருக்கிறார்கள். கிருஸ்துவ மதத்தில் நம்பிக்கை உடையவர்கள் இருக்கிறார்கள். அதேபோன்று கம்யூனிஸ்ட் மதத்தில் நம்பிக்கையுடையவர்கள் இருக்கிறார்கள். ஆகவே, அவரவர்கள் அவரவர்களது நம்பிக்கையில் பற்றுக்கொண்டவர்களாக இருக்கிறார்கள். அரசாங்கத்தின் கைகளில் இருப்பதினால்தான் பற்றில்லாதவர்கள், பொறுப்பில்லாமல் அவர்கள் இஷ்டப்படி பேசுவது என்ற நிலை இருக்கிறது. அந்நிலை மாறவேண்டுமென்றால் ஒரு இந்து போர்ட் என்று அமைத்து அதன் கையில் இந்த அறநிலையங்களின் நிர்வாகத்தை ஒப்படைக்கவேண்டும். கோவில்களில் பல பெருச்சாளிகள் இருப்பதாகப் பேசினார்கள். எல்லாத் துறைகளிலும் தான் பெருச்சாளிகள் இருக்கின்றன. நிர்வாகத் திறமை கெட்டுவிட்டால் பெருச்சாளிகள் பெருகிவிடும். ஆகவே, குற்றம் சொல்வது பெரிதல்ல. நிர்வாகத்தைச் செம்மைப்படுத்தி எது எதைச் செய்யவேண்டுமோ அவற்றைச் செய்யவேண்டும்.

ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்று ஔவை சொல்லிவிட்டுச் சென்றார்கள். அவர்களது அறிவுரையை ஏற்பதா அல்லது மணலி ஐயாவின் தெளிவின்மையை ஏற்பதா என்பது எனக்குப் புரியவில்லை. ஆலயத்திற்குச் சென்று தொழுபவர்கள், ஆலயத்தில் நம்பிக்கை கொண்டவர்கள் செலுத்தக்கூடிய காணிக்கைகளை எல்லாம் கோவில்களுக்கே செலவிட அரசு முன்வரவேண்டும். 10,865 அறநிலையங்கள் இருக்கின்றன. அதில் 561 கோவில்கள்தான் பணக்காரக் கோவில்கள். மற்றவை பாதுகாக்க ஆள் இல்லாமல் பழுதடைந்து

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1972 மார்ச் 27

கிடக்கின்றன. புதிதாகக் கோவில்களைக் கட்ட வேண்டாம். கட்டப் பட்டுள்ள கோவில்களைக்கூடப் பராமரிக்க இந்த இலாகா அக்கறை காட்டவில்லை என்று சொன்னால் இந்த ஐந்து கோடி ரூபாய் அதற் காகத்தான் தரப்படுகிறது. அப்படியிருக்க அதற்கு ஏன் முக்கியத் துவம் தரப்படவில்லை?

கல்விக்குச் செலவழிக்கிறோம், வைத்தியத்திற்குச் செலவழிக் கிறோம் என்று சொல்வார்கள். வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால் ஆலயங்களைச் செப்பனிட, ஆலயத் திருப்பணிகளுக்காக, சமு தாயம் இறைவழிபாடுடன் ஒழுக்கமாக வாழ்வதற்காக வழி காண் பதற்காகத்தான் அறநிலையங்களுக்கு சொத்துக்களை எழுதிவைத் துள்ளார்கள். ஆகையால் அந்தச் சொத்துக்கள் அதற்குச் செலவிடப் படவேண்டும். அதற்குத்தான் முதல் இடம் அளிக்கப்பட வேண்டுமே தவிர அப்புறம்தான் செக்குலர் ட்யூட்டி, பள்ளிக்கூடங்கள் கட்டுவது, வைத்தியம் பார்ப்பது இவையெல்லாம்.

நமது வரவு செலவுத் திட்டத்தில் 397 கோடி ரூபாய் வருமானம் வருகிறது. அதைக் கோவில் திருப்பணிக்காக செலவிட்டுவிட முடியுமா? இந்தப் பணத்தில் இருந்து அது முடியாது. அப்படி இந்துக்களின் கோவில்களுக்குச் செலவழித்தால், மசூதியை ரிப்பேர் செய், மாதா கோவிலை ரிப்பேர் செய் என்று சொல்வார்கள். ஆகவே கோவில் சொத்துக்களின் வருமானத்தில் இருந்துதான் கோவில் களின் வேலைகளுக்குச் செலவழிக்கிறோம். வருகிற ஐந்து கோடி ரூபாயில் கோவில்களுக்குச் செலவழித்தது போக மிஞ்சியிருந்தால் தான் மற்றக் காரியங்களுக்குச் செலவிடலாமே தவிர வேறு அல்ல. தாமல் கோவில் விரிசல் பெற்றிருக்கிறது. இப்படிப் பாடல் பெற்ற பல ஸ்தலங்கள் ஆள் இல்லாமல் பாழடைந்து கிடக்கின்றன.

மணலி ஐயா அவர்கள் சொன்னார்கள் பெருச்சாளிகள் இருப்பதாக. அதைத்தான் நாம் கண்டுபிடிக்க வேண்டும். பெருச் சாளி இருக்கிறது என்று சொல்லிவிட்டுப் போவதால் பிரயோசனம் இல்லை.

அறநிலையங்களில் வரும் வருமானத்திலிருந்து சமயம்பற்றிப் பிரச்சாரத்தைச் செய்வதற்கு முக்கியமான இடத்தை இந்த இலாகா அளிக்கவேண்டும். அமெரிக்கா, கானடா போன்ற மேலைநாடுகளி லிருந்து இங்கே வந்து கிருஸ்துவ மதப்பிரச்சாரத்திற்கு எவ்வளவு

1972 மார்ச் 27] [திருமதி த. ந. அனந்தநாயகி]

பணத்தை செலவு செய்கிறார்கள் என்பதைப் பார்க்கிறோம். ஆனால் நம்முடைய ஹிந்து மதப்பிரசாரத்திற்காக இவ்வளவு பணம் செலவழிப்பது கிடையாது. அதிலிருந்து வருகிற வருமானத்தை நாம் வேறு செகுலர் டியூடிஸ்ஸுக்கு டைவர்ஸ் செய்து கொள்கிறோம். இதை ஹிந்து மக்கள் மிகவும் வருத்தத்தோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

105 கோவில்களில் இன்று திருப்பணி வேலைகள் நடக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தமிழ்நாட்டில் ஆயிரம் ஆயிரம் கோவில்கள் இருக்கின்றன. இது யானைப் பசிக்கு சோளப்பொறி போட்டது மாதிரி இருக்கிறது. 5 கோடி வருமானம் வருகிற அறநிலையத்துறையில் 4 லட்சம் மட்டும் அறப்பணிக்காக ஒதுக்கியிருக்கிறோம். ஆலயத் திருப்பணிக்காக ஏன் இதிலிருந்து பணம் ஒதுக்கக்கூடாது.

பணம் இல்லாத கோவில்கள் பல பாழடைந்த நிலையில் இருக்கின்றன. அவற்றைப் புதுப்பித்துச் சிறப்பாக வைத்தால் அங்குள்ள பொதுமக்கள் அங்கே போய் வழிபடுவதற்கு வாய்ப்பாக இருக்கும். அந்தக் காலத்தில் ஒரு பழமொழி இருக்கிறது. கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்று சொல்லுவார்கள். அதில் எவ்வளவோ கருத்துக்கள் இருக்கலாம். அதை மதப்பிரசாரகர்கள் ஆணித்தரமாக, ஆழமாக மக்கள் புரிந்து கொள்கிற தன்மையில் விளக்குவார்கள். அதையும் புரிந்துகொள்ளத் தயாராக இல்லை என்றும் சிலர் இருப்பார்கள். சமயப் பிரசாரத்திற்காக இன்னும் அதிகமான பணம் ஒதுக்கித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருச்செங்கோட்டில் இருந்த நல்ல மண்டபத்தைப் புதுப்பிக்கிறோம் என்று எடுத்தார்கள். மேலே எந்தவிதப் பாதுகாப்பும் இல்லாமல் திறந்து கிடந்தபடி இப்போது அந்த மண்டபம் இருக்கிறது. பொதுவாக திருப்பணி செய்கிறபோது எந்த நோக்கத்தோடு செய்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். அறங்காவலர்களாக வருகிறவர்கள் அத்தனை பேரும் பக்திமான்கள், அறத்தில் சிறந்தவர்கள் என்று சொல்லிவிட முடியாது. இன்று இருக்கும் நிலையில் யார் யாரோ அறங்காவலர்களாக வருகிறார்கள். அறத்தில் நம்பிக்கை அற்றவர்கள் அறங்காவலர்களாக வருகிறார்கள். உண்மையில் திருப்பணி செய்யவேண்டுமென்ற நோக்கத்தோடு எடுக்கிறார்களா அல்லது வேறு ஏதாவது நோக்கத்தோடு எடுக்கிறார்களா என்று சந்தேகிக்க

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1972 மார்ச் 27

வேண்டியிருக்கிறது. பொதுவாக திருப்பணி வேலைகள் எடுக்கிற போது, உண்மையாகவே திருப்பணி தேவையா என்று பார்த்து எடுக்கவேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

சமீபத்தில் சேலத்தில் திருவிழா நடந்தது. எத்தனை மக்கள் செத்தார்கள்? காரணம் என்ன? கோவிலுக்குப் பக்கத்திலே இருந்த கட்டடம் பழுதுபார்க்கப்படாமல் இருந்தது. கோவில் இடம்தான் என்று சிலர் சொல்லுகிறார்கள். தனியார் இடம் என்று சிலர் சொல்லுகிறார்கள்.

திரு. எஸ். ஆறுமுகம் : அந்தக் கட்டடம் தனியாரின் ஒரு வீடு. அந்த வீட்டிலே அங்கே இருக்கக்கூடியவர்களும், உறவினர்களும் பல பேர் மாடி மீது ஏறி நின்றிருந்ததன் காரணமாக இடிந்து விழுந்தது. கோவில் நிலம் அல்ல.

திருமதி த. ந. அனந்தநாயகி : தனியார் வீடாக இருந்தால் என்ன, பந்தோபஸ்து கொடுத்திருந்தால் பாதுகாத்து இருக்கலாம் அல்லவா? போலீஸ்காரர்களைப் போட்டு, பாழடைந்த வீடு ஏறு தீர்கள் என்று சொல்லியிருந்தால் பல உயிர்களைப் பாதுகாத்து இருக்கலாம். ஒரு திருவிழா நடக்கிறது என்று தெரிகிறபோது இப்படிப்பட்ட இடங்களில் போலீஸ்காரர்களைப் போட்டு, அந்த மக்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கலாம். ஒரு சாதாரண பொதுக் கூட்டத்திற்கு—25 பேர் இருக்கிற ஒரு பொதுக்கூட்டத்திற்கு அரை டஜன் போலீஸ்காரர்களை பந்தோபஸ்து என்று போடுகிறார்கள். பெரிய திருவிழா நடக்கிறபோது காவல் இல்லை. அவர்களுடைய உயிரைப் பாதுகாக்க அரசு கடமைப்பட்டிருக்கிறது. அந்தக் கட்டடத்தில் ஏறி 4 பெண்கள் இறந்து போனார்கள் என்று கேட்கிறபோது உண்மையிலேயே வருந்தவேண்டியிருக்கிறது.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, ஒரு கிளாரிபிகேஷன். அம்மையார் அவர்கள் ஆட்சியில் திருவிழா நடந்தபோது போலீஸ் காரர்களை ஒவ்வொரு பாழடைந்த வீட்டிற்கும் காவல் போட்டு வீடு இடிந்து விழாமல் பார்த்துக்கொண்டார்களா என்பதைச் சொல்ல முடியுமா?

1972 மார்ச் 27]

திருமதி த. ந. அனந்தநாயகி : அம்மையார் ஆட்சி நடத்தவில்லை. இந்தக் கேள்விக்கு இடமேயில்லை. (சிரிப்பு) அவர்கள் வேண்டுமானால் என்னை அறநிலைய அமைச்சராகப் போடட்டும். நான் எப்படி ஆட்சி நடத்துகிறேன் என்று பாருங்கள்.

திரு. கு. காமாட்சி : அம்மையார் அவர்கள் அறநிலைய அமைச்சராகப் போடுங்கள், பின்னர் எப்படி ஆட்சி செய்கிறேன் என்று பாருங்கள் என்று சொன்னார்கள். அம்மையார் அவர்கள் எங்கள் கட்சிக்கு வருவதற்குத் தயாராக இருக்கிறார்களா?

திருமதி த. ந. அனந்தநாயகி : உங்கள் கட்சிக்கு வந்தால்தான் அமைச்சர் வேலை கிடைக்குமா, இல்லையென்றால் கிடைக்காதா?

திரு. கு. காமாட்சி : தற்போது எங்கள் கட்சிக்கு வந்தால்தான் அமைச்சர் பதவி கிடைக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அது உறுதியா என்று கேட்கலாம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : அப்புறம் வாங்கிக்கொள்கிறேன். அது உறுதியாக இருக்கும். இப்போது ஆட்டம் கொடுக்கும்.

சொத்துக்கள் குவிந்து கிடக்கின்றன என்று சொல்லுகிறார்கள். நிலங்களை எடுத்து நிலம் இல்லாதவர்களுக்குப் பட்டா வழங்க வேண்டுமென்று சொன்னார்கள். அவன் பட்டா வாங்கிக்கொண்டு போய் பிள்ளை, பேரனுக்கு எழுதிக்கொண்டு போவதை விட, அங்கேயே உழைக்கும் உழவர்களுக்கு என்ன பாதுகாப்பு கொடுக்க முடியுமோ அதைக் கொடுத்து, அந்த விவசாயிகளை பர்மனென்ட் டெனன்சி என்று வைத்து, ஒழுங்கான முறையில் குத்தகை அளக்கச் சொல்லலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டு வரவேண்டுமென்று மத்திய அரசு மாநில அரசுகள் எல்லாவற்றிற்கும் சுற்றறிக்கை விட்டிருக்கிறார்கள். அப்படி வருகிறபோது, குறைந்த அளவு நிலப்பரப்பை தனியார் வைத்திருக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள். இம்மாதிரியான கோவில்களுக்கு இவ்வளவு நிலங்கள் இருக்கவேண்டுமா? மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் எண்ணம் என்ன?

[1972 மார்ச் 27

திருமதி த. ந. அனந்தநாயகி : மாண்புமிகு உறுப்பினர் கூறியது எல்லா மதத்தினருக்குமா அல்லது ஹிந்து மதத்திற்கு மட்டும் வருமா?

திரு. கே. டி. கே. தங்கமணி : முஸ்லீம் மதமாக இருந்தாலும் சரி, கிருஸ்துவ மதமாக இருந்தாலும் சரி, ஹிந்து மதமாக இருந்தாலும் சரி எல்லா மதத்திற்கும் தான்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சமயப்பற்று இல்லாதவர்களுக்கு வேண்டுமானல் அது சரியாகத் தோன்றலாம். "ரிலிஜியன் ஈஸ் எ ஓபியம்" என்று நினைப்பவர்களுக்கு அப்படித் தோன்றலாம். எனக்குச் சரி என்று தோன்றவில்லை. கடவுள், மதப்பற்று இருந்தால் தவறு இல்லை. அவர்கள் ஒழுங்காக தனியாருக்கு குத்தகை அளப்பது போல், ஆண்டவனுக்கும் அளக்கலாம். மனிதன் கையில் இருந்தால் உச்சவரம்பு வைக்கலாம். ஆண்டவன் கோவிலுக்கு உள்ளவற்றிற்கு எதற்கு உச்சவரம்பு. ஆண்டவனுக்கு அளக்கிறேம் என்று சொல்லி அவன் ஒழுங்காக அளப்பான்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பல இடங்களில் கோவிலுக்கு குத்தகை அளப்பவர்கள் சரியாக அளக்காமல் இருந்தபோது ஏன் குத்தகை அளக்கவில்லை என்று நானே கேட்டிருக்கிறேன். அதற்கு அவர்கள், நாங்கள் என்ன கடவுளுக்கா அளக்கிறேம், அங்கே இருப்பவர்களுக்குத்தானே அளக்கிறேம். அங்கேயிருக்கிறவர்கள் சாப்பிடுகிறுர்கள். ஆகவே, அளக்கவில்லை என்று சொல்லுகிறுர்கள். கடவுளுக்குப் போகவில்லை, அங்கே உள்ளவர்களுக்குத்தான் குத்தகை போகிறது என்ற மனப்பான்மை அங்கே உள்ள மக்களுக்கு இருக்கிறது. ஆகவே, அந்த நிலங்களேயே அந்த மக்களுக்கு சொந்தமாக்கிவிடுவதற்கு நில உச்சவரம்புச் சட்டம் வருவது நல்லதல்லவா?

திருமதி த. ந. அனந்தநாயகி : கோவிலுக்கு குத்தகை செலுத்து கிறேம் என்ற உணர்வை அவர்கள் மனதில் நாம் ஏற்படுத்தவேண்டும். அப்போது தான் அவன் ஒழுங்காக குத்தகை செலுத்துவான். பெருச் சாளிகள் ஆங்காங்கே இருப்பதால், கோவில் சொத்தை சாப்பிட்டுக் கொண்டிருப்பதால் தான் இப்படி இருக்கிறது. நிர்வாகம் கட்டுப் படுத்தப்படாமல் இருக்கிற காரணத்தால் தான் அவர்களுக்கு

1972 மார்ச் 27] [திருமதி த. ந. அனந்தநாயகி]

நம்பிக்கை இல்லாமல் போகிறது. அந்த நினைப்பை வூட்டுகிற வகையில், அறநிலைய இலாகா நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு அவர்களிடத்திலே சென்று கோவில்களில் நேம, அனுஷ்டானங்கள் செய்யவேண்டியிருக்கிறது, உற்சவங்கள் செய்ய வேண்டியிருக்கிறது, அதற்கான பணம் தேவைப்படுகிறது என்று சொல்லி அவர்களிடையே பிரசாரம் செய்து, அந்த மக்கள் மனதில் கோவிலுக்கு குத்தகை அளக்கவேண்டுமென்ற உணர்வை ஏற்படுத்தவேண்டும்.

பல ஆண்டுகாலமாக கோவில் நிலம் என்று சொல்லாமலே தாங்களே அனுபவித்துக்கொண்டு வருபவர்களை கண்டுபிடித்து, அந்த நிலங்களை மீட்டு கோவில்களில் நன்ருக பூஜை நடத்துவதற்கு வழி வகை செய்யவேண்டும். சாமிப்பற்றே இல்லாமல் துர்ப்பிரச்சாரம் செய்வது வருந்தத்தக்கது. கண்டிக்கத்தக்கது. அதைத் தவிர்ப்பதற் காக அறநிலைய இலாகா நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

மதுரைக்கோவில் நந்தவனத்தைப் பற்றிச் சொன்ஞர்கள். மதுரைக் கோவிலுக்கு நந்தவனம் மிகமிக அவசியம். சென்னை நகரத்தில் ஐலண்ட் கிரௌண்ட் சுவாசப் பையாக இருக்கவேண்டு மென்று சொல்லுகிருர்கள். நெருக்கடி மிகுந்த மீனுட்சி கோவிலுக்கு சுவாசப் பை போல் இருக்கிறது இந்த நந்தவனம். அழகான மலரை உற்பத்தி செய்து ஆண்டவனுக்கு பூஜை செய்வதற்காக ஏற்படுத்தப் பட்ட இடம் அது. அதிலே கொண்டு போய் கடைகளைக் கட்டுவது நியாயம் அல்ல. மதுரை மீனுட்சி கோவிலுக்கு வருமானத்திற்கு ஒன்றும் பஞ்சம் இல்லை. ஏறத்தாழ 16 லட்சம் ரூபாய் வருமானம் வருகிறது. சாதாரண மக்களிடையே எந்தக்காலத்திலும் 16 லட்சம் ரூபாய் வசூல் செய்து விட முடியாது. ஒரு மீனுட்சிக்கு இப்படி 16 லட்சம் வருகிறது என்று சொன்ஞல், இப்படி ஆங்காங்கே உள்ள கோவில்களை புதுப்பித்து, ஆங்காங்கே உள்ள மக்கள் வழிபடுவதற் கான வகை செய்தால் பல லட்சம் வருமானம் வரும்.

கோவிலின் உள்ளேயே இப்போதே கடைகள் இருக்கின்றன. எதற்காக இன்னும் அதிகமான கடைகள்? இப்போது வருமானம் 16 லட்சம் வருகிறது. அதிலே 11 லட்சத்தை கோவிலுக்கு செல வழித்து விட்டு, 5 லட்சத்தை உங்கள் இஷ்டத்திற்கு செலவு செய் கிறீர்கள். அந்தக்காலத்திலே சைவ செட்டியார் ஒருவர் இடத்தை

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1972 மார்ச் 27

யும் கொடுத்து, பல லட்சக்கணக்கான ரூபாயையும் கொடுத்து மீனட்சி கோவிலுக்கு நந்தவனம் ஏற்படுத்தியிருக்கிருர். அவர்கள் கொடுத்த அந்த இடத்தில் கடைகள் கட்டுவது நியாயம் அல்ல. அந்த நந்தவனம் மிகமிக அவசியம். கோவிலுக்கு அழகு, மதில் தான். வருமானம் என்ற எண்ணத்தில் பார்க்காமல் கோவில் என்ற கண்ணேட்டத்தோடு பார்ப்பீர்களானல் நல்லது. அந்த நந்தவனத்தை பாழாக்கும் திட்டத்தை கைவிடவேண்டுமென்று நான் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக பார்க்கப்போனல் இன்றைக்கு கோவில்களுக்கு அறங்காவலர்கள் போடுகிருர்கள். அவர்கள் கடைகளை ஏலத்திற்கு விடுவதில்லை. இஷ்டப்படி யாருக்கு வேண்டுமோ அவர்களுக்கு கொடுக்கிருர்கள். அதைக் கண்டிப்பாக நிறுத்தவேண்டும்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : கட்டப்படுகிற கடைகள் ஏலத்திற்குத்தான் விடப்படுகின்றன. எங்கே தவறுகள் நடந்திருக்கின்றன என்பதை உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்ட வேண்டும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : முதலில் கட்டியதும் ஏலத்தில் விடுவதில்லை. யார் யாருக்கோ கொடுத்துவிடுகிருர்கள். அப்புறம் தான் ஏலத்தில் விடுகிருர்கள். அம்மாதிரி சில இடங்களில் சில கடைகள் ஏலத்துக்கு விடப்படவில்லை.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : குறிப்பாக எந்த இடத்தில் என்பதை தெரிவிக்க வேண்டுகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : பெயரை வேண்டுமானல் எழுதி அனுப்புகிறேன். எனக்குத் தெரிந்த தகவல்படி சேலம் மாவட்டத்தில் சில கடைகள் ஏலத்தில் விடப்படுவதில்லை. உங்களுக்கும் தகவல் கிடைத்திருக்கும். எனக்கு கொஞ்சம் அதிகமாக தகவல் கிடைத்தால் அதைக் கொடுக்கிறேன். கடைகளைக் கட்டி, ஏலத்தில் விடாமல் இருப்பது நல்ல முறையல்ல.

கோவிலில் இருக்கக்கூடிய கலை நுணுக்கம் படைத்த சிலைகள், தேரிலுள்ள பொம்மைகள் இவைகளெல்லாம் திருடப்படும் நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. அந்தக் கூட்டத்தை கண்டுபிடிக்க வேண்டிய முயற்சிகளை எடுத்தால் தான், உண்மையிலேயே

1972 மார்ச் 27] [திருமதி த. ந. அனந்தநாயகி]

பக்தர்களுடைய மனதைப் புண்படுத்தாமல் ஆட்சி நடத்துகிறோம் என்று சொல்லலாம். எத்தனையோ சிற்பங்கள் எங்கேயோ வெளிநாடுகளுக்குச் சென்றுவிடுகின்றன. அழகான சிற்பங்கள், சிலைகள் எல்லாம் காணுமல் போய்விடுகின்றன. கண்ணைப்பறிக்கும் அழகுள்ள, கலை நுணுக்கம் உள்ள சிலைகளெல்லாம் காணுமல் போய் விடுகின்றன. அன்றைக்குக் கூட முதல் அமைச்சர் அவர்கள் சிலைத் திருட்டை கண்டுபிடித்திருப்பதாகச் சொன்னுர்கள். எனக்குக் கிடைத்திருக்கிற தகவல்படி அந்தத் தகவல் தவறு, சரியல்ல.

முத்துச்சாமி மட்டையருக்கு திலக் என்று அம்மாதிரி பிள்ளை இல்லை. மணி என்பவருடைய பிள்ளை என்று சொல்லப்படுகிறது. முதல் அமைச்சர் அவர்கள் சொன்ன தகவல் சரியான தகவல் இல்லை. இம்மாதிரி சிலை திருட்டுகளிலெல்லாம் ஈடுபடக்கூடியவர்கள் பெரிய வசதி படைத்தவர்களாகத் தான் இருக்க முடியும். எங்கே போகிறது என்று நமக்குத் தெரியவில்லை. யார் செய்கிருர்கள் என்பதும் புரியவில்லை. அன்னிய நாடுகளுடன் தொடர்பு கொள்ள வேண்டியிருப்பதால், அதற்கு வேண்டிய வசதி இருந்தால் தான் முடியும். இதைத் தடுத்து நிறுத்தவேண்டும், இந்த சிலைகளுக் கெல்லாம் தக்க பாதுகாப்பை அறநிலைய இலாகா ஏற்படுத்த வேண்டும். எனக்கு முன்பு பேசியவர்கள் கூறியது மாதிரி சில கோவில்களில் கற்பூரம் ஏற்ற கூட வசதி இல்லாமல் இருக்கிறது. ஆனுல், அந்தக் கோவில்களில் அழகான சிலைகள், சிற்பங்கள் இருக் கின்றன. அதைக் கண்காணிப்பதற்கு அங்கெல்லாம் ஆள் கிடையாது. அந்தக் கோவில்களிலெல்லாம் திருப்பணி செய்து, அவைகளைப் பாதுகாக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

ஆங்காங்கு இருக்கிற கலைநுட்பம் நிறைந்த சிலைகளை பாதுகாப் பான இடத்தில் கொண்டு வந்து வைத்து பாதுகாப்பதற்கு அறநிலைய இலாகா ஏற்பாடு செய்யவேண்டும். சென்னையிலே கூட அதற்காக ஒரு கலைக்கூடம் ஏற்படுத்தி, அந்தச் சிலைகளை அங்கே கொண்டு வந்து சேர்த்துவைத்து, கண்காணிக்க வேண்டும். சரியான கண் காணிப்பு இல்லாத காரணத்தினுல் சிலைகள் காணுமல் போய்விடு கின்றன என்பதைக் கேட்டு உண்மையிலே வருத்தப்படவேண்டிய சூழ்நிலை தான் இருந்துகொண்டிருக்கிறது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அறநிலேய பாதுகாப்பு இலாகாவிற்கு ரூ. 5 கோடி வருமானம் வருகிறது. கோவில்களின் திருப்பணிக்கு அதிகமாகச் செலவு செய்ய வேண்டும். கோவில் சொத்துக்கள் எங்கே இருக்கின்றன என்றே கண்டுபிடிக்க முடியவில்லை, சில இடங்களில், கண்டுபிடிப்பதற்கு ஆர்வமும் கிடையாது. காரணம் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை ஒரு எக்சிக்யூடிவ் ஆபீசர்களைப் போடுகிறீர்கள். 3 மாதம், 4 மாதத் துக்கு ஒரு முறை எக்சிக்யூடிவ் ஆபீசர்களை மாற்றிவிடுகிறீர்கள். அவர்கள் ஒரு வருஷம் கூட தொடர்ந்து ஒரு கோவிலில் இருப்ப தில்லை. அதனுல் அவர்களுக்கு கோவிலுக்கு என்ன சொத்து இருக் கிறது, எங்கே இருக்கிறது என்று கண்டுபிடிப்பதற்கே நேரம் இருப்பதில்லை. கோவில் சொத்துக்களை கண்டுபிடிப்பதற்கு ஒரு தனி இலாகா ஏற்படுத்தப்போவதாகத் சொன்னுர்கள். அதை வேகமாகச் செய்யவேண்டும். கோவில் சொத்துக்களை பல்வேறு தனியார்கள் அனுபவித்துக்கொண்டு வருகிருர்கள். எந்தவிதமான வாடகையும் கொடுப்பது கிடையாது. அறங்காவலர்களைப் போடுவதில் சற்று ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். கோவிலுக்கு குத்தகை பாக்கி இருப்பவர்கள்கூட அறங்காவலர்களாக வந்து விடுகிருர்கள். அப்படி வருவது தவறு...........

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : கோவிலுக்கு குத்தகை பாக்கி இருப்பவர்கள் அறங்காவலர்களாக வரமுடியாது. குத்தகை தாரர்கள் அறங்காவலர்களாக வரமுடியாது என்று சட்டம் இருப்பது அம்மையார் அவர்களுக்குத் தெரிந்திருக்கக்கூடும் என்று கருதுகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : திருவெண்காடு கோவிலில் அம் மாதிரி நிலைமை இருக்கிறது என்று அறிகிறேன். அறங்காவலர்களிட மிருந்து முன்னுல் கோவிலுக்கு ஏதாவது பாக்கியிருந்தாலும், கோவில் நிலத்தை அவர்கள் வேறு யாருக்குக் கொடுத்து பாக்கி யிருந்தாலும் எப்படியோ அவர்கள் அறங்காவலர்களாக வந்துவிடு கிருர்கள். எப்படி என்பது தெரியவில்லை. அதைக் கவனிக்க வேண்டும். அதைப்பற்றி கவனம் செலுத்தப்படவேண்டும். பல இடங்களில் அறங்காவலர்களைப் போடும்பொழுது அவர்களின் நோக்கம் என்ன என்று நன்ருகப் புரிந்துகொண்டுதான் அவர்களை நியமிக்கவேண்டும்.

1972 மார்ச் 27] [திருமதி த. ந. அனந்தநாயகி]

நான் ஏற்கனவே சொன்ன மாதிரி பெண்களையும் அறங்காவலர்களாகப் போடவேண்டும். மனுப்போட்டால் கவனிக்கப்படும் என்று சொல்வது நல்லதல்ல. அறங்காவலர்கள் இருக்கக்கூடிய இடங்களில் 5 டிரஸ்டிகள் இருந்தால், அதில் ஒருவர் பெண்தான் இருக்க வேண்டும். மூன்று டிரஸ்டிகள் இருந்தால், ஒருவர் பெண்ணுகத்தான் இருக்கவேண்டும். "அட் லீஸ்டு ஒன் மஸ்டு பீ ய வுமன் தேர்". அப்படியிருந்தால்தான் சிறப்பாக இருக்கும். ஆலய வழிபாட்டில் பெண்களுக்கு இருக்கக்கூடிய நம்பிக்கை அதிகம். ஆகையால் அவர்களையும் சேர்த்து ஆலயப் பணிகளில் ஈடுபடுத்தினுல் உண்மையிலேயே அறநிலைய இலாகா சிறப்பாக பணி செய்ய வழி பிறக்கும்.

பால்பண்ணையைப் பற்றி சில வார்த்தைகள் குறிப்பிட விரும்புகிறேன். மாதவரம் பால் பண்ணையிலிருந்து சென்னைக்கு பால் வழங்கப்படுகிறது. அந்தப் பால் என்னமோ நிறம், என்னவோ சுவை இப்படி இருக்கிறது. கேட்டால், ஈரோட்டிலிருந்து பால் வந்து இரண்டு நாட்களுக்கு சேகரித்து வைத்துக் கொடுக்கப்படுகிறது என்று சொல்கிறுர்கள். அந்தப் பாலின் நாற்றம் சகிக்க முடியாமல் இருக்கிறது. நான் சாப்பிட்டுப் பார்க்கிறேன். அதிலிருந்து தயிர் எடுத்துத்தான் சாப்பிடுகிறேன். சென்னையில் இருப்பவர்களுக்கு அது ஒரு பனிஷ்மெண்ட். ஏனென்ருல் அவர்களுக்கு வேறு வழி கிடையாது. அந்தப் பாலைத்தான் வாங்கிச் சாப்பிடவேண்டும். இப்படிப்பட்ட நாற்றமுள்ள பாலாக இருக்கிறதே என்று கேட்டால், டோன்டு மில்க் என்று ஏதேதோ சொல்கிறுர்கள். ஆகவே, பொது மக்களுக்குத் தேவையான அளவுக்கு நல்ல சுத்தமான பாலாகவும், மணமுள்ள பாலாகவும் வழங்குவதற்கு இந்த அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாதவரம் பால் பண்ணையைப் போய்ப் பார்த்தால் ரொம்பவும் கஷ்டமாகத்தான் இருக்கிறது. அங்கே நிழலே இல்லாமல் இருக்கிறது. திறந்த வெளியில் மாடுகளைக் கட்டினுல், அதனுடைய பால் வற்றித்தான் போகும். அங்கு அது மாதிரி கிளைமேட் இருக்கிறது. பாம்பே போன்ற இடங்களில் பால் பண்ணை வைத்திருக்கும் இடம் பார்ப்பதற்கு ரொம்ப ரம்மியமாக இருக்கிறது. மதுரையில் ரொம்ப வறட்சிப் பகுதியில் பால்பண்ணை போய் மாட்டிக்கொண்டு விட்டது. சென்னைக்கு இன்னொரு பால் பண்ணைத் தேவை. அதைத்

தென் சென்னையில் குளு குளு என்று இருக்கக்கூடிய நிழல் தரக்கூடிய இடத்தில் அமைத்துக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாதவரம் பால்பண்ணை எப்பொழுது அமைக்கப்பட்டது என்று அம்மையார் அவர்கள் அறிவிப்பார்களா?

திருமதி த. ந. அனந்தநாயகி : எப்பொழுது ஆரம்பித்தால் என்ன? அதில் நிழல் தரும் மரங்களை நடக்கூடாதா? நிழலுக்குக் கூடவா பஞ்சம்? . . .

திரு. கு. காமாட்சி : காங்கிரஸ்காரர்கள் காலத்தில் மரம் நடு விழா நடத்தினர்களே, அப்பொழுது இங்கே ஏதாவது மரங்களை நட்டார்களா?

திருமதி த. ந. அனந்தநாயகி : நாங்களாவது 4, 5 மரங்களை நட்டோம். அது கூட இப்பொழுது இல்லாமல் போய்விட்டதே? மாதவரம் பால் பண்ணை இருக்கும் இடத்தில் போதுமான நிழல் தரும் சூழ்நிலை இல்லை.

சென்னையில் உள்ள பால் மாடுகளை அங்கே கொண்டு போய் வைக்க வேண்டும். சுகாதார வசதி உள்ள இடத்தில் வைக்க வேண்டும். சென்னையில் உள்ள சுகாதார வசதி கெடக்கூடாது என்ற நோக்கத்தில் மாதவரம் பால்பண்ணை துவங்கப்பட்டது. ஆனல் அங்கே 20 மாடுகள் கொண்டுவந்தால்தான் வைத்துக் கொள்ளலாம் என்றெல்லாம் விதி போட்டிருக்கிறார்கள். ஆகவே, சாதாரணமாக குறைந்த அளவில் மாடுகளை வைத்துக் கொண்டிருப்பவர்கள் பால்பண்ணையில் கொண்டு போய் வைத்துக்கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அப்படி அங்கே கொண்டு போய் வைத்தாலும் நஷ்டப்பட்டு திரும்பி சென்னைக்கே ஓடிவந்து விடுகிறார்கள். இது என்ன காரணம் என்று புரியவில்லை. இந்தத் தடங்கல்களையெல்லாம் நீக்கி, மாடுகளை அங்கே கொண்டு போய் வைத்துக்கொள்வதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1972 மார்ச் 27] [திரு. மு. கண்ணப்பன்]

பால்பண்ணை திடீரென்று கார்ப்பரேஷனாக மாற்றப்படுகிறது. காரணம் என்னவென்று ஒன்றுமே தெரியவில்லை. ஸ்டேட் டிரான்ஸ் போர்ட் அண்டர்டேக்கிங்காக இருந்தது, அதைப் பல்லவா கார்ப்ப ரேஷன், பாண்டியா கார்ப்பரேஷன் என்றெல்லாம் கார்ப்பரேஷ னாக மாற்றிவிட்டார்கள். இப்படி திடீர் திடீரென்று கார்ப்பரேஷன் வந்துவிடுகிறது. அதனால் என்ன பலன் என்று தெரியவில்லை. ஏன் இந்த நிலைமையோ புரியவில்லை. அல்லது அமைச்சருக்கு இருக்கக் கூடிய அதிகாரத்தை எடுத்து, வேறு ஒருவருக்குக் கொடுத்து, அவரை வாரியத் தலைவர், போர்டு சேர்மனாக ஆக்குவதற்கு இது கார்ப்ப ரேஷனாக மாற்றப்படுகிறதா, அதில் என்ன சூட்சமம் இருக்கிறது என்று புரியவில்லை..............

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : கார்ப்பரேஷன் அமைப்பது பற்றி கூறி, அம்மையார் அவர்கள் வேறு ஒருவருக்கு பதவி வழங்கு வதற்காக அப்படிச் செய்யப்படுவதாகச் சொல்லுகிறார்கள். அப்படி ஒருவருக்கும் பதவி கொடுப்பதாக இல்லை. நம்முடைய தலைமைச் செயலாளர்தான் இதற்குத் தலைமை தாங்கி பணியாற்றப்போகிறார். விரைவிலே இதற்கான ஏற்பாடு செய்து, இந்த அமைப்பு ஏற்படப் போகிறது. தனிப்பட்டவருக்கு பதவி கொடுக்கவேண்டும் என்பதற்காக ஒன்றும் செய்யப்படவில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : அதைத்தான் நான் வன்மை யாகக் கண்டிக்கிறேன். தலைமைச் செயலாளருக்கு இருக்கிற வேலை யில், பால் பண்ணையையும் அவரிடத்தில் ஒப்படைத்தால் நிர்வாகம் எப்படி நடக்கும்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பால்பண்ணை மட்டும் என்பது அல்ல. ஆப்பரேஷன் ப்ளட் என்ற ஒரு திட்டத்தின் கீழ் ரூ. 10 கோடி அளவில் தமிழ்நாட்டில் மொத்த பால் உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்று மத்திய அரசிடம் கேட்டுக்கொள்ளப் பட்டு, அந்தத் திட்டத்தை உருவாக்குவதற்கு, இந்தப் பால் பண்ணை யிடம் ஒப்படைக்க முடியாது. அதற்கு கால்நடைத் துறையும், வேறு பல துறைகளும் இணைக்கப்படவேண்டும். அப்படி இணைத்து இந்தத் துறையை உருவாக்குவதற்கு தலைமைச் செயலாளர் பொறுப்பு ஏற்றுக்கொள்வார்.

128–12—31

திருமதி த. ந. அனந்தநாயகி : அதை நான் ஒத்துக்கொள்வதற்கு இல்லை. தலைமைக் காரியதரிசி நிர்வாகம் பற்றி கவனிப்பது ரொம்ப அவசியம். அதற்கே அவருக்கு வேலை நிறைய இருக்கிறது. ஆகவே, பால்பண்ணையை அவரிடத்தில் ஒப்படைக்கத் தேவையில்லை. அவருடைய சேவையை பால் பண்ணையில் உபயோகப்படுத்துவது நியாயமல்ல. நல்ல பால் மாடுகளை வைத்து வளர்த்த அனுபவம் உள்ளவர்களை தாராளமாக இந்தத் துறையை நிர்வகிக்கச் சொல்லலாம். எந்தத் துறையையும் யாருக்கு அதில் ஆர்வம் இருக்கிறதோ அவரைக்கொண்டு நிர்வகித்தால்தான், அவர்களும் ஆர்வமாக பணியாற்றுவார்கள், நல்ல பலனும் கிடைக்கும்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இந்த வாரியத்திற்குத் தலைவராகத்தான் தலைமைச் செயலாளர் இருப்பார்கள். அவர் மட்டும் அல்ல. மற்றும் நிதித்துறை செயலாளர், உணவுத் துறை செயலாளர், மற்றும் பொறுப்புள்ள அதிகாரிகள், அக்ரிகல்சரல் செக்ரடரி போன்றவர்கள் அந்த வாரியத்தில் அங்கம் பெற்றிருக்கிறார்கள். இவர்களெல்லாம் சேர்ந்து நிர்வாகத்தை நடத்துவதற்கு, நல்ல காரியங்களைச் செய்வதற்கு அந்த வாரியத்தின் மூலமாக முடியும் என்ற நோக்கத்தோடுதான் அந்த அமைப்பு ஏற்படுத்தப்படுகிறது. எனவே ஏதோ பால்பண்ணையை கவனிக்கிற பொறுப்பு அரசுத் தலைமைச் செயலாளரிடத்தில் மட்டும் ஒப்படைக்கப்படுகிறது என்பது இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : பெரிய பெரிய அதிகாரிகளை ஏதேதோ வேலைக்கு பயன்படுத்தக்கூடாது. பால் மாடுகளை வைத்து வளர்த்து அனுபவம் பெற்றவர்களை இதில் போடவேண்டும். அவர்களுக்குத்தான் தெரியும். அப்படிப்பட்டவர்களைப் போட்டால் தான் அவர்களுக்கு அங்கே இருக்கின்ற கஷ்டங்கள் தெரியும், நிலைமைகள் தெரியும். பால்மாடுகளை வைத்து பராமரித்து அனுபவம் பெற்றவர்களைப் போட்டால்தான், ஆர்வத்தோடு வேலை செய்வார்கள்.

அதே மாதிரி பால் பண்ணைகளை நிர்வகிப்பதற்கு ஐ.ஏ.எஸ். ஆபீசர்களைப் போடவேண்டிய அவசியம் இல்லை. வேறு நல்ல நிர்வாகம் நடத்தவேண்டிய இடங்களில் அவர்களைப் போடலாம். பால்பண்ணை நடத்துவதில் அவர்களுக்கு அனுபவம் கிடையாது.

1972 மார்ச் 27] [திருமதி த. ந. அனந்தநாயகி]

பால் மாடு வைத்து வளர்த்து அனுபவம் பெற்றவர்களை பால்பண்ணை நிர்வாகத்தில் போட்டால்தான் நலமாக இருக்கும். பால்பண்ணையை நிர்வகிப்பதற்கு ஐ.ஏ.எஸ். ஆபீசரைப் போட்டால் அவர்களுக்கும் அதில் திருப்தி கிடையாது. பால் பண்ணையும் திருப்திகரமாக நடப்பது இல்லை. பால் பண்ணைகளில் மூன்று, நான்கு ஐ.ஏ.எஸ். ஆபீசர்களைப் போடுவது உசிதமல்ல. அதில் அனுபவம் பெற்றவர்களையேதான் போடவேண்டும்...

திரு. நா. வீராசாமி : ரொம்ப நேரமாக அம்மையார் அவர்கள் அனுபவமுள்ளவர்களை, மாடு மேய்க்கத் தெரிந்தவர்களைப் பார்த்து அந்தக் கார்ப்பரேஷனில் போடவேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

THIRU R. PONNAPPA NADAR : Mr. Drputy Speaker, this is an insinuation and personal remark. That should be expunged. This sort of thing should not be tolerated.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்தமாதிரி சொல்லக் கூடாது.

திருமதி த. ந. அனந்தநாயகி : சரியான யோசனைகள் சொன்னால் அதை ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்று சொன்னால் நாங்கள் என்ன செய்ய முடியும். ஆகவே, பால் விலை அதிகமாகாமல் பார்த்துக்கொள்வதில் கவனம் செலுத்தவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. வீராசாமி சொன்ன அந்த வார்த்தைகளை சபையின் நடவடிக்கைக் குறிப்பிலிருந்து எடுத்துவிடவேண்டுமென்று உத்தரவிடுகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : அடுத்ததாக, தென் சென்னையைப் பொறுத்த வரையிலே அங்குள்ள மக்கள் பால் சரியாக கிடைக்காமல் அவதிப்படுகிறார்கள். ஆகவே, தென் சென்னையில் ஒரு பால் பண்ணை ஆரம்பிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முடிந்தால் அந்தப் பண்ணையை ஒரு ஜாய்ன்ட் செக்டாராக ஆரம்பிக்கவேண்டு

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

மென்று கேட்டுக்கொள்கிறேன். அதாவது அதில் 51 சத விகிதம் ஸ்டேட்டும், மீதி 49 சத விகிதம் இன்டிவிஜல்ஸும் என்று வைக்க வேண்டும். நம்முடைய அமைச்சர் அவர்கள் கூட்டுறவுத் துறை என்று சொல்கிறார்கள். அதில் அக்கறை ரொம்ப அதிகமாக காட்ட வேண்டும். அப்படி ஆரம்பித்தால் பால் நமக்கு நல்ல முறையில் கிடைக்க வசதியாக இருக்கும். பால் பண்ணைத் தொழிலாளர்களுக்குக் கிடைக்கிற ஊதியம் ரொம்பக் குறைவு. 10 ரூபாய் 20 ரூபாய் என்று வாங்குகிறவர்களும் இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு எல்லாம் நல்ல ஊதியம் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று சொல்லி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, இந்த அறிக்கையில் கன்னியாகுமரி தேவஸ்வம் போர்டைப் பற்றி சில விவரங்கள் தந்திருக்கிறார்கள். நான் ஒரு குறுகிய கால வினா இது சம்பந்தமாக எழுப்பி இருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் இதற்கு விளக்கம் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். இப்போது 13 லட்சத்துச் சில்லறை ரூபாயை அரசாங்கத்துக்கு கன்னியாகுமரி தேவஸ்வம் போர்டு கொடுக்கப்போகிறது. இன்னும் அதைத் தொடர்ந்து கொடுக்கப்போகிறார்கள். ஆனால் அந்த நிர்வாகம் கன்னியாகுமரி தேவஸ்வம் போர்டில் இருக்குமா? மன்னரை அதில் நியமனம் செய்ய உரிமை இருக்கிறதா என்பதை விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, குழித்துறையில் ஸ்ரீதேவி காலேஜ் ஃபார் விமன் என்ற ஒரு காலேஜ் இருக்கிறது. இதை வேறு இடத்திற்கு மாற்றப்போவதாக தேவஸ்வம் போர்டு நடவடிக்கை எடுக்கிறது. அதுவும் உண்மையா என்பதையும், ஆக இந்த இரு கேள்விகளுக்கும் விளக்கம் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

* மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, இங்கே பால் பண்ணை வளர்ச்சித் துறை, அறநிலையத் துறை ஆகியவற்றின் பேரில் பல்வேறு உறுப்பினர்கள் அவர்களின் மேலான கருத்துக்களை ஆக்கபூர்வமாக இந்தத் துறைகள் மக்களுக்கு நல்ல முறையில் எப்படி பணியாற்ற முடியும் என்பதற்காக எடுத்துச்சொன்னார்கள். அவர்களுக்கெல்லாம் நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்

1972 மார்ச் 27] [திரு. மு. கண்ணப்பன்]

நாட்டில் இருக்கிற விவசாய பெருங்குடி மக்கள் அவர்களின் முக்கிய மான தொழிலான விவசாயத்தில் அதிக கவனத்தைச் செலுத்தி வந் தாலும், இந்தப் பால் மாடுகளை வைத்து வளர்க்கும் தொழிலையும் ஒரு துணைத் தொழிலாக நடத்திவருகிறார்கள். பல குடும்பங்களில் பசு மாடுகள், எருமை மாடுகள் வைத்து அதில் வாழ்ந்து கொண்டிருக் கிறார்கள். அதை நாம் அறிந்திருக்கிறோம். ஆகவே, இப்படிப்பட்ட அந்தத் தொழில் தமிழ்நாட்டில் மேலும் நல்லபடியாக வளர வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் மத்திய அரசாங்கம் தருகிற உதவியோடு சுமார் 8½ கோடி ரூபாயை செலவு செய்து நம்முடைய தமிழ்நாட்டில் கால்நடை அபிவிருத்தி செய்யவும், அதன் மூலம் கிடைக்கிற பாலை நல்லமுறையில் சேகரித்து, வேறு பல இடங்களுக்கு எடுத்துச் சென்று நல்ல முறையில் வினியோகம் செய்யவும்தான் இந்த கார்ப்பரேஷன் அமைக்கப்பட்டிருக்கிறதே தவிர, வேறு யாருக்கோ ஒரு பதவி கொடுப்பதற்காக அல்ல.

பால் விநியோகத்தைப் பொறுத்தவரையில், சென்னையிலும், மதுரையிலும் கடந்த 5 ஆண்டுகளில் நல்ல வளர்ச்சியை நாம் கண் டிருக்கிறோம். சென்னையில் 1967–68-ல் 33 ஆயிரம் லிட்டர் பால்தான் 77 டிப்போக்கள் மூலம் வழங்கப்பட்டு வந்தது. ஆனால் 1971–72-ல் 222 டிப்போக்கள் மூலம் 70 ஆயிரம் லிட்டர் பால் வினியோகிக்கப் பட்டு வருகிறது. மதுரையில் 1967–68-ல் 31 டிப்போக்கள் மூலம் கிட்டத்தட்ட 10 ஆயிரம் லிட்டர் பால் வினியோகம் செய்யப்பட்டு வந்தது. ஆனால் இன்றைக்கு 62 டிப்போக்கள் மூலம் 20 ஆயிரம் லிட்டர் பால் அங்கே உள்ள மக்களுக்கு வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. ஆனால், சென்னையிலுள்ள மக்களுக்கு இந்தப் பால் போது மானதாக இருக்கிறதா என்று பார்த்தால் போதுமானதாக இல்லை.

ஆகவே, இன்றைக்கு 50 ஆயிரம் கொள் அளவு என்று இருந்ததை 70 ஆயிரம் கொள் அளவாக மாற்ற ஏற்பாடு செய்திருக்கிறோம். சுற்றுப்புற கிராமங்களில் இருந்து நமக்குக் கிடைக்கிற 30 ஆயிரம் லிட்டர் பாலையும் கணக்கில் எடுத்துக்கொண்டால், அந்த அளவிலே இன்றைக்கு கிட்டத்தட்ட ஒரு லட்சம் லிட்டர் பால் கிடைக்கக் கூடிய அளவிற்கு அதிகாரிகள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

அதேமாதிரி கூட்டுறவு சங்கங்கள் மூலம் பால் சேகரிப்புத் திட்டம் என்று அமைத்திருக்கிறோம். அந்தச் சங்கத்தில் உள்ளவர்களுக்கு அரசாங்கம் கடன் கொடுத்து பால் மாடுகள்

[திரு. மு. கண்ணப்பன்] 1972 மார்ச் 27

வாங்கவும், தீவனம் வாங்கவும், மாடுகள் கட்ட கொட்டகைகள் போடவும் வசதி செய்து கொடுக்கிறது. அந்த அடிப்படையில் இன்றைக்கு 2,278 பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களும், 23 கூட்டு அமைப்புகளும் இருக்கின்றன அவைகளெல்லாம் இன்றைக்கு சரியாக செயல்படாத காரணத்தால் இவைகளைச் சீரமைத்து, இவை, தனித்து இயங்கக் கூடிய கூட்டுறவு சங்கங்களாக அமைக்கப்பட்டிருக் கின்றன.

மேலும் கிராமப்புறத்திலிருந்து நமக்கு 1970–71-ல் 2.13 லட்சம் லிட்டர் பால் கிடைத்து வந்தது. 1971–72-ல் நாள் ஒன்றுக்குச் சரா சரியாக 2.33 லட்சம் லிட்டர் பால் கிடைத்து வருகிறது என்பதை பெருமையோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போல பால்வள முனைப்புத் திட்டத்தின் கீழ், பால் பெருக்குத் திட்டங்களுக்காக இம் மாநிலத்திற்கு ரூ. 8.87 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் கால்நடைகளை அபிவிருத்தி செய்ய வும், பாலைச் சேகரித்து, பதப்படுத்தி வழங்குவதற்காகவும், பால் பண்ணைகளின் திறனைப் பெருக்குவதற்காகவும், பால் உற்பத்தியைப் பெருக்குவதற்குத் தேவையான தொழில் நுட்ப வசதிகளை அளிக்கவும் இது போன்ற காரியங்கள் இந்தத் திட்டத்தில் அடங்கும்.

இப்படிப்பட்ட திட்டங்களை நிறைவேற்ற சரியான முறையில் செயல்படுத்த இந்தக் கார்ப்பரேஷன் அமைக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் மணலி கந்தசாமி அவர்கள் இந்தத் திட்டம் நல்ல முறையில் செயல்பட பல அரிய யோசனைகளைச் சொல்லி யிருக்கிறார்கள். அதே நேரத்தில் ஒரு குற்றச்சாட்டையும் சொல்லி இருக்கிறார்கள். வத்திராயிருப்பில் உள்ள கூட்டுறவு சங்கத்தில் இருந்த செகரட்டரி கட்சித் தலையீட்டால் மாற்றப்பட்டார் என்று சொன்னார்கள். அந்த அதிகாரி எப்படி மாற்றப்பட்டார் என்று சொன்னால், அங்கே உள்ள பொது மக்களும், அந்தத் தொகுதி சட்ட மன்ற உறுப்பினரும் கொடுத்த புகாரின் மேலேயே அந்த செகரட்டரி மாற்றப்பட்டு, இன்றைக்கு அவர் மேல் ஒரு விசாரணை நடந்து கொண்டிருக்கிறது.

நம்முடைய பாரதி அவர்கள் அதிகப் பாலை பவுடர் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். இங்கே வழங்கப்படுகிற பால் போக மீதி இருக்கிற பாலை பவுடர் செய்வது, அல்லது குழந்தை

[திரு. மு. கண்ணப்பன்] [1972 மார்ச் 27

களுக்கு உணவுப் பொருள்கள் உற்பத்தி செய்வது போன்றவற்றிற்கு உபயோகப்படுத்த எதிர்காலத்தில் திட்டமிட்டு நடத்தப்படும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

தென் சென்னையில் பால் பண்ணை வைப்பது பற்றி மாண்புமிகு உறுப்பினர் திருமதி அனந்தநாயகி அவர்கள் சொன்னார்கள். சென்ற ஆண்டே 55 லட்ச ரூபாய் திட்டம் ஒன்று இதற்காகப் போட்டு அதற்கான ஏற்பாடெல்லாம் செய்யப்பட்டது. ஆனால் சரியான இடம் கிடைக்காததால் அதை நிறைவேற்ற முடியாமலிருக்கிறது. கிண்டியில் உள்ள ராஜ்பவனில் இதற்காக நிலத்தைப் பார்த்தோம். ஆனால் அங்கே போதிய தண்ணீர் வசதி இல்லாத காரணத்தால் அது கைவிடப்பட்டது. பரிசிலனை செய்துகொண்டிருக்கிறோம். ஆகவே விரைவில் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் நாராயணசாமி அவர்களும் மற்றும் பல உறுப்பினர்களும் மாதவரம் பால்பண்ணை பற்றியும், அங்கே வேலை செய்கின்றவர்களைப் பற்றியும் சொன்னார்கள். அவைகளையெல்லாம் அரசாங்கம் பரிசிலித்து தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு பல்வேறு திட்டங்களை இந்தத் துறையின் மூலம் வைத்து, கிராமப் பொருளாதாரத்தை வளர்க்கவும், அதேநேரத்தில் நகரத்தில் உள்ள மக்களுக்கும் கிராமத்தில் உள்ள மக்களுக்கும் பாகுபாடின்றி ஊட்டச்சத்து பால் உணவு எல்லோருக்கும் வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். மற்றும் பல கருத்துக்களை இங்கே எடுத்துச் சொன்னார்கள். அந்தக் கருத்துக்களை எல்லாம் மனதிலே வைத்து, எதிர்காலத்திலே அரசாங்கம் தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அறநிலையத் துறையைப் பொறுத்தவரையில் பல உறுப்பினர்களும், நல்ல கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். நாங்கள் சென்ற ஆண்டு செய்த மிக முக்கியமான காரியங்களில் ஒன்று ஜாதி வித்தியாச உணர்ச்சியை நீக்கவேண்டும் என்பது. சமூகத்திலே ஜாதி மத வேற்றுமைகளை ஒழிக்கவேண்டும். அதற்கு முதற்படியாக இறைவன் முன்னிலையில் ஜாதி வித்தியாசத்தை ஒழிக்கவேண்டுமென்று திட்டமிட்டு, எல்லா ஜாதியினரும் அறங்காவலராக இருக்கலாம், எல்லா ஜாதியினரும் அர்ச்சனை செய்யலாம் என்ற நிலையைக்

கொண்டுவந்தோம். அதை எதிர்த்து சிலர் உச்ச நீதிமன்றத்திலே வழக்கு தொடுத்தார்கள். அரசாங்கத்தின் சட்டம் செல்லும் என்று நீதிமன்றத்திலே திர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு நல்ல சூழ்நிலையை கழக அரசு உருவாக்கியிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அறிவார்கள்.

அடுத்து, கோவில்களில் தமிழ் வழிபாட்டு முறைகளைப் பற்றிச் சொன்னார்கள். எல்லாக் கோவில்களிலும் தமிழில் அர்ச்சனை செய்யவேண்டுமென்று அறநிலையத்துறை ஆணையர் அறிவுரை வழங்கி யிருக்கிறார். அதே மாதிரி தமிழில் அர்ச்சனை நடைபெறுகிறது. யாராவது விரும்பிக் கேட்டால் சமஸ்கிருதத்தில் அர்ச்சனை செய்ய லாம் என்றும் அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது.

பெரியவர் திரு. மணலி கந்தசாமி அவர்கள் பேசுகின்றபோது, நல்ல பல சீர்திருத்தக் கருத்துக்களை எல்லாம் சொன்னார்கள். அம் மாதிரியான நல்லக் கருத்துக்களைக் கொண்டவர்களாகத்தான் நாங்கள் இருக்கிறோம். படிப்படியாக அந்தக் கருத்துக்களை எந்த அளவுக்குச் செயல்படுத்த முடியுமோ அந்த அளவுக்கு செயல்படுத்தி வருகிறோம். சீர்திருத்தக் கருத்துக்களை கொண்டுவருகிற அதே நேரத்தில் மத நம்பிக்கையுடையவர்களின் மனம் புண்படாதவாறும் பார்த்துக்கொள்ளவேண்டும். இந்து மதத்தவரானாலும், முஸ்லீம் மதத்தவரானாலும் அல்லது கிறிஸ்துவ மதத்தவரானாலும் அவர்களின் நம்பிக்கைகளுக்கும் குறைவு நேரக்கூடாது என்பது அரசாங்கத்தின் கொள்கையாக இருக்கிறது. மதச்சார்பற்ற அரசாங்கமாக இருந்து அவர்களின் நியாயமான உணர்ச்சிகளுக்கும் மதிப்புக் கொடுக்க வேண்டியது அரசின் கடமை.

பரம்பரை அறங்காவலர்களை ஒழிக்கவேண்டுமென்று சொன்னார்கள். அரசாங்கம் அந்தக் கருத்தினை ஏற்றுக்கொண்டு சட்டம் கொண்டுவர எண்ணியிருக்கிறது. அடியோடு அவர்களை இப்போது ஒழிக்கமுடியாது. படிப்படியாக அதற்குரிய வழிகளை மேற்கொள்ள லாம். ஏற்கனவே பல வெளி மாநிலங்களில் பரம்பரை அறங் காவலர்களை ஒழிக்கும் சட்டத்தை நிறைவேற்றி, அதனால் அவர்கள் கோர்ட்டுக்குச் சென்று, அங்கே அந்தச் சட்டம் செல்லுபடி ஆகாது என்று தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள். எனவே, அதில் இருக்கின்ற சிக்கல்களை நீக்கி, செல்லுபடி ஆகக்கூடிய வகையில் ஒரு சட்டத்தைக் கொண்டுவரவேண்டுமென்று யோசித்துக்கொண்டிருக்கிறோம்.

VAAIMAIYE VELLUM TRUTH ALONE TRIUMPHS

1972 மார்ச் 27] [திரு. மு. கண்ணப்பன்]

பரம்பரை அறங்காவலர்கள் இருக்கின்ற ஒவ்வொரு கோவிலிலும் அதிகமான அறங்காவலர்களைப் போடலாம். ஆனால், 3, 4 பேர்களை அறங்காவலர்களாகப் போட்டால், பரம்பரை அறங்காவலர்கள் கோர்ட்டுக்குப் போவார்கள். ஆகவே, எங்கெங்கே பரம்பரை அறங்காவலர்கள் இருக்கின்றார்களோ அங்கெல்லாம் கூடுதல் அறங் காவலர்களை நியமிக்கவும், நிர்வாக அதிகாரிகளையும் போடவும் அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேநேரத்தில், கோவில் நிலங்களைப்பற்றி மாண்புமிகு உறுப் பினர்கள் அவ்வப்போது எழுப்பிய வினாக்களுக்கும் பதிலளித்திருக் கிறேன். முதலமைச்சர் அவர்கள் கூட, அங்கத்தினர்களின் கருத்தினை ஏற்றுக்கொள்ளலாம், ஏற்ற காலம் வரும்வரை பொறுத்திருப் போம்; காலம் கனியட்டும் என்று அழகாகப் பதிலளித்தார்கள். அதையெல்லாம் கவனத்தில் கொண்டு, அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் சென்ற ஆண்டில் பேசும்போது நிறைய குறைகளைச் சொன்னார்கள். இந்த ஆண்டு பாராட்டுத் தெரிவித்திருக்கிறார். அதற்காக அவருக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் அவர்கள் இன்னொன்றையும் சொன்னார்கள். தஞ்சை கோயிலில் இராஜராஜ சோழன் சிலையை வைக்க மத்திய தொல்பொருள் ஆராய்ச்சித் துறை அனுமதி கொடுக்கவில்லையே என்ற வருத்தத்தைத் தெரிவித்தார்கள். தஞ்சைக் கோயிலில் வைக்க அனுமதி கிடைக்காவிட்டாலும், கோயிலுக்கு அருகில் அல்லது உரியதொரு இடத்தில்—முக்கியமான இடத்தில் அந்தச் சிலை வைக்கப் படும் என்றும், சித்திரைத் திங்கள் 1-ம் நாள் தமிழக முதலமைச்சரவர் களால் திறந்து வைக்கப்படும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தஞ்சை கோயில் மட்டுமல்லாமல், அதைப்போன்ற நூற்றுக் கணக்கான பழம் பெருமை மிக்க கோயில்கள் மத்திய அரசின் தொல் பொருள் ஆராய்ச்சிப் பிரிவுக்கு உட்பட்டதாக இருக்கின்றன. அவைகளை எல்லாம் பாதுகாக்கவேண்டும்; திருப்பணி செய்ய வேண்டும் என்று நாம் தீவிர முயற்சி எடுத்துள்ளோம். மத்திய

[திரு. மு. கண்ணப்பன்] [1972 மார்ச் 27

அரசைப் பலமுறை அனுமதி கேட்டிருக்கிறோம். அவர்கள் இன்னும் நமக்கு அனுமதி கொடுக்கவில்லை. அதனால் நாளுக்குநாள் அந்த கோயில்கள் இடிந்து போகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

கங்கைகொண்ட சோழபுரம், குடுமியாமலை அங்கெல்லாம் இருக்கின்ற கோயில்களும், இவை போன்ற ஏராளமான கோயில்களும் மிகவும் முக்கியமான கோயில்களாகும். அவையெல்லாம் மத்திய அரசின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கின்றன. அதனால் அவர்கள் அனுமதி இல்லாமல் நம்மால் திருப்பணிகளைச் செய்யமுடியவில்லை. அவைகளில் குறிப்பாக குடுமியாமலையில் இருக்கின்ற கோயில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. அந்தக் கோயில் கல்வெட்டுகளில் நம்முடைய தமிழ்நாட்டின் ராகங்கள்—தமிழ் மொழியில் பண்கள் என்று அழைக்கப்படும்—பல்வகைப் பண்கள் தமிழகத்திலே இருந்தன என்பதற்கு அந்தக் கல்வெட்டுகள் சான்று கூறுவதாக இருக்கின்றன.

வடமொழியில் கரகரப்பிரியா என்பது தமிழில் படுமலைப் பண் என்று இருந்தது. வடமொழியில் கல்யாணி என்னும் ராகம் தமிழில் அரும்பாலைப் பண் என்று இருந்தது. வடமொழியில் அரிகாம்போதி என்பது தமிழில் கோடிப் பாலைப் பண் என்று இருந்தது. வடமொழியில் பைரவி என்பது தமிழில் விளரிப்பாலைப் பண் என்றிருந்தது. வடமொழியில் தோடி என்பது தமிழில் செவ்வழிப் பாலைப் பண் என்று இருந்தது. கடலைக் கண்டால் ஓர் பாடல், கரியைக் கண்டால் ஒரு பாடல், தளிரைக் கண்டால் ஒரு பாடல், காதலியைக் கண்டால் ஒரு பாடல் இப்படி இன்ப உணர்ச்சியை இசையில் கண்டான் தமிழன்.

இப்படி ஏராளமானப் பாடல்கள் இருக்கின்றன. அவைகளுக்கு எல்லாம் இலக்கணம் வகுக்கப்பட்டிருக்கிறது குடுமியாமலை கோயில் கல்வெட்டுகளில். அவைகளைப் பாதுகாக்க வேண்டுமென்று இந்த அரசு கருதுகிறது. ஆனால் மத்திய அரசு தடுத்துக்கொண்டிருக்கிறது. மேலும் மேலும் நம்முடைய அரசாங்கம் வற்புறுத்திப் பெறுவதற்கான முயற்சியை எடுத்துக்கொண்டிருக்கிறது. இப்படிப் பட்ட முயற்சியை நம்முடைய பழைய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் பாராட்டியிருக்கிறார்கள். அவர்களுக்கு மீண்டும் நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

1972 மார்ச் 27] [திரு. மு. கண்ணப்பன்]

திரு. காவேரிமணியம் அவர்கள் திருப்பரங்குன்றத்தில் இருக்கின்ற மீனாட்சியையும், சுப்பிரமணியரையும் பிரிக்கவேண்டுமென்று சொன்னார்கள். பின்னால் அவர்களே தாயையும் மகனையும் பிரிப்பது சரியல்ல; சேர்ந்தே இருக்கட்டும் என்று சொன்னார்கள். இருந்தாலும் இன்னொரு குறையையும் சொன்னார்கள். அதாவது மதுரையிலுள்ளவர்களையே அறங்காவலர்களாகப் போட்டிருக்கிறோம்; திருப்பரங்குன்றத்திலுள்ளவர்களுக்கு இடம் இல்லை என்று சொன்னார்கள். அவருடைய குறையை போக்குகின்ற வகையில் மதுரையிலுள்ள மூன்று பேர்களையும், திருப்பரங்குன்றத்திலுள்ள இரண்டு பேர்களையும் அறங்காவலர்களாகப் போட அரசாங்கம் முடிவெடுத்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் பல குறைகளைச் சொன்னார்கள். பள்ளிக்கூடம் ஏற்படுத்த வேண்டும். பள்ளிக்கூடக் கட்டடத்திற்கு பத்தாயிரம் ரூபாய் வேண்டுமென்று இரண்டு மாதங்களுக்கு முன்பு கேட்டார்கள். அறங்காவலர்கள் அதற்குச் சம்மதித்து, தருவதற்கு இசைந்தார்கள். உயர்நிலைப் பள்ளி ஏற்படுத்துவதற்கும் நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறோம். ஆக குறைகள் எதிர்காலத்தில் இல்லாதவாறு நீக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இரவு 8-30

குளித்தலை கந்தசாமி அவர்கள் பேசும்போது வடமொழியில் இன்னமும் அர்ச்சனை நடப்பாகக் குறிப்பிட்டார்கள். அவர் ஒரு அறங்காவலர் தான். அவரே அர்ச்சகர்களைக் கூப்பிட்டுக் கண்டித்திருக்கலாம். நம்முடைய சட்ட மன்ற உறுப்பினர்களில் 18 பேர்கள் அறங்காவலர்களாக இருக்கிறார்கள். இவர்கள் எல்லோருமே ஒத்துழைத்தால் கோயில்களை நல்லமுறையில் பராமரிப்பதற்கும், எல்லா இடங்களிலும் தமிழில் அர்ச்சனை நடைபெறுவதற்கும் வேண்டிய காரியங்களைச் செய்ய முடியும்.

அடுத்து, அழகர் கோயிலுக்கு ரோடு போடவேண்டும் என்றும் இங்கு சொல்லப்பட்டது. பழமுதிர்சோலை—மலைப்பகுதியில் இருக்கிற இடமாகும். பழமுதிர்சோலைக்கு ரோடு போடும் திட்டம் தாமதப்பட்டுவந்தாலும் 5 லட்சம் ரூபாய் செலவில் அதைத் துவக்க இருக்கிறோம். அந்தக் கோயிலில் அதற்குப் போதுமான நிதி இல்லை. இரண்டு லட்சம் தான் இருக்கிறது. வேறு கோயில்களில் இருந்து பணத்தை மாற்றி அந்தக் கோயிலுக்குக் கடனாகக் கொடுத்தால்

[திரு. மு. கண்ணப்பன்] [1972 மார்ச் 27

பின்னர் அதைத் திருப்பித் தந்துவிடுவதாக அறங்காவலர்கள் சொல்லியிருக்கிருர்கள். அதுபற்றியும் துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிருர்கள்.

மதிப்பிற்குரிய லத்தீப் அவர்கள்—எனக்கே புரியாத—வடமொழி சுலோகங்கள் எல்லாம் சொல்லி பல கருத்துக்களை நன்ருக எடுத்துரைத்தார்கள். அவரது தொகுதியில் பல கோயில்கள் புதுப்பிக்கப்பட இருக்கின்றன. அவற்றை எல்லாம் அரசாங்கம் பரிசீலனை செய்து நிச்சயமாக ஒத்துக்கொள்ளும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கோயில்களில் உள்ள சிலைகள் திருட்டு போவதுபற்றி திரு. சௌடி சுந்தரபாரதியும், மற்றவர்களும் சொன்னுர்கள். அத்திருட்டு நாளுக்கு நாள் அதிகப்பட்டு வருகிற காட்சியைப் பார்க்கிருேம். தஞ்சை மாவட்டத்தில் பல லட்சக்கணக்கான ரூபாய் மதிப்புடைய சிலைகள் களவு போனதை நாம் அறிவோம். இதன் காரணமாகத்தான் அறநிலையத் துறை அதிகாரிகளுக்கு இது சம்பந்தமாக ஒரு ஆணையிடப்பட்டிருக்கிறது. அவர்கள் ஒவ்வொரு கோயிலிலும் உள்ள சிலைகளின் எண்ணிக்கை, அவற்றின் தனித்தனி மதிப்பு, உயரம், எடை ஆகியவைபற்றி எல்லாம் ஒரு மதிப்பீடு செய்து அதன் நகல்களை எல்லாம் அந்த அந்த வட்டாரத்தில் உள்ள போலீஸ் துறையினருக்கும் அனுப்பவேண்டும், அறநிலையத்துறை அதிகாரிகளுக்கும் அனுப்பிவைக்கவேண்டும் என்று உத்தரவு போட்டிருக்கிருேம். இன்னும் சொல்லப்போனுல் அதுபோன்ற சிலைகளைப் பாதுகாப்பாக வைக்க முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். நல்ல பாதுகாப்பு இல்லை என்கிற கோயில்களில் உள்ள சிலைகளை எல்லாம் எடுத்து அந்த மாவட்டத்திலேயே நல்ல பாதுகாப்புடைய இரண்டு இடங்களில், குறிப்பாக தஞ்சை சரஸ்வதி மகாலில் ஒன்று, இரண்டு திருவாரூர் தியாகராசா கோயிலில் வைக்கலாமா என்றும் யோசிக்கப்பட்டு வருகிறது. கூடுமான வரையில் எந்த எந்த வகைகளில் எல்லாம் சிலைத் திருட்டைத் தடுக்கலாம் என்பது நல்ல முறையில் யோசிக்கப்பட்டு வருகிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அற நிலையங்களுக்கு என்று தனியாக ஒரு வாரியத்தையே அமைத்துவிடவேண்டுமென்று அம்மையார் அவர்கள் சொன்னுர்கள். ஏற்கனவே வாரியம் தான் அமைக்கப்பட்டிருந்தது. 1925-ல் அமைக்கப்பட்ட வாரியம் 1951 வரை செயல்பட்டிருக்கிறது. நிர்வாகம் அப்போது சரியான முறையில் நடக்கவில்லை என்பதற்காகத்தான்

1972 மார்ச் 27] [திரு. மு. கண்ணப்பன்]

1951-ல் இந்து அற நிலைய பாதுகாப்புச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். 1968-ல் அந்தச் சட்டத்தையும் மாற்றி அமைத்துக் கொண்டிருக்கிறோம். வாரியத்தை எடுத்துவிட்டு இதுபோன்ற அமைப்பைக் கொண்டுவந்த காரணத்தினால் நிர்வாகம் நல்ல முறையில் நடைபெறுகிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் கோயில்களின் வருமானம் மூன்று கோடியே தொண்ணூற்றெட்டு லட்சம் என்றால் கழக ஆட்சியில் கோயில்களின் வருமானம் ஐந்து கோடியே ஐம்பத்தைந்து லட்சமாகப் பெருகியிருக்கிறது. அவர்கள் காலத்தில் தான் கோயில்களில் பெருச்சாளிகள் சாப்பிட்டுக்கொண்டிருந்தது எல்லாம். அந்தப் பெருச்சாளிகளைக் கண்டுபிடித்து ஒழிப்பதில்தான் கழக அரசு தீவிர கவனம் செலுத்திவருகிறது. அதற்காகத் தனி அலுவலர்களைப் போட்டு, இதுவரை 32,540 கோயில்களின் சொத்துக்களைப் பல பெருச்சாளிகள் சாப்பிட்டுக்கொண்டிருந்தவை கண்டுபிடிக்கப் பட்டிருக்கின்றன. இதுவரை அந்தத் தனி அதிகாரி கண்டு பிடித்திருப்பது மட்டும் 1,59,322 ஏக்கர்களாகும். அவர்கள் பணியைப் பார்க்கிறபோது இன்னும் சில மாதங்கள் தொடர்ந்து பணியாற்றினால் மேலும் பல ஆயிரக்கணக்கான நிலங்களைக் கண்டு பிடித்துவிடுவார்கள். கண்டு பிடிக்கப்பட்ட நிலங்களை அறநிலையத் துறை ஆட்சியின்கீழ் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

கோயில்களின் உபரி நிதியில் இருந்து—பள்ளிக்கூடம், ஆஸ்பத்திரி போன்றவைகளைக் கட்டுவதைவிட—வருமானம் இல்லாத கோயில்களின் திருப்பணி வேலைகளைக் கவனிக்கவேண்டும் என்றும் சொன்னார்கள். அவர்களுடைய காலத்தில் உபரி நிதியில் இருந்து ஒரு கோடியே பத்தொன்பது லட்சம் ரூபாய்தான் திருப்பணிக்காகச் செலவிடப்பட்டது. ஆனால் கழக ஆட்சியில் 1971-ல் மட்டும் இரண்டு கோடியே பத்தொன்பது லட்சம் ரூபாய் திருப்பணிக்காகச் செலவிடப்பட்டிருக்கிறது. அதோடு அப்போது 334 கோயில்கள் திருப்பணி செய்யப்பட்டன என்றால் இப்போது 698 கோயில்களில் திருப்பணி நடந்திருக்கிறது. பக்தர்கள் என்று பறை சாற்றிக் கொண்டு முன் வருகிறவர்களைவிட இந்த அரசு நல்ல

முறையில்தான் கோயில் நிர்வாகங்களைக் கவனித்து வருகிறது என்பதற்காகச் சொல்கிறேன். கோயில் என்றால்—சரித்திர சம்மந்தமான சான்றுகளை எல்லாம் பார்த்தால், அந்தக் கோயில் மருத்துவ மனையோடு, கல்விச் சாலையோடு, நீதி மன்றத்தோடு இணைந்த ஒன்றாகத்தான் இருந்திருக்கிறது. அதன் காரணமாகத்தான் "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்றும் சொன்னார்கள். எதிர்காலத்தில் இப்படிப்பட்ட நிலைமைகள் தான் நமது கோயில்களில் உருவாக வேண்டும் என்கிற அடிப்படையில் நாம் செயல்படுகிறோம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : கோயில்கள் நல்ல முறையில் இருந்து அவற்றைச் சொல்லி இவை எல்லாம் இருந்தால் பரவாயில்லை. கோயிலே இல்லாமல் போகிறதே என்றுதான் கோயில்களுக்கு முதலிடம் கொடுக்கவேண்டும் என்றேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : உங்கள் காலத்தில் 334 கோயில்களைத்தான் திருப்பணி செய்தீர்கள் என்றால், நாங்கள் 698 கோயில்களைத் திருப்பணி செய்திருக்கிறோம். பழுத்த பக்தி பரம் பரையில் வந்தவர்களைக் காட்டிலும் கோயில்களை நல்ல முறையில் பராமரிக்க வேண்டும் என்பதில் எங்களுக்கு ஒன்றும் அக்கறை குறைந்துவிடவில்லை. கோயில்களுக்குப் போகின்ற பக்தர்களுடைய எண்ணிக்கையும் குறைந்துவிடவில்லை. குறைந்திருந்தால் வருமானம் இவ்வளவு கூடியிருக்காது.

அடுத்து, திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் மதுரை கோயிலில் கடைகள் கட்டுவதுபற்றிச் சொன்னார்கள். கோயிலைச் சுற்றி நூற்றுக்கணக்கான கடைகள்—புது மண்டபத்தில் வைத்திருக் கிறார்கள். இது போன்ற கடை அமைப்பிருந்த இராமேஸ்வரத்தில் சமீபத்தில் ஏற்பட்ட தீ விபத்தினால் லட்சக்கணக்கான ரூபாய்கள் நஷ்டம். அதோடு மிகவும் பழங்காலத்துச் சிற்பங்கள் எனப்படுபவை அழிந்துபட்டிருக்கின்றன. அதைப் பார்க்கும்போது உள்ளபடியே வருந்துகிறோம்.

அதுபோன்று இங்கும் ஏற்பட இடம் விடக்கூடாது என்றுதான் கடைகளை இப்போதுள்ள இடங்களில் இருந்து அகற்றி புதியதாக கட்டிடங்கள் கட்டி நல்லமுறையில் வைக்கலாமா என்று யோசிக்கப் பட்டது.

1972 மார்ச் 27] [திரு. மு. கண்ணப்பன்]

இப்போது நந்தவனம் என்று இருக்கக்கூடிய இடத்தில் நந்த வனமும் இல்லை. அங்கே கட்டலாமா என்று யோசிக்கப்பட்டபோது அங்கே வருகிற பக்தர்களும், சில பெரியவர்களும் எதிர்த்தார்கள் என்கிற காரணத்தினுல் அந்த உத்தேசம் கைவிடப்பட்டுவிட்டது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, இதை ஒரு பிரச்சினையாக வைத்துக்கொண்டு வெளியே பேச வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் பல்வேறு கருத்துக்களைப்பற்றிச் சொல்வதற்கும் விருப்பம் உள்ளவனுக இருந்தாலும் காலம் கடந்துகொண்டிருக் கிறது என்பதை அறிந்து, அறநிலையத் துறையின் சார்பில் பல மாற்றங்கள், பல சீர்திருத்தங்கள், பல நன்மைகள் செய்ய இருக் கிருேம் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோயிலில் உள்ள பரம்பரை அறங்காவலர்களைப்பற்றிச் சொல்லி, கூடுதலான அறங்காவலர்களை நியமிக்க வேண்டுமென்று சொன் ஞர்கள். அதேபோல் கோயில் நிர்வாகத்தைக் கவனிக்க நிர்வாக அதிகாரிகளையும் நியமிக்க வேண்டும். மேலும், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மக்களை—ஒருவரை—கட்டாயமாக அறங் காவலராக நியமிக்க வேண்டுமென்கிற சட்டத்தை வெகு விரைவிலே செய்யலாம் என்று இருக்கிருேம்.

நேற்றையதினம் முன்னுள் முதலமைச்சர்—அறநிலைய அமைச்சர்— திரு. பக்தவச்சலம் அவர்கள் ஒரு பொதுக்கூட்டத்திலே பேசும் போது இதைப்பற்றி, “ நீங்கள் என்ன அதைச் செய்வது, நாங்களே அதைச் செய்துவிட்டோம் ” என்று குற்றம் சாட்டுவதுபோல் பேசி யிருக்கிருர்கள். அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் அதாவது 1966-ல் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மக்களை அறங் காவலர்களாக 62 பேர்களைப் போட்டிருக்கிருர்கள். ஆனுல் நம்முடைய ஆட்சியிலே—1967-லே— 81 பேர்கள் அறங்காவலர் களாக நியமிக்கப்பட்டிருக்கிருர்கள். 1969-லே 105 பேர் அறங் காவலர்களாகப் போடப்பட்டிருக்கிருர்கள். 1971-லே 90 பேர்களை நாம் அறங்காவலர்களாகப் போட்டிருக்கிருேம். ஆகவே, தாழ்த்தப் பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மக்களுக்கு நாம் எல்லா வகையிலும் உயர்வு தந்து அந்தச் சமுதாயத்தை முன்னேற்றி வருகிருேம் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. மு. கண்ணப்பன்] [1972 மார்ச் 27

அப்படித் தொடர்ந்து செய்யலாம் என்றாலும் சட்டத்திலே அந்த மக்களுக்குப் பாதுகாப்பு செய்யப்பட வேண்டுமென்பதற்காகத்தான் ஒரு சட்டத்தைக் கொண்டுவர இருக்கிறோம். அப்படிச் செய்கிற போது, இன்னும் அதிகப்படியான பேர்களுக்கு அறங்காவலர் பொறுப்பைக் கொடுக்க முடியும். அப்போதுதான் ஜாதி வேற்றுமையை நீக்க முடியும். இப்போதே தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்கள் அறங்காவலர்களாக இருந்தபோதிலும், எதிர் காலத்தில் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் விதத்தில் நல்லதொரு சட்டமாக்க வேண்டும் என்ற கொள்கையை வைத் திருக்கிறோம்.

அடுத்தபடியாக, மடங்களைப்பற்றிப் பல உறுப்பினர்கள் கருத்துக் களைத் தெரிவித்தார்கள். மடங்களில் நிர்வாகம் சரியில்லை, கணக்கு கள் சரியாக இல்லை என்றெல்லாம் தெரிவித்தார்கள். அப்படிப்பட்ட நிர்வாகத்தைச் சீர்திருத்துகின்ற வகையில்தான், மடங்களின் கணக்கு களைச் சரிபார்க்கும் வகையில்தான், மடங்களின் பணத்தைச் சீராகச் செம்மையான முறையில் செலவிட வேண்டுமென்கிற வகையில்தான் அதற்காக ஒரு தனி அட்மினிஸ்ட்ரேடிவ் ஆபீசர்—நிர்வாக அதிகாரி—நியமிக்கப்படுவது நல்லது என்று இருக்கிறோம்.

அடுத்தபடியாக கன்னியாகுமரி தேவஸ்தானத்தைப்பற்றிச் சொன் னார்கள். இப்போது அந்த வாரியத்தில் நம் சார்பில் உறுப்பினர்கள் இருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். திருவிதாங்கூர் ஆளுநர் அவர்கள் ஒருவரை நியமித்திருக்கிறார். இதற்கு 13.68 லட்சம் ரூபாய் ஆண்டு மானியத் தொகையாகக் கொடுக்கிறோம். வெளியிலிருந்து நன்கொடை எதுவும் வருவதில்லை. அறங்காவலர்கள் மாநில அரசினாலே நியமிக்கப்பட வேண்டும் என்கிற சட்டத்தை எப்படித் திருத்துவது என்பது குறித்துப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். மாநிலப் பிரிவினையின்போது எல்லைபற்றிய சட்டப் பிரச்சினை இருப்ப தால் இதுகுறித்து மத்திய அரசின் யோசனையைக் கேட்பதாக இருக் கிறோம். இதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே இருக்கின்ற உறுப்பினர்கள் தொடர்ந்து செயலாற்று வார்கள். எதிர்காலத்தில் வாரியத்தில் உறுப்பினர்களை நியமித்துக் கொள்வதா, அல்லது தமிழ்நாட்டில் பிற பகுதிகளில் இருக்கின்ற முறைபோல தனியாக நியமிப்பதா என்பதைப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். பின்னர் சரியான நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1972 மார்ச் 27] [திரு. மு. கண்ணப்பன்]

அடுத்தபடியாக, ஏழை எளிய மக்கள் எளிய முறையிலும், குறைந்த செலவிலும் திருமணம் செய்துகொள்ள வேண்டுமென்கிற அடிப்படையில் கோயில்களின் சார்பில் திருமண மண்டபங்களைக் கட்டியிருக்கிறோம். மிகவும் ஏழைகளாயிருப்பவர்கள், கையிலே காசில்லாதவர்கள், "தாங்கள் மிகவும் ஏழைகள்" என்பதற்கான சான்றுகளைத் தக்க அதிகாரிகளிடத்திலிருந்து பெற்றுத் தருவார்களானால் அவர்களுக்கு இலவசமாகவே திருமணங்களைச் செய்து கொடுப்பதாக இருக்கிறோம். மேலும், அந்தக் கோவிலிலிருந்து 100 அல்லது 150 ரூபாய் வரையிலும் செலவு செய்து அந்தத் திருமண தம்பதிகளுக்குத் துணிமணிகள் போன்றவற்றையும், மாங்கல்யம் போன்றவற்றையும் வாங்கிக்கொடுத்து, திருமணத்தை நடத்தி வைக்க வேண்டுமென்கிற நல்ல திட்டத்தைச் செய்ய இருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் அறிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எந்தெந்தக் கோயிலில் நிதி வசதி இருக்கிறதோ, அந்தக் கோயிலின் நிர்வாக அதிகாரி ஆணையாளரின் அனுமதியை முன்கூட்டியே பெற்று இந்த விதமான நல்ல காரியங்களில் ஈடுபடலாம்.

அடுத்தபடியாக முதியோர்களுக்காக ஒரு திட்டம். நாம் இப்பொழுது 65 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு "ஓல்ட் ஏஜ் பென்ஷன்" கொடுக்கிறோம். எல்லோருக்கும் இது கிடைக்காது. அப்படிப்பட்டவர்களைப் பிச்சைக்காரர் விடுதியிலும் சேர்க்க இயலாது. ஆகவேதான், எந்தெந்தக் கோயிலில் உபரி நிதி இருக்கிறதோ, அதைக்கொண்டு வயதான முதியவர்களுக்காக முதியோர் இல்லங்களை ஏற்படுத்துவது என்கிற முடிவினை எடுத்திருக்கிறோம். இதில் இந்தத் துறை நல்ல முறையில் செயலாற்றும் என்று சொல்லிக் கொள்கிறேன். இன்னும் பல்வேறு உறுப்பினர்கள் இந்த மானியக் கோரிக்கைமீது நல்ல பல கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். பலருக்குப் பதில் சொல்ல முடியாமல் காலம் குறுக்கே இருப்பதால், அவர்களுடைய கருத்துக்களை ஏற்று, நிறைவேற்றித் தர தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்து, இந்த அளவில் என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இனி வாக்கெடுப்பு. (திரு. கே. எம். சுப்பிரமணியம்: சார், ஒரு விளக்கம்) விளக்கங்கள் எதுவும் தேவையில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கமாகவே சொல்லிவிட்டார். இன்னும் விளக்கம்

கேட்டுக்கொண்டு, பதில் சொல்ல ஆரம்பித்தால், சபாநாயகரின் மணி அடிப்பதற்குப் பதிலாக அர்த்த ஜாம பூஜை மணிதான் அடிக்கும். இப்போதே நேரம் அதிகமாகிவிட்டது. அடுத்து, வாக்கெடுப்பு.

நிதிக் கோரிக்கை எண் 8-ஏ-க்கு திரு. கே. டி. கே. தங்கமணி, திரு. ஜேம்ஸ், திரு. பி. வெங்கடசாமி ஆகியோர் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்தவில்லையாதலால், அவை பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னுள்ள கேள்வி—

" நிதிக் கோரிக்கை எண் 8-ஏ—பால் வழங்குத் திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 5,15,32,200-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை 9-ஏ-க்கு திரு. கே. எம். சுப்பிரமணியம், திரு. கே. டி. கே. தங்கமணி ஆகியோர் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்தவில்லையாதலால், அவை பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னுள்ள கேள்வி—

" நிதிக் கோரிக்கை எண் 9-ஏ—1959-ம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய-அறக்கட்டளைகள் சட்டத்தின் நிர்வாகம்—என்ற தலைப்பின் கீழ் ரூ. 60,80,200-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும். "

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

ரவு
48 மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

1972 மார்ச் 27]

6. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

83. Notification issued with G.O. Ms. No. 2951, Agriculture, dated the 10th November 1971, in regard to regulation of trade over the purchase and sale of blackgram in the Tiruchirappalli district. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

B. *Reports, Notifications and other Papers.*

128. Notification issued with G.O. Ms. No. 109, Agriculture, dated the 17th January 1972, in regard to delegation of powers to certain officers of the Fisheries Department under section 7 of the Indian Fisheries Act, 1897 (Central Act IV of 1897).

@129. Review on the progress made by the Forest Department. (Tamil).

@ 130. Policy note on Cinchona Department (Tamil).

@ 131. Note on Agricultural Demands 1972–73 (Tamil).

@ 132. Agricultural Progress in Tamil Nadu—Salient features (Tamil).

@ 133. Policy note on Dairy Development Department 1972-73 (English and Tamil).

134. The Performance Budget relating to Fisheries Department 1972–73.

135. Commercial Budget of the Cinchona Department 1972–73.

136. Commercial Budget of the Dairy Development Department.

137. Report of the Committee on Estimates on Community Development Project.

@ Despatched to Members on 24th March 1972.

சட்டமன்றம் LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1972 மார்ச் 27

இணைப்பு

38-ம் பக்கத்தில் 736-ம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.

(*a*) Yes.

(*b*) The following 12 cycle Rickshaw Associations have been issued fifty-five cycle rickshaw licences in 1971 as shown against each of them.

Name of the Association.	*Number of licence Issued.*
1. Madras District Cycle Rickshaw Urimaiyalar Sangam, Madras-24.	5
2. South Madras Cycle Rickshaw Thozhilalar Munnetra Sangam, Madras-5.	5
3. Madras City Cycle Rickshaw Drivers Co-operative Society, Madras-14.	5
4. Madras District Cycle Rickshaw Thozhilalar Munnetra Sangam, Madras-14.	5
5. Madras District National Cycle Rickshaw Thozhilalar Sangam, Madras-5.	3
6. North Madras Thozhilalar Munnetra Sangam, Madras-1.	5
7. Depressed Classes League, Madras-1.	5
8. Desia Cycle Rickshaw Thozhilalar Sangam, Madras-5.	5
9. Madras District Indira Gandhi Desiya Rickshaw Thozhilalar Munnetra Sangam, Madras-14.	2
10. Tamil Nadu Cycle Rickshaw Thozhilalar Sangam, Madras-4.	5
11. Cycle Rickshaw Thozhilalar Munnetra Sangam, Madras-7.	5
12. Madras District Cycle Rickshaw Thozhilalar Munnetra Sangam, Madras-12.	5

1972 மார்ச் 27]

(அ) ஆம்.

(இ) 1971-ல் கீழ்க்கண்ட 12 சைக்கிள் ரிக்ஷா சங்கங்களுக்கு அவை ஒவ்வொன்றுக்கும் எதிரே குறிப்பிட்டபடி மொத்தம் 55 சைக்கிள் ரிக்ஷா உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன.

சங்கத்தின் பெயர்.	வழங்கப்பட்ட உரிமங்களின் எண்ணிக்கை.
1. சென்னை மாவட்ட சைக்கிள் ரிக்ஷா உரிமையாளர் சங்கம், சென்னை-24	5
2. தென் சென்னை சைக்கிள் ரிக்ஷா தொழிலாளர் முன்னேற்றச் சங்கம், சென்னை-5	5
3. சென்னை மாநகர் சைக்கிள் ரிக்ஷா வலவர் கூட்டுறவுச் சங்கம், சென்னை-14	5
4. சென்னை மாவட்ட சைக்கிள் ரிக்ஷா தொழிலாளர் முன்னேற்றச் சங்கம், சென்னை-14	5
5. சென்னை மாவட்ட தேசிய சைக்கிள் ரிக்ஷா தொழிலாளர் சங்கம், சென்னை-5	3
6. வடசென்னை தொழிலாளர் முன்னேற்ற சங்கம், சென்னை-1	5
7. தாழ்நிலை வகுப்பினர் சங்கம், சென்னை-1	5
8. தேசிய சைக்கிள் ரிக்ஷா தொழிலாளர் சங்கம், சென்னை-5	5
9. சென்னை மாவட்ட இந்திரா காந்தி தேசிய ரிக்ஷா தொழிலாளர் முன்னேற்றச் சங்கம், சென்னை-14	2
10. தமிழ்நாடு சைக்கிள் ரிக்ஷா தொழிலாளர் சங்கம், சென்னை-4	5
11. சைக்கிள் ரிக்ஷா தொழிலாளர் முன்னேற்றச் சங்கம், சென்னை-7	5
12. சென்னை மாவட்ட சைக்கிள் ரிக்ஷா தொழிலாளர் முன்னேற்றச் சங்கம், சென்னை-12	5

[1972 மார்ச் 27

இணைப்பு 2.

[49-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

கால்நடை வளர்ப்பு, கால்நடை மருத்துவக் கல்வி—ஆராய்ச்சித் துறைகள்.

கோரிக்கை எண் 18—கால்நடை வளர்ப்பு (1972–73).

பேரவைத் தலைவர் அவர்களே!

கோரிக்கை எண் 18—கால்நடை வளர்ப்புத் துறையின்கீழ் ரூ. 4,40,59,700-க்கு மேற்படாத ஒரு தொகையை அரசிற்கு வழங்குமாறு இப்பேரவையை வேண்டிக்கொள்கிறேன்.

கால்நடை வளர்ப்புத் துறையின் முக்கியக் குறிக்கோள் கறவை மாடுகள், ஆடுகள், பன்றிகள், கோழிகள் உட்பட கால்நடைச் செல்வத்தைப் பெருக்குவதாகும். இக்குறிக்கோள் நிறைவேற, கால்நடைகள் இனப்பெருக்கம் செய்வதிலும் அவற்றிற்குத் தீவனமும், இரையும் வழங்குவதிலும் கால்நடைகளைப் பேணுவதிலும் புதிய அறிவியல் முறைகள் பின்பற்றப்படும். மேலும், கால்நடை நோய்களைத் தடுக்கவும் அவற்றிற்கு சிகிச்சை அளிக்கவும், உரிய வசதிகள் அனைத்தும் செய்து தரப்படும். இந்த நோக்கத்துடன் பணியாற்றும் கால்நடை வளர்ப்புத்துறை நடவடிக்கைகளின் இறுதிக் குறிக்கோள், நமது மாநிலத்திலுள்ள இழுவை மாடுகளின் ஆற்றலை உயர்த்துவதும், நமது மாநில மக்கள் உடல் நலனும், வலிமையும் உடையவராகத் திகழ அவர்களுக்கு, உயரிய சத்துக்களடங்கிய உணவை அளிக்கும் பொருட்டு, பால் பொருட்களின் உற்பத்தி, முட்டை, இறைச்சி, கோழி இறைச்சி, பன்றி இறைச்சி ஆகியவற்றின் உற்பத்தியைப் பெருக்கி மக்களுக்கு வழங்குவதுமாகும்.

நமது மாநிலத்தின் பொருளாதாரம் பெருமளவுக்கு வேளாண்மையைச் சார்ந்துள்ளது. வேளாண்மையின் செழிப்பும், கால்நடைச் செல்வத்தின் வளமும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடையனவாகும். நமது மாநிலத்தின் கால்நடைகளின் தொகை மிகப் பெருமளவில் உள்ளது. கால்நடைகளின் எண்ணிக்கை 108.59 லட்சமாகும். எருமைகளின் தொகை 27.24 லட்சமாகும். செம்மறி ஆடுகளின் தொகை 66.21 லட்சமாகும். வெள்ளாடுகளின் தொகை 37.71 லட்சம். பன்றிகளின் தொகை 4.75 லட்சம். கோழிகளின் தொகை 112.26 லட்சம். இப்புள்ளி விவரங்கள் 1966-ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட கால்நடைகள் தொகைக் கணிப்பை ஒட்டியதாகும். ஆனால்,

1972 மார்ச் 27]

கால்நடைகள் இவ்வளவு பெருந்தொகையாக இருப்பது கால்நடைகளின் எண்ணிக்கையில் அடைந்த முன்னேற்றத்தைக் காட்டுகிறதே ஒழிய, கால்நடைகளின் தரத்தில் அடைந்த முன்னேற்றத்தைக் காட்டவில்லை. நம்மிடம் இவ்வளவு ஏராளமான எண்ணிக்கையில் கால்நடைகள் இருந்தும்கூட, கால்நடைகள் தரத்தை உயர்த்தும் முறையை நாம் முன்னமே அணுகாமல் விட்டுவிட்டதால், கால்நடை உற்பத்திப் பொருள்களை நாம் பயன்படுத்துகின்ற அளவானது தொடர்ந்து கவலைப்படும் வகையில் மிக மிகக் குறைவாகவே உள்ளது. அதாவது, ஆண்டொன்றுக்கு சராசரியாக நாம் ஒவ்வொருவரும் உட்கொள்ளும் பால் 30 லிட்டர்; முட்டைகளின் எண்ணிக்கை 8; இறைச்சியின் அளவு 2.3 கிலோ கிராம்.

நமது கால்நடைகளின் தரத்தை உயர்த்தவும், அவை மிகுந்த பயன்தரும் வகையில் அவற்றை மேம்படுத்தவும், இத்துறை பல்லாண்டுகளாகப் பல நடவடிக்கைகளை எடுத்து வந்துள்ளது. அவற்றில் குறிப்பிடத்தக்க சில திட்டங்கள் பின்வருவன:—மையக் கிராமத் திட்டங்கள், செயற்கை முறை கருத்தரிப்புத் திட்டங்கள், கால்நடை வளர்ச்சி மும்முரத் திட்டங்கள், கோழி வளர்ச்சி மும்முரத் திட்டங்கள், முட்டைகள், கோழிகள்—உற்பத்தி விற்பனை மும்முரத் திட்டங்கள், பன்றி வளர்ப்புத் திட்டங்கள், கோமாரி ஒழிப்புத் திட்டம் ஆகியன. அரசு, குறிக்கோள்களை மிக விரைந்து எய்தும் வகையில், வரும் ஆண்டுகளில் செயற்படுத்துவதற்காகப் பல திட்டங்களை உருவாக்கியுள்ளது.

நிர்வாக அமைப்பு.

துறையின் அலுவல்களைப் பெருமளவு பரவலாக்கி, தொடராகவும், ஒரு சீராகவும் கட்டுப்பாட்டு அதிகாரம் செலுத்தி, கால்நடை வளர்ப்புத் துறையின் நடவடிக்கைகள் உழவர்களுடன் நெருங்கிய நிலையில் நன்மை புரியும் வண்ணம், இத்துறை 1—1—1970 முதல் சீரமைக்கப்பட்டுள்ளது.

இத்துறை, அலுவல் அடிப்படையில் பணியாற்றி வந்ததற்கு மாறாக, 1—1—1970 முதல் வட்டார அடிப்படையில் பணியாற்றத் தொடங்கியது. திருத்தி அமைத்த அமைப்பிற்கிணங்க இம்மாநிலம் ஆறு வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு வட்டாரமும் வட்டாரத் துணை இயக்குநர் ஒருவர் தலைமையின் கீழ் இயங்குகிறது. இந்த ஆறு வட்டாரங்களின் தலைமையிடங்களாவன:—சென்னை,

வேலூர், கோயம்புத்தூர், தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி ஆகியனவாகும். சென்னையிலுள்ள வட்டாரத் துணை இயக்குநரைத் தவிர, மற்ற வட்டாரத் துணை இயக்குநர் ஒவ்வொருவருக்கும் உதவி யாக வல்லுநர்கள் மூவர் உள்ளனர். கோழிகள் வல்லுநர் ஒருவர், கால்நடைகள் வல்லுநர் ஒருவர், கால்நடை நோய் ஆய்வுப் பணி குறித்த வல்லுநர் ஒருவர்—ஆக ஒரு வட்டாரத்தில் மூன்று வல்லுநர்கள் வீதம், இம்மாநிலத்திலுள்ள ஐந்து வட்டாரங்களில், பதினைந்து வல்லுநர்கள் பணியாற்றுகின்றனர். வட்டாரத் துணை இயக்குநரின் கீழ் கால்நடை வளர்ப்பு உதவி இயக்குநர்கள் 59 பேர் உள்ளனர் ; இவர்கள் ஒவ்வொருவரது அதிகார வரம்பும் தோராய மாக வருவாய்க் கோட்டம் ஒன்றின் அதிகார வரம்புக்கு நிகரான தாகும். இந்த உதவி இயக்குநர்கள் கால்நடை நோய்கள் பற்றிய ஆய்வு, அவற்றிற்கு சிகிச்சை அளித்தல் ஆகிய பணிகளை மேற் கொண்டிருப்பதோடு, கோழிகள், கால்நடைகள், செம்மறி ஆடுகள், பன்றிகள் இவற்றின் வளர்ச்சிப் பணி, செயற்கை முறை கருத்தரிப்புப் பணி, மையக் கிராம வளர்ச்சிப் பணி, மற்றும் ஏனைய வளர்ச்சிப் பணியைச் சார்ந்த நடவடிக்கைகள் ஆகியவற்றுக்கும் பொறுப்பு வகிக்கின்றனர். சமுதாய வளர்ச்சி வட்டாரம் ஒவ்வொன்றிலும் கால்நடை மருந்தகம் ஒன்றேனும் உள்ளது. இவை கால்நடை உதவி மருத்துவர் இருவரால் நிர்வகிக்கப்படுகின்றன. ஒருவர் கால் நடை நோய்க்கு சிகிச்சையளிக்கும் பணியையும், இன்னொருவர் வளர்ச்சிப் பணியையும் மேற்கொள்கிறார். ஊராட்சி ஒன்றிய அளவிலும், கிராம அளவிலும் கால்நடை வளர்ப்புப் பணியை கால் நடை வளர்ப்பு வளர்ச்சிப் பணி அதிகாரிகள் கவனிக்கின்றார்கள். இவர்கள் ஒரு கிளை நிலையத்திற்கு ஒருவர் வீதம் உள்ளனர். ஒரு கிளை நிலையத்தின்கீழ் சுமார் ஆறு முதல் பத்து கிராமங்கள் உள்ளன. இத்துறை, திருத்தியமைக்கப்பட்டதற்கு முன்னதாக பல்வேறு அமைப்புகள் மூலம் செய்யப்பட்ட எல்லா வகைப் பணிகளும், அதாவது, மைய கிராமப் பணி, செயற்கை முறை கருத்தரிப்புப் பணி போன்றவை அனைத்தும் தற்போது இந்த வளர்ச்சிப் பணி அதிகாரி களால் கவனிக்கப்பட்டு வருகின்றன. இத்துறையின் பல்வேறு நிறுவனங்களிலும் பணிபுரிகின்ற கால்நடை மருத்துவ அதிகாரிகள் முதலானோர் எண்ணிக்கை பின்வருமாறு :—

கால்நடை உதவி மருத்துவர் 883 பேர் ; கால்நடை மருத்துவம்—கால்நடை ஆய்வாளர்கள் 87 பேர் ; முதல் நிலை கால் நடை உதவியாளர்கள் 620 பேர் ; இரண்டாம் நிலை கால்நடை உதவியாளர்கள் 2,735 பேர். கீழ்க்கண்ட இடங்களில் மாவட்டக்

1972 மார்ச் 27]

கால்நடைப் பண்ணைகள் ஆறு, பண்ணைக் கண்காணிப்பாளர்களின் தலைமையில் அமைந்துள்ளன ; இவற்றில், ஹோசூரில் உள்ள பண்ணை கோழிக்குஞ்சு பொறிக்கும் அதிகாரி—கண்காணிப்பாளர் ஒருவரது பொறுப்பிலுள்ளது :—

1. ஹோசூர்—தருமபுரி மாவட்டம்.

2. புதுக்கோட்டை—திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

3. ஒரத்தநாடு, ஈச்சங்கோட்டை, கொருக்கை—தஞ்சாவூர் மாவட்டம்.

4. அபிஷேகப்பட்டி—திருநெல்வேலி மாவட்டம்.

5. உதகமண்டலம்—நீலகிரி மாவட்டம்.

6. செட்டிநாடு—இராமநாதபுரம் மாவட்டம்.

கீழ்க்கண்ட இடங்களில் பண்ணைக் கண்காணிப்பாளர்களின்கீழ் செம்மறியாட்டுப் பண்ணைகள் இரண்டு உள்ளன :—

சின்னசேலம்—தென் ஆர்க்காடு மாவட்டம்.

சாத்தூர்—இராமநாதபுரம் மாவட்டம்.

காட்டுப்பாக்கத்தில் கோழிக்குஞ்சு பொறிக்கும் பணி அதிகாரி—கண்காணிப்பாளரது நிர்வாகத்தின்கீழ் கோழிப்பண்ணை ஒன்று உள்ளது. ஆக மொத்தத்தில் கால்நடை வளர்ப்புத் துறையின் கட்டுப்பாட்டு அதிகாரத்தின் கீழும், மேற்பார்வையின் கீழும் 9 பெரிய பண்ணைகள் உள்ளன. அவற்றில் ஆறு பண்ணைகள் கால்நடை பண்ணைகள் ; இரண்டு செம்மறி ஆட்டுப் பண்ணைகள் ; ஒன்று கோழிப் பண்ணை ஆகும்.

இவை தவிர, மாநிலம் முழுவதற்கும் கோமாரி ஒழிப்புத் திட்டத்தின் பொறுப்பில் கோமாரி நோய் குறித்த அதிகாரி ஒருவர் உள்ளார். மாநிலத்திலுள்ள பல்வேறு கோழிப்பண்ணை பிரிவுகளுக்குத் தேவையான கோழி இரைகள் உற்பத்தி செய்யும் பொறுப்பிலே கோழி இரை கலவை அதிகாரி ஒருவர் உள்ளார். பல்வேறு செம்மறி ஆடு—கோழி கூட்டுறவுச் சங்கங்களின் பொறுப்பில் கூட்டுறவுச் சங்கங்கள் துணைப்பதிவாளர் ஒருவர் உள்ளார். கால்நடைகள் குறித்த புள்ளி விவரத் தகவல்களைச் சேகரித்து கால்நடை மேம்பாட்டுக்காக, அவற்றை எடுத்துக்காட்டும் பொருட்டு கால்நடை வளர்ப்பு புள்ளிவிவர அதிகாரி ஒருவரும் உள்ளார்.

[1972 மார்ச் 27

தற்போது இம் மாநிலத்தில் கால்நடை மருத்துவ மனைகள் 35 உள்ளன ; அவற்றில் சைதாப்பேட்டை, திருநெல்வேலி, கோயம்புத்தூரிலுள்ள மூன்று கால்நடை மருத்துவ மனைகளும், மருத்துவ ஆய்வுக் கூடங்களுடன் முழுமையான மருத்துவமனை களாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன ; இன்னும் கால்நடை மருத்துவ மருந்தகங்கள் 485-ம், தனி மருத்துவமனை ஆய்வு கூடங்கள் 13-ம் இம்மாநிலத்தில் உள்ளன.

துறையின் திட்ட நடவடிக்கைகள் பெருமளவில் உயர்ந்துள்ள தால் துறையின் இயக்குநருக்கு உதவியாக, திட்டமிடுதல், வளர்ச்சிப் பணிகள் குறித்த இணை இயக்குநர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். திருத்தியமைக்கப்பட்ட பின்னர், துறையின் நிர்வாக அமைப்பைக் காட்டும் விளக்க வரைபடம் ஒன்று இத்துடன் இணைக்கப் பட்டுள்ளது. (இணைப்பு 1).

வளர்ச்சித் திட்டம்.

துறையால் மேற்கொள்ளப்பட்ட முக்கியமான திட்டங்களும் நடவடிக்கைகளும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

கால்நடை வளர்ச்சி.—இம் மாநிலத்தில் உள்ள அங்கீகரிக்கப் பட்ட இனப் பெருக்கக் கால்நடை இனங்களாவன :—

(1) காங்கேயம்.

(2) உம்பளாச்சேரி.

(3) ஹலிகார்.

(4) ஆலம்பாடி.

(5) பர்கூர்.

(6) புலிக்குளம்.

பர்கூர், புலிக்குளம் இனக் கால்நடைகள், தற்போது மிகக் குறைந்த எண்ணிக்கையிலேயே உள்ளன. அவற்றிற்கு இருந்து வரும் தேவையும் மிகக் குறைவாகவே உள்ளது. எனவே, அவற்றைப் பெருக்குவதற்கு இப்போது ஊக்கமளிக்கப்படவில்லை. கிராமப் பகுதிகளிலுள்ள இனம் தெரியாத கால்நடைகளுடன், தரமான உயர் இனங்களான சிந்தி, தர்பார்கர், கீர், காங்கேயம் ஆகிய இனங்களைச் சேர்ந்த காளைகளைச் சேர்த்து அக் கால்நடைகளின் தரம் உயர்த்தப் பட்டு வருகின்றது. காங்கேய இனக் காளை நமது மாநிலத்திற்கு

1972 மார்ச் 27]

நல்ல பெயரைப் பெற்றுத் தந்துள்ளது. இந்த இனம் நாடெங்கிலும் புகழை ஈட்டி வருவதோடு, இவற்றிற்கு அதிக தேவையும் உள்ளது. இவ்வினம் நமது மாநிலத்தில் பாதிப் பகுதிகளில் பரந்துள்ளது. நீலகிரி, கோடைக்கானல் போன்ற மலைப் பகுதிகளிலும் கோயம்புத்தூர், மதுரை, சென்னை ஆகிய பால் உற்பத்திப் பகுதிகளிலும் நமது கறவை மாடுகளுடன் வெளிநாட்டு இனக் காளைகளான பிரீசியன், ஜெர்சி ஆகிய காளைகளை சேர்த்து முடிந்த அளவுக்கு கலப்பு இனப் பெருக்கம் செய்யப்படுகிறது. உள்ளூர் எருமைகள், முர்ரா என்னும் எருமைகளுடன் சேர்க்கப்பட்டு அவற்றின்மூலம் கலப்பு இனப் பெருக்கம் செய்து உள்ளூர் எருமைகளின் தரம் உயர்த்தப்படுகிறது.

உள்ளூர் கால்நடை இனங்களை நம் நாட்டிலேயே உள்ள பொலி காளைகளுடன் சேர்த்தும், வெளிநாட்டு இனப் பெருக்கக் காளைகளுடன் சேர்த்தும் அவற்றின் தரத்தை உயர்த்தும் பொருட்டும், எவ்வாறு வளர்க்க வேண்டும் என்பதை விவசாயிகளுக்கு எடுத்துரைக்கவும் சிறந்த பொலி காளைகளை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்கும் பொருட்டும், இம் மாநிலத்தில் கால்நடைப் பண்ணைகள் தொடங்கப்பட்டன. பல்வேறு கால்நடைப் பண்ணைகளில் மேற்கொள்ளப்பட்ட பணிகளும் அவற்றின் பயன்களும் கீழே வருமாறு :—

உள் நாட்டினத்தையும், அயலினத்தையும் சேர்ந்த உயர்ந்த பயன் தரக்கூடிய, உயர் இனவகைக் கறவை மாடுகளை அறிமுகப்படுத்துதல்.

இரட்டைப் பயன் கருதி உள்நாட்டுக் கால்நடைகளைத் தேர்ந்தெடுத்து, வளர்த்து அவற்றை உயர் இனத்தைச் சேர்ந்த ஆண் இனத்துடன் சேரவிட்டு இனப் பெருக்கம் செய்தல்.

இனப் பெருக்கத்திற்காக நல்ல தரமான பொலி காளைகளைத் தனியார்களுக்கும், உழவர்களுக்கும், அரசு நிலையங்களுக்கும் அரசு போன்ற நிலையங்களுக்கும் வழங்குதல்.

தீவனம், இனப் பெருக்கம் செய்தல், நிர்வாகத் திறமை, தொழில் நுட்ப யுத்திகள் குறித்துக் கால்நடை இனப் பெருக்கம் செய்வோர்க்கு விளக்கப் பிரிவுகளாகப் பணியாற்றுதல்.

மாணவர்களுக்கும் உழவர்களுக்கும் பயிற்சி நிலையமாகப் பணியாற்றுதல்.

[1972 மார்ச் 27

நல்ல தரமான கால்நடையையும், கோழி இனத்தையும் உற்பத்தி செய்யும் நோக்கத்துடன் கால்நடைகள், செம்மறியாடுகள், கோழி இனங்கள், பன்றிகள் வளர்ச்சி குறித்து ஆய்வு நடத்துதல்.

மேம்பாடடைந்த தரமான புல் நாற்றுகளைக் கிராமங்களில் உள்ள உழவர்களுக்கு வழங்குதல், தீவன விளக்கப் பாத்திகள் ஏற்படுத்துதல்.

கால்நடைப் பண்ணைகள் அனைத்திலுமுள்ள தீவனம், தானியங்கள் பயிரிடப்பட்டுள்ள பகுதி, உற்பத்தியான பால் அளவு, இருப்பிலுள்ள கால்நடைகளின் எண்ணிக்கை, பண்ணைகளின் வரவு-செலவு ஆகியவை குறித்த விவரங்கள் II முதல் V வரையிலான பிற்சேர்க்கைகளில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இனப் பெருக்கத்திற்காகப் பல்வேறு கால்நடைப் பண்ணை களிலிருந்து விற்கப்பட்ட பொலி காளைகளின் எண்ணிக்கையும், அவற்றின் மதிப்பும் பின்வருமாறு :—

	விற்கப்பட்ட பொலிகாளைகளின் எண்ணிக்கை.	மதிப்பு. (ரூபாயில்.)
(1)	(2)	(3)
(i) 1966–67	192	1,53,600
(ii) 1967–68	123	98,400
(iii) 1968–69	102	81,600
(iv) 1969–70	74	59,200
(v) 1970–71	62	49,600

ஊக்கமளித்து வளர்க்கும் திட்டம் (Premium Scheme) கைவிடப் பட்டது. அதன் விளைவாக ஊராட்சி ஒன்றியங்களும், கால்நடைச் சொந்தக்காரர்களும், இனப் பெருக்கம் செய்யும் பொலிகாளை பண்ணைகளிலிருந்து வாங்குவதற்கு முன்வரவில்லை. இதன் காரண மாக, இனப் பெருக்கம் செய்யும் பொலிகாளைகள் விற்பனை குறைந்து விட்டது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1972 மார்ச் 27]

இனப் பெருக்கத்திற்காக, கால்நடை மருந்தகங்கள், கால்நடை மருத்துவ மனைகள், பண்ணைகள் முதலியவற்றிற்கு மாற்றப்பட்ட கால்நடைகளின் எண்ணிக்கை பின்வருமாறு :—

	மாற்றப்பட்ட கால் நடைகளின் எண்ணிக்கை.	மதிப்பு. (ரூபாயில்.)
(1)	(2)	(3)
(i) 1966–67	350	2,80,000
(ii) 1967–68	140	1,12,000
(iii) 1968–69	213	1,70,400
(iv) 1969–70	170	1,36,000
(v) 1970–71	386	3,08,800

மையக் கிராமத்திட்டம்

கால்நடை இனப் பெருக்கத்தில் அறிவியல் முறைகளைக் கையாண்டு கால்நடை இனப் பெருக்கம், தீவனம், நிர்வாக முறைகள், நோய்க் கட்டுப்பாடு, விற்பனை போன்றவற்றையும், கால்நடைகளின் நோயற்ற வாழ்வு, திறன், உற்பத்தி ஆகியவற்றையும் மேம்படுத்துவதுதான் மையக் கிராமத் திட்டத்தின் நோக்கமாகும். உற்பத்தித் திறனில் சிறந்தவையென மெய்ப்பிக்கப்பட்ட நல்வகைப் பொலிகாளைகள் மையக் கிராம நிலையங்களில் இருக்கின்றன. இக் காளைகளிடமிருந்து சேகரிக்கப்பட்ட விந்து, கருத்தரிப்பதற்காகக் கிராமங்களிலுள்ள நிலையங்களுக்கு அனுப்பப்படுகின்றன. மையக் கிராமம் என்பது, இனப் பெருக்க வயதை அடைந்த 10,000 பசுக்கள் அல்லது எருமைகளை உடைய அடுத்தடுத்து இருக்கிற ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கிராமங்கள் அடங்கிய ஒருங்கிணைப்புப் பகுதி என்று பொருள்படும். இத்துறை சீரமைக்கப்படுவதற்கு முன்பு, 75 மையக் கிராம வளர்ச்சி வட்டாரங்கள் இருந்தன. நேர்வுக்கேற்ப ஒவ்வொரு வட்டாரத்திலும் 6 முதல் 10 துணை நிலையங்களாக மொத்தம் 650 நிலையங்கள் இருந்தன. மையக் கிராம நிலையம் ஒவ்வொன்றும், பயிற்சி பெற்ற கால்நடை உதவியாளர் ஒருவரின் பொறுப்பில் இருந்தது. மையக் கிராம வளர்ச்சி வட்டாரம் ஒவ்வொன்றும், பயிற்சி பெற்ற கால்நடை உதவி மருத்துவர் ஒருவரின் பொறுப்பில் இருந்தது. இத்துறை சீரமைக்கப்பட்ட பின்னர், இத்திட்டம் இத் துறையின் பொது நடவடிக்கைகளோடு இணைக்கப்பட்டுள்ளது.

[1972 மார்ச் 27

இத்துறை சீரமைக்கப்பட்ட பின்னரும் இத்திட்டத்தை முனைப்பாகச் செயல்படுத்தும் நோக்கத்துடன், முன்பிருந்த மையக் கிராமப் பகுதிகளில் 1970–71-ல் 21 கால்நடை மருந்தகங்கள்/கால்நடை மருத்துவ மனைகள்—மையக் கிராம நிலையங்கள் தொடங்கப்பட்டன. முன்பிருந்த மையக் கிராமப் பகுதிகளில் உள்ள 56 கால்நடை மருந்தகங்கள்/கால்நடை மருத்துவமனைகளை விரிவுபடுத்தி அவற்றின் பெயர் கால்நடை மருந்தகங்கள்—கால்நடை மருத்துவ மனைகள்—மையக் கிராம நிலையங்கள் என்று மாற்றியமைக்கப்பட்டு அங்கு தேவையான பணியாளர்களும் அமர்த்தப்பட்டுள்ளனர். 1971–72-ல், மேலும் இரு கால்நடை மருந்தகங்கள்—மையக் கிராம நிலையங்களை, திருச்சி மாவட்டத்தில் புத்தூரிலும், மதுரை மாவட்டம், உத்தம பாளையம் வட்டத்தில் கூடலூரிலும் ஏற்படுத்த அனுமதி வழங்கப் பட்டுள்ளது. ஆகவே, இம்மாநிலத்தில் மொத்தம் 79 கால்நடை மருத்துவ நிலையங்கள், மையக் கிராமப் பணியைக் கவனித்து வருகின்றன.

1970–71-ல் 17,55,879 மாடுகளுக்கு செயற்கை முறையில் கருத்தரிப்பு செய்யப்பட்டது. 17,25,388 மாடுகளுக்குத் தடுப்பு ஊசிகள் போடப்பட்டன. 50,814 மாடுகள் காயடிக்கப்பட்டன. 2,61,081 கன்றுகள் பிறந்தன. அவைகள் சரிபார்க்கப்பட்டன. 5,32,248 மாடுகளுக்குச் சிகிச்சையளிக்கப்பட்டன. இவை பற்றிய விவரங்கள் VI -ம் பிற்சேர்க்கையில் கொடுக்கப்பட்டுள்ளன.

கால்நடை வளர்ச்சி மும்முரத் திட்டம்.

பால் உற்பத்தியைப் பெருக்கும் பொருட்டு நாடு முழுவதிலும் கறவையினங்களை வளர்க்கும் முனைப்புத் திட்டம் ஒன்றை இந்திய அரசு தொடங்கியது. இத் திட்டத்தின்கீழ், நமது மாநிலத்தில் 1964, 1965-ம் ஆண்டுகளில் சென்னை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய இடங்களில் மூன்று திட்டங்கள் தொடங்கப்பட்டன. இனப் பெருக்க வயதடைந்துள்ள ஒரு லட்சம் ஆவினங்கள், எருமைகள் கொண்ட அடைவான பகுதி ஒன்று தெரிந்தெடுக்கப்பட்டு கருத் தரிப்பு, நோய்த்தடுப்பு, தீவன மேம்பாடு ஆகியவற்றை மேம்படுத்த மும்முரமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. விந்து சேகரிப்பு மத்திய நிலையம் ஒன்றும், செயற்கைமுறை கருத்தரிப்பு வட்டார நிலையங்கள் நான்கும் இருந்தன. செயற்கைமுறை கருத்தரிப்பு வட்டார நிலையம் ஒவ்வொன்றின் கீழும் செயற்கைமுறை கருத்தரிப்பு துணை நிலையங்கள் 25 இருந்தன. இத் திட்டத்தின்கீழ், இனப்

1972 மார்ச் 27]

பெருக்க வயதடைந்துள்ள ஒவ்வொரு 1,000 பசுக்கள், எருமைகளுக்கு ஒரு நிலையம் வீதம் செயற்கை முறை கருத்தரிப்பு துணை நிலையங்கள் பல இடங்களில் ஏற்படுத்தப்பட்டன. இத்துறை சீரமைக்கப்பட்ட பின்னர், இத்திட்டம், இத் துறையின் பொது நடவடிக்கைகளுடன் இணைக்கப்பட்டது. ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பின்கீழ் தொடங்கப்பட்ட துணை நிலையங்களிடமும், இத்துறைப் பொறுப்பின்கீழ் ஏற்படுத்தப்பட்ட கால்நடை மருந்தகங்களிடமும் இத் திட்டப்பணி ஒப்படைக்கப்பட்டது.

இது குறித்து 1970 அக்டோபர் மாதத்தில் பரிசீலிக்கப்பட்டது. இத் திட்டப் பணியை மும்முரமாக நிறைவேற்றுவது முற்றிலும் அவசியமென்று கருதப்பட்டது. அதன்படி முன்பிருந்த கால்நடை வளர்ச்சி மும்முரத் திட்டப் பகுதிகளில் 60 கால்நடை மருந்தகங்கள்/கால்நடை மருத்துவமனைகளில் போதிய பணியாளர்களை அமர்த்தி, அவற்றின் பெயர் கால்நடை மருந்தகங்கள்—கால்நடை மருத்துவமனைகள்—மையக் கிராம நிலையங்கள் என்று மாற்றியமைக்கப்பட்டு தகுந்தவாறு வலுப்படுத்தப்பட்டன.

தீவனத்தர மேம்பாடு.

தீவனத்தர மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நவீன முறைகளில் தீவனப் பயிர்களை வளர்ப்பதற்கும், சுழற்சி (முறையில் Rotational) மேய்ச்சல் இருப்பதன் அவசியத்தையும், சிக்கனமாகத் தீவனங்களைப் பயன்படுத்துவது, உபரியாகவுள்ள தீவனங்களைப் பாதுகாப்பது இவற்றின் அவசியம்பற்றி உழவர்களுக்கு உணர்த்தப்பட்டது. மேம்பாடடைந்த பசும்புல் வெளிகள் ஏற்படுத்தப்பட்டன. தீவனத்தின் முக்கியத்துவத்தை அறிந்து அதனைப் போற்றும் அவசியம் பற்றி உழவர்கள் படிப்படியாக உணரத்தலைப்பட்டனர். வெளியார்களிடமிருந்து தீவனம் வாங்கும் செலவைக் குறைக்கும் நோக்கத்துடன் கால்நடைப் பண்ணைகளில் அதிகப் பரப்பில் தீவனப் பயிர்களைப் பயிரிட பலவகையான பாசன வசதிகளுக்கு வகை செய்யப்பட்டுள்ளது.

இத்துறை சீரமைக்கப்பட்டதன் விளைவாக, தீவனத்தர மேம்பாட்டுப் பணி வேளாண்மைத் துறைக்கு மாற்றப்பட்டது. ஆனால், இதுகுறித்து மீண்டும் பரிசீலிக்கப்பட்டு, தற்போது கால்நடை வளர்ப்புத்துறைக்கே திரும்ப மாற்றப்பட்டுள்ளது. செங்கற்பட்டு மாவட்டம், படப்பை கிராமத்தில் தீவன விதை உற்பத்திப் பண்ணை ஒன்றை ஏற்படுத்துவதோடு சுமார் ரூ. 3 லட்சம் செலவில் மாநிலம்

முழுவதும் தீவனத்தர மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்து பரிசிலிக்கப்பட்டு வருகிறது.

தீவன வாயில்களைப் பெருக்கும் பொருட்டு ஹோசூர், செட்டிநாடு, திருநெல்வேலி, புதுக்கோட்டை, ஒரத்தநாடு, சின்னசேலம், சாத்தூர் ஆகிய இடங்களிலுள்ள கால்நடைப் பண்ணைகளில் துளைக் கிணறுகள் அமைத்தல், ஏற்கனவேயுள்ள கிணறுகளை ஆழப் படுத்துதல், நீரில் மூழ்கு நிலை விசையேற்றங்களுக்கு (Submers ble pumpsets) வகைசெய்தல், புதிய கிணறுகள் வெட்டுதல், தெளிப்புப் பாசன வசதிக்கு (Sprinkler Irrigation) வகைசெய்தல், டிராக்டர்களுக்கு வகைசெய்தல் முதலியவற்றுக்காக 1971–72-ல் ரூ. 5,47,000-க்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

1972–73-ம் ஆண்டிற்காக, ரூ. 1,80,000 மொத்தச் செலவில் சாத்தூர், செம்மறியாட்டுப் பண்ணையில் நிலம் பண்படுத்தல், மண் வளப் பாதுகாப்பு ஆகிய பணிகளை மேற்கொள்ளவும், செட்டிநாடு பண்ணைக்கு டிராக்டர் ஒன்றையும், டர்பைன் பம்புகளையும் வழங்கவும், விசையேற்றங்களுடன் கூடிய மூன்று ஆழமான குழாய்க் கிணறுகளை இறக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதால், துறையினரின் பிரிவுகளில் கால்நடைகளின் தீவனத் தேவைகளைப் பெருமளவுக்குச் சரிகட்ட இயலும்.

கூடுதலாக ரூ. 45 லட்சம் செலவில், ஒசூரிலுள்ள மாவட்டக் கால் நடை வளர்ச்சிப் பண்ணையில் கால்நடை வளர்ச்சி—தீவனத்தர மேம்பாட்டிற்கான பெருந்திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது. இத்தொகை தேசியப் பாற் பண்ணை மேம்பாட்டு வாரியத்தால் வழங்கப்படும்.

கால்நடை வளர்ப்புப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் தீனி, தீவனம் ஆகியவற்றின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :---

	உற்பத்தி செய்யப் பட்ட தீனி, தீவனத்தின் அளவு.
(1)	(2)
	(கிலோ கிராமில்.)
1968–69	1,14,71,805
1969–70	1,32,35,244
1970–71	1,38,53,426
1971–72 (1971 நவம்பர் முடிய).	1,11,36,196

விவரங்கள் இணைப்பு II-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

1972 மார்ச் 27]

ஆநிரைக் காப்பகங்கள் திட்டம் (Goshala Development Scheme)

கோயில்கள், மடங்கள், அனதை இல்லங்கள் போன்ற நிறுவன நிர்வாகங்களின் கீழ் பசுக்களைக் காக்கும் நோக்கத்துடன், இத்திட்டம் கொண்டுவரப்பட்டது. இத்திட்டம் அருகிலுள்ள பகுதிகளில் கால் நடை மேம்பாட்டிற்கு வகை செய்கிறது. தொடர் இனச் செலவக் காக ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2,000 மானியமாக வழங்கப்படுகிறது. மேலும் கொட்டகைகள் கட்டுவதற்குத் தொடரா இனச் செலவின மாக தனி மானிய உதவி ரூ. 5,000 வழங்கப்படுகிறது. 10 மாடுகள் வாங்கினல், 10 பசுக்களும், காளை ஒன்றும் அரசால் வழங்கப்படு கிறது. ஆநிரைக் காப்பகங்கள், 10 ஆண்டுக் காலத்திற்கு மட்டுமே மானியம் பெற தகுதியுடையவையாகும். 1970–71-ல் 20 ஆநிரைக் காப்பகங்கள் இருந்தன. இவை 2,62,811.230 கிலோ கிராம் அளவு பாலை உற்பத்தி செய்தன.

பால்வற்றிய பசுக்கள் பண்ணை, அலமாதி.

1958-ஆம் ஆண்டில் பால் வற்றிய பசுக்கள் பண்ணை அலமாதியில் அமைக்கப்பட்டது. 1970–71-ஆம் ஆண்டில் இப்பண்ணையில் 395 பசுக்கள் இருந்தன. 7,71,850 கி. கிராம் கால்நடைத் தீவனம் உற்பத்தி செய்யப்பட்டது. மத்திய எருமைப் பண்ணை ஒன்று தொடங்குவதற்காக நிலம் வழங்குமாறு இந்தப் பண்ணையை இந்திய அரசு கேட்டுள்ளது. இதற்கு நமது அரசு ஒப்புக்கொண்டுள்ளது. இந்திய அரசின் பதில் எதிர்ப்பார்க்கப்படுகிறது.

செம்மறியாடு வளர்ச்சி.

இம் மாநிலத்தில் செம்மறியாடு வளர்ப்பதற்கான நல்ல வாய்ப்பு உள்ளது. 1969–70-ல் உரிவை, தோல் ஆகியவற்றை ஏற்றுமதி செய்ததன் மூலம் சுமார் ரூ. 4 கோடி அன்னியச் செலாவணியைப் பெற இயன்றது. கீழ்க்கண்ட இடங்களில் தெரிந்தெடுக்கப்பட்ட பல்வேறு இனச் செம்மறியாடுகளை வளர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன :—

(1) மேச்சேரி (இறைச்சி வகை)—சேலம் அருகில்.

(2) மண்டியா (இறைச்சி வகை)ஒசூர், சின்ன சேலம்.

(3) கீழக்கரிசல் (இறைச்சி வகை)—செட்டிநாடு, புதுக் கோட்டை, சாத்தூர், திருநெல்வேலி.

[1972 மார்ச் 27

செம்மறியாடுகள் பெருமளவு இறப்பதைத் தடுக்கவும், உற்பத்தித் திறனைப் பெருக்கவும், உண்ணிகளையும், பூச்சிகளையும் நீக்குவதற்கான வசதிகள் செம்மறியாட்டுப் பண்ணையாளர்களுக்கு வழங்கப் படுகின்றன. செம்மறியாட்டு இனவளர்ச்சி—கம்பள, நெசவுக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏழும் செம்மறியாட்டு இனவளர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்கள் ஒன்பதும் உள்ளன. புதிய முறையில் செம்மறி யாடுகளை இனப்பெருக்கம் செய்வதற்காகக் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது.

செம்மறியாடுகளின் எண்ணிக்கை சுமார் 66 லட்சமாக இருந்த போதிலும், ஒட்டுண்ணி நோய் காரணமாக உற்பத்தித் திறன் குறை வாக உள்ளது. இந்நோய் காரணமாக 60 சதவீத ஆடுகள் இறக்க நேரிடுகின்றன. இந்நோயைத் தடுக்கும் நோக்கத்துடன் 1971–72-ஆம் ஆண்டில், எல்லா ஆடுகளுக்கும் பெருமளவில் ஒரே சமயத்தில் நோய் நீக்க மருந்து கொடுக்கும் இயக்கம் மேற்கொள்ளப்பட்டது. இதன் விளைவாக கணிசமான அளவு செம்மறியாடுகள் இறப்பது குறைந்துள்ளது.

வேளாண்மை மறுநிதியுதவிக் கழகத்திடமிருந்து கடனுதவி பெற்று தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் செம்மறியாட்டு இனவளர்ச்சி மேம்பாட்டிற்கான பணிகளை மேற்கொள்ள 39 திட்டங்கள் அனுப்பப்பட்டுள்ளன. இத்திட்டங்கள் மூலம் ஆதாயம் குறைந்த உழவர்கள், ஏழை உழவர்கள் ஆகியோரது பொருளாதார நிலைமை பெரிதும் சீர்படுத்தப்படும். ரு. 4.42 லட்சம் மொத்தச் செலவில் 2,379 செம்மறியாட்டுக் கிடாக்களையும், 81,396 பெண் ஆடுகளையும் வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இவற்றிற்காக, வேளாண்மை மறுநிதியுதவிக் கழகமும், அரசும் முறையே ரூ. 3.31 லட்சம், ரூ. 1.12 லட்சம் கடனுதவி வழங்குகின்றன.

பன்றி வளர்ப்பு.

பன்றிகள் பெருமளவில் இனப்பெருக்கம் செய்பவை. இவை குறைந்த கால அளவில் அதிகமாக இனப்பெருக்கம் செய்வதால், இவற்றை விரைவில் பெருக்க இயலும். பன்றி வளர்ப்பதனுல் தனிப் பட்ட உழவர்களின் வருமானத்தை உயர்த்தவும் தேசியப் பொருளா தாரத்தை உயர்த்தவும் முடியும்.

புரதச் சத்து நிறைந்த பன்றி இறைச்சி குறைந்த விலையில் கிடைக் கிறது. இக்காரியத்திற்காகவும், கட்புல விளக்கத்திற்காகவும் கால் நடைப் பண்ணைகளில் யார்க்ஷயர் வெள்ளைப் பன்றிகள் வளர்க்கப்

1972 மார்ச் 27]

படுகின்றன. துப்புரவான சூழ்நிலைகளில் அறிவியல் முறைகளில் பெருமளவு வெளிநாட்டு யார்க்ஷயர் வெள்ளைப் பன்றிகளை வளர்ப்பதில் தமிழ்நாடு கால்நடைப் பராமரிப்புத் துறை சிறந்த அக்கறை காட்டியுள்ளது. பன்றி இறைச்சியை ஏனைய உணவுப் பொருட்களுடன் ஒப்பிடுகையில், குறைந்த உற்பத்திச் செலவை உடையதாகவும், புரதச் சத்தும், உணவுப் பொருட்களின் பிற தாதுச் சத்துக்களும் நிறைந்ததாகவும் உள்ளது. மேலும், இதைக் கொண்டு, எளிதில் சுவையான உணவுப் பண்டங்களைத் தயாரிக்க முடிகிறது. அதனால் சரியான முறைகளில் பன்றியை வளர்ப்பது ஆதாயம் தரத்தக்க ஒரு தொழிலாகும். பன்றி இறைச்சியை உட்கொள்ளும் பழக்கம் பொது மக்களுக்குப் பயன்தரக் கூடியதாகும். பன்றியிறைச்சியை உட்கொள்ளும் பழக்கம் விரைவில் பரவி வருகிறது. அதனால் பன்றியிறைச்சி கழகங்கள் பல திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி, தென் ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களில் விரைவாகப் பரவி வருகின்றன.

கோழி இன வளர்ச்சி.

சத்துணவுத் தரங்களுக்கிணங்க, சரிவிகித உணவுக்கு, நாள் ஒன்றுக்கு ஒருவருக்கு குறைந்தது பாதி முட்டை தேவைப்படும். இந்தத் தரம் பின்பற்றப்பட்டால், இம் மாநிலத்திற்கு ஆண்டு ஒன்றுக்குக் குறைந்தது 700 கோடி முட்டைகள் தேவைப்படும். ஆனால், பிற மாநிலங்களிலிருந்து தருவிக்கப்படுபவை உட்பட, ஆண்டு ஒன்றுக்கு 35 கோடி முட்டைகளே கிடைக்கின்றன. தேவைக்கும், கிடைக்கும் அளவுக்கும் உள்ள இடைவெளி மிக அதிகமாக உள்ளதால் கோழி இன வளர்ச்சித் திட்டங்களை அறிவியல் முறைகளில் மும்முரப்படுத்துவதில் அதிக நாட்டம் செலுத்த அரசு திட்டமிட்டுள்ளது. இத்துறை, தொடக்கத்தில், கோழி வளர்ச்சி நிலையங்கள், கோழி வளர்ப்பு விளக்கப் பிரிவுகள், மும்முர முட்டை உற்பத்தி—கோழி வளர்ப்பு வட்டாரங்கள் ஆகியவற்றைத் தொடங்கியது. கோழி வளர்ப்பதன் மூலம் தங்களது வருமானத்தைப் பெருக்குவதில் ஏற்படும் பயனை மக்கள் தற்போது உணர்ந்துள்ள காரணத்தால், சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த நாமக்கல், செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள பெருங்களத்தூர், தாம்பரம், படப்பை, திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள கோட்டப்பட்டு ஆகிய இடங்களிலும், அதனைச் சுற்றியுள்ள இடங்களிலும், வீரிய இனக் கோழிக் குஞ்சுகளைக் கொண்டு நூற்றுக்கணக்கானவர்கள் கோழிகள்

வளர்க்கத் தொடங்கியுள்ளனர். அந்தக் கோழி இனங்களாவன: ஹைலேன், ராணி ஷேவர்ஸ், ஆர்டார் ஏகர்ஸ், அஸ்ட்ராலாப்ஸ், அஸ்ட்ரோ ஒயிட், யூனி சிக்ஸ்.

கோழிப்பண்ணையில் கோழிகளை வளர்ப்பதற்குத் தேவைப்படும் கோழிக்குஞ்சுகளை வழங்கும் பொருட்டு, தருமபுரி மாவட்டத்தில் உள்ள ஓசூரிலும், செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள காட்டுப் பாக்கத்திலும், மதுரை மாவட்டத்தில் உள்ள கப்பலூரிலும் ஆக மூன்று பெரிய அளவிலான கோழிக்குஞ்சு பொரிக்கும் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றிலும் திங்கள் ஒன்றுக்கு 20,000 கோழிக் குஞ்சுகளை உற்பத்தி செய்ய வேண்டும் என்ற இலக்குடன் நிறுவப்பட்டுள்ளன. அவசியமான சாதனங்களையும், இயந்திரங்களையும் வாங்குவதன் மூலம் துறையின் கோழி இரை கலப்புப் பிரிவுகளில் கோழி இரையின் உற்பத்தியைப் பெருக்குவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

கோழி வளர்ப்போர் சங்கத்தால், அண்மையில் 1972 மார்ச் 4, 5-ம் நாட்களில் கருத்தரங்கு ஒன்றும், பொருட்காட்சி ஒன்றும் ஈரோட்டில் நடத்தப்பட்டன. பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த பொது மக்கள் அதில் கலந்து கொண்டு, கோழி வளர்ப்புத் தொழிலை மேம் படுத்துவதற்குப் பயனுள்ள கருத்துக்களைத் தெரிவித்தனர்.

1971-ஆம் ஆண்டு ஜூன் திங்களில் செங்கற்பட்டு மாவட்டத்தில், படப்பை கிராமத்தில், கிராம வளர்ச்சி முகாம் ஒன்று நடத்தப் பட்டது. அப்போது, கோழி வளர்ப்பதால் கிட்டும் நன்மை குறித்து அங்குள்ள கிராம மக்களில் பலருக்கு அறிவுறுத்தப்பட்டது. கோழி யினப் பறவைகளைப் பயன் தரத்தக்க விதத்தில் வளர்ப்பதற்கும், அவற்றிற்கு கொட்டகைகள் போடுவதற்கும், வங்கிகளிலிருந்து கடன்கள் பெறவும், கோழி வளர்ப்போருக்கு உதவிகள் வழங்கப் பட்டு வருகின்றன.

நவீன முறையில் கோழியின வளர்ப்பின் நன்மை குறித்துக் கிராம மக்கள் அறிந்து கொள்வதற்கு இயலும் வகையில் அதைப் பற்றி அவர்களுக்கு அறிவுறுத்த கிராம வளர்ச்சி முகாம் ஒன்றை, திருநெல்வேலி மாவட்டம், ஸ்ரீவைகுண்டத்திற்கருகிலுள்ள நட்டாத்தி என்னும் கிராமத்தில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

1972 மார்ச் 27]

கோழியின வளர்ப்போர் சங்கம் ஒன்று, திருச்சிராப்பள்ளி மாவட்டம், கோட்டப்பட்டு என்ற இடத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இச் சங்கமானது, வங்கிகள் வழங்கிய கடனுதவியுடன் ஏற்கனவே முட்டை உற்பத்தியைத் தொடங்கியது. அவ்விடத்தில் முட்டை விற்பனை நிலையம் ஒன்றும் தொடங்க அனுமதி அளிக்கப்பட்டது. உற்பத்தி செய்யப்பட்ட முட்டைகளை பிற முக்கிய நகர நிலையங்களில் விற்பனை செய்வதற்கான திட்டம் ஒன்றைத் தொடங்குவதற்குரிய செயற் குறிப்புகள் அரசின் ஆலோசனையில் இருந்து வருகின்றன.

கோழியின வளர்ப்பு மும்முரத் திட்டங்களின்கீழ், பொறையாறு, விருதுநகர், ஈரோடு ஆகிய ஊர்களில், கோழியின வளர்ப்போர் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கோழியின வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள், வட ஆர்க்காடு மாவட்டத்தில் காட்பாடியிலும், செங்கற்பட்டு மாவட்டத்தில் ஹஸ்தினபுரம், பெருங்களத்தூர், படப்பை ஆகிய ஊர்களிலும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் பெரிய நாயக்கன் பாளையத்திலும், சேலம் மாவட்டத்தில் ஓமலூரிலும் செயல்பட்டு வருகின்றன. தனியாகக் கோழியின வளர்ப்புப் பிரிவுகளை ஆரம்பிக்க ஆர்வ முள்ளோர், வங்கிகளிலிருந்து கடன் பெறவும் தொழில் நுட்ப ஆலோசனைகள் பெறவும் இத்துறை உதவி செய்கிறது. சங்கங்களை அல்லது கூட்டுறவுச் சங்கங்களை அமைத்துக் கொண்டோர், வேளாண்மை மறுநிதி உதவிக் கழகத்திடமிருந்து கடன் பெற உதவி செய்யப்பட்டு வருகிறது. கோழியின வளர்ப்பு முறைகள், அவற்றிற் கான இரை, சாதனம், அவற்றை வளர்ப்பதற்கான தொழில் நுட்ப ஆலோசனை, அவற்றிற்கு வரும் நோய்களை கட்டுப்படுத்துவதற்கான வசதி, வளர்த்த கோழிகள், உற்பத்தி செய்யப்பட்ட முட்டைகள் ஆகியவற்றை விற்பதற்கான வசதி ஆகியவற்றை கோழியின வளர்ப் போர் பெறுவதற்கு, இத் துறை உதவி செய்து வருகிறது. பதப் படுத்தப்பட்ட கோழி இறைச்சியைப் பாதுகாக்க, 526 உறை பதனங்கள் உட்பட, குளிர்சாதன அறைப் பிரிவுகள் அனைத்தையும் உயர் அளவுக்குப் பயன்படுத்துவதற்கும், கோழியின வளர்ச்சிப் பண்ணைகள் 39-ல் கொட்டகை வசதிகள் செய்து கொடுத்தல், நீர் வழங்குதல், விற்பனை வசதிகளைச் செய்து கொடுத்தல் ஆகியவை குறித்தும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கோழியினப்

பண்ணை வளர்ச்சி நிலையங்களில் உற்பத்தி செய்யப்பட்ட முட்டைகளின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

ஆண்டு.	உற்பத்தி செய்யப்பட்ட முட்டைகளின் எண்ணிக்கை.
(1)	(2)
1968–69 (74 கோழியினப் பண்ணை வளர்ச்சி நிலையங்கள்).	32,56,158
1969–70 (74 கோழியினப் பண்ணை வளர்ச்சி நிலையங்கள்).	35,48,254
1970–71 (39 கோழியினப் பண்ணை வளர்ச்சி நிலையங்கள்). (எஞ்சியவை ஆதாயமற்ற காரணத்தால் மூடப்பட்டன).	33,25,744
1971–72 (1971 நவம்பர் வரை)	32,09,354

1972-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 27-ஆம் நாளிலிருந்து, 1972-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 2-ஆம் நாள் வரை, தென் வட்டார கால்நடை—கோழியின வளர்ச்சிக் காட்சி ஒன்று, இந்திய அரசினரால், திருச்சியில் நடத்தப்பட்டது. பல லட்சக்கணக்கான மக்களின் கவனத்தை இது ஈர்த்ததோடு, பரிசுகள் வழங்கியதன் மூலம், கால்நடை, கோழியின வளர்ப்போரிடையே ஆக்கப் பூர்வமான போட்டி ஆர்வத்தை உண்டாக்கியது. வளர்ப்புப் பணியில் கால்நடை, கோழியினம் வளர்ப்போரின் கருத்துக்களையும் அப்பணியில் அவர்கள் பெற்ற அனுபவங்களையும் பரிமாறிக் கொள்ள இக்காட்சியானது வகை செய்தது.

ஏனைய திட்டங்கள் (வேளாண்மை மறுநிதி உதவிக் கழகம்).

இம் மாநிலத்தில், கோழியின வளர்ச்சித் தொழிலுக்கான பல்வேறு திட்டங்களுக்கு, வேளாண்மை மறுநிதி உதவிக் கழகம் நிதி உதவி செய்யவிருக்கிறது. அத் திட்டங்கள் குறித்து அரசு ஆலோசித்து வருகிறது.

	(ரூபாய் இலட்சத்தில்.)
50 பெரிய அளவுப் பிரிவுகளுடன் கூடிய கோழியின வளர்ப்புத் திட்டம், விருதுநகர்.	11.18
நீலகிரி, திருச்சிராப்பள்ளி மாவட்டங்களிலுள்ள இரண்டு கலப்பின பண்ணைத் திட்டங்கள்.	34.49

1972 மார்ச் 27]

	(ரூபாய் இலட்சத்தில்.)
கோழியின வளர்ச்சித் திட்டங்கள் (300 பிரிவுகளுடன் தொடங்குவதற்கு), தீத்தியாபாளையம் (கோயம்புத்தூர் மாவட்டம்).	18.90

கால்நடைகளுக்கான மருத்துவ உதவி.

கால்நடைகளுக்கு மருத்துவ சிகிச்சை அளித்தல் என்பது, இத் துறையின் தலையாய நடவடிக்கைகளில் ஒன்றாகும். தற்போது, இம் மாநிலத்தில், 520 கால்நடை மருத்துவ நிலையங்கள் உள்ளன. இவற்றில், கால்நடை மருத்துவ மனைகள் 35, கால்நடை மருந்தகங் இவற்றில், கால்நடை மருத்துவ மனைகள் 35, கால்நடை மருந்தகங்கள் 485 ஆகும். வேளாண்மை குறித்த அரசு ஆணைக் குழுவின் (Royal Commission on Agriculture) பரிவுரைகளுக்கிணங்க, 25,000 கால்நடைகளுக்கு, ஒரு உதவி கால்நடை மருத்துவர் தேவை யாகும். இந்த வீதத்தில் பார்த்தால், இம்மாநிலம் முழுதுமுள்ள கால்நடைகளுக்கு மருத்துவச் சிகிச்சை அளிப்பதற்கு 1,000 கால்நடை மருத்துவ வசதி நிலையங்களை நிறுவுவது அவசியமான தாகும். கிடைக்கக்கூடிய நிதி வசதிக்கிணங்க, கால்நடை மருத்துவ வசதி நிலையங்களின் எண்ணிக்கையைப் படிப்படியாகப் பெறுக்குவதற் கான நடவடிக்கைகளை எடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த 520 கால்நடை மருத்துவ வசதி நிலையங்களோடு கால்நடை வளர்ப்பு, வளர்ச்சிப் பணி அதிகாரிகளால் நடத்தப்படும் 1,918 துணை நிலையங் களும் உள்ளன. நீள் தொலைவிலுள்ள கிராமங்களின் கால்நடை களின் உடனடித் தேவைகளை இந்தத் துணை நிலையங்கள் கவனிக் கின்றன.

மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்ட கால்நடைகளின் எண்ணிக்கை, கோமாரி நோய் போன்ற கொள்ளை நோய்கள் குறித்து மருத்துவ சிகிச்சையளிக்கப்பட்ட கால்நடைகளின் எண்ணிக்கை ஆகியவற்றின் விவரங்கள் இணைப்பு VII -ல் கொடுக்கப்பட்டுள்ளன.

வெக்கை நோய் ஒழிப்புத் திட்டம்.

வெக்கை நோயானது, வட இந்தியாவிலிருந்து வந்த நோயுற்ற கால்நடைகளின் மூலம் இம் மாநிலத்தில் பரவியது. அந்நோயி லிருந்து, இம்மாநிலத்திலுள்ள கால்நடைச் செல்வங்களைப் பாது காக்க, அத் திட்டமானது தொடங்கப்பட்டது. இத் திட்டத்திற்கு,

இந்திய அரசு நிதி உதவி செய்கிறது. இம்மாநிலத்தின் எல்லைகளில் சோதனைச் சாவடிகளுடன் கூடிய நோய்த் தடுப்பு மண்டலம் ஒன்று அமைக்கப்பட்டது. இம்மாநிலத்திற்குக் கொண்டு வரப்பட்ட கால் நடைகளுக்கு வெக்கை நோய்த்தடுப்பு ஊசிகள் போடப்பட்டன. இவ்வாறு ஊசி போடப்பட்டதன் விளைவாக, இம்மாநிலத்திலுள்ள பெரும் பகுதிகளில் இந்நோயானது பரவுவது தடுக்கப்பட்டது. இந்நோய் பரவுவதற்கு வாய்ப்புள்ளதால், 3 சோதனைச் சாவடிகள், 2 கண்காணிப்புப் பிரிவுகள் ஆகியவற்றை அமைப்பதற்கு, 1970–71-ஆம் ஆண்டில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. மேலும் 2 சோதனைச் சாவடிகள், 2 கண்காணிப்புப் பிரிவுகள் ஆகியவற்றை அமைப்பதற்கு 1971–72-ம் ஆண்டில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. தற்போது, மொத்தம் 8 சோதனைச் சாவடிகளும், 4 கண்காணிப்புப் பிரிவுகளும் கீழ்க்கண்ட இடங்களில் உள்ளன :—

சோதனைச் சாவடிகள்.

1. திம்பம், கோயம்புத்தூர் மாவட்டம்.
2. தெப்பக்காடு, நீலகிரி மாவட்டம்.
3. திருவலம், வட ஆர்க்காடு மாவட்டம்.
4. ஓசூர், தருமபுரி மாவட்டம்.
5. திருவொற்றியூர், செங்கல்பட்டு மாவட்டம்.
6. எளாவூர், செங்கல்பட்டு மாவட்டம்.
7. பாகலூர், தருமபுரி மாவட்டம்.
8. சோளிங்கபுரம், வட ஆர்க்காடு மாவட்டம்.

கண்காணிப்புப் பிரிவுகள்.

1. கோபிச்செட்டிபாளையம், கோயம்புத்தூர் மாவட்டம்.
2. திருத்தணி, செங்கல்பட்டு மாவட்டம்.
3. போடிநாயக்கனூர், மதுரை மாவட்டம்.
4. செங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம்.

சிறு உழவர்கள் வளர்ச்சி நிறுவனம்.

சிறு உழவர்கள், குறைந்த நிலமுள்ள உழவர்கள், வேளாண்மைத் தொழிலாளர்கள் போன்ற சமுதாயத்தில் பொருளாதார நிலையில் நலிவுற்றுள்ள ஏழை எளிய மக்களை மேம்படுத்தும் நோக்கோடு,

1972 மார்ச் 27]

தென் ஆர்க்காடு, மதுரை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில், சிறு உழவர்கள் திட்டங்கள் மூன்றும்; சேலம், வட ஆர்க்காடு மாவட்டங்களில் குறைந்த நிலமுள்ள உழவர்கள், வேளாண்மைத் தொழிலாளர்கள் திட்டங்கள் இரண்டும் தொடங்கப்பட்டுள்ளன.

இத் திட்டங்கள், மத்தியத் திட்டங்களின்கீழ் வருகின்றன. திட்டச் செலவின் உச்ச வரம்புக்கு மேல், 100 சதவீத நிதி உதவி மத்திய அரசிடமிருந்து கிடைக்கிறது.

சிறு-உழவர்கள் வளர்ச்சி நிறுவனத் திட்டங்களை, கீழ்க் கண்ட மாவட்டங்களில் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத் திட்டங்கள், பால்பண்ணை—கோழிப்பண்ணை வளர்ச்சி குறித்த தாகும் :—

(1) தென் ஆர்க்காடு.

(2) மதுரை.

(3) திருநெல்வேலி.

குறைந்த நிலமுள்ள உழவர்கள் (Marginal farmers) வேளாண் மைத் தொழிலாளர்கள் திட்டத்தை, வட ஆர்க்காடு மாவட்டத்தில் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத் திட்டத்தின்கீழ், செம்மறி ஆடு, கன்று, வாத்து ஆகியவற்றை வளர்க்கும் பணி மேற்கொள்ளப் படும்.

கன்று, செம்மறி ஆடு, கோழியினம் ஆகியவற்றை வளர்ப்பதற் கான திட்டம் ஒன்று வட ஆர்க்காடு, சேலம் மாவட்டத்திலும் தொடங்கப்படவிருக்கிறது. இத் திட்டமானது மிகக் குறைந்த நிலமுள்ள உழவர்கள் (Sub-marginal farmers) வேளாண்மைத் தொழி லாளர்கள் ஆகியோருக்குரியதாகும்.

ஒரு ஏக்கரும் அதற்குக் குறைவாகவும் நிலம் வைத்துள்ள உழவர் களின் 1,000 குடும்பங்களைப் பால்பண்ணை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கொண்டுவரவும், 4,000 குடும்பங்களைக் கோழியின வளர்ப்புத் திட்டத்தின்கீழ் கொண்டு வருவதற்கான திட்டங்கள் செயல்படுத்தப் படவிருக்கின்றன.

சிறு உழவர்கள் வளர்ச்சி நிறுவனம், குறைந்த நிலமுள்ள உழவர்கள்—வேளாண்மைத் தொழிலாளர்கள் வளர்ச்சி நிறுவனம் ஆகியவற்றின்கீழ், பால் பண்ணைக் கால்நடைகள், கோழியினங்கள் ஆகியவற்றை வளர்ப்பதில் சிறப்புக் கவனம் செலுத்தப்படும். பால்

1972 மார்ச் 27]

பண்ணை வைத்துள்ள உழவர்கள், கோழியின வளர்ப்போர் ஆகியோருக்கு கூட்டுறவு வங்கிகள், நாட்டுடமையாக்கப்பட்ட வணிக வங்கிகள் ஆகியவற்றிலிருந்து கடன்கள் பெறுவதற்கு வகை செய்யப்படும். மூலதனச் செலவில் 25 சதவீதம் உதவித் தொகையாக வழங்கப்படும்.

திட்ட மதிப்பீடு.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் ஏற்பட்ட திட்டச் செலவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

ஆண்டு.	செலவு. (ரூபாய் லட்சத்தில்).	
(1)	(2)	
1969–70	28·82	
1970–71	31·99	
1971–72	62·56	(எதிர்பார்க்கப் படுகிறது).

1972–73-ஆம் ஆண்டிற்கான வளர்ச்சித் திட்டங்களின் பல்வேறு தலைப்புகளின்கீழ் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கம் கீழே கொடுக்கப் பட்டுள்ளது :—

	(ரூபாய் இலட்சத்தில்.)
1. கால்நடை வளர்ப்பு	14.73
2. செம்மறியாடு வளர்ப்பு	0.50
3. கோழி இன வளர்ப்பு	3.99
4. பன்றி வளர்ப்பு	0.97
5. கல்வியும் ஆராய்ச்சியும்	32.93
6. கால்நடை மருத்துவ உதவி	11.38
7. பல்வகை	18.48
மொத்தம் ...	82.98

1972 மார்ச் 27]

1972–73-ல் கீழ்க்காணும் திட்டப் பணிகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது :—

		(ரூபாய் இலட்சத்தில்.)
1.	செட்டிநாடு, திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ள கால்நடைப் பண்ணைகளை விரிவு படுத்துதல் ; டிராக்டர்கள், விசையேற்றங்கள் முதலியன வாங்குதல்.	3.00
2.	இரண்டு புதிய கால்நடை மருந்தகம்—மையக் கிராம நிலையங்கள் அமைத்தல்.	0.98
3.	செம்மறியாடுகளுக்குப் பரவலாக மருந்து ஊட்டும் திட்டம்.	0.50
4.	சாத்தூர் செம்மறியாட்டுப் பண்ணையைச் சேர்ந்த நிலங்களைப் பண்படுத்துதல்.	0.45
5.	கப்பலூரில் அதிக அளவில் குஞ்சு பொறிப்பு நிலையம் அமைத்தல்.	0.77
6.	கலப்பினக் கோழிக் குஞ்சுகள் வாங்குதல் ...	1.00
7.	சின்ன சேலம் செம்மறியாட்டுப் பண்ணையில் பன்றி வளர்ப்புப் பிரிவு ஒன்று அமைத்தல்.	0.97
8.	பத்து புதிய கால்நடை மருந்தகங்கள் தொடங்குதல்.	1.88
	மொத்தம் ...	9.55

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கால்நடை மருத்துவக் கல்வி—ஆராய்ச்சித் துறை.

கால்நடை மருத்துவக் கல்வி—ஆராய்ச்சித் துறை 6—8—1969-ல் செயலுக்கு வந்தது. பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு ஆகிய இரண்டிலும் கல்வித் தரத்தை உயர்த்துதல், கால்நடை மருத்துவம், கால்நடை வளர்ப்பு பிரச்சினைகள் பற்றிய ஆராய்ச்சி நடவடிக்கைகளை முடுக்கிவிடுதல், கல்வி ஆராய்ச்சி, வளர்ச்சிப் பணி ஆகிய வற்றை ஒருங்கிணைத்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு இத் துறை தொடங்கப்பட்டது.

[1972 மார்ச் 27

கால்நடை மருத்துவக் கல்வி ஆராய்ச்சித் துறைகளின்கீழ் கீழ்க் கண்ட பிரிவுகள் அடங்கும் :—

(1) சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி, சென்னை.

(2) கோழி இன ஆராய்ச்சி நிலையம், சென்னை.

(3) செம்மறியாட்டுப் பண்ணை, காட்டுப்பாக்கம்.

(4) செம்மறியாடு இனப்பெருக்க ஆராய்ச்சி நிலையம், உதகமண்டலம்.

(5) கால்நடை நோய்த் தடுப்பு மருத்துவ நிலையம், இராணிப் பேட்டை.

<u>சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி.</u>

இக் கல்லூரி 1903-ல் நிறுவப்பட்டது. கல்வித் தரத்தில் இக் கல்லூரி இந்தியாவில் மட்டுமன்றி, வெளி நாட்டிலும், பெரும் புகழ் பெற்றது. 1958-ல் இக் கல்லூரி தெற்கு வட்டார பட்ட மேற்படிப்பு பயிற்சி நிலையமாக உயர்த்தப்பட்டது.

இக் கல்லூரியில், பி.வி.எஸ்சி., எம்.வி.எஸ்சி. பட்டப்படிப்புகள் உள்ளன. டாக்டர் பட்டம் பெறுவதற்கான வசதிகளும் உள்ளன. ஒவ்வோர் ஆண்டும் பி.வி.எஸ்சி. பட்ட வகுப்பில் 136 மாணவர் களும், பட்ட மேற்படிப்பு வகுப்பில் 45 மாணவர்களும் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

இக் கல்லூரியின் தற்போதைய மாணவர்களின் எண்ணிக்கை வருமாறு :—

	பி.வி.எஸ்சி.	எம்.வி.எஸ்சி.
(1)	(2)	(3)
ஆண்கள்	781	51
பெண்கள்	12	4

இக் கல்லூரி ஆசிரியர்களில் 18 பேர், Ph. D. டாக்டர் பட்டம் பெறுவதற்காகப் பதிவு செய்துள்ளார்கள்.

வெளி மாநிலங்களிலிருந்து வரும் மாணவர்களுக்கும், வெளி நாடு களிலிருந்து இந்திய அரசின் ஆதரவுடன் வரும் மாணவர்களுக்கும் பி.வி.எஸ்சி. பட்ட வகுப்பில் 16 இடங்களும், எம்.வி.எஸ்சி. பட்ட வகுப்பில் 4 இடங்களும் ஒதுக்கப்படுகின்றன.

1972 மார்ச் 27]

தேறியவர்களின் சதவீதம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

ஆண்டு.	பி.வி.எஸ்சி. தேறியவர்களின் சதவீதம்.	எம்.வி.எஸ்சி. தேறியவர்களின் சதவீதம்.
(1)	(2)	(3)
1967–68	**87**	**76**
1968–69	**77**	**79**
1969–70	**87**	**69**
1970–71	**78**	**79**

கடந்த ஆறு ஆண்டுகளில், மாணவர்களுக்கு அளிக்கப்பட்ட படிப்புத் தொகையின் அளவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

ஆண்டு.	இந்திய அரசு படிப்பு உதவித் தொகை.	பயனடைந்த மாணவர்களின் எண்ணிக்கை.	தமிழ்நாடு அரசுப் படிப்பு உதவித் தொகை.	பயனடைந்த மாணவர்களின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)	(4)	(5)
	(ரூபாயில்.)		(ரூபாயில்.)	
1966–67 ..	**13,526**	**20**	**1,73,502**	**484**
1967–68 ..	**24,050**	**45**	**1,68,969**	**477**
1968–69 ..	**35,369**	**62**	**1,69,562**	**465**
1969–70 ..	**79,398**	**75**	**1,67,236**	**459**
1970–71 ..	**65,780**	**99**	**1,71,856**	**497**
1971–72 ..	**85,482**	**99**	**1,76,091**	**399**

தமிழ்நாடு 1962 கல்விக் கடனுதவி விதிகளின்கீழ் தங்களது கல்வியைத் தொடங்குவதற்கு மாணவர்களுக்குக் கடன்கள் அளிக்கப் பட்டன.

அதன் விவரங்கள் வருமாறு :—

ஆண்டு.	வழங்கப்பட்ட கடன் தொகை.	பயன்பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)
	(ரூபாயில்.)	
1966–67	**1,32,002**	**142**
1967–68	**1,55,981**	**173**
1968–69	**1,42,378**	**172**
1969–70	**1,47,371**	**168**
1970–71	**1,50,710**	**165**
1971–72	**1,48,841**	**163**

[1972 மார்ச் 27

இக் கல்லூரியில் 500 மாணவர்கள் தங்கக்கூடிய விடுதி ஒன்று உள்ளது. நடப்பாண்டில், சுமார் ரூ. 45,000 செலவில் விரிப்புகளுடன் கூடிய 244 இரும்புக் கட்டில்கள் கூடுதலாக வழங்கத் திட்டமிடப் பட்டுள்ளது. 1972–73-ல் சென்னை, கால்நடை மருத்துவக் கல்லூரி யில், ரூ. 50,000 செலவில் புறநிலை மாணவர் நிலையம் Non-Resident Students Centre ஒன்றைக் கட்டத் திட்டமிட்டுள்ளது. மாணவர் களின் பயனுக்கென ரூ. 64,200 செலவில் புதிய மாணவர்கள் பேருந்து ஒன்று வாங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. 1972–73-ல் ரூ. 3.4 லட்சம் மதிப்பீட்டுச் செலவில், 100 மாணவர்கள் தங்குவதற்கு வசதியளிக்க பட்ட மேற்படிப்பு மாணவர் விடுதி ஒன்றைத் தனியாகக் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னை, கால்நடை மருத்துவக் கல்லூரியில், 20 துறைகள் (பிரிவுகள்) உள்ளன. இங்கு பதவித்தரம் உயர்த்தப்பட்ட பேராசிரி யர்கள் 17 பேர், ஆராய்ச்சி உதவிப் பேராசிரியர்கள் 22 பேர், 28 விரிவுரையாளர்கள், பிற ஆராய்ச்சி அதிகாரிகள், வல்லுநர்கள் ஆகியோர்களுடன் 121 உதவி விரிவுரையாளர்கள் இருக்கின்றனர்.

கோழி இன அறிவியல், விலங்கியல் மருத்துவ ஆய்வுக்கூடக் கல்வி போன்ற புதிய துறைகள் உருவாக்கப்பட்டன. இவை, 1972–73-ல் செயல்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நோய்க்குறியியல், உயிரியல் ஆய்வு முறை (Biometry) மரபு வழி இயலில் அடிப்படைக் கல்வி, இறைச்சி நுட்பவியல் தீவனம் செரித்து இரத்தத்தோடுத் தன்மயமாதல் (Rumen Metabolism) கலப்பினப் பெருக்கம், வளர்ச்சிதை மாற்றம் (Endocrinology) ஆகிய புதிய பிரிவுகள் போதிய பணியாளர்களுடனும் கருவிகளுடனும் தொடங் கப்பட்டன.

ரூபாய் 4 லட்சம் செலவில் அமைக்கப்படும் விந்துக்களைக் கெட்டி யாக உறைய வைப்பதற்கான ஆய்வுக்கூடம் (Deep Freeze Semen Laboratory) முடியும் தறுவாயில் உள்ளது. இதில் ஹாலந்திலிருந்து இறக்குமதி செய்யப்படும் (திரவ) நைட்ரஜன் தயாரிக்கும் சாதனம் நிறுவப்படவேண்டியுள்ளது. இச்சாதனத்தின் உதவியுடன், வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உயர் இன பொலிக் காளைகளின் விந்துக்களைச் சேமித்து வைப்பதற்கான விந்து நிலையம் ஒன்றை அமைக்க ஏதுவாகும்.

1972 மார்ச் 27]

அரசு, இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் மற்றும் பிற நிறுவனங்களுக்கு அனுப்பப்படுவதற்கு முன்னர், பல்வேறு ஆராய்ச்சித் திட்டங்கள் தீட்டுவதற்கான ஆராய்ச்சிக் குழு ஒன்றும் இக் கல்லூரியில் உள்ளது. வளர்ச்சிப் பணித் துறை, கல்லூரியில் நடத்தப்பட்ட ஆராய்ச்சியின் வளர்ச்சி முடிவுகள் ஆகியவற்றை மக்களுக்குப் புகட்டப்படுகிறது. இத் துறை உழவர்களுக்குப் பயிற்சி அளிக்கிறது. கோழிப்பண்ணை, பால்பண்ணை ஆகியவற்றைத் தொடங்க முற்போக்கு உழவர்களுக்கு உதவி புரிகின்றது.

இக் கல்லூரியில் எல்லா வசதிகளுடனும் கூடிய, கால்நடை மருத்துவமனை ஒன்று உள்ளது. இம்மருத்துவமனையில் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 1 லட்சம் கால்நடைகளுக்கு சிகிச்சையளிக்கப் படுகிறது. 1972–73-ல் ரூ. 1.78 லட்சம் செலவில், தீவனச் செரிப்பு மற்றும் தன்மயமாதல் பற்றிய ஆராய்ச்சிக் கூடுகளை Metabolism stalls கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. மாடு, எருமை போன்ற பெரிய விலங்குகள், நாய், பூனை போன்ற சிறிய விலங்குகள் ஆகியவற்றின் பயனுக்கென புதிய மருத்துவ ஊர்திகள் வாங்குவதற்காக ரூ. 1,01,000-க்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது.

சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரிக்காக, சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி தலைவரைத் தலைவராகவும், கால்நடை மருத்துவக் கல்வி-ஆராய்ச்சித் துறை இயக்குநருடன் 9 உறுப்பினர் கள். அடங்கிய கௌரவப் பார்வையாளர்கள் வாரியம் ஒன்று அமைக் கப்பட்டுள்ளது. கால்நடை மருத்துவக் கல்வி-ஆராய்ச்சித் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள மருத்துவமனைகளைப் பார்வையிட்டு தங்களது கருத்துக்களை அளிக்கவும் இந்த உறுப்பினர்கள் அனுமதிக் கப்படுகின்றனர்.

இந்தக் கல்லூரி, 10,000 நூல்களையும், 5,400 பழந் தொகுதி களையும் (Back olu es) கொண்ட நல்லதொரு நூல் நிலையத்தைப் பெற்றுள்ளது. 1972–73 ஆம் ஆண்டில் ரூ. 50,000 செலவில் மேலும் அறிவியல் சஞ்சிகைகளின் தொகுதிகளை வாங்கக் கருதப்பட்டுள்ளது.

சென்னை, கால்நடை மருத்துவக் கல்லூரியின் வரலாற்றிலேயே முதன் முறையாக, ஆராய்ச்சி மாணவர்களையும், அறிவியலறிஞர் களையும் ஊக்குவிக்கும் வகையில் அவர்களது அறிவியற் கட்டுரை களைக் கொண்ட ஆராய்ச்சி ஏடு ஒன்றை வெளியிடவிருக்கிறது.

தேனும்பேட்டை கோழியின ஆராய்ச்சி நிலையம்.

இந்நிலையத்தில் ஏறத்தாழ 7,000 கோழிகள் துப்புரவு நிலையில் வளர்க்கப்படுகின்றன. சென்னை மருத்துவக் கல்லூரியால் உருவாக்கப்பட்ட "மேயர்" கோழியினம் அறிமுகப்படுத்தப்பட்டதால், முட்டை உற்பத்தி பெருகியது. கடந்த மூன்று ஆண்டுகளில் உற்பத்தியான முட்டைகளின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

1969–70	132,794
1970–71	113,963
1971–72	362,308

கோழி இறைச்சி குறித்த அனைத்திந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டத்திற்கு முழு உதவியாக ரூ. 12 லட்சம் ஒப்பளிக்கப்பட்டு, அது செயலாற்றப்பட்டு வருகிறது.

செம்மறியாட்டுப் பண்ணை, காட்டுப்பாக்கம்.

இப் பண்ணையில், மெட்ராஸ் ரெட், மாண்டியா இனம் ஆகிய செம்மறியாடுகளின் இனப் பெருக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அவற்றின் மரபியல் வழி செயல்திறன்களும் ஆராயப்படுகின்றன. உள்ளூர் இனவகைகளின் உடல் எடையையும் வளர்ச்சி விதத்தையும், கலப்பு இனப் பெருக்க முறையில் மேம்படுத்த "சௌத்டௌன்", "டார்செட் ஹார்ன்" போன்ற அந்நிய இனவகைகளை இறக்குமதி செய்யக் கருதப்பட்டுள்ளது. நல்ல மரபு வழி செம்மறியாட்டுக் கிடாக்களை வளர்த்து, சுற்று வட்டாரத்திலுள்ள ஆடு வளர்ப்போர்க்கு வழங்குவது இப் பண்ணையின் நோக்கமாகும். தற்போது இப் பண்ணையில், 974 செம்மறியாடுகள் உள்ளன. அவற்றில் 736 மாண்டியா இனம், 231 மெட்ராஸ் ரெட் இனம், ஏழு மாண்டியா-மெட்ராஸ் ரெட் கலப்பினமாகும்.

பன்றி வளர்ப்புப் பற்றிய ஆராய்ச்சிப்பணி, இப் பண்ணையில் நடைபெறுகிறது. பன்றி வளர்ப்பவர்களுக்குப் பங்கிட்டளிப்பதற்கான, உயர்ந்த பன்றி ஏற்றை (boar) உற்பத்தி செய்வதற்காக 100 பெண் பன்றிகள் நிறைந்ததாக இப் பண்ணையை மேம்படுத்துவது நம்முடைய குறிக்கோளாகும்.

1972 மார்ச் 27]

இப் பண்ணையில், பின்வரும் ஆராய்ச்சித் திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன :—

(i) எருமைகளின் மரபு வழிப் பண்பு பற்றிய ஆய்வுகள்.

(ii) காளைகளின் கால்வழி மரபு பற்றிய சோதனைகள்.

(iii) பன்றிகளின் இறைச்சியின் எடை உற்பத்தியளவில் ஆதாயம் தரத்தக்கதாக உள்ளதா என்பது குறித்தும், அவற்றின் இறந்த உடல்களின் தனித்தன்மை, மதிப்பு குறித்தும் ஆய்வுகள்.

(இது இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் திட்டமாகும். இதற்கு 54 சதவீத உதவி கிடைக்கிறது.)

இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிறுவனத்திடமிருந்து பாதிச் செலவிற்கு (50 : 50) என்ற அடிப்படையில் நிதியுதவி பெற்ற மேச்சேரி, மாண்டியா ஆட்டுக்குட்டிகளின் இறைச்சிக் கூறுபாடுகள் பற்றிய ஆய்வுத் திட்டம், சேலம் மாவட்டம், குளத்தூரில் செயற்பட்டு வருகிறது.

செம்மறியாடு இனப்பெருக்க ஆராய்ச்சி நிலையம், உதகமண்டலம்.

தென்னகத்திலேயே, சிறந்த வகைக் கம்பளி உரோமத்தை உற்பத்தி செய்யும் ஒரே ஆராய்ச்சி நிலையம் இதுவேயாகும். நீலகிரியில் வளர்க்கப்படும் செம்மறியாட்டு இனம் இந்தியாவிலேயே சிறந்த வகைக் கம்பளி மயிர் கொண்டவை. "மெரீனோ" வகைச் செம்மறியாடுகளுக்கு ஈடாக, அவற்றின் தரம் உயர்த்தப்படுகிறது. இந்தப் பகுதியில் கலப்பினச் செம்மறியாடுகளை வளர்ப்பது சிக்கனமானது என்பது கண்டறியப் பட்டுள்ளது. 1972–73-ல் ரூ. 1.5 லட்சம் மெரீனோ செம்மறியாடுகளை இறக்குமதி செய்யக் கருதப்பட்டுள்ளது. 1972–73-ஆம் ஆண்டில் மேய்ச்சல் தரை நிர்வாகமும், வசதிகள் நிறைந்த கொட்டில்களுக்கான ஒதுக்கீடும் மேற்கொள்ளப்படும். கம்பளிப் பகுப்பாயச் சோதனைக் கூடத்திற்கானப் பணி முன்னேறி வருகிறது. அச்சோதனைக் கூடம் விரைவில் செயற்படும்.

தற்போது, இந்தப் பண்ணையில் 1,585 செம்மறியாடுகள் உள்ளன. இனங்கள் பின்வருமாறு :—

(1)	மெரீனோ	143
(2)	நீலகிரி	32
(3)	மெரீனோ கலப்பு	257
(4)	ஏனைய கலப்பினங்கள்	853

[1972 மார்ச் 27

பி.எல். 480 திட்டங்கள்.

கீழ்க்காணும் திட்டங்கள் இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிறுவனத்தின் ஏற்பளிப்பு பெற மேலனுப்பப்பட்டுள்ளன :—

(1) ரூ. 5.88 லட்சம் செலவில் சிறந்த முறையில் பலன் தரும் வெக்கை நோய்த் தடுப்பு மருந்து தயாரித்தல்.

(2) காளைகளுக்கு ஏற்படும் சிறுநீர் தொடர்பான நோய்க்கான (Haematuria) காரணம், உடற்கூறு பற்றிய ஆராய்ச்சிக்கான ரூ. 4.80 லட்சம் செலவில் திட்டம்.

கால்நடை நோய்த் தடுப்பு மருத்துவ நிறுவனம், இராணிப்பேட்டை

இந்நிறுவனம், உயிரியல் முறையில் 23 வகை மருந்துகளையும், சீரங்கள் (Sera) நோய் அறிவதற்குதவும் எதிர்த் தாக்குதல் காட்டும் பொருள்கள் ஆகியவற்றைத் தயாரிக்கிறது. தமிழ்நாடு முழுமைக்கும் நோய்த்தடுப்பு மருந்துத் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது. மற்ற மாநிலங்களுக்கு இப்பொருள்களை வழங்குவதன் மூலம், இந் நிறுவனம் ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ ரூ. 3 லட்சம் ஈட்டுகிறது.

உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் மதிப்பு, மற்ற மாநிலங் களுக்கு இலவசமாக வழங்கப்பட்ட பொருட்களின் மதிப்பு, விலைக்கு விற்கப்பட்ட பொருட்களின் மதிப்பு ஆகியவை கீழே கொடுக்கப் பட்டுள்ளன :—

ஆண்டு.	உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் மதிப்பு.	நம் மாநிலத்திற்கு இலவசமாக வழங்கப் பட்ட பொருட்களின் மதிப்பு.	ஏனைய மாநிலங்களுக்கு விலைக்கு விற்கப்பட்ட பொருட்களின் மதிப்பு.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)	(5)
	ரூ. பை.	ரூ. பை.	ரூ. பை.	ரூ. பை.
1967–68 ..	6,74,877·00	5,26,882·51	74,293·00	6,01,175·51
1968–69 ..	6,49,243·88	5,88,661·21	99,986·89	6,83,648·01
1969–70 ..	7,79,408·00	6,79,072·30	1,37,072·30	8,16,095·25
1970–11 ..	8,21,171·01	8,78,296·19	2,23,834·00	11,02,130·19
1971–72 ..	**9,81,780·51**	8,08,194·88	**1,73,585·63**	**9,81,780·51**

(2/1972 முடிய)

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1972 மார்ச் 27]

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில், புதுமுறை மத்திய ஆய்வுக்கூடமொன்றை ரூ. 15 லட்சம் செலவில் கட்டுவதற்கு ஒப்பளிக்கப்பட்டுள்ளது. அவ்வாய்வுக்கூடம் முழுவதும் குளிர் சாதன வசதி செய்யப்பட்டிருக்கும்; பல்வேறு தடுப்பு மருந்து தயாரிக்கும் ஆய்வுக் கூடங்கள் அமைய சாதனங்கள் நிறைந்திருக்கும். இப்பணி இந்த ஆண்டில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

வெக்கை நோய்த் தடுப்பு மருந்து தயாரிப்பதற்கு புதிய சாதனங்கள் வாங்கப்பட்டுள்ளன. கீழ்க்காணும் மிகவும் நவீன, தொழில்நுட்பம் வாய்ந்த சாதனங்களை வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்யக் கருதப்பட்டுள்ளது :—

1. புது மாதிரி மையவிரிப்போக்குடைய நுண்ம உருப்பெருக்கி (Centrifugal Microscope).

2. 70 சென்டிகிரேட் வெப்பநிலையில் உள்ள உறைத்தன்மை அறை.

3. உருத் தலைகிழாக்கப்பட்ட நுண்ம உருப்பெருக்கி. Inverted Microscope.

4. மிக்க வேகத்தில் சுழலும் கையடக்கமான, வெவ்வேறு எடைச் செறிவுள்ள பொருள்களைப் பிரிக்கும் பொறி (Portable High Speed Centrfuge).

இறக்குமதி செய்வதற்கான உரிமங்கள், இந்திய அரசிடமிருந்து பெறப்பட்டுள்ளன. இங்கிலாந்து, அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆகிய நாடுகளுக்கு வழங்கல் ஆணைகள் அனுப்பப்பட்டுள்ளன. இவற்றைத் தவிர இயந்திரத்தினால் புட்டிகளைக் கழுவுவதற்கான பொறி, கலக்கும் பொறிகள் முதலிய நவீன சாதனங்களும் இந்த ஆண்டில் வாங்கப் பட்டுள்ளன.

தொண்டை அடைப்பான் நோய்த்தடுப்பு (Haemorrhagic Septicaemia) அம்மைப்பால், சப்பை நோய் தடுப்பு (Black Quarter) அம்மைப்பால் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான திட்டங்களை இந்நிறுவனம் எதிர்காலப் பணியாகக் கொண்டுள்ளது.

சிறுநீரக செல்களில் நச்சுக்கிருமிகளை வளரச் செய்யும் புதிய உத்தியைக் கையாண்டு வெக்கை நோய்த் தடுப்பு அம்மைப்பால்

தயாரிப்பதில் முனைந்தது இந்நிறுவனம் ஒன்றுதான். மற்ற மாநிலங்களிலிருந்தும், தனிப்பட்ட கால்நடை வளர்ப்போரிடமிருந்தும் தேவைக்கான கோரிக்கைகள் வருவதால், இந்த அம்மைப்பால் வாணிக முறையில் விற்பனை செய்ய கருதப்பட்டுள்ளது.

கால்நடைகளுக்கு வரும் கோமாரி நோய்களுக்குக் காரணமான தொற்று நோய்க்கிருமிகள் பரவுவதைப்பற்றியும் அவை பரவாமல் தடுப்பது பற்றியும் ஆய்வு செய்வதற்கும் அந்த நோய்கள் பெருவாரியாகப் பரவுதலைப்பற்றி ஆய்வு செய்வதற்கும் ஒரு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதற்கு இந்திய வேளாண்மைக் கழகம் முழு உதவியாக ரூ. 3.58 லட்சம் ஒதுக்கியுள்ளது.

கால்நடைகளின் கோமாரி நோய் ஆராய்ச்சி நிலையமொன்றை ஏற்காட்டில் நிறுவவும் நாம் கருதியுள்ளோம். கோமாரி நோயை எதிர்க்கும் வலிமையுள்ள மாற்றைக் கண்டுபிடிப்பதற்கான திட்டமொன்று எடின்பரோ பல்கலைக்கழகத்தின் ஒத்துழைப்புடன் இந்தியாவிலேயே முதன் முறையாக நமது மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டம் பயனுள்ள விளைவுகளை அளித்துள்ளது.

அம்மைப்பால் தயாரிக்கப்படுவது மட்டுமின்றி, மருந்துப் பொருட்களை மேம்படுத்தவும், புதிய நோய்களைத் தடுக்கவும், அந்நோய்களின் உட்கூறுகளை ஆராயவும், அவற்றைக் கட்டுப்படுத்தவும் தொடர்ந்து ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

துறையின் பிற முக்கியமான மேம்பாடுகள்

(i) புதுமை முறையில் இறைச்சிக் கொட்டில்கள் அமைத்தல் :

மக்கள் நல்வாழ்விற்கான உணவு கிடைக்க வழிசெய்யும் பொருட்டு திறமையாகவும், அறிவியல் முறையிலும் விலங்குப் பொருட்களைப் பதப்படுத்தவும், புதுமைமுறை இறைச்சிக் கொட்டில் ஒன்றை சென்னையில் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கெனச் சுமார் ரூ. 62.25 லட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

(ii) காளைகள் இனவழி ஆராய்ச்சி :

ஓசூரிலுள்ள மாவட்டக் கால்நடைப் பண்ணையில் ரூ. 13.37 லட்சம் செலவில் சிந்தி காளைகளைப் பற்றிய இனவழி தொடர்பான ஆராய்ச்சிக்கு இந்திய அரசு ஒப்பளித்துள்ளது. காளைகளையும்,

1972 மார்ச் 27]

சிகப்பு சிந்தி இனங்களையும் உற்பத்தி செய்ய இத்திட்டம் மாநில அரசால் செயல்படுத்தப்படும்.

(iii) மத்திய எருமைப் பண்ணை, அலமாதி :

செங்கல்பட்டு மாவட்டம் அலமாதியில் ரூ. 82.91 லட்சம் செலவில் மத்திய எருமைப்பண்ணை ஒன்றை நிறுவ இந்திய அரசு திட்டமிட்டுள்ளது. அதற்கான நிலங்களும், கட்டிடங்களும் வழங்கப்படுமென்று மாநில அரசு இந்திய அரசுக்கு ஏற்கெனவே தெரிவித்துள்ளது. இந்திய அரசின் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது.

(iv) தொற்றுத் தடைக்காப்பு நிலையத்தை அமைத்தல் :

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் கால்நடைகளை தொற்றுத் தடைக்காப்பில் வைப்பதற்காக, தமிழ்நாட்டில், சென்னைக்கு அருகில் நிலையான தொற்றுத்தடைகாப்பு நிலையமொன்றை அமைக்க, இந்திய அரசு திட்டமிட்டுள்ளது. இந்திய அரசின் இத்திட்டத்தை மாநில அரசு ஏற்றுக்கொண்டு, அதற்காக செங்கல்பட்டு மாவட்டம், சைதாப்பேட்டை வட்டத்தில் பொருத்த மான இடங்களைத் தெரிவித்துள்ளது. இந்திய அரசினிடமிருந்து பதில் கிடைத்தவுடன் இந்த நிலையம் நிறுவப்படும்.

(v) அலமாதியில் கால்நடைத் தீவன ஆராய்ச்சி நிலையமொன்றைத் தொடங்குதல் :

அலமாதியில், ரூ. 14.39 லட்சம் செலவில், கால்நடைத் தீவனம், தீவனப்பயிர் குறித்த விளக்க நிலையமொன்றைத் தொடங்கும் திட்டத் திற்கு இந்திய அரசு ஏற்பளித்துள்ளது. இத்தொகை மூன்றுண்டு களுக்காக வழங்கப்படுவதாகும். அலமாதியிலுள்ள நிலங்கள் இந்திய அரசுக்கு மாற்றப்பட்டதும் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

(vi) கால்நடை இறக்குமதி :

கலப்பற்ற ஒரே இனத்தைச் சேர்ந்த கால்நடை, பன்றிகள், கோழிகள், ஆடுகள் ஆகியவற்றைப் பெறுவதற்காக, ஆஸ்திரேலியாவி லிருந்து அந்நிய வகை எருதுகளையும், ரஷ்ய மெரீனோ ஆடுகளையும், ஹைலின் கோழிகளையும், வெள்ளை யார்க்ஷயர் பன்றிகளையும் இறக்குமதி செய்ய, இந்திய அரசுடன் கலந்தாலோசித்து ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

(vii) கோடைக்கானலில் கலப்பு ஜெர்சி இன-செம்மறியாட்டுப் பண்ணை ஒன்றை அமைத்தல் :

நியுஜிலாந்து அரசின் உதவியுடன் கோடைக்கானலில் கலப்பு இனப்பண்ணை ஒன்றை அமைக்க இந்திய அரசு கருதியுள்ளது. மாநில அரசு இத்திட்டத்திற்கு ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. இந்தக் காரியத்திற்காக கோடைக்கானலில் தகுந்த மனையொன்றைத் தேர்ந்தெடுப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

(viii) கால்நடை வார விழாக்கள் :

முதன் முறையாக 1971–72-ல் பொங்கல் திருநாளுடன் இணைந்தாற்போல், மாநிலம் முழுவதும் கால்நடை வாரம் கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டது. உழவர்களின் நன்மைக்காக, பெருமளவில் பொதுக்கூட்டங்கள், வானொலிப் பேச்சுக்கள், பொருட்காட்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

(ix) கோழிப்பண்ணை வளர்ச்சிக் கழகம் :

கோழிப்பண்ணை வளர்ச்சியின் வாய்ப்புக் கூறுகளை உறுதிப்படுத்தவும் ஆதாயம் தரத்தக்க விற்பனை வசதிகளுக்கான தேவைகளை கருத்திற்கொண்டு, பஞ்சாப் மாநிலத்தில் உள்ளதைப்போன்று, கோழிப்பண்ணை வளர்ச்சிக் கழகம், ஒன்றை இம்மாநிலத்திலும் நிறுவுவது குறித்து ஆலோசிக்கப்படுகிறது.

(x) கால்நடை மேம்பாட்டு வாரியக் கூட்டங்கள் :

1971–72-ல் கால்நடை வளர்ச்சி வாரியத்தின் கூட்டங்கள் புதுக்கோட்டை, ஒரத்தநாடு ஆகிய இடங்களில் நடைபெற்றன. இக்கூட்டங்களில் பங்கேற்ற உறுப்பினர்கள் மிகவும் பயனுள்ள கருத்துக்களைத் தெரிவித்தனர். இரண்டுக்குக் குறையாத உறுப்பினர்கள் எந்த நேரத்திலும் பல்வேறு பண்ணைகளுக்குச் சென்று பார்வையிட்டு, அவர்களுடைய கருத்துக்களை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

(xi) தமிழ்நாட்டுச் சமவெளிகளில் மத்திய செம்மறியாடு—கம்பளி, ஆராய்ச்சி நிலையத்தின் நேரிட நிலையமொன்றை நிறுவுதல்.

அந்நியவகை செம்மறியாடு, அவற்றின் கலப்பு இனங்கள் ஆகியவற்றின் தனித் தன்மைகளை ஆராயவும், அவற்றிற்குத் தேவை

1972 மார்ச் 27]

யான தீவனத் திட்டங்கள், தீவனப் புல் தேவைகள் குறித்து பரிசோதனைகள் நடத்தவும், கோடைக்கானல் மலையிலுள்ள மன்னவனூர் மலைப்பகுதியில், இந்திய அரசு, ஏற்கனவே மத்திய செம்மறியாடு—கம்பளி ஆராய்ச்சி நிலையமொன்றை நடத்திக்கொண்டிருக்கிறது. சமவெளிகளிலுள்ள செம்மறியாடுகளுக்குப் பயன் தரும் வகையில் அதே பரிசோதனைகளை நடத்துவதற்காக அத்தகைய திட்டமொன்றை ரூ. 3.27 லட்சம் செலவில் தமிழ்நாட்டுச் சமவெளிகளில் மேற்கொள்வதிலும் அவர்கள் குறிப்பாக உள்ளனர். அத்திட்டத்திற்காக சேலம் மாவட்டத்தில், தகுந்த நிலம் ஒன்றை தெரிந்தெடுக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

ஆண்டுத் திட்டம்.

1972–73-ல் கீழ்க்கண்ட ஐந்தாண்டுத் திட்டப் பணிகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது :—

		ரூபாய்.
1	அம்மைப்பாலை அதிக அளவில் தயாரிப்பதற்காக கால்நடை நோய்த்தடுப்பு நிலையத்தை மேம்படுத்துதல்.	1,86,500
2	சென்னை, கால்நடை மருத்துவக் கல்லூரியில், கல்வி, ஆராய்ச்சி வசதிகளைப் பெருக்குதல்.	2,51,000
3	பரிசோதனை நிலையத்தில் உழவர்களுக்குப் பயிற்சி அளித்தல்.	19,200
4	சென்னை, கால்நடை மருத்துவக் கல்லூரியின் நூலகத்துக்கு பழந்தொகுப்பு நூல்கள் வாங்குதல்.	50,000
5	கற்பித்தல், ஆராய்ச்சி வசதிகளைப் பெருக்க துறைகளை வலுப்படுத்துதல்.	62,100
6	உறைந்த விந்து பயன்படுத்தும் ஆய்வுக் கூடங்களை அமைப்பதற்கான திட்டம்.	42,300
7	எருமை இன மரபியல் ஆராய்ச்சித் திட்டத்திற்காக விலங்குகள் வாங்குதல்.	50,000
8	சென்னை, கால்நடை மருத்துவக் கல்லூரியில் பட்ட மேற்படிப்புக்காக சாதனங்கள் வாங்குதல்.	2,60,000

[1972 மார்ச் 27

		ரூபாய்.
9	மாதவரம் வட்டாரத்தில் கலப்பு இன மும்முரத் திட்டத்திற்காக ஜீப் ஒன்று வழங்குதல்.	32,300
10	சென்னை, கால்நடை மருத்துவக் கல்லூரியில் உடல் வளர்ச்சிக்கூறுப் பிரிவுகளைக் கட்டுதல்.	1,00,000
11	சென்னை, கால்நடை மருத்துவக் கல்லூரியில் சிறு விலங்குகளுக்காக கட்டிடங்கள் கட்டுதல்.	40,000
12	கால்நடை மருத்துவக் கல்லூரியில், பிற மாணவர்களுக்கான கூடம் ஒன்றைக் கட்டுதல்.	50,000
13	கோழியின ஆராய்ச்சி நிலையத்தில் (தேனாம் பேட்டை) புதிய கோழியினங்களை உற்பத்தி செய்யும் திட்டம்.	1,00,000
14	உதகையிலுள்ள செம்மறியாடு ஆராய்ச்சி நிலையத்திற்காக கட்டிடங்கள் கட்டுதல், சாதனங்கள் வாங்குதல்.	1,00,000
	மொத்தம் ...	13,43,000

சுருங்கக்கூறின், குறிப்பாக உழவர்களும், பொதுவாக மக்களனை வரும், வளமான வாழ்க்கையைப்பெற, கால்நடை வளர்ப்புத் துறையும் கால்நடை மருத்துவக் கல்வி ஆராய்ச்சித் துறையும் விரைந்து முன்னேறி வருகின்றன.

இத்தீர்மானத்தை ஏற்றுக் கொள்ளுமாறு நான் பேரவையை வேண்டிக் கொள்ளுகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு II

மாவட்ட கால்நடைப் பண்ணைகளின் மொத்தப் பரப்பளவு, அதில் பயிர் செய்யப்பட்ட பரப்பளவு, உற்பத்தி செய்யப்பட்ட கால்நடைத் தீனி, தீவனம் ஆகியவற்றைக் காட்டும் விவர அறிக்கை.

தொடர் எண்ணும், பண்ணையின் பெயரும்.	மொத்தப் பரப்பளவு.	பயிர் செய்யப்பட்ட பரப்பளவு.	உற்பத்தியாக்கப்பட்ட தீனியும், தீவனமும். (கிலோகிராமில்) 1968–69.	1969–70	1970–71.	1971–72. 1971-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் வரை.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1. மாவட்டக் கால்நடைப் பண்ணை, ஓசூர்.	1,646	203	14,78,685	25,62,629	28,65,987	23,68,051
2. மாவட்டக் கால்நடைப் பண்ணை, புதுக்கோட்டை.	997	463	55,94,108	52,67,718	54,50,103	41,51,823
3. மாவட்டக் கால்நடைப் பண்ணை, ஒரத்தநாடு.	2,092	480	29,74,107	32,37,521	32,93,965	20,36,048
4. மாவட்டக் கால்நடைப் பண்ணை, செட்டிநாடு.	1,907	432	7,00,298	13,81,975	13,58,112	9,04,039
5. மாவட்டக் கால்நடைப் பண்ணை, அபிஷேகப்பட்டி.	1,898	240	6,24,607	5,94,013	4,00,554	12,13 977
6. மாவட்டக் கால்நடைப் பண்ணை, உதகமண்டலம்.	126	40	..	1,91,388	4,84,705	4,62,267
	8,666	1,858	1,14,71,805	1,32,25,244	1,38,53,426	1,11,36,196

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு III.

மாவட்டக் கால்நடைப் பண்ணைகளில் கிட்டும் பாலின் அளவைக் காட்டும் விவர அறிக்கை.

மாவட்டக் கால்நடைப் பண்ணையின் பெயர்.	கறக்கப்பட்ட பால்.			
	1968–69.	1969–70.	1970–71	1971–72. 1971-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் வரை.
	(கிலோகிராமில்.)			
(1)	(2)	(3)	(4)	(5)
1. மாவட்டக் கால்நடைப் பண்ணை, ஒசூர்	3,74,958	3,39,177	3,76,911	2,50,140
2. மாவட்டக் கால்நடைப் பண்ணை, புதுக்கோட்டை	2,53,788	2,34,717	2,87,362	1,81,894
3. மாவட்டக் கால்நடைப் பண்ணை, ஒரத்தநாடு ..	4,29,509	3,98,888	3,86,190	2,22,379
4. மாவட்டக் கால்நடைப் பண்ணை, செட்டிநாடு ..	1,25,407	1,36,083	1,58,781	82,036
5. மாவட்டக் கால்நடைப் பண்ணை, அபிஷேகப்பட்டி	84,474	92,076	72,808	46,067
6. மாவட்டக் கால்நடைப் பண்ணை, உதகமண்டலம்	1,75,473	1,30,181	90,613	66,019

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு IV.

1971-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 1-ஆம் நாளன்று கால்நடை மற்றும் கோழியின் இருப்பு நிலை.

பண்ணையின் பெயர்.	வெண்ணிறக் கால்நடை.		கருப்பு நிறக் கால்நடை.		ஆடுகள்.		பன்றிகள்.		கோழிகள்.	
	இளம் வகை.	வயது வந்தவை.	இளம் வகை.	வயது வந்தவை.	இளம் வகை.	வயது வந்தவை.	இளம் வகை.	வயது வந்தவை.	இளம் வகை.	வயது வந்தவை.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)
1. மாவட்டக் கால் நடைப் பண்ணை, ஒசூர்.	209	766	..	..	287	663	201	56	27,983	4,045
2. மாவட்டக் கால் நடைப் பண்ணை, புதுக்கோட்டை.	192	708	46	178	347	692	43	145	8,021	3,598
3. மாவட்டக் கால் நடைப் பண்ணை, ஒரத்தநாடு.	150	611	70	290	..	..	87	69	8,575	6,181
4. மாவட்டக் கால் நடைப் பண்ணை, செட்டிநாடு.	66	284	26	151	158	336	80	57	2,737	993
5. மாவட்டக் கால் நடைப் பண்ணை, திருநெல்வேலி.	24	93	32	70	356	770	42	120	1,353	2,522

இணைப்பு VI—தொடர்ச்சி.

1971-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 1-ஆம் நாளன்று கால்நடை மற்றும் கோழியின் இருப்பு நிலை.

பண்ணையின் பெயர்.	வெண்ணிறக் கால்நடை.		கறுப்பு நிறக் கால்நடை.		ஆடுகள்,		பன்றிகள்.		கோழிகள்.	
	இளம் வகை.	வயது வந்தவை.	இளம் வகை.	வயது வந்தவை.	இளம் வகை.	வயது வந்தவை.	இளம் வகை.	வயது வந்தவை.	இளம் வகை.	வயது வந்தவை.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(10)	(11)	(12)
6. மாவட்டக் கால் நடைப் பண்ணை, உதகமண்டலம்.	54	59	—	—	..	—	..	..	..	..
7. ஆட்டுப் பண்ணை, சின்னசேலம்.	183	161	—	..	550	878	..	..	7,988	6,124
8. ஆட்டுப் பண்ணை, சாத்தூர்.	—	—	—	—	403	541	..	..	721	3,858
9. கோழிப் பண்ணை, காட்டுப்பாக்கம்.	..	..	..	..	..	..	..	..	10,634	11,265

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு V

மாவட்டக் கால்நடைப் பண்ணைகள் குறித்து செலவையும், அவற்றிலிருந்து வந்த வரவையும் காட்டும் விபர அறிக்கை.

மாவட்டக் கால் நடைப் பண்ணையின் பெயர்.	1968–69.		1969–70.		1970–71.		1971–72. 1971-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் வரை.	
	செலவு.	வரவு.	செலவு.	வரவு.	செலவு.	வரவு.	வரவு	செலவு.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)
	ரூபாய்	ரூபாய்	ரூபாய்	ரூபாய்	ரூபாய்	ரூபாய்	ரூபாய்	ரூபாய்
1. மாவட்டக் கால் நடைப் பண்ணை, ஒசூர்.	11,04,368	3,44,511	6,94,802	1,82,666	14,46,975	3,69,702	6,41,284	3,51,254
2. மாவட்டக் கால் நடைப் பண்ணை, புதுக்கோட்டை.	8,93,124	2,48,934	6,08,237	1,23,653	12,70,960	3,12,165	6,62,082	2,39,102
3. மாவட்டக் கால் நடைப் பண்ணை, ஒரத்தநாடு.	10,76,311	3,33,420	6,90,086	2,39,254	13,60,670	4,17,043	7,54,019	3,35,300
4. மாவட்டக் கால் நடைப் பண்ணை, செட்டிநாடு.	5,53,379	1,47,813	4,37,767	91,966	8,52,630	1,78,535	3,96,580	1,89,538

இணைப்பு V—தொடர்ச்சி.

மாவட்டக் கால்நடைப் பண்ணைகள் குறித்து செலவையும், அவற்றிலிருந்து வந்த வரவையும் காட்டும் விவர அறிக்கை.

மாவட்டக் கால்நடைப் பண்ணையின் பேயர்.	1968–69,		1969–70.		1970–71.		1971–72. 1971-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் வரை.	
	செலவு.	வரவு.	செலவு.	வரவு.	செலவு.	வரவு.	வரவு.	செலவு.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)
	ரூபாய்	ரூபாய்	ரூபாய்	ரூபாய்	ரூபாய்	ரூபாய்	ரூபாய்	ரூபாய்
5. மாவட்டக் கால் நடைப் பண்ணை, அபிஷேகப்பட்டி.	3,75,791	1,07,834	2,35,804	76,434	4,95,081	1,85,298	1,28,461	94,518
6. மாவட்டக் கால் நடைப் பண்ணை, உதகமண்டலம்.	2,98,994	1,09,355	2,04,494	72,000	2,55,779	72,970	1,66,675	43,759

குறிப்பு.—மேற்கண்ட புள்ளி விவரங்கள் மூலதனச் செலவு உட்பட அந்தந்தத் தலைப்புகளின் கீழ் இவ்வாண்டின் வரவு-செலவைக் குறிப்பதாகும். இருப்பைக் கணக்கில் கொண்டு தயாரிக்கப்பட்ட கணக்கல்ல.

1972 மார்ச் 27]

இணைப்பு VI

மையக்கிராமப் பகுதிகளிலும், கால்நடை மும்முர வளர்ச்சித் திட்டப் பகுதிகளிலும் செயற்கை முறையில் கருத்தரிக்கச் செய்த கால்நடைகள், பிறந்த கன்றுகளின் எண்ணிக்கை, அவற்றைச்சரி பார்த்தல் ஆகியவற்றைக் காட்டும் அறிக்கை.

		1970–71
1	1970–71-ஆம் ஆண்டில் செயற்கை முறையில் கருத்தரிக்கச் செய்த கால்நடைகள் எண்ணிக்கை.	1,755,859
2	1970–71-ஆம் ஆண்டில் பிறந்த கன்றுகளை சரி பார்த்தவைகளின் எண்ணிக்கை.	261,081
3	சிகிச்சை செய்யப்பட்ட கால்நடைகள் எண்ணிக்கை	532,248
4	காயடிக்கப்பட்ட கால்நடைகள் எண்ணிக்கை	50,814
5	நோய்த்தடுப்பு ஊசி குத்தப்பட்டவைகளின் எண்ணிக்கை.	1,725,388

குறிப்பு.—சென்ற ஆண்டில் செயற்கை முறையில் கருத்தரிக்கச் செய்த கால்நடைகள் பிறந்த கன்றுகளின் எண்ணிக்கையை 2-வது இனம் குறிப்பிடுகிறது. அவை, கால்நடை வளர்ப்புத் துறையினரால் சரிபார்க்கப்பட்டவைகளாகும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு VII.

கால்நடை மருத்துவ மனைகளிலும், கால்நடை மருந்தகங்களிலும், சிகிச்சை அளிக்கப்பட்டவை, கொள்ளை நோய்களுக்குச் சிகிச்சையளிக்கப்பட்டவை, தடுப்பூசி போடப்பட்டவை ஆகியவைகளைக் காட்டும் விவரங்கள்.

	1968–69.	1969–70.	1970–71.	1971–72. 1971-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் வரை.
(1)	(2)	(3)	(4)	(5)
1. கொள்ளை நோய்களுக்குச் சிகிச்சை அளிக்கப் பட்ட கால் நடைகளின் எண்ணிக்கை.	593	380	1,921	287
2. நோய்களின்எண்ணிக்கை (அறிவிக்கப்பட்டவை).	10	12	9	10
3. போடப்பட்ட தடுப்பூசிகளின் எண்ணிக்கை ..	5,504,830	3,590,184	4,011,177	2,695,490
4. சிகிச்சை அளிக்கப்பட்ட கால்நடைகளின் எண்ணிக்கை.	1,581,508	1,935,814	2,931,798	1,226,972
5. காயடிக்கப்பட்ட கால்நடைகளின் எண்ணிக்கை.	268,521	1,71,840	50,814	126,797
6. மருத்துவ பரிசோதனைக்கு வந்த பொருட்களை ஆய்வு செய்த நேர்வுகளின் எண்ணிக்கை.	118,687	84,766	111,612	59,776

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

1972 மார்ச் 27]

இணைப்பு 3

[97-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

தமிழ்நாடு சின்கோனுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு

அ. பகுதி.

முகவுரை

சின்கோனுத் துறை தமிழ்நாடு அரசின் தொன்மை வாய்ந்த வணிக நிறுவனங்களில் ஒன்ருகும். நீலகிரி மாவட்டத்திலும், கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஆனைமலைப் பகுதிகளிலும் இந்தத் துறைக்கு சின்கோனு பிற மூலிகைச் செடிகள், நறுமணத் தைலங்கள் நல்கும் செடிகள் உள்ளன. ஆனைமலைப் பகுதியில் கொய்னு பொருட்கள் தயாரிப்புத் தொழிற்சாலை யொன்றையும், மருத்துவப் பயனுள்ள நீலகிரித் தைலம், ஜெரேனியம் தைலம், கற்பூரத் தைலம், யூகலிப்டஸ் சிட்ரியோடோரா தைலம், ஜாவா தைலம் போன்ற தைலங்களைத் தூய்மையாக்கி சோதித்து, தரப் படுத்தும் வேலைக்காக நடுவட்டத்தில் மற்றுமொரு தொழிற் சாலையையும் இத்துறை நடத்துகிறது.

2. இத் துறையின் அலுவல்கள்—

சின்கோனு பயிரிடுதல், சின்கோனு பட்டை எடுத்தல், பல்வேறு கொய்னுப் பொருள்களைப் பிரித்தெடுத்தல், தயாரித்தல், அவ்வுற்பத்திப் பொருட்களை வெளிநாட்டு, உள்நாட்டு சந்தை களிலும் விற்பனை செய்தல் ஆகியவை இத் துறையின் தலையாய பணி யாகும். இதன் தொடர்பாக, இத் துறையின் வருவாயைப் பெருக்கவும், இந்நாட்டில் மருந்து மணங்கமழ் தைலங்களுக்கு அதிகரித்து வரும் தேவையினைக் கருத்தில் கொண்டும், மருந்து மணங்கமழ் பொருட்களை நல்கும் பல்வேறு வகையான செடிகளை இத் துறை பயிரிடுகிறது. இவற்றிலிருந்து கிடைக்கின்ற பொருட்களை செய்முறைப்படுத்தி, இந் நாட்டிலுள்ள மருந்து தொழிற்சாலைகள் நறுமணப் பொருட்கள், ஒப்பனைப் பொருட்கள், சோப்புகள் முதலியன தயாரிக்கும் தொழிற்சாலைகளில் கொள்முதல் செய்வோருக்கு விற்பனை செய்து வருகிறது. இத் துறையில் உற்பத்தி செய்யப்படும் கொய்னுப் பொருட்கள், அவற்றின் உயர் தரத்தின் காரணமாக வெளிநாடுகளில் நன் மதிப்பைப் பெற்றுள்ளதுடன்

அவை வளர்ச்சி அடைந்துள்ள ஜெர்மனி, ரஷ்யா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

மலேரியா நோயைக் குணப்படுத்தும் சஞ்சீவியாகிய கொய்னு, சின்கோனு மரப்பட்டையிலிருந்து தயாரிக்கப்படுகிறது. சாதாரண தடுமன், காய்ச்சல் முதலிய நோய்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்குப் பயனுகும் பல்வேறு மருந்துகள் தயாரிப்பதற்கும் கொய்னு தற்பொழுது பயன்படுத்தப்படுகிறது. இதய நோய்க்கு சிகிச்சை அளிப்பதற்கு கொய்னு பயன்படுத்தப்படுகிறது. சின்கோனு மரம் தென் அமெரிக்காவைச் சேர்ந்தது. இது முதல் முதலில் 1859-ஆம் ஆண்டு இந்தியாவிற்குக் கொண்டுவரப்பட்டது. தென்னிந்தியாவில் சின்கோனு மரங்கள் சுமார் 3,000 அடி உயரத்தில்தான் செழித்து வளர்கின்றன. இம் மரத்தில் கொய்னு மருந்து தயாரிப்பதற்குத் தகுதியுள்ள முதிர்ந்த பட்டை பிடிப்பதற்கு எட்டு முதல் பத்தாண்டு காலம் ஆகிறது.

தேயிலே, காப்பி, ரப்பர் முதலிய செடிகளைப்போல், சின்கோனு அவ்வளவாக ஆதாயம் தராத காரணத்தால், தனிப்பட்ட மலைத் தோட்டக்காரர்கள் பெரும் பரப்பில் இதைப் பயிர் செய்வதில்லை. இருப்பினும் கொய்னுவின் நோய்த் தடுப்பு ஆற்றலைக் கருத்தில் கொண்டு மலேரியா நோய் தடுப்பில் இந்தியாவின் கொய்னுத் தேவையை நிறைவு செய்ய தமிழ்நாடு அரசு இதனைப் பயிரிட வேண்டியதாயிற்று. இந்தியாவில் தமிழ் நாட்டைத் தவிர கொய்னு உற்பத்தி செய்யும் ஒரே மாநிலம் மேற்கு வங்காளம்தான்.

3. பல்வகைச் செடிகள் வளர்க்கப்படும் பரப்பளவு—

வரிசை எண்ணும் பயிரின் பெயரும்.	பரப்பளவு.		மொத்தம்.
	நீலகிரி.	ஆனைமலை.	
(1)	(2)	(3)	(4)
	ஹெ.	ஹெ.	ஹெ.
1 சின்கோனு	426	1,904	2,330
2 மருந்து மற்றும் நறுமணத் தைலச் செடிகள்.	441	197	638

1972 மார்ச் 27]

4. தொழிற்சாலைகள் :—

(அ) ஆனைமலையிலுள்ள கொய்னாத் தொழிற்சாலை.—இத் தொழிற்சாலையில் கடந்த ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட கொய்னாப் பொருட்கள், நடப்பு ஆண்டில் உத்தேசிக்கப்பட்டுள்ள பொருட்கள் அளவு கீழ் வருமாறு :—

பொருளின் பெயர்.	ஆண்டு. 1971–72.	ஆண்டு. 1971–72 (மதிப்பிடப் பட்டது).
(1)	(2)	(3)
	கிலோ.	கிலோ.
1 குவினைன் சல்பேட்	12,435	13,200
2 சின்கோனா ஃபெப்ரிஃப்யூஜி	11,199	9,500
3 குவினைன் ஹைட்ரோகுளோரைடு .. (உற்பத்தி செய்யப்பட்ட குவினைன் சல்பேட்டி லிருந்து தயாரிக்கப்படுகிறது.)	7,207	5,000
4 குவினிடின் சல்பேட்	20	100

(ஆ) நடுவட்டத்திலுள்ள மருந்து மற்றும் நறுமணத் தைலத் தொழிற்சாலை.—கடந்த ஆண்டிலும் நடப்பு ஆண்டிலும் இத் தொழிசாலையினுல் தூய்மையாக்கி, தரப்படுத்தி, சிப்பம்கட்டி முடிக்கப்பட்ட தைலங்களின் மதிப்பும் நடப்பாண்டில் மதிப்பிடப் பட்ட தைலங்களின் மதிப்பும் வருமாறு :—

	ரூ.
1970–71	5,85,000
1971–72	*10,00,000

(* சுமாராக மதிப்பிடப்பட்டுள்ளது.)

5. விற்பனைகளும் ஈட்டி வருமானமும்—

(அ) இத் துறையின் வருமானம்—

அந்நிய நாடுகளில் கொய்னாப் பொருட்களுக்கு 1964-ஆம் ஆண்டிலிருந்து பெரும் தேவை இருந்து வருகிறது. இப் பொருட் களின் விலை திடீரென்று உயர்ந்தது. ஆனல், 1967–68-ம் ஆண்டில் வீழ்ச்சி அடைந்தது. மீண்டும் பழைய நிலை பெற்று, தேவையும்

அதிகரித்து வருகிறது. கொய்னுப் பொருட்களின் விற்பனையில் 1970–71-ல் கிடைத்த வருமானமும் நடப்பாண்டில் கிடைக்கும் என்று மதிப்பிடப்பட்ட வருமானமும் வருமாறு :—

கொய்னுப் பொருள்கள்—

ஆண்டு.	ஏற்றுமதி.	உள்நாட்டு விற்பனை.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)
		[ரூபாய் லட்சத்தில்.]	
1970–71	12·89	13·69	26·58
1971–72	*35·00	*10·52	*45·52

(* சுமாராக மதிப்பிடப்பட்டது.)

(ஆ) மருந்து மற்றும் நறுமணத் தைலங்கள்—

ஆண்டு.	விற்பனைகளின் மதிப்பு.
(1)	(2)
	(ரூபாய் லட்சத்தில்.)
1970–71	7·82
1971–72	*8·00

(* சுமாராக மதிப்பிட்டது.)

இத் துறை கடந்த மூன்று ஆண்டுகளில் (1968–71) ரூ. 86 லட்சம் அந்நிய செலாவணி பெற்றுள்ளது.

6. மருந்து மற்றும் நறுமணச் செடிகள் பற்றிய ஆராய்ச்சி—

மருந்து மற்றும் நறுமணச் செடிகளை பயிரிட்டுப் பதப் படுத்துவது தவிர, பல்வேறு மருந்து மற்றும் நறுமணப் பயிர்களைச் சாகுபடி செய்யும் முறை, பதப்படுத்துதல் ஆகியவற்றை மேம்படுத்து வதற்கான ஆராய்ச்சியையும் இத் துறை செய்து வருகிறது.

7. திட்டப் பணிகள்—

நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் பணிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

1. மருந்து மற்றும் நறுமணப் பயிர்களைப் பெரும் அளவில் சாகுபடி செய்வதை விரிவுபடுத்துதல்.

1972 மார்ச் 27]

2. மருந்து மற்றும் நறுமணச் செடிப் பொருட்களை முன்னோடி அளவில் பதப்படுத்துதல்.

3. மருந்து மற்றும் நறுமணச் செடிகள் பற்றி மும்முரமான ஆராய்ச்சியும் வளர்ச்சி முறைகளையும் மேற்கொள்ளுதல்.

4. அதிக அளவில் கொய்னுவையும் குவினிடினையும் தரவல்ல மேம்பாடான சின்கோனுச் செடிவகைகளை முளைக்க வைத்து இனம் பெருக்கும் முறைகளைக் கொண்டு பெருக்கும் திட்டம்.

5. இத் துறையின் அதிகாரிகள், அலுவலர், தொழிலாளர் ஆகியோருக்குச் சாலைகள், கட்டிடங்கள் மற்றும் இதர வசதிகள் வழங்குவதற்கான திட்டம்.

6. இத் துறையின் இரு தொழிற்சாலைகளுக்குத் தேவையான உயர்ந்த ரக இயந்திரங்களை வாங்குதல்.

8. இத் துறையின் நிதியமைப்பு—

1971-ஆம ஆண்டு மார்ச் திங்கள் 31-ஆம் நாளன்றின்படி இத் துறையின் மொத்த இருப்புகளின் மதிப்பு ரூபாய் 2,73,52,791 ஆகும். இந்த இருப்பு பற்றிய விவரம் தனித் தனி தலைப்புகளில் கீழே தரப் பட்டுள்ளது :—

நிலையான இருப்புகள்—

		ரூபாய்.
(அ)	சின்கோனுத் தோட்டங்கள்	59,42,515
(ஆ)	விறகுக்கான மரங்கள், மருந்து மற்றும் நறுமணத் தைலச் செடிகள்.	12,94,073
(இ)	கட்டிடங்கள், சாலைகள், இயந்திரத் தளவாடங்கள், மோட்டார் வண்டிகள் போன்ற இதர இருப்புகள்.	63,44,767

தற்காலிக இருப்புகள்—

பண்டங்கள் வேலை நிறைவு பெற்ற பொருட்கள் முதலியன.	1,37,71,436
மொத்தம் ...	2,73,52,791

[1972 மார்ச் 27

9. இத் துறை ஈட்டிய ஆதாயம்—

1970–71 ஆம் ஆண்டுக்கான இத் துறையின் கணக்குகள் ரூபாய் 5.69 லட்சம் நிகர ஆதாயத்துடன் முடிவு பெற்றன. 1971–72 ஆம் ஆண்டுக்கும் ஏறத்தாழ இதையொத்த நிகர ஆதாயம் கிட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

B. பகுதி.

இத் துறையின் பொதுவான வளர்ச்சித் திட்டம்—

சின்கோனா பயிரிடப்படும் பரப்பளவை 2,330 ஹெக்டேரிலிருந்து 2,630 ஹெக்டேருக்கு அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. துறையில் நடத்தப்பட்ட ஆராய்ச்சி வேலைகளின் சில முக்கியமான சாதனைகள் கீழ் வருமாறு :—

1. சின்கோனா ஃப்பெப்ரிஃப்பூஜிலிருந்து குவினைன் சல்பேட்டையும் குவினிடின் சல்பேட்டையும் தயாரித்தல்.

2. மருந்து தயாரிக்கப்பட்ட பின் சக்கையான சின்கோனாப் பட்டையிலிருந்து வீரிய கரியம் (Activated Carbon) முன்னோடித் திட்ட அளவில் தயாரித்தல்.

3. சின்கோனைன், சின்கோனைடைன் அல்காலாய்டுஸ் ஆகியவற்றை முன்னோடித் திட்ட அளவில் பிரித்தெடுத்தல்.

4. யூகலிப்டஸ் சிட்ரியோடோரா, சிம்பபோகன் விண்டெரியானஸ் ஆகிய தைலங்களிலிருந்து சிட்ரோனெல்லால் ஆய்வுக்கூட அளவில் தயாரித்தல்.

5. மேலும், திறன் மிக்க முறைகொண்டு B.P., I.P. தர யூகலிப்டஸ் தைல வகைகளைத் தயாரித்தல்.

6. பெர்பரிஸ் அரிஸ்டாடாவிலிருந்து தரமிக்க பெர்பரின் ஹைட்ரோ குளோரைடு தயாரித்தல்.

7. சிம்போபோகன் விண்டேரியானஸ் புல், பைரீத்ரெம், டியஸ்கோரியாப் பயிர் வகைகள் ஆகியவற்றிலிருந்து தேர்வு செய்யப்பட்ட செடி வகைகளை மேலும் தனிமைப்படுத்தி எடுத்தல்.

1972 மார்ச் 27]

C. பகுதி.

1971–72 ஆம் ஆண்டுக்குக் கீழ்க்காணும் வேலைத் திட்டம் ஒப்புதல் பெறப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது :—

1. தற்போதுள்ள சின்கோனுத் தோட்டங்களில் 258.66 ஹெக்டேர் சாகுபடி செய்யப்பட்டிருந்த பழைய பரப்பளவில் 5,91,300 சின்கோனுச் செடிகள் ஒருங்கு திரட்டப்பட்டுள்ளன.

2. 31 ஹெக்டேரில் புதிதாகச் சின்கோனு பயிரிடும் பணி முடிக்கப்பட்டது.

3. ஜிரேனியம், சிம்போபோகன் வின்டெரியானஸ், யூகலிப்டஸ் சிட்ரியோடோரா வாசனைப் புல் முதலான பல்வேறு மருந்து மற்றும் மணந்தரு தைலச் செடிகள் 125 ஹெக்டேரில் சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டன.

4. முளைக்க வைத்து இனம் பெருக்கும் முறை Vegetative propagation) கொண்டு மேம்படுத்தப்பட்ட செடி வகைகளிலிருந்து 1.14 லட்சம் சின்கோனுச் செடிகள் உற்பத்தி செய்யப்பட்டன.

5. ரூபாய் 43.60 இலட்சம் மதிப்புள்ள 13,200 கிலோ குவினைன் சல்பேட், 9,500 கிலோ சின்கோனு ஃபெப்ரிஃப்யூஜி, 100 கிலோ குவினிடின் சல்பேட் ஆகியவற்றைத் தயாரித்தல்.

6. ரூபாய் 10 லட்சம் மதிப்புள்ள 5,500 கிலோ யூகலிப்டஸ் தைலம், 1,400 கிலோ ஜிரேனியம் தைலம், 1,600 கிலோ யூகலிப்டஸ் சிட்ரியோடோரா தைலம், 3,100 கிலோ சிம்போபோகன் வின்டெரியானஸ் (சிட்ரோநெல்லா) தைலம், 98 கிலோ இதர தைலங்கள் ஆகியவற்றைத் தயாரித்தல்.

இவ்வாண்டின் இதர சாதனைகள் :—

1. சின்கோனுப் ஃபெப்ரிஃப்யூஜிலிருந்து குவினைன் குவினிடின் ஆகியவற்றைத் தொழிற்சாலை அளவு தயாரிப்பதற்கான தொழில் நுட்ப உத்திகள் முடிவுற்று தொழிற்சாலையளவு உற்பத்தி தொடங்கியது.

2. தொழிற்சாலை அளவு இஞ்சியிலிருந்து பிசினரக்குக் கலவை (Oboresin) தயாரிப்பதற்கான தொழில் நுணுக்கப் பணிகள் முடிவுற்று தொழிற்சாலையளவு உற்பத்தி தொடங்கியது.

3. அதிக அளவிலும், சிறந்த தரத்திலும் தைலங்களைக் காய்ச்சி எடுப்பதற்காக மருந்து மற்றும் நறுமணத் தைலங்களை வடி கட்டி எடுப்பதற்கான மேம்படுத்தப்பட்ட வகையான கொப்பரைகள், நிறுவப்பட்டுள்ளன.

4. ஆறு தொழிலாளர் குடியிருப்புகளுக்குத் தெரு மின் விளக்கு வசதி வழங்கப்பட்டது.

பகுதி.

1972–73 ஆம் ஆண்டுக்கான இத் துறையின் வேலைத் திட்டம் கீழ் வருமாறு :—

1. 14,58,700 செடிகளைக் கொண்டு ஏற்கெனவே சின்கோனு பயிரிடப்பட்டு வரும் 820.75 ஹெக்டேர் பரப்பளவில் மாற்றுச் செடி பயிரிட்டு நிலைப்படுத்துதல்.

2. 60 ஹெக்டேரில் புதிதாகச் சின்கோனு பயிரிடுதல்.

3. 220 ஹெக்டேரில் மருந்து மற்றும் நறுமணத் தைலச் செடி களைப் புதிதாகப் பயிரிடுதல்.

4. வான் பதியம், தரைப் பதியம், செடி இருக்கும் இடத் திலேயே பதியம் போடுதல், அரும்ப வைத்தல் ஆகியவை மூலம் 2 இலட்சம் மேம்படுத்தப்பட்ட வகையான (அதாவது பட்டையில் குவினேனையும், குவினிடினேயும் அதிக சதவீதம் அளவில் கொண்டுள்ள) சின்கோனு செடி வகைகளைப் பெருக்குதல்.

5. ரூபாய் 52 இலட்சம் மதிப்புள்ள 12,000 கிலோ குவினேன் சல்பேட், 10,000 கிலோ சின்கோனு ஃபெப்ரிஃப்யூஜி, 6,000 கிலோ குவினேன் ஹைட்ரோகுளோரைடு, 500 கிலோ குவினிடின் சல்பேட், ஆகியவற்றைத் தயாரித்தல்.

6. யூகலிப்டஸ் தைலம் B.P மற்றும் I.P. வகை, ஜிரே னியம் தைலம், சிட்ரோனெல்லா தைலம். யூகலிப்டஸ் சிட்ரியோ டோரா தைலம் போன்ற பல்வேறு மருந்து மற்றும் நறுமணத் தைலங்களைத் தயாரித்தல்.

7. ஆனைமலையிலும், நீலகிரியிலும் 50 தொழிலாளர் குடியிருப்பு அறைகளைக் கட்டுதல் 60 அறைகளை மாற்றியமைத்துத் தருதல், சீர்மிக்க சுகாதார வசதிகளை வழங்குதல்.

8. எல்லா அதிகாரிகள், அலுவலர் குடியிருப்புகளுக்கும் மின் வசதியளித்தல், தொழிலாளர் குடியிருப்புகளுக்குத் தெரு விளக்கு வசதியளித்தல், ஆகியவற்றை நிறைவேற்றி முடித்தல்.

1972 மார்ச் 27]

ஆராய்ச்சித் திட்டங்கள்.

மருந்து மற்றும் நறுமணத் தைலச் செடிகளில் மும்முரமான ஆராய்ச்சியையும், வளர்ச்சி முறைகளையும் மேற்கொண்டுள்ள திட்டம் நீடிக்கப்படும்.

நிதி நிலை.

1972–73 ஆம் ஆண்டுக்கு மதிப்பிடப்பட்ட வருவாய் ரூபாய் 59.14 இலட்சமாகும். இத் துறையின் கணக்குகள், ரூபாய் 8 இலட்சம் நிகர இலாபத்துடன் முடிவு பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

முடிவுரை.

உள்நாட்டுப் பயனுக்காகவும், ஏற்றுமதி செய்வதற்காகவும் உயர்ந்த மருந்துகளையும், நறுமணத் தைலங்களையும் தயாரித்து இத் துறை நாட்டுக்கு அன்னியச் செலாவணியை ஈட்டித் தருவதுடன், பயிற்சி பெற்றவர், ஓரளவு பயிற்சி பெற்றவர் மற்றும் தொழில் நுட்பப் பணியாளர் பலருக்கு எல்லா நிலைகளிலும் பெருமளவு வேலை வாய்ப்பும் வழங்குகிறது. இலங்கையிலிருந்தும், பர்மாவிலிருந்தும் தாய்நாட்டிற்குத் திரும்பியுள்ளவர்களுக்கு மறுவாழ்வு வசதி வழங்குவதற்காக புதிய சின்கோனு தோட்டங்கள் அமைக்கும் ஒரு திட்டம் உருவாக்கப்பட்டு இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அவர்களின் ஒப்புதல் கிடைத்தவுடன் இத் திட்டம் நிறைவேற்றப் படும்.

இணைப்பு 4

[97-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

காடுகள் துறை மானியக் கோரிக்கை.

கொள்கை விளக்கக் குறிப்பு.

1971–72இல், காடுகள் துறை நிர்வாகம் குறித்த முக்கியக் கூறுகளும் 1972–73 ஆம் ஆண்டிற்கான வேலைத்திட்டங்களும்.

பரப்பளவு.—காடுகள் துறையின் கீழ் வரும் மொத்தப் பரப்பளவு 21,072 சதுர கிலோ மீட்டராகும். இதில் 17,264 சதுர கிலோ மீட்டர் ஒதுக்கப்பட்ட காடுகளாகும். எஞ்சிய 3,808 சதுர கிலோ

128-12—40

மீட்டர் ஒதுக்கப்பட்ட நிலங்களாகும். ஏற்றத்தாழ்வில்லாத பொருளாதாரத்துக்குக் குறைந்த அளவு தேவையாக, தேசியக் கொள்கையில் விதித்துள்ள அளவு 33 சதவீதமாக இருக்க இம்மாநிலத்தில் காடுகளின் கீழுள்ள நிலப்பரப்பு, மொத்த நிலப் பரப்பில் 16 சதவீதமாகும்.

காடுகள் ஆற்றல்வாய்ந்த உயிரின வாழ்க்கைச் சூழ் நிலேயின் ஆக்கக் கூறு ஆகும். அவை சூழ்நிலேயைப் பெரிதும் பாதிக்கின்றன. மிக இன்றியமையாத இயற்கை வளங்களில் காடுகளும் ஒன்ருகும். அவை வெட்டிக் குறைக்கப்பட்டாலும் மீண்டும் வளர்ந்து பெருகும் வளங்களாகும். மண்வளப் பாதுகாப்பு, நீர்வளப் பாதுகாப்பு தட்ப வெப்ப நிலே போன்ற நுட்பமான இயல்புகளில் இவை முக்கியப் பங்கு பெறுகின்றன. அவை நாட்டில் மழை பெய்வதற்கான வாய்ப்புகளே உயர்த்துகின்றன. குறைந்தது, அவை மழைபெய்யும் நாட்களின் எண்ணிக்கையைக் கூடுதலாக்குகின்றன. காடுகள் நீர் வரவை முறைப்படுத்துகின்றன. வெள்ளப் பெருக்கைக் குறைக் கின்றன. மணல் அரிப்பைத் தடுக்கின்றன. எனவே, நமது காடு களேப் பாதுகாத்து, அவற்றை முனேப்பாகக் கட்டிக்காக்க வேண்டியது உயிரின வாழ்க்கைச் சூழலுக்குரிய இன்றியமையாத தேவையாகும். அவ்வாறின்றேல், கடும் விளேவுகள் ஏற்படும் என்பது பரவலாகக் காணப்பட்டு வருகின்றது. இதனேத் தொடர்ந்து மோச மான விளேவுகள் ஏற்படவும் கூடும். பாசனம், மின் உற்பத்தி, வெள்ளக்கட்டுப்பாடு ஆகியவற்றுக்காக அணேகள், நீர்த்தேக்கங்கள் கட்டுவதில் பெருந்தொகை முதலீடு செய்யப்பட்டுள்ளது. நீர்கோள் பகுதியில், காடுகள் பாதுகாப்பு, மண்வளப் பாதுகாப்புக்குப் போது மான ஏற்பாடுகள் செய்யப்பட்டாலொழிய இந்த அணேகளிலும், நீர்த்தேக்கங்களிலும் விரைவில் சேறும் வண்டலும் படிந்து அதன் வாயிலாக அவற்றின் நீட்சிக்காலம் பாதிக்கப்படுவதோடு பொருளாதாரமும் பாதிக்கப்படும். காடுகள் முக்கியமான நால்வகை மதிப்புகளேப் பெற்றிருக்கின்றன. காடுகளில் பல்வகைத் தாவரங்கள் மல்கியுள்ளன, எல்லாவகை விலங்குகளும் பெருகிக் காணப்படு கின்றன. காடுகள் மண்டி வளர்ந்துள்ள பகுதிகள் கண்ணுக்கு விருந்தாகும் அழகிய காட்சிகள் உடையனவாக உள்ளன. வனவிலங்கு களின் புகலிடம் காடுகளே. நம்நாட்டு வனவிலங்கு வகைகளின் பல இன்று அழிந்து மறையும் நிலேயில் உள்ளன. இவற்றை நாம் நன்கு போற்றிக்காக்கவேண்டும்.

நமது சுற்றுப்புறச் சூழலேக் கட்டிக்காப்பதில் காடுகளுக்குள்ள பங்கினேத் தவிர, அவை காடுகள் சார்ந்த முக்கியத் தொழில்களுக்கு

1972 மார்ச் 27]

இன்றியமையாத பல்வகை மூலப் பொருள்களையும் வழங்குகின்றன. அத்தகைய காடுகள் சார்ந்த தொழில்களாவன, காகிதம், காகிதக் கூழ், செய்தித்தாள் காகிதம், ரேயான், தீக்குச்சிகள், மரப்பலகைப் பொருள்கள், மரப்பிசின், கோந்து, மூலிகைகள் முதலியன, காடுகள் சார்ந்த இத்தொழில்கள் பல துறைகளிலும் பரந்துபட்ட வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருகின்றன. காடுகள் சார்ந்த பணிகள் யாவும் பெரும்பாலும் தொழிலாளர்களின் மும்முர உழைப்பினை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

காட்டு நிலப் பகுதிகளைப் பிற காரியங்களுக்குப் பயன் படுத்துதல்.—காடு வளர்ப்பு அல்லாத பிற பணிகளுக்காகக் காட்டு நிலங்கள் இடையறாது தேவைப்படுகின்றன. இந்நிலை காடுகளை அழித்து விடக்கூடிய பேரபாயத்தைச் தோற்றுவித்துள்ளது. இவ் வாண்டில், நிலமற்ற ஏழைகளுக்கு வழங்குவதற்காக, மொத்தம் 25,275.13 ஹெக்டேர்களைக் காட்டுப் பகுதிகளிலிருந்து விடுவிக்கு மாறு ஆணையிடப்பட்டுள்ளது. இதற்குக் கூடுதலாக, வட ஆர்க்காடு மாவட்டம், செங்கம் வட்டத்தில், 4,000 ஹெக்டேர் காட்டு நிலம், மத்திய விதைப் பண்ணை தொடங்குவதற்காக ஒப்படைக்கப் பட்டுள்ளது.

மக்கள் தொகை பெருகிவருவதையும், வாழ்க்கைத்தரம் உயர்ந்து வருவதையும் ஒட்டி, காடுபடு பொருள்களுக்கான தேவையின் அளவு மிக விரைந்து உயர்வது உறுதி. காகிதக் கூழ், மற்றும், காடுகள் சார்ந்த தொழில்களுக்குத் தேவையான மரங்கள் தொடர்பாக, காடுபடு பொருள்களுக்கான தேவை குறிப்பாக பெருகும். எனவே, பல்வேறு வகைகளையும் சேர்ந்த காடுபடு பொருள்களின் உற்பத்தியை உயர்த்த அவசர அவசியம் ஏற்பட்டுள்ளது. இதனை எவ்வாறு மேற்கொள்ள இயலும்? நமது காடுகள் மேலும் அழிக்கப்படாமல் பெருங்கவனமுடன் அவற்றைப் பாதுகாத்து, பெரு வளர்ச்சித் திட்டங்கள் மேற்கொள்வதன் மூலம் அவற்றின் உற்பத்தித் திறனை உயர்த்துவதால் மட்டுமே காடுபடு பொருள்களின் உற்பத்தி யளவை உயர்த்த இயலும்.

வருவாயும் செலவும்.—1970–71 ஆம் ஆண்டில் காடுகளிலிருந்து கிடைத்த வருவாய் ரூ. 366 லட்சம். 1971–72-ல் கிடைக்கக்கூடுமென எதிர்பார்க்கப்படும் வருவாய் ரூ. 393 லட்சம். இந்த வருவாயில்

பெரும்பகுதி, அதாவது, ஏறத்தாழ ரூ. 120 லட்சம் சந்தன மரங்களிலிருந்து கிடைக்கின்றது. 1970–71-ல் வெட்டுமரங்களிலிருந்தும், விறகுக்குப் பயன்படும் மரங்களிலிருந்தும், முறையே ரூ. 44.80 லட்சமும், ரூ. 83.65 லட்சமும் வருவாய் கிடைத்தது.

காடுகள் வளர்ப்பு நீண்டக்காலத்திட்டம் ஆகும். காடுகள் வளர்ப்புக்கு முதலீடு செய்து அவற்றிலிருந்து பலனைப் பெறுவதற்கு முன்னர் நீண்டகாலம் ஆகிவிடுகிறது. அவ்வாறிருப்பினும்கூட, முந்திய திட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட பல திட்டப் பணிகள் வருவாயளிக்கத் தொடங்கியுள்ளதோடு, அவை குறிப்பிடத்தக்க முறையில், மாநிலத் தொழில் வளர்ச்சிக்குத் தம்பங்கினை அளிக்கவும் தொடங்கியுள்ளன. முந்திரியிலிருந்து கிடைக்கும் ஆண்டு வருவாய் சுமார் ரூ. 15 லட்சம் ஆகும். கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அரசினர் ரப்பர் தோட்டங்கள் உற்பத்தியளிக்கத் தொடங்கியுள்ளன.

1970–71-ல் ரப்பர் விற்பனைமூலம் ரூ. 11.52 லட்சம் வருவாய் கிடைத்தது. ரப்பர் இறக்கப்படும் பகுதியின் பரப்பு வரும் ஆண்டுகளில் தொடர்ந்து அதிகமாகும். அதற்கேற்ப, வருவாயும் உயரும். தொழில்களின் பயனுக்காக வளர்க்கப்பட்ட, நீலகிரித் தைலமரங்கள், கற்பூர மரங்கள் ஆகியவற்றின் தோட்டங்கள், மிலாறு, மூங்கில் காடுகள் ஆகியவை காகித ஆலைகள் ரேயான் தொழிற்சாலை, மிலாறு பட்டைகளிலிருந்து தைலம் தயாரிக்கும் தொழிற்சாலை ஆகிய காடுகள் சார்ந்த தொழில்களுக்குத் தொடர்ந்து மூலப் பொருள்களை வழங்கி வருகின்றன. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தின் போது தொடங்கப்பட்ட பண்ணைக் காடு வளர்ப்புத் தோட்டங்கள் தற்போது பலன் தரும் நிலையை அடைந்துள்ளன. கிராம மக்களின் விறகு, வெட்டுமரத் தேவைகளை அவை கணிசமான அளவுக்கு நிறைவு செய்யவியலும்.

1970–71 ஆம் ஆண்டில், காடுகளின்கீழ் ஆன மொத்தச் செலவு ரூ. 300.77 லட்சம். 1971–72-ல் ஆகுமென எதிர்பார்க்கப்படும் செலவு ரூ. 358.12 லட்சம். 1970–71-ல் வளர்ச்சித் திட்டங்களுக்கு ரூ. 84.87 லட்சம் செலவாகியது. இத்தொகையில், ரூ. 74.89 லட்சம் அரசுத் துறையில் மேற்கொள்ளப்பட்ட வளர்ச்சித் திட்டங்களுக்கு செலவிடப்பட்டது. இத்தொகை, ஆதாயம் தருகின்ற தொழிலுக்குத் தேவைப்படுகின்ற தோட்டங்களை வளர்த்தல், பண்ணைக்காடு வளர்ப்புத் தோட்டங்கள், காடுகள் குறித்த ஆய்வு, செயல் திட்டங்கள், வன விலங்குகள் பாதுகாப்பு, வைகை அணை, மேட்டூர் அணை நீர்கோள் பகுதிகளில் மண் வளப்பாதுகாப்பு ஆகிய

1972 மார்ச் 27]

வற்றுக்குச் செலவிடப்பட்டது. மத்திய அரசு ஆதரவளிக்கும் திட்டங்களுக்கென்று 1970–71-ல் மொத்தம் ரூ. 9.98 லட்சம் ஒதுக்கப் பட்டது. அவற்றில் பின்வரும் திட்டங்கள் அடங்கும். வன வள ஆய்வு, குந்தா கீழ்பவானி நீர்கோள் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள். இராமநாதபுரம், தருமபுரி மாவட்டங்களில் வறட்சித்துயர் தணிப்பிற்கான சிறப்புக் கிராமத் திட்டம், முந்திரித் தோட்டங்களில் பயிர்பாதுகாப்பு ஏற்பாடுகள்.

இலங்கை அகதிகளுக்குப் புது வாழ்வு அளிக்கும் கருத்துடன், நீலகிரி மாவட்டத்தில் தேயிலைத் தோட்டமும், கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் தோட்டங்களும் வளர்ப்பதற்கான திட்டங்களை காடுகள் துறை மேற்கொண்டுள்ளது. இந்தத் திட்டங் களுக்கு நீண்டகாலக் கடன் வடிவில் இந்திய அரசு நிதியுதவி அளிக் கின்றது. 1970–71-ல் அகதிகளுக்குப் புது வாழ்வு அளிக்கும் திட்டத் தின்கீழ் ரூ. 24.96 லட்சம் செலவிடப்பட்டது.

காடுபடு பொருள்கள் சார்ந்த தொழிற்சாலைகளுக்கு மூலப் பொருள்களை வழங்குதல்.—1970–71-ல் சேலம், மாவட்டத்திலுள்ள சேஷசாயி காகித ஆலைக்கு சுமார் 54,000 டன் மூங்கில் வழங்கப் பட்டது. காகிதம் தயாரிப்பதற்கு நீலகிரி தைல மரங்கள் போன்ற கடின மரங்களைப் பயன்படுத்துவதிலும் இந்த ஆலை முனைந்திருப்ப தால் 8,250 டன் கற்பூர இனக்கலப்பு மரம் இந்த ஆலைக்கு வழங்கப் பட ஆணையிடப்பட்டது. பாபநாசம் மலைகளிலிருந்து கோரைப் புல் எடுத்துச் செல்லப்படுவதற்காக திருநெல்வேலி மாவட்டத்தி லுள்ள சன் காகித ஆலை காடுகள் துறையுடன் ஒப்பந்தம் ஒன்று செய்து கொண்டது.

ரயான் தயாரிப்புக்கான கூழ் தயாரிப்பதற்காக, கோயம்புத்தூர் மாவட்டம், சிறுமுகையில் உள்ள தென்னிந்திய விஸ்கோஸ் நிறுவனத் தினர் கற்பூர மரங்களையும், மிலாறு மரங்களையும் பயன்படுத்தி வருகின்றனர். 1970–71-ல் கற்பூர மரங்கள் பயிரிடுவதற்காக 800 ஏக்கரும் மிலாறு மரங்கள் பயிரிடுவதற்காக 2,339 ஏக்கரும் நீலகிரி, கோடைக்கானல் மலைகளிலிருந்து தொழிற்சாலைக்கு ஒதுக்கப்பட்டன.

தோல் தொழிற்சாலைக்கு தேவைப்படும் மிலாறு தைலம் தயாரிப்பதற்காக மேட்டுப்பாளையத்திலுள்ள டான் இந்தியா நிறுவனத்துக்கு மிலாறு பட்டைகளை வழங்குவதையும் காடுகள்

துறை மேற்கொண்டுள்ளது. 1970–71-ல், 6,750 டன் மிலாறு பட்டை தொழிற்சாலைக்கு வழங்கப்பட்டது.

இவற்றிற்குக் கூடுதலாக, ராஜபாளையத்திலுள்ள "மதராஸ் சிப் போர்ட்ஸ்" கம்பெனிக்கு பெட்டிக்குரிய அட்டைத்தாள்கள் தயாரிப்பதற்காக மென்மரங்கள் வழங்கும் பணியையும் அட்டைகள் தயாரிப்பதற்காக பவானிசாகரிலுள்ள "தமிழ் நாடு கார்டு போர்ட்ஸ்" என்னும் கம்பெனிக்கு வடக்கு கோயம்புத்தூர் மலை களிலிருந்து கோரைப்புல் வழங்க காடுகள் துறை ஒப்புக் கொண்டுள்ளது.

காடு வளர்ப்புக் கலைப் பயிற்சி.

இத் துறையில் வனப்பணியாளர்கள் (Foresters) வனக் காப்பாளர்கள் Fore t Guard ஆகியோருக்கு வைகை அணையில் உள்ள காடு வளர்ப்புக் கலைப் பயிற்சிப் பள்ளியில் பணிக்காலப் பயிற்சி அளிக்கப்படுகிறது. 1971–72-ல் 60 வனப் பேணுநர்களுக்கும் (Rangers) 54 வனக்காப்பாளர்களுக்கும் இப்பள்ளியில் பயிற்சி அளிக்கப்படும்.

காடுபேணுநர் (Rangers) அதிகாரிகள் ஆகியோருக்கு முறையே கோயம்புத்தூரிலும் டேராடூனிலும் வன இயல் கல்விக்கான வசதி களுக்கு இந்திய அரசு வகை செய்துள்ளது.

வன ஆராய்ச்சி.

காடு வளர்ப்பில் எதிர்கால முன்னேற்றத்திற்கு செவ்வனே செயல் படும் சிறந்ததொரு ஆய்வுப் பிரிவு அமைக்கப்படுவது அடிப்படை யானதாகும் என்று உணரப்படுகிறது. காடுகளில் வளரும் ஒரு சில முக்கியமான இன மரங்களை மேம்பாடு செய்யும் நோக்குடன் வனத் துறை அண்மையில் வன மரபியல் பிரிவு ஒன்றை கோயம்புத்தூரில் தொடங்கியுள்ளது. நடப்பாண்டில் மண்வள ஆய்வுப் பிரிவு ஒன்று அமைக்க ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இப்பிரிவு மண்வளம் பற்றி பகுப்பாய்வு, எருச்சோதனை, மற்றும், பல்வேறு ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும். காட்டுப் பயிர்களைப் பற்றும் நோய்கள் முதலிய வற்றைப் போக்கும் நோக்கத்துடன் வனப் பயிர் நோய்களை ஆய்வு செய்யும் பிரிவு ஒன்றும் அமைக்கப்படும். காடு வளர்ப்பு தொடர் பாகவும், மிக முக்கியமான இனங்களின் பிற கூறுகள் தொடர்பாக

1972 மார்ச் 27]

வும் பல ஆராய்ச்சிப் பணிகளைக் காடு வளர்ப்புக் கலை ஆய்வுக் கோட்டம் மேற்கொண்டுள்ளது. காட்டில் கிடைக்கும் பொருட்களைச் சிறப்பாக மரங்களை அடிப்படை பொருளாகக் கொண்டு அமைந்துள்ள தொழிற்சாலைகளில் வளர்ந்து வரும் தேவைகளைப் (மரம் மற்றும் பிற காடுபடு பொருட்களின் தேவை) பூர்த்தி செய்வதற்காக நம் மாநிலத்தில் வெளி நாட்டு இனங்களைப் பெருமளவில் பயிரிடுவது பற்றிய ஆராய்ச்சி பல்வேறு நிலையங்களில் நடத்தப்பட்டு வருகிறது.

வன விலங்குகள்.

இம் மாநிலத்தில் தற்போது வன விலங்கு உய்விடங்கள் நான்கும் நீர்ப் பறவை உய்விடம் ஒன்றும் உள்ளன. அவையாவன—முதுமலை, கோடிக் கரை, கிண்டிமான் பூங்கா, முண்டந்துறை புலி உய்விடம், வேடந்தாங்கல் நீர்ப் பறவைகள் உய்விடம் ஆகியவை. இந்திய அரசால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழு, வேகமாக அழிக்கப்பட்டு வரும் வனவிலங்குகளுக்கு நம் நாட்டில் சிறந்த பாதுகாப்பு அளிக்கும் நோக்கத்துடனும், அவை வாழ்வதற்கேற்ற சுற்றுப்புறச் சூழ்நிலைகளை ஏற்படுத்தும் நோக்கத்துடனும் இன்னும் பல உய்விடங்களை ஏற்படுத்த பரிவுரை செய்துள்ளது. பல்வகை விலங்குகளைக் கொண்ட உய்விடம் ஒன்றை கோயம்புத்தூர் மாவட்டம் ஆனைமலையில் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. உய்விடங்கள் முறையாக மேம்பாடு செய்யப்பட்டால், இம் மாநிலத்தில் சீருலாப் பயணிகளின் எண்ணிக்கையை உயர்த்துவதில் பெரும்பங்கு வகிக்கும். எனவே, தேவையான அளவு ஓய்வு விடுதிகள், சாலைகள் அமைத்தல், போக்குவரத்து வசதிகள் முதலிய வசதிகளை, இந்த உய்விடங்களுக்கு வரும் சீருலாப் பயணிகளுக்குச் செய்து தருவது அவசியமாகும். மேற்கூறிய வனவிலங்கு உய்விடங்கள், பறவைகள் உய்விடம் ஆகியவற்றைத் தவிர, சென்னை கிண்டியிலுள்ள ஒதுக்கக் காட்டில், ஒரு ஏக்கர் பரப்புள்ள நிலத்தில் பாம்புப் பண்ணை ஒன்றை அமைக்க தனியார் ஒருவருக்கு இந்த அரசு ஊக்கமளித்துள்ளது. பல்வேறு வகை ஊர்ந்து செல்லும் விலங்குகள் பற்றி மக்கள் தெரிந்து கொள்ள இப் பாம்பு பண்ணை வாய்ப்பளிக்கிறது.

காடுபடு சிறு பொருள்கள் பற்றிய கருத்தரங்கு.

காடுகள் துறை 1971 நவம்பர் திங்களில் உதகமண்டலத்தில் காடுபடு சிறு பொருள்கள் குறித்த கருத்தரங்கு ஒன்றை நடத்தியது. காடுகள் துறை அமைச்சர் இக்கருத்தரங்குக்குத் தலைமை வகித்தார்.

இந்தியா முழுவதிலுமிருந்து, பல்வேறு வனத் துறைகள், ஆராய்ச்சி நிறுவனங்கள், வாணிகத் தொழில் துறை ஆகியவற்றின் பிரதிநிதிகள் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் கருத்தரங்குக்கு வந்தனர். இக் கருத்தரங்கு, நமது காடுகளிலிருந்து கிட்டும் காடுபடு சிறு பொருள்களை முறையாகப் பயன்படுத்துவது பற்றியும், மேம்பாடு செய்வது பற்றியும் மிகப் பயனுள்ள பரிவுரைகளைச் செய்துள்ளது.

ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் பல வளர்ச்சிப் பணிகள் இத் துறையினுல் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1971–72-ல் மேற்கொண்ட திட்டம் பற்றிய விவரங்களும் 1972–73 ஆம் ஆண்டுக்கான செயற் குறிப்புகளும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

காடுகள்–மாநிலப் பணித் திட்டங்கள்.

1. பண்ணைக் காடுகளும், விறகு மரங்களும்.

(அ) பண்ணைக்காடு—கிராமக் காடுகள்.—கிராமங்களிலும், கிராமங்களைச் சுற்றிலும் அடைவாக அமைந்த தகுந்த நிலப்பரப்பு களில் அரசு தரிசு நிலங்களிலும், புறம்போக்குகளிலும் கிராமத் தோட்டங்களை வளர்ப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். கிராம வாசிகளுக்கும் அன்றாடம் தேவைப்படும் விறகு, வெட்டுமரம், தழை, உரம், தீவனம் ஆகிய தேவைகளை இக்கிராமக் காடுகள் நிறைவு செய்யும்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இத்திட்டத்தின் கீழ் ரூ. 40 லட்சம் செலவில் 16,000 ஹெக்டேர் பரப்பளவில் இக் காடுகள் வளர்க்கப்படும். 1971–72-ல் 1,872 ஹெக்டேர் பரப்பளவில் கிராமக் காடுகள் வளர்க்கப்பட்டன. இதற்கான செலவு ரூ. 5 லட்சமாகும்.

1972–73-ல் ரூ. 6.48 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் 2,230 ஹெக்டேர் பரப்பளவில் பண்ணைக் காடுகள் வளர்க்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

(ஆ) விறகு மரத் தோட்டங்கள்.—நகர மக்களுக்குத் தேவைப் படும் விறகு கிடைப்பதற்காக, மக்கள் பெருக்கம் மிகுந்த பகுதிகளை அடுத்துள்ள காட்டுப் பகுதிகளில் விறகு மரங்களை வளர்ப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

1972 மார்ச் 27]

நான்காம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 30 லட்சம் செலவில் 6,000 ஹெக்டேர் பரப்பளவில் விறகு மரங்கள் வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 1971–72-ல் மொத்தம் 300 ஹெக்டேர் பரப்பளவில் இவ்வகை மரங்கள் வளர்க்கப்படுமென்று எதிர் பார்க்கப்படுகிறது. இதற்கான செலவு ரூ. 2.72 லட்சமாகும். 1972–73-ல் 630 ஹெக்டேர் பரப்பளவில் விறகு மரங்கள் வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக ரூ. 3.60 லட்சம் செலவிடப் படும்.

2. தொழில், வாணிகப் பயன் உள்ள பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த மரங்கள்.

(1) தேக்கு.—இம் மாநிலத்தில் வெட்டு மரங்களுக்கான வாயில் களைப் பெருக்கவேண்டி தகுந்த இடங்களில் தேக்கு மரங்களையும், ஏனைய கடின வகை மரங்களையும் வளர்ப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

நான்காம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், சுமார் 3,000 ஹெக்டேர் பரப்பளவில் தேக்கு மரங்களையும் ஏனைய கடின மரங்களையும், மர வகைகளையும் வளர்ப்பதற்காக ரூ. 15 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1971–72-ல் ரூ. 1.96 லட்சம் செலவில் 495 ஹெக்டேர் பரப்பளவில் தேக்கு, செம்மரங்கள் வளர்க்கப்படும்.

1972–73-ல் 630 ஹெக்டேர் பரப்பளவில் தேக்கு மரங்களை வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக ரூ. 2.97 லட்சம் ஒதுக்கக் கருதப்பட்டுள்ளது.

(2) மென்மரம்.—மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களில் தகுந்த இடங்களில் மென்மரங்கள் வளர்ப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இம் மாநிலத்தில் தீப்பெட்டி தயாரிப்பு தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் மூலப் பொருள்களை அதிக அளவில் இம்மரங்கள் வழங்கும்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் கால அளவில், ரூ. 5.00 லட்சம் செலவில் மென்மரங்களை 1,500 ஹெக்டேர் பரப்பளவில் வளர்க்கக் கருதப்பட்டுள்ளது. 1971–72-ல் 245 ஹெக்டேரில் மென்மரங்கள் வளர்க்கப்படும். இதற்கான செலவு ரூ. 0.69 லட்சமாகும். 1972–73-ல் 220 ஹெக்டேர் பரப்பளவில் மென்மரங்களை வளர்க்கக் கருதப் பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ரூ. 0.89 லட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது.

128-12—41

[1972 மார்ச் 27

(3) சவுக்கு மரம்.—மாநிலத்தின் விறகுத் தேவையை ஈடு செய்வதற்காக தஞ்சாவூர், இராமநாதபுரம், தென் ஆற்காடு மாவட்டங்களில் கடலோரப் பகுதிகளிலும் படுகை நிலங்களிலும், திருச்சி மாவட்டத்திலும் சவுக்கு மரத்தை அதிக அளவில் வளர்ப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

ரூ. 10.00 லட்சம் செலவில் 2,000 ஹெக்டேர் பரப்பளவில் சவுக்கு மரங்களை வளர்ப்பதற்கு நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் வகை செய்கிறது. 1971–72-ல் 341 ஹெக்டேர் பரப்பளவில் சவுக்கு மரங்கள் வளர்க்கப்படும். இதற்கான செலவு ரூ. 2.44 லட்சமாகும். 1972–73-ல் 380 ஹெக்டேரில் சவுக்கு மரங்களை வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு ரூ. 2.81 லட்சம் வகை செய்யப்பட்டுள்ளது.

(4) மிலாறு.—மரங்களை அடிப்படையாகக் கொண்ட தொழில்களான கூழ் தயாரிக்கும் தொழில்களுக்கும், தோல் பதனிடும் தொழில்களுக்கும் மிலாறு மரமும், மிலாறு மரப்பட்டையும் மிக முக்கியமான மூலப்பொருள்களாக இருப்பதால் நீலகிரியிலும், மேல் பழனியிலும் மிலாறு மரங்களை வளர்க்க இத்திட்டம் வகை செய்கிறது.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டக்கால அளவில் 4,000 ஹெக்டேரில் மிலாறு மரங்களை வளர்ப்பதற்கான இத்திட்டத்திற்கு ரூ. 20.00 லட்சம் வகை செய்யப்பட்டுள்ளது. 1971–72-ல் 800 ஹெக்டேரில் மிலாறு மரங்கள் ரூ. 4.68 லட்சம் செலவில் வளர்க்கப்படும்.

1972–73-ல் ரூ. 4.40 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் 800 ஹெக்டேர் பரப்பளவில் மிலாறு மரங்களை வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

(5) விரைவில் வளரும் மரவகைகள்.—விரைவில் வளரும் மர வகைகளிலிருந்து கிடைக்கும் பொருள்கள்; மரத்தை அடிப்படையாகக் கொண்ட தொழில்களான காகிதம், ரயான், பெட்டிக்குரிய அட்டைத்தாள்கள் ஆகியவற்றின் மூலப்பொருள்களை நிறைவு செய்வதால், விரைவில் வளரும் கற்பூரத் தைல மரம், மூங்கில் மர வகைகளை வளர்ப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

TRUTH ALONE TRIUMPHS

1972 மார்ச் 27]

நான்காவது ஐந்தாண்டுத் திட்டக்கால அளவில் ரூ. 75 லட்சம் செலவில் 12,000 ஹெக்டேர் பரப்பளவில் விரைவில் வளரும் மர வகைகளை வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 1971–72-ல் ரூ. 13.45 லட்சம் செலவில் 2,352 ஹெக்டேரில் வளர்க்கப்படும். 1972–73-ல் 2,250 ஹெக்டேர் பரப்பளவில் இவ்வகை மரங்களை வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக ரூ. 13.26 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

(6) சந்தனம்.—காடுகளிலிருந்து கிடைக்கும் மொத்த வருவாயில் மூன்றில் ஒரு பங்கு சந்தன மர விற்பனையில் கிடைக்கிறது. சந்தன மர வளர்ப்பைப் பெருக்கும் நோக்குடன் கோயம்புத்தூர், சேலம், வட ஆற்காடு மாவட்டங்களில் சந்தன மரத்தை செயற்கை முறையில் வளர்க்கும் பணி மேற்கொள்ளப்படுகிறது.

நான்காவது திட்டக் கால அளவில் 1,000 ஹெக்டேர் பரப்பளவில் ரூ. 10.00 லட்சம் செலவில் சந்தன மரங்களை வளர்க்கத் திட்டமிடப் பட்டுள்ளது. 1971–72-ல் ரூ. 1.02 லட்சம் செலவில் 137 ஹெக்டேர் களில் சந்தன மரங்கள் வளர்க்கப்பட்டன.

1972–73-ல் 120 ஹெக்டேர் பரப்பளவில் சந்தன மரங்களை வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கென ரூ. 3.01 லட்சம் வகை செய்யப்பட்டுள்ளது. திருப்பத்தூரிலுள்ள விற்பனை நிலையத்தின் மேம்பாட்டுப் பணிகளும் இத் திட்டத்தின்கீழ் மேற் கொள்ளப்படும்.

(7) ஆற்றங்கரை, கால்வாய்க் கரை ஓர, ஏரிக்கரையோரக் காடுகள்.—வெட்டு மரங்களைக் கூடுதலாகப் பெறுவதற்கும், மண் அரிப்பைத் தடுப்பதற்கும், தேக்கு மரங்களையும், பொருளாதார மதிப்புள்ள பிற மர வகைகளையும் ஆற்றங்கரைகளிலும், கால்வாய்க் கரைகளிலும், ஏரிக் கரைகளிலும் வளர்ப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் கால அளவில் ரூ. 20 லட்சம் மதிப்பீட்டுச் செலவில், 4,000 ஹெக்டேரில் இந்த மரங்களை வளர்க்கக் கருதப்பட்டுள்ளது. 1971–72-ல் ரூ. 2.51 லட்சம் செலவில் 502 ஹெக்டேர் பரப்பளவில் இந்த மரங்கள் வளர்க்கப் படும்.

1972–73-ல் ரூ. 3.06 லட்சம் செலவில் 650 ஹெக்டேரில் இந்த மரங்களை வளர்க்கக் கருதப்பட்டுள்ளது.

[1972 மார்ச் 27

(8) இரப்பர்.—இரப்பரைப் பயன்படுத்தும் மோட்டார் தொழில் போன்றவற்றின் வளர்ச்சியை எதிர்பார்ப்பதால், ரப்பரின் தேவையும் விரைவாகப் பெருகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ் நாட்டில் கன்னியாகுமரி மாவட்டம் ரப்பர் பயிரிடுவதற்கு ஏற்றதாக உள்ளது. நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 800 ஹெக்டேரில் ரூ. 100 லட்சம் செலவில் ரப்பர் பயிரிடப்படும்.

1971–72-ல் 200 ஹெக்டேரில் ரூ. 13.16 லட்சம் செலவில் இரப்பர் பயிரிடப்படும்.

1972–73-ல் 250 ஹெக்டேருக்கு மேல் ரப்பர் மரங்கள் வளர்க்கக் கருதப்பட்டுள்ளது. இதற்காக ரூ. 14.90 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3. காடுகளை ஒருங்கு திரட்டுதல்

ஏறத்தாழ 3,800 சதுர கிலோ மீட்டர் பரப்புள்ள முன்னாள் ஜமீன் காடுகளை, காடுகள் துறை தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டது. சிறந்த பாதுகாப்பிற்காக இக் காடுகள் நில அளவை செய்யப்பட்டு, முறையாக எல்லை வகுக்கப்பட்டு, தமிழ் நாடு காடுகள் சட்டத்தின்கீழ் இவை ஒதுக்கக் காடுகளாக அமைக்கப்படவிருக்கின்றன.

இத் திட்டத்திற்காக, நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 5.00 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு ஊராட்சி சட்டத் திருத்தம் சட்ட மன்றத்தின் ஏற்பளிப்பை எதிர்பார்த்த நிலையிலிருந்ததால், நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் கடந்த ஆண்டுகளில் இத் திட்டம் செயற்படுத்தப்படவில்லை. தற்போது, அத்திருத்தம் ஏற்பளிப்பு பெற்றுவிட்டது. 1972–73-ல் நில அளவையும், எல்லை வகுப்பதும் மேற்கொள்ளப்படும்.

4. வன விலங்கு உய்விடங்களின் மேம்பாடு

நமது மாநிலத்திலுள்ள காடுகளில் பலவகையான விலங்குகள் உள்ளன. எனினும், விலங்குகளைக் கண்மூடித்தனமாகவும், சட்டத்திற்குப் புறம்பாகவும், சுடுதல், பொறிவைத்துப் பிடித்தல், நஞ்சிட்டுக் கொல்லுதல் காரணமாகவும், வேளாண்மை, புனல்-மின்சாரத் திட்டங்கள், பாசனத் திட்டங்கள், தொழிற்சாலைகள் ஆகியவற்றுக்காக வனப் பகுதிகளை அழித்து வருவதன் காரண

1972 மார்ச் 27]

மாகவும், விலங்குகளின் எண்ணிக்கை வெகுவேகமாகக் குறைந்து வருகிறது. வனவிலங்குகளைப் பாதுகாப்பதிலும், வளர்ப்பதிலும், வனவிலங்கு உய்விடங்கள் முக்கியமான பங்கை வகிக்கின்றன. இவைகள் சீருலாப் பயணிகளைக் கவர்வதாகவும் உள்ளன. மாநிலத்தின் சீருலாப் பணியை மேம்படுத்துவதற்கான நமது திட்டத்தில் வனவிலங்கு உய்விடங்களுக்கு உரிய சிறப்பிடம் அளிக்கப் பட வேண்டும்.

வனவிலங்கு உய்விடங்களின் மேம்பாட்டிற்காக நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 25 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஓய்வு விடுதிகள் கட்டுதல், உய்விடங்களின் உட்புறத்தில் சாலைகள் அமைத்தல் போன்ற பல்வேறு மேம்பாட்டுப் பணிகளுக்காக 1971–72-ல் ரூ. 3.22 லட்சம் செலவிடப்பட்டது. 1972–73-ல் கோயம்புத்தூர் மாவட்டத்தில் பலவகை வனவிலங்குகள் வாழும் ஆனைமலைக் குன்றுகளில் வனவிலங்கு உய்விடம் ஒன்று புதிதாக ஏற்படுத்தப்படும். இதோடு, சீருலாப் பயணிகளுக்குத் தேவை யான வசதிகளைச் செய்துதரவும், வன விலங்குகளுக்கு உரிய பாது காப்பும், ஏதுவான சூழ்நிலையும் ஏற்படுத்தித் கொடுக்கும் பொருட்டு ஏனைய உய்விடங்களுக்கும் மேம்பாடுகள் செய்யப்படும்.

5. மரம் வெட்டும் பணிகள்

இது ஒரு பலநோக்குத் திட்டம். இதன் குறிக்கோள்கள் பின் வருமாறு:—

(1) கட்டைகளை வெட்டுதல், மரங்களை வெட்டி அகற்றுதல் முறைகளில் மேம்பாடு செய்தல்;

(2) வெட்டப்பட்ட மரங்களை எடுத்துச் செல்வதற்கான வசதிகளை மேம்படுத்துதல்;

(3) மேம்பாடடைந்த பயிற்சி முறையில் வனத் தொழிலாளர் களுக்குத் தொடர்பணிப் பயிற்சியளிக்க வகை செய்தல்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின்போது, மரம் வெட்டும் கருவிகளைப் பெறவும் வெட்டப்பட்ட மரங்களை எடுத்துச் செல்வதற்கு அதிக வசதிகளைப் பெறவும், மரம் வெட்டும் தொழில் நுட்பத்தில் வனத் தொழிலாளர்களுக்குத் தொடர்நிலைப் பயிற்சி யளிக்கவும் ரூ. 10 லட்சம் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின்கீழ் 1971–72-ல் ரூ. 1.43 லட்சம் செலவிடப்பட்டது.

LEGISLATURE ... வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1972 மார்ச் 27

மரம் வெட்டும் சாதனங்கள், போக்குவரத்து வண்டிகள் வாங்குதல், குடியிருப்புகள் கட்டுதல் ஆகியவற்றுக்காக 1972–73-ம் ஆண்டில் ரூ. 1.66 லட்சம் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

6. வன ஆராய்ச்சி

நான்காம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் வன ஆராய்ச்சிக்காக ரூ. 10 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1970–71 ஆம் ஆண்டில் மரங்கள் மரபியல் (Genetic Section) ஆராய்ச்சிப் பிரிவும், விதைகள் சேமிப்பு, தரம் பிரித்தல்—வழங்கல் நிலையமும் அமைக்கப் பட்டன. 1971–72-ல் மண்வள அறிவியல் பிரிவு ஒன்றை அமைக்க ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இதற்காகும் செலவு ரூ. 1.15 லட்சமென எதிர்பார்க்கப்படுகிறது.

வனப் பயிர்களில் காணப்படும் பூச்சிகள், நோய் ஆகியவற்றைக் கவனிக்க வன நோய்க் குறியியல் (Forest Pathalogy)பிரிவு ஒன்று தொடங்கப்படும். வன ஆராய்ச்சித் திட்டத்திற்காக 1972–73-ல் ரூ. 2.35 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

7. போக்குவரத்து வசதிகள் (சாலைகள்).

வெட்டப்பட்ட மரங்களையும், ஏனைய காடுபடு பொருட்களையும் விரைந்து எடுத்துச் செல்ல வசதியளிக்கும் பொருட்டு, காட்டுப் பகுதிகளில் ஏற்கனவேயுள்ள சாலைகளை மேம்படுத்துவதும், புதிய சாலைகள் அமைப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

நான்காம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 30 லட்சம் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. 1971–72-ல் இத்திட்டத்தின்கீழ் ரூ. 4.50 லட்சம் செலவிடப்பட்டுள்ளது.

1972–73-ல் ரூ. 5 லட்சம் செலவில் சுமார் 23 கிலோ மீட்டர் தொலைவிற்குச் சாலைப் பணிகளை மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது.

8. கட்டிடங்கள்.

காடுகளின் உட்பகுதிகளில் வனப் பணியில் ஈடுபட்டுள்ள பணியாளர்களுக்குக் குடியிருப்புக்கள் கட்ட இத்திட்டம் வகை செய்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

1972 மார்ச் 27]

நான்காம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இத்திட்டத்திற்காக ரூ. 25 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1971–72-ல் இத்திட்டம் ரூ. 3.90 லட்சம் செலவில் செயல்படுத்தப்படும்.

1972–73-ல் ரூ. 5 லட்சம் செலவில் கட்டிடப் பணிகளை மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது.

9. வனத் துறைப் பணியாளர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் வசதிகள்.

வனத்துறைத் தொழிலாளர்களுக்கும், பணியாளர்களுக்கும் கம்பளிகள் வழங்குதல், தொழிலாளர் குடியிருப்புகள் கட்டுதல், மருத்துவ உதவி போன்ற வசதிகளைச் செய்து தருவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

நான்காம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இத்திட்டத்திற்காக ரூ. 10 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1971–72-ம் ஆண்டில் இத்திட்டம் ரூ. 1.17 லட்சம் செலவில் செயல்படுத்தப்படும்.

1972–73-ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ. 0.87 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. கம்பளிப் பின்னல், சட்டைகள் வாங்குதல், குடியிருப்புகள் கட்டுதல் ஏனைய வசதிகள் இத்திட்டத்தின்கீழ் அடங்கும்..

10. காடுகள் பற்றிய பிரசாரம்.

நாட்டின் நலனைக் காக்கும் பணியில் காடுகளும், வன விலங்குகளும் ஆற்றும் பங்கு குறித்தும், அவற்றைக் காப்பதன் அவசியம் குறித்தும் மக்களுக்கு அறிவுறுத்தும் நோக்குடன், காடுகள் துறையில் பிரசாரப் பிரிவு ஒன்றினை அமைப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

நான்காம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பிரசாரத்திற்காக ரூ. 2.50 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1971–72-ல் விளம்பர அட்டைகள், ஓவியங்கள், திரைப்படக் கொட்டகைகளில் காட்டப்படும் விளம்பர வில்லைகள் தயாரித்தல், சுவரொட்டிகள் அச்சிடுதல் மூலம் பிரசாரம் செய்யப்பட்டது. இதற்கான செலவு ரூ. 0.09 லட்சமாகும். 1972–73-ல் பிரசாரப் பணிகளுக்காக ரூ. 0.50 லட்சம் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

[1972 மார்ச் 27

11. வனப் பாதுகாப்பு.

தீ விபத்துகளிலிருந்தும், ஏனைய இடையூறுகளிலிருந்தும் வனங்களை காப்பதற்கான வழிவகைகளை வகுப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் இத் திட்டத்திற்காக ரூ. 10 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

1971–72-ல் ரூ. 0.77 லட்சம் செலவில் இத்திட்டம் செயல் படுத்தப்படும். 1972–73-ம் ஆண்டில் கோயம்புத்தூரில் உள்ள வலம் வரும் மாவட்ட ரோந்துக் காவற் படையை வலுப்படுத்தவும், ரூ. 0.77 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் வனப்பாதுகாப்புப் பணிகளைத் திறம்பட நிறைவேற்றவும் திட்டமிடப்பட்டுள்ளது.

12. செயல் திட்டங்கள்.

ஒவ்வொரு வனக் கோட்டத்திலும், செயல்திட்டம், நிர்வாகத் தின் அடிப்படையாக அமைகிறது. செயல் திட்டங்களைத் தயாரிக்கும் பொறுப்புள்ள சிறப்பு நிறுவனம் ஒன்று உள்ளது. இந்த நிறு வனத்தை வலுப்படுத்துவதற்கும், செயல் திட்டங்கள் தயாரிப்பதில் விரைவாகவும், திறமையுடனும் செயல்படுத்துவதற்குத் தேவையான சாதனங்களை வாங்குவதற்கும் இத்திட்டம் வகை செய்கிறது. இதற்காக, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 5 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

1971–72-ல் ரூ. 0.39 லட்சம் செலவில் இத் திட்டம் செயல்படுத்தப் படும்.

1972–73-ல் ரூ. 1.58 லட்சம் செலவில், இத்திட்டத்தைச் செயல் படுத்துவது என்று கருதப்பட்டுள்ளது. செயல்திட்டங்களை உரிய நேரத்தில் தயாரிப்பதற்காக திருச்சியைத் தலைமையிடமாகக் கொண்டு, கூடுதலாக செயல் திட்டக் கோட்டம் ஒன்றை அமைக்கக் கருதப்பட்டிருக்கிறது.

13. காடுபடு சிறு பொருள்கள்.

புளி, கோக்கோ, இலவங்கம், குங்கில்யம் (Barsera) கற்பூரத் தைலமரம், எலுமிச்சை வகைச் செடிகள்(Citriodora) கடுக்காய் முதலிய காடுபடு சிறுபொருள்கள் நல்கும் மரங்களைச் செறிவாக வளர்ப்பதால் விலை மதிப்புள்ள காடுபடு சிறு பொருள் களிலிருந்து வருவாய் அதிகரிக்கச் சாத்தியக் கூறுகள் உள்ளதால் இத்தகைய மரங்களை வளர்ப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

1972 மார்ச் 27]

நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 10.00 லட்சம் செலவில், 1,500 ஹெக்டேர்களில் காடுபடு சிறுபொருள்கள் பயிரிடப் படும். 1971–72-ல் ரூ. 1.38 லட்சம் செலவில், 242 ஹெக்டேர்களில் காடுபடு சிறுபொருள்கள் நல்கும் மரங்கள் வளர்க்கப்படும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

1972–73-ல், 350 ஹெக்டேர்களில், ரூ. 3.53 லட்சம் செலவில் காடுபடு சிறு பொருள்கள் நல்கும் மரங்கள் வளர்ப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

14. திட்டம்—புள்ளி விவரப் பிரிவு.

வனங்கள் குறித்த புள்ளி விவரங்களைத் திரட்டவும், விளைப் பொருள்கள் முதலியன குறித்த புள்ளி விவரங்களைத் தொகுக்கவும், அங்காடிகள் குறித்த ஆய்வுகளை மேற்கொள்ளவும், தற்போதைய வருங்காலத் தேவைகளை மதிப்பிடவும், பிரிவு ஒன்றை அமைப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில், இதன் பொருட்டு ரூ. 2.50 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

வனத்துறைத் தலைவர் அலுவலகத்தில் புள்ளி விவரதிட்டப் பிரிவு ஒன்றை அமைப்பதற்கு, 1971–72-ஆம் ஆண்டில், அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இதற்காக ரூ. 0.17 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

1972–73-ல் ரூ. 0.51 லட்சம் செலவில், இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

15. காடுகள் நிர்வாகத்தைத் திறம்படச் செய்தல்.

காடுகள் குறித்த பணிகள் விரைந்து பெருகி வருவதால், திறம் பட மேற்பார்வையிட இயலாத அளவிற்குப் பரந்து விரிவடைந் துள்ள வன வட்டாரங்கள், கோட்டங்கள், சரகங்கள் ஆகியவற்றின் அதிகார எல்லையை மாற்றியமைப்பதே இத்திட்டத்தின் நோக்க மாகும். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில், இதற்காக ரூ. 2·50 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், 1971–72-ல் நீலகிரிக் கோட்டம் இரண் டாகப் பிரிக்கப்பட்டது. இதற்காக, 1971–72-ல் ஆகும் செலவு ரூ. 0.58 லட்சமாக இருக்கும்.

1972–73-ல், இத்திட்டத்தை ரூ. 0.51 லட்சம் செலவில் செயல் படுத்துவது என்று கருதப்பட்டுள்ளது.

128-12—42

[1972 மார்ச் 27

வனத் திட்டங்கள்—மத்திய அரசு ஆதரவு பெறுபவை வன வளம் குறித்த ஆய்வு.

வன வளங்களை நன்முறையிலும், அறிவார்ந்த வகையிலும் பயன்படுத்தத் திட்டமிடுவதற்காக வன வளங்களின் விரிவான ஆய்வினை மேற்கொள்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், இத்திட்டத்திற்காக, ரூ. 10.00 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. நாகர்கோயில், மதுரை ஆகிய ஊர்களைத் தலைமையிடங்களாகக் கொண்டு, 1971–72-ல், வன வளங்களை ஆய்வு செய்யும் கோட்டங்கள் இரண்டு செயல்பட்டு வருகின்றன. மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில், 332 சதுரமைல் அளவுள்ள பகுதியில் ஆய்வு செய்யப்படும். இதற்காகும் செலவு ரூ. 1.63 லட்சமாக இருக்கும்.

1972–73-ல் ரூ. 1.78 லட்சம் செலவில், இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும். 896 சதுரமைல் அளவுள்ள பகுதியில் ஆய்வு மேற்கொள்ளப்படும்.

முந்திரித் தோட்டங்களில், பயிர்ப்பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

இது மத்திய அரசு ஆதரவு பெறும் திட்டமாகும். பயிர்ப் பாதுகாப்பு, பயிர் நோய்த் தடுப்புப் பணிகளை மேற்கொள்வதன் மூலம் முந்திரி விளைச்சலைப் பெருக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். 1971–72-ல், ரூ. 0.85 லட்சம் செலவில் 1,360 ஹெக்டேர்களில், பயிர்பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

1972–73-ல் திருச்சிராப்பள்ளி, கடலூர் கோட்டங்களில், 3,724 ஹெக்டேர்களில் இப்பணியை மேற்கொள்வது என்று திட்டமிடப் பட்டிருக்கிறது. இதற்காக ரூ. 2.33 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மண்வளப் பாதுகாப்பு—மாநிலத் திட்டங்கள்.

ஆற்றுப் பள்ளத்தாக்கு நீர்கோள் பகுதிகளில் மண் வளத்தைப் பாதுகாப்பதில், இத்துறை சிறப்புக் கவனம் செலுத்தி வருகிறது.

1972 மார்ச் 27]

வைகை ஆற்று நீர்கோள் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பு.

நீர்த்தேக்கங்கள், ஏரிகள், குளங்கள் ஆகியவற்றில் ஏற்படும் மண் அரிப்பையும், வண்டல் படிவதையும், நில அரிப்பையும், தூர் படிதலையும் தடுக்கும் பொருட்டு, வைகை ஆற்றின் நீர்கோள் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இதற்காக நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், ரூ. 30 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1971–72-ல் ரூ. 2.99 லட்சம் செலவில், மண்வளப் பாதுகாப்புப் பணி நடைப் பெற்று வருகிறது.

1972–73-ல், 300 ஹெக்டேர்களில், மண்வளப் பாதுகாப்புப் பணியை மேற்கொள்வது என்று திட்டமிடப்பட்டிருக்கிறது. இதற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ. 4.48 லட்சமாகும்.

மேட்டூர் ஸ்டான்லி நீர்த்தேக்கத்தில் மண்வளப் பாதுகாப்பு.

மண் அரிப்பையும், நீர்த்தேக்கத்தில் வண்டல் படிவதையும் தடுப்பதற்காக, மேட்டூர் ஸ்டான்லி நீர்த்தேக்கத்தின் நீர்கோள் பகுதிகளில் பலவகை மண்வளப் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்வது, இத்திட்டத்தின் நோக்கமாகும். இதற்காக நான்காவது ஐந்தாண்டு திட்டத்தில் ரூ. 30.00 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

1971–72-ல், 500 ஹெக்டேர்களில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்காகும் மதிப்பீட்டுச் செலவு ரூ. 5.09 லட்சமாகும்.

1972–73-ல் ரூ. 5.18 லட்சம் செலவில், 600 ஹெக்டேர்களில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

சிக்கலான வனப் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்புப் பணி.

கடுமையான மண் அரிப்புக்கு உள்ளாகக் கூடிய வனப் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்புப் பணிகளை நிறைவேற்றுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், 25,000 ஹெக்டேர்களில், மண்வளப் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக ரூ. 50 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

1972–73-ல், ரூ. 2.00 லட்சம் செலவில், இத்திட்டத்தைச் செயல் படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

[1972 மார்ச் 27

மண்வளப் பாதுகாப்பு—மத்திய அரசின் ஆதரவு பெறும் திட்டங்கள்.

குந்தா ஆற்றுப் பள்ளத்தாக்கு நீர்கோள் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பு.

குந்தா ஆற்றுப் பள்ளத்தாக்குத் திட்ட நீர்க்கோள் பகுதிகளின் மண்வளப் பாதுகாப்பு, ஈரத்தன்மைப் பாதுகாப்பு, நீர்த் தேக்கங்களில் தூர்படிவதைத் தடுத்தல் ஆகிய பணிகளை மேற்கொள்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். 7,000 ஹெக்டேர் பரப்பளவுள்ள நிலப்பகுதிகளில் மண்வளப் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 60.00 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

1971–72-ல் ரூ. 5.92 லட்சம் செலவில் இத்திட்டம் நிறைவேற்றப் படும். 500 ஹெக்டேர் பரப்பளவில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

1972–73-ல் 100 ஹெக்டேர் பரப்பளவில் ரூ. 2.61 லட்சம் செலவில் மண்வளப் பாதுகாப்புப் பணியை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

கீழ் பவானித் திட்டத்தில் மண்வளப் பாதுகாப்பு.

கீழ் பவானித் திட்டப் பகுதிகளிலும் மண்வளப் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலவற்றை மேற்கொள்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்திற்காக நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 30.00 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

1971–72-ல் 840 ஹெக்டேர் பரப்பளவில் ரூ. 3.96 லட்சம் செலவில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1972–73-ல், 1,230 ஹெக்டேர் பரப்பில் தோட்டங்கள் வளர்த்தல், மேடுபள்ள அடுக்கு நிலச் சுவர்கள் அமைத்தல், நீர்கசிவுக் குட்டைகள், நீர் அரிக்கா வண்ணம் சரிவான படிகளை அமைத்தல், கரையமைத்தல், நீர்கால் அமைத்தல் போன்ற மண்வளப் பாதுகாப்புப் பணியை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக ரூ. 5.71 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

1972 மார்ச் 27]

வேளாண்மை உற்பத்தி காட்டுப் பகுதிகளில் முந்திரி வளர்ப்பு.

முந்திரி மரங்களை வளர்ப்பதற்குத் தகுந்த பகுதிகளில் முந்திரித் தோட்டங்களை வளர்த்தல், உரங்களைப் பயன்படுத்துதல், பூச்சி கொல்லி மருந்துக்களைத் தெளித்தல் போன்ற மும்முரப் பயிரிடும் முறைகளை மேற்கொள்வதன் மூலம் தற்போதுள்ள முந்திரித் தோட்டங்களின் உற்பத்தியைப் பெருக்குதலும் இத் திட்டத்தின் நோக்கமாகும்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 30.00 லட்சம் செலவில் 6,000 ஹெக்டேர் பரப்பளவில் முந்திரி வளர்க்கப்படும். 1971–72-ல் ரூ. 10.18 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் 1,930 ஹெக்டேர் பரப்பளவில் முந்திரி வளர்க்கப்படும். இத்துடன் 2,000 ஹெக்டேர் பரப்பளவில் உள்ள மரங்கள் பேணிப் பாதுகாக்கப்படும்.

1972–73-ல் 900 ஹெக்டேர் பரப்பளவில் முந்திரி வளர்க்கவும் 4,366 ஹெக்டேர் பரப்பளவில் உள்ள மரங்களைப் பேணிப் பாதுக் காக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ரூ. 16.40 லட்சம் மூலதனச் செலவாகும்.

அரக்கு உற்பத்திப் பெருக்கம்.

மதுரைத் தெற்குக் கோட்டத்தில் வண்ணாத்திப்பாறையில் உள்ள அரக்குப் பண்ணையில் அரக்கு உற்பத்தியைப் பெருக்குவதே இத் திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ் அரக்கு பற்றும் மரங்கள் வளர்க்கப்படுகின்றன. இத்திட்டத்திற்காக நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 6.00 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

1971–72-ல் 30 ஹெக்டேர் பரப்பளவில் அரக்குபற்றும மரங்கள் வளர்க்கப்பட்டன. வண்ணாத்திப்பாறையில் உள்ள அரக்குப் பண்ணை யில் அரக்குத் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அரக்குத் தயாரிக்கும் தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1971–72-ல் ரூ. 0.81 லட்சம் செலவிடப்படும்.

1972–73-ல் ரூ. 0.62 லட்சம் செலவில் 30 ஹெக்டேர்களில் அரக்குப் பற்று மரங்கள் வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

[1972 மார்ச் 27

கிராமப் பணிகள் சிறப்புத் திட்டம் :

இராமநாதபுரம், தருமபுரி மாவட்டங்களில் வறட்சித் தணிப்பு நடவடிக்கையாகத் தொடங்கப்பட்ட இத்திட்டம், மத்திய அரசு ஆதரவளிக்கும் திட்டமாகும். இத்திட்டத்திற்கு இந்திய அரசு முழு உதவித் தொகை அளிக்கிறது. இத்திட்டத்தின் கீழ், காடுகள் துறை, காடுகள் வளர்ப்பு, மண்வளப் பாதுகாப்புப் பணிகள், நீர் வாயில்களை மேம்படுத்துதல், சாலை அமைத்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ளுகிறது. 1971–72-ல் இத்திட்டத்திற்கு ரூ. 6.57 லட்சம் செலவாகும் என எதிர்ப்பார்க்கப்பட்டது. 1972–73-க்கு ஒதுக்கத் திட்டமிட்டுள்ள நிதி ஒதுக்கீடு ரூ. 11 லட்சமாகும்.

இலங்கை அகதிகளுக்குப் புது வாழ்வளிப்பதற்கான திட்டங்கள்

இலங்கை அகதிகளுக்குப் புது வாழ்வு அளிப்பதற்காக, இத்துறை (1) நீலகிரி மாவட்டத்தில், தேயிலைத் தோட்டம் பயிரிடுவதற்கான திட்டம், (2) கன்னியாகுமரியில் இரப்பர் தோட்டங்கள் பயிரிடும் திட்டம், ஆகிய இரண்டு திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. இத்திட்டங்களுக்கு இந்திய அரசு நீண்டகாலக் கடன் மூலம் நிதி உதவி செய்கிறது.

(1) நீலகிரி மாவட்டத்தில் தேயிலைத் தோட்டங்கள்.

இத்திட்டத்தின்கீழ், நீலகிரி மாவட்டத்தில் ரூ. 543 லட்சம் மதிப்பீட்டுச் செலவின்கீழ் 1,500 ஹெக்டேர் பரப்பளவில் தேயிலைத் தோட்டம் வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத் திட்டம் 1967–68-ல் தொடங்கப்பட்டு இதுவரை 153 ஹெக்டேர் நிலத்தில் பயிரிடப்பட்டுள்ளது. இதற்கு 1970–71-ல் 22.35 லட்சம் செலவாகியது. 1971–72-ல் 38.46 லட்சம் செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத் திட்டப் பகுதியில் இதுவரை 180 குடும்பத்தைச் சேர்ந்த 909 பேர்கள் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளார்கள்.

(2) கன்னியாகுமரி மாவட்டத்தில் இரப்பர் தோட்டங்கள்.

இத்திட்டத்தின்கீழ் கன்னியாகுமரி மாவட்டத்தில் ரூ. 124.63 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் 800 ஹெக்டேர் பரப்பளவில் இரப்பர் மரத் தோட்டங்களை வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் 1970–71-ல் தொடங்கப்பட்டது. இவ்வாண்டில் ரூ. 3.50

1972 மார்ச் 27]

லட்சம் செலவு ஏற்பட்டது. 1971–72-ல் ரூ. 11.38 லட்சம் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை மொத்தம் 272.60 ஹெக்டேரில் ரப்பர் பயிரிடப்பட்டுள்ளது. இத்திட்டப் பகுதியில் இதுவரை 30 குடும்பத்தைச் சேர்ந்த 62 பேர்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

காடுகள் அழிந்து வருவதால் உயிரின வாழ்க்கைச் சூழலின் சமநிலை பாதிக்கப்படுகிறது என்பதும் வறட்சிக்கு வழிகோலுகிறது என்பதும் அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மையாகும். மரங்கள் மழை பெய்யச் செய்கின்றன. ஈரத் தன்மையைக் காக்கின்றன. நில அரிப்பைத் தடுப்பதற்குப் பாதுகாப்பாக வளர்க்கப்பட்ட ஏராளமான மரங்கள் இல்லையென்றால், பெருகி வரும் மழை நீரோட்டம் வளமான மேல் மண்ணை மிகக் கடுமையான அளவில் அரித்து சென்றுவிடும். மேல் மண் அரித்துச் செல்லப்பட்ட பின் வளமற்ற பொட்டலே எஞ்சி நிற்கும், மரங்கள், காற்றுத் தூய்மை கெடும் சூழ்நிலையிலும் ஆற்றலுடன் எதிர்த்து நின்று காற்றுத் தூய்மையைப் பாதுகாக்கின்றது. மரங்களின் இலைகள் காற்றிலிருந்து 3 டன் கரியமிலவாயுவை எடுத்துக்கொண்டு 1 டன் பிராணவாயுவை வெளிவிடுகின்றன. அண்மைக் காலத்தில் நமது நாட்டை தொழில் மயமாக்குவதில் காடுகள் ஏற்றுவரும் முக்கியப் பங்கு ஆண்டுதோறும் உயர்ந்து வருகிறது. இவ்வாறு வனத்தொழில்கள் நமது நாட்டுப் பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளையும் பன்மடங்கு வளமாக்குகின்றன.

இவ்வாறு காடுகள் பாதுகாப்பு வளர்ச்சி, அவற்றை நியாய அளவில் பயன்கொள்ளல் ஆகிய கூறுகள் சமநிலையில் இருக்க வேண்டும். அப்போதுதான் நாம் தொடர்ந்து அவற்றிலிருந்து பயன் பெறமுடியும். மக்களும் மக்கள் தலைவர்களும் மனமுவந்து உதவுவதாலும் தொடர்ந்து ஒத்துழைப்பு நல்குவதாலும் மட்டுமே மேற் சொன்னவை நடக்கவியலும்.

இணைப்பு 5

[150-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

<u>முன்னுரை</u>

17. மானியக் கோரிக்கை.—மீனள துறையின் கீழ் ரூ. 2,51,06,200-க்கு மேற்படாமல் ஒரு தொகையை அரசுக்கு ஒதுக்குமாறு வேண்டிக்கொள்கிறேன்.

[1972 மார்ச் 27

1971–72-ல் அரசால் நிறைவேற்றப்பட்ட முக்கிய மீனள பணித் திட்டங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் பற்றிப் பின்வரும் பத்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. 1972–73-ல் நிறைவேற்ற எடுத்துக்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ள புதிய திட்டங்கள் பற்றிய முக்கியக் கூறுகள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

நோக்கம்

தமிழ்நாடு, மீன்வளத்தை வணிக முறையில் மேம்படுத்துவதற் கேற்ற வாய்ப்புக் கூறுகளாகிய ஆழ்கடலையும், அகநாட்டு நீர் நிலைகளையும் பெருமளவு பெற்றுள்ளது. மீன் பிடிப்பதற்கேற்ற 77,700 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுள்ள கடற்பகுதியுடன் தமிழ்நாட்டுக் கடற்கரை 1,000 கிலோ மீட்டர் நீளமுள்ளதாக அமைந்துள்ளது. வரையறையற்ற ஆழ்கடல் பரப்புடன் தொலைகடல் பகுதி (60–240 அடி ஆழமுள்ள) 2,175,591.60 ஹெக்டேர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அகநாட்டு நீர் நிலைகளின் பரப்பளவு 7,690,000 ஹெக்டேராகும். வற்றாத ஆறுகள், நீர்த்தேக்கங்கள், பாசன நீர்வாயில்கள், மழைக் காலத்தில் நீர் நிரம்பும் ஏரிகள் முதலியவை அகநாட்டு நீர்நிலைகளில் அடங்கும். கடல் வளங்களை முழுதும் பயன்படுத்திக் கொள்ளும் நோக்கத்துடனும், மீன் உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்துடனும் இத்துறை பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்தி வந்துள்ளது. இதில் மிக முக்கியமான திட்டம், தவணைக் கொள்முதல் அடிப்படையில் மீன்பிடி விசைப்படகுகள், நைலான் வலைகள் ஆகியவற்றை வழங்கு வதாகும். ஏனைய திட்டங்களில், மீன்களைக் கரை சேர்க்கும் முக்கிய மான இடங்களில் பனிக்கட்டி இயந்திரங்கள், குளிர்பதனச் சாதனங் கள், மீன் உறைய வைக்கும் தொழிற்சாலை ஆகியவற்றிற்கு வகை செய்தல், மீன்களைக் கரை சேர்ப்பதற்கும், மீன்பிடி படகுகளை நிறுத்தி வைப்பதற்குமான வசதிகளுக்கு வகை செய்தல், போன்றவை அடங்கும். மீனவர்களின் நலனிற்கான நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்படுகின்றன. மீனவர்கள் தங்களுக்குத் தேவைப்படும் மரக்கலங்களையும், கருவிகளையும் பெறுவதற்கும் தமது வருவாயை உயர்த்திக் கொள்ளவும், வாழ்க்கை நிலைமையை மேம்படுத்திக் கொள்ளவும் உதவும் வகையில், மீனவர்களுக்கு நிதியுதவியும், சாதனங்கள் உதவியும் அளிக்கப்படுகின்றன. மீனவர் குப்பங்களை முதன்மைச் சாலைகளுடன் இணைப்பதற்காக இணைப்புச் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

1972 மார்ச் 27]

அறிவியல் முறையில் மீன்குஞ்சுகளை வளர்த்து நீர்த்தேக்கங்களில் விடுவதற்கும், அவற்றைப் பாதுகாப்பதற்கும், பயன்படுத்துவதற்கும், உள்நாட்டுப் பகுதிகளிலுள்ள பெரிய நீர்த்தேக்கங்கள் அனைத்தும் துறையினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எல்லாத் திட்டங்களையும் நாம் மேற்கொண்டு வெற்றிகரமாக முடிக்கையில் மீன் உற்பத்தியில் பெருஞ்சாதனையை எய்த இயலும், வேளாண்மைத் துறையில் "பசுமைப் புரட்சியை" அடைந்திருப்பது போலவே, மீனளத்துறையில் "கடல்வளப்புரட்சியைக்" (Blue Revolution) கொண்டுவரும் பெருமை தமிழ்நாட்டிற்கே உரித்தாகும்.

மீனளத்துறை வளர்ச்சிக்காக ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் 1970–71, 1971–72-ம் ஆண்டுகளில் ஏற்பட்ட செலவையும், 1972–73-ல் செய்துள்ள நிதி ஒதுக்கத்தையும் கீழேயுள்ள விவர அறிக்கையில் காணலாம்.

	மத்திய அரசின் ஆதரவு பெறும் திட்டங்கள்.	மத்திய அரசின் உதவி பெறும் திட்டங்கள்.
	(1)	(2)
	(ரூபாய் லட்சத்தில்.)	
1970–71 (கணக்குகள்)	39·58	166·58
1971–72 (திருத்த மதிப்பீடு) ..	96·76	171·68
1972–73 (வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு).	72·58	197·99

மீன் உற்பத்தி

கடல் மீன்பிடிப்பின் ஆண்டு அளவு 1951-ல் 0.44 லட்சம் டன்களிலிருந்து 1971-ல் 2.19 லட்சம் டன்னாக ஒரே சீராக உயர்ந்துள்ளது. நான்காவது ஐந்தாண்டுத் திட்ட இலக்கு 3.00 லட்சம் டன்னாகும். அடுத்து வரும் இரண்டாண்டுகளில் இந்த இலக்கை எய்த வேண்டியுள்ளது. இது போன்றே, அகநாட்டு மீன்பிடிப்பு அளவும் 1951-ல் 0.34 லட்சம் டன்னாக இருந்தது. 1971-ல் 1.29 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. திட்டத்தின் இறுதிக் காலத்தில் இதன் அளவு 2.00 லட்சம் டன்னாக உயரும்.

[1972 மார்ச் 27

மீன்பிடி விசைப் படகுகள்.

இம்மாநிலத்தில் மீன்பிடி தொழிலில் புது முறைகளை மேற்கொள்வதற்காக மீன்பிடி விசைப்படகுகளைப் பயன்படுத்துவதற்கும், மீன் உற்பத்தியைப் பெருக்குவதற்கும், அரசு முயற்சி எடுத்துள்ளது. புதிய படகு ஒவ்வொன்றும் மீன்பிடிக்கும் தொழிலுக்குப் பயன்படுத்தப்படும்போது, ஆண்டு ஒன்றுக்குச் சராசரி மீன் உற்பத்தி 75 டன் முதல் 100 டன் வரை அதிகரிக்கும். கடந்த 20 ஆண்டுகளில் மீனளத்துறை மேம்பாட்டுத் திட்டத்தின் முதன்மைப் பணி, மீன்பிடி விசைப்படகுகளைக் கொண்டு வருவதாகவே இருந்து வந்துள்ளது. மீனளத்துறைக்காக ஒதுக்கப்படும் திட்ட நிதி ஒதுக்கத்தில், ஒவ்வொரு ஆண்டும் இதற்காக 70 சத வீதம் ஒதுக்கப்படுகிறது. நான்காவது திட்டத்தில் மீனளத்துறையின் மூலம் 1,000 படகுகளைக் கட்டி வழங்கவும், வேளாண்மை மறுநிதி உதவிக் கழகத்தின் உதவியுடன் மீனவர் கூட்டுறவுக் கூட்டமைப்புகள் மூலம் 275 படகுகளைக் கட்டி வழங்கவும் திட்டமிடப்பட்டிருக்கிறது. இத்திட்டத்தின்கீழ் 1970–71-ல் ரூ. 116.59 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. தனியார் நிறுவனங்கள் மூலம் கட்டப்பட்ட 40 படகுகளைத் தவிர 146 படகுகள் துறையைச் சேர்ந்த படகு கட்டும் தளங்களில் கட்டப்பட்டன. மேலும் 40 படகுகள் கட்டும் பணி பல்வேறு நிலைகளில் இருந்தது. 1971–72-ம் ஆண்டில் துறையைச் சேர்ந்த படகு கட்டும் தளங்களில் 150 படகுகளும், தனியார் படகு கட்டும் தளங்களில் 50 படகுகளும் கட்டுவதற்கான திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது. 1972–73-ல் 200 மரக்கலங்கள். கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. 1971, மார்ச் 31-ம் நாள் முடிய இத் திட்டத்திற்கு ரூ. 5.71 கோடி செலவிடப்பட்டுள்ளது. 1,198 படகுகள் கட்டப்பட்டு நமது மநிால நீர் நிலைகளில் இயங்கி வருகின்றன.

15 அடி நீளமுள்ள இரும்பு-சிமிட்டி (Ferrow-cement) படகு ஒன்றையும் 38 அடி நீளமுள்ள மற்றொரு இரும்பு சிமிட்டிப் படகு ஒன்றையும் வெற்றிகரமாக வெள்ளோட்டம் விட்டதன்மூலம் படகு கட்டுவதில் மலிவான மாற்றுச்சாதனங்களைப் பயன்படுத்துவதில் தமிழ்நாடு 1971–72-ல் மகத்தானதோர் சாதனையை எய்தியது. இந்த ஆண்டில் 38 அடி நீளமுள்ள 7 இரும்பு-சிமிட்டிப் படகுகளை மேலும் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. 38 அடி நீளமுள்ள இரும்பு-சிமிட்டிப் படகு ஒன்றைக்கட்டி வெள்ளோட்டம் விட்டதில் வெற்றி கிட்டியதால், 1972–73-ல் 38 அடி நீளமுள்ள படகுகள் 25ஐயும், 44 அடி படகுகள் 2ஐயும், 54 அடி படகுகள் 2ஐயும் (இரும்பு-

1972 மார்ச் 27]

சிமிட்டிப் படகுகள்) கட்டுவதற்கென முறையான படகு கட்டும் தளம் ஒன்றை நிறுவ முடிவு செய்யப்பட்டுள்ளது. நம் நாட்டில் உள்ள கடல் சார்ந்த மாநிலங்கள் அனைத்திலும் தமிழ்நாடுதான் இப் பணியில் முதன்மை வகிக்கிறது. தற்போது நமது மாநிலம் பெரிய அளவிலான இரும்பு-சிமிட்டிப் படகுகளைப் பெருமளவில் கட்டும் பணியை மேற்கொண்டுள்ளது.

படகுகள் வழங்குவதில் ஏற்படும் தாமதத்தை நீக்குவதற்காக படகுகள் வழங்குவதற்காக முன்கூட்டியே சீட்டுக்குலுக்கிப் பார்க்குமாறு அரசு அண்மையில் ஆணை பிறப்பித்துள்ளது. இம் முடிவிற்கேற்ப, படகுகள் ஒதுக்கப் பெறுபவர்களின் பெயர்கள் நிதி யாண்டின் தொடக்கத்திலேயே (அதாவது, படகுகள் கட்டி முடிப் பதற்கு முன்னரே) சீட்டுக்குலுக்கலின் வாயிலாகத் தெரிந்தெடுக்கப் படும். படகுகள் கட்டிமுடிக்கப்பட்டவுடன் படகு ஒதுக்கப்பட்ட வர்களுக்கு அவை சேர்ப்பிக்கப்படும்.

மீனவர் தொகுதிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள விசைப் படகு களுக்குத் தற்போது 15 சத வீதம் ஈடுசெய் தொகை அனுமதிக்கப் படுகிறது. தற்போதுள்ள ஆணைகளுக்கேற்ப, இத்தொகை 1972–73-ல் 10 சத வீதமாகவும், 1973–74-ல் 5 சத வீதமாகவும் குறைக்கப் பட்டு 1974–75-க்கு மேற்பட்டு ஈடுசெய் தொகையே வழங்கப்பட மாட்டாது. விசைப்படகு உரிமையாளர் ஒருவர், வாடகைக்கு எடுத்துக் கொண்ட தொழிலாளர்களுக்குக் கூலி வழங்கிய பிறகும், ஏனைய நடைமுறைச் செலவுகளைச் செய்த பிறகும், தமது வாழ்க்கைச் செலவுக்கென தொகை ஒதுக்கிய பிறகும், உதவித் தொகை இல்லாமலேயே தவணைக் கொள்முதல் கால அளவுக்குள் படகின் முழு மதிப்பைத் திருப்பி இயலும் என்பதாலும் செலுத்திவிட இந்த ஈடுசெய் தொகைக்கெனத் தற்போது செலவிடப்படும் தொகை பிற மீனள வளர்ச்சிப் பணிகளுக்கென மேலும் பயனுள்ள வகையில் செலவிடப்படக் கூடுமென்பதாலும், 1972–73 முதற்கொண்டு ஈடுசெய் தொகை வழங்கும் திட்டத்தை நீக்கிவிடுவதென அரசு முடிவு செய்துள்ளது.

விசைப்படகு ஒன்றில் ஏற்கெனவே பொறுத்தப்பட்ட பொறி சிக்கனமாகப் பழுது பார்க்கும் நிலையில் இல்லாவிட்டாலும், அல்லது இயக்குவதற்கு ஏற்றதாக இல்லாவிட்டாலும், இரண்டாவது என்ஜின் ஒன்று வழங்கப்படுகிறது. அவ்வாறு இரண்டாவது என்ஜின் வழங்கப்பட விதிக்கப்படும் நிபந்தனைகளில் ஒன்று, அந்தப் பொறி

[1972 மார்ச் 27

அவருக்குச் சேர்ப்பிக்கப்படும் முன்பு, அவர் படகிற்குரிய நிலுவைகளில் 50 சதவீதத்தைச் செலுத்தியிருக்க வேண்டும். இந்த நிபந்தனையை வற்புறுத்தாமல் இருப்பது குறித்தும், இத்தொகையைத் தவணையில் வசூலிப்பது குறித்தும் அரசு ஆய்வு செய்துவருகிறது.

இதுவரை, அந்த ஆண்டிற்கென தெரிந்தெடுக்கப்பட்ட இரண்டொரு வகைப் பொறிமட்டும் பொருத்தப்பட்ட படகுகள் மீனவர்களுக்குச் சீட்டுக் குலுக்கலின் வாயிலாக வழங்கப்பட்டு வந்தன. 1972–73 முதற்கொண்டு படகு ஒதுக்கப் பெற்றவர் தம் விருப்பத்திற்கேற்றவாறு உள்நாட்டுப் பொறியைத் தெரிந்தெடுக்கும் வாய்ப்பினைப் பெருவார். அவ்வாறு அவரால் தெரிந்தெடுக்கப்படும் பொறி, மீனளத்துறையால் வாங்கப்பட்டு அவருக்கு வழங்கப்படும் படகில் பொருத்தப்படும். ஆனல், படகு ஒதுக்கப்பெற்றவர் அதிக விலையுள்ள பொறியைப் பெற விரும்புபவாராயின் அவர் தெரிந்தெடுக்கும் பொறியின் விலைக்கும், ஏற்கனவே குறைந்த ஒப்பந்தப் புள்ளி விலைக்கும் உள்ள வேறுபாட்டுத் தொகையை முழுவதும் செலுத்திவிட வேண்டும். இந்த வேறுபாட்டுத் தொகையைத் தவணைகளில் வசூலிப்பது குறித்தும் அரசு பரிசீலனை செய்து வருகிறது.

தனிப்பட்ட தொழில் முனைவர்களும், மீன்பிடிக்கும் இயந்திரப் படகுகளைப் பயன்படுத்துவதற்கு இயலும் ஒரு திட்டத்திற்கு அரசு ஏற்பளித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ், படகு வாங்குபவர் படகின் அடக்கவிலையில் 20 சதவீதம் முதலீடு செய்யவேண்டும். அரசு 20 சதவீதம் வரை வட்டியில்லாக் கடனைக் கொடுத்து உதவும். எஞ்சிய தொகை, தொழில் முனைவர்கள் கொடுக்கும் பிணையத்திற்கேற்ப வேளாண்மை மறுநிதி உதவிக் கழகம், வேளாண்மை நிதியுதவிக் கழகம், வணிக வங்கிகள் முதலிய நிதியுதவி நிறுவனங்களிடமிருந்து பெறப்படும். இத்திட்டத்தின்கீழ் 1971–72-ல், 30 அடி படகுகள் 40-க்கும், 32 அடி படகுகள் 10-க்கும் கடன் வழங்குவதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. அனைத்து அளவு படகுகளுக்கும், இத்திட்டத்தை நீடிக்க அரசு ஆய்வு செய்து வருகிறது.

ஆழ்கடல் மீன்பிடிப்பு.

57 அடி நீளமுள்ள உருக்கு இழுபடகுகள் (Steel Travelers நான்கு கட்டப்படுவதற்காக ஆணைகள் அனுப்பப்பட்டுள்ளன. தமிழ்நாட்டின் தொலைகடல் பகுதிகளில் மீன்பிடிப்பதற்காக இந்த இழுபடகுகள் ஆய்வுகள் நடத்தும். சென்னை, மண்டபம், தூத்துக்குடி

1972 மார்ச் 27]

ஆகிய இடங்களில் இந்த இழுபடகுகள் இருக்கும். இரண்டு இழு படகுகள் துறையின் பொறுப்பில் எடுத்துக் கொள்ளப்பட்டு 1—3—1972-ல் சென்னைக்குக் கொண்டு வரப்பட்டன. ஏனைய இரண்டு படகுகளும், கல்கத்தாவின் மற்றொரு கப்பற் கட்டுந்தளத்தில் வெவ்வேறு உருவாகும் நிலையில் உள்ளன. இந்த ஆண்டின் பிற்பகுதியில் அவை ஒப்படைக்கப்படும் என எதிர்பார்க்கப்படு கிறது.

மீன்பிடி சாதனங்கள் வழங்கல்

மீனவர்களுக்கு விசைப்படகுகளுடன் வழங்கப்படுவதற்காக 1970–71-ல் 14,00 டன் நைலான் நூல் வாங்கப்பட்டது. மீனவர் களுக்கு விசைப்படகுகளுடன் வழங்கப்படுவதற்காக, 1971–72-ல் ரூ. 7 லட்சம் செலவில் 17.00 டன் நைலான் நூல் வாங்கப்படுவதற்கு அரசு ஏற்பளித்துள்ளது. அவர்களுக்கு விசைப்படகுகளுடன் நைலான் நூல் ஈடுசெய் விலையில் தொடர்ந்து வழங்க கருதப் பட்டுள்ளது. இதற்காக 1972–73 ஆம் ஆண்டிற்கு ரூ. 3 லட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு ஈடுசெய் விலையில் நைலான் நூல் வாங்கிப் பகிர்ந்தளிக்கப்படுவதற்காக, அச்சங்கங்களுக்கு மானியத் தொகை வழங்குவதற்கான திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்கங்களுக்கு 1970–71க்கு ரூ. 1 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்க அவை ரூ. 92,240ஐப் பெற்று பயன்படுத்தின. உதவித் தொகை வழங்குவதற்காக 1971–72-ல் ரூ. 2.00 லட்சத்திற்கு அரசு ஏற்பளித்துள்ளது. 1972–73க்கும் ரூ. 1 லட்சம் செலவில் இத்தகைய திட்டத்தைச் செயல்படுத்தக் கருதப்பட்டுள்ளது. இரண்டு திட்டங்களின் கீழும் 20 சத வீதம் உதவித் தொகை வழங்குவது 1972–73-ம் ஆண்டிலும் தொடர்ந்து செயற்படுத்தப்படும்.

மீன் சினைகள் உற்பத்தியும், அகநாட்டு நீர்நிலைகளில் மீன் குஞ்சுகள் விடுவதும்.

இயற்கை நீர்நிலைகளிலிருந்து மீன் சினைகளைச் சேகரிக்கும் திட்டத்தினாலும், பெரிய கெண்டை மீன் சினைகளைத் தூண்டுதல் முறையில் பொரிக்கச் செய்து (Inducing Carp Spawning) மீன் குஞ்சுகளை நீர் நிலைகளில் விடுவதன் மூலமும் அகநாட்டு நீர் நிலைகளில் மீன் உற்பத்தி அதிகரித்துள்ளது. 1970–71-ம்

ஆண்டில் 441 லட்சம் மீன் குஞ்சுகளும் Fingerlings 984 லட்சம் பொரித்த மீன்குஞ்சுகளும் Hathlings உற்பத்தி செய்யப்பட்டன. 1971–72-ல் 600 லட்சம் மீன் குஞ்சுகளைச் சேகரிப்பதும், 900 லட்சம் பொரித்த மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்வதும் மேற்கொள்ளப்படுகின்றது. 1972–73-ம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து நிறைவேற்றப்படும். தூண்டுதல் முறையில் மீன் குஞ்சுகளைப் பொரிக்கச் செய்யும் நீர் நிலைகளிலிருந்து மீன் சினைப் பெருக்கத்தை இரு மடங்காக்குவதற்கான அடங்கல் திட்டமொன்று வகுக்கப்பட்டு அரசின் ஏற்பளிப்பைப் பெற்றுள்ளது. இத்திட்டத்தை செங்கற்பட்டு மாவட்டத்தில், முதற்கண் செயற்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

நீர்த் தேக்கங்களில் மீன் பண்ணைகளை அமைத்தல்.

1971–72-ம் ஆண்டில், சோலையாறு, மேல் அணைக்கட்டு, சத்தி ஆறு அணை ஆகியவிடங்களில் உள்ள நீர்த் தேக்கங்களில் மீன் பண்ணைகளை அமைப்பதற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணிகள் நிறைவேற்றப்படுவதில் பெருமளவில் முன்னேற்றங் காணலாமென எதிர்பார்க்கப்படுகிறது. 1972–73-ல் கோயம்புத்தூர் மாவட்டம் ஆளி ஆறு நகரிலும், அமராவதியிலும் தூண்டுதல் முறையில் கெண்டை மீன் முட்டைகளைப் பொரிக்கச் செய்யும் நிலையங்களை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது.

மேற் குறிப்பிட்ட திட்டத்தைத் தவிர, மீன் வளர்ப்புக்காகக் குளங்களைப் புதுப்பித்தல், ஊராட்சி ஒன்றியங்களின் மீன் குஞ்சு வளர்ப்புக் குளங்களைப் பேணுதல், ஊராட்சிகளில் மீன் குஞ்சுகளைப் பகிர்ந்தளித்தல் முதலிய பணிகளை ஒவ்வொரு ஆண்டும் ரூ. 4 லட்சம் செலவில் கிராம வளர்ச்சித் துறை இயக்குநர் செயல்படுத்துகிறார். வரவு–செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு மீனளத் துறையின்கீழ் உள்ளது. ஆனால், இத்திட்டம் கிராம வளர்ச்சித் துறை இயக்குநரின் கட்டுப்பாட்டில் செயல்படுகிறது.

அகநாட்டு நீர்நிலை மீனளங்களைக் குத்தகைக்கு விடுதல்.

மாநில அரசு மேற்கொண்டுள்ள நீர்வாயில்களிலும், ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டிலுள்ள குளங்களிலும் மீன் பிடிப்பதற்கான உரிமைகள் பொது ஏலத்திலன்றி, மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, 1970-லிருந்து அல்லது 1380-ம் பசலியிலிருந்து மேலும்

1972 மார்ச் 27]

மூன்றுண்டுகளுக்கு, 1969-ம் ஆண்டுக் குத்தகைத் தொகையில் 10 சத வீதம் அதிகரிப்புடன் குத்தகைக்கு விடப்பட வேண்டுமென்று ஆணை யிடப்பட்டது. மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தொடர்ந்து குத்தகைக்கு விடவேண்டுமென்று ஆணையிடப்பட்டுள்ள மூன்றுண்டு களுக்கும் சேர்த்து இந்த குத்தகைத் தொகை உயர்வு பொருந்தும். அதாவது, ஒவ்வொரு ஆண்டுக்கும் குத்தகைத் தொகை 10 சத வீதம் உயர்த்தப்படமாட்டாது.

பயிற்சி.

பயனளிக்கத்தக்க வகையில் மீன் பிடிப்பதற்காக மின் விசைப் படகுகளை இயக்க, சென்னை, கடலூர், நாகப்பட்டினம், மண்டபம், தூத்துக்குடி, கொளச்சல் ஆகியவிடங்களில் ஒவ்வோர் பயிற்சி நிலையமாக கடல் மீனவர் பயிற்சி நிலையங்கள் ஆறு உள்ளன. மண்டபம் தவிர, ஒவ்வொரு பயிற்சி நிலையத்திலும், 10 திங்கள் கால அளவில் ஒரு தடவையில் 50 மீனவர்களுக்குப் பயிற்சியளிக்கப் படுகிறது. மண்டபத்தில் ஒவ்வொரு முறையும் 60 மீனவர்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது. மேட்டூர் அணையில் உள்நாட்டு மீனவர் பயிற்சி நிலையம் ஒன்று உள்ளது. இது வரையில், 2,452 மீனவச் சிறுர்கள், மீன்பிடி இயந்திரப் படகுகளை இயக்குதல், அடிப்படை நீர் வழிப் போக்குவரத்து, பல்வேறு மீன்பிடி கருவிகளைப் பயன்படுத்தும் புதிய மீன்பிடி முறைகள் ஆகியவற்றில் பயிற்சி யளிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையங்கள் மீனவர்களுக்குத் தொடர்ந்து பயிற்சியளித்து வரும். 1972–73-ல் புதிய மீன்பிடி வலைகளையும், பிற மீன்பிடி கருவிகளையும் மேம்படுத்தவேண்டி, கியர் பிரிவு ஒன்றை ஏற்படுத்துவதன் மூலம் ஆழ்கடல் மீனவர் பயிற்சி நிலையங்களை வலுப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. திட்டப் பணிகளை வெற்றிகர மாக நிறைவேற்றும் பொருட்டு, எல்லாத் துறைகளிலும், துறைப் பணியாளர்களின் திறமையை மேம்படுத்தும் நோக்கத்துடன், அரசிதழ் பதிவு பெற்ற, அரசிதழ் பதிவு பெறுத அலுவலர்கள் பல துறைகளிலும் பயிற்சி பெறுவதற்காக பல்வேறு மத்திய மீனள நிலையங்களுக்கு முகமையில் அனுப்பப்படுகிருர்கள்.

பனிக்கட்டி உற்பத்திப் பிரிவு, பனியறைப் பிரிவு, உறையவைக்கும் பிரிவு.

உறையவைக்கும் பிரிவுகள் 3 உட்பட, இத்துறை 32 பனிக்கட்டி உற்பத்திப் பிரிவுகளையும் பனியறைப் பிரிவுகளையும் இம்மாநிலத்தில்

நிறுவியுள்ளது. பல்வேறு உற்பத்தித் திறன் கொண்ட பனிக்கட்டி உற்பத்திப் பிரிவுகள் 7 மேற்கொண்டும் அமைக்கப்படவிருக்கின்றன. 1971–72 ஆம் ஆண்டில் ஆரம்பாக்கத்தில் ஒன்றும், சென்னையில் ஒன்றுமாக இரு பனிக்கட்டி உற்பத்திப் பிரிவுகளுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இப்பிரிவுகள் 1972–73-ல் செயல்படத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இராமேஸ்வரத்திலுள்ள பனிக்கட்டி உற்பத்திப் பிரிவு மீனவர்களின் தேவையை தற்போது முழுதும் நிறைவேற்ற இயலாததால், அவை மூலம் கூடுதலான பனிக்கட்டி வழங்கப்படும் பொருட்டு இப்பிரிவு 1972-73-ல் விரிவாக்கப்படவிருக்கிறது. திருநெல்வேலி மாவட்டம், பெரியதாழை கிராமத்தில் புதியதொரு பனிக்கட்டி உற்பத்திப் பிரிவை 1972–73-ல் ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் பிரிவுகள் இரண்டும், 1972–73-ஆம் ஆண்டிலேயே தயாராகிவிடக் கூடும்.

பதப்படுத்திய மீன்களை டப்பியிலடைக்கும் தொழிற்சாலையும் மீன் மாவுத் தொழிற்சாலையும்.

தூத்துக்குடியில் அமைக்கப்பட்டு, 1966 ஜூனில் உற்பத்தியைத் தொடங்கிய, பதப்படுத்திய மீன்களை டப்பியில் அடைக்கும் தொழிற்சாலை 1969–70-ல் தனியார் ஒருவருக்குக் குத்தகைக்கு விடப்பட்டது. இந்திய–நார்வே திட்டத்தின்கீழ் "உதவி" யாகப் பெறப்பட்ட இயந்திரத்தைப் பயன்படுத்தி, நாளொன்றுக்கு 50 டன் பதப்படுத்தாத மீன்களை மீன்மாவாக்கும் திறனுள்ள மீன்மாவுத் தயாரிக்கும் தொழிற்சாலையொன்றும் 1971 மே திங்களில் செயல்படத் தொடங்கியது. இத் தொழிற்சாலை செயல்படத் தொடங்கிய நிலையில் ரூ. 1,70,000 மதிப்புள்ள 170.650 டன் அளவுள்ள மீன் மாவு தயாரிக்கப்பட்டது.

மீன் சார்ந்த தொழில்.

தனியார் தொழில் முனைவர்கள் மீன்பிடி தொழில் துறையில் ஈடுபடுவதை ஊக்குவிக்க, மீன் பதப்படுத்தும் தொழிற்சாலைகள், படகு கட்டும் தளங்கள் முதலியவற்றை நிறுவுவதற்கென, இம் மாநிலத்தின் பல்வேறு இடங்களில் உருவாகி வரும் மீன்பிடி துறை முகங்களுக்கருகில் நிலங்களை வழங்க இத்துறை பெருமுயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது. மேற்கண்ட காரியத்துக்காக, கடலூரில்

1972 மார்ச் 27]

ஏற்கெனவே நிலங்கள் ஒதுக்கப்பெற்றுவிட்டன. இதே நோக்கத்திற்காக ரூ. 1.60 லட்சம் செலவில் எண்ணூர் உப்பங்கழியில் (கத்திவாக்கம் கிராமம்) 6.95 ஏக்கர் நிலத்தை அரசு கையகப்படுத்தியுள்ளது. கடலூர் மீன்பிடி துறைமுகத்தில், படகு கட்டும் துறை ஒன்றைத் தொடங்குவதற்காக தனியார் தொழில் முனைவர் ஒருவரிடம், ஏற்கெனவே ஒரு பகுதியை குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. மீன்பிடி துறைமுகப் பகுதியில், பண்படுத்தப்பட்ட நிலங்கள் கிடைக்கையில், இது போன்ற வசதிகள் தூத்துக்குடி, சென்னை துறைமுகங்களுக்கும் செய்து கொடுக்கப்படும்.

மீனவர் நலத் திட்டங்கள்.

பல ஆண்டுகளுக்குப் பிறகு, 1968–69-ஆம் ஆண்டில் வீட்டு வசதித் திட்டத்தை அரசு மீண்டும் செயலுக்குக் கொண்டு வந்தது; மீனவர்களுக்காக 100 வீடுகள் கட்டுவதற்கு ரூ. 1 லட்சம் செலவிட ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. 1969–70-ல், மேலும் ரூ. 1 லட்சம் செலவிட அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. ஒப்பளிப்பு வழங்கப்பட்ட இந்த 200 வீடுகளில் 100 வீடுகள், 1970–71 ஆம் ஆண்டு இறுதியில், கட்டி முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள வீடுகள், 1972 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் இறுதிக்கு முன்னர் கட்டி முடிக்கப்பட்டு விடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இத் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்தவும் 1971–72 ஆம் ஆண்டில், ரூ. 1.00 லட்சம் செலவில், மேலும் 100 வீடுகளைக் கட்டவும் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

இதைத் தவிர, புயல் நிவாரண நிதியிலிருந்து, ரூ. 2.62 லட்சம் செலவில், தஞ்சாவூர் மாவட்டம், அம்மாபட்டினம் கிராமத்தில் 70 வீடுகள் கட்டுவதற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இந்த வீடுகள், 1972-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் இறுதிக்கு முன்னர் கட்டி முடிக்கப்படும் என்று எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

ரூ. 4.00 லட்சம் செலவில், தஞ்சாவூர் மாவட்டத்தில், (1) தோப்புத்துறை ரயில் நிலையத்தை ஆர்க்காடு தெருவுடன் இணைக்கும் சாலை, (2) முக்கிய சாலையுடன் செருத்தூர் மீனவர் குப்பத்தை இணைக்கும் இணைப்புச் சாலை, ஆகிய இரண்டு இணைப்புச் சாலைகளை அமைக்கும் பணி 1969-ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு நடந்தேறி வருகின்றது. அச் சாலை அமைப்புப் பணி இந்த ஆண்டில் முடிவடைந்து விடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. தென் ஆர்க்காடு மாவட்டத்தில், ரூ. 1.19 லட்சம் செலவில் மற்றுமொரு

பெரிய சாலை ஒன்றும் அமைக்கப்பட்டு வருகிறது. சேதுபாவா சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் எட்டு இணைப்புச் சாலைகள் அமைக்கும் பணியையும், சேலம் மாவட்டம் மேச்சேரி ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு சாலை அமைக்கும் பணியையும் அந்தந்த ஊராட்சி ஒன்றியங்கள், 1970–71-ஆம் ஆண்டில், அரசு மானியத் தொகை யோடு தொடங்கின; இப்பணி 1971–72-ஆம் ஆண்டில் முடிக்கப் பட்டுள்ளது. ரூ. 50,000 செலவில், பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் மேலும் இரண்டு சாலைகளை அமைப்பதற்கும், கன்னியா குமரி மாவட்டத்தில் இரண்டு சாலைகள் அமைக்கப்படுவதற்கும், 1971–72-ஆம் ஆண்டில், அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இதற்கான மொத்தச் செலவில் முறையே 10 சதவீதத்தையும், 40 சதவீதத்தை யும் அரசு மானியமாக வழங்குகிறது. இவ்வகையில் அரசு மொத்தம் ரூ. 8,850 வழங்கியுள்ளது.

மீன்பிடி தொழிலுக்கான நிறுவனக் கடன் உதவி.

மீனள வளர்ச்சிப் பணிகளுக்கு, அரசு முக்கியமாக நிதி உதவி அளித்து வந்த போதிலும், இத்தகைய மேம்பாட்டுப் பணிகள் பல விரைந்து வளர்ந்து வருவதால், அரசின் நிதி வாயில்கள் போதவில்லை. எனவே, தனியார் மற்றும் கூட்டுறவுத் துறைகளில், மீன்பிடி தொழில்களை அமைக்க, அரசு நிதி உதவி அளிக்க முடியாம லுள்ளது. எனினும், வேளாண்மை மறுநிதி உதவிக் கழகம், வணிக வங்கிகள் முதலிய நிதி உதவி செய்யும் நிறுவனங்களிடமிருந்து கடன் பெறுவதற்கு, இத்துறைகளுக்கு அரசு ஊக்கமளித்து வருகிறது. இது குறித்துத் தேவையான உதவியையும் அரசு வழங்கி வருகிறது. சென்னை மாவட்ட மீனவர் கூட்டுறவுக் கூட்டமைப்பின் ஆதர வுடனும், வேளாண்மை மறுநிதி உதவிக் கழகத்தின் நிதி உதவி யுடனும், சென்னை, செங்கற்பட்டு மாவட்டங்களில் ரூ. 33.82 லட்சம் செலவில் மேற்கொள்ள ஒப்பளிக்கப்பட்டுள்ள மீன்பிடி தொழில் மேம்பாட்டிற்கான திட்டம், மூன்று ஆண்டுகளாகச் செயல்படுத்தப் பட்டு வருகிறது. அது போன்ற திட்டம் ஒன்றை, ரூ. 78.70 லட்சம் செலவில், தூத்துக்குடியிலுள்ள திருநெல்வேலி மாவட்ட மீனவர் கூட்டுறவுக் கூட்டமைப்பு நிறைவேற்றுவதற்கு அரசு அண்மையில் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. வேளாண்மை மறுநிதி உதவிக் கழகம் இத்திட்டத்திற்கு வழங்கும் கடன் ரூ. 59.02 லட்சமாகும். மூன்று ஆண்டுக் காலத்தில், தூத்துக்குடியில், படகு கட்டும் துறை ஒன்றை அமைப்பதற்கும், 32 அடியுள்ள 75 படகுகளை கட்டுவதற்கும், இத் திட்டம் வகை செய்கிறது.

1972 மார்ச் 27]

மீன்பிடி துறைமுகங்களும், மீன்களைக் கரை சேர்ப்பதற்கான துறைகளும்.

இவ்வரசின் விடா முயற்சியினால், இந்திய அரசு, ரூ. 210.00 லட்சம் செலவில் தூத்துக்குடியில், மீன்பிடி துறைமுகம் ஒன்றைக் கட்டுவதற்கான திட்டத்தை, மத்திய அரசின் ஆதரவு திட்டத்தின் கீழ், நிறைவேற்ற முன் வந்தது. இத் துறைமுகப் பணி, 1969 ஏப்ரலில் மேற்கொள்ளப்பட்டது. வடக்கு, தெற்கு, கிழக்கு அலைத் தடுப்புச் சுவர் அமைக்கும் பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டுள்ளன. அணுகு சாலைகள் Approach roads பண்டக சேமிப்புக் கொட்டகைகள், அலுவலக் கட்டிடங்கள் போன்ற கட்டிடப் பணிகள் யாவும் முடிக்கப்பட்டுள்ளன. தெற்குக் கப்பல் துறைமேடைச் சுவர் கட்டும் பணி அநேகமாக முடிக்கப்பட்டுள்ளது. வடக்குக் கப்பல் துறை மேடைச்சுவர் மத்திய மீன் கரை சேர்ப்புத்துறைகள் அமைக்கும் பணியும் விரைந்து நடைபெற்று வருகிறது. போக்கு வரத்து அமைச்சகத்தைச் சேர்ந்த மண்வாரியின் உதவியினால் அணுகு வாய்க்காலில் தூர் வாரும் பணியில் பெரும் பகுதி முடிக்கப் பட்டுள்ளது. மண்வாரி, தற்போது படகு நிற்குமிடத்தில் தூர்வாரப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இப்பணி 1972 ஏப்ரலில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதன்பிறகு, இந்த மண்வாரி படகு வாய்க்காலை ஆழப்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படும். 1972–73 இறுதிக்குள், இப்பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டு மீன்பிடி துறைமுகம் தயாராக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மத்திய அரசுத்துறைத் திட்டத்தின்கீழ் ரூ. 388 லட்சம் செலவில் சென்னையில் மீன்பிடி துறைமுகம் ஒன்றைக் கட்ட இந்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இப்பணி சென்னைத் துறைமுகப் பொறுப்புக் கழகத்தினால் நிறைவேற்றப்படும். துறைமுகத்திற்கான வடிவமைப்பு வரைபடத்தின் மாதிரி, பூனாவில் உள்ள மத்தி நீர்-மின் ஆராய்ச்சி நிலையத்தில் பரிசோதிக்கப்பட்டு முடிவு செய்யப் பட்டுள்ளது. இதற்கு இறுதி வடிவம் கொடுக்கப்பட்டுள்ளது. சென்னை துறைமுகப் பொறுப்புக் கழகம் திருத்திய திட்ட அறிக்கை ஒன்றைத் தயாரித்து வருகிறது. இந்த அறிக்கைக்கு இறுதி வடிவம் கொடுத்து இந்திய அரசினால் ஏற்பளிக்கப்பட்டவுடன் கட்டுமானப் பணி தொடங்கப்படும்.

[1972 மார்ச் 27

இந்திய—நார்வே திட்டம்.

நார்வே நாட்டுத் தொழில் நுட்ப மற்றும் பிறவகை உதவிகளுடன் மீனளத் திட்டம் ஒன்று 1963 நவம்பரில் தொடங்கி வைக்கப்பட்டது. படகு கட்டும் தளம், மீனளப் பயிற்சி நிலையம், பனிக்கட்டித் தொழிற்சாலை, குளிர்சாதன அறை, மீன்களை உறைய வைக்கும் பிரிவு, மீன் மாவு தொழிற்சாலை, மீன்பிடி படகுகளை நிறுத்தி வைப்பதற்கான வசதிகள், கடலோர, தொலை கடல் பகுதிகளில் ஆய்வு நடத்துதல், மீன் கிடைக்கும் இடங்களைக் கண்டு பிடித்தல், பணிமனை கட்டுதல் ஆகியவை இத்திட்டத்தில் அடங்கும். எல்லாப் பிரிவுகளும் பணிபுரியத் தொடங்கியுள்ளன. மண்டபம் பிரிவு, மீனளப் பணிகளின் ஒருங்கிணைந்த நிலையமாக தற்போது பணி புரிந்து வருகிறது. இத்திட்டத்திற்காகத் தொடக்கத்தில் வழங்கப்பட்ட கப்பல் டீசல் பொறிகள் 81 உட்பட ரூ. 45.15 லட்சம் மதிப்புள்ள பொறிகளை நார்வே நிறுவனம் இதுவரை வழங்கியுள்ளது. இந்த ஒப்பந்தம் 31—3—1972-ல் முடிவடைகிறது. அப்போது இத் திட்டம் மாநில அரசிடம் ஒப்படைக்கப்படும்.

முத்து, சங்கு குளித்தல்

கடந்த ஆண்டு வரையில், தூத்துக்குடியில் சங்கு குளிக்கும் தொழில் துறையால் இயக்கப்பட்டது. ஆனால் பிற மாவட்டங்களில் சங்கு குளிக்கும் தொழில் ஒரு சமயத்தில் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விடப்பட்டது. இப்பொழுது திருநெல்வேலி மாவட்டம் நீங்கலாக ஏனைய மாவட்டங்கள் அனைத்திலும், கட்டணம் ஏதும் செலுத்தாமல் சங்கு குளிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. இதனால், மீனவர்களைப் போன்று கடல் வளத்தை முழு அளவில் அனுபவிக்க தங்களுக்கும் உரிமை வேண்டும் என்றும், இடை ஆட்களை ஒழிக்கவேண்டும் என்றும் முத்துக் குளிப்பவர்கள் இடைவிடாமல் செய்து வரும் கோரிக்கை நிறைவேறுகின்றது. அரசு அண்மையில், திருநெல்வேலி மாவட்ட மீனளத்தின் பெரிய சங்குகள் வாங்கும் விலையை சங்கு ஒன்றுக்கு ரூ. 1.25-லிருந்து ரூ. 1.75 ஆக உயர்த்தியுள்ளது.

தூத்துக்குடியில் மீன் பிடி துறைமுகம் அமைக்கப்பட்டு, விசைப் படகுகள் மூலம் மீன் பிடிப்பது முனைப்பாக நடப்பதன் விளைவாக, வரும் ஆண்டுகளில் மீன் பிடித் தொழில் கணிசமான அளவு பெருகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

1972 மார்ச் 27]

இணைப்பு 6

[199-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

மானியக் கோரிக்கை 8-ஏ—பால் வழங்கு திட்டங்கள்.

1972–73-ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு—ரூ. 5,15,33,200

பால் பண்ணை வளர்ச்சித்துறை—கொள்கை விளக்கக் குறிப்பு.

பால் பண்ணை வளர்ச்சித் துறை, சென்னையிலும் மதுரையிலும் நிறுவப்பட்டுள்ள பால் வழங்கு திட்டங்களைச் செவ்விய முறையில் நிர்வகிப்பதோடு மாநிலம் முழுவதிலும் உள்ள பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களை நிர்வகிக்கும் பொறுப்பையும் மேற்கொண்டுள்ளது. சென்னை மாதவரத்திலுள்ள பால் பண்ணை, தொடக்கத்தில் நாள் ஒன்றுக்கு 50,000 லிட்டர் பாலை வழங்குவதற்கேற்றவாறு அமைக்கப்பட்டது. இப்பண்ணை இப்போது நாள் ஒன்றுக்கு 70,000 லிட்டர் பாலை வழங்கி வருகிறது. இங்கு கூடுதலாகச் சாதனங்கள் நிறுவப்பட்டு, 1972–73 ஆம் ஆண்டில் நாள் ஒன்றுக்கு 1,00,000 லிட்டர் பால் வழங்கக்கூடிய அளவுக்கு இப்பண்ணையின் திறன் உயர்த்தப்பட்டு, சென்னை மாநகரில் பால் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. சென்னை பால் பண்ணை, மருத்துவ மனைகளுக்கும், மாணவர் விடுதிகளுக்கும், வணிக முறையில் பாலைப் பயன்படுத்துவோர்க்கும், செய்யும் மொத்த விற்பனையைத் தவிர, பொதுமக்களுக்கு 222 பால் விற்பனை நிலையங்கள் மூலமாகப் பாலை வழங்குகிறது. மதுரையில் நாள் ஒன்றுக்கு 20,000 லிட்டர் பால் வழங்கப்படுகிறது. உபரியாக உள்ள பால் சென்னைக்கு அனுப்பப்படுகிறது.

மாதவரத்திலிருந்து சென்னை மாநகரிலுள்ள பால் விற்பனை நிலையங்களுக்குப் பால் கொண்டு செல்வதில் பெருமளவு காலதாமதம் ஏற்படுகிறது. இதனால் பால் வெப்பம் அடைந்து அதன் தரம் பாதிக்கப்படுகிறது. எனவே, சென்னை மாநகரில் குளிர்பதன நிலையம் ஒன்றை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மாநகரில் பால் விற்பனை செய்யப்படுவதற்காக புட்டியில் அடைக்கப்பட்ட பால் குளிர், பதன நிலையத்திற்குக் கொண்டு செல்லப்படும். அங்கிருந்து சிறுவண்டிகளில் விற்பனை நிலையங்களுக்கு கொண்டு செல்லப்படும். தற்போது குறுகிய கால அளவிற்குள், பால் விற்பனை நிலையங்கள் அனைத்திர்க்கும் மாதவரத்திலிருந்து பால் விரைவாகக் கொண்டு செல்லப்பட வேண்டியுள்ளது. சென்னை மாநகரில் குளிர்பதன

நிலையத்தை ஏற்படுத்துவதனல், மாதவரத்திலிருந்து பால் கொண்டு செல்வதை சீர் செய்ய இயலும். இந்தக் குளிர்பதன நிலையத்திற்கு மாதவரத்திலிருந்து பாலைக் குறைந்த வெப்ப நிலையிலேயே கொண்டு செல்வதற்காக, சோதனை நடவடிக்கையாகக் குளிர்பதன வசதியுடன் கூடிய வண்டி ஒன்றை வாங்கக் கருதப்பட்டுள்ளது.

பால்வள முனைப்புத் திட்டத்தின் (Operation flood) கீழ், பால் பெருக்குத் திட்டங்களுக்காக இம் மாநிலத்திற்கு ரூ. 8.87 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. பாலைச் சேகரித்து, பதப்படுத்தி வழங்கு வதற்காக, பால் பண்ணைகளில் திறனைப் பெருக்குதல், பால் உற்பத்தியைப் பெருக்குவதற்குத் தேவையான தொழில் நுட்ப வசதிகளை அளித்தல், சென்னை மாநகரில் உள்ள கால்நடைகளுக்கு நகர்ப் புறங்களில் குடியிருப்பு வசதிகளை அமைத்தல் ஆகிய வளர்ச்சித் திட்டங்களும் மேற்கூறிய பால்வள முனைப்புத் திட்டத்தில் அடங்கும். சென்னை மாநகரின் உள்ளேயே மாடுகளை வைத்து வளர்த்து வருவதனல் கையாளப்படும் நடைமுறைகள், கால்நடைகளின் நீண்ட கால வளர்ச்சிக்குத் தடையாக உள்ளதாலும், மாடுகளை இங்கு வளர்ப்பதால் செலவும் அதிகமாகிறது என்பதனுலும், பால் வற்றிய மாடுகளையும், இளங்கன்றுகளையும் நல்ல முறையில் பேணி வளர்க்கப் போதிய கவனம் செலுத்த முடியவில்லை என்பதனல் உயர்தரக் கால்நடைகள் பயனற்றவையாகி அவைகளின் தரம் உயர்வது தடைப் படுகிறது என்பதனுலும், நகரில் கால்நடைகளை வளர்ப்பதற்கு வேண்டிய ஊக்கத்தைக் குறைப்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். கிராமங்களில் அதிகப்படியாக உற்பத்தி செய்யப் படும் பாலைக் கொண்டுதான் சென்னை மாநகரின் தேவையை நிறைவு செய்ய முடியும் என்றாலும் உலக உணவுத் திட்டத்தின்கீழ் இலவசமாக அளிக்கப்படும் பால்மாவு, தூய வெண்ணெய் Butter Oil ஆகியவற்றைப் பயன்படுத்தி பால் வழங்கு நிலையை மேம்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இப்பொருள்களைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படும் தரமான பாலை விற்பதனல் கிடைக்கும் வருவாய் மூலம் பால் பெருக்கும் திட்டத்திற்குத் தேவையான நிதி பெறப்படுகிறது. தரமான பாலும் ஏறக்குறைய கறந்த பாலுக்குரிய விலையிலேயே விற்கப்படுகிறது.

பால்வள முனைப்புத் திட்டத்தின் முதல் கட்டமாக, கூடுதலாகப் பாலைச் சேகரித்து வழங்குவதற்கேற்வாறு பால் பண்ணையை விரிவு படுத்தும் நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளது. இதற்காகத் தேவைப்படும் பொறியும், சாதனங்களும் பெறப்பட்டு அவை நிறுவப்

1972 மார்ச் 27]

பட்டு வருகின்றன. பாலைப் பதப்படுத்தும் யந்திரம், பால்மாவை பாலாகக் கலக்கும் சாதனம் ஆகியவற்றை மதுரை பால்பண்ணையி லிருந்து மாதவரத்திற்குக் கொண்டு வந்து உபயோகித்ததன் மூலம் 70,000 லிட்டர் பால் வழங்குதல் சாத்தியமாயிற்று.

பாலைச் சேகரித்தல், அதனைப் பதப்படுத்தல் இவற்றிற்குத் தேவை யான வசதிகளை அதிகரிப்பதற்கு ரூ. 2.13 கோடி செலவில் செயற் குறிப்புகள் வகுக்கப்பட்டுள்ளன. மதுரையில் பால் மாவு தொழிற் சாலை ஒன்றை நிறுவுவதற்கு வகை செய்வதும் இதில் அடங்கும். இதனால் ஆண்டுதோறும் சில மாதங்களில் கிடைக்கும் உபரிப் பாலை மாவாக்கிப் பின்னர் பயன்படுத்திக்கொள்ள முடியும். பால் உற்பத்தி யைப் பெருக்கத் தேவைப்படும் வசதிகளை நான்காண்டுக் கால அளவில் ரூ. 2.93 கோடி செலவில் ஏற்படுத்துவதற்கு செயற் குறிப்புகள் வகுக்கப்பட்டுள்ளன. இதன்படி கிராம அளவில் இனப் பெருக்க வசதிகள் உட்பட, கால்நடை மருத்துவத்திற்கும் பால் பண்ணை வளர்ச்சிப் பணிகளுக்கும் வகை செய்வதற்கான நிலையங்களை தொடர்ச்சியாக ஏற்படுத்தி, ஒருங்கிணைந்த மேற்பார்வை அமைப்பும் நிறுவப்படும். பால் உற்பத்தி, விற்பனை குறித்து உற்பத்தியாளர் களுக்குத் தேவையான எல்லாவித தொழில் நுட்ப உதவியையும் ஏனைய உதவியையும் அளிக்க இந்த மேற்பார்வை அமைப்பு வகை செய்யும். பால் உற்பத்தியும் விற்பனையும் செவ்விய முறையில் நடை பெற வேண்டுமானால், இத்திட்டம் ஒரே அமைப்பின் வாயிலாக ஒருங்கிணைந்த முறையில் நிர்வகிக்கப்பட வேண்டும். அப்போதுதான், உற்பத்தியாளர் தமது எல்லாத் தேவைகளுக்கும் ஒரே அமைப்பையே அணுக ஏதுவாக இருக்கும். எனவே, "பால்வள முனைப்புத்" திட்டங்களைச் செயல்படுத்தும் பணியை மேற்கொள்ளும் பொருட்டு, தமிழ்நாடு பால்பண்ணை வளர்ச்சிக் கழகத்தை ஏற்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. பால் வளர்ச்சித் துறையின் வணிக நடவடிக்கை யாகிய பாலைச் சேகரித்தல், அதனைப் பெரு நகரங்களில் விற்பனை செய்தல் "பால்வள முனைப்புத்" திட்டத்துடன் ஒருங்கிணைந்த நடவடிக்கையாக இருக்கும் என்பதால் இதுவும் இக்கழகத்திற்கு மாற்றப்படும்.

இத்திட்டத்தின் முக்கிய நோக்கமான, அதாவது மாநகரிலுள்ள கால்நடைகளைப் புறநகர் பகுதிகளுக்கு அனுப்புவதற்கான பணி தொடங்கப்படவிருக்கிறது. இதனால் கால்நடைகள் வேறு இடங் களுக்கு மாற்றப்படும். விவசாயத்துடன் பால் பண்ணையை ஒருங் கிணைப்பதற்கேற்ப முறைகளும் மாறும். மாநகரக் கால்நடைச்

சொந்தக்காரர்கள் தாங்கள் வேறு இடங்களுக்கு மாறிச் செல்ல விரும்பாவிடில் அவர்களுடைய கால்நடைகளை வாங்கிக்கொள்வதன் மூலமே இளம் கன்றுகளையும் பால்வற்றிய மாடுகளையும் வீணுகாமல் பாதுகாப்பது என்ற குறிக்கோளை அடைய முடியும். இதற்கு முன்னோடி நடவடிக்கையாக, மாநகரிலிருந்து பால் வற்றிய மாடுகளையும், இளங்கன்றுகளையும் வாங்கி அவை மீண்டும் பலனளிக்கும் வரை அவற்றை வளர்த்து, கிராமத்தில் பால் உற்பத்தி செய்பவர்களுக்கு விற்பதற்கான ஒரு முன்னோடித் திட்டம் செயல் படுத்தப்படும்.

உலக உணவுத் திட்டத்தின் முந்திய ஒரு திட்டத்தின்கீழ், கால் நடைத் தீவனம் தயாரிப்பதற்காக இலவசமாக அளிக்கப்படும் மக்காச் சோளம், சோளம் ஆகிய தானியங்களை விற்பதன் மூலம் கிடைக்கும் நிதியைப் பயன்படுத்தி மக்காச் சோளம் பயிரிடுவதற்காக உற்பத்தி-விளக்கப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. "பால்வள முனைப்புத் திட்டத்தின்" கீழ் குறிப்பிட்டுள்ள வழிகளிலேயே கிராம அளவில் பணிபுரிவோர்களுக்குப் பயிற்சியளிக்கும் திட்டம் ஒன்றும் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டது. பயிற்சி பெற்று பணியாற்றத் தயாராயிருக்கும் முதற்தொகுதி பணியாளர்கள், "பால்வள முனைப்புத் திட்டத்தின்" கீழ் பால் வழங்கு நிலையை மேம்படுத்துவதற்காக மேற் கொள்ளப்பட்ட திட்டப்பகுதிகளில் பணி புரிவர். கிராம அளவில் தொழில் நுட்ப ஆலோசனையும் உதவியும் வழங்குவதோடு செயற்கை முறையில் கரு உருவாக்குவதற்கான வசதிகளை அளிப்பதற்கு வகை செய்யும் இத்திட்டம் தற்போது "பால்வள முனைப்புத்" திட்டத் துடன் ஒருங்கிணைக்கப்படும்.

இம் மாநிலத்தில் 2,278 பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களும், 23 கூட்டு அமைப்புகளும் இருக்கின்றன. 1970–71-ல் இவை நாள் ஒன்றுக்குச் சராசரியாக 2.13 லட்சம் லிட்டர் பால் வழங்கியது. 1971–72-ல் நாள் ஒன்றுக்குச் சராசரியாக 2.33 லட்சம் லிட்டர் பால் வழங்கியது. நொடித்தும் செயல்படாமலும் உள்ள பால் வழங்கு சங்கங்களைச் சீரமைத்து, அவற்றைத் தனித்து இயங்கக்கூடிய பிரிவு களாக அமைக்கும் பொருட்டு, இச்சங்கங்களைச் சீரமைக்கவும், இவற்றிற்குப் பங்கு மூலதனம் அளிக்கவும், நிர்வாக உதவி செய்யவும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 1,100 பிரிவுகள் அமைக்கப்படும். இதுவரை, 172 பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. பால் பண்ணைகளுக்கான கட்டிடங்கள் கட்டவும், வண்டிகள் வாங்கு வது உட்பட பாலைச் சேகரித்துப் பதப்படுத்த வசதிகள் செய்யவும்

1972 மார்ச் 27]

நிதி தேவைப்படும் சங்கங்களைத் தெரிந்தெடுத்து அவற்றிற்குக் கடன்கள் வழங்குவதன் மூலம் அரசும் உதவி செய்கிறது. இவை ஒவ்வொன்றுக்கும் 1972–73-ல் ரூ. 4 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. பால் உற்பத்தியாளர்கள் கறவை மாடுகள் வாங்குவதற்காக அவர்களுக்குக் கடன் வழங்க ரூ. 25,00,000 நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மாதவரம் பால் பண்ணையில் திங்கள் ஒன்றுக்கு ரூ. 200-க்குக் குறைவாக அடிப்படைச் சம்பளம் பெறும் பணியாளர்களுக்கு ரூ. 75 வீதமும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 300க்குக் குறைவாக அடிப்படைச் சம்பளம் பெறும் பணியாளர்களுக்கு ரூ. 100 வீதமும் கருணைத் தொகை கொடுக்க 1972 ஜனவரித் திங்களில் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

இணைப்பு 7.

[199-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

கோரிக்கை எண் 9–

தமிழ்நாடு 1959-ம் ஆண்டு

இந்து சமய அற நிலையச் சட்ட நிர்வாகம்

இந்து சமய அறக்கட்டளைகள் (நிர்வாக) துறை 10,865 அற நிலையங்களை தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுள்ளது. இவைகளின் வருவாய் ரூ. 5,55,78,000 என்று மதிப்பிடப்படுகிறது. இந்த அற நிலையங்களில் 157 மடங்களும், 9,876 கோயில்களும், 832 குறிப்பிட்ட அறக்கட்டளைகளும் அடங்கியுள்ளன. கோயில் நிலங்களுக்காக நியமிக்கப்பட்ட சிறப்புப் பணியாளர்களின் ஆய்வின் பலனாக இத் துறையின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப் பெற்ற ஒரு மடமும் 824 கோயில்களும் இதில் அடங்கும். மேலே சொல்லப்பட்ட சமய நிறுவனங்களின் நிர்வாகம் வட்டாரக்குழு முறை நீக்கப்பட்டபோது; 1968-ஆம் ஆண்டு திருத்த சட்டத்தினால் திருத்தப்பட்ட 1959-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தினாலும் முறைப் படுத்தப்பட்டது. இத்துறையை நடத்தி வருவதற்கான வருவாய் மேற்படி சட்டத்தின் 92-வது பிரிவின்கீழ் கொடுக்கத்தக்க சகாயத் தொகைகளிலிருந்தும், தணிக்கைக் கட்டணங்களிலிருந்தும் கிடைக்கின்றது. இப்பிரிவின்படி ரூ. 200-க்கு குறையாத வருவாய் உள்ள

ஒவ்வொரு அறநிலையமும் குறிப்பிட்ட சகாயத் தொகையினை இத் துறைக்குச் செலுத்த வேண்டும். ரூ. 10,000-க்கு மேற்பட்ட வருவாய் உள்ள 561 கோயில்களும், ரூ. 1,000 முதல் ரூ. 10,000 வரை வருவாய் உள்ள 4,680 கோயில்களும், ரூ. 1,000-க்கும் குறைவாக வருவாய் உள்ள 5,624 கோயில்களும் உள்ளன. ஆண்டுதோறும் கிடைக்கும் துறை வருவாய் ரூ. 49 லட்சம் என்று கணக்கிடப் பட்டுள்ளது. 1971–72-ஆம் ஆண்டில் மேலே சொல்லப்பட்ட 825 புதிய அறநிலையங்கள் சேர்க்கப்பட்டதின் காரணமாக இந்தத் துறை பெறும் வருவாய் ரூ. 18,562 ஆக இந்த ஆண்டில் கூடுதலாக உள்ளது. கோயில்களின் வருவாயைப் பெருக்கவும், நிதி தவருகப் பயன்படுத்தப்படுவதைத் தடுக்கவும் வேண்டி, கோயில்களின் நிர்வாகம் இந்து சமய அறக்கட்டளை (நிர்வாக) துறையின் முழு கட்டுப்பாட்டில் உள்ளது.

2. சமய நிறுவனங்களின் வருமானம்—

கீழே கொடுக்கப்பட்டுள்ளபடி சமய நிறுவனங்களின் வருமானம் 1381-ஆம் விளைச்சல் ஆண்டிலும் ஒழுங்காக உயர்ந்து வருவது நிகழ்ந்துள்ளது :

விளைச்சல் ஆண்டு.	ரூபாய்.
1377	3,98,52,754
1378	4,99,25,142
1379	4,87,51,314
1380	5,51,65,419
1381 (நிகழக்கூடியது).	5,55,78,000

3. செலவுகள்.—

1959-ஆம் ஆண்டின் இந்து சமய அறநிலையச் சட்டத்தின் நிர்வாகத்திற்கான செலவுகள் ஆரம்பத்தில் அரசு நிதியினின்றும் செலவிடப்பட்டு, முடிவில் இந்து சமய அறநிலைய நிர்வாக நிதியிலிருந்து திரும்பப் பெறப்படுகின்றது. இதனைப் போலவே தணிக்கைக் கான செலவும் ஆரம்பத்தில் அரசு நிதியிலிருந்து செலவிடப்பட்டு முடிவில் திரும்பப் பெறப்படுகின்றது. இந்தச் சட்டத்தின்படி

1972 மார்ச் 27]

நிர்வாகம் மற்றும் தணிக்கைக்காக ஆன செலவுகளின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

நிர்வாகச் செலவு.	ரூபாய்.
1969–70	32,47,643.66
1970–71	39,40,636.24
1971–72 (நிகழக்கூடியது)	49,74,300.00

தணிக்கைச் செலவு.	
1969–70	9,64,631.59
1970–71	11,32,260.14
1971–72 (நிகழக்கூடியது)	13,76,500.00

கூடுதல் பதவிகள் ஏற்படுத்தப்பட்டதாலும், ஊதிய விகிதங்கள் மாற்றி அமைக்கப்பட்டதாலும், புதிய ஜீப்புகள் வாங்கப் பட்டதாலும், நிர்வாகத்திலும், ஊதிய மாற்றத்தினால் தணிக்கை யிலும் 1971–72-ல் கூடுதல் செலவு ஏற்பட்டுள்ளது.

4. பள்ளிகள் மற்றும் கல்லூரிகள்.—

பொதுமக்களுக்குக் கல்விக்காக தன்னாலான சிறப்பு முறையில் இந்தத் துறை பணியாற்றி வருகின்றது. சமய நிறுவனங்களின் நிதிகளிலிருந்து கீழ்க்கண்ட கல்வி நிலையங்கள் பராமரிக்கப்படு கின்றன.

கல்லூரிகள்.

1. திரு. பழனி ஆண்டவர் கலைக் கல்லூரி, பழனி.

2. திரு. பழனி ஆண்டவர் செந்தமிழ்ப் பெண்கள் கல்லூரி, பழனி.

3. திரு. பழனி ஆண்டவர் பெண்கள் கலைக் கல்லூரி, பழனி.

4. திரு. தேவி குமாரி பெண்கள் கல்லூரி, குழித்துறை, கன்னியா குமரி மாவட்டம், கன்னியாகுமரி, (தேவாஸ்வ வாரியத்தினரால் நடத்தப்படுவது.)

5. திரு. பராசக்தி பெண்கள் கல்லூரி, குற்றாலம்.

128-12—46

திருத்தணி திரு. சுப்பிரமணியசுவாமி கோயில், திருத்தணி திரு. சுப்பிரமணியசுவாமி கலைக் கல்லூரிக்கு ரூ. 5 லட்சம் நன்கொடையாகக் கொடுக்க ஒப்புதல் தெரிவித்துள்ளது.

இந்தியப் பண்பாட்டுக் கல்லூரிகள்.

1. இந்தியப் பண்பாட்டு திரு. பழனி ஆண்டவர் கல்லூரி, பழனி.

2. திரு. பூம்புகார் பேரவைக் கல்லூரி, மேலையூர், திருவெண்காடு அஞ்சல், தஞ்சாவூர் மாவட்டம்.

மாணவர் மற்றும் பெண்டிர் உயர்நிலைப் பள்ளிகள்.

1. இராமேசுவரம் தேஸ்தானத்தினுல் இராமேசுவரத்தில் நடத்தப்பெறும் திரு. பர்வதவர்த்தினி அம்பாள் உயர்நிலைப் பள்ளி.

2. திரு. திருமலை குமாரசுவாமி பெண்கள் உயர்நிலைப் பள்ளி, குற்றுலம், தென்காசி வட்டம். (திருநெல்வேலி மாவட்டம், பண்பொழி, திரு. திருமலை குமாரசுவாமி கோயிலினுல் நடத்தப்படுவது.)

3. திரு. காந்திமதி அம்பாள் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, பாளையங்கோட்டை, (திருநெல்வேலி திரு சுவாமி நெல்லையப்பர் தேவஸ்தானத்தினுல் நடத்தப்படுவது.)

4. திரு. மீனுட்சி சுந்தரேசுவரர் தேவஸ்தான பெண்கள் உயர்நிலைப் பள்ளி. (மதுரை திரு. மீனுட்சி சுந்தரேசுவரர் தேஸ்தானத்தினுல் நடத்தப்பெறுவது.)

திரு. சுவேதாரண்யேசுவரர் பெண்கள் உயர்நிலைப் பள்ளி. (தஞ்சாவூர் மாவட்டம், திருவெண்காடு திரு. சுவேதாரண்யேசுவரர் கோயிலினுல் நடத்தப்பெறுவது.)

6. திரு. கலியுக வரதராஜ பெருமாள் தேவஸ்தான பெண்கள் உயர்நிலைப் பள்ளி, அரியலூர், திருச்சி மாவட்டம் (அரியலூர் வட்டம், கள்ளன்குறிச்சி, திரு. கலியுகவரதராஜ பெருமாள் தேவஸ்தானத்தினரால் நடத்தப்பெறுவது.)

7. சாமளாபுரத்தில் உள்ள உயர்நிலைப்பள்ளி. (அய்யம்பாளையம், திரு. வாழைத் தோட்டத்து அய்யன் கோ்யிலினுல் நடத்தப்பெறுவது.)

8. பெண்கள் உயர்நிலைப் பள்ளி, கோவிலூர், தஞ்சாவூர் மாவட்டம். (கோவிலூர், திரு. ம்ந்தரபுரீசுவரர் கோயிலினுல் நடத்தப்பெறுவது.)

1972 மார்ச் 27]

மேற்சொன்ன நிலையங்களைத் தவிர, கீழே சொல்லப்பட்டுள்ள சமய நிறுவனம் 1971–72-ல் ஆரம்பிக்கப்பெற்றுள்ளது :—

வேதவல்லியிலுள்ள மருதமலை திரு. சுப்ரமணிய சுவாமி தேவஸ்தான ஆண்கள் உயர்நிலைப்பள்ளி, கோயம்புத்தூர் வட்டம் மற்றும் மாவட்டம்.

5. தொல் பொருட் களஞ்சியம்—

கோயில்களில் கலை மற்றும் சிற்பக்கலை காட்டும் தொல் பொருட் களஞ்சியங்களை கீழ்காணும் சமய நிலையங்கள் பேணி வருகின்றன—

(1) திரு. அரங்கநாதசுவாமி கோயில், திருவரங்கம்.

(2) திரு. மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில், மதுரை.

(3) திரு. ஜம்புகேசுவரர் கோயில், திருவானைக்கோவில், திருச்சி.

ஆயிரக்கால் மண்டபங்கள் உள்ள கோயில்கள் கலைக்கூடங்களைப் பராமரிக்க முடியும். இந்த முறையில் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

6. அனாதை இல்லங்கள் பராமரிப்பு—

இந்த மாநிலத்தின் சமூகநலனுக்காகவும், இத்துறை தன் பங்கினை செலுத்தி வருகின்றது. அனாதைகளுக்காக அனாதை இல்லங்களை, சமய நிறுவனங்களின் உபரி நிதியிலிருந்து பராமரித்து வருகின்றது. பல ஆண்டுகளாக இவைகள் நடத்தப்பட்டு வந்தாலும்கூட, அவைகளைப் பேணுவதில் அதிகக் கவனம் செலுத்தியும், கூடுதலான எண்ணிக்கையில் சிறுவர்களைச் சேர்ப்பித்தும் புத்துயிர் கொடுக்கப் பட்டுள்ளது. கீழே சொல்லப்பட்டுள்ள கோயில்கள் அனாதை இல்லங்களைப் பேணி வருகின்றன:—

1. திரு. சுப்பிரமணியசுவாமி கோயில், திருத்தணி நகர் வட்டம், செங்கற்பட்டு மாவட்டம்.

2. திரு. நவநீதேசுவரர் கோயில், சிக்கல், நாகப்பட்டினம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்.

3. திரு. வைத்தியநாதசுவாமி கோயில், வைத்தீஸ்வரன் கோயில், சீர்காழி வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்.

[1972 மார்ச் 27

4. திரு. சீனுவாசப்பெருமாள் கோயில், நாச்சியார் கோயில், கும்பகோணம் வட்டம்.

5. திரு. மீனுட்சி சுந்தரேசுவரர் தேவஸ்தானம், மதுரை.

6. திரு. தண்டாயுதபாணிசுவாமி தேவஸ்தானம், பழனி.

7. திரு. நெல்லையப்பர் தேவஸ்தானம், திருநெல்வேலி.

8. திரு. சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானம், திருச்செந்தூர்.

1971–72 ஆம் ஆண்டு கீழ்க்காணும் கோயில்களில் இரு புதிய அனுதை இல்லங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன:—

1. திரு. வாழைத்தோட்டத்து அய்யன் கோயில், அய்யன் பாளையம், பல்லடம் வட்டம், கோயம்புத்தூர் மாவட்டம்.

2. திரு. திருமலைக்குமாரசாமி கோயில், பண்மொழி, தென் காசி வட்டம், திருநெல்வேலி மாவட்டம்.

அதிக எண்ணிக்கையில் அனுதை இல்லங்களை ஆரம்பிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

7. குழந்தைகள் காப்பகம்—

அறநிலையங்களின் உபரி நிதியிலிருந்து குழந்தைகள் காப்பகங்கள் நடத்தப்பட்டு அவற்றில் பள்ளிப் பருவத்திற்கு முற்பட்ட குழந்தைகள் சேர்க்கப்படுகின்றனர். இவற்றில் இந்து சமய நெறிமுறைகளில் போதனை அளிக்கப்படுகின்றது.

குழந்தைகள் காப்பகங்கள் கீழே சொல்லப்பட்ட அறநிலையங்களால் நடத்தப்பட்டு வருகின்றன:—

1. திரு. வேதநாராயணபெருமாள் கோயில், திருநாராயண புரம், முசிறி வட்டம், திருச்சி மாவட்டம்.

2. திரு. சுப்பிரமணியசுவாமி கோயில், குமாரவயலூர், திருச்சி ராப்பள்ளி மாவட்டம்.

3. திரு. அரங்கநாதசுவாமி தேவஸ்தானம், காரமடை, அவிஞசி வட்டம், கோயம்புத்தூர் வட்டம்.

4. திரு. மாரியம்மன் கோயில், இளம்பிள்ளை, சேலம் மாவட்டம்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1972 மார்ச் 27]

8. ஊமை மற்றும் செவிடர்களுக்கான பள்ளிகள்—

சமயபுரம், திரு. மாரியம்மன் கோயில் நிதியிலிருந்து 1971-ம் ஆண்டு நவம்பர் திங்களில் ஒன்றும், பழனி திரு. தண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தானம் நிதியிலிருந்து 1972-ம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் மற்றொன்றும் ஆக இரண்டு ஊமை-செவிடர் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

9. சித்த வைத்திய மருத்துவ மனைகள் பராமரிப்பு—

1970 ஆம் ஆண்டுவரை, 14 சித்த வைத்திய மருத்துவ மனைகளை பல திருக்கோயில்கள் தங்களது உபரிநிதியிலிருந்து நடத்தி வந்தன. வழிப்பாட்டுப் பயணிகள் உள்பட வழிபடும் பொதுமக்களின் உபயோகத்திற்காக அதிக மருத்துவ மனைகளையும், மருந்தகங்களையும் ஆரம்பித்து நடத்தி வருவதன் அவசியம் உணரப்பட்டது. இது சம்மந்தமாக மேற்கொள்ளப்பட்ட தீவிர நடவடிக்கையின் காரண மாக 1971-ம் ஆண்டில் 24 புதிய சித்த வைத்திய மருத்துவ மனைகளை ஆரம்பிக்க அனுமதித்ததில் 5 சித்த வைத்திய மருத்துவ மனைகள் செயல்படத் துவங்கியுள்ளன. பொதுமக்களுக்குச் சமய நிறுவனங்கள் செய்யும் மகத்தான தொண்டாக இதனைப் பொது மக்கள் பாராட்டுகின்றனர்.

10. வழிபாட்டுப் பயணிகளுக்கும் வழிபடுபவர்களுக்கும் வசதிகள்—

வழிபாட்டுப் பயணிகள் மற்றும் வழிபடுபவர்களின் பயனுக்காக ஓய்வு விடுதிகளையும், வழிபாட்டுப் பயணிகள் விடுதிகளையும் கட்டும் ஒருங்கிணைப்புத் திட்டம் ஒன்று இருந்து வருகின்றது. இது குறித்துச் சீரான முன்னேற்றம் எய்தப்பட்டுள்ளதை பின்வரும் புள்ளி விவரங்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்:—

வழிபாட்டுப் பயணிகளுக்கு விடுதிகள் கட்டுதல்.

ஆண்டு.	ஒப்பளிப்பு வழங்கப்பட்ட மதிப்பீடு.
	ரூபாய்.
1969	1,10,700
1970	2,65,800
1971	11,14,000

128-12—47.

ஓய்வு விடுதிகளைக் கட்டுதல்.

						ரூபாய்.
1969	...	...	...	...	...	6,34,000
1970	...	...	...	...	...	10,60,000
1971		...	...	...	...	5,24,400

திருச்செந்தூர், திரு. சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானம் ரூ. 6 லட்சம் செலவில் 96 அறைகளைக் கொண்ட புதிய கட்டடம் ஒன்றை கட்டிக் கொண்டிருக்கிறது.

திருமண மண்டபங்கள் கட்டுதல்.

திருமண முதலியவற்றிற்காகத் திருமண மண்டபங்களைப் பொது மக்கள் குறைவான வீதத்தில் வாடகைக்கு எடுத்துக் கொள்ள வசதி செய்யும் பொருட்டு திருமண மண்டபங்களைக் கட்டும் திட்டம் மேற் கொள்ளப்பட்டுள்ளது. இந்த மண்டபங்கள் வழிபாட்டுக் கூடங்க ளாகவும் பயன்படுத்தப்படலாம். கீழே சொல்லப்பட்ட ஒப்பளிக்கப் பட்ட மதிப்பீடுகளின்படியான வேலைகள் பல கோயில்களில் ஆரம் பித்தும், ஆரம்பிக்கப்பட்டும் இருக்கின்றன:—

ஆண்டு.					மதிப்பீட்டுத் தொகை.
					ரூபாய்.
1969	...	...	...	...	4,12,000
1970	...	...	...	...	18,42,700
1971	...	...	...	...	27,94,600

11. அரசு மானியமும் புதுப்பித்தலும்—

வருவாயற்ற, வறிய கோயில்களுக்கு அவைகளில் அவசரமாக செய்ய வேண்டிய பழுது பார்த்தல் மற்றும் அதிக அளவிலான பழுது பார்த்தலுக்கும் அரசு மானியங்கள் அளிக்கப்படுகின்றன. கோயிலின் நிர்வாகிகள் கோயிலைப் புதுப்பிக்க, திருப்பணிக் குழுக்கள் அமைத்து பொதுமக்களிடமிருந்து நன்கொடைகள் வசூலித்தும், இதர சமய நிறுவனங்களிலிருந்து நிதி மாற்றம் மூலம் நிதிகள் பெற்றும் நடவடிக்கை மேற்கொள்ள அரசு மானியம் ஊக்கமளிப்பதாக உள்ளது. அரசும், கோயில்களைப் புதுப்பிக்க, மானியம் அளி

1972 மார்ச் 27]

பதன் மூலம் கீழே சொல்லியுள்ளபடி நிதி உதவி அளித்து வருகின்றது:—

ஆண்டு.	அனுமதிக்கப் பட்ட தொகை.	பயனடைந்த கோயில்களின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)
	(ரூபாய் லட்சத்தில்.)	
1968–69	4	60
1969–70	4	49
1970–71	4	48
1971–72	4	59

1972–73 ஆம் ஆண்டிற்கு ரூபாய் ஐந்து லட்சத்தினை மானியமாகக் கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

12. திரு. வில்லிபுத்தூர் கோயில் கோபுரத் திருப்பணி—

திரு. வில்லிபுத்தூரிலுள்ள திரு. வடபத்திரசாயி கோயிலின் பெரிய கோபுரத்தை ரூபாய் நான்கு லட்சம் மதிப்பீட்டுச் செலவில் செப்பனிட்டுப் புதுப்பிப்பதற்கான திட்டம் ஒன்றுக்கு அரசு ஏற்பளித்துள்ளது. இப்பணி பொதுப்பணித் துறையிடம் பிறர்க்கான பணியாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்து சமய அறக்கட்டளைகள் ஆணையாளரின் பொதுநல நிதியிலிருந்து இதற்கென மொத்தம் ரூ. 3 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மீதியுள்ள தொகை கோயில் நிதியிலிருந்தும், பொதுமக்களிடமிருந்து நன்கொடையாகவும் திருப்பணி குழுவினால் வழங்கப்படும். நடப்பு ஆண்டில் கோபுரம் அருகிலிருந்து தூரமான இடத்திற்குக் கழிவு நீர்களை திசை மாற்றும் வேலை முடிக்கப்பெற்றுள்ளது. கோபுரத்தின் ஐந்தாவது அடுக்கு வரையில் உள்ள பழைய மர உத்திரங்கள் அகற்றப்பட்டு புதிய உத்திரங்கள் அமைக்கும் வேலை முடிவுற்று, பிற அடுக்குகளிலும் இப்பணி நடைபெற்று வருகிறது. கோபுரத்திலுள்ள வெடிப்புகளை அடைக்கும் வேலைக்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. இதுவரை ரூ. 60,000 வரை செலவிடப்பட்டுள்ளது.

13. பழனி கோயில் திருப்பணி—

பழனி திரு. தண்டாயுதபாணி சுவாமி கோயிலில் திட்டமிட்டபடி செய்ய இருக்கும் திருப்பணிக்கான தலைசிறந்த திட்டத்தின் உத்தேச

[1972 மார்ச் 27

மதிப்பீடு ரூ. 40 லட்சமாகும். ரூ. 3 லட்சம் மதிப்புள்ள வேலைகளான பிரகாரங்களை அகலப்படுத்துதல், தெற்கு மற்றும் வடக்கு கோபுரங்களைப் புதுப்பித்தல் ஆகிய வேலைகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

14. கோயில்களில் தமிழில் அர்ச்சனை செய்யும் முறையினைக் கொண்டு வருதல்—

எல்லா கோயில்களிலும் தமிழில் அர்ச்சனை செய்யும் முறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இருந்தபோதிலும், தமிழில் அர்ச்சனை செய்யும் முறையினைக் கோயிலில் தொடங்கி நடைபெறுவதை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. விசாரணை முடிவுறு நிலையில் உள்ளது. வழிபடுவோர்கள் தாங்கள் விரும்பியபடி தமிழிலோ அல்லது வட மொழியிலோ வழிபாடு செய்யும் வசதியினைப் பெற்றிருக்கின்றனர்.

15. கோயில் நிலங்கள்—

மாநிலத்தில் உள்ள கோயில் நிலங்களைப் பொறுத்த எல்லா பொருள்கள் பற்றியும் நடவடிக்கை மேற்கொள்ள சிறப்புப் பணியாளர்களாக மாவட்ட வருவாய் அதிகாரி மட்டத்தில் ஒருதனி அதிகாரி, மற்றும் 4 தனித்துணை ஆட்சியர்களையும் அவர்களுக்குரிய பணியாளர் தொகுதியினையும் பணியில் அமர்த்திக் கொள்ள அரசு அனுமதி அளித்துள்ளது. ஆய்வுப் பணியினை விரைவு படுத்துவதற்காக 1971-ஆம் ஆண்டில் கூடுதல் பணியாளர்களை நியமனம் செய்ய ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

சமய நிறுவனங்களுக்கு, அவைகளின் பெயரில் பதிவாகி உள்ள எல்லா அசையாப் பொருட்களும் அவைகளின் சொத்து விவரப் பதிவேட்டில் குறிக்கப்பட்டும், சமய நிறுவனங்களின் உடைமையில் இல்லாத சொத்துக்கள் அனைத்தும் அவைகளின் உடைமையாக்கப்பட்டும் கணக்கில் கொண்டுவரப்பட்டும் அந்தச் சொத்துக்களின் வருமானம் முறையாகக் கணக்கிடப்பட்டும் வருவதைச் சரிபார்ப்பதற்காக இவ்விதம் ஏற்படுத்தப்பட்டது. நிலங்கள் முறையானபடி குத்தகைக்கு விடப்பட்டுள்ளதா என்றும் ஆக்கிரமிப்புகள், அனுமதியில்லாத இருப்பு அல்லது உடைமை முதலியன இருக்கின்றதா என்பதனைச் சரிபார்ப்பதற்காகக் கோயில்களுக்குச் சொந்தமாக உள்ள நிலங்கள், கட்டடங்கள், மனைகள் முதலியவற்றின் விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. முதல் நிலை ஆய்வின் பலனாக சிறப்புப்

1972 மார்ச் 27]

பணியாளர்கள், 1,59,322.27 ஏக்கர் நிலங்களையுடைய 32,450 சமய நிறுவனங்களைக் கண்டுபிடித்துள்ளனர். இவைகள் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டிற்குள் இல்லாதவை. இந்தக் கோயில்களை நிர்வாக கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதற்காக நிர்வாக இலாக்காவின்கீழ் சிறப்புப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இத்துறையின் கட்டுப்பாட்டிற்குள் உள்ள நிறுவனங்கள் குறித்தும் சிறப்புப் பணியாளர்கள் விவரமான ஆய்வுப் பணியினை மேற்கொண்டுள்ளனர். ஒவ்வொரு சமய நிறுவனத்துக்கும் வருவாய்த் துறை, மற்றும் கோயில் ஆவணங்களைக் கொண்டு கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள், குத்தகையில் உள்ள நிலங்கள், தரிசாக இருந்து வரும் விவசாய நிலங்கள், அனுமதியற்ற இருப்புக்கள் உள்ள நிலங்கள் போன்றவற்றிற்குத் தனிப் பதிவேடுகள் தயாரிக்கின்றனர். இந்த வேலை முன்னேற்றமடைந்து வருகின்றது. 1,869 நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்களைப் பார்வையிடுதல், மற்றும் ஆய்வுப் பணியினை முடித்தும், 1,704 நிறுவனங்களுக்குக் கணக்குகள் தயாரித்தலும், 1972 ஜனவரி முடிய சிறப்புப் பணியாளர்கள் செய்துள்ளனர். கோயில்களுக்குச் சொந்தமான 19,697.00 ஏக்கர் நிலங்கள் அந்தக் கோயில்களின் வசமும் அனுபத்திலும் இல்லை என்பது விவரமான ஆய்வு மூலம் தெரிய வந்தது. அங்கீகரிக்கப்படாத அனுபோக தாரர்கள் வசம் உள்ள நிலங்களை உடைமையாக்குவதற்கு நிலையான நிர்வாகப் பணியாளர்கள் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

16. இணைக்கப்பட்ட பகுதிகளிலும் மாற்றப்பட்ட ஆட்சிப் பகுதிகளிலும் உள்ள கோயில்கள், அற நிலையங்கள்—

1961-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாளுக்கு முன்பு, புதுக்கோட்டையிலுள்ள புதுக்கோட்டை தேவஸ்தானத்திற்கு ஏற்பட்ட செலவு நேரிடையாக அரசு நிதியிலிருந்து சரிக்கட்டப்பட்டது. 1961-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1ஆம் நாள் முதற்கொண்டு கோயில்களைப் பேணிவரும் பொருட்டு, தொடர் மானியமாக ரூ. 4 லட்சம் அல்லது கோயில்களுக்கு ஆண்டுதோறும் ஏற்படும் நிகரச் செலவு, இவற்றில் எது குறைவாக உள்ளதோ, அத்தொகைக்கு ஒப்பளிப்பு வழங்கியதன் மூலம் புதுக்கோட்டைப் பகுதியிலுள்ள கோயில்களைப் பேணி வருவதற்காக நேரடி பொறுப்புக்கள் அனைத்தினின்றும் அரசு தன்னை விடுவித்துக்கொண்டது.

[1972 மார்ச் 27

மாற்றப்பட்ட ஆட்சிப் பகுதியில் உள்ள இணைக்கப்பட்ட, இணைக்கப்படாத தேவஸ்வங்கள் அவற்றின் சொத்துக்கள், நிதிகள் ஆகியவற்றின் நிர்வாகம், மேற்பார்வை, கட்டுப்பாடு அனைத்திற்கும் கன்னியாகுமரி தேவஸ்வ வாரியம் பொறுப்பு வகிக்கின்றது. மாற்றப் பட்ட ஆட்சிப் பகுதியிலுள்ள இணைக்கப்பட்ட, இணைக்கப்படாத தேவாஸ்வங்கள் குறித்து தனி நிர்வாகத்திற்கு வகை செய்யும் பொருட்டு, தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு 30.வது சட்டம் அதாவது தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு (மாற்றப்பட்ட ஆட்சிப் பகுதி) இணைக்கப்பட்ட, இணைக்கப்படாத தேவஸ்வம் சட்டம் இயற்றப்பட்டது. தேவஸ்வ வாரியத்தில் ஒரு தலைவரும், வேறு இரு உறுப்பினர்களும் இருப்பர். இவ்விருவரில் ஒருவர் திருவாங் கூர் மாநில முன்னைள் மன்னரால் நியமனம் செய்யப்பட்டு வருகிறார். தலைவரும் மற்றுமொரு உறுப்பினரும் தமிழ்நாடு அரசினுல் நிய மிக்கப்பட்டு வருகின்றனர். தேவஸ்வங்களைப் பேணி வருதல் முதலிய வற்றிற்காக தமிழ்நாடு அரசிடமிருந்து ஆண்டுதோறும் ரூ. 13,68,000-ஐ மானியமாக தேவஸ்வ வாரியம் பெறுகிறது.

17. "யுனெஸ்கோ" உதவி—

(அ) இம்மாநிலத்திலுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தொன்மையான கோயில்கள் சிலவற்றைப் பாதுகாப்பதிலும், புதுப் பிப்பதிலும் "ஐக்கிய நாடுகள், கல்வி விஞ்ஞான பண்பாட்டு நிறுவனம்" அக்கறை காட்டி வந்துள்ளது. திருவரங்கத்திலுள்ள திரு. அரங்கநாதசுவாமி கோயிலுக்கு இந்த நிறுவனம் 12,000 டாலர் களை இந்தியாவில் தயாரிக்கப்படாத பொருள்களின் வடிவில் அதா வது பென்காப்சுலா (ஒருவகை தெளிக்கும் எண்ணெய்) உட்பட அக்கோயிலின் பண்டைகால பண்பாடு கெடாத வகையில் சுதை வேலைகளை பாதுகாப்பதற்குப் பயன்படும் பொருட்களை வழங்கி யுள்ளது. 1970–71-ஆம் ஆண்டு முடிய கிழக்கு கோபுரம், மற்றும் ஆயிரக்கால் மண்டபம், சேசராயர் மண்டபம் மேல்தளம் ஆகியவை பழுதுபார்த்தல் வேலை முடிக்கப்பெற்றுள்ளது. 1971–72-ஆம் ஆண்டில் சேசராயர் மண்டபத்தில் நீர்கசியும் மேல்தளம் பழுது பார்த்தல் மற்றும் சேசராயர், ஆயிரக்கால் மண்டபங்களின் தூண் களைச் சுத்தப்படுத்துதல், வெள்ளை கோபுர சுதை வேலைகள் பழுது பார்த்தல், அடைப்பு அமைத்தல் மற்றும் பென்காப்சுலா தெளித்தல் ஆகிய வேலைகள் முடிக்கப் பெற்றுள்ளன.

1972 மார்ச் 27]

(ஆ) இராமேசுவரத்திலுள்ள திரு. இராமநாதசுவாமி கோயில் "யுனெஸ்கோ" நிறுவனத்தின் உதவி பெறுவதற்காக இரண்டாவது கோயிலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. "யுனெஸ்கோ" வல்லுநர், திரு. ஜி. ஆர். எச். ரைட் என்பவர் இக்கோவிலை வந்து பார்வையிட்டு, தனது அறிக்கையினை கொடுத்துள்ளார். இந்தக் கோவிலுக்குத் தேவையான பொருட்கள் "யுனெஸ்கோ" நிறுவனத்தால் வழங்கப்படவிருக்கிற பொருட்கள் ஆகியவற்றின் பட்டியலும் கொடுக்கப்பட்டுள்ளன. இதுவரை "யுனெஸ்கோ நிறுவனம்" இந்தக் கோவிலுக்குத் தனது உதவியினை வழங்கவில்லை. இது குறித்து புது டெல்லி, இந்திய அரசு கல்வி, மற்றும் சமூக நல அமைச்சகத்துடன் கடிதப் போக்குவரத்து இருந்து வருகின்றது.

(இ) மாநில யுனெஸ்கோ குழு, காஞ்சீபுரத்திலுள்ள திரு. வரதராஜ சுவாமி கோவிலையும், சிதம்பரத்திலுள்ள திரு. நடராஜர் கோவிலையும் முன்றுவது நான்காவது கோவில்களாக "யுனெஸ்கோ" நிறுவனத்தின் உதவித் திட்டத்தின்கீழ்த் தேர்ந்தெடுத்துள்ளது. இது குறித்தும், புது டெல்லி இந்திய அரசு கல்வி, மற்றும் சமூக நல அமைச்சகத்துடன் கடிதப் போக்குவரத்து இருந்து வருகின்றது.

18. அறநிலையத் துறையின் திங்கள் வெளியீடு—

"திருக்கோயில்" என்னும் திங்கள் வெளியீட்டினை 1958 ஆம் ஆண்டிலிருந்து இந்து சமய அறக்கட்டளைகள் (நிர்வாக) துறை வெளியிட்டு வருகின்றது. இந்த வெளியீடு அனைவராலும் பாராட்டப் படுகிறது. சிறந்த தமிழறிஞர்களால், எழுதப்படும் கட்டுரைகள் தகவல்களை அளிப்பதாகவும் அறிவுரை அளிப்பதாகவும் உள்ளன.

1—1—1972-ல் இலங்கை, பர்மா, சிங்கப்பூர், மலேசியா, தென் ஆப்ரிக்கா, மற்றும் அமெரிக்கா நாடுகள் உள்ள 4,000 சந்தாதாரர்களை உடையதாக இவ்வெளியீடு உள்ளது.

19. பொதுமக்களின் நலனுக்காக இம்மாநிலத்திலுள்ள கோவில்களின் நிர்வாகத்தினை அபிவிருத்தி செய்யும் நோக்கத்தோடு இத்துறை தனது செயல்களை விரைவுபடுத்த தொடர்ந்து முயற்சித்து வருகின்றது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

TAMIL NADU LEGISLATURE LIBRARY
28 JUL 1972
MADRAS